அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# வஹியில் முரண்பாடா?

F.M.ரஸ்மின் MISc

வெளியீடு :

TNTJ பப்ளிகேஷன்ஸ்

## நூல் பற்றி...


தலைப்பு : **வஹியில் முரண்பாடா?**

ஆசிரியர் : F.M. **ரஸ்மின்** MISc

உரிமை : **ஆசிரியருக்கே!**

மொழி : **தமிழ்**

முதல் பதிப்பு : **மே 2015**

பக்கங்கள் : **311**

வெளியீடு : **TNTJ** பப்ளிகேஷன்ஸ்

விலை :

மொத்த விற்பனையாளர் :




# பொருளடக்கம்


- முன்னுரை 05
- வஹியில் முரண்பாடா? 07

**ஹதீஸ் கலை விதி பற்றிய ஓர் பார்வை**

- ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்ட முறை. 14
- ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களை மறுக்கிறோமா? 18
- ஹதீஸ் கலையில் இல்லாத புது விதியை தவ்ஹீத் ஜமாத் அறிமுகம் செய்கிறதா? 28
- குர்ஆனுக்கு முரணான செய்தியை அறிவிப்பவர் பொய்யரா? 32
- ஷாத் வகை ஹதீஸ்கள் பற்றிய விளக்கம். 36
- பெரும் அறிஞர்களுக்கு தெரியாததா இவர்களுக்கு தெரிந்து விட்டது? 41
- புகாரியில் பதிவான பலவீனமான ஹதீஸ்கள் 46
- வழிகேட்டை காப்பாற்ற ஹதீஸை பலவீனப் படுத்தும் வழிகேடர்கள். 54

**வழிகேடர்களின் வழிமுறையா?**

- முஃதஸிலாக்களின் வழியில் பயணிப்பவர்கள் யார்? 73
- “அஹ்லுல் குர்ஆன்”களின் வழியா? 81
- நபி வழியா? புது வழியா? 89

**மறுக்காமல் விளக்கம் சொல்லப்பட்ட செய்திகள் சில...**

- மனோ இச்சைப்படி மறுக்கிறோமா? 101
- சிந்தனைக்கு முக்கியத்துவமா? 105
- நபியின் சலியை நபித்தோழர்கள் தமது உடலில் பூசிக் கொண்டார்களா? 108

**குர்ஆனுக்கு முரண்படும் செய்திகள்**

- அஜ்வா பேரிச்சம் பழம் பற்றிய செய்தியின் உண்மை நிலை? 117
- நபியவர்கள் தற்கொலைக்கு முயன்றார்களா? 124
- அபூலஹபின் விரல்களை நரகம் தீண்டாதா? 129

- குரங்கு விபச்சாரம் செய்ததா? 134
- பல்லி பற்றிய ஹதீஸின் நிலை 142
- வேண்டுமென்றே கொலை செய்தவனுக்கு மன்னிப்புண்டா? 147
- உலகைப் படைக்க ஏழு நாட்களா? 158
- காணாமல் போன இரண்டு வசனங்கள் 165
- சுலைமான் நபிக்கு மறைவான அறிவு உண்டா? 181
- நபியவர்கள் அன்னிய பெண்ணுடன் தனித்திருந்தார்களா? 196
- மாடு உழவு செய்வதற்கு மாத்திரம் தான் படைக்கப்பட்டுள்ளதா? 216
- மிஃராஜ் நபித்துவத்திற்கு முன்பு நடந்ததா? 224
- விவசாயக் கருவிகளினால் இழிவு வருமா? 227
- ஸாலிம் பற்றிய செய்தியின் உண்மை நிலை? 232
- சூனியம் பற்றிய ஹதீஸ்களின் விளக்கம் 251
- நபிகளாருக்கு சூனியம் – ஆறு மாத கால ஹதீஸ் பலவீனமா? 286
- சூனியத்தை நம்பியவன் சுவர்க்கம் புகமாட்டான் – என்ற செய்தி பலவீனமானதா? 299
- மூஸா நபி மலக்குள் மவ்துக்கு அடித்தார்களா? 306




# முன்னுரை

உலக மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக இறைவனால் வழங்கப்பட்ட புனித இஸ்லாம் மார்க்கம் இன்று உலகின் பல பாகங்களிலும் வியாபித்து வருவதை நாம் அவதானித்து வருகின்றோம்.

இதற்குக் காரணம் இஸ்லாத்தின் வேதமாகிய திருமறைக் குர்ஆனும், அதன் விளக்கவுரையாக வாழ்ந்து காட்டிய நபி (ஸல்) அவர்களின் கருத்துக்களும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வரும் தாக்கமாகும்.

எந்தவொரு முரண்பாடும் அற்ற வேதத்தைத் தந்த இறைவன் அதனை விளக்குவதற்காக தேர்ந்தெடுத்த நபி (ஸல்) அவர்களையும் முரண்பாடுகள் அற்ற தூய செய்தியைக் கூறக் கூடியவராகவே தேர்ந்தெடுத்தான்.

**உங்கள் தோழர் (முஹம்மத்) பாதை மாறவில்லை. வழிகெடவுமில்லை. அவர் மனோஇச்சைப்படிப் பேசுவதில்லை. அ(வர் பேசுவ)து அறிவிக்கப்படும் செய்தியைத் தவிர வேறில்லை.**

அல்குர்ஆன் 53:1,2,3

நபி (ஸல்) அவர்கள் மார்க்கமாக எதனைப் பேசினாலும் அது இறைவன் தரப்பிலிருந்து அறிவிக்கப்படும் வஹீ – இறைச் செய்தியாகத் தான் இருக்குமே தவிர, அவர்கள் மனோஇச்சைப்படி பேசியதாக இருக்காது என்பதற்கு மேற்கண்ட திருமறைக் குர்ஆன் வசனம் ஆதாரமாகத் திகழ்கின்றது.

முரண்பாடுகள் அற்ற இத்தகைய தெளிவான வழிகாட்டலை இவ்வுலகுக்கு வழங்கிச் சென்ற நபியவர்களின் பெயரால் அல்குர்ஆனுக்கு மாற்றமான கருத்துக்கள் “ஹதீஸ்கள்” என்ற பெயரில் நுழைவிக்கப்பட்டிருக்கின்றன.

அத்தகைய “அல்குர்ஆனுக்கு முரண்படும் செய்திகள்” தொடர்பாகவே “வஹியில் முரண்பாடா?” என்ற இந்நூல் ஆராய்கின்றது.

அல்குர்ஆனுக்கு முரணான செய்திகள் இஸ்லாமிய மார்க்கத்தின் ஆதாரங்களாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்ற விதிக்கிணங்க இது போன்ற நிலையில் இருக்கும் செய்திகளை மறுத்து ஒதுக்கிவிட வேண்டும் என்று தவ்ஹீத் ஜமாஅத் பிரச்சாரம் செய்து வருகின்றது.

இந்தப் பிரச்சாரத்திற்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்து வரும் சிலர்,

“தவ்ஹீத் ஜமாஅத் முஃதஸிலாக்களின் வழியில் பயணிக்கின்றது என்றும், குர்ஆன் மட்டும் போதும் என்ற அஹ்லுல் குர்ஆன் சிந்தனையை தவ்ஹீத் ஜமாஅத் விதைக்கின்றது என்றும், இவர்கள் சொல்லும் இந்த விதி ஹதீஸ் கலையில் இல்லை, இவர்கள் தான் புதிதாக இதனைக் கூறுகின்றார்கள் என்றும் பல விதமான விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றார்கள்.

யார் எந்தக் கருத்தை இஸ்லாத்தின் பெயரால் கூறினாலும் அது அல்குர்ஆன், மற்றும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களுக்கு உடன்படுகின்றதா? என்பதைத் தான் பார்க்க வேண்டுமே தவிர எங்கள் மனது இதனை ஏற்றுக் கொள்ளவில்லை, காலா காலமாக நாங்கள் இதனைத் தான் நம்பி வருகின்றோம். ஆகவே இதனை மாற்றிக் கொள்ள முடியாது என்று மனமுரண்டு பிடிப்பது ஒரு முஃமினின் பண்பாக இருக்க முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

“அல்குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது” என்ற விதிப் பிரகாரம் புனித அல்குர்ஆனின் கருத்துக்கு மாற்றமாக நபியவர்களின் பெயரால் இட்டுக் கட்டப்பட்டுள்ள செய்திகளையும் அது பற்றிய விளக்கங்களையும் அடக்கியதாகவே இந்நூல் அமையப் பெற்றிருக்கின்றது.

அல்குர்ஆனையும், அல்குர்ஆனுக்கு முரணில்லாத ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களையும் மாத்திரம் பின்பற்றி வாழ்ந்து இம்மை, மறுமை வாழ்வில் வெற்றியடைவோமாக!

அன்புடன்
F.M ரஸ்மின் MISc



# வஹியில் முரண்பாடா?

உலக மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக இறைவனால் வழங்கப்பட்ட புனிதமிக்க இஸ்லாம் மார்க்கத்தின் இறுதித் தூதராக இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் திருமறைக் குர்ஆனை நமது வாழ்வியல் வழிகாட்டியாகவும், அதற்குரிய விளக்கமாக தமது வாழ்நாளையும் அமைத்துச் சென்றார்கள்.

நபி (ஸல்) அவர்களினால் வழங்கப்பட்ட இஸ்லாம் மார்க்கத்தின் மூல ஆதாரமாகத் திகழ்வது வஹீ – **இறைச் செய்திகளாகும்.**

இறைச் செய்திகள் திருக்குர்ஆன் என்று ஒரு முறையிலும், அதற்கு விளக்கமாக நபியவர்கள் கூறிய செய்திகள் ஹதீஸ் என்று இன்னொரு முறையிலும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்த இரு செய்திகளில் திருக்குர்ஆன் தான் இஸ்லாத்தின் முதல் அடிப்படை மூல ஆதாரமாகும்.

அதற்கு விளக்கவுரையாக அமையப் பெற்ற ஹதீஸ்கள் இரண்டாவது மூல ஆதாரங்களாக அமைகின்றன. இந்த இரண்டு ஆதாரங்களையும் இரண்டில் ஒன்று மற்றையதுடன் முரண்படாத வகையிலேயே இறைவன் அருளியிருக்கின்றான்.

ஒரே ஏக இறைவனான அல்லாஹ்விடமிருந்து அருளப் பெற்ற திருமறைக் குர்ஆனுக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் பேசமாட்டார்கள் என்பது குர்ஆன் கற்றுத் தரும் பேருண்மையாகும்.

உங்கள் தோழர் (முஹம்மத்) பாதை மாறவில்லை. வழி கெடவுமில்லை. அவர் மனோ இச்சைப்படிப் பேசுவதில்லை. அ(வர் பேசுவ)து அறிவிக்கப்படும் செய்தியைத் தவிர வேறில்லை.

அல்குர்ஆன் 53:1,2,3

நபி (ஸல்) அவர்கள் மார்க்க விஷயமாக எதனை எடுத்துச் சொன்னாலும் அது வஹீ – இறைச் செய்தியாகத் தான் இருக்கும். அவர்கள் மனோ இச்சைப்படி, தான் நினைத்தவற்றையெல்லாம் பேசவோ, மார்க்கம் என்று கற்றுத் தரவோ மாட்டார்கள் என்பதை மேற்கண்ட அல்குர்ஆன் வசனம் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

அவர்கள் இந்தக் குர்ஆனைச் சிந்திக்க மாட்டார்களா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள்.

அல்குர்ஆன் 4:82

இதன் முன்னும், பின்னும் இதில் தவறு வராது. புகழுக்குரிய ஞானமிக்கோனிடமிருந்து அருளப்பட்டது.

அல்குர்ஆன் 41:42

திருக்குர்ஆனில் முரண்பாடு இருக்காது என்பதுதான் இறைவேதம் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளது.

முரண்பாடு இருப்பது போல் நமக்குத் தோன்றினால் அது நம்முடைய சிந்திக்கும் தன்மையில் ஏற்பட்ட குறைபாடாகத் தான் இருக்க முடியும். இதனால் தான் இவ்வசனத்தில் சிந்திக்க மாட்டீர்களா? என்றும் சிந்தித்தால் முரண்பாடு இல்லை என்பதை அறிந்து கொள்வீர்கள் என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

புரிந்து கொள்வதில் சிலருக்குத் தெளிவில்லாத காரணத்தால் தான் முரண்பட்ட இரு கருத்துக்களுக்கும் திருக்குர்ஆன் இடம் தருவது போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

திருக்குர்ஆனிலோ, ஆதாரப்பூர்வமான நபிமொழிகளிலோ முரண்பாடு உள்ளது போல் தோன்றினால் அதை எப்படி சீர்படுத்திக் கொள்வது என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்

ஒட்டுமொத்தமாக திருக்குர்ஆன் எந்தக் கொள்கையை முன்வைக்கிறதோ அந்தக் கொள்கைக்கு மாற்றமாகப் பொருள் கொள்ளும் வகையில் ஒரு வசனம் நமக்குத் தெரிந்தால் அவ்வாறு பொருள் கொள்ளாமல் ஒட்டு மொத்த குர்ஆனிலிருந்து விளங்கும் கொள்கைக்கு ஏற்ற விளக்கத்தைத் தான் அந்த வசனத்துக்குக் கொடுக்க வேண்டும். இது குர்ஆனைச் சரியாக புரிந்து கொள்ளவதற்குரிய முக்கிய வழிமுறையாகும்.

அதுபோல் சில ஹதீஸ்கள் ஒட்டு மொத்த குர்ஆன் முன்வைக்கும் கொள்கைக்கு மாற்றமாக அமைந்திருக்கின்றன. எந்த வகையிலும் குர்ஆனுடன் ஒத்துப் போகும் வகையில் விளக்கம் கொடுக்க முடியாமல் அவை இருக்கும். அப்போது என்ன செய்வது?



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனுக்கு விளக்கம் கொடுக்கவே அனுப்பப்பட்டார்கள்.

மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தப் போதனையை உமக்கு அருளினோம்.

திருக்குர்ஆன் 16 : 44

விளக்கம் கொடுக்க அனுப்பப்பட்ட நபியவர்கள் குர்ஆனுக்கு முரணாகப் பேசவோ, நடக்கவோ மாட்டார்கள். அப்படி அவர்கள் பேசியதாக அல்லது நடந்ததாக ஒரு செய்தி கிடைத்தால் அது எந்த நூலில் பதிவு செய்யப்பட்டு இருந்தாலும் அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னது அல்ல: செய்தது அல்ல என்ற முடிவுக்கு நாம் வரவேண்டும்.

இது ஹதீஸ்களை மறுப்பதாக ஆகாது. இதையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் நம்பகத் தன்மையில் திருக்குர்ஆனும், நபிமொழிகளும் சமமானவை அல்ல. திருக்குர்ஆனைப் பொறுத்த வரை அனைத்து நபித்தோழர்களும் அது இறைவேதம் என்பதற்குச் சாட்சிகளாக உள்ளனர்.

திருக்குர்ஆன் வசனங்களை ஓதிக்காட்டி "இது என் இறைவனிடமிருந்து வந்தது" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் அவ்வாறு கூறினார்கள் என்பதற்கு ஒட்டுமொத்த நபித்தோழர்களும் சாட்சிகளாக இருந்தனர். எழுத்து வடிவில் பதிவு செய்தனர். பலர் மனனம் செய்தனர்.

ஹதீஸ்களைப் பொறுத்தவரை எந்த ஒரு ஹதீஸையும் அனைத்து நபித்தோழர்களும் அறிவிக்கவில்லை. விரல் விட்டு எண்ணப்படும் சில ஹதீஸ்கள் அதிகபட்சம் ஐம்பது நபித்தோழர்கள் வழியாக அறிவிக்கப்பட்டுள்ளன. மற்ற ஹதீஸ்கள் யாவும் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று நபித்தோழர்கள் வழியாகத்தான் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்பதற்கு ஒருவர் அல்லது இருவர் தான் சாட்சி கூறுகிறார்.

ஒட்டு மொத்த சமுதாயமே சாட்சி கூறுவதும், ஓரிருவர் சாட்சி கூறுவதும் சமமானதாக ஆகாது.

எவ்வளவு நம்பகமானவர்கள் என்றாலும் ஓரிருவர் அறிவிக்கும் செய்திகளில் தவறுகள் நிகழ வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் மட்டுமின்றி அதற்கு அடுத்த காலத்து ஒட்டுமொத்த மக்களும் "இதுதான் குர்ஆன்" என்று நபித்தோழர்கள் சொன்னதாக அறிவிக்கின்றனர். இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ள அனைவரும் இதுபோல் அறிவிக்கின்றனர்.

ஹதீஸ்களைப் பொருத்தவரை ஓரிரு நபித்தோழர்கள் தான் அறிவித்துள்ளனர். நபித்தோழர் இப்படிச் சொன்னார் என்று அறிவிப்பதும் ஓரிருவர் தான். நூலாகத் தொகுக்கப்படும் காலம் வரை ஒருவரில் இருந்து ஒருவர் என்ற அடிப்படையில் தான் ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டன.

எனவே திருக்குர்ஆன் விஷயத்தில் கடுகளவு கூட சந்தேகம் வராது. ஹதீஸ்களைப் பொருத்த வரை இந்த நிலை கிடையாது.

ஆனாலும் நபித்தோழர்களின் நம்பகத் தன்மையின் அடிப்படையில் அவற்றை ஏற்றுச் செயல்படுகிறோம். திருக்குர்ஆனுடன் மோதாத வரை இத்தகைய செய்திகளில் சந்தேகம் கொள்ளக் கூடாது. ஒரு ஹதீஸ் திருக்குர்ஆனுடன் மோதும்போது "இந்த அறிவிப்பில் எங்கோ தவறு நடந்துள்ளது" என்று முடிவு செய்து குர்ஆனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

நபித்தோழர்கள் அரைகுறையாகக் கேட்டதன் மூலம், அல்லது தவறாகப் புரிந்து கொண்டதன் மூலம் இந்தத் தவறு ஏற்பட்டு இருக்கலாம். அல்லது நபித்தோழர்களிடம் கேட்ட அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவரிடம் தவறு நிகழ்ந்திருக்கலாம். அல்லது அதற்கடுத்த தலைமுறையைச் சேர்ந்தவரிடம் தவறு ஏற்பட்டிருக்கலாம்.

ஒரு ஹதீஸ் எந்த வகையிலும் திருக்குர்ஆனுடன் அறவே ஒத்துப் போகவில்லை: திருக்குர்ஆனுடன் நேரடியாக மோதுவது போல் அமைந்துள்ளது: இரண்டையும் எந்த வகையிலும் இணைத்து விளக்கம் கூற முடியாது என்றால் அது போன்ற சந்தர்ப்பங்களில் ஹதீஸை ஏற்று குர்ஆனை மறுத்து விடக்கூடாது. மாறாக குர்ஆனை ஏற்று அந்த ஹதீஸை நபிமொழி அல்ல என்று மறுக்க வேண்டும்.

அறிவிப்பாளர்கள் சரியாக இருந்தும் குர்ஆனுக்கு முரண்படும் செய்திகளை நாம் முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்பதை நாம் சுயமாகச்



சொல்லவில்லை. இதனை அல்லாஹ்வுடைய தூதரே சொல்லி விட்டார்கள்.

(مسند أحمد بن حنبل (٣/ ٧٩٤

حدثنا عبد الله حدثني أبي ثنا أبو عامر قال ثنا سليمان بن بلال عن ربيعة - 16102
بن أبي عبد الرحمن عن عبد الملك بن سعيد بن سويد عن أبي حميد وعن أبي أسيد أن
النبي صلى الله عليه و سلم قال : إذا سمعتم الحديث عني تعرفه قلوبكم وتلين له أشعاركم
وأبشاركم وترون أنه منكم قريب فأنا أولاكم به وإذا سمعتم الحديث عني تنكره قلوبكم
وتنفر أشعاركم وأبشاركم وترون أنه منكم بعيد فأنا أبعدكم منه قال

تعليق شعيب الأرنؤوط : إسناده صحيح على شرط مسلم

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்களது உள்ளங்கள் ஒத்துக் கொள்ளுமானால், இன்னும் உங்கள் தோல்களும் முடிகளும் (அதாவது உங்கள் உணர்வுகள்) அச்செய்திக்குப் பணியுமானால், இன்னும் அச்செய்தி உங்களுக்கு நெருக்கமாக இருப்பதாக நீங்கள் கருதினால் அதைக் (கூறுவதற்கு) உங்களை விட நான் மிகத் தகுதி வாய்ந்தவனே. என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்கள் உள்ளம் வெறுக்குமானால், உங்களது தோல்களும் முடிகளும் விரண்டு ஓடுமானால், அச்செய்தி உங்களுக்குத் தூ ரமாக இருப்பதாக நீங்கள் கருதினால் உங்களை விட அதை விட்டும் நான் மிக தூரமானவன்.

அறிவிப்பவர்: அபூ உஸைத் (ரலி) அவர்கள்
நூல்: அஹ்மத் 15478

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பெயரால் சொல்லப்படும் செய்திகளில் பொய்யானவை கலந்து விடும் என்பதையும், அதை எவ்வாறு கண்டறிவது என்பதையும் இங்கே விளக்குகிறார்கள்.

எந்தச் செய்தியைக் கேட்கும் போது இதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லி இருப்பார்கள் என்று தக்க காரணங்களுடன் ஒருவரது மனசாட்சிக்குத் தோன்றுமோ அது போன்ற செய்திகளைச் சொல்வதற்கு அவர்கள் தகுதியானவர்கள். எந்தச் செய்தியைச் செவியுறும் போது தக்க காரணங்களுடன் ஒருவரது மனசாட்சி அதை வெறுக்குமோ, அதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லி இருக்க மாட்டார்கள் என்று அவரது மனசாட்சிக்குத் தோன்றுமோ அந்தச் செய்தி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறாதது: அவர்கள் செய்யாதது என்பதுதான் அந்த வழிமுறை என்று

தெளிவாக விளக்கி விட்டார்கள்.

அல்லாஹ் தனது திருக்குர்ஆனில் கூறுகின்றான்.

அவர்கள் தமது இறைவனின் வசனங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டால் அவற்றின் மீது செவிடர்களாகவும், குருடர்களாகவும் விழ மாட்டார்கள்.

திருக்குர்ஆன் 25:73

குருடர்களாகவும் செவிடர்களாகவும் விழுவது என்றால் என்ன? ஒரு வசனத்தை மேலோட்டமாகப் பார்க்கும் போது அது பல வசனங்களுக்கு முரணாகத் தெரிகிறது. இஸ்லாத்தின் அடிப்படைக்கு மாற்றமாகவும் உள்ளது. மாற்றமாக இருந்தால் இருந்து விட்டு போகட்டும் என்று நம்புவது தான் குருடர்களாக செவிடர்களாக விழுவது என்பதன் கருத்தாக இருக்க முடியும்.

பல வசனங்களுக்கு முரணாக உள்ளதால் முரணில்லாத வகையில் இஸ்லாத்தின் அடிப்படையைத் தகர்க்காத வகையில் பொருள் கொள்பவர்கள் தான் குருடர்களாகவும் செவிடர்களாகவும் விழாதவர்கள்.

இறைவனால் வழங்கப்பட்ட வஹீயாக இருக்கின்ற அல்குர்ஆனும், ஹதீஸ்களும் ஒரு போதும் ஒன்றுடன் மற்றொன்று முரண்படாது என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.



# ஹதீஸ் கலை விதி பற்றிய ஓர் பார்வை


- ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்ட முறை. 14
- ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களை மறுக்கிறோமா? 18
- ஹதீஸ் கலையில் இல்லாத புது விதியை தவ்ஹீத் ஜமாத் அறிமுகம் செய்கிறதா? 28
- குர்ஆனுக்கு முரணான செய்தியை அறிவிப்பவர் பொய்யரா? 32
- ஷாத் வகை ஹதீஸ்கள் பற்றிய விளக்கம். 36
- பெரும் அறிஞர்களுக்கு தெரியாதது இவர்களுக்கு தெரிந்து விட்டது? 41
- புகாரியில் பதிவான பலவீனமான ஹதீஸ்கள் 46
- வழிகேட்டை காப்பாற்ற ஹதீஸை பலவீனப் படுத்தும் வழிகேடர்கள். 54

## ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்ட முறை.

திருக்குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை ஏற்கக் கூடாது என்று நாம் கூறுவது நமது மனோ இச்சையின் அடிப்படையில் அல்ல. மாறாக திருக்குர்ஆனிலிருந்தும் நம்பகமான ஹதீஸ்கள் என்று உறுதி செய்யப்பட்ட ஹதீஸ்களில் இருந்தும் இந்த விதியை நாம் அறிந்து கொள்ளலாம்.

நபித்தோழர்களும் தமது வாழ்வில் இந்த விதியைக் கடைப்பிடித்துள்ளார்கள். ஹதீஸ்கலை அறிஞர்களும் இந்த விதியை வகுத்துள்ளனர். நல்லறிஞர்களும் இந்த விதியின் அடிப்படையில் சில ஹதீஸ்களை மறுத்துள்ளனர்.

முஸ்லிம்களாகிய நாம் திருக்குர்ஆனை இறை வேதம் என்று நம்புகிறோம்.

மார்க்கம் தொடர்பான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல் செயல் அங்கீகாரம் ஆகியவற்றையும் அல்லாஹ்விடமிருந்து வந்தவை என்று நாம் நம்புகிறோம். இவ்வாறு நாம் நம்பினால் தான் இஸ்லாம் என்ற வட்டத்துக்குள் இருக்க முடியும்.

அல்லாஹ்விடமிருந்து வரும் செய்திகளுக்கும் மனிதர்களிடமிருந்து வரும் செய்திகளுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. மனிதர்களின் செய்திகளில் முரண்பாடுகள் இல்லாமல் இருக்காது. ஆனால் அல்லாஹ்வின் செய்தியில் முரண்பாடு அறவே இருக்காது என்பது அவற்றுள் முக்கியமான வேறுபாடாகும்.

**அவர்கள் இந்தக் குர்ஆனைச் சிந்திக்க மாட்டார்களா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள்.**

திருக்குர்ஆன் 4 : 82

**இதன் முன்னும், பின்னும் இதில் தவறு வராது. புகழுக்குரிய ஞானமிக்கோனிடமிருந்து அருளப்பட்டது.**

திருக்குர்ஆன் 41 : 42

மனிதர்களிடம் ஏன் முரண்பாடுகள் ஏற்படுகின்றன? அல்லாஹ்வின் வார்த்தையில் ஏன் முரண்பாடு ஏற்படுவதில்லை?

முன்னர் பேசியதை மறந்து விடுதல்! முன்னர் தவறாக விளங்கியதைப் பின்னர் சரியாக விளங்குதல்! போதுமான கவனமின்றிப் பேசுதல்! யாரிடம் பேசுகிறோமோ அவர்கள் மனம் கோணக் கூடாது என்பதற்காக அல்லது அவர்களிடமிருந்து ஆதாயம் பெறுவதற்காக வளைந்து கொடுத்துப் பேசுதல்! வயது ஏற ஏற மூளையின் திறனில் ஏற்படும் குறைபாடுகள்! விளைவுகளுக்கும், நெருக்கடிகளுக்கும் அஞ்சி இரட்டை நிலை மேற்கொள்ளுதல்!



மற்றும் இது போன்ற ஏராளமான பலவீனங்கள் மனிதனுக்கு இருப்பதால் முரண்பாடுகள் இல்லாமல் பேச முடியாது. இது போன்ற பலவீனங்களுக்கு அப்பாற்பட்டவனாக இறைவன் இருப்பதால் அவனுடைய செய்திகளில் முரண்பாடு இருக்காது.

இறைவனின் வார்த்தைகளில் எவ்வாறு முரண்பாடு வராதோ அது போல் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வார்த்தைகளிலும் முரண்பாடு வரக் கூடாது. மேலும் திருக்குர்ஆனுக்கு முரணாகவும் இருக்கக் கூடாது.

ஏனெனில் நபிகள் நாயகம் அவர்கள் மார்க்கம் என்ற அடிப்படையில் பேசிய அனைத்தும் அவர்கள் சுயமாகக் கூறியவை அல்ல. மாறாக அவை அனைத்தும் இறைவன் புறத்திலிருந்து வந்தவையாகும்.

**அவர் மனோ இச்சைப்படிப் பேசுவதில்லை. அ(வர் பேசுவ)து அறிவிக்கப்படும் செய்தியைத் தவிர வேறில்லை.**

திருக்குர்ஆன் 53 : 4

திருக்குர்ஆனும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளும் இறைவன் புறத்தில் இருந்து வந்ததால் இரண்டு செய்திகளும் ஒன்றுடன் ஒன்று பொருந்திச் செல்லுமே தவிர முரண்பட்டு விலகிச் செல்லாது.

நபிகள் நாயகம் (ஸல்) கூறியதாக ஒரு செய்தி கிடைக்கிறது. அந்தச் செய்தி திருக்குர்ஆனுக்கு முரண்படுவதாக நமக்குத் தோன்றுகிறது. முரண்பாடு இல்லாத வகையில் இரண்டுக்கும் இணக்கமான விளக்கம் கொடுக்க எவ்வளவு முயன்றாலும் இயலவில்லை என்றால் இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

முரண்பாடான இரண்டு விஷயங்களில் ஒன்று தான் உண்மையாக இருக்க முடியும். முரண்பட்ட இரண்டு விஷயங்களும் ஒருக்காலும் உண்மையாக இருக்க முடியாது.

- குர்ஆனுடன் முரண்படும் ஹதீஸை ஏற்றுக் கொண்டால் குர்ஆனை மறுக்கும் நிலை ஏற்படும்.

- குர்ஆனை ஏற்றுக் கொண்டால் குறிப்பிட்ட அந்த ஹதீஸை மறுக்கும் நிலை ஏற்படும்.

இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன?

குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸை விட்டு விட்டு குர்ஆனை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை.

இவ்வாறு நாம் முடிவு செய்வதால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குர்ஆனுக்கு மாற்றமாகப் பேசி விட்டார்கள் என்பது பொருளல்ல. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு சொல்லி இருக்க மாட்டார்கள்: சொல்லவில்லை என்பதே இதன் பொருள்.

அப்படியானால் ஹதீஸ்கள் பாதுகாக்கப்படவில்லை என்று ஆகிவிடுமே என்ற சந்தேகம் எழலாம்.

ஹதீஸ்களும் நிச்சயம் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த மனிதரின் போதனைகளும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை அளவுக்குப் பாதுகாக்கப்படவில்லை. அந்த ஒரு மனிதரின் போதனைகளைப் பாதுகாப்பதற்காக ஐந்து லட்சம் அறிவிப்பாளர்களின் வரலாறுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்தப் பாதுகாப்பு ஏற்பட்டை திருக்குர்ஆனின் பாதுகாப்புடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது.

1- திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழும் போதே எழுத்தர்கள் மூலம் எழுதச் செய்து பாதுகாக்கப்பட்டது. ஆனால் ஹதீஸ்கள் அனைத்தையும் பாதுகாக்க நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை. மிகச் சில நபித் தோழர்கள் மிகச் சில ஹதீஸ்களை எழுதி வைத்துக் கொண்டார்கள். அனைத்து ஹதீஸ்களும் எழுதப்படவில்லை.

2- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழும் போது திருக்குர்ஆனைத் தாமும் மனனம் செய்தார்கள். பல நபித்தோழர்களும் மனப்பாடம் செய்திருந்தனர். இது போல் ஹதீஸ்கள் பாதுகாக்கப்படவில்லை. அனைத்து ஹதீஸ்களையும் மனப்பாடம் செய்த ஒரே ஒரு நபித்தோழர் கூட இருந்ததில்லை.

3- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழும் போது ஒவ்வொரு ஆண்டும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து திருக்குர்ஆனைச் சரி பார்ப்பார்கள். இது போன்ற பாதுகாப்பு ஹதீஸ்களுக்கு இருக்கவில்லை.



4- நாம் இப்போது எதைத் திருக்குர்ஆன் என்று கூறுகிறோமோ அது தான் திருக்குர்ஆன் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் அனைவரும் ஒருமித்து அடுத்த தலைமுறைக்குச் சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த முஸ்லிம்கள் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லாமல் இது தான் குர்ஆன் என்று அடுத்த தலைமுறைக்கு அறிமுகம் செய்தார்கள்.

ஆனால் ஹதீஸ்களைப் பொருத்தவரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஒரு நபித்தோழரோ இரண்டு மூன்று நபித் தோழர்களோ தான் அடுத்த தலைமுறைக்கு - அதாவது அடுத்த தலைமுறையில் சிலருக்குச் - சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு காலத்திலும் மிகச் சிலர் தான் அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

5- எழுத்து வடிவில் அனைத்து ஹதீஸ்களும் பாதுகாக்கப்படாததால் ஹதீஸ்கள் நூல் வடிவம் பெறும் காலம் வரை கட்டுக்கதைகளும் ஹதீஸ்கள் என்ற பெயரில் நுழைந்தன. ஆனால் குர்ஆனில் எந்த வார்த்தையும் எந்தக் காலத்திலும் இட்டுக்கட்டிக் கூறப்படவே இல்லை.

6- குர்ஆனை அல்லாஹ்வே பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். ஆனால் ஹதீஸ்களைப் பொருத்தவரை அறிஞர்கள் தான் இதற்கான விதிகளைக் கண்டறிந்து ஹதீஸ்களைப் பாதுகாக்கும் முயற்சியை மேற்கொண்டனர்.

திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்டது போல் ஹதீஸ்கள் பாதுகாக்கப்படவில்லை என்பதால் மனிதர்கள் வகுத்த பாதுகாப்பு வளையத்தை மீறி தவறான ஹதீஸ்கள் சரியான ஹதீஸ்கள் என்ற பெயரில் கலந்திருக்க வாய்ப்பு உள்ளது. அதையும் களை எடுப்பதற்குத் தான் பலவித நிபந்தனைகளை அறிஞர்கள் வகுத்தனர். அவற்றில் ஒன்று தான் குர்ஆனுக்கு முரண்படாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை.

இதை நாம் புதிதாகக் கண்டு பிடித்துக் கூறுவது போல் ஒரு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. காலம் காலமாக இது ஹதீஸ் கலையில் விதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதே உண்மையாகும்.

# ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களை மறுக்கிறோமா?

திருக்குர்ஆனும் நபிவழியுமே இஸ்லாத்தின் மூல ஆதாரங்கள். இதை தக்க வாதங்களோடும் தெளிவான சான்றுகளோடும் எண்பதுகளிலிருந்து தவ்ஹீத் ஜமாஅத் பிரச்சாரம் செய்து வருகிறது.

தவ்ஹீத் ஜமாஅத்தின் சத்தியப் பிரச்சாரத்தால் அதிக அளவில் மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். விளைவு ஊருக்கு நாலைந்து பேர் என்ற நிலை மாறி சத்தியக் கொள்கையில் கூட்டம் கூட்டமாக மக்கள் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

“சத்தியம் வந்தது அசத்தியம் அழிந்தது. அசத்தியம் அழிந்தே தீரும்” என்ற (அல்குர்ஆன் 34:49) இறைவாக்கின் அடிப்படையில் அசத்தியவாதிகளின் கூடாரம் காலியாகத் துவங்கியது அவர்களுக்குக் கிலியை உண்டாக்கியது.

சத்தியவாதிகளின் வளர்ச்சியை தடுத்து நிறுத்த அவர்கள் என்னென்னவோ செய்து பார்த்தும் பலனில்லை. நமது வாதங்களுக்குத் தக்க பதிலும் அசத்தியவாதிகளிடம் இல்லை. ஆகவே தங்கள் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவும் சத்தியத்தை நோக்கிப் படை திரண்டு வரும் மக்கள் திரளைத் தடுத்து நிறுத்தவும் அவர்கள் பொய்ப் பிரச்சாரத்தைக் கையிலெடுக்கலானார்கள்.

தங்களிடம் பதில் இல்லை எனும் போது பொய்ப்பிரச்சாரத்தைக் கையிலெடுப்பது தான் நபிமார்கள் காலத்திலிருந்தே அசத்தியவாதிகளின் அணுகுமுறையாக இருந்தது.

இறைத்தூதர்கள் சத்தியத்தை எடுத்துச் சொல்லும் வேளையில் அதற்குப் பதிலளிக்க இயலாத எதிரிகள் நபிமார்களை பைத்தியக்காரன், கவிஞன், சூனியக்காரன் என்று பொய் கூறியே மக்கள் கூட்டம் சத்தியத்தை ஏற்பதை விட்டும் தடுக்க எண்ணினார்கள். அல்லாஹ் அவர்களை மண்ணைக் கவ்வ வைத்தான் என்பது தனி விஷயம்.

அது போன்று தான் எதைச் சொன்னால் மக்கள் பாரதூரமாகக் கருதி நம்மை விட்டும் விலகுவார்களோ அது போன்ற பொய்யான, அவதூறான பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு செல்ல ஆரம்பித்தார்கள்.



இவர்கள் நபி மீது ஸலவாத் சொல்ல மறுக்கிறார்கள்.

இவர்கள் அவ்லியாக்களை திட்டுகிறார்கள்.

இமாம்களை திட்டுகிறார்கள்.

என்றெல்லாம் பல்வேறு அவதூறுகளைக் கூறினார்கள்.

இவற்றில் எதுவுமே உண்மையல்ல. அனைத்துமே உண்மைக்கு புறம்பான, மக்களை நம்மை விட்டும் அப்புறப்படுத்தும் நோக்கில் சொல்லப்பட்ட பொய்க்குற்றச்சாட்டுகள். மேற்சொல்லப்பட்டவற்றில் எந்த ஒன்றையாவது எந்தக் காலகட்டத்திலாவது நாம் சொல்லியிருக்கிறோமோ? என்றால் கிடையாது.

பாங்கு சொல்வதற்கு முன் ஸலவாத் ஓதும் நடைமுறை பரவலாகக் காணப்பட்டது. இது நபிவழிக்கு மாற்றமானது, பாங்கிற்குப் பிறகே ஸலவாத் ஓத வேண்டும்: அதுவே நபிவழி என்று மக்களிடம் நாம் சத்தியப்பிரச்சாரம் செய்ததை திரித்து நபி மீது ஸலவாத் ஓத மறுக்கிறார்கள் என்று கூறலானார்கள்.

இறந்த மனிதர்களை அவ்லியாக்கள் என்கிறீர்களே! அவர்களுக்கு மறைவான ஞானம் உண்டு, குழந்தை தரும் ஆற்றல் உண்டு என்றெல்லாம் சொல்கிறீர்களே இது இணைவைப்பு அல்லவா? என்று பிரச்சாரம் செய்தோம்.

அது மட்டுமின்றி யானை, குரங்கு போன்றவற்றையும் கஞ்சா அடிப்பவர்களையும், பீடி குடிப்பவர்களையும் இறைநேசர் என்கிறீர்களே! இது முறையா என்று பிரச்சாரம் செய்தோம். இதைத்தான் திரித்து, மறைத்து “அவ்லியாக்களைத் திட்டுகிறார்கள்“ என்று மக்களிடம் கொண்டு சென்று மக்களை நம்மை விட்டும் தூரமாக்கும் இழிச்செயலைச் செய்தார்கள்.

அனைவரும் குர்ஆன், ஹதீஸை மட்டும் பின்பற்றுங்கள்: இமாம்களையோ, ஸஹாபாக்களையோ பின்பற்றாதீர்கள் என்று கூறியதை இமாம்களையும், “ஸஹாபாக்களையும் திட்டுகிறார்கள்” என்று பொய்ப்பிரச்சாரம் செய்தார்கள்.

இப்படி சத்தியத்தை நோக்கி அலை அலையாய் ஆர்ப்பரித்து வரும் மக்கள் திரளைத் தடுத்து நிறுத்த எத்தனையோ பொய்ப்பிரச்சாரங்களைக் கையிலெடுத்தார்கள்.

அல்லாஹ்வின் மகத்தான கிருபையால் அவர்களின் அனைத்து சதிகளையும் முறியடித்து இன்று மிகப் பெரும் வளர்ச்சியை தவ்ஹீத் ஜமாஅத்

அடைந்திருக்கின்றது.

இறை உதவியோடு அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து இன்றைய வளர்ச்சி நிலையை அடைந்திருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் நம்மிடம் இருக்கும் சத்தியமே என்பதில் துளியும் சந்தேகமில்லை.

சத்தியத்திற்கு முன் அசத்தியவாதிகள் வாயடைத்து மௌனிகளாகி விடுவார்கள் என்பதே வரலாறு. அதற்கு இப்றாஹீம் நபியின் நிகழ்வு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

தனக்கு அல்லாஹ் ஆட்சியைக் கொடுத்ததற்காக இப்ராஹீமிடம் அவரது இறைவன் குறித்து தர்க்கம் செய்தவனை நீர் அறியவில்லையா? "என் இறைவன் உயிர் கொடுப்பவன்: மரணிக்கச் செய்பவன்" என்று இப்ராஹீம் கூறிய போது, "நானும் உயிர் கொடுப்பேன்: மரணிக்கச் செய்வேன்" என்று அவன் கூறினான். "அல்லாஹ் கிழக்கில் சூரியனை உதிக்கச் செய்கிறான். எனவே நீ மேற்கில் அதை உதிக்கச் செய்!" என்று இப்ராஹீம் கேட்டார். உடனே (ஏக இறைவனை) மறுத்த அவன் வாயடைத்துப் போனான். அநீதி இழைத்த கூட்டத்திற்கு அல்லாஹ் நேர்வழி காட்ட மாட்டான்.

திருக்குர்ஆன் 2:258

**ஸலஃபுக் கும்பலும் ஹதீஸ் மறுப்புக் கொள்கை குற்றச்சாட்டும்**

நமது வாதங்களுக்குப் பதிலளிக்க இயலாத தரீக்காவாதிகள், மத்ஹபுவாதிகள் எடுத்த அதே பொய்ப்பிரச்சாரம் எனும் ஆயுதத்தை இன்று தவ்ஹீத்வாதிகள் என்று சொல்லிக் கொள்வோர் அல்லது தவ்ஹீத் முகமூடி அணிந்துள்ள சிலர் கையிலெடுத்துள்ளார்கள்.

குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ், சூனியம் போன்ற விவகாரத்தில் தவ்ஹீத் ஜமாஅத் எடுத்து வைக்கும் வாதங்களுக்குத் தகுந்த பதிலளிக்க இயலாத இந்த பலவீனர்கள் நம்மைப் பார்த்து, "இவர்கள் ஹதீஸை மறுப்பவர்கள்" என்று ஓலமிடுகின்றார்கள்.

நவீன முஃதஸிலாக்கள், கவாரிஜ்கள், ஹதீஸ் மறுப்புக் கொள்கை கொண்டவர்கள் இதுவெல்லாம் மனோ இச்சைவாதிகள் நமக்குச் சூட்டியுள்ள அடைமொழிகள்.

இவர்களை மனோஇச்சைவாதிகள் என்று நாம் கூறுவதற்கு காரணம், எழுப்பப்படும் வாதங்களுக்குத் தகுந்த பதில் அளிக்காதவர்களை குர்ஆன் அவ்வாறு தான் வர்ணிக்கின்றது.



அவர்கள் உமக்குப் பதிலளிக்காவிட்டால் அவர்கள் தமது மனோ இச்சைகளையே பின்பற்றுகின்றனர் என்பதை அறிந்து கொள்வீராக! அல்லாஹ்விடமிருந்து கிடைத்த நேர்வழியின்றி தனது மனோ இச்சையைப் பின்பற்றியவனை விட வழிகெட்டவன் யார்? அல்லாஹ் அநீதி இழைக்கும் கூட்டத்திற்கு நேர் வழி காட்ட மாட்டான்.

திருக்குர்ஆன் 28 50

உண்மையில் தவ்ஹீத் ஜமாஅத்தினர் ஹதீஸ் மறுப்புக் கொள்கையைக் கொண்டவர்களா?

இந்தக் கேள்விக்கான பதிலை தவ்ஹீத் வரலாற்றை அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள்.

குர்ஆனும் ஹதீஸும் தான் இஸ்லாத்தின் அடிப்படை என்பதை எந்த இயக்கமும் சொல்லாத அளவிற்கு தவ்ஹீத் ஜமாஅத் அழுத்தமாகச் சொல்லி வருகிறது.

"எங்கள் இறைவன் அல்லாஹ்வே என்று அவர்கள் கூறியதற்காகவே நியாயமின்றி அவர்களின் இல்லங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்" என்று அல்லாஹ் (22:40) கூறியதற்கேற்ப குர்ஆனும் ஹதீஸும் தான் இஸ்லாத்தின் அடிப்படை என்ற கொள்கையைப் பிரச்சாரம் செய்த காரணத்தாலேயே ஊர் நீக்கம், அடி உதை, அரிவாள் வெட்டு என பல துன்பங்களை தவ்ஹீத் ஜமாஅத் தன் பிரச்சாரப் பயணத்தின் துவக்கத்தில் சந்தித்துள்ளது.

பல பகுதிகளிலும் இந்தக் கொள்கையைப் பிரச்சாரம் செய்த தவ்ஹீத் ஜமாஅத்தார்கள் கடுமையான துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். இந்தக் கொள்கையில் இறந்து போனவர்களது உடல் மையவாடியில் அடக்கம் செய்ய மறுக்கப்பட்டது.

மனோஇச்சைவாதிகள் கூறுவதைப் போன்று ஹதீஸ் மறுப்புக் கொள்கை என்பது தவ்ஹீத் ஜமாஅத்தின் கொள்கையாக இருந்திருந்தால் ஹதீஸைப் பின்பற்ற வேண்டும் என்று சொன்னதற்காக அவ்வளவு துன்பங்களையும் அடி உதைகளையும் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையே!

கொள்கையில் கொஞ்சம் வளைந்து கொடுத்திருந்தால் போதும் ஊர் ஜமாஅத்தார்கள் இந்த ஜமாஅத்திற்கு பட்டுக் கம்பளம் விரித்திருப்பார்கள். ஆனால் அதற்கெல்லாம் அசைந்து கொடுக்காமல் குர்ஆன், ஹதீஸ் தான் இஸ்லாம் என்பதை நெஞ்சு நிமிர்த்திப் பிர்ச்சாரம் செய்த, செய்து வருகின்ற

அமைப்பு இந்த தவ்ஹீத் ஜமாஅத்.

குர்ஆன் மட்டும் போதும், நபிவழி தேவையில்லை என்று ஒருவன் சொன்னால் அவன் முஸ்லிமல்ல என்பதை ஆணித்தரமாக தவ்ஹீத் ஜமாஅத் பிரச்சாரம் செய்து வருவது மட்டுமல்ல: அந்த வழிகெட்ட கொள்கையில் உள்ளவர்களோடு பல விவாதக் களங்களைச் சந்தித்துள்ளது. அவர்களுக்கு எதிராக நூல்களையும் எழுதி உள்ளது.

குர்ஆன் மட்டும் போதுமா என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள நூலைப் படிப்பவர்கள் இதனைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். இந்த ஜமாஅத் நபிமொழிகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை அறிய இந்த ஒரு நூல் மிகச்சிறந்த சான்று.

குர்ஆனும் நபிமொழியும் முஸ்லிம்கள் பின்பற்றுவதற்கே. நபிமொழிகளில் ஒன்று சொல்லப்பட்டு விட்டால் அதை எப்பாடு பட்டாவது கடைபிடிக்க வேண்டும், எத்தகைய துன்பத்தைச் சந்தித்தாலும் மக்களிடையே அதை நிலைநாட்ட வேண்டும் என்பதை கொள்கையாகக் கொண்டு செயல்படும் அமைப்பு இது.

**தொழுகையில் விரலசைத்தல்**

அதற்கு ஒரு சிறிய உதாரணம் தான் தொழுகையில் விரலசைப்பது.

தொழுகையில் கையை நெஞ்சின் மீது கட்ட வேண்டும், அத்தஹிய்யாத்தின் போது விரலை அசைக்க வேண்டும் என்பது நபிமொழி தான். இந்த நபிமொழிகளை அறிந்திராத காலகட்டத்தில் முஸ்லிம்கள் அனைவரும் இந்த நபிமொழிகளுக்கு மாற்றமாகவே தங்கள் தொழுகை முறையை அமைத்திருந்தார்கள்.

தவ்ஹீத் ஜமாஅத் இந்த நபிமொழிகளை அறிந்ததும் அதை அமுலுக்குக் கொண்டு வந்தது. விளைவு ஊர் முழுவதிலும் எதிர்ப்பலைகள்.

நபிமொழிகளைப் பின்பற்றி நெஞ்சின் மீது கை கட்டி தொழுபவர்கள் அடிக்கப்பட்டார்கள். விரல் அசைப்பவர்களது விரல்கள் தொழுகையிலேயே ஒடிக்கப்பட்டன. தொழுது கொண்டிருக்கும் போதே செங்குத்தாக தூக்கி ஹவ்ஸில் (ஒழு செய்யுமிடத்தில்) தூக்கி போடப்பட்டனர். விரலை அசைத்துத் தொழுபவர்களுக்கு பள்ளியில் தொழ அனுமதியில்லை என்று அடித்து விரட்டப்பட்டனர். நபிவழி அடிப்படையில் இறைவனை வணங்குவதற்குப் பள்ளியில்லாமல் அலைக்கழிக்கப்பட்டனர்.



ஹதீஸ் மறுப்பை கொள்கையாகக் கொண்டிருந்தால், அஹ்மதில் இடம்பெறும் விரலசைத்தல் ஹதீஸை அமுல்படுத்துவதற்கு இத்துனை துன்பங்களை ஏன் அனுபவிக்க வேண்டும்?

ஒன்று நபிமொழி என்று உறுதியாகி விட்டால் அது எந்த நூலில் இருந்தாலும் அதை அமுல்படுத்த இந்த ஜமாஅத் தயங்காது. அதற்காக வரும் பிரச்சனைகளைக் கண்டு அஞ்சாது என்பதே வரலாற்று உண்மை.

இத்தகைய ஜமாஅத் ஹதீஸ் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருக்கிறது என்று குற்றம் சாட்டுவது எத்தகைய கடைந்தெடுத்த பொய்யாக இருக்க வேண்டும்?

**எளிய திருமணம்**

இன்றைக்கு தவ்ஹீத் ஜமாஅத்தை நோக்கி, அது சொல்லும் சத்தியத்திற்காக பெருந்திரளான மக்கள் படையெடுத்து வந்தாலும் தவ்ஹீத் ஜமாஅத்தின் குர்ஆன் ஹதீஸிற்கு உட்பட்ட சில நிலைப்பாடுகளால் இன்னும் பல மக்கள் ஆதரவை இந்த ஜமாஅத் இழக்கவே செய்கிறது. அது போன்ற நிலைகளை இந்த ஜமாஅத் தளர்த்தினால் இன்னும் அதிக மக்களை வென்றெடுக்க முடியும்.

உதாரணத்திற்கு, திருமணத்தை ஆடம்பரமின்றி எளிமையான முறையில் நடத்த வேண்டும் என்று தவ்ஹீத் ஜமாஅத் வலியுறுத்துகிறது. பெரியளவில் விருந்து வைத்து மண்டபங்களில் திருமணத்தை நடத்தினால் கூட அது ஆடம்பரமாக ஆகும் என்று ஜமாஅத் பிரச்சாரம் செய்கிறது. அந்த திருமணங்களைத் தவிர்க்கின்றது.

இது மனோஇச்சை அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவல்ல. நபிமொழியே இத்தகைய நிலைப்பாட்டை எடுக்க எங்களைத் தூண்டியது.

குறைந்த செலவில் நடத்தப்படும் திருமணமே பரகத் நிறைந்தது (நூல்: அஹ்மத்)

இந்த நபிமொழி அடிப்படையிலும், நம் சமுதாயம் திருமணத்திற்காக பணத்தை வாரி இறைத்து விரையம் செய்வதைக் கவனத்தில் கொண்டும் எளிமையான முறையில் திருமணம் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

மண்டபம், பெரிய அளவில் விருந்தளித்தல் ஹராமல்ல என்றாலும் மேற்கண்ட நபிமொழி அடிப்படையிலும் சமூக நிர்ப்பந்தத்தைத் தவிர்க்கும் வகையிலும்

திருமணத்தை எளிமைப்படுத்துவதே சிறந்தது என்பதே ஜமாஅத்தின் நிலை.

இதனடிப்படையில் மண்டபம், பெரிய அளவிலான விருந்து போன்றவற்றை இந்த ஜமாஅத் தவிர்க்கும் போது அதற்காகவே சில மக்கள் இந்த ஜமாஅத்திற்கு வராமல் இருக்கிறார்கள். அல்லது ஜமாஅத்தில் இருக்கிற சில நபர்களும் திருமண விவகாரம் வரும் போது ஜமாஅத்திலிருந்து விலகி விடுகிறார்கள்.

இப்படி ஒரு வகையினரை திருமண நிலைப்பாட்டால் இந்த ஜமாஅத் இழக்கவே நேரிடுகிறது. எனினும் இந்த ஜமாஅத் இந்த நிலைப்பாட்டைத் தொடர்வதற்கு மேற்கண்ட நபிமொழியே காரணம்.

இதை குறிப்பிடுவதற்குக் காரணம், ஹதீஸை மறுப்பவர்களது செயல்பாடுகள் இப்படி இருக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

மக்கள் ஆதரவை இழந்தாலும் பரவாயில்லை நபிமொழி என்ன சொல்கிறதோ அதைச் செய்வோம் என்ற நிலைப்பாட்டில் தான் ஹதீஸை மறுப்பவர்கள் இருப்பார்களா?

உண்மையில் ஹதீஸ் மறுப்புக் கொள்கை ஜமாஅத்தின் கொள்கையாக இருந்தால் இந்த ஹதீஸை அல்லவா மறுத்திருக்க வேண்டும். பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று என்று இதை மறுத்து மக்கள் ஆதரவைத் திரட்டி இயக்கத்தின் மக்கள் சக்தியை அதிகப்படுத்தியிருக்க வேண்டும்.

சொல்லப்போனால் எதிர்க்கூடாரத்தில் இருந்த சில சாப்பாட்டுப் பிரியர்கள் இந்த ஹதீஸை பலவீனம் என்று கூக்குரலிட்ட போதும் அது தவறு, இந்த ஹதீஸ் சரியானதே என்று ஆய்வு செய்து மறுப்புக் கட்டுரை வெளியிட்டது இந்த ஜமாஅத்.

மக்கள் கூட்டம் எங்களுக்கு முக்கியமில்லை. நபிமொழியைப் பின்பற்றுவதே முக்கியம் என்பதை கொள்கையாகக் கொண்டது இந்த ஜமாஅத் என்பதற்கு இது ஓர் சான்று.

இது போன்று திடல் தொழுகை, ஸஹர் பாங்கு, ஜனாஸா தொழுகையை குடும்பத்தார் தொழுவிப்பது போன்ற எண்ணற்ற நபிமொழிகளை மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்து அதை உயிர்ப்பிக்கும் விதமாக நடைமுறைக்கு கொண்டு வந்ததால் பல எதிர்ப்பலைகளையும் விமர்சனங்களையும் இந்த ஜமாஅத் சந்தித்துள்ளது.

இத்தகைய ஜமாஅத்தை நோக்கி ஹதீஸை மறுப்பவர்கள் என்று கூறும்



குற்றச்சாட்டு உண்மையா? என்பதை சிந்தனையுள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்.

குர்ஆன் மட்டும் போதும் என்று ஒரு கூட்டம் கொக்கரித்த போது அமைதி காத்து தங்கள் நபிமொழிப் பற்றை வெளிப்படுத்திய ஹதீஸ் காப்பாளர்கள் (?) நம்மைப் பார்த்து ஹதீஸ் நிராகரிப்பாளர்கள் என்று விமர்சிப்பது சந்தேகமற வியப்பின் சரித்திரக் குறியீடே!

**நாங்கள் சொல்வது என்ன?**

குர்ஆனும் நபிவழியும் தான் இஸ்லாத்தின் அடிப்படை என்றாலும் பாதுகாக்கப்படும் முறைகளில் இரண்டும் சமமானவை அல்ல.

இது குறித்து பி.ஜே அவர்கள் திருக்குர்ஆன் தர்ஜுமாவில் எழுதிய சிறு விளக்கத்தை இங்கே அறியத்தருகிறோம்

நம்பகத் தன்மையில் திருக்குர்ஆனும், நபிமொழிகளும் சமமானவை அல்ல. குர்ஆனைப் பொறுத்த வரை அனைத்து நபித்தோழர்களும் அது இறைவேதம் என்பதற்கு சாட்சிகளாக உள்ளனர்.

குர்ஆன் வசனங்களை ஓதிக் காட்டி "இது என் இறைவனிடமிருந்து வந்தது" என நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். அவர்கள் அவ்வாறு கூறினார்கள் என்பதற்கு ஒட்டுமொத்த நபித்தோழார்களும் சாட்சிகளாக இருந்தனர். எழுத்து வடிவில் பதிவு செய்தனர். பலர் மனனம் செய்தனர்.

ஹதீஸ்களைப் பொறுத்த வரை எந்த ஒரு ஹதீஸையும் அனைத்து நபித்தோழர்களும் அறிவிக்கவில்லை. விரல் விட்டு எண்ணப்படும் சில ஹதீஸ்கள் அதிகபட்சம் ஐம்பது நபித்தோழர்கள் வழியாக அறிவிக்கப்பட்டுள்ளன. மற்ற ஹதீஸ்கள் யாவும் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று நபித்தோழர்கள் வழியாகத் தான் அறிவிக்கப்பட்டுள்ளன. அதாவது நபிகள் நாயகம் (ஸல்) இவ்வாறு கூறினார்கள் என்பதற்கு ஒருவர் அல்லது இருவர் தான் சாட்சி கூறுகிறார்.

ஒட்டு மொத்த சமுதாயமே சாட்சி கூறுவதும் ஒருவரே சாட்சி கூறுவதும் சமமானதாக ஆகாது. எவ்வளவு தான் நம்பகமானவர்கள் என்றாலும் ஓரிருவர் அறிவிக்கும் செய்திகளில் தவறுகள் நிகழ வாய்ப்புகள் உள்ளன.

நபிகள் நாயகம் (ஸல்) இப்படிச் சொல்லியிருப்பார்களா என்ற கடுகளவு கூட குர்ஆன் விசயத்தில் சந்தேகம் வராது. ஹதீஸ்களைப் பொறுத்த வரை இந்த நிலை கிடையாது.

ஆனாலும் நபித் தோழர்களின் நம்பகத் தன்மையின் அடிப்படையில் அவற்றை ஏற்றுச் செயல்படுகிறோம்.

குர்ஆனுடன் மோதாத வரை இத்தகைய செய்திகளில் சந்தேகம் ஏற்பட முகாந்திரம் இல்லை. குர்ஆனுடன் மோதும் போது "இந்த அறிவிப்பில் எங்கோ தவறு நடந்துள்ளது" என்று முடிவு செய்து குர்ஆனுக்கு முன்னுரிமை அளிப்பது தான் முறையாகும்.

"ஒரு ஹதீஸ் எந்த வகையிலும் திருக்குர்ஆனுடன் அறவே ஒத்துப் போகவில்லை: திருக்குர்ஆனுடன் நேரடியாக மோதுவது போல் அமைந்துள்ளது: இரண்டையும் எந்த வகையிலும் இணைத்து விளக்கம் கூற முடியாது" என்றால் அது போன்ற சந்தர்ப்பங்களில் ஹதீஸை ஏற்று குர்ஆனை மறுத்து விடாமல், குர்ஆனை ஏற்று அந்த ஹதீஸை மட்டும் நிறுத்தி வைப்பது தான் நேர்மையான பார்வையாகும். இந்த நேரத்தில் மட்டும் இது போன்ற ஹதீஸ்களை மட்டும் நாம் விட்டு விட வேண்டும். இத்தகைய ஹதீஸ்கள் புகாரியில் இடம் பெற்றிருந்தாலும் சரி தான்.

இது தான் திருக்குர்ஆன் தர்ஜுமாவில் இடம்பெற்றுள்ள அந்த விளக்கம்.

எந்த வகையிலும் இணைத்து விளக்கம் அளிக்க முடியாதபடி குர்ஆனுக்கு முரண்பட்டால் குர்ஆனுக்கு முன்னுரிமை அளித்து முரண்படும் செய்திகளை இது நபிமொழியே அல்ல என்று நிராகரித்து விட வேண்டும் என்று கூறுகிறோம்.

ஒரு செய்தி குர்ஆனுடன் தெளிவாக மோதும் போது இது குர்ஆனுடன் மோதுகிறது: எனவே நபிகள் நாயகம் இவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள் என்று கூறி மறுப்பது ஹதீஸை மறுப்பதாகுமா? இது ஹதீஸ் மறுப்புக் கொள்கையா?

அப்படியெனில் நபிகள் நாயகம் கூறியதாக உமர், இப்னு உமர், அபூஹுரைரா (ரலி) ஆகியோர் அறிவிக்கும் செய்திகளை குர்ஆனுக்கு மாற்றமாக நபிகள் நாயகம் இவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள் என்ற அடிப்படையில் அன்னை ஆயிஷா (ரலி) மறுத்தார்களே? அன்னை ஆயிஷா அவர்களும் ஹதீஸ் மறுப்புக் கொள்கையில் தான் இருக்கிறார்களா?

(பார்க்க: முஸ்லிம் 1694, 1697, 1693, அஹ்மத் 24894)

இது போன்று ஃபாத்திமா பின் கைஸ் (ரலி) என்ற பெண்மணி நபிகள் நாயகம் கூறியதாக ஒரு செய்தியைக் கூறியதை உமர் (ரலி) அறிந்த போது, குர்ஆனுக்கு மாற்றமாக நபியவர்கள் இவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள்



என்று மறுத்தார்களே, உமர் (ரலி) அவர்களும் ஹதீஸ் மறுப்புக் கொள்கையில் தான் இருந்தார்களா? (பார்க்க: முஸ்லிம் 2963)

இன்னும் பல அறிஞர்கள் இந்த வழிமுறையைக் கடைபிடித்தார்களே! அவர்கள் அனைவரும் ஹதீஸ் மறுப்புக் கொள்கையில் தான் இருந்தார்களா? என்பதற்கு இவர்கள் பதிலளிக்க வேண்டும்.

குர்ஆனுக்கு இந்தச் செய்தி முரண்படுகிறது: எனவே நபிகள் நாயகம் இவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள் என்ற அடிப்படையில் சில செய்திகளை மறுத்தால் அது எப்படி ஹதீஸ் நிராகரிப்புக் கொள்கையாகும்?

ஹதீஸில் பலவீனமானது, இட்டுக்கட்டப்பட்டது, ஷாத் வகையைச் சார்ந்தது என்று பல வகைகள் உள்ளதும் அவை அனைத்தும் மறுக்கப்பட வேண்டியது என்பதும் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று.

இந்த வகை ஹதீஸ்களை எதிர்த்தரப்பாளர்களும் மறுக்கத்தான் செய்கிறார்கள். எனவே அவர்களும் ஹதீஸ் மறுப்புக் கொள்கையில் தான் உள்ளார்களா?

இத்தனைக்கும் ஷாத் வகை ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர் சரியானதாக இருந்தும் அதை மறுக்கத்தான் செய்கிறார்கள். இதனால் ஹதீஸ் கலை அறிஞர்களோ இவர்களோ ஹதீஸ் மறுப்புக் கொள்கையில் இருக்கிறார்கள் என்றாகிவிடுமா?

குர்ஆனுக்கு முரண்படுகிறது என்ற அடிப்படையில் இது பொய், நபிகள் நாயகம் இவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள் என்று மறுப்பது ஒரு போதும் ஹதீஸ் மறுப்புக் கொள்கையாகாது.

எனவே சத்தியத்தை அழிக்க எத்துனை பொய்ப்பிரச்சாரங்கள் செய்யப்பட்டாலும் சத்தியத்திற்கு முன் அவை ஒரு போதும் நிலைத்து நிற்காது. சத்தியம் எடுத்துரைக்கப்படும் போது அசத்தியம் தகர்ந்து, தரைமட்டமாகிப் போகும்.

உண்மையை பொய்யின் மேல் வீசுகிறோம். அது பொய்யை நொறுக்குகிறது. உடனே பொய் அழிந்து விடுகிறது.

திருக்குர்ஆன் 21:18

## ஹதீஸ் கலையில் இல்லாத புது விதியை தவ்ஹீத் ஜமாஅத் அறிமுகம் செய்கிறதா?

அல்குர்ஆனுக்கு முரணான ஹதீஸ்கள் தொடர்பான நமது நிலைபாட்டை நாம் மக்கள் மத்தியில் எடுத்து வைக்கின்ற போது, அதற்கு மாற்றுக் கருத்துக் கொண்டுள்ள உலமாக்கள் நமது வாதங்களுக்குரிய ஆதாரபூர்வமான பதில்களைத் தருவதை விடுத்து, அர்த்தமற்ற விமர்சனங்களையே முன்வைத்து வருகின்றார்கள்.

இவர்களின் விமர்சனங்களில் மிக முக்கியமானதொரு விமர்சனம் தான் முரண்படும் செய்திகள் பற்றிய ஹதீஸ் கலை விதி தொடர்பான விமர்சனமாகும்.

தவ்ஹீத் ஜமாஅத்தினர் கூறுவது போல் ஹதீஸ் கலையில் இப்படி ஒரு விதி இல்லை. இவர்கள் தான் புதிதாக இதைக் கூறுகிறார்கள் என்பது தான் இவர்களிடம் இருக்கும் ஒரே பதில்.

எனவே இது பற்றியும் நாம் விளக்க வேண்டியுள்ளது. நாம் கூறுவது போல் விதி உள்ளது. அதை எடுத்துக் காட்டுவதற்கு முன்னால் அதை விட முக்கியமான ஒரு விஷயத்தைப் பதிவு செய்ய வேண்டும்.

ஹதீஸ் கலை விதிகள் என்பது அல்லாஹ்வும், அவனது தூதரும் வகுத்துத் தந்தது அல்ல. மாறாக ஒரு செய்தியை ஏற்பதற்கு எத்தகைய வழிகளைக் கடைப் பிடிக்கலாம் என்று திருக்குர்ஆன் அடிப்படையிலும், ஹதீஸ்கள் அடிப்படையிலும், அறிவுப்பூர்வமான வாதங்களின் அடிப்படையிலும் அறிஞர்கள் ஆய்வு செய்து விதிகளை வகுத்தார்கள். அந்த விதிகள் அனைத்தும் ஒரே நாளில் வகுக்கப்பட்டவை அல்ல. ஒரே நபராலும் வகுக்கப்பட்டவை அல்ல.

அவ்வப்போது அறிஞர் ஒருவர் ஒரு விதியைக் கூறுவார். அது குறித்து வாதப்பிரதிவாதங்கள் நடக்கும். அந்த விதியை குர்ஆன் அடிப்படையிலோ, ஹதீஸ் அடிப்படையிலோ உடைக்க முடியாமல் இருந்தால் அது விதியாக ஆகிவிடும். யாராலும் உடைக்க முடியாத நிலையில் அது இருந்ததால் தான் அது விதியாக ஆனது. எத்தனையோ அறிஞர்கள் வகுத்த விதிகள் நிராகரிக்கப்பட்டு விட்டன. காரணம் அவை உடைக்கக் கூடிய வகையில்



அமைந்திருந்தது தான்.

எனவே ஒரு வாதத்திற்கு ஹதீஸ் கலையில் இப்படி ஒரு விதி இல்லை என்று வைத்துக் கொண்டாலும் நாம் எழுப்பிய கேள்விகளுக்கு ஆண்டுகள் பலவாகியும் ஒருவருக்கும் பதில் சொல்ல முடியவில்லை என்றால் இதை ஹதீஸ் கலை விதியில் புதிதாகச் சேர்த்துக் கொள்ள வேண்டியது தானே?

யாராலும் பதில் சொல்ல முடியாவிட்டால் அது சரியானதாக உள்ளது என்பது பொருள். அது சரியானது என்றால் அது புது விதியாக ஆவதற்கு என்ன தடை இருக்க முடியும்?

ஹதீஸ் கலையில் இப்போது உள்ள விதிகளில் நாம் ஏற்றுக் கொள்ளும் எந்த விதியாக இருந்தாலும் அதை உடைக்கும் வகையில் யார் கேள்வி கேட்டாலும் அதற்கு முன்னரே பதில் சொல்லப்பட்டிருக்கும். அல்லது நம்மால் அதற்குப் பதில் சொல்லும் வகையில் அறிவுப்பூர்வமாக அமைந்திருக்கும்.

அறிஞர்கள் கூறிய விதிகளில் எந்த விதிகளுக்கு எதிராகக் கேள்வி கேட்கப்படும் போது முன்பே பதில் சொல்லப்படாமல் உள்ளதோ, அல்லது அந்தக் கேள்விகளுக்கு இப்போது ஒருவராலும் பதில் சொல்ல முடியாமல் உள்ளதோ அது தவறான விதி என்று நிராகரித்து விட வேண்டும்.

ஆய்வு செய்து எடுக்கப்படும் சட்ட திட்டங்களை எவ்வாறு சிந்தித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அது போல் ஹதீஸ் கலை விதியும் சிந்தித்து ஏற்றுக் கொள்ளப்படுபவை என்பதை உசூல் (?) பேசுவோர் உணரவில்லை. அது அப்படியே கண்ணை மூடிக் கொண்டு ஏற்க வேண்டிய ஒன்று என நினைக்கின்றனர். (உசூல்) விதி உள்ளதா என்று இதனடிப்படையில் தான் கேட்கின்றனர். ஒரு வாதத்துக்கு இப்படி ஒரு விதி இது வரை கூறப்படாவிட்டால் கூட நாம் கூறுவது சரியானது என்றால் அது விதியாகக் கருதப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஏற்கத் தக்க பதிலைக் கூறி மறுக்க வேண்டும்.

அடுத்து இன்னொரு அடிப்படையையும் நாம் விளக்கியாக வேண்டும்.

ஹதீஸ்களாக இருந்தாலும் ஆய்வு செய்யத் தக்க வேறு எந்த நூலாக இருந்தாலும் அதில் பல துறையினருக்கு வேலை இருக்கும். ஒவ்வொரு துறையினரும் தத்தமது வட்டத்துக்குள் நின்று ஆய்வு மேற்கொள்வார்கள்.

உதாரணமாக ஒரு மனிதனின் உடல் நலம் குறித்து பல துறையினர் சோதனை மேற்கொள்வார்கள்.

பல் மருத்துவர் ஒரு மனிதனைத் தமது துறை தொடர்பான ஆய்வு செய்து

இவருக்கு நோய் இல்லை என்று கூறினால் அவருக்கு எந்த நோயும் இல்லை என்று புரிந்து கொள்ள மாட்டோம். பல்லுடன் தொடர்புபட்ட நோய்கள் இல்லை என்றே முடிவு செய்வோம்.

இதய நோய் மருத்துவர் ஒரு மனிதனைப் பற்றி இவருக்கு நோய் இல்லை என்று கூறி விட்ட பிறகு அவருக்குப் புற்று நோய் இருக்கலாம். இதனால் அந்த மருத்துவர் சரியாகச் சோதிக்கவில்லை என்று யாரும் கருத மாட்டோம்.

இது போல் தான் ஹதீஸ்களிலும் பல துறையினருக்கு வேலை உண்டு.

ஒரு இலக்கிய ஆர்வம் உள்ளவர் ஹதீஸில் ஆய்வு செய்தால் அவர் பார்வை இலக்கியம் குறித்ததாகத் தான் இருக்கும். ஆஹா அற்புதம் என்று இலக்கிய மேதை நற்சான்று அளிக்கும் ஹதீஸ் இட்டுக் கட்டப்பட்டதாக இருக்கலாம். ஏனெனில் அவர் அறிவிப்பாளர் குறித்து ஆய்வு செய்ய மாட்டார்.

அது போல் தான் அறிவிப்பாளர் தொடர்பாக மட்டும் ஆய்வு செய்வதே ஹதீஸ் துறையினரின் ஒரே பணி. அவர்கள் ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர்கள் குறித்து ஆய்வு செய்து பார்த்து விட்டு இது சரியான செய்தி என்று கூறினால் அதன் பொருள் என்ன? இதை அறிவிக்கும் ஆட்கள் குறித்து எங்களிடம் உள்ள தகவல்களை வைத்து ஆய்வு செய்ததில் அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்கள் என்று தெரிகிறது என்பது தான் இதன் பொருள். இதன் கருத்து சரியானது என்பது அதன் பொருள் அல்ல. ஏனெனில் அவர்கள் கருத்தைக் குறித்து ஆய்வு செய்யவில்லை. அது அந்தத் துறையின் வரம்புக்குள் வரக் கூடியதுமல்ல. சரியான ஹதீஸின் இலக்கணம் கூறும் போது அது குர்ஆனுக்கு முரணாக இருக்கக் கூடாது என்று இவர்கள் கூற மாட்டார்கள். அவர்களின் துறையுடன் இது தொடர்பற்றது.

சட்ட வல்லுனர்கள் தான் கருத்துக்களில் கவனம் செலுத்தி மற்ற ஆதாரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து கருத்து சரியானதா என்று தீர்மானிப்பவர்கள். குர்ஆனுக்கு முரணாக இருப்பவையும், நடைமுறை உண்மைக்கு முரணாக இருப்பவையும் அறிவிப்பாளர் சரியாக இருந்தாலும் அவை சரியான செய்தி அல்ல என்று இவர்கள் முடிவு செய்வார்கள்.

எனவே எந்த ஹதீஸாக இருந்தாலும் அது ஸஹீஹானது என்று ஹதீஸ் துறையினர் கூறினால் அறிவிப்பாளர்கள் சரியாக உள்ளனர் என்பதைத் தான் கூறுகிறார்கள். கருத்து சரியானது என்பதைக் கூறவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்மை எதிர்ப்பவர்கள் ஸஹீஹான ஹதீஸ்களை மறுக்கலாமா? என்று



கேட்பதற்கு இது குறித்த அறியாமை தான் காரணமாக உள்ளது. இது தெளிவாக ஹதீஸ் துறை நூல்களில் தெளிவுபடுத்தப்பட்ட உண்மையாகும்.

சில அறிஞர்கள் ஒரு துறையில் சிறந்து விளங்கினால் மற்றும் சிலர் இன்னொரு துறையில் சிறந்து விளங்குவார்கள்.

ஆனால் சில அறிஞர்கள் இரு துறையிலும் வல்லவர்களாக இருப்பார்கள். அவர்கள் சரியான ஹதீஸ்க்கு இலக்கணம் கூறும்போது இரண்டையும் இணைத்துக் கூறுவார்கள். அதாவது அறிவிப்பாளரும் சரியானவர்களாக இருக்க வேண்டும். கருத்தும் சரியாக இருக்க வேண்டும் அப்படி இருந்தால் தான் அது சரியான ஹதீஸ் என்று கூறுவார்கள்.

# குர்ஆனுக்கு முரணாக ஹதீஸை அறிவிப்பவர் பொய்யரா?

குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்ட வகையுடன் சேர்ந்தவை என்று நாம் கூறுகின்றோம். நம்மைப் போல் பல அறிஞர்களும் இவ்வாறு கூறுகின்றனர்.

குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களை வைத்துப் பார்த்தாலும் ஹதீஸ் கலையில் கூறப்பட்ட இவ்விதி சரியானது என்பதைச் சந்தேகமற அறியலாம்.

பொதுவாக ஹதீஸ் கலையில் பலவீனமான செய்திகள் பல வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இந்த வகைகளில் மிக மோசமான தரத்தில் அமைந்தவை இட்டுக்கட்டப்பட்ட செய்திகளாகும்.

குர்ஆனுக்கு முரண்படும் செய்திகள் இந்த வகையுடனே சேர்க்கப்படுகின்றது. ஏனென்றால் மோசமான நினைவாற்றல் அறிவிப்பாளர் தொடர்பு முறிவு போன்ற காரணங்களால் பலவீனமடையும் ஹதீஸ்கள் அவற்றில் தவறு ஏற்பட்டிருக்க அதிக வாய்ப்புள்ளது என்ற அனுமானத்தில் அடிப்படையில் மறுக்கப்படுகின்றன.

ஆனால் குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களைப் பொறுத்தவரை அவை வலுவான ஆதாரமாக இருக்கின்ற குர்ஆனுடன் முரண்படுவதால் அவை நூற்றுக்கு நூறு சதவீதம் சரியான செய்திகள் அல்ல என்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாகின்றது.

இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் எவ்வளவு மோசமான தரத்தைப் பெற்றதோ அது போன்று குர்ஆனுக்கு முரண்படும் செய்தியும் மிக மோசமான தரத்தைப் பெற்ற பலவீனமான செய்திகளாக உள்ளன என்பதை உணர்த்துவதற்காகவே இந்த ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்ட வகையுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

குர்ஆனுக்கு முரண்பட்டு அறிவிப்பவர், பொய் சொல்லி இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. மெய்யைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அறிவித்தாலும் தவறுதலாக ஒரு வார்த்தையை விட்டு விட்டு அறிவித்தாலும் கூட கருத்து மாறிவிடும். அதனால் குர்ஆனுக்கு முரண்படும் நிலை ஏற்படும். அறிவிப்பாளர் பொய் சொல்லியிருந்தால் தான் ஹதீஸ் குர்ஆனுக்கு முரண்படும் என்று நாம் உறுதியாகக் கூற முடியாது.



ஒரு நம்பகமான அறிவிப்பாளர் ஹதீஸின் ஒரு வாசகத்தை நேர் எதிரான கருத்தில் தவறுதலாகப் புரிந்ததின் விளைவாலும் இத்தகைய நிலை ஏற்படலாம்.

குர்ஆனுக்கு முரண்படும் ஒரு செய்தியில் நம்பகமானவர்கள் என உறுதிசெய்யப்பட்ட அறிவிப்பாளர் வந்தால் இவர்களில் யாரோ பொய் கூறியிருக்கின்றார் என்று முடிவு செய்வதை விட இவர்களில் யாரோ தவறிழைத்துள்ளார் என்று முடிவு செய்வதே நியாயமானது. ஏனென்றால் நம்பகமானவர்கள் விஷயத்தில் நல்லெண்ணம் வைக்க வேண்டும்.

ஒரு மிக நம்பகமானவரின் அறிவிப்புக்கு இன்னொரு நம்பகமானவரின் அறிவிப்பு முரண்பட்டால் அந்த அறிவிப்பில் அவர் பொய் சொல்லி விட்டார் என்று ஹதீஸ் கலையில் கருதப்படாது. மாறாக இவர் இதில் அறியாமல் தவறு செய்துள்ளார் என்றே கருதப்படும்.

இதே அடிப்படையில் தான் குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களில் வரும் நம்பகமானவர்களின் விஷயத்திலும் நாம் முடிவெடுக்க வேண்டும்.

மேலும் இந்த ஹதீஸ்களில் பல அறிவிப்பாளர்கள் வருகிறார்கள். இவர்கள் அனைவரும் நம்பகமானவர்களாக இருந்தால் இவர்களில் இன்னார் தான் தவறு செய்தார் என்று குறிப்பிட முடியாது.

ஒரு பேச்சுக்கு அவ்வாறு கண்டுபிடித்து விட்டால் கூட குர்ஆனுக்கு முரண்பாடாக அவர் அறிவிக்கும் குறிப்பிட்ட அந்த அறிவிப்பு மட்டுமே நிராகரிக்கப்படும். அவர் அறிவித்த மற்ற அறிவிப்புகள் நிராகரிக்கப்படாது.

ஏனென்றால் இவருடைய அறிவிப்பு குர்ஆனுக்கு மாற்றமாக இருப்பதே இதில் இவர் தவறு செய்துள்ளார் என்பதை தெளிவுபடுத்தி விடுகின்றது. இவர் நம்பகமானவராக இருக்கும் பட்சத்தில் எந்த முரண்பாடும் வராத இவரது மற்ற அறிவிப்புகளை ஒட்டுமொத்தமாக எவ்வாறு நிராகரிக்க முடியும்?

இவற்றிலும் இவர் தவறு செய்திருப்பார் என்று யூகிப்பது அடிப்படையற்ற யூகமாகும். ஏனென்றால் ஒரு நம்பகமானவர் சரியாக அறிவிப்பார் என்றே கருத வேண்டும்.

எனவே ஒரு நம்பகமானவர் குர்ஆனுக்கு முரணாக செய்தியை அறிவிப்பதால் அதை வைத்துக் கொண்டு அவரைப் பொய்யர் என்று கூறக் கூடாது. நாமும் அவ்வாறு கூறவில்லை.

இந்த ஹதீஸ்களை இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களுடன் நாம் சேர்த்ததற்குக்

காரணம் இவற்றில் உள்ள நம்பகமானவர்கள் பொய் சொல்லி விட்டார்கள் என்பதற்காக அல்ல. இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் புறக்கணிக்கப்படுவதைப் போன்று இந்தச் செய்திகளும் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதே காரணம்.

குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை மறுப்பதால் ஹதீஸ்கள் சிக்கலுடன் இருக்கின்றது என்ற தோற்றம் ஏற்படுகிறது என்ற வாதம் பல காரணங்களால் தவறானது. ஹதீஸ்களை ஆதராமாக ஏற்றுக் கொள்பவர்களுக்கு இது ஒரு பிரச்சனையே கிடையாது.

ஹதீஸ்களை ஆதாரப்பூர்வமானது என்றும் பலவீனமானது என்றும் ஆய்வு செய்து தரம் பிரிக்கின்றனர். இவ்வாறு ஆய்வு செய்வதால் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்பவர்கள் ஹதீஸ்களில் சிக்கல் இருக்கின்றது எனக் கூறுவதில்லை.

பல நம்பகமானவர்களின் அறிவிப்புக்கு முரணாக ஒரு நம்பகனமானவர் அறிவிப்பதுண்டு. மிக வலுவான ஒருவரின் அறிவிப்புக்கு மாற்றமாக அவரை விட மனன சக்தியில் சற்று தரம் குறைந்த நம்பகமானவர் அறிவிப்பதும் உண்டு. ஒருவரை விட மற்றவர் மனன சக்தியில் உயர்ந்து விடாத வகையில் அனைவரும் சம நிலையில் உள்ள நம்பகமான அறிவிப்பாளர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு அறிவிப்பதும் உண்டு.

இது போன்ற நிலைகளில் ஹதீஸ்களை ஆதாரமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஹதீஸ்களில் சிக்கல் உள்ளது என்று கூறி ஒட்டுமொத்தமாக ஹதீஸ்களை மறுப்பதில்லை. அனைத்து செய்திகளிலும் சந்தேகம் கொள்வதில்லை.

நம்பகமானவர்களுக்கிடையே முரண்பாடு தோன்றினாலும் யார் மிக வலிமையானவர்? அதிகமானோர் எவ்வாறு அறிவிக்கிறார்கள்? என்று பார்த்து அந்த அறிவிப்பாளர்களின் அறிவிப்பே சரியானது என்றும் அதற்கு முரணாக உள்ள அறிவிப்புகள் அவற்றை அறிவித்தவர்கள் நம்பகமானவர்களாக இருந்தாலும் தவறானது என்றும் முடிவு செய்கின்றனர்.

ஒருவரை விட ஒருவரை முற்படுத்துவதற்கு எந்தக் காரணமும் கிடைக்காத பட்சத்தில் அவர்கள் அனைவரின் அறிவிப்பையும் ஏற்றுக் கொள்ளாமல் நிறுத்தி வைத்து விடுகின்றனர். இதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

குர்ஆன் என்பது ஹதீஸ்களை விட பன்மடங்கு வலுவான ஆதாரம். இதை யாரும் மறுக்க மாட்டார்கள். அப்படி இருக்க வலுவான ஆதாரமாகத் திகழும் குர்ஆனுடன் அதற்குக் கீழ் நிலையில் உள்ள ஹதீஸ் முரண்பட்டால்



குர்ஆனை எடுத்துக் கொண்டு முரண்படும் அந்த ஹதீஸை விட்டு விடுவது தானே சரி. இந்த முடிவில் ஒரு சிக்கலும் இல்லை.

நடைமுறை வாழ்க்கையிலும் கூட நாம் இவ்வாறு தான் முடிவு எடுக்கின்றோம். எனவே குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை மறுப்பதால் எந்தச் சிக்கலும் ஏற்படுவதில்லை. மாறாக அவற்றை ஏற்றுக் கொண்டால் தான் குர்ஆன் புறக்கணிக்கப்படும் நிலை ஏற்படும்.

குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களைப் பற்றி பேசும் போது எடுத்து வைக்கப்படும் இந்தக் கேள்விகள் அறிவிப்பாளர் பலவீனமாக இருக்கும் போதும் எழத்தான் செய்யும். ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்டதாக இல்லையே என்ற கேள்வியை யாரும் கேட்பதாகத் தெரியவில்லை.

ஒருவரது அறிவிப்புக்கு மாற்றமாக பலர் அறிவிக்கும் போதும் இந்தக் கேள்வி வரும். ஆனாலும் யாரும் கேட்பதில்லை.

அது போல் மிக நம்பிக்கைக்குரியவரின் அறிவிப்புக்கு எதிராக நடுத்தரமானவர் அறிவிக்கும் போதும் இந்தக் கேள்விகள் எழ வேண்டும், ஆனாலும் யாரும் கேட்பதாகத் தெரியவில்லை.

ஆனால் குர்ஆனுடன் முரண்படுகிறது என்பதற்காக ஒரு ஹதீஸை நிராகரிக்கும் போது மட்டும் இது போன்ற கேள்விகள் எழுவது ஏன்?

இதுவரை நாம் நம்பியதற்கு மாற்றமாக உள்ளதால் இதை ஜீரணிக்க உள்ளம் தயக்கம் காட்டுகிறது. இது தான் காரணம். பழகிப்போன விஷயத்தில் சரியாகப் புரிந்து கொள்கிறது. எனவே மனோ இச்சைக்கு இடம் கொடுக்காமல் குர்ஆனுக்கு முரண்படுவது பெரிய விஷயமா? சாதாரண விஷயமா? அறிவிப்பாளரிடம் காணப்படும் குறையை விட குர் ஆனுக்கு முரண்படுவது மிகப் பெரிய விஷயம் என்பதைப் புரிந்து கொண்டால் இந்தக் கேள்விகள் எழாது.

# "ஷாத்" வகை ஹதீஸ்கள் பற்றிய தெளிவு.

பலவீனமான ஹதீஸ்களின் வகைகளில் ஒன்றாக கருதப்படும் ''ஷாத்" வகை தொடர்பில் நாம் மிகவும் தெளிவாக இங்கு அறிந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

அல்குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது அவை மறுக்கப்பட வேண்டியவை என்று நாம் கூறும் போது, நம்மைப் பார்த்து வழிகேடர்கள் முஃதஸிலாக்கள் என்றெல்லாம் விமர்சனம் செய்பவர்கள் ஹதீஸ் கலையில் ''ஷாத்" என்று கூறி ஹதீஸ்களை மறுப்பதை மாத்திரம் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

புனித குர்ஆனுக்கு மாற்றமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பேசமாட்டார்கள் என்ற விதியை தவறு என்று வாதிடுபவர்கள் ''ஷாத்" என்ற விதியை மாத்திரம் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும் என்பதுதான் நமது கேள்வியாகும்.

இந்தக் கேள்வியை இன்னும் தெளிவாக அறிந்து கொள்வதற்காக முதலில் ஹதீஸ் கலையில் ''ஷாத்" என்றால் என்னவென்பதை நாம் இங்கு அறிந்து கொள்வது முக்கியமானதாகும்.

ஷாத் என்பது பலவீனமான ஹதீஸ்களின் வகைகளில் ஒன்றாகும்.

அரிதானது என்பது இதன் பொருள்.

ஒரு ஆசிரியரிடம் பல மாணவர்கள் ஒரு ஹதீஸைச் செவியுறுகின்றனர். பத்து மாணவர்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் அனைவரும் நம்பகமானவர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

இந்தப் பத்து பேரும் தாம் கேட்ட ஹதீஸைப் பலருக்கும் அறிவிக்கன்றார்கள். ஒன்பது பேர் அறிவிப்பது ஒரே மாதிரியாக உள்ளது. ஆனால் ஒருவர் அறிவிப்பது மட்டும் ஒன்பது பேர் அறிவிப்பதற்கு முரணாகவுள்ளது. இப்படி அமைந்த அறிவிப்பைத் தான் ஷாத் என்று கூறுவர்.

தொழுகையில் நான்கு தடவை நபி (ஸல்) அவர்கள் கைகளை உயர்த்தினார்கள் என்ற ஹதீஸை எடுத்துக் கொள்வோம்.



இப்னு உமர் (ரலி) மூலம் ஸாலிம், நாஃபிவு, முஹாரிப் ஆகியோர் அறிவித்துள்ளனர். அதே இப்னு உமர் (ரலி) மூலம் முஜாஹித் அறிவிக்கும் போது முதல் தக்பீரில் தவிர கைகளை உயர்த்தவில்லை என்கிறார்.

நால்வருமே நம்பகமானவர்கள் தான். ஆனாலும் மூவருக்கு மாற்றமாக ஒருவர் அறிவிக்கும் போது அது ''ஷாத்" எனும் நிலையை அடைகிறது.

இங்கே இரண்டு செய்திகளும் ஒன்றுக்கொன்று நேர் முரணானவையாக உள்ளன. இரண்டில் ஏதேனும் ஒன்று தான் உண்மையாக இருக்க முடியும். இந்த நிலையில் என்ன செய்ய வேண்டும்?

மூன்று பேர் தவறுதலாக கூறுவதை விட ஒருவர் தவறாகக் கூறுவதற்கு வாய்ப்புகள் அதிகம். எனவே மூவர் கூறுவதை ஏற்றுக் கொண்டு ஒருவர் கூறுவதை விட்டு விட வேண்டும்.

நபித்தோழரிடம் கேட்டவர்களுக்கிடையே தான் இந்த நிலை ஏற்படும் என்று கருதக் கூடாது. அறிவிப்பாளர் வரிசையில் எந்த இடத்திலும் இந்த நிலை ஏற்படும்.

உதாரணமாக குதைபா என்ற அறிவிப்பாளரை எடுத்துக் கொள்வோம். இவரிடம் ஏராளமானவர்கள் ஹதீஸ்களைக் கற்றுள்ளனர். புகாரி, முஸ்லிம், திர்மிதீ, அபூதாவுத்,நஸயீ, மூஸா பின் ஹாரூன், ஹஸன் பின் சுஃப்யான் ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள். எல்லோரும் அறிவிப்பதற்கு மாற்றமாக நஸயீ மட்டும் வேறு விதமாக அறிவித்தால் அதுவும் ஷாத் என்ற வகையில் சேரும்.

ஷாத் என்பது ஹதீஸின் வாசகத்திலும் ஏற்படலாம். அறிவிப்பாளர் பெயரைப் பயன்படுத்துவதிலும் ஏற்படலாம்.

ஒரு ஹதீஸை ஒரு ஆசிரியர் வழியாக நான்கு பேர் அறிவிப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த ஹதீஸின் மூன்றாவது அறிவிப்பாளர் பெயர் இஸ்மாயீல் பின் முஹம்மத் என்று மூன்று பேர் குறிப்பிடுகின்றனர். ஒருவர் மட்டும் இஸ்மாயீல் பின் மூஸா என்று குறிப்பிடுகின்றார்.

ஒரே ஆசிரியரிடம் இருந்து அறிவிக்கும் இந்த பெயர்ப் பட்டியலில் மூவர் குறிப்பிட்ட பெயருக்கு மாற்றமாக ஒருவர் குறிப்பிடுவதால் இதுவும் ஷாத் என்ற வகையைச் சேர்ந்தது தான். மூவர் குறிப்பிடக்கூடிய பெயர் தான் சரியானதாக இருப்பதற்கு அதிகச் சாத்தியம் உள்ளது.

அதாவது மூன்றாவது அறிவிப்பாளராகக் குறிப்பிட்ட இஸ்மாயீல் பின்

முஹம்மத் பலவீனமானவராக உள்ளார். ஆனால் இஸ்மாயீல் பின் மூஸா பலவீனமானவர் இல்லை என்று வைத்துக் கொள்வோம். இந்த இடத்தில் தான் அறிவிப்பாளர் வரிசையிலும் ஷாத் ஏற்படுத்தும் விளைவைப் புரிந்து கொள்ள இயலும்.

இஸ்மாயீல் பின் முஹம்மத் நம்பகமானவரா? இஸ்மாயீல் பின் மூஸா நம்பகமானவரா? என்பதை விட வேறொரு விஷயத்தைத் தான் நாம் கவனிக்க வேண்டும்.

அதாவது இஸ்மாயீல் பின் முஹம்மத் என்பவரைத் தான் மூன்று பேர் கூறுகின்றனர். எனவே இவர்களின் ஆசிரியர் இந்தப் பெயரைத் தான் குறிப்பிட்டிருப்பார். இஸ்மாயீல் பின் மூஸா என்று ஒருவர் கூறுவதால் அந்த அறிவிப்பு ஷாத் என்ற நிலைக்கு வந்து விடும்.

இஸ்மாயீல் பின் முஹம்மத் என்பது தான் சரியானது என்று நாம் நினைக்கும் போது அந்த ஹதீஸ் பலவீனமானதாக ஆகி விடுகின்றது. ஏனெனில் இஸ்மாயீல் பின் முஹம்மத் பலவீனமானவராக உள்ளார்.

அதாவது இஸ்மாயீல் பின் முஹம்மத் என்ற பெயரைக் குறிப்பிட்டது தான் சரி என்பது வேறு. பலவீனராக உள்ளதால் இந்த அறிவிப்பைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது வேறு. இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு ஆசிரியரிடமிருந்து ஒரு ஹதீஸை அறிவிக்கும் ஐந்து பேரில் நால்வர் அறிவிப்பதற்கு மாற்றமாக, முரணாக ஒருவர் அறிவிப்பது தான் ஷாத். நால்வர் கூறாத ஒரு விஷயத்தைச் சேர்த்துக் கூறினால் அது ஷாத் அல்ல. அதை நாம் ஏற்கலாம். ஏற்க வேண்டும்.

“முதல் ரக் அத்தில் இக்லாஸ் அத்தியாயம் ஓதினார்கள் என்று ஒரு ஆசிரியரின் நான்கு மாணவர்கள் கூறுகின்றனர். முதல் ரக்அத்தில் இக்லாசும், இரண்டாம் ரக்அத்தில் நாஸ் அத்தியாயமும் ஓதினார்கள்” என்று அதே ஆசிரியரின் ஒரு மாணவர் அறிவிக்கின்றார்.

இது ஷாத் எனும் வகையில் சேராது. ஏனெனில் நால்வர் கூறியதை இது மறுக்கவில்லை. மாறாக அதை ஒப்புக் கொள்வதுடன் மேலும் அதிகமான ஒரு செய்தியைக் கூறுகின்றது. இவரும் நம்பகமானவராக உள்ளதால் இந்த அறிவிப்பையும் நாம் ஏற்க வேண்டும்.

பல பேர் கூறாமல் விட்டு விட்டதை ஒரே ஒருவர் மட்டும் கூறுவது சர்வ சாதாரணமான நிகழ்வு தான்.



இது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விளக்கமாகும்.

ஒரு ஆசிரியர் வழியாக இல்லாமல் வெவ்வேறு ஆசிரியர் வழியாகப் பலரும் பலவிதமாக அறிவித்தால் ஷாத் என்ற பேச்சு அங்கே எழாது.

நான்கு பேர் ஹன்னாத் வழியாக ஒரு செய்தியை அறிவிக்கின்றனர். ஆனால் குதைபா வழியாக அதற்கு மாற்றமாக ஒருவர் அறிவிக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். இந்த நிலையில் ஒருவர் அறிவிப்பது தவறு. நால்வர் அறிவிப்பது சரி என்று கூற முடியாது. ஏனெனில் உண்மையில் இவர்கள் முரண்படவில்லை. இவர்கள் யாரிடம் செவியுற்றார்களோ அவரிடம் தான் முரண்பாடு உள்ளது. இந்த ஒருவர் தனது ஆசிரியரிடம் தான் கேட்டதை அறிவிக்கின்றார். அந்த நால்வர் தங்களது ஆசிரியர்களிடம் கேட்டதை அறிவிக்கின்றார்கள்.

எனவே இதை ஷாத் என்று கூற முடியாது. முரண்பாடாகக் கூறிய இவர்களது இரு ஆசிரியர்களின் தகுதிகளையும் இன்ன பிற அம்சங்களையும் கவனத்தில் கொண்டு எது சரியானது? என்ற முடிவுக்கு வர வேண்டும்.

ஒரு ஆசிரியரிடமிருந்து பல மாணவர்கள் அறிவிக்கும் போது பலர் ஒரு விதமாகவும். ஒருவர் அதற்கு முரணாகவும் அறிவித்து இருந்தால் அதை ஷாத் என்கிறோம்.

முரணாக ஒருவர் அறிவிப்பது ஷாத் என்றால் இதற்கு மாற்றமாகப் பலர் அறிவிப்பதற்கு தனிப் பெயர் உண்டா என்றால் உண்டு. இதை மஹ்பூள் என்று கூறுவார்கள்.

ஒரு ஹதீஸ் பற்றி மஹ்பூள் என்று கூறப்பட்டால் எதிராக ஷாத் எனும் அறிவிப்பு உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மஹ்பூள் என்பது ஆதாரமாகக் கொள்ளத் தக்கதாகும்.

இதுதான் ‘‘ஷாத்” வகை அறிவிப்பு பற்றிய விபரமாகும்.

இந்த வகை அறிவிப்புக்களில் ஒரு ஆசிரியரிடமிருந்து 04 மாணவர்கள் ஒரு செய்தியை கேட்கின்றார்கள், அதில் 03 பேர் ஒரு விதமாகவும் ஒருவர் மாத்திரம் அதற்கு மாற்றமாகவும் அறிவித்தால் அதனை எடுக்கக் கூடாது என்பது ஹதீஸ் கலை விதி.

ஆனால் அந்த ஒருவர் அறிவித்தது பொய்யானது என்பற்காக குறித்த செய்தி மறுக்கப்படுவதில்லை. 03 பேர் சொல்வதற்கு மாற்றமாக சொல்கின்றார். ஒருவர் சொல்வதை விட 03 பேர் சொல்வது அதிகம் உறுதியானது என்ற

அடிப்படையில் தான் மறுக்கப்படுகின்றது.

ஆகவே குறித்த செய்தியில் பெரும்பான்மை கருத்திற் கொள்ளப்பட்டுத்தான் முடிவெடுக்கப்படுகின்றதே தவிர, அறிவிப்பாளர் தொடர் தவறு அல்லது பலவீனமான அறிவிப்பாளர் குறித்த ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையில் இருக்கின்றார் என்பதற்காகவெல்லாம் இது மறுக்கப்படவில்லை.

ஒரு செய்தியை அறிவிப்பவர்களில் 03 பேருக்கு மாற்றமாக ஒருவர் அறிவிக்கின்றார் என்பதற்காக பெரும்பான்மையைக் கருத்திற்கொண்டு ஒருவர் அறிவிக்கும் செய்தியை மறுக்க முடியும் என்றால், இதுதான் குர்ஆன் என்று பல்லாயிரம் நபித்தோழர்கள் அறிமுகப்படுத்தியதற்கு முரணாக ஓரிருவர் அறிவிப்பதை எப்படி ஏற்கமுடியும்? இது ஷாத் வகையை விட பல ஆயிரம் மடங்கு தரத்தில் குறைந்த்தில்லையா? அல்லாஹ் கூறிய செய்திக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் கூறமாட்டார்கள் என்று குர்ஆனுக்கு முரணாக வரும் செய்திகளை நாம் மறுப்பதை எப்படி வழிகேடு என்று இவர்கள் கூற முடியும்?

ஆகவே, ஹதீஸ் கலை அடிப்படையில் ''அல்குர்ஆனுக்கு முரண்படும் செய்தியை மறுக்க வேண்டும்" என்ற அடிப்படையை விதியை இவர்கள் வீம்புக்கு மறுக்கின்றார்களே தவிர மார்க்க அடிப்பைடையில் மறுக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.



## புகாரி, முஸ்லிம் போன்ற பெரும் அறிஞர்களுக்குத் தெரியாததா இவர்களுக்கு தெரிந்து விட்டது?

அல்குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது. அவை நபி (ஸல்) அவர்கள் சொன்னவை கிடையாது. என்று தவ்ஹீத் ஜமாஅத் பிரச்சாரம் செய்து வருகின்றது. நமது பிரச்சாரத்தை உரிய வாதங்களை வைத்து ஆதாரத்துடன் மறுக்க திராணியற்றவர்களின் அர்த்தமற்ற வாதங்களில் இதுவும் ஒன்றாகும்.

இமாம் புகாரி அவர்களின் ஸஹீஹுல் புகாரி, இமாம் முஸ்லிம் அவர்களின் ஸஹீஹ் முஸ்லிம், இமாம் திர்மிதி, இமாம் நஸயீ, இமாம் அபூதாவுத் அதே போல் ஹதீஸ்களின் தொகுப்புரையாளர்கள் பலரும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை யாரும் மறுக்க முடியாது.

தமது கால நேரத்தை ஹதீஸ் துறைக்காகவே அவர்கள் செலவு செய்தார்கள். – அல்லாஹ் அந்த அறிஞர்களின் பணியைப் பொருந்திக் கொள்வானாக!

ஹதீஸ் துறைக்கு குறித்த அறிஞர்கள் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார்கள் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அவர்களும் மனிதர்கள் என்ற வகையில் அவர்களுக்கும் தவறுகள் ஏற்படும், ஏற்பட்டுள்ளது என்பதை நாம் தெளிவாக மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

புகாரி, முஸ்லிம் போன்ற அறிஞர்கள் ஹதீஸ்களைத் தொகுத்தவர்கள் அவர்களின் பணியில் சிறப்பாக செயல்பட்டவர்கள், இஸ்லாமிய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்கள் என்பதில் எமக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் எவ்வளவு பெரிய அறிஞராக இருப்பினும் அவர் அனைத்தும் அறிந்தவராக இருக்க மாட்டார், இருக்கவும் முடியாது என்பதே இஸ்லாத்தின் தெளிவான நிலைபாடாகும்.

அல்குர்ஆனுக்கு முரண்படும் ஹதீஸ்களை ஏற்கக் கூடாது என்ற தவ்ஹீத் ஜமாஅத்தின் பிரச்சாரத்தை விமர்சனம் செய்பவர்கள் புகாரி, முஸ்லிம் போன்ற அறிஞர்களே சொல்லாத விதியை தவ்ஹீத் ஜமாஅத்தினர் சொல்கின்றார்கள், புகாரி, முஸ்லிமை விட அறிந்தவர்களா இவர்கள்? என்ற

வரட்டு வாதத்தை இவர்கள் முன் வைக்கின்றார்கள்.

**புகாரி, முஸ்லிம் அனைத்தும் அறிந்தவர்களா?**

அனைத்தையும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே. இதுவே இஸ்லாத்தின் அடிப்படையாகும்.

அனைத்தையும் அறிந்தவன் அல்லாஹ் மாத்திரம் தான் என்றிருக்கும் போது, புகாரியோ, முஸ்லிமோ அவர்களுக்கு அனைத்தும் தெரியும் என்று நம்புவதோ, பிரச்சாரம் செய்வதோ இஸ்லாமிய அடிப்படை அகீதாவுக்கு எதிரானதாகும்.

புகாரி, முஸ்லிம் போன்ற அறிஞர்களுக்கு தெரியாததா இவர்களுக்குத் தெரிந்து விட்டது? என்று நம்மைப் பார்த்து கேள்வி கேட்பவர்கள் இஸ்லாமிய அடிப்படை அகீதாவை விட்டும் வெகு தூரம் சென்று விட்டார்கள் என்பதே நிதர்சனமாகும்.

அவன் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவன்.

அல்குர்ஆன் 2:29

“நீ தூயவன். நீ எங்களுக்குக் கற்றுத் தந்ததைத் தவிர எங்களுக்கு வேறு அறிவு இல்லை. நீயே அறிந்தவன்: ஞானமிக்கவன்” என்று அவர்கள் கூறினர்.

அல்குர்ஆன் 2:32

அனைத்தையும் அறிந்தவன் இறைவன் மாத்திரம் தான் என்பதைத் தாண்டி, புகாரி, முஸ்லிமும் அனைத்தையும் அறிந்தவர்கள் என்று நினைப்பது இஸ்லாமிய அடிப்படைக்கு மாற்றமானதாகும்.

புகாரி, முஸ்லிம் அனைத்தையும் அறிந்தவர்கள் என்றால் அவர்களுக்கு இறை பண்பு இருப்பதாக இவர்கள் வாதிடுகின்றார்கள்.

- புகாரி, முஸ்லிமுக்கு தெரியாயது மற்றவர்களுக்கு தெரியக் கூடாதா?
- புகாரி, முஸ்லிமுக்கு தெரிந்த விஷயங்கள் மாத்திரம் தான் சத்தியமா?
- புகாரி, முஸ்லிமுக்குத் தெரியாத விஷயங்கள் மற்றவர்களுக்குத் தெரிந்திருந்தால் அது அசத்தியமாகுமா?



- புகாரி, முஸ்லிம் போன்ற அறிஞர்கள் மாத்திரம் தான் சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்வார்களா?

இது போன்ற இன்னோரன்ன கேள்விகள் இதில் எழுப்பலாம் நம்மை எதிர்த்து விமர்சனம் செய்பவர்கள் ‘‘புகாரி முஸ்லிமுக்குத் தெரியாததா உங்களுக்குத் தெரிந்து விட்டது?” என்றெல்லாம் கேள்வி எழுப்புபவர்கள் இவை அனைத்திற்கும் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளார்கள்.

**கருத்தைப் பார்த்து ஹதீஸைப் பதியவில்லை.**

புகாரி, முஸ்லிமுக்கு தெரியாததா இவர்களுக்குத் தெரிந்து விட்டது? என்று கேள்வி கேட்பவர்களிடம் நாமும் சில கேள்விகளை கேட்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அறியாமைக் காலத்தில் விபச்சாரம் செய்த பெண் குரங்கொன்றை மற்ற குரங்குகள் சூழ்ந்து கொண்டு கல்லெறிந்ததாக ஒரு செய்தி ஸஹீஹுல் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அறியாமைக் காலத்தில் விபச்சாரம் புரிந்த பெண்குரங்கொன்றைக் குரங்குகள் பல சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து தண்டிப்பதை நான் கண்டேன். நானும் அவற்றுடன் சேர்ந்து கொண்டு கல்லெறிந்தேன்.

புகாரி : 3849

மேலே நாம் எடுத்துக் காட்டிய செய்தி புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்தசெய்தியை இமாம்புகாரி அவர்கள்பதிவுசெய்தார்களேஅப்படியானால் குரங்கு விபச்சாரம் செய்யும் என்று புகாரி இமாம் நம்பினார்களா?

மனிதர்களைப் போல குரங்கு, பன்றி, ஆடு, மாடு போன்ற மிருகங்களுக்கெல்லாம் விபச்சாரத்திற்கு கல்லெறி தண்டனை உண்டு என்பது தான் இமாம் புகாரி அவர்களின் மார்க்க நிலைப்பாடா?

புகாரி இமாமுக்குத் தெரியாததா இவர்களுக்குத் தெரிந்து விட்டது? என்று கேள்வி கேட்பவர்களிடம் இப்போது நாம் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.

மேலே நாம் எடுத்துக் காட்டிய குரங்கு விபச்சாரம் செய்ததாக புகாரி 3849 ல் இடம் பெற்றிருக்கும் செய்தி தவறானது. பொய்யானது. இட்டுக்கட்டப்பட்டது என்பது நமது நிலைப்பாடு.

ஆனால் இமாம் புகாரி அவர்கள் இதனைப் பதிவு செய்துள்ளார்கள். இமாம் புகாரிக்கு அனைத்தும் தெரியும் என்றால் குறித்த செய்தி இட்டுக்கட்டப்பட்ட, போலியான செய்தி என்பது ஏன் தெரியவில்லை?

அது போல் புகாரியில் இடம் பெறும் இன்னொரு செய்தியைப் பாருங்கள்.

உர்வா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:
ஸுவைபா, அபூலஹபின் அடிமைப் பெண்ணாவார். அபூலஹப் அவரை விடுதலை செய்திருந்தார். அவர் நபி (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டினார். அபூலஹப் இறந்த போது அவருடைய குடும்பத்தாரில் ஒருவர் அவரைக் (கனவில்) கண்டார். அபூலஹப் மோசமான நிலையில் அவருக்குக் காட்டப் பட்டார். அபூலஹபிடம், “(மரணத்திற்குப் பிறகு) நீ எதிர்கொண்டது என்ன?” என்று அவர் கேட்டார். உங்களை விட்டுப் பிரிந்த பின் ஒரு சுகத்தையும் நான் சந்திக்கவில்லை. ஆயினும், நான் ஸுவைபாவை விடுதலை செய்ததற்குப் பிரதியாக இந்த விரல்களினூடே எனக்கு நீர் புகட்டப்படுகிறது” என்று கூறினார். (புகாரி : 5101)

மேற்கண்ட செய்தி புகாரியில் இடம் பெற்றுள்ள ஒரு நீண்ட செய்தியுடன் இணைந்து இடம் பெரும் செய்தியாகும்.

இந்தச் செய்தியை இமாம் புகாரி அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

புகாரி, முஸ்லிமுக்குத் தெரியாததா இவர்களுக்குத் தெரிந்து விட்டது? என்று கேள்வி கேட்பவர்களிடம் நாம் இந்தச் செய்தி தொடர்பில் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலில்லை.

புகாரி இமாமுக்கு அனைத்தும் தெரியும் என்றால், அபூலஹபின் விரல்களில் இருந்து தண்ணீர் புகட்டப்படும் என்பதுதான் புகாரி இமாமின் நிலைபாடா?

**புகாரி இமாம் அவர்கள் இதனை நம்பினார்களா?**

உர்வா என்பவர் தான் குறித்த செய்தியைக் கூறுகின்றார். இவர் அந்தக் காலகட்டத்தில் பிறக்காதவர்: நபித்தோழரும் அல்ல அப்படியிருந்தும்



இவருடைய கூற்றை புகாரி அவர்கள் ஏன் பதிந்தார்கள்?
இந்தக் கனவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் அங்கீகாரம் பெறப்படவில்லை என்பது புகாரி இமாமுக்குத் தெரியவில்லையா?

இந்தக் கேள்விகளுக்கு நம்மை விமர்சனம் செய்பவர்கள் என்ன பதில் தரப் போகின்றார்கள்?

**குர்ஆன், சுன்னா தான் அடிப்படையே தவிர அறிஞர்களின் கருத்துக்கள் அல்ல.**

நம்மைப் பொருத்த வரையில் அல்குர்ஆன் மற்றும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் தான் அடிப்படை மூல ஆதாரங்களே தவிர இமாம்களின் கருத்துக்கள் மார்க்க ஆதாரங்கள் அல்ல.

இந்த நிலையில் இருந்து நாம் பிரச்சாரம் செய்வதினால் தான் இட்டுக்கட்டப்பட்ட செய்தியை எந்த அறிஞர் பதிவு செய்தாலும் அது இட்டுக்கட்டப்பட்டது என்பதை தைரியமாக எம்மால் சொல்ல முடிகின்றது.

போலியான செய்தி புகாரி, முஸ்லிமில் வந்தாலும் அதனை போலியானது என்று நாம் தைரியமாகச் சொல்வதற்கு காரணமே நமது அடிப்படை அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் மாத்திரம் தான். எந்த அறிஞரையும் கண்மூடிப் பின்பற்ற வேண்டிய எந்தத் தேவையும் நமக்கு இல்லை.

குர்ஆன், சுன்னாவை விடுத்து போலியான செய்திகளுக்காக எந்த அறிஞரையும் காப்பாற்ற வேண்டிய தேவையும் எமக்கு இல்லை. அதனால் தான் போலியை போலி என்று தைரியமாக எடுத்துரைக்கின்றோம்.

ஆகவே சொல்லும் செய்தி சரியானதா? ஏற்றுக் கொள்ளத் தக்கதா? என்பதைத் தான் பார்க்க வேண்டுமே ஒழிய புகாரி சொன்னாரா? முஸ்லிம் சொன்னாரா? புகாரிக்கு தெரியாதது, முஸ்லிமுக்குத் தெரியாதது இவர்களுக்கு எப்படித் தெரியும் என்றெல்லாம் தலை கால் புரியாமல் அறிவுக்கு கொஞ்சமும் நெருக்கமற்ற கேள்விகளைக் கேட்பது அறிவுடமையாகாது என்பதை நம்மை விமர்சிப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# புகாரியில் பதிவான பலவீனமான ஹதீஸ்கள்

## அறிஞர் அல்பானியின் ஆய்வுப் பார்வை

ஹதீஸ்களை அறிவிப்பாளர் தரம் பார்த்து பலம், பலவீனம் என்று பிரித்துத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தவ்ஹீத் ஜமாஅத் ஆரம்பத்திலேயே வந்துவிட்டது.

அந்தக் காலகட்டத்தில் புகாரி, முஸ்லிமில் பலவீனமான ஹதீஸ்கள் எதுவும் அறவே இடம்பெறாது என்று உலகெங்கிலும் உள்ள மார்க்க அறிஞர்கள் நம்பியது போன்று நாமும் நம்பியிருந்தோம்.

ஆனால் எதையும் குருட்டுத்தனமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற குர்ஆனின் போதனைக்கு ஏற்ப, ஆய்வு செய்து, அலசிப் பார்த்து ஏற்க வேண்டும் என்ற தெளிந்த சிந்தனை ஓட்டத்துடன் சத்தியப் பாதையில் லட்சியப் பயணம் செய்யத் துவங்கினோம். இந்த நிலையில் புகாரி, முஸ்லிமையும் பலவீனமான ஹதீஸ்களின் தாக்கம் பதம் பார்க்காமல் விடவில்லை என்பதை அறிந்து கொண்டோம்.

பலவீனமான ஹதீஸ்களாக இருந்தால் மட்டும் பரவாயில்லை, குர்ஆனுடன் நேரடியாக மோதுகின்ற ஹதீஸ்கள் கூட, அல்குர்ஆனுக்கு அடுத்த நூல் என்ற பெயரைப் பெற்ற புகாரியிலேயே இடம் பெற்றிருப்பது தெரிய வந்த போது, ஓர் இறைநம்பிக்கையாளனுக்கு ஏற்படுகின்ற தயக்கமும் சங்கடமும் ஏற்பட்டது. அதனால் அதற்குண்டான விடையும் விளக்கமும் கேட்டு இந்த ஹதீஸ்களை உலகத்தின் முன்வைத்தோம். விடையும் விளக்கமும் வரவில்லை. மாறாக, இவர்கள் அறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் என்ற பட்டம் கிடைத்தது. முஃதஸிலாக்கள் என்ற முத்திரை குத்தப்பட்டது.

புகாரி, முஸ்லிமில் பலவீனமான ஹதீஸா? இதற்கு முன்பு இதுபோன்று யாரும் சொன்னதில்லையே! இவர்கள் தான் இதைப் புதிதாகச் சொல்கிறார்கள்: அதனால் இதை ஏற்க முடியாது என்ற குருட்டுப் பார்வை மட்டும் தான் அவர்களுடைய பதிலில் தெரிந்தது.

நாம் அஞ்சுவது அல்லாஹ்வை மட்டுமே! பின்பற்றுவது கலப்படமில்லாத தூய இறைச் செய்தியை மட்டுமே என்ற எஃகுச் சிந்தனையோடு, புகாரியிலும்



குர்ஆனுக்கு முரண்படும் பாதகமான ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன எனற விபரத்தை மக்கள் மன்றத்தில் வைத்துவிட்டோம்.

ஒரே உறுதிப்பாட்டில் பயணத்தைத் தொடர்கின்றோம். மறைந்த அறிஞர் அல்பானி அவர்களின் உரையொன்றில் புகாரி தொடர்பான தனது நிலைபாட்டை தெளிவுபடுத்துகின்றார். அந்த உரையில் அறிஞர் அல்பானி அவர்கள் புகாரியிலும் பலவீனமான ஹதீஸ்கள் பதிவாகியுள்ளன என்ற கருத்தைக் கூறுகின்றார். அந்த உரை இந்த நேரத்தில் மிகப் பொருத்தமான ஒன்றாக இருக்கும் என்பதால் அந்த அரபி உரையின் தமிழாக்கத்தை இங்கு இணைத்துள்ளோம்.

எந்த அறிஞரின் கருத்துக்களிலும் ஏற்கத்தக்கவையும், நிராகரிக்கத் தக்கவையும் உண்டு என்ற நிலைப்பாட்டில் தவ்ஹீத் ஜமாஅத் உறுதியாக உள்ளது என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

இப்போது அந்தக் கேள்வி பதில் உரைக்குள் செல்வோம்.

**கேள்வி:** புகாரியில் பலவீனமான ஹதீஸ்கள் உள்ளன என்று நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள். இதற்கு முன்பு எந்த அறிஞராவது இதைக் கூறியிருக்கின்றார்களா? இது தொடர்பாக நீங்கள் தனி நூல் எதுவும் வெளியிட்டிருக்கிறீர்களா?

**அல்பானியின் பதில்:** புகாரியில் பலவீனமான ஹதீஸ் உள்ளது என்று எனக்கு முன்னால் உள்ள அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்த உண்மையை ஒப்புக் கொண்டாக வேண்டும். அதை மறுக்கக் கூடாது.

இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

முதலவதாக, ஒரு முஸ்லிம் – அவர் ஆசிரியராகவோ அல்லது மாணவராகவோ இருக்கலாம். பண்டிதராகவோ அல்லது பாமரராகவோ இருக்கலாம். முஸ்லிம்களில் எந்த ரகமாகவும் இருக்கலாம். அவர்கள் அத்தனை பேரும் ஒன்றாக ஒருமித்து ஒத்துக் கொண்ட உண்மை, தவறான கருத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட செய்தி (குர்ஆன்) வழங்கப்பட்டவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள் மட்டுமே என்பது தான்.

இந்த அடிப்படையில் ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் தோன்றுகின்ற அல்லது அவரது காதில் விழுகின்ற எந்தச் செய்தியாக இருக்கட்டும். நூலாக இருக்கட்டும். அதை அவர் புரட்டிப் பார்ப்பதற்கு முன்பு, அதில் புகுவதற்கு

முன்னால் அந்த நூல் தவறுக்கு அப்பாற்பட்டதல்ல என்ற உறுதிப்பாட்டை அவரது உள்ளத்தில் ஆழமாகப் பதித்தாக வேண்டும். ஏன்? பாதுகாக்கப்பட்ட, தவறுக்கு அப்பாற்பட்ட செய்தி (குர்ஆன்) அருளப்பட்ட பாக்கியம் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தவிர மனித சமுதாயத்தில் வேறு யாருக்கும் இல்லை என்பது முஸ்லிமின் கொள்கையாகும்.

இந்தப் பின்னணியில் தான் இமாம் ஷாஃபீ அவர்கள், திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த நூலுக்கும் அல்லாஹ் முழுமையளிக்கவில்லை என்று கூறியிருக்கின்றார்கள்.

இது விவாதித்து ஏற்க வேண்டிய அவசியமில்லாத ஓர் அடிப்படையான உண்மையாகும். ஹதீஸ் கலையின் அடிப்படை விதிகள், அறிவிப்பாளர்களின் குறை நிறைகளை அலசுகின்ற ஆற்றலை அல்லாஹ் தனது அருட்கொடையாக எனக்கு அளித்துள்ளான். அதற்கு அவனுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்.

பலமான ஹதீஸ்களை, பலவீனமான ஹதீஸ்களிலிருந்து தரம் பிரிக்கின்ற ஹதீஸ் கலைக் கல்வி மூலம் ஒரு பெருமளவுக்கு இந்தத் துறையில் ஈடுபாடு கொண்டேன்.

அதே கலை அறிவின் மூலம் புகாரி ஹதீஸ்களை ஆழ்ந்து, அதிகக் கவனம் எடுத்து ஆய்வு செய்ததில் புகாரியில் சில ஹதீஸ்கள் (ஸஹீஹ் என்ற) சரியான தரத்தில் அமைவது ஒருபுறமிருக்கட்டும். ஹஸன் என்ற தரத்தில் கூட அமையவில்லை.

புகாரியின் நிலை இப்படி எனும் போது முஸ்லிமின் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

இது, புகாரியில் பலவீனமான ஹதீஸ்கள் இடம் பெற்றிருப்பது தொடர்பாக நான் செய்த ஆய்வுகள் பற்றிய பதில் ஆகும்.

புகாரியில் பலவீனமான ஹதீஸ்கள் இடம்பெற்றிருப்பது தொடர்பாக முந்தைய அறிஞர்கள் ஏதேனும் குறிப்பிட்டிருக்கிறார்களா? என்பது உங்கள் கேள்வியின் இரண்டாவது பகுதியாகும்.

இது தொடர்பாக நான் இங்கு குறிப்பிட விரும்புவது, அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அதிகமான அறிஞர்கள் எனக்கு முன்னரே இதே கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் என்னை விட ஆயிரம் ஆண்டுகள்



முந்தியவர்கள். ஆய்விலும் என்னை விட மிக மிக முந்தியவர்கள்.

இமாம் தாரகுத்னீ, புகாரியில் பத்து ஹதீஸ்கள் அளவிற்குக் குறை கண்டிருக்கிறார்கள். அவற்றை விமர்சித்துள்ளார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் புகாரியில் நான் விமர்சனம் செய்யும் ஹதீஸ்களின் எண்ணிக்கை பத்தை அடையவில்லை. இதற்கு ஓர் அடிப்படைக் காரணம் உண்டு.

நான் வாழ்கின்ற இந்தக் காலத்தில் சுனன் திர்மிதி, சுனன் அபூதாவூத், சுனன் இப்னுமாஜா, சுனன் நஸாயீ ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கின்ற ஹதீஸ்களின் தரங்களை ஆய்வு செய்து, அவற்றை அடையாளம் காட்டுகின்ற அவசியத்திற்கும் கட்டாயத்திற்கும் தள்ளப்பட்டேன். சுனன் இல்லாமல் முஸ்னத் அஹ்மத், முஃஜம் தப்ரானீ போன்ற நூற்களில் இடம்பெறும் ஹதீஸ்களையும் ஆய்வு செய்து அவற்றை அடையாளம் காட்டுகின்ற அவசியமும் கட்டாயமும் இருக்கின்றது. ஆனால் அவற்றின் பக்கம் நெருங்குவதற்குப் போதுமான அவகாசம் இல்லை.

புகாரி, முஸ்லிமைப் பொறுத்த வரையில் லட்சக்கணக்கான ஹதீஸ்களில் சரியானவற்றை பெருமளவிற்கு வடிகட்டி, தேர்வு செய்யும் பணியைச் செய்துள்ளார்கள். உண்மையில் இது மகத்தான பணியாகும். அந்த அளவுக்கு வார்த்து, வடிகட்ட வேண்டிய ஹதீஸ்களில் நான் ஆய்வு செய்ய இறங்குவது எனக்கு விவேகமான செயலாகவும், காலத்தின் கட்டாயமாகவும் தெரியவில்லை. அதனால் என்னுடைய முழுக் கவனத்தை நான்கு சுனன்களான திர்மதி, அபூதாவூத், இப்னு மாஜா, நஸயீ ஆகிய நூற்களில் இடம்பெற்ற ஹதீஸ்களில் திருப்பி விட்டேன்.

**புகாரியில் பலவீனமான ஹதீஸ்**

இந்நிலையில் என்னுடைய ஆய்வின் போது புகாரி, முஸ்லிமிலோ அல்லது இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றிலோ சில பலவீனமான ஹதீஸ்கள் இருப்பது எனக்குத் தெரியவந்தது. இவ்வாறு நான் சொல்லும் போது யாருக்கேனும் எனது ஆய்வின் முடிவில் ஐயம் ஏற்பட்டால் அவர் புகாரியின் விரிவுரையான ஃபத்ஹுல்பாரியைப் புரட்டுவாராக! அதில் ஹாஃபிழ் இப்னு ஹஜர் அவர்கள் புகாரியில் இடம் பெறுகின்ற பல ஹதீஸ்கள் பற்றி அவர் செய்த விமர்சனங்களை அவர் காண்பார்.

ஹாஃபிழ் அஹ்மத் இப்னு ஹஜர் அவர்கள் ஹதீஸ் துறையில் அமீருல் முஃ

மினீன் என்று அனைவராலும் போற்றப்படக்கூடியவர் ஆவார்.

இந்தத் துறையில் பங்கெடுத்த அனைவரும் ஹாஃபிழ் இப்னு ஹஜர் போன்ற ஒரு பிள்ளையை எந்தவொரு தாயும் பெற முடியாது என்ற எனது கருத்தை அப்படியே வழிமொழிந்து விடுவார். அந்த அளவுக்கு ஹதீஸ் துறையில் அவரது ஞானம் கொடிகட்டிப் பறக்கின்றது.

அப்படிப்பட்ட அந்த அறிஞர் புகாரிக்கான தனது விரிவுரையில், அதில் பதிவான ஹதீஸ்களில் அதிகமான தவறுகளை விமர்சனம் செய்திருக்கின்றார்.

முஸ்லிமில் இடம்பெற்றுள்ள, சுனன் மற்றும் முஸ்னதில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களைக் கூட அவர் இந்த அளவுக்கு விமர்சனம் செய்யவில்லை என்ற அளவுக்கு புகாரியின் ஹதீஸ்களை விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

புகாரி ஹதீஸ்கள் மீதான என்னுடைய விமர்சனப் பார்வையில், சில சந்தர்ப்பங்களில் ஒரு ஹதீஸ் முழுவதுமே பலவீனமாகி விடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் ஹதீஸின் ஒரு பகுதி மட்டும் பலவீனமாகி, அதன் மற்ற பகுதி சரியாக அமைந்துவிடுகின்றது. இதில் முதல் வகையை இப்போது பார்ப்போம்.

**முதல் வகை**

நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டிய நிலையில் இருக்கும் போது மைமூனா (ரலி) அவர்களைத் திருமணம் செய்தார்கள்.

நூல்: புகாரி 1838, முஸ்லிம் 2755

இந்த ஹதீஸைப் பொறுத்தவரை முஸ்லிமுடன் சேராமல் புகாரி மட்டும் தனியாக அறிவிக்கின்ற ஹதீஸ் கிடையாது. மாறாக புகாரி, முஸ்லிம் இருவரும் கூட்டாகப் பதிவு செய்த ஹதீஸ் ஆகும்.

இப்போது இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரைப் பார்ப்போம்.

இந்தத் தொடரின் முதல் அறிவிப்பாளர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மீது எந்தக் குறையும் கிடையாது. அவர் அல்லாத அறிவிப்பாளர்கள் எவர் மீதும் குறை சொல்ல முடியாது. புகாரியில் வேறு சில ஹதீஸ்கள் உள்ளன. நபித்தோழர் அல்லாத வேறு அறிவிப்பாளர்கள் யாராவது ஒருவரிடம் கோளாறு இருக்கும். அதுபோன்ற தொடராக இந்த ஹதீஸின் தொடர் அமையவில்லை. அது மிகச் சரியான தொடராக அமைந்துள்ளது.



உதாரணத்திற்கு ஃபுலைஹ் பின் சுலைமான் என்ற புகாரியின் ஓர் அறிவிப்பாளரை எடுத்துக் கொள்வோம். அவரைப் பற்றி ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள், உண்மையாளர், மனனம் கெட்டவர் என்று குறிப்பிடுகின்றார். ஹதீஸ் துறையில் இந்த நிலையில் உள்ளவர் மிகக் குறைந்த தரத்தில் உள்ளவராகவே கருதப்படுவார். இந்தத் தரத்தில் உள்ளவரின் ஹதீஸை ஏற்க வேண்டும் என்றால் இதே ஹதீஸ் வேறொரு நல்ல அறிவிப்பாளர் தொடரில் வந்திருக்க வேண்டும். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் இதை ஒரு துணைச் சான்றாக எடுத்துக் கொள்வார். இவர் மட்டுமே தனியாக அறிவித்திருந்தால் அந்தத் தொடரை வகை வைக்க மாட்டார்கள். அந்த ஹதீஸை ஏற்கவும் மாட்டார்கள். மொத்தத்தில் சரியான அறிவிப்பாளர் தொடரில் இந்த ஹதீஸ் வராத வரை இந்த ஹதீஸ் பலவீனமானது என்பதே முடிவாகும்.

இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கின்ற, மைமூனா (ரலி) திருமணம் தொடர்பான இந்த ஹதீஸின் தொடர் பக்காவான, பலமான தொடராகும். இதில் ஃபுஹைல் பின் சுலைமான் போன்றோர் இடம் பெறாததால் இதை விமர்சனம் செய்வதற்கு வாய்ப்பு அறவே கிடையாது. அதன் காரணமாக முந்தைய ஹதீஸ் கலை அறிஞர்கள் இதை விமர்சிக்காமல் விட்டு விட்டனர்.

அவர்கள் ஒருவேளை குறை காண வேண்டுமென்றால் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களைத் தவிர வேறு யாரையும் குறை காண முடியாது. காரணம் அவர் கண்ணியத்திற்குரிய நபித்தோழர். **அதனால் இப்னு அப்பாஸ் சிறிய வயதுடையவராக இருந்ததால் இந்தத் திருமண விஷயத்தைத் தவறாக விளங்கி அறிவித்து விட்டார் என்று அந்த ஹதீஸ் கலை அறிஞர்கள் கூறுகின்றனர். இது ஒரு காரணம்.**

மற்றொரு காரணம், சம்பந்தப்பட்ட மைமூனா (ரலி) அவர்கள், நாங்கள் இருவருமே இஹ்ராம் அல்லாத சாதாரண நிலையில் தான் திருமணம் முடித்தோம் என்று கூறிவிட்டார்கள். இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிப்புக்கு மாற்றமாக மைமூனா (ரலி) அறிவிக்கின்றார்கள். மேற்கண்ட இந்தக் காரணத்தால் இந்த ஹதீஸ் பலவீனமானதாக ஆகிவிட்டது.

நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டிய நிலையில் இருக்கும் போது மைமூனா (ரலி) அவர்களைத் திருமணம் செய்தார்கள் என்ற இந்த ஹதீஸில் நான்கு அரபி வார்த்தைகள் உள்ளன. இப்படிப் பலவீனமாகும் ஹதீஸ், இதுபோன்று சிறிய அளவிலும் இருக்கலாம். சமயத்தில் இதைவிடப் பெரிதாகவும் அமையும். அதற்கு புகாரியில் எடுத்துக்காட்டுகள் உண்டு.

**இரண்டாவது வகை**

ஒரு ஹதீஸின் மூலம் சரியாக அமைந்திருக்கும். அந்த ஹதீஸ் தொடரின் இடையில் இடம்பெறுகின்ற யாராவது ஒரு அறிவிப்பாளரின் செய்தி ஹதீஸில் செருகப்பட்டிருக்கும். இதற்கு புகாரி 136, முஸ்லிம் 415 ஹதீஸ் எடுத்துக்காட்டாகும்.

நுஅய்ம் அல்முஜ்மிர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

பள்ளிவாசலின் மேல் புறத்தில் அபூ ஹுரைரா (ரலி) அவர்களுடன் நானும் ஏறிச் சென்றேன். அபூஹுரைரா (ரலி) அவர்கள் வுழூஃ செய்தார்கள். (வுழூஃ செய்து முடித்ததும்) "மறுமை நாளில் என் சமுதாயத்தார் வுழூஃ வின் உறுப்புகளிலுள்ள அடையாளங்களால் "(பிரதான) உறுப்புக்கள் பிரகாசிப்போரே! என்று அழைக்கப்படுவார்கள். எனவே, உங்களில் எவருக்குத் (தமது வுழூஃவில் பிரதான உறுப்புக்களை நீட்டிக் கழுவி) தமது பிரகாசத்தையும் நீட்டிக்கொள்ள முடியுமோ அதனைச் செய்து கொள்ளட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டிருக்கிறேன் என்றார்கள்.

இந்த ஹதீஸில், "உங்களில் எவருக்குத் தமது பிரகாசத்தையும் நீட்டிக்கொள்ள முடியுமோ அதனைச் செய்து கொள்ளட்டும்" என்ற வாசகம் நபி (ஸல்) அவர்களின் வார்த்தை இல்லை. அபூஹுரைராவின் வார்த்தைகள்.

ஹாபிழ் இப்னு ஹஜர் அல்அஸ்கலானீ, இப்னும் கய்யூம், ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா, ஹாபிழ் அல் முன்திரி போன்றோர் இதை அடையாளம் காட்டியுள்ளனர்.

இப்படி ஹதீஸின் ஒரு பகுதி பலவீனமாக அமைந்திருப்பதையும் நாம் பார்க்கலாம்.

இது தான் அறிஞர் அல்பானியின் ஆய்வுப் பதிலாகும். சூனியம் போன்ற புகாரி ஹதீஸை பலவீனம் என்ற தரத்திற்கு அல்பானி அவர்கள் கொண்டு வரவில்லை என்பது நமக்குத் தெரியும். இருப்பினும் புகாரியிலும் பலவீனமான ஹதீஸ் உண்டு என்று ஓர் ஆய்வுப் பார்வையை இந்த உரையில் அல்பானி அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அதற்கு ஓர் அழகான அடிப்படையையும் பதிவு செய்கின்றார்கள்.

அல்லாஹ்வின் செய்தியில் மட்டுமே தவறு ஏற்படாது: மற்றவை தவறிலிருந்து தப்பாது என்பது தான் அந்த அடிப்படை! குறைந்தபட்சம் இந்த அடிப்படையைக்



கூட ஸலஃபுகள் என்ற பெயரில் உள்ளவர்கள் மறுப்பது இறை நெறிக்கும் இயற்கை நெறிக்கும் எதிரானது என்பதைச் சுட்டிக் காட்டவே இந்த உரையின் எழுத்தாக்கத்தையும் இங்கு தந்திருக்கின்றோம்.

# வழிகேட்டை காப்பாற்ற ஹதீஸை பலவீனப் படுத்தும் வழிகேடர்கள்.

சூனியத்தை உண்மை என்று நம்பி அதற்கு ஆற்றல் இருப்பதாக வாதிடும் வழிகேடர்கள் தமது கருத்தை காப்பாற்றிக் கொள்வதற்காக ஆதாரபூர்வமான செய்திகளை பலவீனம் என்று தட்டிச் செல்வதற்கு முயற்சி செய்கின்றார்கள். அந்த வகையில் நபியவர்களின் செய்திகளை எப்படி அனுக வேண்டும் என்பதை மிகத் தெளிவாக உணர்த்தும் கீழ்க் கண்ட செய்தியையும் பலவீனம் என்று சொல்லி தட்டிக் கழித்துவிட முயல்கிறார்கள்.

குறித்த செய்தியின் உண்மை நிலையை தெளிவாக நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

(مسند أحمد بن حنبل (٣/ ٧٩٤

16102 - حدثنا عبد الله حدثني أبي ثنا أبو عامر قال ثنا سليمان بن بلال عن ربيعة بن أبي عبد الرحمن عن عبد الملك بن سعيد بن سويد عن أبي حميد وعن أبي أسيد أن النبي صلى الله عليه و سلم قال : إذا سمعتم الحديث عني تعرفه قلوبكم وتلين له أشعاركم وأبشاركم وترون أنه منكم قريب فأنا أولاكم به وإذا سمعتم الحديث عني تنكره قلوبكم وتنفر أشعاركم وأبشاركم وترون أنه منكم بعيد فأنا أبعدكم منه قال

تعليق شعيب الأرنؤوط : إسناده صحيح على شرط مسلم

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்களது உள்ளங்கள் ஒத்துக் கொள்ளுமானால், இன்னும் உங்கள் தோல்களும் முடிகளும் (அதாவது உங்கள் உணர்வுகள்) அச்செய்திக்குப் பணியுமானால், இன்னும் அச்செய்தி உங்களு(டைய வாழ்க்கை)க்கு நெருக்கமாக இருப்பதாக நீங்கள் கருதினால் அதை(க் கூறுவதில்) நானே உங்களில் மிகத் தகுதி வாய்ந்தவன்.

என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்கள் உள்ளம் வெறுக்குமானால், இன்னும் உங்களது தோல்களும் முடிகளும் (அதற்குக் கட்டுப்படாமல் அதை விட்டு) விரண்டு ஓடுமானால் இன்னும் அச்செய்தி உங்களு(டைய வாழ்க்கை)க்கு (சாத்தியப்படுவதை விட்டும்) தூரமாக இருப்பதாக நீங்கள் கருதினால் உங்களில் நானே அதை விட்டும் மிக தூரமானவன்.

அறிவிப்பவர்: அபூ உஸைத் (ரலி) மற்றும் அபூ ஹுமைத் (ரலி)
நூல்: அஹ்மத் - 15478



(குறிப்பு : மேற்கண்ட ஹதீஸை அபூ உஸைத் அறிவித்தாரா? அல்லது அபூ ஹுமைத் அறிவித்தாரா? என்று சந்தேகத்துடன் ஒரு அறிவிப்பாளர் அறிவித்துள்ளார். ஏனெனில் இருவரும் நபித்தோழர்கள். எனவே யார் அறிவித்து இருந்தாலும் அது ஹதீஸின் தரத்தைப் பாதிக்காது)

நபியவர்கள் கூறியதாக மற்றவர்கள் அறிவிக்கும் செய்திகளில் எவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்? எவற்றை மறுக்க வேண்டும் என்பதற்குரிய அளவுகோலை மேற்கண்ட நபிமொழி தெளிவாக விளக்குகிறது.

நபியவர்களின் பேச்சில் தவறு ஏற்படும் என்று மேற்கண்ட நபிமொழி குறிப்பிடுவதாக சில வழிகேடர்கள் வாதிக்கின்றனர். இவ்வாறு கூறுவது அவர்களின் அறியாமையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

நபியவர்கள் மார்க்கமாகப் பேசும் விசயங்கள் வஹி எனும் இறைச் செய்தி ஆகும். அதில் ஒரு போதும் முரண்பட்ட விசயங்கள் வரவே வராது. நபியவர்கள் ஒரு போதும் குர்ஆனுக்கு எதிராக பேசமாட்டார்கள் என்று நம்பிக்கை கொள்வதே சரியான கொள்கையாகும்.

அதே நேரத்தில் நபியவர்கள் கூறியதாக மற்றவர்கள் அறிவிக்கும் போது நபியவர்கள் கூறாதவற்றையும், தவறான செய்திகளையும் நபியவர்களின் பெயரால் அறிவித்துவிடுவார்கள். நபியவர்கள் பெயரால் அறிவிக்கப்படும் ஒரு செய்தி நபியவர்கள் கூறியிருக்கவே முடியாது என்று நிரூபணமாகும்போது அவற்றை ஏற்றுக் கொள்ளாது மறுக்க வேண்டும் என்பதே மேற்கண்ட நபிமொழியின் விளக்கமாகும்.

**உள்ளத்திற்கும் உணர்வுக்கும் முரண்பட்டால் மறுக்க வேண்டுமா?**

எந்த ஒரு நபிமொழியையும் தனக்குப் பிடிக்கவில்லை என்று கூறி தூக்கி எறிவதற்குரிய வாசலை இந்த நபிமொழி திறந்துவிடுகிறது. எனவே இதனை ஏற்றுக் கொள்வது கூடாது என வழிகேடர்களில் சிலர் வாதிக்கின்றனர.

இவர்களின் இந்த வாதத்தில் இருந்து இன்னொரு உண்மை வெளிப்பட்டு விட்டது. அதாவது சில அடிப்படைக் கொள்கைக்கு முரணாக இருக்கும் ஹதீஸ்களை மறுக்கலாம் என்ற கொள்கையில் தான் இவர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த வாதம் ஆதாரமாக உள்ளது

ஒரு நபிமொழியை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்குரிய குறைந்தபட்ச அறிவு கூட இவர்களுக்கு இல்லை என்பதை அவர்களின் மேற்கண்ட வாதம் உணர்த்துகிறது.

உள்ளத்திற்கும் உணர்விற்கும் முரண்பட்டால் மறுக்க வேண்டும் என்பதின்

சரியான விளக்கம் என்னவென்று பார்ப்போம்.

மேற்கண்ட நபிமொழி உலகிலுள்ள அனைத்து முஃமின்களை நோக்கி நபியவர்கள் பேசிய வார்த்தையாகும்.

அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் ஒன்றைக் கட்டளையிட்டுவிட்டால் அதில் சிறிது கூட மனோஇச்சைக்கு கட்டுப்படாமல் அதற்கு கட்டுப்படுபவன்தான் உண்மையான முஃமின் ஆவான். இதனைப் பின்வரும் வசனங்களிலிருந்து தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

அல்லாஹ்வும், அவனது தூதரும் ஒரு காரியத்தை முடிவு செய்யும்போது நம்பிக்கை கொண்ட ஆணுக்கும், பெண்ணுக்கும் தமது அக்காரியத்தில் சுயவிருப்பம் கொள்ளுதல் இல்லை. அல்லாஹ்வுக்கும், அவனது தூ தருக்கும் மாறுசெய்பவர் தெளிவாக வழிகெட்டு விட்டார்.

(அல்குர்ஆன் 33:36)

முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல், முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள்

(அல்குர்ஆன் 4:65)

அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதரும் ஒன்றைக் கட்டளையிட்டுவிட்டால் அதில் சுயவிருப்பம் கொள்வது கூடாது என்பதை மேற்கண்ட வசனங்கள் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

நம்முடைய மனதிற்குப் பிடிக்கவில்லை என்று கூறி அல்லாஹ்வும். ரசூலும் கூறியதை மறுப்பவன் காஃபிர் ஆவான். இதனைப் பின்வரும் வசனங்களிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

நம்மை நினைப்பதை விட்டும் எவனது சிந்தனையை நாம் மறக்கடிக்கச் செய்து விட்டோமோ, அவனுக்குக் கட்டுப்படாதீர்! அவன் தனது மனோ இச்சையைப் பின்பற்றுகிறான். அவனது காரியம் வரம்பு மீறுவதாக உள்ளது

(அல்குர்ஆன் 18:28)

தனது மனோ இச்சையைத் தனது கடவுளாக்கிக் கொண்டவனைப் பார்த்தீரா? தெரிந்தே அவனை அல்லாஹ் வழிகெடுத்தான். அவனது செவியிலும், உள்ளத்திலும் முத்திரையிட்டான். அவனது பார்வையின் மீது மூடியை அமைத்தான். அல்லாஹ்வுக்குப் பின் அவனுக்கு வழிகாட்டுபவன் யார்? நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா? (அல்குர்ஆன் 45:23)



அவர்கள் உமக்குப் பதிலளிக்காவிட்டால் அவர்கள் தமது மனோஇச்சைகளையே பின்பற்றுகின்றனர் என்பதை அறிந்து கொள்வீராக! அல்லாஹ்விடமிருந்து கிடைத்த நேர்வழியின்றி தனது மனோஇச்சையைப் பின்பற்றியவனை விட வழிகெட்டவன் யார்? அநீதி இழைக்கும் கூட்டத்திற்கு அல்லாஹ் நேர்வழி காட்ட மாட்டான்.

(அல்குர்ஆன் 28:50)

அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் ஒன்றைக் கட்டளையிட்டபிறகு அதனை தனக்குப் பிடிக்கவில்லை என்று கூறி மறுப்பவன் இறைநம்பிக்கையாளனே கிடையாது என்பதை நாம் தெளிவாகப் பார்த்துவிட்டோம்.

எனவே ஒருவர் தன்னுடைய மனதிற்குப் பிடிக்காதவற்றை மறுப்பதற்கு மேற்கண்ட நபிமொழி இடமளிக்கிறது என்று வாதிப்பவன் ஒரு முஃமினாகவே இருக்க முடியாது.

அப்படியென்றால் நபியவர்கள் கூறியதாக அறிவிக்கப்படும் செய்திகளில் எத்தகைய செய்திகளை ஒரு முஃமினுடைய உள்ளம் ஏற்றுக்கொள்ளாது என்பதை நம் திருமறையின் அடிப்படையிலேயே அறிந்து கொள்ள முடியும்.

நம்பிக்கை கொண்டோரே! குற்றம் புரிபவன் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் ஒரு சமுதாயத்திற்கு அறியாமையால் நீங்கள் தீங்கிழைக்காதிருப்பதற்காக அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்! (இல்லையேல்) நீங்கள் செய்ததற்காகக் கவலைப்படுவீர்கள்.

(அல்குர்ஆன் 49:6)

மேற்கண்ட வசனம் எந்த ஒரு செய்தியையும் அதன் உண்மைத் தன்மையை தெளிவு படுத்திய பிறகுதான் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று முஃமின்களுக்கு கட்டளையிடுகிறது.

செய்திகளிலே மிகவும் முக்கியமானது இறைத்தூதர் போதித்த போதனைகள்தான். எனவே நபியவர்கள் கூறியதாக மற்றவர்கள் அறிவிக்கும் செய்திகளில் அறிவிப்பாளரின் நம்பகத்தன்மையில் பாதிப்பு ஏற்படுத்தும் காரணிகள் இருக்குமென்றால் அதை ஒரு போதும் நபியவர்கள் கூறியதாக முஃமின்களின் உள்ளம் ஏற்றுக் கொள்ளாது.

பலவீனமான அறிவிப்பாளர்கள் வழியாக நபியவர்கள் கூறியதாக வரும் செய்திகளை ஒரு முஃமினுடைய உள்ளம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என்பதை மேற்கண்ட வசனத்திலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

அது போன்று திருமறைக்குர்ஆனுக்கு எதிராக நபியவர்கள் கூறினார்கள்

என்று அறிவிக்கப்படும் செய்திகளையும் முஃமின்களின் உள்ளம் ஏற்றுக் கொள்ளாது.

அழகிய செய்தியை அல்லாஹ்வே அருளினான். அது திரும்பத் திரும்பக் கூறப்பட்டதாகவும், ஒன்றையொன்று ஒத்த வேதமாகவும் உள்ளது. தமது இறைவனை அஞ்சுவோரின் தோல்கள் இதனால் சிலிர்த்து விடுகின்றன. பின்னர் அவர்களின் தோல்களும், உள்ளங்களும் அல்லாஹ்வை நினைப்பதற்காக மென்மையடைகின்றன. இதுவே அல்லாஹ்வின் நேர்வழி. இதன் மூலம், தான் நாடியோருக்கு அவன் நேர்வழி காட்டுகிறான். அல்லாஹ் யாரை வழிகேட்டில் விட்டு விட்டானோ அவனுக்கு வழிகாட்டுபவன் இல்லை. (அல்குர்ஆன் 39:23)

மேற்கண்ட வசனத்தில் திருமறைக்குர்ஆனின் வசனங்களினால் முஃமின்களின் தோல்கள் சிலிர்த்து விடும் என்றும், உள்ளங்கள் அஞ்சும் என்றும் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

திருமறைக்குர்ஆன் எவ்வாறு இறைச் செய்தியோ அது போன்று மார்க்கம் தொடர்பாக நபியவர்கள் பேசிய பேச்சுக்களும் இறைச்செய்தியாகும்.

மேற்கண்ட நபிமொழியிலும் நபியவர்களின் போதனைகளைக் கேட்பதினாலும் தோல்கள் சிலிர்க்கும், உள்ளம் அதனை ஏற்றுக் கொள்ளும் என்ற உண்மையை நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

இதிலிருந்து திருமறைக்குர்ஆனுக்கு மாற்றமாக நபியவர்கள் கூறியதாக ஒரு செய்தி அறிவிக்கப்படுமென்றால் அதைத் தான் முஃமின்களின் உள்ளம் வெறுக்கும். அவர்களின் தோல்களும், முடிகளும் அதனை விட்டும் வெருண்டோடும் என்பதை நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.

எனவே நபியவர்கள் கூறியதாக பலவீனமான அறிவிப்பாளர்களின் வழியாக வரும் செய்திகளையும், திருமறைக்குர்ஆனுக்கு எதிரான செய்திகளையும் முஃமின்களின் உள்ளம் ஏற்றுக்கொள்ளாது. அதைக்கண்டு வெருண்டோடும் என்பதே மேற்கண்ட நபிமொழியின் சரியான விளக்கமாகும்.

இமாம் இப்னு கஸீரின் கருத்திலிருந்தும் இதனை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

ومعناه –والله أعلم –: مهما بِلغكم عنِّي مِن خيرٍ فأنا أولاكم به ومهما يكن من مكروه (فأنا أبعدكم منه، _ وَمَا أُرِيدُ أَنْ أُخَالِفَكُمْ إِلَى مَا أَنْهَاكُمْ [عَنْهُ] } تفسير ابن كثير (٤/ ٥٤٣

அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன் - இந்த நபிமொழியின் கருத்தாகிறது



: நான் கூறியதாக நல்ல விசயங்கள் உங்களை வந்தடையுமென்றால் உங்களில் அதற்கு மிகத் தகுதியானவன் நானே ! வெறுக்கத்தக்க விசயமாக இருந்தால் அதிலிருந்து உங்களை விட மிகத் தூரமானவன் நானே! எதை விட்டும் நான் உங்களைத் தடுக்கிறேனோ அதைச் செய்து உங்களிடம் மாற்றமாக நடக்க நான் விரும்பவில்லை. (அல்குர்ஆன் 11 : 88) (என்று நபி கூறுகிறார்கள்.)

நூல் : தப்ஸீர் இப்னு கஸீர் பாகம் : 4 பக்கம் : 345

நபியவர்கள் தாம் தடுத்தவற்றை ஒரு போதும் செய்யமாட்டார்கள் என்பதுதான் இந்த நபிமொழியின் விளக்கம் என்று இப்னு கஸீர் தெளிவுபடுத்துகின்றார். இதிலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட குர்ஆனுக்கு எதிராக நபியவர்கள் கூறியதாக தனிநபர்கள் அறிவித்தால் அதனை ஏற்பது கூடாது, அவ்வாறு நபியவர்கள் ஒருபோதும் கூறமாட்டார்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

திருமறை வசனங்களின் அடிப்படையில் மேற்கண்ட நபிமொழியின் சரியான கருத்தை விளங்கிக் கொண்ட பிறகும் ஒருவன் மேற்கண்ட நபிமொழியை தவறான காரணங்களைக் கற்பித்து மறுத்தால் அவன் வழிகேட்டில் இருக்கின்றான் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

அது போன்று திருமறைக்குர்ஆனுக்கு எதிரான செய்திகளை நபியவர்கள் கூறியதாக ஏற்றுக் கொள்பவனும் வழிகேட்டில் உள்ளான் என்பதையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

**பலமான அறிவிப்பாளர் தொடர்**

மேற்கண்ட நபிமொழியின் அறிவிப்பாளர் தொடரில் பலவீனம் உள்ளது என சிலர் வாதிக்கின்றனர். அவர்களின் வாதத்தில் சிறிதளவேனும் உண்மைத் தன்மை உள்ளதா? என்பதைப் பற்றிக் காண்போம்.

மேற்கண்ட நபிமொழியை நபியவர்கள் கூறியதாக அபூ உசைத் மற்றும் அபூ ஹுமைத் என்ற நபித்தோழர்கள் அறிவிக்கின்றனர்.

அபூ உசைத் அல்லது அபூ ஹுமைத் ஆகியோரிடமிருந்து அப்துல் மலிக் இப்னு ஸயீத் என்பார் அறிவிக்கின்றார்

அப்துல் மலிக் பின் ஸயீத் கூறியதாக ரபீஆ இப்னு அபூ அப்திர்ரஹ்மான் என்பார் அறிவிக்கின்றார்.

ரபீஆ இப்னு அபீ அப்திர்ரஹ்மான் கூறியதாக சுலைமான் இப்னு பிலால்

என்பார் அறிவிக்கின்றார்.

சுலைமான் இப்னு பிலால் கூறியதாக அபூ ஆமிர் என்பார் அறிவிக்கின்றார்.

அபூ ஆமிர் என்பாரிடமிருந்து கேட்டு இமாம் அஹ்மத் தமது நூலில் பதிவு செய்துள்ளார்.

மேற்கண்ட அறிவிப்பாளர்களில் அப்துல் மலிக் பின் ஸயீத் பின் சுவைத் என்பாரைத் தவிர மற்ற அனைவரும் புகாரியினுடைய அறிவிப்பாளர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் மிகவும் பலமான அறிவிப்பாளர்கள் ஆவர். அது போன்று அப்துல் மலிக் பின் ஸயீத் என்பார் முஸ்லிமினுடைய அறிவிப்பாளர் ஆவார். இவரும் நம்பகமான உறுதியான அறிவிப்பாளர் ஆவார்.

**அப்துல் மலிக் பின் ஸயீத் பலவீனமானவரா?**

மேற்கண்ட நபிமொழியின் அறிவிப்பாளர்களில் ஒருவரான “அப்துல் மலிக் பின் ஸயீத் பின் சுவைத்” என்பாரின் நம்பகத்தன்மை நிரூபிக்கப்படவில்லை. எனவே இவர் பலவீனமானவர் என சிலர் கூறுகின்றனர். திருக்குர்ஆனை மறுத்து அதற்கு எதிரான தனிநபர் செய்திகளை நபிமொழி என்று வாதிக்கும் வழிகேடர்களும் இவ்வாறு கூறுகின்றனர். ஆனால் அவர்களின் வாதம் முற்றிலும் பிழையானதாகும்.

அப்துல் மலிக் பின் ஸயீத் என்பார் நம்பகமான உறுதியான அறிவிப்பாளர் ஆவார்.

قال النَّسَائي: ليس به بأس. وذكره ابنُ حِبَّان في كتاب «الثقات» روى له مسلم، وأبو داود، (والنَّسَائي، وابن ماجه. )تهذيب الكمال في أسماء الرجال (٨١/ ٦١٣

م د س ق) عبد الملك بن سعيد بن سويد الأنصاري المدني. قال العجلي: مدني) - 3341 .تابعي ثقة

وخرج أبو عوانة حديثه في « صحيحه »، وكذلك الحاكم وابن حبان. وذكره ابن خلفون في كتاب « الثقات ». وفي « الثقات » لابن حبان: روى عنه ابنه ربيعة بن عبد الملك. (إكمال (تهذيب الكمال (٨/ ٢١٣

இமாம் இப்னு ஹிப்பான், இஜ்லீ, இப்னு கல்ஃபூன் ஆகியோர் இவரை நம்பகமானவர் என்று உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும் இமாம் நஸாயீ அவர்கள் ‘இவரிடம் எந்தப் பிரச்சினையும் இல்லை” என்று நற்சான்று அளித்துள்ளார்கள்.



மேலும் இமாம் முஸ்லிம் அவர்கள் தம்முடைய நூலில் ‘அப்துல் மலிக்” அவர்களின் அறிவிப்பை (துணைச்சான்றாக இல்லாமல் முதன்மையான அறிவிப்பாக) கொண்டு வந்துள்ளார்கள்.

(நூல்கள் : தஹ்தீபுல் கமால்,பாகம் : 18 பக்கம் : 316 , இக்மாலு தஹ்தீபில் கமால் பாகம் : 8, பக்கம் 312)

இமாம் முஸ்லிம் அவர்கள் பள்ளிக்குள் நுழையும் போது ஓதும் துஆ தொடர்பாக ஒரு செய்தியை தம்முடைய நூலில் (முஸ்லிம் 1286) இடம் பெறச் செய்துள்ளார்கள். அதில் அபூ ஆமிர் என்ற அறிவிப்பாளரைத் தவிர மேற்கண்ட நபிமொழியில் இடம் பெறும் அனைத்து அறிவிப்பாளர்களும் இடம் பெற்றுள்ளனர். முஸ்லிம் இமாம் தம்முடைய நூலில் ஒரு ஹதீஸை முதன்மைச் சான்றாக இடம் பெறச் செய்தால் அதன் அனைத்து அறிவிப்பாளர்களும் இமாம் முஸ்லிம் அவர்களிடத்தில் நம்பகமானவர்கள் என்பதாகும். இதைப்பற்றி இமாம் முஸ்லிம் அவர்கள் தம்முடைய முஸ்லிம் ஹதீஸ் கிரந்தத்தின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்.

قَالَ: لَيْسَ كُلُّ شَيْءٍ عِنْدِي صَحِيحٍ وَضَعْتُهُ هَا هُنَا إِنَّمَا وَضَعْتُ هَا هُنَا مَا أَجْمَعُوا عَلَيْهِ ) )صحيح مسلم (١/ ٤٠٣

நான் ஸஹீஹாக கருதும் ஹதீஸ்கள் அனைத்தையும் இந்த நூலில் நான் கொண்டு வரவில்லை. மாறாக எந்த ஹதீஸ்களை அனைவரும் ஸஹீஹ் என்று ஏற்றுக் கொண்டுள்ளார்களோ அதைத்தான் நான் கொண்டு வந்துள்ளேன். (முஸ்லிம் முன்னுரை)

இமாம் முஸ்லிம் அவர்களின் கூற்றிலிருந்து அப்துல்மலிக் என்பார் உட்பட அந்த அறிவிப்பாளர் தொடரில் இடம் பெறும் அனைத்து அறிவிப்பாளர்களும் இமாம் முஸ்லிம் அவர்களிடத்தில் நம்பகமானவர்கள் என்று உறுதியாகிறது

ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் பிறந்த இமாம் இப்னு அபீ ஹாதிம் (ரஹ்) அவர்கள் ‘அல்ஜரஹ் வத்தஃதீல்” என்ற தன்னுடைய நூலில் அப்துல் மலிகை குறிப்பிடுகிறார். ஆனால் இவர் தொடர்பாக குறை, நிறை எதையும் அவர்கள் குறிப்பிடவில்லை. அபூ ஹாதிம் அவர்கள் குறை நிறை எதும் கூறாத காரணத்தினால் இவர் நம்பகத் தன்மை அறியப்படாதவர் (மஜ்ஹூல்) என்று சிலர் வாதிக்கின்றனர்.

இது தவறான வாதமாகும். ஏனெனில் ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம்களான இஜ்லீ, முஸ்லிம், நஸாயீ ஆகியோரும், ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் இப்னு ஹிப்பான் அவர்களும் அது போன்று ஹிஜ்ரி 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் இப்னு

கல்ஃபூன் அவர்களும் அப்துல் மலிக் அவர்களை நம்பகமானவர் என்று உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே அப்துல் மலிக் என்பவர் "நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டவர்" என்பது மிக உறுதியாகிவிட்டது.

عبد الملك ابن سعيد ابن سويد الأنصاري المدني ثقة من الثالثة م د س ق ( 4182-
تقريب التهذيب (ص: ٣٦٣

மேலும் மேற்கண்ட இமாம்களின் நற்சான்றின் அடிப்படையில் ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ அவர்களும் தம்முடைய தக்ரீபுத் தஹ்தீப் என்ற நூலில் "அப்துல் மலிக்" அவர்களை நம்பகமானவர் என்று நன்சான்று அளித்துள்ளார்கள்.

எனவே "அப்துல் மலிக்" என்பாரின் நம்பகத் தன்மை நிரூபிக்கப்படவில்லை என்பது மிகவும் அப்த்தமான வாதமாகும். அவர் மிகச் சிறந்த அறிவிப்பாளர் என்பது உறுதியாகிவிட்டது.

மேலும் இச்செய்தியை அப்துல் மலிக் என்பாரிடமிருந்து ரபீஆ என்பவர் அறிவிக்கின்றார். இவர் மார்க்கத்தில் சுயக் கருத்தை புகுத்தக் கூடியவர் என்றும், இவர் அறிவிக்கும் இந்தச் செய்தி சுயசிந்தனையைக் கொண்டு நபிமொழியை நிராகரிக்கலாம் என்ற கருத்தைக் கூறுவது போன்று உள்ளது. எனவே இந்த நபிமொழியை ஏற்பது கூடாது என்று திருக்குர்ஆனை மறுத்து அதற்கு எதிரான தனிநபர் செய்திகளை மார்க்கமாக்கும் வழிகேடர்கள் விமர்சித்துள்ளனர். இது மிகவும் அபத்தமான வாதமாகும்.

இந்த வாத்த்தின் மூலமும் கருத்தைக் கவனித்துன் ஹதீஸ்களை மறுக்கலாம் என்ற கொள்கையில் தான் இவர்களும் உள்ளனர் என்பது உறுதியாகிறது.

'ரபீஆ" என்ற அறிவிப்பாளர் மீது இது போன்ற அபத்தமான காரணங்களைக் கூறி ஹதீஸ்கலை அறிஞர்கள் யாரும் இவருடைய செய்தியை மறுத்தது கிடையாது.

மேலும் மேற்கண்ட நபிமொழி சுயசிந்தனையைக் கொண்டு நபி கூறியவற்றை நிராகரிக்கலாம் என்ற கருத்தைத் தருவதாக இந்த வழிகேடர்கள் திரித்துக் கூறுகின்றனர்.

மேற்கண்ட நபிமொழியின் சரியான விளக்கத்தை நாம் தெளிவு படுத்தி விட்டோம். குர்ஆனுக்கு முரணாக நபியவர்கள் கூறியதாக தனிநபர்கள் அறிவிக்கும் செய்தியையும், பலவீனமானவர்கள் நபி கூறியதாக அறிவிக்கும் செய்திகளையும் முஃமின்கள் நிராகரிக்க வேண்டும் என்பதே மேற்கண்ட நபிமொழியின் விளக்கமாகும்.



ஹதீஸின் கருத்தை திரித்தும், ரபீஅ என்ற அறிவிப்பாளரின் மீது ஒரு அபாண்டத்தைச் சுமத்தியும் தெளிவான நபிமொழியை மறுக்க முயல்வது வழிகேடர்களின் வழிமுறையாகும். அதைத்தான் இந்தக் குர்ஆன் மறுப்பாளர்கள் செய்துள்ளனர்.

இந்த ரபீஆ என்பவர் மிகச் சிறந்த அறிவிப்பாளர் ஆவார். இவருடைய அறிவிப்புகள் புகாரியில் 18 இடங்களிலும், முஸ்லிமில் 11 இடங்களிலும் இடம் பெற்றுள்ளன. இன்னும் ஏராளாமான இமாம்களும் இவருடைய அறிவிப்புகளை தங்களுடைய நூலில் இடம் பெறச் செய்துள்ளனர். இவர் மிகச் சிறந்த மார்க்க மேதை ஆவார். இவர் தம்முடைய அறிவாற்றலால் சத்தியமார்க்கத்தை மக்களுக்கு எடுத்துரைத்தவர் ஆவார். இவருடைய பெயரைக் குறிப்பிடும் போது சிலர் "ரஃயி" (சுயசிந்தனை) என்ற வாரத்தையை இணைத்து "ரபீஅத்துர் ரஃயீ" என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் இவருடைய பெயருடன் இவ்வாறு இணைத்துக் கூறுவது அறியாமை என்பதை அறிஞர்கள் தெளிவுபடுத்தி உள்ளனர்.

இமாம் அஹ்மத், இஜ்லீ, அபூ ஹாதிம், நஸாயீ, யஃகூப் இப்னு ஷைபா, இமாம் மாலிக், யஹ்யா இப்னு ஸயீத், லைஸ், ஸவ்வார் அல்அன்பரி, வாகிதி, இப்னு ஹிப்பான், அபூ பக்ர் அல்ஹுமைதி, போன்ற பலர் இவர் மிகவும் உறுதியானர் என்று கூறி இவருடைய நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் "இராக் வாசிகளில் சிலர்தான் இவருடைய பெயருடன் ரஃயீ என்பதை இணைத்துக் கூறினர். இவ்வாறு மக்கள் சிலர் கூறினர் என்ற தகவலை வாகிதி அவர்களும் எடுத்துக் கூறியுள்ளார்.

இவர் மார்கத்தில் சுய கருத்தை புகுத்தக் கூடியவர் என்ற கருத்தில் இராக் வாசிகளில் சிலர் இவ்வாறு கூறியது மிகவும் தவறானதாகும். இதனை அறிஞர்கள் கண்டித்துள்ளனர்.

وقال عبد العزيز بن أبي سلمة: يا أهل العراق، تقولون: ربيعة الرأي، والله ما رأيت أحدًا أحفظ لسنةٍ منه.

அப்துல் அஸீஸ் பின் அபீ ஸலமா என்பார் கூறுகிறார்: இராக் வாசிகளே! (ரபீஆ என்ற பெயருடன் 'ரஃயீ" – சுயசிந்தனை என்பதை இணைத்து) 'ரபீஅத்துர் ரஃயீ" என்று நீங்கள் கூறுகிறீர்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவரை விட நபிவழியை மிகவும் பாதுகாப்பவரை நான் பார்த்தது கிடையாது.

நூல் : துஹைரத்துல் உக்பா

மேலும் பல அறிஞர்கள் இவர் மிகவும் மார்க்க ஞானம் உடையவர் என்பதை புகழ்ந்து கூறியுள்ளனர்.

(ذخيرة العقبى في شرح المجتبى (٩/ ٥٤١

ربيعة) بن أبي عبد الرحمن التيمي(- 4

وقال مصعب الزبيري:.. وعنه أخذ مالك

இமாம் மாலிக் அவர்கள் இவரிடமிருந்து (செய்திகளை) எடுத்துள்ளார்கள் என்று முஸ்அப் அஸ்ஸுபைரி என்பார் கூறுகின்றார்.

.وقال مطرف: سمعت مالكًا يقول: ذهبت حلاوة الفقه منذ مات ربيعة

ரபீஆ அவர்கள் மரணித்ததோடு ‘பிக்ஹினுடைய இனிமை” போய்விட்டது என்று இமாம் மாலிக் கூறியதாக முதர்ரிஃப் என்பார் கூறுகிறார்.

.وقال الليث، عن يحيى بن سعيد: مما رأيت أحدًا أفطن منه

இவரை விட மகிச் சிறந்த விளக்கசாலியை நான் பார்த்து கிடையாது என யஹ்யா இப்னு ஸயீது கூறுகிறார்.

.وقال الليث، عن عبيد الله بن عمر: هو صاحب معضلاتنا، وأعلمنا، وأفضلنا

இவர் எங்களுக்கு மிகச் சிக்கலான விசயங்களை தீர்த்து வைப்பவர், எங்களில் மிகவும் ஞானமிக்கவர், எங்களில் மிகச் சிறந்தவர் என உபைதுல்லாஹ் என்பார் கூறுகிறார்.

وقال معاذ بن معاذ العنبري، عن سوار العنبري: ما رأيت أحدًا أعلم منه، قلت: ولا الحسن، .وابن سيرين؟ قال: ولا الحسن وابن سيرين

இவரை விட மிகச் சிறந்த ஞானமிக்கவரை நான் பார்த்தது கிடையாது என ஸவ்வார் என்பார் கூறினார். அப்போது நான் ஹஸன் மற்றும் இப்னு ஸீரினை விடவுமா? எனக் கேட்டேன்.அதற்கவர் ஹஸன் மற்றும் இப்னு ஸீரீனை விடவும்தான் என்று கூறினார் என் முஆத் பின் முஆத் என்பார் கூறுகிறார்.

நூல் : துஹைரத்துல் உக்பா

எனவே ‘ரபீஆ” அவர்கள் மார்க்கத்தில் சுயக்கருத்தைக் கூறுவார் என்பது அவர் மீது கூறப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டு என்பதை நாம் மேற்கண்ட கூற்றுகளிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம். மேலும் இமாம் அஹ்மத் அவர்கள் ரபீஆ விடம் ஞானம் எதுவும் கிடையாது என்று



விமர்சித்துள்ளார்கள். இதுவும் ஏற்கத்தக்க விமர்சனமல்ல என்பதும் மேற்கண்ட கூற்றுகளிலிருந்து தெளிவாகிவிட்டது.

அது போன்று பல இமாம்கள் மேற்கண்ட ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரை மிகப்பலமானது என்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து மரணித்த இமாம் பஸ்ஸார் அவர்கள் தம்முடைய “முஸ்னத் பஸ்ஸார்” என்ற நூலில் இந்த நபிமொழியைப் பதிவு செய்துவிட்டு அதனைத் தொடர்ந்து

وَهَذَا الْحَدِيثُ لَا نَعْلَمُهُ يُرْوَى عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنْ وَجْهٍ أَحْسَنَ مِنْ
)هَذَا الْوَجْهِ» مسند البزار = البحر الزخار (٩/ ٩٦١

இவ்வாறு நபியவர்கள் கூறியதாக அறிவிக்கப்படும் அறிவிப்பாளர் தொடர்களில் இதைவிட மிகச் சிறந்த அறிவிப்பாளர் தொடரை நாம் அறியவில்லை.

நூல் : முஸ்னத் பஸ்ஸார் பாகம் : 9 பக்கம் : 169

ஹிஜ்ரி 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் ஹைஸமீ அவர்கள் தமது “மஜ்மவுஸ் ஸவாயித்” (பாகம் 1 பக்கம் 150) என்ற நூலில் “ஹதீஸ்கலை அறிஞர்கள் பலவீனமானவற்றிலிருந்து ஸஹீஹானவற்றை அறிதல் பற்றிய பாடம்” என்ற தலைப்பிட்டு மேற்கண்ட ஹதீஸைக் கொண்டுவந்துள்ளார்கள். அதன் இறுதியில்

رَوَاهُ أَحْمَدُ وَالْبَزَّارُ، وَرِجَالُهُ رِجَالُ الصَّحِيحِ. (مجمع الزوائد ج: ١ ص: (١٥٠

“அஹ்மத், பஸ்ஸார் இதனை அறிவித்துள்ளனர். இதனுடைய அறிவிப்பாளர்கள் ஸஹீஹான அறிவிப்பாளர்கள் ஆவர்” என்று கூறியுள்ளார்.

நூல் : மஜ்மவுஸ் ஸவாயித் பாகம் : 1 பக்கம் : 150

ஹிஜ்ரி 700 ல் பிறந்த இமாம் இப்னு கஸீர் அவர்கள் தம்முடைய தஃப்ஸீரில் இந்த ஹதீஸை இடம் பெறச் செய்துள்ளார்கள். அதன் கீழ்

(هذا حديث جيد الإسناد) تفسير ابن كثير (٣/ ٤٨٧)

இது மிக உறுதியான அறிவிப்பாளர் தொடரில் அமைந்த ஹதீஸாகும். (இப்னு கஸீர் பாகம் 3 பக்கம் 487) என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**இமாம் புகாரியின் கூற்று சரியானதா?**

மேற்கண்ட ஹதீஸின் கருத்தில் அமைந்த ஒரு செய்தியை உபை (ரலி) அவர்களின் சொந்தக் கூற்றாக இமாம் புகாரி அவர்கள் தமது "தாரீகுல் கபீர்" என்ற நூலில் பதிவு செய்துள்ளார்கள்.

(التاريخ الكبير - (ج ٥ / ص ٥١٤

1349 ... وقال عبد الله بن صالح حدثنا بكير عن عمرو عن بكير عن عبد الملك بن سعيد حدثه عن عباس بن سهل عن أبي رضي الله عنه إذا بلغكم عن النبي صلى الله عليه و سلم ما يعرف ويلين الجلد فقد يقول النبي صلى الله عليه و سلم الخير ولا يقول إلا الخير وهذا أشبه المدني

உபை (ரலி) அவர்களின் சொந்தக் கூற்றாக அறிவிக்கப்படும் இந்தச் செய்தியை அப்துல் மலிக் என்பாரிடமிருந்து புகைர் இப்னு அஷஜ் என்ற நம்பகத்தன்மையில் உறுதிமிக்க அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்.

நபியவர்கள் கூறியதாக அறிவிக்கப்டும் செய்தியில் அப்துல் மலிக் என்பாரிடமிருந்து ரபீஆ பின் அப்திர்ரஹ்மான் என்பார் அறிவிக்கின்றார்.

நபியவர்கள் கூறியதாக அறிவிக்கப்படும் செய்தியை விட உபை (ரலி) அவர்களின் சொந்தக் கூற்றாக அறிவிக்கப்படும் செய்திதான் மிகச் சரியானது என இமாம் புகாரி அவர்கள் தமது தாரீகுல் கபீர் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் புகாரி அவர்களின் கருத்தை அடிப்படையாக வைத்து ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் பைஹகி அவர்கள் நபியவர்கள் கூறியதாக வரும் செய்தியை 'மஃலூல்" (பலவீனமானது) என்று கூறியுள்ளார்கள்.

இது போன்றே ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் இப்னு ரஜப் அவர்களும் ஜாமிவுல் உலூம் வல்ஹிகம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். இன்றைக்கு குர்ஆனுக்கு எதிராக தனி நபர் அறிவிக்கும் செய்திகளை ஏற்று குர்ஆனை மறுக்கும் வழிகேடர்களும் இந்த விமர்சனத்தை வைத்து நபி கூறியதாக வரும் சரியான ஹதீஸை பலவீனம் என்று கூறுகின்றனர்.

ஆனால் நாம் ஆய்வு செய்து பார்த்தவரை இமாம் புகாரி அவர்களின் விமர்சனம் ஏற்றுக் கொள்ளத் தகுந்ததாக இல்லை. எனவே இமாம் புகாரியின் விமர்சனத்தை அடிப்படையாக வைத்து பைஹகி, இப்னு ரஜப் ஆகியோர் செய்த விமர்சனங்களும் ஏற்பதற்கு தகுதியற்றவையாகி விடுகிறது.



இமாம் புகாரி அவர்களின் விமர்சனம் எந்த அடிப்படையில் தவறானது என்பதற்கான சான்றுகளைக் காண்போம்.

01. உபை (ரலி) அவர்களின் சொந்தக் கூற்றாக வரும் செய்தியில் புகாரியின் ஆசிரியராக "அப்துல்லாஹ் பின் ஸாலிஹ்" என்பார் இடம் பெற்றுள்ளார். இவர் அறிவிப்பாளர் தொடரை மாற்றி மாற்றி அறிவிப்பவர் என்று அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளார். இவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார்.

இமாம் புகாரி அவர்கள் தம்முடைய ஸஹீஹுல் புகாரியில் இவருடைய அறிவிப்புகளை துணைச்சான்றாக மட்டும்தான் கொண்டு வந்துள்ளார்கள்.

இவர் நம்பகமான அறிவிப்பாளர்கள் வழியாக தவறான செய்திகளை அறிவிப்பவர் ஆவார்.

وقال ابن حبان منكر الحديث جدا يروي عن الأثبات ما ليس من حديث الثقات وكان صدوقا في نفسه وإنما وقعت المناكير في حديثه من قبل جار له كان يضع الحديث على شيخ عبد الله بن صالح ويكتب بخط يشبه خط عبد الله ويرميه في داره بين كتبه فيتوهم عبد الله أنه خطه فيحدث به

இவரைப் பற்றி இமாம் ஹிப்பான் கூறுகிறார் : இவருடைய ஹதீஸ்கள் முற்றிலும் நிராகரிக்கத்தக்கதாகும். நம்பகமான அறிவிப்பாளர்கள் வழியாக அவர்களுடைய ஹதீஸில் இல்லாதவற்றை அறிவிப்பார். இவர் தன்னளவில் நல்லவராக இருந்தாலும் இவருடைய அண்டை வீட்டுக்காரர் மூலமாக இவருடைய செய்திகளில் மறுக்கத்தக்கவை புகுந்துவிட்டது. ஷைஹ் அப்துல்லாஹ் பின் ஸாலிஹ் என்பார் மீது அவர் அண்டை வீட்டுக்காரர் ஹதீஸை இட்டுக்கட்டி அவருடைய எழுத்தைப் போன்றே எழுதி அவருடைய வீட்டிலே அவருடைய புத்தகங்களுக்கு மத்தியில் நுழைத்துவிடுவார். அப்துல்லாஹ் அதை தன்னுடைய எழுத்து என்று எண்ணி அறிவித்து விடுவார்.

وقال ابن عدي هو عندي مستقيم الحديث إلا أنه يقع في حديثه في أسانيده ومتونه غلط ولا يتعمد الكذب

இப்னு அதீ கூறுகிறார் : இவர் என்னிடத்தில் ஹதீஸ்களில் உறுதியானவர் என்றாலும் இவருடைய ஹதீஸில் அறிப்பாளர் தொடர்களிலும், கருத்திலும் குழப்பங்கள் நிகழ்ந்து விட்டது. இவர் திட்டமிட்டு பொய்யுரைக்கமாட்டார்.

وقال صالح بن محمد كان ابن معين يوثقه وعندي أنه كان يكذب في الحديث

ஸாலிஹ் இப்னு முஹம்மத் கூறுகிறார் : இப்னு மயீன் இவரை நம்பகமானவர்

என்று உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் நான் இவரை ஹதீஸ்களில் பொய்யுரைப்பவர் என்றே கருதுகிறேன்.

وقال ابن المديني ضربت على حديثه وما أروي عنه شيئا   وقال أحمد بن صالح متهم ليس بشيء

இப்னுல் மதீனி கூறுகிறார் : இவருடைய ஹதீஸை நான் எழுதினேன். ஆனால் அவரிடமிருந்து எதையும் நான் அறிவிக்கமாட்டேன். மேலும் அஹ்மத் இப்னு ஸாலிஹ் கூறுகிறார் : இவர் தவறிழைக்கக் கூடியவர். ஒரு பொருட்டாகக் கொள்ளத்தக்கவரில்லை.

وقال النسائي ليس بثقة

இவர் உறுதியானவர் இல்லை என்று இமாம் நஸாயீ விமர்சித்துள்ளார்கள்.

قال النسائي ولقد حدث أبو صالح عن نافع بن يزيد عن زهرة بن معبد عن سعيد بن المسيب عن جابر أن رسول الله صلى الله عليه وسلم قال إن الله أختار أصحابي على جميع العالمين الحديث بطوله موضوع

'அனைத்து உலகமக்களை விடவும் என்னுடைய தோழர்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்துக் கொண்டான்" என்று நபியவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு ஸாலிஹ் அறிவிக்கும் செய்தி இட்டுக்கட்டப்பட்டதாகும் என்று இமாம் நஸாயீ விமர்சிக்கின்றார்.

وقال الحاكم أبو أحمد ذاهب الحديث

இவர் ஹதீஸ்களில் பலவீனமானவர் என் இமாம் ஹாகிம் கூறுகிறார்.

இன்னும் ஏராளமான அறிஞர்கள் இவரை விமர்சித்துள்ளனர்.

இந்த விமர்சனங்கள் அனைத்தும் 'தஹ்தீபுத் தஹ்தீப்" பாகம் 5 பக்கம் 256 ல் இடம் பெற்றுள்ளது.

உபை இப்னு கஅப் (ரலி) அவர்களின் சொந்தக்கூற்றாக அறிவிக்கும் அறிவிப்பாளர் தொடரில் புகாரியினுடைய ஆசியராக இடம் பெறும் அப்துல்லாஹ் பின் ஸாலிஹ் என்ற அறிவிப்பாளர் ஸனதிலும், மதனிலும் தவறாக அறிவிப்பவர். இட்டுக்கட்டப்பட்ட செய்திகளைக் கூட அறிவித்துள்ளார். அவருடைய செய்திகளை ஆதாரமாக எடுத்துக் கொள்வது கூடாது என்பதற்குரிய சான்றுகளை நாம் மேலே கண்டோம்.

எனவே அத்தகைய பலவீனமான அறிவிப்பாளர் அறிவித்த செய்தியை



ஏற்று அதனை மிகச் சரியானது என்று இமாம் புகாரி கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்பதை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

எனவே நபியவர்கள் கூறியதாக அப்துல் மலிக் என்பாரிடமிருந்து ரபீஆ என்ற நம்பகமானவர் வழியாக வரும் அறிவிப்பே மிகச் சரியானது என்பது தெளிவாகிவிட்டது.

02. உபை பின் கஅப் (ரலி) அவர்களின் சொந்தக் கூற்றாக அறிவிக்கப்படும் செய்தியில் மற்றொரு குறையும் உள்ளது. அதாவது அப்துல் மலிக் என்பவரின் ஆசிரியராக அப்பாஸ் இப்னு ஸஹ்ல் என்பார் இடம் பெற்றுள்ளார். அப்துல்மலிக் என்பாரின் ஆசிரியர் அப்பாஸ் பின் ஸஹ்ல் என்பது சரியான தகவல் இல்லை என தஹ்தீபுல் கமால் ஆசிரியர் மிஸ்ஸி சந்தேகப்படுகிறார்.

قال المزي: روى عن عباس بن سهل بن سعد، إن كان محفوظا. انتهى.-إكمال تهذيب الكمال

அப்துல் மலிக் என்பார் அப்பாஸ் பின் ஸஹ்ல் பின் ஸஃத் என்பாரிடமிருந்து அறிவிக்கின்றார். இது சரியான தகவலாக இருந்தால்தான் (ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்). (இக்மாலு தஹ்தீபில் கமால்)

இமாம் புகாரி தாரீகுல் கபீரில் குறிப்பிடும் அறிவிப்பாளர் தொடரைத் தவிர இதற்கு வேறு ஆதாரம் கிடையாது.

அப்பாஸ் பின் ஸஹ்ல் என்பாரிடமிருந்து அப்துல் மலிக் என்பவர் அறிவிப்பதாக தவறாகக் கூறியவர் அப்துல்லாஹ் பின் ஸாலிஹ் என்பவர்தான் என்றே நாம் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் அப்துல்லாஹ் பின் ஸாலிஹ் அறிவிப்பாளர் தொடர்களில் தவறிழைப்பவர், அவர் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளைக் கூட அறிவித்துள்ளார் என்பதற்கான சான்றுகளை நாம் முன்னரே பார்த்துவிட்டோம்.

03. மேலும் உபை இப்னு கஅப் (ரலி) அவர்களிடமிருந்து அப்துல்லாஹ் பின் ஸஹ்ல் செவியேற்றார் என்பதற்கு புகாரி குறிப்பிடும் இந்தப் பலவீனமான அறிவிப்பாளர் தொடர் தவிர வேறு எந்த ஆதாரமும் கிடையாது. எந்த அறிஞரும் உபை இப்னு கஅப் அவர்களிடமிருந்து அப்துல்லாஹ் பின் ஸஹ்ல் செவியேற்றுள்ளார் என்று குறிப்பிடவில்லை.

மொத்தத்தில் இமாம் புகாரி மிகச் சிறந்த அறிவிப்பாளர் தொடர் என்று கூறியது மிகப் பெரும் தவறு என்பது நிரூபணமாகிவிட்டது. இதன் காரணத்தினால் இமாம் புகாரியின் கூற்றை அடிப்படையாக வைத்து நபி கூறியதாக வரும்

சரியான அறிவிப்பாளர் தொடரை “ம.ஃலூல்” (பலவீனமானது) என்று விமர்சித்த இமாம் பைஹகி, இப்னு ரஜப், ஆகியோரின் விமர்சனங்களும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல என்பது தெளிவாகிவிட்டது.

**ஷவ்கானி எதை மறுத்தார்?**

இமாம் ஷவ்கானீ அவர்கள் ‘அல்ஃபவாயிதுல் மஜ்முஆ” என்ற தன்னுடைய நூலில் நாம் ஆதாரமாக எடுத்துவைக்கும் மேற்கண்ட நபிமொழியின் அடிப்படையில் இரண்டு செய்திகளை பலவீனம் என்று கூறியுள்ளார்கள்.

ஆனால் இமாம் ஷவ்கானீ என்ன கூறுகிறார் என்பதை சரியாகப் படிக்காத அரைகுறைகள் இந்த ஹதீஸின் அடிப்படையை வைத்து இந்த ஹதீஸையே இமாம் ஷவ்கானீ மறுத்துள்ளார் என்று கிறுக்குத் தனமாக உளறியுள்ளனர். இமாம் ஷவ்கானி என்ன கூறியுள்ளார் என்பதைப் பற்றி நாம் காண்போம்.

‘உண்மைக்கு ஒத்துப்போகும் ஒரு செய்தி என்னிடம் இருந்து (நான் கூறியதாக) உங்களுக்கு அறிவிக்கப்பட்டால் அது நான் அறிவித்ததாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்”

என்று நபியவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கும் செய்தியை ஷவ்கானீ தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார். பிறகு இதனுடைய அறிவிப்பாளர் தொடர் சரியில்லை என்று குறிப்பிடுகிறார்.

பிறகு இதே கருத்தில் அறிவிக்கப்பட்ட இன்னும் இரண்டு செய்திகளைக் கூறுகிறார். அதன் பிறகு இந்தச் செய்திகள் நபியின் மீது பொய்யுரைக்கலாம் என்ற கருத்தை தருகிறது. நபியின் மீது பொய்யுரைக்கக் கூடாது என்ற கருத்தில் வரும் நபிமொழிக்கு எதிராகவும் உள்ளது. இப்னுல் ஜவ்சி அவர்கள் இந்தச் செய்திகளை தம்முடைய “மவ்லூஆத்” (இட்டுக்கட்டப்பட்ட செய்திகள்) என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதும் சரியானதே எனக் கூறிவிட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

(الفوائد المجموعة (ص: ١٨٢

ومع هذا: فقد أخرج أحمد في مسنده بإسناد قيل: إنه على شرط الصحيح بلفظ: إذا سمعتم الحديث عني حديث تعرفه قلوبكم وتلين له أشعاركم وأبشاركم، وترون أنه قريب فأنا أولاكم به، وإذا سمعتم الحديث عنى تنكره قلوبكم وتنفر منه أشعاركم وأبشاركم، وترون أنه منكم بعيد فأنا أبعدكم منه . وهذا: وإن كان يشهد لذلك الحديث لكني أقول: أنكره قلبي، وشعري، وبشرى، وظننت أنه بعيد من رسول الله صَلَّى اللَّهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ.



இத்துடன் அஹ்மத் அவர்கள் ஸஹீஹுடைய நிபந்தனைக்கு உட்பட்டது என்று கூறப்பட்ட அறிவிப்பாளர் தொடரில் தன்னுடைய முஸ்னதில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார். என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்களது உள்ளங்கள் ஒத்துக் கொள்ளுமானால், இன்னும் உங்கள் தோல்களும் முடிகளும் (அதாவது உங்கள் உணர்வுகள்) அச்செய்திக்குப் பணியுமானால், இன்னும் அச்செய்தி உங்களு(டைய வாழ்க்கை)க்கு நெருக்கமாக இருப்பதாக நீங்கள் கருதினால் அதைக் கூறுவதில்) நானே உங்களில் மிகத் தகுதி வாய்ந்தவன்.

என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்கள் உள்ளம் வெறுக்குமானால், இன்னும் உங்களது தோல்களும் முடிகளும் (அதற்குக் கட்டுப்படாமல் அதை விட்டு) விரண்டு ஓடுமானால் இன்னும் அச்செய்தி உங்களு(டைய வாழ்க்கை)க்கு (சாத்தியப்படுவதை விட்டும்) தூரமாக இருப்பதாக நீங்கள் கருதினால் உங்களில் நானே அதை விட்டும் மிக தூரமானவன்.

இந்த ஹதீஸ் (முன்னர் கூறப்பட்ட) அந்த ஹதீஸிற்கு துணைச்சான்றாக இருந்தாலும் என்னுடைய உள்ளமும், என்னுடைய முடியும், என்னுடைய தோலும் (முன்னர் கூறப்பட்ட) அந்த ஹதீஸை மறுக்கிறது. அது நபிகள் நாயகத்தை விட்டும் மிகத் தூரமானது என்றே நான் எண்ணுகிறேன். என்று ஷவ்கானீ கூறுகிறார்.

நூல் : அல்ஃபவாயிதுல் மஜ்மூஆ பக்கம் 289

இமாம் ஷவ்கானீ அஹ்மதில் இடம் பெறும் நபிமொழியை ஸஹீஹ் என்று கூறியதுடன் மட்டுமல்லாமல் அதனை அடிப்படையாக வைத்து அதற்கு முன்னர் கூறப்பட்ட இரண்டு செய்திகளைத்தான் மறுக்கின்றார்.

ஆனால் சில அரைகுறைகள் ஷவ்கானீயின் வார்த்தைகளை சரியாகக் கவனிக்காகமல் இந்த ஹதீஸின் அடிப்படையிலேயே இந்த ஹதீஸை ஷவ்கானீ மறுத்துள்ளார் என்று உளறிக் கொட்டியுள்ளனர்.

ஆனால் இமாம் ஷவ்கானீ அவர்களின் நூலிற்கு, கீழே எழுதப்பட்டுள்ள அடிக்குறிப்பை எடுத்துக்காட்டி அதனை இமாம் ஷவ்கானியின் கூற்றாக மக்களிடம் படம் காட்டி வருகின்றனர். ஆனால் இந்த ஹதீஸ் ஸஹீஹ் அந்தஸ்தில் உள்ளது என்பதே இமாம் ஷவ்கானியின் நிலை என்பது மேற்கண்ட சான்றிலிருந்து தெளிவாகிவிட்டது.

# வழிகேடர்களின் வழிமுறையா?


- முஃதஸிலாக்களின் வழியில் பயணிப்பவர்கள் யார்? 73
- “அஹ்லுல் குர்ஆன்”களின் வழியா? 81
- நபி வழியா? புது வழியா? 89




## குர்ஆன், சுன்னா வழியா? அல்லது முஃதஸிலாக்களின் வழியா?

ஒரு செய்தி குர்ஆனுக்கு முரண்பட்டால் அதன் அறிவிப்பாளர் தொடர் சரியாக இருப்பினும் அது ஆதாரத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாத செய்தி என்ற எமது நிலை வழிகெட்ட பிரிவினர்களுள் ஒரு பிரிவான முஃதஸிலாக்கள் கடைப்பிடித்த வழிமுறை என்று நமக்கு மாற்றுக் கருத்திலிருப்பவர்கள் பிரச்சாரம் செய்வதை பார்த்து வருகிறோம்.

முஃதஸிலாக்கள் கடைப்பிடித்ததால் இதை நாம் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, இந்த வழிமுறைக்கு குர்ஆனிலும் நபிமொழியிலும் தக்க ஆதாரம் இருப்பதால்தான் கடைப்பிடிக்கிறோம் என்பதை தெளிவாக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ இன்னுமொரு அமைப்பின் வழியில் செல்கிறது என்று விமர்சிப்பதாக இருந்தால் குறிப்பிட்ட அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை பின்பற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஒருவர் தரீக்கா கொள்கையுடையவர் என்று விமர்சிப்பதாக இருந்தால் தரீக்காவாதிகளின் அடிப்படைக் கொள்கையை அவர் ஆதரிப்பவராக இருக்க வேண்டும்.

தர்கா வழிபாடு, தகடு, தட்டு, தாயத்து, தர்கா, கந்தூரி உள்ளிட்ட அனைத்து இணைவைப்பான காரியங்கள் அனைத்தையும் ஆதரிக்கக்கூடிய நபரை தரீக்காவாதி, வழிகெட்டவர் என்று சொல்லலாம்.

ஆனால் இதில் எதையும் ஆதரிக்காமல் அல்லாஹ் ஒருவன் என்று நம்புபவரை குறித்து அவர் தரீக்காவை சேர்ந்தவர் என்றால் அது தவறான போக்காகும்.

இன்று தவ்ஹீத் ஜமாஅத், முஃதஸிலாக்களின் வழியில் செல்வதாக விமர்சிப்பதாக இருந்தால் முஃதஸிலாக்களின் கொள்கையை தவ்ஹீத் ஜமாஅத் பின்பற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

எனவே முஃதஸிலாக்கள் என்பவர்களது கொள்கை என்ன என்பதையும் அந்த கொள்கைகளை நாம் பின்பற்றுகிறோமா? என்பதையும் அறிந்து

கொள்ள வேண்டும்.

**முஃதஸிலாக்களின் கொள்கைகள்.**

1. அல்லாஹ்வைப் போல் எதுவும் இல்லை என்பதை தலைகீழாகப் புரிந்து கொண்டு அவனது உருவம் குறித்து வரும் வசனங்களுக்கு வியாக்கியானம் கொடுத்து அது குறித்த நபிமொழிகளை மறுத்து அவனது பண்புகளை மறுத்தல்.
2. அல்லாஹ் அநீதி இழைக்கமாட்டான் என்று கூறி விதியை மறுத்தல்.
3. பெரும் பாவம் செய்தவன் முஸ்லிமும் இல்லாமல், காபிரும் இல்லாமல் இரண்டுக்கு மத்தியில் ஒரு நிலையிலிருக்கிறான் என்று வாதிடல்.
4. நன்மையை ஏவி தீமையை தடுப்பது என்ற பெயரில் அநியாய ஆட்சிக்காரனை எதிர்த்து புரட்சி செய்தல்.
5. அல்லாஹ் வாக்குமீறமாட்டான் என்ற பெயரில் பெரும்பாவம் செய்தவனுக்கு நிரந்தர நரகம் என்று கூறல்.

இவைதான் முஃதஸிலாக்களின் அடிப்படை என்று பல நூற்களில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கைகள் அனைத்தும் வழிகேடு என்றும் இதில் ஒன்று கூட தவ்ஹீத் ஜமாஅத்தின் கொள்கை அல்ல என்றும் தெரிந்து கொண்டே, இதை எதிர்த்து பிரச்சாரம் செய்யும் நம்மையே முஃதஸிலாக்கள் வழியில் செல்கின்றனர் என்று விமர்சிப்பது விந்தையிலும் விந்தை.

ஒரு வாதத்துக்கு இது முஃதஸிலாக்கள் கடைப்பிடித்த வழிமுறை என்று வைத்துக் கொண்டாலும் அது ஏகத்துவவாதிக்கு எந்தத் தயக்கத்தையும் ஏற்படுத்தாது.

அந்த வழிமுறை குர்ஆனிலும், நபி வழியிலும் காணப்பட்டால் அது சரியான வழிமுறைதான்.

முஃதஸிலாக்கள் கடைப்பிடித்தார்கள் என்பதற்காக அதை வழிகேடு என்று முடிவு செய்யலாமா?

அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ என்ற பெயர் தாங்கிய பிரிவினர் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டனர் என்பதற்காக அதை சரியான கருத்து என்று முடிவு செய்வதா?

ஒன்றைச் சரி என்றும், ஒன்றை தவறு என்றும் பிரித்துப்பார்த்து அறிந்து



கொள்வதற்கான அளவு கோல் என்ன என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு கருத்து முன்வைக்கப்படும் போது அந்தக் கருத்தை கவனித்து அந்தக் கருத்து குர்ஆனுக்கு உடன்பாடான கருத்தா? ஹதீஸுக்கு உடன்பாடான கருத்தா என்று கவனிப்பதா? அல்லது இந்தக் கருத்தைச் சொன்னவர் யார் என்று கவனித்து அந்த கருத்து சரி, அல்லது தவறு என்று முடிவு செய்வதா? எந்த வழிமுறை சரியான வழிமுறை என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரமளானுடைய ஸகாத் பொருளைப் பாதுகாத்திடும் பொறுப்பை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்போது (இரவில்) ஒருவன் வந்து அந்த (ஸகாத்) உணவுப் பொருளை அள்ளலானான். உடனே, நான் அவனைப் பிடித்துக் கொண்டேன் ''உன்னை அல்லாஹ்வின் தூதரிடம் இழுத்துச் சென்று முறையிடுவேன்'' என்று கூறினேன். இறுதியில் அவன், ''நீங்கள் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸீயை ஓதுங்கள். (அவ்வாறு ஓதினால்) உங்களுடன் பாதுகாவலர் (வானவர்) ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார். காலை நேரம் வரும் வரை ஷைத்தான் உங்களை நெருங்க மாட்டான்'' என்று என்னிடம் சொன்னான். (இதை நபி (ஸல்) அவர்களிடம் சொன்னபோது,) **''அவன் பொய்யனாயிருந்தும், உங்களிடம் உண்மை பேசியுள்ளான். அவன் ஷைத்தான்தான்''** என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) அவர்கள்
நூல் : புகாரி 3275

இந்த ஹதீஸில் ஒரு மனிதன் கெட்டவனாக இருந்தாலும் அவன் சொன்னது உண்மை என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு மனிதன் கெட்டவனாக, வழிகேடனாக இருந்தாலும் அவன் சொல்லும் செய்தி குர்ஆனில் இருந்தால் அல்லது நபி மொழிகளில் இருந்தால் அந்தச் செய்தியை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஒரு மனிதன் வழிகெட்டவனாக இருப்பதால் அவன் சொல்லும் எதையும் ஏற்கமாட்டேன் என்றும் ஒரு மனிதர் நேர்வழி பெற்றவர் என்று அடையாளம் காணப்பட்டால் அவர் சொல்வது அனைத்தும் சரி என்றும் நம்புவது வழிகேடு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**இமாம் புகாரி வழிகேடரா?**

ஒருவர் வழிகேடராக இருப்பதால் அவர் நூறு வீதம் புறக்கணிக்கப்பட வேண்டியவர் என்ற கருத்து தவறு என்ற சரியான நிலைப்பாட்டில் இமாம்

புகாரி அவர்கள் இருந்ததால்தான் ஸஹீஹுல் புகாரி என்ற அவரது கிரந்தத்தில் ஷீயாக்கள், முர்ஜியாக்கள் போன்ற பல வழிகெட்டவர்களின் அறிவிப்பைக்கூட பதிவு செய்திருக்கிறார்கள்.

எனவே அத்தகைய நபிமொழிகளை ஏற்கமாட்டோம் என்று அறிவிக்க இந்த அதிமேதாவிகள் தயாரா?

இந்த உலகில் வாழ்ந்து மறைந்த எந்த அறிஞராக இருந்தாலும் அவரிடம் சில தவறுகள் இருக்கும். இதனால் அவர்கள் வழிகேடர்கள் என்று அழைக்கப்பட மாட்டார்கள்.

நேர்வழியில் உள்ளவர்கள் என்று கருதப்படும் சுன்னத் வல் ஜமாஅத் அறிஞர்கள் என அழைக்கப்படும் எத்தனையோ இமாம்களிடம் பல தவறான கொள்கைகள் இருந்துள்ளன. இதனால் அவர்களை யாரும் வழிகேடர்கள் என்று முத்திரை குத்தவில்லை.

மத்ஹபைப் பின்பற்றுவது வழிகேடு! அதைப் பின்பற்றுபவர்கள் வழிகேடர்கள் என்று நாமும், நம்மை முஃதஸிலாக்கள் என்று விமர்சிக்கும் மற்ற அறிஞர்களும் கடுமையாகப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

ஆனால், நாம் அனைவரும் நல்ல அறிஞர்கள் என்று ஏற்றிருக்கும் பல முன்னைய அறிஞர்கள் மத்ஹப்வாதிகளாக இருந்திருக்கிறார்கள்.

இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ, இமாம் நவவீ போன்றோர்கள் ஷாஃபீ மத்ஹபைப் பின்பற்றியோர் என்பது உலகறிந்த உண்மை!

இன்று நம்மை முஃதஸிலாக்கள் என்று விமர்சிக்கும் யாரும் அவர்களை வழிகேடர்கள் என்று புறக்கணிக்காமல் அவர்களது கூற்றை ஆதாரமாகக் காட்டுவதைப் பார்க்கிறோம்.

ஏன் இந்த இரட்டை நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும்? அவர்களுக்கு ஒரு நீதி, நமக்கு ஒரு நீதி என்று ஏன் பாரபட்சம் காட்டுகிறார்கள்?

குர்ஆனுக்கு முரண்பட்டால் அதை மறுக்க வேண்டும் என்பதை முஃதஸிலாக்கள் கடைப்பிடித்தார்கள். எனவே அதை நாமும் கடைப்பிடிப்பதால் நம்மையும் முஃதஸிலாக்கள் என்று கூறுபவர்கள், அந்த முஃதஸிலாக்களின் வழிகெட்ட அடிப்படை கொள்கைகளில் சிலவற்றை தங்கள் கொள்கையாக கொண்ட சுன்னத் வல் ஜமாஅத் என்று அறியப்பட்ட சில அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் முஃதஸிலாக்கள் என்று இவர்கள் விமர்சிப்பார்களா?



அல்லாஹ்வின் உருவம் குறித்து வரும் வசனங்களையும், நபிமொழிகளையும் இஸ்லாமிய அகீதாவுக்கு மாற்றமாக வராதவரை எந்தவித மாற்று விளக்கமும் கொடுக்காமல் அப்படியே நம்ப வேண்டும் என்பதுதான் சரியான நடைமுறை.

அல்லாஹ்வின் உருவம் குறித்து வரும் அத்தனை செய்திகளுக்கும் வியாக்கியானம் கொடுப்பது முஃதஸிலாக்களின் அடிப்படைக் கொள்கை! ஆனால் இந்த வழிமுறையை பல அறிஞர்கள் கையாண்டு இருக்கிறார்கள்.

**இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானீ**

(فتح الباري – ابن حجر – (٣/ ٠٣

قوله ينزل ربنا إلى السماء الدنيا استدل به من أثبت الجهة وقال هي جهة العلو - 1094
وأنكر ذلك الجمهور لأن القول بذلك يفضى إلى التحيز تعالى الله عن ذلك وقد اختلف في
معنى النزول على أقوال فمنهم من حمله على ظاهره وحقيقته وهم المشبهة تعالى الله عن قولهم

அல்லாஹ் இரவின் கடைசிப்பகுதியில் முதல் வானத்துக்கு இறங்கி வருகிறான் என்பதை மறுத்து அதை அப்படியே நம்பவது இணை கற்பிக்கும் செயல் என்று இமாம் இப்னு ஹஜர் கூறுகிறார். இவரை முஃதஸிலாக்கள் வழியில் சென்றவர் என்றோ அல்லது முஃதஸிலாக்களின் சிந்தனையில் பாதிக்கப்பட்டவர் என்றோ இவர்கள் கூறுவார்களா?

(فتح الباري – ابن حجر – (١/ ٨٠٢

قوله أطولهن يدا أي اسمحهن ووقع ذكر اليد في القرآن والحديث مضافا إلى الله تعالى واتفق
أهل السنة والجماعة على أنه ليس المراد باليد الجارحة التي هي من صفات المحدثات وأثبتوا
ما جاء من ذلك وآمنوا به فمنهم من وقف ولم يتأول ومنهم من حمل كل لفظ منها على المعنى
الذي ظهر له وهكذا عملوا في جميع ما جاء من أمثال ذلك

அல்லாஹ்வின் கை என்பதை அப்படியே புரிந்து கொள்ளக்கூடாது என்ற கருத்தில் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் ஒன்றுபட்டு இருக்கிறார்கள் என்று இமாம் இப்னு ஹஜர் கூறுகிறார். இப்போது இவரையும் அந்த அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களையும் முஃதஸிலாக்கள் வழியில் சென்றவர் என்றோ அல்லது முஃதஸிலாக்களின் சிந்தனையில் பாதிக்கப்பட்டவர் என்றோ இவர்கள் கூறுவார்களா?

(فتح الباري لابن حجر (٣١/ ٩٨٣
وَقَوْلُهُ تَعَالَى تَجْرِي بِأَعْيُنِنَا أَيْ بِعِلْمِنَا
(فتح الباري لابن حجر (١١/ ٣:
وَتَمَسَّكَ قَائِلُ ذَلِكَ بِمَا وَرَدَ فِي بَعْضِ طُرُقِهِ عَلَى صُورَةِ الرَّحْمَنِ وَالْمُرَادُ بِالصُّورَةِ الصِّفَةُ وَالْمَعْنَى
أَنَّ اللَّهَ خَلَقَهُ عَلَى صِفَتِهِ مِنَ الْعِلْمِ وَالْحَيَاةِ وَالسَّمْعِ وَالْبَصَرِ وَغَيْرِ ذَلِكَ وَإِنْ كَانَتْ صِفَاتُ اللَّهِ
تَعَالَى لَا يُشْبِهُهَا شَيْءٌ

இவ்வாறு அல்லாஹ்வின் உருவம் குறித்து வரக்கூடிய இடங்களில் அதற்கு வியாக்கியானம் கொடுக்கும் முஃதஸிலாக்களின் கொள்கையை நடைமுறைப்படுத்தியிருக்கிறார். எனவே இவரையும் இனி முஃதஸிலா என்று பிரச்சாரம் செய்ய இவர்கள் தயாரா?

**இமாம் இஸ்மாயீலீ**

فتح الباري لابن حجر (٨ / ٤٦٦):
(قوله باب يوم يكشف عن ساق
أَخْرَجَ أَبُو يَعْلَى بِسَنَدٍ فِيهِ ضَعْفٌ عَنْ أَبِي مُوسَى مَرْفُوعًا فِي قَوْلِهِ يَوْمَ يُكْشَفُ عَنْ سَاقٍ قَالَ عَنْ نُورٍ عَظِيمٍ فَيَخِرُّونَ لَهُ سُجَّدًا وَقَالَ عَبْدُ الرَّزَّاقِ عَنْ مَعْمَرٍ عَنْ قَتَادَةَ فِي قَوْلِهِ يَوْمَ يكشف عَنْ سَاقٍ قَالَ عَنْ شِدَّةِ أَمْرٍ وَعِنْدَ الْحَاكِمِ مِنْ طَرِيقِ عِكْرِمَةَ عَنِ بن عَبَّاسٍ قَالَ هُوَ يَوْمُ كَرْبٍ وَشِدَّةٍ قَالَ الْخَطَّابِيُّ فَيَكُونُ الْمَعْنَى يَكْشِفُ عَنْ قُدْرَتِهِ الَّتِي تَنْكَشِفُ عَنِ الشِّدَّةِ وَالْكَرْبِ وَذَكَرَ غَيْرُ ذَلِكَ مِنَ التَّأْوِيلَاتِ كَمَا سَيَأْتِي بَيَانُهُ عِنْدَ حَدِيثِ الشَّفَاعَةِ مُسْتَوْفًى فِي كِتَابِ الرِّقَاقِ إِنْ شَاءَ اللَّهُ تَعَالَى وَوَقَعَ فِي هَذَا الْمَوْضِعِ يَكْشِفُ رَبُّنَا عَنْ سَاقِهِ وَهُوَ مِنْ رِوَايَةِ سَعِيدِ بْنِ أَبِي هِلَالٍ عَنْ زَيْدِ بْنِ أَسْلَمَ فَأَخْرَجَهَا الْإِسْمَاعِيلِيُّ كَذَلِكَ ثُمَّ قَالَ فِي قَوْلِهِ عَنْ سَاقِهِ نَكِرَةٌ ثُمَّ أَخْرَجَهُ مِنْ طَرِيقِ حَفْصِ بْنِ مَيْسَرَةَ عَنْ زَيْدِ بْنِ أَسْلَمَ بِلَفْظِ يُكْشَفُ عَنْ سَاقٍ قَالَ الْإِسْمَاعِيلِيُّ هَذِهِ أَصَحُّ لِمُوَافَقَتِهَا لَفْظَ الْقُرْآنِ فِي الْجُمْلَةِ لَا يُظَنُّ أَنَّ اللَّهَ ذُو أَعْضَاءٍ وَجَوَارِحَ لِمَا فِي ذَلِكَ مِنْ مُشَابَهَةِ الْمَخْلُوقِينَ تَعَالَى اللَّهُ عَنْ ذَلِكَ لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ

மறுமைநாளில் அல்லாஹ் தனது கெண்டைக்காலைத் திறப்பான் என்ற வசனத்துக்கு அப்துர் ரஸ்ஸாக், ஹாகிம், கத்தாபீ, இஸ்மாயீலீ உள்ளிட்டோர் அனைவரும் வெவ்வேறு வியாக்கியானம் கொடுத்து இருப்பதாக இப்னு ஹஜர் எடுத்துக்காட்டுகிறார். எனவே இவர்களையும் முஃதஸிலா பட்டியலில் சேர்ப்பார்களா இந்த நவீன வரலாற்று ஆய்வாளர்கள்?

**இமாம் இப்னு குஸைமா**

سير أعلام النبلاء ط الرسالة (١٤ / ٣٧٣):
وَلابْنِ خُزَيْمَةَ عَظَمَةٌ فِي النُّفُوْسِ، وَجَلاَلَةٌ فِي القُلُوْبِ؛ لِعِلْمِهِ وَدِيْنِهِ وَاتِّبَاعِهِ السُّنَّةَ. وَكِتَابُهُ فِي (التَّوحِيدِ) مُجَلَّدٌ كَبِيْرٌ، وَقَدْ تَأَوَّلَ فِي ذَلِكَ حَدِيْثَ الصُّورَةِ (١) . فَلْيَعْذُرْ مَنْ تَأَوَّلَ بَعْضَ الصِّفَاتِ، وَأَمَّا السَّلَفُ، فَمَا خَاضُوا فِي التَّأْوِيْلِ، بَلْ آمَنُوا وَكَفُّوا، وَفَوَّضُوا عِلْمَ ذَلِكَ إِلَى اللهِ وَرَسُوْلِهِ، وَلَوْ أَنَّ كُلَّ مَنْ أَخْطَأَ فِي اجْتِهَادِهِ - مَعَ صِحَّةِ إِيْمَانِهِ، وَتَوَخِّيْهِ لاتِّبَاعِ الحَقِّ - أَهْدَرْنَاهُ، وَبَدَّعنَاهُ، لَقَلَّ مَنْ يَسلَمُ مِنَ الأَئِمَّةِ مَعَنَا، رَحِمَ اللهُ الجَمِيْعَ بِمَنِّهِ وَكَرَمِهِ

ஸஹீஹ் இப்னு குஸைமா என்ற ஹதீஸ் நூலைத் தொகுத்த இமாம் இப்னு குஸைமா அவர்கள் அல்லாஹ்வின் உருவம் குறித்து வரக்கூடிய நபிமொழிகளுக்கு வியாக்கியானம் கொடுத்தவர் என்று இமாம் தஹபீ கூறுகிறார். எனவே இவரையும் முஃதஸிலா என்று கூறி இவரது நபிமொழி



தொகுப்பை நிராகரித்துவிடுவார்களா?

**இமாம் நஸாயீ**

سير أعلام النبلاء ط الرسالة (١٤ / ١٣٣):
قُلْتُ: هَذَا أَصحُّ، فَإِنَّ ابْنَ يُوْنُسَ حَافِظٌ يَقِظٌ وَقَدْ أَخَذَ عَنِ النَّسَائِيِّ، وَهُوَ بِهِ عَارِفٌ.
وَلَمْ يَكُنْ أَحَدٌ فِي رَأْسِ الثَّلاَثِ مائَةٍ أَحْفَظَ مِنَ النَّسَائِيِّ، هُوَ أَحْذَقُ بِالحَدِيْثِ وَعِلَلِهِ وَرِجَالِهِ مِنْ مُسْلِمٍ، وَمِنْ أَبِي دَاوُدَ، وَمِنْ أَبِي عِيْسَى، وَهُوَ جَارٍ فِي مِضْمَارِ البُخَارِيِّ، وَأَبِي زُرْعَةَ إِلاَّ أَنَّ فِيْهِ قَلِيْلَ تَشَيُّعٍ وَانْحِرَافٍ عَنْ خُصُومِ الإِمَامِ عَلِيٍّ، كَمُعَاوِيَةَ وَعَمْرٍو، وَاللهُ يُسَامِحُهُ

ஸிஹாஹுஸ் ஸித்தா என்று அழைக்கப்படும் பிரபல நபிமொழி தொகுப்புகளில் ஒன்றான சுனனுன் நஸாயீ என்ற நூலைத் தொகுத்த, ஹதீஸ் கலையில் அறிவிப்பாளர்களை எடைபோடுவதில் முதஷத்ததித் (கடும்போக்குடையவர்) என்று பெயர் பெற்ற இமாம் நஸாயீ அவர்கள் ஷீயாக் கொள்கையில் தாக்கமுற்றவர் என்று இமாம் தஹபீ எடுத்துக்காட்டுகிறார்.

எனவே இமாம் நஸாயீ ஷீயா என்று கூறி அவரது நபிமொழி தொகுப்பை எரித்துவிட இவர்கள் முன்வருவார்களா?

**இமாம் இப்னு தைமிய்யா**

فالجن تأتيه بما يريد من صورة أو مال أو قتل عدوه والإنس تطيع الجن فتارة يسجد له وتارة لما يأمره بالسجود له وتارة يمكنه من نفسه فيفعل به الفاحشة وكذلك الجينات منهن من يريد من الإنس الذي يخدمنه ما يريد نساء الإنس من الرجال وهذا كثير في رجال الجن ونسائهم فكثير من رجالهم ينال من نساء الإنس ما يناله الإنسي وقد يفعل ذلك بالذكران
(தகாயிகுத் தஃப்ஸீர் பாகம் : 2 பக்கம் : 137)

ஜின்கள் மனிதனுக்குக் கட்டுப்பட்டு அவன் கேட்பதையெல்லாம் செய்யும் என்றும், மனிதனுக்கும் ஜின்னுக்கும் இடையில் பாலியல் தொடர்பு கூட காணப்படும் என்றெல்லாம் இமாம் இப்னு தைமிய்யா எழுதி வைத்திருக்கிறாரே, இதற்கு குர்ஆனிலோ அல்லது நபிமொழிகளிலோ எந்த ஆதாரத்தையாவது காட்ட முடியுமா?

சலபுகளின் வழி நேர்வழி, அவர்கள் சொல்வதுதான் சரியான வழி! என்று, குருட்டுத்தனமாக மக்களை வழிகெடுக்கும் சலபு அறிஞர்கள் இதற்கு என்ன சொல்லப்போகிறார்கள்?

இவையெல்லாம் சிறிய உதாரணங்கள் மட்டும்தான். இது போன்று

அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ அறிஞர்கள் என்றும் சலபுகள் என்றும் கருதப்படும் பல அறிஞர்களிடம் பல வழிகேடான கருத்துகள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் அங்கீகரித்து விடலாமா?

எனவே, ஒரு கருத்து சத்தியம் என்றும் இன்னுமொரு கருத்து அசத்தியம் என்றும் அமைப்பின் பெயரையோ, அதைச் சொல்லும் நபரையோ கருத்திற்கொண்டு முடிவு செய்வது வழிகேடான அளவுகோலாகும்.

ஒரு கருத்து குர்ஆனுக்கும், நபிமொழிக்கும் உடன்பட்டு நிற்குமானால் அதை எவ்வளவு பெரிய வழிகேடன் சொன்னாலும், ஷைத்தான் சொன்னாலும் அதை ஏற்பதுதான் ஒரு முஃமின் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை என்பதை முதலில் நன்கு ஆழமாக மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நம்மை முஃதஸிலா என்று விமர்சிப்பவர்கள், இது போன்று முன்னைய அறிஞர்களை மட்டும் விமர்சிக்காமல் அவர்களைப் பாராட்டுவது அவர்கள் கூற்றில் உண்மையாளர்கள் இல்லை என்பதையும் நம்மீது உள்ள அளவு கடந்த காழ்ப்புணர்வினால்தான் இவ்வாறு விமர்சனம் செய்கிறார்கள் என்பதையும் மக்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

**தவ்ஹீதா? தக்லீதா?**

இமாம்களைப் பின்பற்றுவது வழிகேடு என்று ஒரு காலத்தில் பிரச்சாரம் செய்தவர்கள் தற்போது இந்த கருத்தை எந்த இமாம் சொல்லியிருக்கிறார் என்று இமாம்களின் பட்டியலைக் கேட்டு நிற்பதைப் பார்க்கிறோம்.

எனவே, உண்மையில் இவர்கள்தான் தடம்புரண்டு வழிகேட்டின் அதள பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களே நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

நாம் சொல்லும் இந்த விதியை எந்த இமாம் சொல்லாவிட்டாலும் நாம் சொல்வது குர்ஆன் ஹதீஸிலுள்ளது எனவே இந்த வழிமுறை சரியான வழிமுறைதான்.

இருப்பினும் குர்ஆனுக்கு முரண்பட்டால் அந்தச் செய்தி மறுக்கப்பட வேண்டியது என்ற நிலையை நமக்கு முன் வாழ்ந்த பல நல்ல அறிஞர்களும், நபித்தோழர்களும் நடைமுறைப்படுத்திக் காட்டி இருக்கிறார்கள் என்பதை தகவலுக்காக எடுத்துக் காட்டுகிறோம்.



# “அஹ்லுல் குர்ஆன்”களின் வழியா?

அல்குர்ஆனுக்கு முரண்படும் செய்திகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று நாம் கூறும் போது நம்மை எதிர்ப்பவர்கள் நம் மீது சுமத்தும் இன்னொரு குற்றச்சாட்டு “இவர்கள் ஹதீஸ்களை மறுத்த அஹ்லுல் குர்ஆன் என்ற வழிகெட்ட பிரிவினரின் கருத்துக்களைத் தான் முன் வைக்கின்றார்கள்” என்பதாகும்.

இவர்களின் இந்த விமர்சனத்திற்குரிய பதிலையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாம் தெளிவான மார்க்கம். உலகின் நவீனப் பிரச்சினைகள் அனைத்திற்கும் இந்த மார்க்கத்தில் தீர்வு உண்டு. விஞ்ஞானத்திற்கு முரண்படாத ஒரு மார்க்கம் இன்று உலகில் உண்டு என்றால் அது இஸ்லாம் தான்.

இருந்தாலும் இஸ்லாத்திற்குள்ளேயே பல பிரிவுகள் இருப்பதைப் பார்க்கிறோம். இஸ்லாத்தை அரைகுறையாகப் புரிந்து கொள்வதால் கொள்கையின் அடிப்படையில் பல பிரிவுகளாக முஸ்லிம்கள் பிரிந்துள்ளார்கள். உலக ஆதாயங்களுக்காகவும், சுயநலனுக்காகவும் கூட சிலர் இஸ்லாத்திற்குள் பிரிவினையை ஏற்படுத்தி உள்ளனர்.

ஒவ்வொரு பிரிவினரும் தங்களது கருத்துக்களை நிலைநாட்டுவதற்கு குர்ஆனிலிருந்து ஆதாரங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். இந்த ஆதாரங்களை மேலோட்டமாகப் பார்க்கும் போது அவர்களுடைய கருத்து நியாயமானதாகத் தோன்றினாலும் குர்ஆனை முழுமையாக முறைப்படி ஆராய்ந்தால் இஸ்லாத்தில் பிரிவுக்கு இடமில்லை என்பதை விளங்கலாம்.

“இஸ்லாத்தின் மூல ஆதாரம் குர்ஆன் மட்டுமே” என்ற கொள்கை இந்தப் பல்வேறு பிரிவுகளில் ஒன்றாகும்.

இஸ்லாமியக் குடியரசின் தலைவராக இருந்த உஸ்மான் (ரலி) அவர்கள் தலைநகரமான மதீனாவில் கொல்லப்பட்டார்கள். அதன் பின் அலீ (ரலி) அவர்கள் அதிபராகத் தேர்வு செய்யப்பட்டனர். பெரும்பாலான மக்களின் ஆதரவு அலீ (ரலி) அவர்களுக்கு இருந்தாலும் அவர்களை எதிர்ப்பவர்களும்

கணிசமான எண்ணிக்கையில் இருந்தனர்.

அலீ (ரலி) அவர்களை எதிர்த்தவர்கள் ஒரே நிலைபாட்டில் இருக்கவில்லை. உஸ்மான் (ரலி) கொல்லப்பட்டதில் அலீ (ரலி) அவர்களுக்குத் தொடர்பும், ஒத்துழைப்பும் இருந்தது என்பது சிலரது நிலைபாடாக இருந்தது.

"உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையில் அலீ (ரலி) அவர்களுக்குத் தொடர்போ, உடன்பாடோ இல்லை: ஆயினும் கொலையாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதில் அலீ (ரலி) தயக்கம் காட்டுகிறார்: கொலையாளிகளிடம் கருணையுடன் நடந்து கொள்கிறார்" என்பது மற்றும் சிலரின் நிலைபாடாக இருந்தது. ஆயிஷா (ரலி), முஆவியா (ரலி) போன்றவர்கள் இந்த நிலைபாட்டில் இருந்தனர்.

அலீ (ரலி) அவர்களின் ஆதரவாளர்களின் நிலையும் ஒன்றுபட்டதாக இருக்கவில்லை. அலீ (ரலி) அவர்களின் மீது முழு நம்பிக்கை வைத்து அவர்களைத் தகுதியான தலைவர் என நம்பியவர்களும் அவர்களில் இருந்தனர். உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையில் சம்மந்தப்பட்டு தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆதரவாளர்களாக நடித்தவர்களும் இருந்தனர்.

உஸ்மான் (ரலி) அவர்களின் உறவினரும், அவர்களால் சிரியாவின் ஆளுனராக நியமிக்கப்பட்டவருமான முஆவியா (ரலி) அவர்கள் அலீ (ரலி) அவர்களின் தலைமையை ஏற்க மறுத்தார்கள். சிரியாவைத் தனி நாடாக்கி அதன் அதிபராகத் தம்மை அறிவித்துக் கொண்டார்கள்.

முஆவியா (ரலி) அவர்களின் கீழ் உள்ள நிலப்பரப்புக்களை வென்று ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்காக அலீ (ரலி) அவர்கள் போர் தொடுத்தனர். "சிஃப்பீன்' என்ற இடத்தில் இரு படையினருக்கும் இடையில் போர் நடைபெற்றது.

இப்போரில் இரு தரப்பிலும் கடுமையான சேதம் ஏற்பட்டது. இதனைக் கண்டு கவலை கொண்ட நல்லவர்கள் இரு தரப்பிலும் இருந்தனர். இரு தரப்பும் ஒன்றுபடுவதற்கான சமாதான உடன்படிக்கை செய்து போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர்கள் முயற்சி செய்தனர்.

"இரண்டு தரப்பிலும் தலா ஒரு நடுவரை நியமித்து, அவ்விரு நடுவரும் பிரச்சனையை அலசி ஆராய்ந்து கூட்டாக நல்ல முடிவை எட்ட வேண்டும். அந்த முடிவை இரு தரப்பும் ஒப்புக் கொள்ள வேண்டும்" என்பது தான் அந்த



சமாதானத் திட்டம். இத்திட்டத்தை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்.

அதன் படி அலீ (ரலி) தரப்பில் அபூ மூஸா (ரலி) அவர்களும், முஆவியா (ரலி) தரப்பில் அம்ரு பின் ஆஸ் (ரலி) அவர்களும் நடுவர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த ஒப்பந்தம் இரு தரப்பிலும் இருந்த நன்மக்களுக்கு மகிழ்ச்சி அளித்தாலும் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்று விட்டு அலீ (ரலி) அவர்கள் அணியில் கலந்திருந்த கொலையாளிகளுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியது.

"இந்த ஒப்பந்தம் மூலம் சமுதாயம் ஒன்றுபட்டால் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்ற நாம் தப்பிக்க முடியாது" என அவர்கள் அஞ்சினார்கள். அதே நேரத்தில் சமாதான முயற்சியை நேரடியாக எதிர்த்தால் மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கும் நிலை ஏற்படும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். எனவே சமாதான முயற்சியை வேறொரு முகமூடி அணிந்து எதிர்க்கத் திட்டமிட்டார்கள்.

இஸ்லாமிய அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டுவதற்கு கொள்கைச் சாயம் பூச வேண்டிய நிர்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டது. இந்தச் சமாதான உடன்படிக்கை இஸ்லாத்துக்கு எதிரானது என்ற வாதத்தை எடுத்து வைத்து அலீ (ரலி) அவர்களையும், முஆவியா (ரலி) அவர்களையும் ஒரு சேர இவர்கள் எதிர்க்கலானார்கள். இவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் காரிஜிய்யாக்கள் (கலகக்காரர்கள்) எனப்படுகின்றனர்.

இந்த விஷக் கருத்துக்கு இவர்கள் எப்படி மார்க்கச் சாயம் பூசினார்கள் என்பதையும் விபரமாக அறிந்து கொள்வோம்.

அல்லாஹ்வைத் தவிர எவருக்கும் அதிகாரம் இல்லை.

(திருக்குர்ஆன் 6:57, 12:40, 12:67)

இந்த வசனங்களை ஆதாரமாகக் கொண்டு சமாதான உடன்படிக்கையை இவர்கள் எதிர்த்தனர். "அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே என்று குர்ஆன் கூறும் போது இரண்டு நடுவர்களுக்கு அதிகாரம் வழங்கி அவர்களின் முடிவை ஏற்பது குர்ஆனுக்கு முரண்" என்பது இவர்களின் வாதம்.

"அல்லாஹ்வைத் தவிர எவருக்கும் அதிகாரம் இல்லை" என்று குர்ஆன் கூறுவது உண்மை தான். ஆனால் இவர்கள் திசைதிருப்பும் கருத்தைத் தான் இவ்வசனங்கள் தருகின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை. எந்த அதிகாரம் தனக்கு உரியது என அல்லாஹ் உரிமை கொண்டாடுகிறானோ

அந்த அதிகாரம் பற்றியே இவ்வசனங்கள் கூறுகின்றன. எந்த அதிகாரங்களை மக்களுக்கு வழங்கியுள்ளதாக அல்லாஹ் கூறுகிறானோ அந்த அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவது இவ்வசனங்களுக்கு முரணாகாது.

மனிதர்களுக்கு மத்தியில் பிரச்சனைகள் ஏற்படும் போது மற்ற மனிதர்கள் தலையிட்டு தீர்ப்பு வழங்குவதையும், தீர்த்து வைப்பதையும் அல்லாஹ் அனுமதித்துள்ளான். பல்வேறு பிரச்சனைகளில் இவர்கள் கூட இதன் அடிப்படையில் செயல்படக் கூடியவர்களாக இருந்தனர்.

ஆயினும் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக மனசாட்சிக்கு விரோதமாக அவர்கள் இவ்வாறு வாதிட்டனர். இவர்களின் வாதம் மார்க்க அடிப்படையில் அமைந்தது தான் என்று சிலர் எண்ணி அவர்கள் பின்னே சென்றது தான் இதில் வேதனையான விஷயம். இவர்கள் வாதம் எவ்வளவு அபத்தமானது என்பதைப் பின் வரும் வசனங்கள் மூலம் அறியலாம்.

அவ்விருவரிடையே பிளவு ஏற்படும் என்று நீங்கள் அஞ்சினால் அவன் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும், அவள் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும் அனுப்புங்கள்! அவ்விருவரும் நல்லிணக்கத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவருக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவான். அல்லாஹ் அறிந்தவனாகவும், நன்றாகவே அறிந்தவனாகவும் இருக்கிறான்.

(திருக்குர்ஆன் 4:35)

அமானிதங்களை அதற்குரியோரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது நீதியாக நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். அல்லாஹ்வின் இந்த அறிவுரை உங்களுக்கு மிகவும் நல்லது. அல்லாஹ் செவியுறுபவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான்.

(திருக்குர்ஆன் 4:58)

அவர்கள் உம்மிடம் வந்தால் அவர்களிடையே நீர் தீர்ப்பு வழங்கலாம். அல்லது அவர்களை அலட்சியம் செய்யலாம். அவர்களை நீர் அலட்சியம் செய்தால் அவர்களால் உமக்கு எந்தத் தீங்கும் தர முடியாது. நீர் தீர்ப்பளித்தால் அவர்களிடையே நீதியான முறையில் தீர்ப்பளிப்பீராக! நீதி செலுத்துவோரை அல்லாஹ் விரும்புகிறான்.

(திருக்குர்ஆன் 5:42)



நம்பிக்கை கொண்டோரே! இஹ்ராமுடன் இருக்கும் போது வேட்டைப் பிராணிகளைக் கொல்லாதீர்கள்! உங்களில் எவரேனும் வேண்டுமென்றே அதைக் கொன்றால் அவர் கொன்ற பிராணியுடன் ஒத்துப் போகும் கால்நடை (ஆடு, மாடு ஒட்டகம் ஆகியவை) பரிகாரமாகும். அது கஅபாவைச் சென்றடைய வேண்டிய காணிக்கைப் பிராணி). அல்லது பரிகாரமாக ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். அல்லது அதற்கு ஈடான அளவு நோன்பு நோற்க வேண்டும். உங்களில் நீதியுடைய இருவர் இது பற்றித் தீர்ப்பளிக்க வேண்டும்.

(திருக்குர்ஆன் 5:95)

ஒரு சமுதாயத்தின் ஆடு (இன்னொரு சமுதாயத்தின்) விளை நிலத்தில் மேய்ந்த போது தாவூதும், ஸுலைமானும் தீர்ப்பளித்ததை நினைவூட்டுவீராக! அவர்களின் தீர்ப்புக்கு நாம் சாட்சியாக இருந்தோம்.

(திருக்குர்ஆன் 21:78)

வழக்குரைக்க வந்தோரின் செய்தி உமக்குத் தெரியுமா? தொழுமிடத்தைத் தாண்டி, தாவூதிடம் அவர்கள் வந்த போது அவர்களைக் கண்டு திடுக்குற்றார். “பயப்படாதீர்!’ நாங்கள் ஒருவர் மீது மற்றவர் வரம்பு மீறிய இரண்டு வழக்காளிகள். எங்களுக்கிடையே நியாயமான தீர்ப்பு வழங்குவீராக! தவறிழைத்து விடாதீர்! நேரான வழியில் எங்களை நடத்துவீராக!” என்று அவர்கள் கூறினர்.

(திருக்குர்ஆன் 38:21, 22)

நம்பிக்கை கொண்டோரில் இரண்டு கூட்டத்தினர் சண்டையிட்டுக் கொண்டால் அவற்றுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துங்கள்! அவற்றுள் ஒன்று மற்றொன்றின் மீது வரம்பு மீறினால் வரம்பு மீறிய கூட்டம் அல்லாஹ்வின் கட்டளையை நோக்கித் திரும்பும் வரை அதை எதிர்த்துச் சண்டையிடுங்கள்! அக்கூட்டம் திருந்தினால் நீதியான முறையில் இருவருக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள்! நீதி செலுத்துங்கள்! நீதி செலுத்துவோரை அல்லாஹ் விரும்புகிறான்.

(திருக்குர்ஆன் 49:9)

மனிதர்களுக்கிடையே பிரச்சனைகள் ஏற்படும் போது சக மனிதர்கள் தலையிட்டு நீதியான முறையில் தீர்த்து வைக்க வேண்டும் என இவ்வசனங்கள் தெளிவாக அனுமதிக்கின்றன. ஆயினும் இவர்கள் தமது மனசாட்சிக்கு எதிராகவும், குர்ஆனுக்கு எதிராகவும் குர்ஆன் வசனத்தைப் பொருத்தமற்ற இடத்தில் பயன்படுத்தி மக்களை வழிகெடுத்தனர்.

இதைத் தொடர்ந்து ஹதீஸ்கள் எதுவும் தேவையில்லை. குர்ஆன் மட்டும் போதும் என தங்களின் கொள்கையை விரிவுபடுத்திக் கொண்டனர். அலீ (ரலி) அவர்களையும், முஆவியா (ரலி) அவர்களையும் ஒரு சேர எதிர்த்த இவர்கள் ஹரூரா என்ற இடத்தில் தளம் அமைத்துக் கொண்டனர்.

"அல்லாஹ்வின் தீர்ப்பைப் புறக்கணித்து மனிதர்களை நடுவர்களாக நியமித்த அலீ (ரலி), முஆவியா (ரலி) ஆகிய இருவரும், இவ்விருவருடன் இருந்த மக்களும் காஃபிர்கள்" எனவும் இவர்கள் ஃபத்வா கொடுத்தனர்.

அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் யார் தீர்ப்பு அளிக்கவில்லையோ அவர்கள் காஃபிர்கள்.

(திருக்குர்ஆன் 5:44)

அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பளிக்காதோர் அநீதி இழைத்தவர்கள்.

(திருக்குர்ஆன் 5:45)

அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பளிக்காதோரே குற்றவாளிகள்.

(திருக்குர்ஆன் 5:47)

இந்த வசனங்களையும் தவறான இடத்தில் பயன்படுத்தி நன்மக்கள் அனைவரையும் காஃபிர்கள் என்றனர். அனைவரையும் காஃபிர்கள் என்று ஃபத்வா கொடுத்ததுடன் "காஃபிர்களுடன் போர் செய்ய வேண்டும்: காஃபிர்களைக் கொல்ல வேண்டும்: அலீ (ரலி), முஆவியா (ரலி) ஆகியோரைக் கொல்வது ஜிஹாத்" என்றெல்லாம் அடுத்த நிலைபாட்டை எடுத்தனர். ஜிஹாத் பற்றிய வசனங்களை இதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டி இதை நியாயப்படுத்தினர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் இவர்கள் கூறுவது தவறு என்று அறிஞர்கள் விளக்கம் அளித்த போது "குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம்" என்று கூறி ஹதீஸ்களை மறுக்கலானார்கள்.

இவர்கள் குர்ஆனுக்குத் தம் இஷ்டம் போல விளக்கம் கூறி ஜிஹாத் என்ற பெயரில் முஸ்லிம்களைக் கொல்லத் துணிந்ததால் ஹிஜ்ரீ 38 ஆம் ஆண்டில் அலீ (ரலி) அவர்கள் ஹரூராவின் மீது படையெடுத்துச் சென்று அவர்களின் கொட்டத்தை அடக்கினார்கள். பின்னர் முஆவியா (ரலி) அவர்கள் காரிஜிய்யாக்கள் மீது போர் தொடுத்து அவர்களை முற்றிலுமாக அழித்தார்கள்.



இவர்களைப் போல் ஒவ்வொரு கால கட்டத்திலும் "குர்ஆன் மட்டும் போதும்' என்ற கூட்டத்தினர் தோன்றிக் கொண்டும் அழிந்து கொண்டும் வருகின்றனர்.

காரிஜிய்யாக்கள் எவ்வாறு மடமையின் மீது தங்கள் அடித்தளத்தை அமைத்துக் கொண்டும், குர்ஆன் வசனங்களைப் பொருத்தமற்ற இடத்தில் பயன்படுத்தியும் வந்தார்களோ அந்த வழிமுறை மட்டும் மாறவில்லை. "குர்ஆன் மட்டும் போதும்' என்று இப்போது வாதிடுபவர்களும் குர்ஆன் வசனங்களைப் பொருத்தமற்ற இடத்தில் பயன்படுத்தி அதன் மீது தான் தங்களின் அடித்தளத்தை அமைத்துக் கொள்கிறார்கள் என்பதைக் காணலாம்.

தங்களை வளர்த்துக் கொள்ள இந்தத் தீய கொள்கையைத் தீய நோக்கத்துடன் இவர்கள் பிரச்சாரம் செய்தது போலவே எப்போதெல்லாம் இத்தீய கொள்கையை யாரெல்லாம் தூக்கிப் பிடித்தார்களோ அவர்களும் தங்களை வளர்த்துக் கொள்ளவே இந்தத் தீய கொள்கையைப் பிரச்சாரம் செய்தனர்.

குர்ஆன் மட்டும் போதும் என்ற நிலைபாட்டை எடுத்தவர்கள் குர்ஆனை வாசிக்கும் போது அதன் முழு விளக்கம் குர்ஆனில் கிடைக்காமல் இருப்பதை உணர்கிறார்கள். நபி வழியின் துணையுடன் தான் குர்ஆணை விளங்க முடியும் என்பதை அவர்கள் அறிந்து கொண்டாலும் அதை வெளிப்படையாக அறிவிக்க அவர்களின் சுய கவுரவம் தடுக்கிறது. எனவே சத்தியத்தை நோக்கித் திரும்பாமல் குர்ஆனையும், இஸ்லாத்தையும் புறக்கணித்து கடவுள் மறுப்பாளர்களாகி விடுகின்றனர்.

இவர்களில் சிலர் இஞ்சீலைப் பற்றி புகழ்ந்து பேசும் 3:65, 5:46, 5:66, 5:68, 9:111, 57:27 ஆகிய வசனங்களைப் படித்து விட்டு பைபிளைப் பின்பற்றுவதும் நமக்குக் கடமை எனக் கூறி தடம் புரண்டதை நாம் பார்த்துள்ளோம்.

நபிகள் நாயகத்தின் விளக்கம் தேவை இல்லை என்று கூறிய இவர்களை மத்தேயு, மாற்கு கூறியதை ஏற்கும் நிலைக்கு தள்ளி அல்லாஹ் இழிவுபடுத்தி விட்டான்.

"குர்ஆன் மட்டும் போதும்: நபிவழி அவசியமில்லை" என்ற கருத்து இஸ்லாத்தின் அடிப்படைக்கே நேர் முரணானதாகும்.

இஸ்லாத்தின் அடிப்படைக்கு மாற்றமாக சென்று நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் அனைத்தையும் புறக்கணித்த இந்த வழிகெட்ட "அஹ்லுல்

குர்ஆன்” இயக்கத்தினரின் கொள்கைகளைத் தான் இன்று தவ்ஹீத் ஜமாஅத் பிரச்சாரம் செய்வதாக ஸலபி நோய் பிடித்தவர்கள் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

ஹதீஸ்களுக்கு தவ்ஹீத் ஜமாஅத் கொடுத்து வரும் முக்கியத்துவம், அதனை பின்பற்ற வேண்டும், மற்றவர்களையும் பின்பற்றச் செய்ய வேண்டும் என்பதற்காக தவ்ஹீத் ஜமாஅத் எவ்வகையான பிரச்சினைகளையெல்லாம் சந்தித்தது, இன்றும் சந்தித்துக் கொண்டிருகின்றது என்பதை அனைவரும் அறிவோம்.

அவ்வாறிருக்கையில் ஹதீஸ்களை மறுக்கும் அஹ்லுல் குர்ஆன் என்ற வழிகெட்டவர்களுடன் நம்மை ஏன் இவர்கள் இணைத்துப் பேசுகின்றார்கள்?

அல்குர்ஆனுக்கு முரணான ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று நாம் கூறும் விதி சரியானதா? தவறானதா? என்பதையெல்லாம் பார்க்காது, நாம் எடுத்து வைக்கும் ஆதாரங்களுக்கு பதிலில்லாமல் தத்தளிக்கும் இவர்கள் தமது சுய இலாபத்திற்காகவே இந்த விமர்சனத்தை முன் வைக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

குர்ஆன் மட்டும் போதும், ஹதீஸ்கள் தேவையில்லை என்று வாதிடுபவர்களுக்கு எதிராக தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் “குர்ஆன் மட்டும் போதுமா?” என்ற தலைப்பில் தனியானதொரு நூலே வெளியிடப்பட்டுள்ளது. அஹ்லுல் குர்ஆன் இயக்கவாதிகளுக்கு எதிராக பாரியளவில் பிரச்சாரத்தை செய்து, ஹதீஸ்களும் மார்க்க ஆதாரங்களே என்பதை நிரூபித்துக் காட்டிய தவ்ஹீத் ஜமாஅத்தை “அஹ்லுல் குர்ஆன் வாதிகள்” என்று இவர்கள் விமர்சிப்பது நகைப்பிற்குரியதாகும்.

ஹதீஸ்கள் எப்படியான முறைகளில் பாதுகாக்கப்பட்டன என்பதை “ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்ட முறை” என்ற தலைப்பில் விரிவாக விளக்கியுள்ளோம்.



# நபி வழியா? புது வழியா?

அல்குர்ஆனுக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் பேச மாட்டார்கள் என்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைக்கு அமைவாக அல்குர்ஆனுக்கு முரணான ஹதீஸ்களை ஆதாரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று நாம் பிரச்சாரம் செய்து வருகின்றோம்.

அல்குர்ஆனும், அல்குர்ஆனுக்கு முரண்படாத ஹதீஸ்களும் மாத்திரமே இஸ்லாத்தின் மூலாதாரங்கள் என்று இன்று நாம் செய்து வரும் பிரச்சாரம் திருமறைக் குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் மூலம் பெறப்பட்டதே என்பதை பல இடங்களில் விரிவாக விளக்கியிருக்கின்றோம்.

இதே நேரத்தில் நாம் இன்றைக்கு என்ன பிரச்சாரத்தைச் செய்து வருகின்றோமோ அதே பிரச்சாரத்தை நபித் தோழர்களும் செய்துள்ளார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில செய்திகளை இங்கு சுட்டிக் காட்டுகின்றோம்.

உமர் (ரலி) அவர்கள் (கத்தியால்) குத்தப்பட்டபோது அவர்களிடம் சகோதரரே! நண்பரே! எனக் கூறி அழுதவராக ஸுஹைப் (ரலி) அவர்கள் (வீட்டினுள்) நுழைந்தார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள் “ஸுஹைபே எனக்காகவா நீங்கள் அழுகிறீர்கள்? இறந்தவருக்காக அவரது குடும்பத்தார் அழும் சில அழுகையின் காரணமாக இறந்தவர் வேதனை செய்யப்படுகிறார் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் அல்லவா? என்றார்கள்.

உமர் (ரலி) அவர்கள் இறந்த போது (அவர்கள் இறப்பதற்கு முன் கூறிய) அந்தச் செய்தியை நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினேன். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் அல்லாஹ் உமர் (ரலி) அவர்களுக்கு அருள் புரிவானாக. அல்லாஹ்வின் மீதாணையாக (எவரோ) ஒருவர் அழுவதின் காரணமாக இறை நம்பிக்கையாளரை அல்லாஹ் வேதனை செய்வான் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறவில்லை. மாறாக குடும்பத்தார் சப்தமிட்டு அழுவதன் காரணத்தினால் இறை மறுப்பாளர்களுக்கு அல்லாஹ் வேதனையை அதிகப்படுத்துகிறான் என்றே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று சொல்லிவிட்டு அல்லாஹ்வே சிரிக்கவும் வைக்கிறான். அழவும் வைக்கிறான் (53 : 43)

ஓர் ஆத்மாவின் பாவச் சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது (35 : 18) (என்று குர்ஆன் கூறுகிறது) குர்ஆனே உங்களுக்குப் போதும் என்றார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி)
நூல் : முஸ்லிம் (1694)

உர்வா பின் அஸ்ஸுபைர் அவர்கள் கூறியதாவது :

இறந்தவருக்காக அவருடைய குடும்பத்தார் அழுவதின் காரணமாக இறந்தவர் மண்ணறையில் வேதனை செய்யப்படுகிறார் என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் என ஆயிஷா (ரலி) அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அப்போது ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் : இப்னு உமர் தவறாக விளங்கிக் கொண்டார். (நபி (ஸல்) அவர்கள் அப்படிச் சொல்லவேயில்லை) இறந்தவர் தன் (வாழ்நாளில் புரிந்த) சிறிய பெரிய பாவத்தின் காரணத்தால் வேதனை செய்யப்படுகிறார். அவரது குடும்பத்தாரோ இப்போது அவருக்காக அழுது கொண்டிருக்கின்றனர் என்று தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்னு உமர் அறிவித்திருப்ப்)து எப்படியிருக்கிறதென்றால் (குறைஷித் தலைவர்களான) இணைவைப்பவர்கள் பத்ருப் போரில் கொல்லப்பட்டு எறியப்பட்டிருந்த பாழுங்கிணற்றுக்கருகே நின்று கொண்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஏதோ பேசினார்கள். (அப்போது உயிரற்ற சடலங்களிடமா பேசுகிறீர்கள்? என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்க) நான் கூறுவதை அவர்கள் செவியுறுகிறார்கள் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்ததாக இப்னு உமர் தவறாகவே விளங்கிக் கொண்டார்.

நான் அவர்களுக்குச் சொல்லி வந்ததெல்லாம் உண்மை என்று இப்போது அவர்கள் அறிகிறார்கள் என்று தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்போது நான் கூறுவதை அவர்கள் செவியுறுகிறார்கள் என்று சொல்லவில்லை). பிறகு (இறந்தவர்கள் நாம் பேசுவதைச் செவியுறுவதில்லை என்ற தமது கருத்திற்குச் சான்றாக) ஆயிஷா (ரலி) அவர்கள் (பின்வரும்) வசனங்களை ஓதினார்கள்.

(நபியே) இறந்தவர்களை உங்களால் கேட்கச் செய்ய முடியாது. (27 : 80)

(நபியே) மண்ணறைகளில் இருப்பவர்களை உங்களால் செவியுறச் செய்ய முடியாது (35 : 22)

அறிவிப்பவர் : உர்வா பின் அஸ்ஸுபைர் (ரலி)
நூல் : முஸ்லிம் (1697)



உமர் மற்றும் இப்னு உமர் (ரலி) ஆகியோரின் கூற்று ஆயிஷா (ரலி) அவர்களுக்கு எட்டிய போது பொய்யர்களாகவோ பொய்ப்பிக்கப்பட்டவர்களாகவோ இல்லாத இருவர் சொன்ன ஹதீஸை நீங்கள் என்னிடம் கூறுகிறீர்கள். செவி (சில நேரங்களில்) தவறாக விளங்கி விடுகிறது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : காசிம் பின் முஹம்மத் (ரஹ்)
நூல் : முஸ்லிம் (1693)

குடும்பத்தினர் அழுவதால் இறந்தவர் வேதனை செய்யப்படுவார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இவர்கள் கூறும் ஹதீஸ் ஒருவரது பாவச்சுமையை மற்றவர் சுமக்க முடியாது என்று கூறும் குர்ஆன் வசனத்திற்கு மாற்றமாக இருப்பதால் இந்த ஹதீஸை நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்க மாட்டார்கள். மாறாக நல்ல மனிதர்களாக விளங்கும் இந்த இருவரிடத்தில் தான் தவறு வந்திருக்கும் என ஆயிஷா (ரலி) அவர்கள் முடிவு செய்கிறார்கள்.

மேலும் குர்ஆனிற்கு முரண்பாடாக அவர்கள் அறிவித்த செய்திக்கு முரண்படாத வகையில் விளக்கமும் கொடுக்கிறார்கள். நபி (ஸல்) அவர்களின் ஆயிரக்கணக்கான பொன்மொழிகளைச் சமுதாயத்திற்கு வழங்கிய ஆயிஷா (ரலி) அவர்கள் இந்தக் கருத்தைக் கூறியதற்காக ஆயிஷா அவர்கள் ஹதீஸை மறுத்து விட்டார்கள் என்று இவர்கள் சொல்வார்களா?

ஃபாத்திமா பின்த் கைஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது : (என் கணவர்) அபூஅம்ர் பின் ஹப்ஸ் அவர்கள் என்னை ஒரேயடியாக தலாக் சொல்லி விட்டார். அப்போது அவர் வெளியூரில் இருந்தார். பின்னர் அவருடைய பிரதிநிதி தோல் நீக்கப்படாத கோதுமையை எனக்கு அனுப்பி வைத்தார். அதைக் கண்டு நான் எரிச்சலடைந்தேன். அதற்கு அந்தப் பிரதிநிதி அல்லாஹ்வின் மீதாணையாக நாங்கள் உனக்கு ஜீவனாம்சம் தங்கும் வசதி) எதையும் தர வேண்டியதில்லை. (இது ஒரு உதவியாகத் தரப்பட்டது தான்) என்று கூறினார். நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து நடந்ததைக் கூறினேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ' அவர் உனக்கு (ஜீவனாம்சம் தங்கும் வசதி) எதையும் தர வேண்டியதில்லை; என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : பாத்திமா பின்த் கைஸ் (ரலி)
நூல் : முஸ்லிம் (2953)

அபூ இஸ்ஹாக் அவர்கள் கூறியதாவது : நான் அஸ்வத் பின் யஸீத் அவர்களுடன் பெரிய பள்ளிவாசலில் அமர்ந்திருந்தேன். எங்களுடன் ஷஅபீ அவர்களும் இருந்தார்கள். அப்போது ' ஃபாத்திமா பின்த் கைஸ் (ரலி) அவர்களுக்கு உறைவிடமும்

இல்லை. ஜீவனாம்சமும் இல்லை என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்; என்ற ஹதீஸை ஷஅபீ அவர்கள் எங்களுக்கு அறிவித்தார்கள். (அங்கிருந்த) அஸ்வத் (ரலி) அவர்கள் ஒரு கையளவு சிறு கற்களை அள்ளி அவர் மீது எறிந்து விட்டு பின்வருமாறு கூறினார்கள். உமக்குக் கேடு தான். இது போன்ற செய்திகளை அறிவிக்கின்றீர்களே? உமர் (ரலி) அவர்கள் ஒரு பெண்ணின் சொல்லுக்காக நாம் அல்லாஹ்வின் வேதத்தையும் நபியின் வழிமுறையையும் கைவிட மாட்டோம். ஃபாத்திமா பின் கைஸ் (உண்மையிலேயே) நினைவில் வைத்துள்ளாரா? அல்லது மறந்து விட்டாரா என்று நமக்குத் தெரியவில்லை. மூன்று தலாக் சொல்லப்பட்ட பெண்ணுக்கு உறைவிடமும் ஜீவனாம்சமும் உண்டு. பகிரங்கமான வெட்கக்கேடான செயலை அப்பெண்கள் செய்தாலே தவிர அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றாதீர்கள் (65 : 1) என்று வலிவும் மாண்பும் உடைய அல்லாஹ் கூறியுள்ளான் என்றார்கள்.

அறிவிப்பவர் : அபூஇஸ்ஹாக் (ரஹ்)

நூல் : முஸ்லிம் (2963)

ஃபாத்திமா பின்த் கைஸ் (ரலி) அவர்கள் தம் கணவனால் தலாக் விடப்பட்ட போது அவர்களுக்கு ஜீவனாம்சம் மற்றும் இருப்பிட வசதியை ஏற்படுத்தித் தருவது ஃபாத்திமா (ரலி) அவர்களின் கணவருக்குக் கடமையில்லை என்று நபி (ஸல்) அவர்கள் தன்னிடம் கூறியதாக சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஃபாத்திமா (ரலி) அவர்களே குறிப்பிடுகிறார்கள்.

ஆனால் தலாக் விடப்பட்ட பெண்ணுக்கு ஜீவனாம்சம் மற்றும் இருப்பிட வசதியை கணவன் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று குர்ஆனில் உள்ளது. எனவே குர்ஆனிற்கு மாற்றமாக நபி (ஸல்) கூறியிருக்க மாட்டார்கள் என்ற அடிப்படையில் உமர் (ரலி) அவர்கள் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அறிவிக்கும் இந்த ஹதீஸை மறுக்கிறார்கள்.

ஃபாத்திமா (ரலி) அவர்களின் நம்பகத் தன்மையில் உமர் அவர்கள் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவில்லை. குர்ஆனும் நபி (ஸல்) அவர்களின் கூற்றும் ஒரு போதும் மோதாது என்பது உறுதியான விஷயம். எனவே மறதியாக ஃபாத்திமா அவர்கள் தான் மாற்றிச் சொல்லியிருக்க வேண்டும் என்று உமர் (ரலி) அவர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தில் உமர் (ரலி) அவர்கள் எந்த வாதத்தை முன் வைத்தாரோ அதைத் தான் நாமும் கூறிக் கொண்டிருக்கிறோம். இப்போது ஹதீஸின் போலிப் பாதுகாவலர்கள் நம்மை விமர்சனம் செய்ததைப் போல் "உமர் ஹதீஸை மறுத்து விட்டார். அவர் குர்ஆன் மட்டும் போதும் என்று



சொல்பவர்களுக்குக் குறிப்பெடுத்துக் கொடுத்து விட்டார். இவர் வழிகெட்ட கூட்டத்தைச் சார்ந்தவர்" என்றெல்லாம் விமர்சனம் செய்வார்களா?

**03 விஷயங்களில் சகுனம் இருக்கின்றதா?**

குர்ஆனுக்கு முரண்படும் செய்திகளில் சகுனம் பற்றிய செய்தியும் மிக முக்கியமான ஒன்றாகும். ஆகவே அது பற்றியும் நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

சகுனம் பார்ப்பது மற்றும் நம்புவதைத் தடை செய்து பல செய்திகள் வந்திருந்தாலும் 03 விஷயங்களில் சகுனம் இருக்கின்றது என்ற கருத்திலும் ஒரு செய்தி இடம் பெற்றுள்ளது.

இந்தச் செய்தி புகாரியில் (2858) (5093) (5753) (5772) ஆகிய எண்களிலும் முஸ்லிமில் (4127) (4128) ஆகிய எண்களிலும் இடம் பெற்றுள்ளது.

இரண்டு மனிதர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்து சகுனம் என்பது பெண், கால்நடை, வீடு ஆகியவற்றில் மட்டும் தான் இருக்கிறது என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா அறிவித்துக் கொண்டிருக்கிறார் என்று கூறினார்கள். உடனே அவர்கள் மேலும் கீழும் பார்த்துவிட்டு அபுல்காசிமிற்கு (நபி (ஸல்) அவர்களுக்கு) இந்தக் குர்ஆனை அருளியவன் மீது சத்தியமாக இப்படி நபி (ஸல்) அவர்கள் சொல்லவில்லை. மாறாக அறியாமைக் கால மக்கள் சகுனம் என்பது பெண் கால்நடை, வீடு ஆகியவற்றில் உண்டு எனக் கூறி வந்தார்கள் என்று தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று சொல்லி விட்டு இந்தப் பூமியிலோ, உங்களிடமோ எந்தத் துன்பம் நிகழ்ந்தாலும் அதை நாம் உருவாக்குவதற்கு முன்பே பதிவேட்டில் இல்லாமல் இருக்காது. இது அல்லாஹ்வுக்கு எளிதானது (57 : :22) என்ற வசனத்தை ஓதினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹஸ்ஸான் (ரஹ்)

நூல் : அஹ்மத் (24894)

மேற்கண்ட செய்தியிலிருந்து ஒரு முக்கியமான விஷயத்தை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

03 விஷங்களில் சகுனம் இருக்கின்றது என்று நபியவர்கள் சொன்னதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் என்ற செய்தி ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறப்பட்ட நேரத்தில் ஆயிஷா (ரலி) அவர்கள் அதனை உடனடியாக மறுத்தது மாத்திரமன்றி, அப்படி நம்புவது குர்ஆனுக்கு எதிரானது என்பதையும் குர்ஆன் வசனத்தைக் குறிப்பிடுவதின் மூலம் தெளிவாக விளக்குகின்றார்கள்.

இந்தப் பூமியிலோ, உங்களிடமோ எந்தத் துன்பம் நிகழ்ந்தாலும் அதை நாம் உருவாக்குவதற்கு முன்பே பதிவேட்டில் இல்லாமல் இருக்காது. இது அல்லாஹ்வுக்கு எளிதானது.

(திருக்குர்ஆன் 57 : :22)

யாருக்கு எந்தத் துன்பம் நிகழ்ந்தாலும் அது இறைவனின் நாட்டப்படியே நடக்கும் என்று மேலுள்ள திருமறை வசனம் தெளிவாகக் குறிப்பிடும் போது வீடு, பெண், கால்நடை ஆகியவற்றிலும் துன்பங்கள் வரும் என்றும், ஆகவே இந்த மூன்றிலும் சகுனம் பார்க்கலாம் என்றும் நபியவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

இஸ்லாத்தின் அடிப்படையாக ஒரு விஷயத்தை அல்லாஹ் தெளிவாக அறிவித்த பின் நபியவர்கள் அதற்கு மாற்றமாகப் பேசமாட்டார்கள். ஆனால் அபூஹுரைராவின் செய்தியில் நபியவர்கள் அல்லாஹ்வின் வசனத்திற்கு மாற்றமாகக் கூறியதாக அறிவிக்கப்படுகின்றது. அதனால் தான் ஆயிஷா (ரலி) அவர்கள் குர்ஆன் வசனத்தைச் சுட்டிக் காட்டி நபியவர்கள் அப்படி சொல்லவில்லை என்பதை தெளிவாக விளக்குகின்றார்கள்.

**விமர்சனமும் விளக்கமும்**

புகாரியில் இடம் பெறும் இன்னொரு செய்தியில் கால்நடை என்பதற்கு பதிலாக குதிரை என்று இடம் பெற்றுள்ளது. அதிலும் இந்த மூன்று விஷயங்களில் பீடை – சகுனம் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

حدثنا أبو اليمان أخبرنا شعيب عن الزهري قال أخبرني سالم بن عبد الله أن عبد الله بن عمر رضي الله عنهما قال سمعت النبي صلى الله عليه وسلم يقول إنما الشؤم في ثلاثة في الفرس والمرأة والدار

குதிரை, பெண், வீடு ஆகியவற்றில் பீடை உண்டு என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் :இப்னு உமர் (ரலி)
நூல் : புகாரி 2858, 5093

புகாரி 5094, 5753 ஆகிய ஹதீஸ்களிலும் இக்கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மூன்று விஷயங்களில் மட்டும் பீடை – சகுனம் உண்டு என்று இந்த ஹதீஸ் கூறுவதால் இம்மூன்று மட்டும் இதில் இருந்து விதிவிலக்கு பெறுகின்றது என்று சில அறிஞர்கள் கூறி இதை நியாயப்படுத்தியும் எழுதி உள்ளனர்.



ஆனால் இந்தச் செய்தியை ஆய்வு செய்து பார்க்கும் போது இது ஏற்கத்தக்க செய்தியல்ல என்பது இன்னும் தெளிவாக உறுதியாகின்றது.

இந்த ஹதீஸ் வேறு விதமான வார்த்தைகளைக் கொண்டு அதே புகாரியில் அதே இப்னு உமர் (ரலி) வழியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

حدثنا محمد بن منهال حدثنا يزيد بن زريع حدثنا عمر بن محمد العسقلاني عن أبيه عن ابن عمر قال ذكروا الشؤم عند النبي صلى الله عليه وسلم فقال النبي صلى الله عليه وسلم إن كان الشؤم في شيء ففي الدار والمرأة والفرس

சகுனம் என்று ஒன்று இருக்குமானால் அது வீடு, பெண், குதிரை ஆகியவற்றில் தான் இருக்க முடியும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் இப்னு உமர் (ரலி)
நூல் : புகாரி 5094

சகுனம் என ஒன்று இருக்குமானால் இந்த மூன்றில் தான் இருக்க முடியும் என்ற வாசகம் சகுனம் இல்லை என்ற கருத்தைத் தான் தரும்.

ஒரு மனிதனை இன்னொரு மனிதனுக்கு ஸஜ்தா செய்ய நான் கட்டளை இடுவதாக இருந்தால் ஒரு பெண்ணை அவளது கணவனுக்கு சஜ்தா செய்யுமாறு கட்டளையிட்டிருப்பேன் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதன் கருத்து யாரும் யாருக்கும் சஜ்தா செய்யக் கூடாது என்பது தான்.

அது போல்

உங்களுக்கு முன் சென்ற சமுதாயங்களில், (பல்வேறு பிரச்சினைகளில் சரியான தீர்வு எது என்பது குறித்து இறையருளால்) முன் கூட்டியே அறிவிக்கப்பட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். அத்தகையவர்களில் எவராவது எனது இந்தச் சமுதாயத்தில் இருப்பாராயின் அது உமர் பின் கத்தாப் அவர்கள் தாம் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)
நூல் : புகாரி 3469, 3689

இப்படி யாராவது இருப்பதாக இருந்தால் அவர் உமராக இருப்பார் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் மூலம் இது போன்றவர் இனிமேல் கிடையாது என்று தான் புரிந்து கொள்ள வேண்டும்.

அது போல் சகுனம் என்று இருக்குமானால் மேற்கண்ட மூன்றில் தான்

இருக்க முடியும் என்பது சகுனம் இல்லை என்ற கருத்தைத் தருகிறது.

ஆனால் முதலில் எடுத்துக்காட்டிய அறிவிப்புகள் மேற்கண்ட மூன்றிலும் சகுனம் இருப்பதாகச் சொல்கிறது. இரண்டுமே ஒரே அறிவிப்பாளரைக் கொண்டு அறிவிக்கப்படுவதால் குர்ஆனின் கருத்துக்கு நெருக்கமாக உள்ள இரண்டாம் அறிவிப்பை ஏற்று முதலாம் அறிவிப்பை நபிகள் சொன்னது அல்ல எனக் கூறி நிராகரித்து விடலாம்.

அல்லது இரண்டும் முரண்படுவதால் இரண்டையும் நாம் நிறுத்தி வைத்து விட்டு வேறு ஆதாரங்கள் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டும்.

வேறு ஆதாரங்கள் மூலம் எதிலும் சகுனம் இல்லை என்று பொதுவாக கூறும் ஹதீஸ்கள் அடிப்படையில் இம்மூன்றிலும் சகுனம் இல்லை என்ற முடிவுக்குத் தான் நாம் வரவேண்டும்.

முரண்பட்ட இரண்டையும் நாம் தள்ளிவிட்டாலும் குர்ஆனுக்கு நெருக்கமான அறிவிப்பை மட்டும் ஏற்றுக் கொண்டாலும் இம்மூன்றிலும் சகுனம் இல்லை என்ற கருத்து நிரூபணமாகி விடும்.

**விதி பற்றிய வசனங்களுக்கு மாற்றமானது.**

கால்நடை, பெண், வீடு ஆகியவற்றில் சகுனம் இருக்கின்றது என்று நபியவர்கள் கூறிய செய்தியை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்ததை அறிந்த ஆயிஷா (ரலி) அவர்கள் அதனை மறுக்கும் விதமாக விதி பற்றிய இறை வசனத்தை எடுத்துக் காட்டுகின்றார்கள்.

சகுனம் உண்டு என்று பொதுவாகச் சொன்னாலும், அல்லது குறிப்பிட்ட 03 விஷயத்தில் தான் சகுனம் உண்டு என்று வேறு பிரித்துச் சொன்னாலும் அது விதி தொடர்பான இஸ்லாமிய, குர்ஆனிய கருத்துக்கு மாற்றமாகவே அமையும்.

அதனால் தான் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அபூஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிப்பை மறுக்கும் போது விதி பற்றிய வசனத்தைக் குறிப்பிட்டு மறுக்கின்றார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரே ஒரு வசனத்தை மாத்திரம் குறித்த செய்தியில் குறிப்பிட்டிருந்தாலும், குர்ஆனில் இடம்பெறும் இன்னும் அநேகமான வசனங்களுக்கு மாற்றமாகவே அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிப்பு அமைந்துள்ளது.



உதாரணத்திற்குச் சில வசனங்களை குறிப்பிடுகின்றோம்.

மறைவானவற்றின் திறவுகோல்கள் அவனிடமே உள்ளன. அவனைத் தவிர யாரும் அதை அறிய மாட்டார். தரையிலும், கடலிலும் உள்ளவற்றை அவன் அறிவான். ஓர் இலை கீழே விழுந்தாலும் அதை அவன் அறியாமல் இருப்பதில்லை. பூமியின் இருள்களில் உள்ள விதையானாலும், ஈரமானதோ காய்ந்ததோ ஆனாலும் <u>தெளிவான ஏட்டில் இல்லாமல் இல்லை</u>.

(அல்குர்ஆன் 6:59)

(நபியே) ஏதேனும் ஒரு காரியத்தில் நீர் இருந்தாலும், குர்ஆனிலிருந்து எதையாவது நீர் கூறினாலும், (மனிதர்களே!) நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் <u>அதில் நீங்கள் ஈடுபடும் போது உங்களை நாம் கண்காணிக்காமல் இருப்பதில்லை. பூமியிலும், வானத்திலும் அணுவளவோ, அதை விடச் சிறியதோ, அதை விடப் பெரியதோ உமது இறைவனை விட்டும் மறையாது. (அவை) தெளிவான பதிவேட்டில் இல்லாமல் இருப்பதில்லை.</u>

(அல்குர்ஆன் 10:61)

மனிதனுக்கு முன்னரும், பின்னரும் தொடர்ந்து வருவோர் (வானவர்) உள்ளனர். அல்லாஹ்வின் கட்டளைப்படி அவனைக் காப்பாற்றுகின்றனர். தம்மிடம் உள்ளதை ஒரு சமுதாயம் மாற்றிக் கொள்ளாத வரை அச்சமுதாயத்தில் உள்ளதை அல்லாஹ் மாற்ற மாட்டான். <u>ஒரு சமுதாயத்திற்கு அல்லாஹ் தீங்கை நாடும் போது அதைத் தடுப்போர் இல்லை. அவர்களுக்கு அவனன்றி உதவி செய்பவரும் இல்லை.</u>

(அல்குர்ஆன் 13:11)

அல்லாஹ் உங்களை மண்ணாலும், பின்னர் விந்துத் துளியாலும் படைத்தான். பின்னர் உங்களை ஜோடிகளாக அமைத்தான். ஒரு பெண் கருவுறுவதும், ஈன்றெடுப்பதும் அவனுக்குத் தெரியாமல் இருப்பதில்லை. ஒருவனுக்கு வாழ்நாள் வழங்கப்படுவதும், அவனது வாழ்நாள் குறைக்கப்படுவதும் <u>பதிவேட்டில் இல்லாமல் இல்லை</u>. இது அல்லாஹ்வுக்கு எளிதானது.

(அல்குர்ஆன் 35:11)

**ஆதாரப்பூர்வமான மற்ற செய்திகளுக்கும் மாற்றமானது.**

5754 أَخْبَرَنِي عُبَيْدُ اللَّهِ بْنُ عَبْدِ اللَّهِ بْن عُتْبَةَ أَنَّ أَبَا هُرَيْرَةَ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ لَا طِيَرَةَ وَخَيْرُهَا الْفَأْلُ قَالُوا وَمَا الْفَأْلُ قَالَ الْكَلِمَةُ الصَّالِحَةُ يَسْمَعُهَا أَحَدُكُمْ

البخاري

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “பறவை சகுனம் என்பது கிடையாது. சகுனங்களில் சிறந்தது நற்குறியே ஆகும்” என்று சொன்னார்கள். மக்கள், “நற்குறி என்பதென்ன?” என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், “அது நீங்கள் செவியுறும் நல்ல சொல்லாகும்” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி),
நூல் : புகாரி (5754)

قَالَ سَمِعْتُ الْبَرَاءَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ نَزَلَتْ هَذِهِ الْآيَةُ فِينَا كَانَتْ الْأَنْصَارُ إِذَا حَجُّوا فَجَاءُوا لَمْ يَدْخُلُوا مِنْ قِبَلِ أَبْوَابِ بُيُوتِهِمْ وَلَكِنْ مِنْ ظُهُورِهَا فَجَاءَ رَجُلٌ مِنْ الْأَنْصَارِ فَدَخَلَ مِنْ قِبَلِ بَابِهِ فَكَأَنَّهُ عُيِّرَ بِذَلِكَ فَنَزَلَتْ وَلَيْسَ الْبِرُّ بِأَنْ تَأْتُوا الْبُيُوتَ مِنْ ظُهُورِهَا وَلَكِنَّ الْبِرَّ مَنْ اتَّقَى وَأْتُوا الْبُيُوتَ مِنْ أَبْوَابِهَا رواه البخاري

அன்ஸாரிகள் ஹஜ் செய்துவிட்டு வரும்போது தங்கள் வீடுகளின் (முன்) வாசல்கள் வழியாக உள்ளே செல்ல மாட்டார்கள். மாறாக, புழக்கடைகள் வழியாகச் செல்வார்கள். அப்போது அன்ஸாரிகளைச் சேர்ந்த ஒருவர் (முன்) வாசல் வழியாக வீட்டிற்குச் சென்றார். இது (மற்றவர்களால்) குறை கூறப்பட்டது. அப்போது “உங்கள் வீடுகளுக்குள் புழக்கடைகள் (பின் வாசல்கள்) வழியாகச் செல்வது நன்மையான காரியமன்று: மாறாக (அல்லாஹ்வை) அஞ்சி நடப்பதே நன்மையான காரியமாகும். ஆகவே வீடுகளுக்கு அதன் வாசல்கள் வழியாகச் செல்லுங்கள்!” எனும் (2:189 வது) இறைவசனம் அன்ஸாரிகளாகிய எங்கள் விஷயத்தில் அருளப்பெற்றது.

அறிவிப்பவர் : பரா (ரலி) அவர்கள்,
நூல் : புகாரி (1803)

மொத்தத்தில் சகுனம் என்பது எதிலும் கிடையாது என்பதை மேலுள்ள செய்திகளும் தெளிவாக நமக்கு உணர்த்துகின்றன. ஆகவே எந்த விதத்தில் நாம் ஆய்வு செய்து பார்த்தாலும் குறித்த செய்தியை ஏற்றுக் கொள்ள முடியாது அதனால் தான் ஆயிஷா (ரலி) அவர்கள் குர்ஆன் வசனத்தை காட்டி மேற்கண்ட செய்தியை மறுத்துள்ளார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

சுருக்கமாக இவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்றால் “எந்த ஒரு கருத்தைக் கூறினாலும் அது சரியா? தவறா? என்ற ஆய்வுக்குள் செல்ல மாட்டோம். அந்தக் கருத்தை இதற்கு முன்னால் யாராவது சொன்னார்களா என்றே கேட்போம்” என்கிறார்கள்.

இந்த நிகழ்வுகளைக் கூட நாம் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் சஹாபாக்களின் செயல்பாடுகள் ஆதாரத்திற்குரியது என்பதற்காக அல்ல. முன்னோர்கள் யாராவது சொல்லியிருந்தால் தான் சரி என மத்ஹப்வாதிகள் சென்ற பாதையில் இன்றைக்குச் சென்று கொண்டிருக்கிற இவர்களுக்கு முன்னோர்களும் நமது வழிமுறையைக் கடைப்பிடித்துள்ளார்கள் என்று உரைப்பதற்காகத் தான் இதைக் கூறுகிறோம்.

குர்ஆன் ஹதீஸை மாத்திரம் பின்பற்றும் கொள்கையில் இருப்பவர்களுக்கு நாம் முதலில் சுட்டிக்காட்டிய குர்ஆன் வசனமே நம்பிக்கை கொள்வதற்குப் போதுமானது.

# மறுக்காமல் விளக்கம் சொல்லப்பட்ட செய்திகள் சில...


- மனோ இச்சைப்படி மறுக்கிறோமா? 101
- சிந்தனைக்கு முக்கியத்துவமா? 105
- நபியின் சலியை நபித்தோழர்கள் தமது உடலில் பூசிக் கொண்டார்களா? 108




## மனோ இச்சைப்படி மறுக்கிறோமா?

ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மனோஇச்சைக்காக தவ்ஹீத் ஜமாஅத்தினர் மறுக்கிறார்கள் என்றொரு குற்றச்சாட்டையும் நம்மை எதிர்ப்பவர்கள் முன்வைக்கின்றார்கள். அவர்களின் இந்தச் குற்றச்சாட்டு தொடர்பாகவும் நாம் இங்கு விளக்கியாக வேண்டும்.

ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதினாலேயே பலவிதமான பிரச்சினைகளையும் சந்தித்து வரும் தவ்ஹீத் ஜமாஅத்தினர் மனோஇச்சைக்காக ஹதீஸ்களை மறுக்கின்றார்கள் என்ற இவர்களின் விமர்சனம் எந்த அடிப்படையும் அற்றது என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

அல்குர்ஆனுக்கு முரண்படும் செய்திகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறும் போது நம்மை எதிர்க்கும் ஸலபி முத்திரையை ஒட்டிக் கொண்டவர்களும், மத்ஹபு வாதிகளும் “மனோ இச்சை காரணமாகவே இவர்கள் ஹதீஸ்களை மறுக்கின்றார்கள்” என்று குற்றம் சாட்டி வருகின்றார்கள்.

இவர்கள் நம்மீது குற்றம் சுமத்துவதைப் போல் மனோ இச்சைப்படி நாம் நினைத்தவாறு ஹதீஸ்களை மறுப்பதாக இருந்தால் எத்தனையோ ஹதீஸ்களை சகட்டு மேனிக்கு மறுத்திருக்க வேண்டுமே? புனித அல்குர்ஆனுக்கு மாற்றமாக இருக்கிறது என்ற காரணம் காட்டி நாம் சில செய்திகளை மறுத்திருக்கிறோமே ஒழிய மனோஇச்சைக்காக எந்த ஹதீஸ்களையும் நாம் மறுக்கவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**அல்லாஹ் அடி வானத்திற்கு இறங்குகின்றானா?**

இரவின் இறுதி மூன்றில் ஒரு பகுதி இருக்கும் போது இறைவன் அடிவானத்திற்கு இறங்கி வருவதாக புகாரியில் ஒரு செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

صحيح البخاري (٩/ ٣٤١)

7494 - حَدَّثَنَا إِسْمَاعِيلُ، حَدَّثَنِي مَالِكٌ، عَنِ ابْنِ شِهَابٍ، عَنْ أَبِي عَبْدِ اللَّهِ الأَغَرِّ، عَنْ أَبِي هُرَيْرَةَ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: « يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَى كُلَّ لَيْلَةٍ إِلَى

السَّمَاءِ الدُّنْيَا، حِينَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الآخِرُ فَيَقُولُ: مَنْ يَدْعُونِي فَأَسْتَجِيبَ لَهُ، مَنْ يَسْأَلُنِي فَأُعْطِيَهُ، مَنْ يَسْتَغْفِرُنِي فَأَغْفِرَ لَهُ "

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உயர்வும் வளமும் மிக்கவனான நம் இறைவன் ஒவ்வோர் இரவிலும் இரவின் இறுதி மூன்றிலொரு பங்கு இருக்கும்போது கீழ்வானிற்கு இறங்கி வந்து, "என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அவரது பிரார்த்தனையை நான் ஏற்கிறேன். என்னிடம் யாரேனும் கேட்டால் அவருக்கு நான் கொடுக்கிறேன். என்னிடம் யாரேனும் பாவமன்னிப்புக் கோரினால் அவரை நான் மன்னிக்கிறேன்" என்று கூறுகின்றான்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்: புகாரி - 7494

மேற்கண்ட செய்தியில் இறைவன் ஒவ்வொரு நாளும் இரவில் மூன்றிலொரு பங்கு மீதமிருக்கும் போது கீழ்வானத்திற்கு இறங்கி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அல்குர்ஆனில் அல்லாஹ்வின் இருப்பிடம் அர்ஷ் என்று குறிப்பிடப்படுகின்றது.

உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வே வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்னர் அர்ஷின் மீது அமர்ந்தான். இரவைப் பகலால் அவன் மூடுகிறான். பகல், இரவை வேகமாகத் தொடர்கிறது. சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தனது கட்டளையால் கட்டுப்படுத்தினான். கவனத்தில் கொள்க! படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியன. அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ் பாக்கியம் பொருந்தியவன்.

அல்குர்ஆன் 07:54

உங்கள் இறைவன் அல்லாஹ்வே. அவனே வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்னர் அர்ஷின் மீது அமர்ந்தான். காரியங்களை நிர்வகிக்கிறான். அவனது அனுமதியின்றி எந்தப் பரிந்துரைப்பவனும் இல்லை. அவனே அல்லாஹ். உங்கள் இறைவன். அவனை வணங்குங்கள்! படிப்பினை பெற மாட்டீர்களா?

அல்குர்ஆன் 10:03

அல்லாஹ் அர்ஷில் இருக்கின்றான் என்று குர்ஆனில் உள்ள செய்தியை நாம் நேரடியாக ஏற்றுக் கொண்டால் அவன் அடிவானத்திற்கு வரவில்லை என்று அர்த்தம்.



அல்லது அல்லாஹ் அடிவானத்திற்கு வருகின்றான் என்று குறித்த ஹதீஸின் நேரடிக் கருத்தில் இதனைப் புரிந்து கொண்டால் அல்லாஹ் அர்ஷில் இல்லையென்று ஆகிவிடும்.

இரவு பகல் மாறிமாறி வருவதினால் இந்த நிமிடத்தில் கூட உலகில் ஏதாவது ஒரு நாட்டு மக்கள் இரவின் மூன்றிலொரு பகுதியை அடைந்திருப்பார்கள். அப்படியானால் இறைவன் அவர்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வதற்காக இப்போதும் கீழ் வானத்தில் இருக்க வேண்டும்.

மொத்தத்தில் உலகில் ஒவ்வொரு நாடும் இரவில் மூன்றில் கடைசிப் பகுதியை அடையும் போது இறைவன் கீழ்வானத்தில் இருக்க வேண்டிவரும். அப்படியானால் இறைவன் அர்ஷில் இல்லை. கீழ்வானத்தில் தான் இருக்கின்றான் என்ற நிலை உருவாகிவிடும்.

**மாற்று விளக்கம் கொடுக்க வேண்டிய செய்தி.**

அல்லாஹ் அர்ஷில் இருக்கின்றான் என்ற அல்குர்ஆனின் கருத்துக்கு மாற்றமாக மேற்கண்ட ஹதீஸ் இடம் பெறுவதினால் குறித்த ஹதீஸ் விஷயத்தில் தெளிவானதொரு முடிவுக்கு வரவேண்டும்.

அந்த வகையில் இறைவன் ஒவ்வொரு இரவிலும் மூன்றில் கடைசிப் பகுதியில் கீழ் வானத்திற்கு வருகின்றான் என்றால் இறைவன் நேரடியாக வருவதில்லை. அவனுடைய விசேட கண்காணிப்பைச் செலுத்துகின்றான் என்று விளக்கம் அளிக்கின்றோம்.

காரணம் என்னவென்றால் இறைவனே நேரடியாக கீழ்வானத்திற்கு வருகின்றான் என்றும் நாம் குறித்த ஹதீஸைப் புரிய முற்பட்டால் இறைவன் அர்ஷில் இல்லை என்ற நிலைக்குச் செல்ல வேண்டி ஏற்படும். இந்நிலை குர்ஆனை மறுப்பதற்கு சமமானதாகும்.

ஆகவே தான் இறைவன் வரவில்லை. அவனுடைய விசேட கண்காணிப்பைச் செலுத்துகின்றான் என்று மாற்று விளக்கம் கொடுக்கின்றோம்.

அல்லாஹ்வைப் பற்றிய செய்திகளுக்கு மாற்று விளக்கமளிக்கக் கூடாதா?

இறைவனைப் பற்றி இறைவன் எப்படியெல்லாம் கூறியிருக்கின்றானோ அதனை அப்படியே நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மாற்று விளக்கம் கொடுக்கலாகாது என்பதில் நமக்கும் மாற்றுக் கருத்தில்லை.

அல்லாஹ்வைப் பற்றி அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ள வர்ணனைக்கு மாற்றமாக

ஹதீஸ் இடம் பெற்றால் அப்போது அல்குர்ஆனின் கருத்துக்களைத் தான் நாம் முற்படுத்த வேண்டுமே தவிர ஹதீஸ்களின் கருத்துக்களை அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

காரணம் அல்குர்ஆனுக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் பேசமாட்டார்கள்.

அல்லாஹ் கீழ்வானத்திற்கு இறங்கி வருதல் பற்றிய செய்தியைப் பொருத்த வரையில் அல்லாஹ் அர்ஷில் இருக்கின்றான் என்ற அல்குர்ஆனின் வார்த்தைகளுக்கு முரணாக இது அமைந்திருக்கின்றது. ஆகவே தான் அல்குர்ஆனுக்கு முரணில்லாத வகையில் அதனைப் புரிய வேண்டும் என்பதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் மாற்று விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாம் வாதிடுகின்றோம்.

அல்லாஹ் கீழ் வானத்திற்கு இறங்கி வருகின்றான் என்று கூறுவதை விட அல்லாஹ்வின் விசேட கண்காணிப்பைச் செலுத்துகின்றான் என்று கூறும் போது குறித்த ஹதீஸையும் ஏற்றுக் கொண்டு, அல்குர்ஆனின் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகின்றது. ஆகவே தான் இப்படியான மாற்று விளக்கத்தை நாம் கொடுக்கின்றோம்.

மனோஇச்சைப்படி ஹதீஸ்களை மறுப்பவர்கள் என்று நம்மைப் பார்த்து மாற்றுக் கருத்துடையோர் சொல்லும் விமர்சனம் உண்மையென்றால், நாம் இந்த இடத்தில் இறைவன் கீழ்வானத்திற்கு இறங்கும் செய்தியை முழுமையாக மறுத்திருக்க வேண்டுமல்லவா?

ஆனால் நாமோ மாற்று விளக்கம் கூறி ஹதீஸை அது உண்மையான ஹதீஸ் தான் என்று நிறுவியிருக்கின்றோம்.

இப்போது சிந்தித்துப் பாருங்கள்! ஹதீஸ்களை மனோ இச்சைப்படி தவ்ஹீத் ஜமாஅத் மறுக்கிறதா? அல்லது ஏற்றுக் கொள்கின்றதா? என்பது தெளிவாகப் புரிந்து விடும்.



# சிந்தனைக்கு முக்கியத்துவமா?

அல்குர்ஆனுக்கு முரணான ஹதீஸ்கள் ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. அவை நபியவர்கள் சொன்னவை கிடையாது என்று தவ்ஹீத் ஜமாஅத் பிரச்சாரம் செய்யும் போது, நமது பிரச்சாரத்தை ஆதாரத்தை முன்வைத்துப் பேச, எழுத திராணியற்றவர்கள் நம்மீது பொய்யான விமர்சனங்களை அள்ளி வீசுவதின் மூலம் இந்த சத்தியக் கொள்கைக்கு அசத்தியச் சாயம் பூசிவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் அல்குர்ஆனுக்கு முரண்படும் செய்திகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறும்போது நம்மை எதிர்க்கும் ஸலபி முத்திரையை ஒட்டிக் கொண்டவர்களும், மத்ஹபுவாதிகளும் “அறிவுக்குப் புலப்படவில்லை” என்று கூறி நாம் ஹதீஸ்களை மறுப்பதாக குற்றம் சாட்டி வருகின்றார்கள்.

அறிவுக்குக்குப் புலப்படாததை எல்லாம் மறுப்பவர்கள் என்ற ரீதியில் இவர்கள் நம்மை விமர்சிப்பதில் துளியும் உண்மை கிடையாது. நபிமொழியை விட நமது அறிவே மேலானது, அறிவுக்குப் பொருந்தவில்லை எனில் மறுத்துவிட வேண்டியது தான் என்பதை என்றைக்கும் நாம் பிரச்சாரம் செய்தது கிடையாது.

மாறாக அறிவுக்குப் புலப்படாத எண்ணற்ற நபிமொழிகளை நாம் நம்பி நடைமுறைப்படுத்தவே செய்கிறோம்.

**காற்றுப் பிரிதல் மூலம் வுழூஃ முறிந்தால் எந்த இடத்தை கழுவுவது?**

காற்றுப் பிரிதல் நிகழ்ந்தால் வுழூஃ முறிந்து விடும் என்பது நபிமொழி.

ஹதஸ் ஏற்பட்டவனின் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) கூறினார்கள். அப்போது “ஹள்ரமவ்த்’ என்ற ஊரைச் சேர்ந்த ஒருவர் “அபூஹுரைராவே! ஹதஸ் என்றால் என்ன?” என்று கேட்டார். அதற்கு அபூஹுரைரா (ரலி), “சப்தத்துடனோ அல்லது சப்தமின்றியோ காற்றுப் பிரிவது தான்” என்று விளக்கமளித்தார்கள்.

நூல்: புகாரி 135, 176

காற்றுப் பிரிதல் நிகழ்வது ஒரு இடம், ஆனால் அதற்காக நாம் வுழூஃ செய்யும் போது கழுவுவது இதர இடங்கள் ஆகும். காற்றுப் பிரிதல் ஏற்பட்ட பின்புறத்தைத் தவிர கை, கால், முகம் என கழுவி விட்டுச் செல்வது அறிவுக்கு புலப்படவில்லை தான்.

அறிவுக்குப் புலப்படாததை மறுப்பது இந்த ஜமாஅத்தின் கொள்கையாக இருந்தால் இந்த ஹதீஸை மறுத்திருக்க வேண்டுமே!

**காலுறை அணிந்தவர்கள் மஸ்ஹ் செய்ய வேண்டிய இடம் எது?**

மேலும் காலுறை அணிந்தவர்கள் வுழூஃ செய்யும் போது காலை கழுவுதற்குப் பதிலாக, காலுறையின் மேற்புறம் மஸஹ் செய்யலாம் என்ற சலுகையை நபிகளார் வழங்கியுள்ளார்கள். இதுவும் நபிமொழிதான்.

நான் ஒரு பிரயாணத்தில் நபி (ஸல்) அவர்களோடு இருந்தேன். நபி (ஸல்) அவர்கள் (இயற்கைத்) தேவைக்காகச் சென்றார்கள். நான் நபி (ஸல்) அவர்களுக்குத் தண்ணீர் ஊற்றினேன். அதில் நபி (ஸல்) அவர்கள் வுழூஃச் செய்தார்கள். அப்போது முகத்தையும், இரு கைகளையும் கழுவினார்கள். தலைக்கு மஸஹ் செய்தார்கள். இரு காலுறைகள் மீதும் மஸஹ் செய்தார்கள்.

அறிவிப்பவர் : முகீரா (ரலி),
நூல்கள் : புகாரீ (182), முஸ்லிம் (404)

நபி (ஸல்) அவர்கள் தமது காலுறைகளின் மேற்புறத்தில் மஸஹ் செய்ததை நான் பார்த்துள்ளேன்.

அறிவிப்பவர் : அலீ (ரலி),
நூல்கள் : அபூதாவூத் (140), அஹ்மத் (699)

காலுறையில் மஸஹ் செய்வதாக இருந்தால் அதற்கு தகுதியான இடம் அதன் கீழ்ப்புறம் தான். ஏனெனில் காலுறையின் கீழ்ப்புறம் தான் அசுத்தமடையும்.

அசுத்தமாகும் கீழ்ப்பகுதியின் மேல் மஸஹ் செய்வதை விட்டுவிட்டு மேல்புறம் மஸஹ் செய்வது அறிவுக்குப் புலப்படவில்லையே!

அறிவுக்குப் புலப்படாததை மறுப்பது இந்த ஜமாஅத்தின் கொள்கையாக இருந்தால் இந்த ஹதீஸையும் மறுத்திருக்க வேண்டுமே!

**மாதவிலக்கு ஏற்பட்ட பெண் ஏன் தொழுகையைக் களா செய்யக் கூடாது?**

பெண்கள் மாதவிலக்கு ஏற்பட்டால் தொழுவது, நோன்பு நோற்பது கூடாது.



மாதவிலக்கு காலத்தில் விடுபட்ட கடமையான நோன்பை களாச் செய்ய வேண்டும், ஆனால் தொழுகையை களாச் செய்ய தேவையில்லை என்பது நபிமொழி.

நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த காலத்தில் மாதவிடாய் ஏற்பட்டுத் தூய்மையடைவோம். அப்போது விடுபட்ட நோன்பை களாச் செய்யுமாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிடுவார்கள். விடுபட்ட தொழுகைகளை களாச் செய்யுமாறு கட்டளையிட மாட்டார்கள்.

அறிவிப்பவர்: அன்னை ஆயிஷா (ரலி),
நூல்: முஸ்லிம் 508

தொழுகை, நோன்பு இரண்டும் வணக்க வழிபாடுகள் தான். நோன்பை களாச் செய்ய அனுமதித்து, தொழுகையைக் களாச் செய்ய கூடாது என்று சட்டம் சொல்வதும் அறிவுக்கு புலப்படவில்லைதான்.

ஒரு குவளை பாலில் 70 க்கும் மேற்பட்டோர் வயிறாற அருந்தியது, சிறிதளவு தண்ணீரில் அதிகமான நபர்கள் வுழூஃச் செய்தது போன்ற நபிகள் நாயகம் வாழ்வில் நடந்த அற்புத நிகழ்வுகளும் அறிவுக்குப் புலப்படவில்லை தான்.

இப்படி சொர்க்கம், நரகம், மறுமை, மரணித்த பின் எழுப்பப்படுதல் போன்ற எத்தனையோ அறிவுக்குப் புலப்படாத விஷயங்களை நபிமொழி உறுதிப்படுத்திய பின் அவற்றை உறுதியாக நம்புவதோடு தர்க்கரீதியான வாதங்களோடு அதை மக்களிடையே பிரச்சாரமும் செய்து வருகிறது.

அறிவுக்குப் புலப்படாதவற்றை மறுப்பது இந்த ஜமாஅத்தின் கொள்கை எனில் இவைகளை மறுத்திருக்க வேண்டுமே.

இதிலிருந்து இவர்களின் குற்றச்சாட்டு சத்தியத்தை நோக்கி வரும் மக்கள் கூட்டத்தைத் தடுப்பதற்காக கூறும் அல்லது அவர்களது கவனத்தை திசை திருப்பும் நோக்கில் சொல்லப்படும் பொய்க்குற்றச்சாட்டே என்பதை அறியலாம்.

அறிவுக்குப் புலப்படாத நபிமொழிகளை மறுத்து விடுகிறது என்ற வாதம் எதிரிகளால் திரித்துக் கூறப்படும் பொய்யே என்பது தெளிவாக அம்பலமாகிறது.

## நபியின் சளியை நபித் தோழர்கள் முகத்திலும் மேனியிலும் பூசிக் கொண்டார்களா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பான எந்த ஹதீஸாக இருந்தாலும் அது திருக்குர்ஆனுக்கும் இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளுக்கும் மாற்றமாக இருந்தால் அது ஆதாரப்பூர்வமான ஹதீஸ் என்ற நிலையை அடையாது. குறிப்பிட்ட நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது மட்டும் அல்லது அதைச் சொல்பவர் நம்பகமானவர் என்பது மட்டும் ஒரு ஹதீஸை ஆதாரப்பூவமானதாக ஆக்கிடாது.

ஹுதைபியா உடன்படிக்கையின் போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் எதிரிகளுக்கும் நடந்த உரையாடலும் ஒப்பந்தமும் இடம் பெற்ற சம்பவத்தில் இடம் பெறும் ஒரு பகுதி நபியவர்களின் சளியை நபித் தோழர்கள் தமது முகத்திலும், மேனியிலும் தேய்த்துக் கொள்வார்கள் என்ற கருத்துப்பட பதிவு செய்துள்ளார்கள்.

எதிரிகள் சார்பில் பேச்சுவார்த்தைக்கு வந்திருந்த உர்வா பின் மஸ்வூத் என்பவர் அதாவது முஸ்லிமல்லாத ஒருவர் கூறியதாக புகாரியில் ஒரு செய்தி இடம் பெற்றுள்ளது.

ثم إن عروة جعل يرمق أصحاب النبي صلى الله عليه وسلم بعينيه قال فوالله ما تنخم رسول الله صلى الله عليه وسلم نخامة إلا وقعت في كف رجل منهم فدلك بها وجهه وجلده وإذا أمرهم ابتدروا أمره وإذا توضأ كادوا يقتتلون على وضوئه وإذا تكلم خفضوا أصواتهم عنده وما يحدون إليه النظر تعظيما له فرجع عروة إلى أصحابه فقال أي قوم والله لقد وفدت على الملوك ووفدت على قيصر وكسرى والنجاشي والله إن رأيت ملكا قط يعظمه أصحابه ما يعظم أصحاب محمد صلى الله عليه وسلم محمدا والله إن تنخم نخامة إلا وقعت في كف رجل منهم فدلك بها وجهه وجلده وإذا أمرهم ابتدروا أمره وإذا توضأ كادوا يقتتلون على وضوئه وإذا تكلم خفضوا أصواتهم عنده وما يحدون إليه النظر تعظيما له وإنه قد عرض عليكم خطة رشد فاقبلوها فقال رجل من بني كنانة دعوني آتيه فقالوا ائته

-பிறகு உர்வா பின் மஸ்வூத், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களைத் தமது இரு கண்களால் கூர்ந்து பார்க்கத் தொடங்கினார். அல்லாஹ்வின் மீதாணையாக! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போது (தொண்டையைச் செருமி) சளி துப்பினாலும், உடனே அதை அவர்களின் தோழர்களில் ஒருவர், தன் கையில் பிடித்துத் தன் முகத்திலும், மேனியிலும் தேய்த்துக் கொள்கிறார்கள். நபிகள் நாயகம்



(ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்குக் கட்டளையிட்டால் அவர்கள் உடனே அதை நிறைவேற்றிட போட்டி போட்டுக் கொண்டு ஒருவரையொருவர் முந்திக் கொள்கிறார்கள். நபியவர்கள் அவர்கள் வுழூஃ செய்து எஞ்சிய தண்ணீரைப் பிடித்து (தங்கள் மேனியில் தேய்த்துக் கொள்வதற்காக ஒருவரோடொருவர் சண்டை போடுமளவிற்குச் சென்று விடுகிறார்கள்.

அறிவிப்பவர் : மிஸ்வர் பின் மக்ரமா (ரலி),
நூல் : புகாரி 2731

இதில் அறிவிப்பாளர்கள் ரீதியாக எந்தக் குறையும் இல்லை. என்றாலும் இது முஸ்லிமல்லாதவரின் கூற்றாகத் தான் இடம் பெற்றுள்ளது. ஒருவருக்கு முழுமையாகக் கட்டுப்படும் மக்களைக் காணும் போது இவரது சளியைக் கூட மேனியில் பூசிக் கொள்பவர்கள் என்று மிகைபடக் கூறும் வழக்கம் உள்ளது. வெள்ளை வெளேர் நிறத்தில் உள்ளவரைப் பற்றி கூறும் போது இவரின் வெளிச்சம் இருக்கும் போது விளக்கு தேவைப்படாது என்று கூறுவது போல் இதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

நபித்தோழர்கள் நபிக்குக் கட்டுப்பட்டதைக் கண்டு வியந்த உர்வா பின் மஸ்வூத் என்பார் இவர் சளியைத் துப்பினால் ஒவ்வொருவரும் தங்கள் கைகளில் அதைத் தாங்குவார்கள் போல் உள்ளதே என்று மிகைபடக் கூறினார் என்று இதை எடுத்துக் கொண்டால் இதற்கு நேரடிப் பொருள் கொள்ள கூடாது. அதிகம் கட்டுப்படுகிறார்கள் என்ற கருத்தைத் தான் கொள்ள வேண்டும். இது போல் வருகின்ற செய்திகள் அனைத்தையும் இப்படிப் புரிந்து கொண்டால் இதில் மார்க்க அடிப்படையில் குறைகாண முடியாது. இப்படி கருத்து கொண்டால் இது ஆதாரப்பூர்வமானது என்று ஏற்றுக் கொள்வதில் எந்தத் தயக்கமும் தேவை இல்லை.

அவ்வாறு இல்லாமல் நிஜமாக நபிகள் நாயகம் எச்சிலைத் துப்பும் போது அதைப் பிடித்து உடல் முழுவதும் பூசிக் கொண்டார்கள் என்று நேரடியான கருத்து என்று எடுத்துக் கொண்டால் அப்போது இது ஆதாரமற்ற செய்தி என்ற நிலைக்கு இறங்கி விடும்.

இந்தக் கருத்து சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், திருக்குர்ஆன் போதனைக்கும் ஏனைய ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களுக்கும் முரணாகவும் ஆகிவிடும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவர்களின் ஒட்டு மொத்த அறிவுரைகள் மூலம் நாம் அறிந்து வைத்துளோம். இது போல் அவர்கள் முன்னால் நடந்து இருந்தால் அதைக் கண்டு வெறுப்பவர்களாகத் தான் அவர்கள்

இருந்திருப்பார்கள். மனிதன் இயல்பாகவே அருவருப்படையும் செயலை தன் முன்னால் தனக்காக செய்யும் போது அதைக் கண்டு மகிழ்வது அவர்களின் நற்பண்புகளுக்கும் பொருந்தவில்லை. நபியின் இந்தப் பொதுவான பண்புகளைக் கூறும் எல்லா ஆதாரங்களுடனும் இந்தச் செய்திக்கு நேரடிப் பொருள் கொடுத்தால் அது மோதுகிறது.

**சளி அருவருப்பானது**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே சளியை அருவருக்கத்தக்கது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட நபியவர்கள் தமது சளியை முகத்திலும், மேனியிலும் பூசிக்கொள்ள அனுமதித்திருக்க மாட்டார்கள்.

கிப்லாத் திசையில் (காறி உமிழப்பட்டிருந்த) சளியை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டார்கள். இது அவர்களுக்கு மன வருத்தத்தை அளித்தது. அதன் பிரதிபலிலிப்பு அவர்களின் முகத்திலும் காணப்பட்டது. உடனே அவர்கள் எழுந்து தமது கையால் அதைச் சுரண்டி (சுத்தப்படுத்தி) னார்கள். பிறகு "உங்களில் ஒருவர் தொழுகையில் நின்றுகொண்டிருக்கும் போது "அவர் தம் இறைவனுடன் அந்தரமாக உரையாடுகிறார்" அல்லது "அவருக்கும் கிப்லாவுக்கும் இடையே அவருடைய இறைவன் இருக்கின்றான்". ஆகவே, எவரும் தமது கிப்லாத் திசை நோக்கிக் கண்டிப்பாக உமிழ வேண்டாம். தமது இடப்புறமோ அல்லது தமது பாதங்களுக்கு அடியிலோ உமிழ்ந்துகொள்ளட்டும்" என்று கூறிவிட்டுப் பிறகு, தமது மேலங்கியின் ஓர் ஓரத்தை எடுத்து அதில் உமிழ்ந்து அதன் ஒரு பகுதியை மற்றொரு பகுதியுடன் கசக்கிவிட்டு, "அல்லது இவ்வாறு அவர் செய்துகொள்ளட்டும்" என்று சொன்னார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் (ரலி) அவர்கள்
நூல் : புகாரி 405

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (பள்ளிவாசலின்) கிப்லாத் திசையிலுள்ள சுவரில் "மூக்குச் சளியை" அல்லது "எச்சிலை" அல்லது "காறல் சளியை"க் கண்டார்கள். உடனே அதை சுரண்டி (சுத்தப்படுத்தி) விட்டார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி),
நூல் : புகாரி 407

உங்களில் ஒருவர் பள்ளிவாசலில் சளியை உமிழ்வதாக இருந்தால் அது முஸ்லிமின் மேனியில் பட்டு அல்லது அவரது ஆடையில் பட்டு அவருக்கு



தொல்லை தராதவாறு சளியை மறைக்கட்டும் என நபிகள் நாயகம் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஸஃது பின் அபீவக்காஸ்
நூல் : அஹ்மத் 1461

சளி அருவருக்கத்தக்கது என்றும் அது யாருடைய மேனியிலும் பட்டுவிடாதவாறு எச்சில் உமிழுமாறும் நபிகள் நாயகம் கூறியுள்ளார்கள். நமது எச்சில், சளி பிறருடைய மேனியிலோ, ஆடையிலோ படுவது அவருக்குத் தொல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் நபியவர்கள் சுத்தத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதை ஏராளமான குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களில் காண்கிறோம்.

இவை அனைத்துக்கும் மாற்றமாக நிச்சயம் நபித்தோழர்கள் செய்திருந்தால் அதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுக்காமல் இருந்திருக்க மாட்டார்கள்.

நபிகளார் எந்த ஒரு சமயத்திலும் தான் புகழப்பட வேண்டும், தனக்கு ஏனையோர் மரியாதை செய்ய வேண்டும் என்று விரும்பியதில்லை. ஆதலால் தான் தனக்காக எழுந்து நிற்பதைத் தடை செய்து பிறர் தனக்காக எழுந்து நிற்க வேண்டும் என்று விரும்புவன் தன் இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று பகிரங்கமாக தெரிவித்தார்கள்.

நபிகள் நாயகத்துக்குப் பின் முஸ்லிம் சாம்ராஜ்யத்தின் ஐந்தாவது அதிபராகத் திகழ்ந்தவர் முஆவியா (ரலி). அவர் வெளியே வந்த போது அவரைக் கண்ட அப்துல்லாஹ் பின் ஸுபைர் அவர்களும், இப்னு சப்வான் அவர்களும் எழுந்து நின்றனர். உடனே முஆவியா (ரலி) "அமருங்கள்" என்றார். "தனக்காக மக்கள் எழுந்து நிற்க வேண்டும் என்று யார் விரும்புகிறாரோ அவர் தனது தங்குமிடத்தை நரகத்தில் ஏற்படுத்திக் கொள்கிறார்" என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியதை நான் செவியுற்றுள்ளேன் என்றும் முஆவியா (ரலி) கூறினார்.

நூல்கள் : திர்மிதி 2769 அபூதாவூத் 4552

உலகத்தில் நபிகள் நாயகத்தை விட எங்களுக்கு விருப்பமான ஒருவரும் இருந்ததில்லை. ஆயினும் அவர்கள் எங்களை நோக்கி வரும் போது நாங்கள் அவர்களுக்காக எழ மாட்டோம். இதை அவர்கள் கடுமையாக வெறுப்பார்கள் என்பதே இதற்குக் காரணம்.

அனஸ் (ரலி) இதை அறிவிக்கிறார்.
நூல்கள் : அஹ்மத் 12068, 11895 திர்மிதீ 2678

நபிகள் நாயகத்தை அந்த மக்கள் நேசித்தது போல் எந்த மக்களும் எந்தத்

தலைவரையும் நேசித்ததில்லை. ஆனாலும் நபிகள் நாயகம் (ஸல்) வரும் போது சபையில் இருக்கும் ஒருவரும் அவர்களுக்காக எழக் கூடாது என்பதைத் தெளிவாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒரு மனிதனுக்குச் செய்யப்படும் சாதாரண மரியாதையைக் கூட மாபெரும் ஆன்மீகத் தலைவரான நபிகள் நாயகம் (ஸல்) ஏற்கவில்லை. இதனால் மற்றவர்களின் சுயமரியாதை பாதிக்கப்படும் என்பதில் கவனம் செலுத்துகிறார்கள்.

தனக்காக எழுந்து நிற்பதையே வெறுத்த நபிகள் நாயகம் தமது சளியை மக்கள் முகத்தில் பூசிக் கொள்வதை அனுமதித்திருப்பார்களா? இது எழுந்து நின்று மரியாதை செய்வதை விடவும் மிக மோசமானதும் அருவருக்கதக்கதும் இல்லையா? சுயமரியாதையை வலியுறுத்தி போதித்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தொண்டர்களின் சுயமரியாதைக்குப் பெரிதும் இழுக்கான இக்காரியத்தை எப்படி அனுமதித்திருப்பார்கள்?

**தனித்து தெரிவதை விரும்பவில்லை**

ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் நடந்து சென்றார்கள். அவர்களின் தலை மீது மட்டும் நிழல் படுவதைக் கண்டார்கள். தலையை உயர்த்திப் பார்த்த போது ஒரு துணிக் குடையால் அவர்களுக்கு நிழல் தரப்படுவதைக் கண்டார்கள். விடுங்கள் எனக் கூறி அந்தத் துணியை வாங்கி மடக்கி வைத்தார்கள். நானும் உங்களைப் போன்ற மனிதன் தான் எனவும் கூறினார்கள்.

நூல் : தப்ரானி

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ் பயணம் மேற்கொண்ட போது குடி தண்ணீர் விநியோகிக்கப்படும் தண்ணீர்ப் பந்தலுக்கு வந்தார்கள். குடிக்க தண்ணீர் கேட்டார்கள். நபிகள் நாயகத்தின் பெரிய தந்தை அப்பாஸ், தண்ணீர்ப் பந்தலின் பொறுப்பாளராக இருந்தார். அவர் தமது இளைய மகன் ஃபழ்லு என்பாரை அழைத்து, "வீட்டிற்குச் சென்று உன் தாயாரிடம் நபிகள் நாயகத்துக்காகக் குடிதண்ணீர் வாங்கி வா" என்று கூறினார். உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "இந்தத் தண்ணீரையே தாருங்கள்" எனக் கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! இதில் மக்கள் தங்கள் கைகளைப் போட்டுள்ளனரே" என்று அப்பாஸ் கூறினார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "பரவாயில்லை! இதனையே எனக்குக் குடிக்கத் தாருங்கள்" எனக் கேட்டு அந்தத் தண்ணீரைக் குடித்தார்கள். பின்னர் புனிதமான ஸம்ஸம் கிணற்றுக்கு வந்தார்கள். அங்கே சிலர் அந்தக் கிணற்று நீரை மக்களுக்கு வழங்கிக் கொண்டும், அது தொடர்பான பணிகளிலும் ஈடுபட்டிருந்தனர். அவர்களை நோக்கி "இந்தப் பணியைத் தொடர்ந்து செய்யுங்கள்! நீங்கள்



சிறப்பான பணியையே செய்கிறீர்கள். நானும் இப்பணியைச் செய்வதால் நீங்கள் எனக்காக ஒதுங்கிக் கொள்வீர்கள் என்ற அச்சம் இல்லாவிட்டால் நானும் கிணற்றில் இறங்கி இந்தத் தோளில் தண்ணீர் சுமந்து மக்களுக்கு விநியோகம் செய்திருப்பேன்" எ.ன்று கூறினார்கள்.

நூல் : புகாரி 1636

ஒரு மனிதர் முதன் முதலாக நபிகள் நாயகத்தைச் சந்திக்க வந்தார். பொதுவாக மன்னர்கள் முன்னிலையில் நடுநடுங்கிக் கொண்டு தான் மக்கள் நிற்பார்கள். நபிகள் நாயகத்தையும் அது போல் கருதிக்கொண்டு உடல் நடுங்கிட வந்தார். "சாதாரணமாக இருப்பீராக! உலர்ந்த இறைச்சியைச் சாப்பிட்டு வந்த குரைஷி குலத்துப் பெண்ணுடைய மகன் தான் நான்" என்று அவரிடம் கூறி அவரை சகஜ நிலைக்குக் கொண்டு வந்தார்கள்.

நூல் இப்னு மாஜா 3303

சாதாரண இந்த மரியாதையையே ஏற்றுக் கொள்ளாத நபிகள் நாயகம் அவர்கள் தமது சளியைப் பிறர் முகத்தில் பூசி தனக்கு மரியாதை செய்வதை ஏற்றிருப்பார்களா? இப்படி மெய்யாகவே நடந்திருந்தால் இதைக் கண்டிக்காமல் மௌனியாக இருந்திருப்பார்களா?

**நானும் மனிதனே**

"எனக்கு இறைவனிடமிருந்து செய்தி வருகிறது என்பதைத் தவிர மற்ற படி நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான்" என்று அழுத்தம் திருத்தமாக நபிகள் கூறினார்கள். அவ்வாறு கூற வேண்டும் என்று இறைவனே தமக்கு கட்டளையிட்டதாகக் கூறினார்கள். இந்தக் கட்டளையை திருக்குர்ஆன் 18:110, 41:6 ஆகிய வசனங்களில் காணலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பாருங்கள்.

நான் ஹியரா என்னும் நகருக்குச் சென்றேன். அங்குள்ளவர்கள் தமது தலைவருக்குச் சிரம் பணிந்து கும்பிடுவதைப் பார்த்தேன். "இவ்வாறு சிரம் பணிவதற்கு நபிகள் நாயகமே அதிகத் தகுதியுடையவர்கள்" என்று (எனக்குள்) கூறிக் கொண்டேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து "நான் ஹியரா என்னும் ஊருக்குச் சென்றேன். மக்கள் தமது தலைவருக்குச் சிரம் பணிவதைக் கண்டேன். நாங்கள் சிரம் பணிந்திட நீங்களே அதிகம் தகுதியுடையவர்" என்று கூறினேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "(எனது மரணத்திற்குப் பின்) எனது அடக்கத் தலத்தைக் கடந்து செல்ல நேர்ந்தால் அதற்கும் சிரம் பணிவீரோ?" எனக் கேட்டார்கள். "மாட்டேன்" என்று நான் கூறினேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "ஆம்:

அவ்வாறு செய்யக் கூடாது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குச் சிரம் பணியலாம் என்றிருந்தால் கணவனுக்காக மனைவியை அவ்வாறு செய்யச் சொல்யிருப்பேன்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : கைஸ் பின் ஸஅத் (ரலி)

நூல் : அபூதாவூத் 1828

எங்கள் தலைவரே! எங்கள் தலைவரின் மகனே! எங்களில் சிறந்தவரே! எங்களில் சிறந்தவரின் மகனே! என்று ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார். அதைக் கேட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "மனிதர்களே! இறையச்சத்தைக் கவனமாகப் பேணிக் கொள்ளுங்கள்! ஷைத்தான் உங்களைத் திசை திருப்பி விட வேண்டாம். நான் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் ஆவேன். அல்லாஹ்வின் அடியானும், அவனது தூதருமாவேன். எனக்கு அல்லாஹ் தந்த தகுதிக்கு மேல் என்னை உயர்த்துவதை அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் விரும்ப மாட்டேன்" என்றார்கள்.

நூல் : அஹ்மத் 12093

"கிறித்தவ சமுதாயத்தினர் மர்யமின் மகன் ஈஸாவை வரம்பு மீறிப் புகழ்ந்தது போல் என்னை வரம்பு மீறிப் புகழாதீர்கள். நான் அல்லாஹ்வின் அடியானே. எனவே அல்லாஹ்வின் அடியான் என்றும் அவனது தூதர் என்றும் என்னைப் பற்றிக் கூறுங்கள்" என்று மேடையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரகடனம் செய்தார்கள்.

நூல் : புகாரி: 3445

நபிகளாரின் சளியை மக்கள் தங்கள் முகத்தில் பூசிக் கொண்டு நபிகள் நாயகத்தின் தகுதியை விடவும் உயர்த்தும், வரம்பு மீறிய மரியாதையை அளிக்கும் இச்செயலை நபிகளார் அனுமதித்திருப்பார்களா?

**மகத்தான நற்குணம்**

நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர்.

அல்குர்ஆன் 68 : 4

நற்குணத்தை விரும்பும் நாமே இதைச் சகிக்க மாட்டோம் எனில் உயர்ந்த நற்குணத்தில் இருக்கிற நபிகளார் இதை எப்படி சகித்திருப்பார்கள்?

நபிகளாரின் சளியை ஸஹாபாக்கள் தங்கள் முகத்தில் தேய்த்ததாகச் சொல்லப்படும் இந்தச் சம்பவம் அதன் நேரடிப் பொருளில் சொல்லப்பட்டு இருந்தால் இச்சம்பவம் குர்ஆன்,



ஹதீஸில் சொல்லப்பட்டிருக்கும் நபிகளாரின் நற்குணத்திற்கு எதிராக, மாமனிதர் என்ற நற்பெயருக்கு களங்கம் கற்பிப்பதாக உள்ளது.

ஆகவே மேற்கண்ட சளி பற்றிய செய்தியை நேரடி பொருளில் புரிந்து கொண்டால் அது இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாட்டிற்கும், புனித குர்ஆனின் வசனங்களுக்கும் மாற்றமாக அமைந்துவிடும் என்பதினால்,

நபித்தோழர்கள் நபிக்குக் கட்டுப்பட்டதைக் கண்டு வியந்த உர்வா பின் மஸ்வூத் என்பார் இவர் சளியைத் துப்பினால் ஒவ்வொருவரும் தங்கள் கைகளில் அதைத் தாங்குவார்கள் போல் உள்ளதே என்று மிகைபடக் கூறினார் என்று இதை எடுத்துக் கொண்டால் இதற்கு நேரடிப் பொருள் கொள்ள கூடாது. அதிகம் கட்டுப்படுகிறார்கள் என்ற கருத்தைத் தான் கொள்ள வேண்டும். இது போல் வருகின்ற செய்திகள் அனைத்தையும் இப்படி புரிந்து கொண்டால் இதில் மார்க்க அடிப்படையில் குறைகாண முடியாது. இப்படி கருத்து கொண்டால் இது ஆதாரப்பூர்வமானது என்று ஏற்றுக் கொள்வதில் எந்த தயக்கமும் தேவை இல்லை.

அவ்வாறு இல்லாமல் நிஜமாக நபிகள் நாயகம் எச்சிலைத் துப்பும் போது அதைப் பிடித்து உடல் முழுவதும் பூசிக் கொண்டார்கள் என்று நேரடியான கருத்து என்று எடுத்துக் கொண்டால் அப்போது இது ஆதாரமற்ற செய்தி என்ற நிலைக்கு இறங்கி விடும்,

இந்தக் கருத்து சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், திருக்குர்ஆன் போதனைக்கும் ஏனைய ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களுக்கும் முரணாகவும் ஆகிவிடும்.

# குர்ஆனுக்கு முரண்படும் செய்திகள்


- அஜ்வா பேரிச்சம் பழம் பற்றிய செய்தியின் உண்மை நிலை? 117
- நபியவர்கள் தற்கொலைக்கு முயன்றார்களா? 124
- அபூலஹபின் விரல்களை நரகம் தீண்டாதா? 129
- குரங்கு விபச்சாரம் செய்ததா? 134
- பல்லி பற்றிய ஹதீஸின் நிலை 142
- வேண்டுமென்றே கொலை செய்தவனுக்கு மன்னிப்புண்டா? 147
- உலகைப் படைக்க ஏழு நாட்களா? 158
- காணாமல் போன இரண்டு வசனங்கள் 165
- சுலைமான் நபிக்கு மறைவான அறிவு உண்டா? 181
- நபியவர்கள் அன்னிய பெண்ணுடன் தனித்திருந்தார்களா? 196
- மாடு உழவு செய்வதற்கு மாத்திரம் தான் படைக்கப்பட்டுள்ளதா? 216
- மிஃராஜ் நபித்துவத்திற்கு முன்பு நடந்ததா? 224
- விவசாயக் கருவிகளினால் இழிவு வருமா? 227
- ஸாலிம் பற்றிய செய்தியின் உண்மை நிலை? 232
- சூனியம் பற்றிய ஹதீஸ்களின் விளக்கம் 251
- நபிகளாருக்கு சூனியம் – ஆறு மாத கால ஹதீஸ் பலவீனமா? 286
- சூனியத்தை நம்பியவன் சுவர்க்கம் புகமாட்டான் – என்ற செய்தி பலவீனமானதா? 299
- மூஸா நபி மலக்குள் மவ்துக்கு அடித்தார்களா? 306




## அஜ்வா பேரிச்சம் பழம் பற்றிய செய்தியின் உண்மை நிலை.

சூனியத்திற்குத் தாக்கம் உண்டு என்றும், அதனால் நினைத்த நேரத்தில் நினைத்தவாறு, தான் நினைத்தவர்களுக்கெல்லாம் தாக்கத்தை உண்டாக்கலாம் என்றும் பிரச்சாரம் செய்வோர் தமது கருத்துக்கு வலு சேர்ப்பதற்காக எடுத்து வைக்கும் ஆதாரங்களில் கீழே நாம் விளக்கவுள்ள அஜ்வா பற்றிய செய்தியும் ஒன்றாகும்.

யார் தினமும் காலையில் 07 அஜ்வா வகை பேரீச்சம் பழங்களை உண்டு வருகின்றாரோ அவருக்கு எந்த விஷமோ, சூனியமோ தாக்காது என்பதே குறித்த செய்தியின் உள்ளடக்கமாகும்.

صحيح البخاري ٥٤٤٥ – حَدَّثَنَا جُمْعَةُ بْنُ عَبْدِ اللَّهِ، حَدَّثَنَا مَرْوَانُ، أَخْبَرَنَا هَاشِمُ بْنُ هَاشِمٍ، أَخْبَرَنَا عَامِرُ بْنُ سَعْدٍ، عَنْ أَبِيهِ، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «مَنْ تَصَبَّحَ كُلَّ يَوْمٍ سَبْعَ تَمَرَاتٍ عَجْوَةً، لَمْ يَضُرَّهُ فِي ذَلِكَ اليَوْمِ سُمٌّ وَلاَ سِحْرٌ»

தினந்தோறும் காலையில் ஏழு “அஜ்வா“ (ரகப்) பேரீச்சம் பழங்களைச் சாப்பிடுகின்றவருக்கு, அந்த நாளில் எந்த விஷமும் தீங்களிக்காது: எந்தச் சூனியமும் அவருக்கு இடையூறு செய்யாது.

இதை சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் : புகாரி (5445)

முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ள செய்தி மேலதிக சில தகவல்களுடன் பதியப்பட்டுள்ளது.

صحيح مسلم ـ ٢٦٤٥ – وَحَدَّثَنَا يَحْيَى بْنُ يَحْيَى وَيَحْيَى بْنُ أَيُّوبَ وَابْنُ حُجْرٍ قَالَ يَحْيَى بْنُ يَحْيَى أَخْبَرَنَا وَقَالَ الآخَرَانِ حَدَّثَنَا إِسْمَاعِيلُ – وَهُوَ ابْنُ جَعْفَرٍ – عَنْ شَرِيكٍ – وَهُوَ ابْنُ أَبِى نَمِرٍ (صدوق يخطئ) – عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِى عَتِيقٍ عَنْ عَائِشَةَ أَنَّ رَسُولَ اللَّهِ –صلى الله عليه وسلم– قَالَ « إِنَّ فِى عَجْوَةِ الْعَالِيَةِ شِفَاءً أَوْ إِنَّهَا تِرْيَاقٌ أَوَّلَ الْبُكْرَةِ ».

“மதீனாவின் ஃஆலியா; என்ற பகுதியில் காணப்படும் ஃஅஜ்வா; ஈத்தம் பழத்தில் நோய்க்கு மருந்திருக்கின்றது. அல்லது ஒவ்வொரு காலையிலும் அதைச் சாப்பிடுவது நஞ்சுக்கு மிகச் சிறந்த மருந்தாகும்.”

(முஸ்லிம் : 5462)

மேற்கண்ட செய்தி புஹாரி : 5445, 5768, 5769, 5779, முஸ்லிம் 5460, 5461, 5459, அபூதாவூத் 3876 இன்னும் பல கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அஜ்வா பேரிச்சம் பழம் தொடர்பாகப் பேசும் இந்தச் செய்தி நபியவர்கள் சொல்லவில்லை என்றும் இது தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு செய்தி என்றும் நாம் பிரச்சாரம் செய்து வருகின்றோம். காரணம் இந்தச் செய்தி சொல்லும் தகவல் புனித குர்ஆனில் கருத்துக்கு மாற்றமாக உள்ளது.

**குர்ஆன் கூறும் நிதர்சன உண்மைக்கு மாற்றமானதாகும்.**

ஒரு பொருளுக்கு இல்லாத ஆற்றல் அப்பொருளுக்கு இருப்பதாக யாராவது கூறினால் அந்த ஆற்றலை அவர் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இப்ராஹீம் (அலை) அவர்களின் காலத்தில் ஒரு மன்னன் இறைவனுக்குரிய ஆற்றல் தனக்கு இருப்பதாக வாதிட்டான். இப்ராஹீம் (அலை) அவர்கள் அவன் பொய்யன் என்பதை நிரூபிக்க ஒரே ஒரு கேள்வியை அவனிடம் கேட்டார்கள். என்னுடைய இறைவன் சூரியனை கிழக்கே உதிக்கச் செய்கிறான். மேற்கே மறையச் செய்கிறான். உனக்கு இறைத்தன்மை இருந்தால் கிழக்கே உதிக்கும் சூரியனை மேற்கில் உதிக்குமாறு செய். மேற்கே மறையும் சூரியனை கிழக்கில் மறையுமாறு செய். என்று கேட்டார்கள். அந்த மன்னன் இந்தக் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் வாயடைத்துப்போனான்.

أَلَمْ تَرَ إِلَى الَّذِي حَاجَّ إِبْرَاهِيمَ فِي رَبِّهِ أَنْ آتَاهُ اللَّهُ الْمُلْكَ إِذْ قَالَ إِبْرَاهِيمُ رَبِّيَ الَّذِي يُحْيِي وَيُمِيتُ قَالَ أَنَا أُحْيِي وَأُمِيتُ قَالَ إِبْرَاهِيمُ فَإِنَّ اللَّهَ يَأْتِي بِالشَّمْسِ مِنَ الْمَشْرِقِ فَأْتِ بِهَا مِنَ الْمَغْرِبِ فَبُهِتَ الَّذِي كَفَرَ وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الظَّالِمِينَ (٢٥٨)

தனக்கு அல்லாஹ் ஆட்சியைக் கொடுத்ததற்காக இப்ராஹீமிடம் அவரது இறைவன் குறித்து தர்க்கம் செய்தவனை நீர் அறியவில்லையா? “என் இறைவன் உயிர் கொடுப்பவன்: மரணிக்கச் செய்பவன்” என்று இப்ராஹீம் கூறிய போது, “நானும் உயிர் கொடுப்பேன்: மரணிக்கச் செய்வேன்” என்று அவன் கூறினான். “அல்லாஹ் கிழக்கில் சூரியனை உதிக்கச் செய்கிறான். எனவே நீ மேற்கில் அதை உதிக்கச் செய்!” என்று இப்ராஹீம் கேட்டார். உடனே (ஏக இறைவனை) மறுத்த அவன் வாயடைத்துப் போனான். அநீதி இழைத்த கூட்டத்திற்கு அல்லாஹ் நேர் வழி காட்ட மாட்டான்.

அல்குர்ஆன் (2 : 258)

இப்றாஹீம் நபியவர்கள் எந்த விதத்தில் கேள்வி கேட்டு மன்னன் சொல்வதை அசத்தியம் என்று நிரூபித்தார்களோ அதே விதத்தில் தான் அஜ்வா தொடர்பான செய்தி பற்றியும் நாம் கேள்வி கேட்கின்றோம். குறித்த



செய்தி உண்மையானது, சத்தியமானது, புகாரி இமாம் பதிந்து விட்டால் அது அணைத்தும் உண்மை தான் என்றெல்லாம் பேசுபவர்கள் இதனை நிரூபித்துக் காட்டுவதற்கு பயப்படுவது ஏன்?

இந்தச் செய்தியை சரியான செய்தி என்று வாதிடும் பலரும் இதனை நிரூபித்துக் காட்ட பின்வாங்குவதிலிருந்து, இவர்கள் யாரும் இதனை உளப்பூர்வமாக நம்பவில்லை, நம்மை எதிர்ப்பதற்காக வெற்று வார்த்தைகளை கூறிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சந்தேகமற அறிந்து கொள்ள முடிகின்றது.

அல்லாஹ்வோ, அவனுடைய தூதரோ நிதர்சனத்திற்கு மாற்றமாக பொய் கூற மாட்டார்கள் என்று திருமறைக் குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது.

وَمَنْ أَصْدَقُ مِنَ اللَّهِ حَدِيثًا (٨٧)٤

)وَمَنْ أَصْدَقُ مِنَ اللَّهِ قِيلًا (١٢٢)٤

அல்லாஹ்வை விட அதிக உண்மை பேசுபவன் யார்?

அல்குர்ஆன் (4 : 87)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்களது உள்ளங்கள் ஒத்துக் கொள்ளுமானால், இன்னும் உங்கள் தோல்களும் முடிகளும் (அதாவது உங்கள் உணர்வுகள்) அச்செய்திக்குப் பணியுமானால், இன்னும் அச்செய்தி உங்களு(டைய வாழ்க்கைக்கு)க்கு நெருக்கமாக இருப்பதாக நீங்கள் கருதினால் அ(தைக் கூறுவ)தில் நானே உங்களில் மிகத் தகுதி வாய்ந்தவன். என் பெயரில் (ஏதேனும் ஒரு) செய்தியை நீங்கள் கேள்விப்படும் போது அச்செய்தியை உங்களது உள்ளங்கள் வெறுக்குமானால், இன்னும் உங்களது தோல்களும் முடிகளும் (அதற்குக் கட்டுப்படாமல் அதை விட்டு) விரண்டு ஓடுமானால், இன்னும் அச்செய்தி உங்களு(டைய வாழ்க்கை)க்கு (சாத்தியப்படுவதை விட்டும்) தூரமாக இருப்பதாக நீங்கள் கருதினால் உங்களில் நானே அதை விட்டும் மிகத் தூரமானவன்.

அறிவிப்பவர்: அபூ உஸைத் (ரலி)

நூல்: அஹ்மத் 15478

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொய் எனக் கருதப்படும் ஒரு செய்தியை என்பெயரால் யார் அறிவிக்கிறாரோ அவரும் பொய்யர்களில் ஒருவராவார்.

அறிவிப்பவர்: சமுரா பின் ஜுன்தப் (ரலி)

நூல்: முஸ்லிம் 01

எனவே தான் நடைமுறைப்படுத்த இயலாத இதுபோன்ற ஹதீஸ்கள் நிராகரிக்கப்பட வேண்டியவை என்று ஹதீஸ் கலையில் கூறப்பட்டுள்ளது.

இட்டுக்கட்டப்பட்ட செய்தியை அறிந்து கொள்வதற்கான அடையாளங்களில் ஒன்று: விளக்கம் கொடுக்க முடியாத வகையில் அறிவுக்கு அச்செய்தி மாற்றமாக இருப்பதாகும். அல்லது உறுதியான குர்ஆனுடைய கருத்திற்கு எதிராக அந்தச் செய்தி அமைந்திருக்கும். நடைமுறைக்கும் இயல்பான சூழ்நிலைக்கும் ஒத்து வராத செய்தியும் இந்த வகையில் அடங்கும்.

நூல்: தத்ரீபுர்ராவீ, பாகம்: 1, பக்கம்: 276

**விமர்சனங்களுக்கான விளக்கங்கள்**

அஜ்வா தொடர்பாக மேற்கண்ட செய்தியை உண்மை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பவர்கள் நமக்கு மறுப்பு சொல்வதாகக் கூறிக் கொண்டு சில விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். அந்த வகையில் அவர்களின் விமர்சனங்களுக்குரிய பதில்களையும் நாம் இங்கு பார்க்கலாம்.

**விமர்சனம்**

அஜ்வா பேரிச்சம் பழத்தைச் சாப்பிட்டால் விஷமோ, சூனியமோ தாக்காது என்றால் அதனை வெறுமனே நினைத்தவாறு சாப்பிடுவது என்று அர்த்தமல்ல, குறித்த செய்தியில் சில நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளின் படி அதனை சாப்பிட்டால் தான் விஷமோ, சூனியமோ தாக்குவதை விட்டும் நாம் தப்பிக்க முடியும்.

- குறித்த பேரிச்சம் பழங்களை காலையில் சாப்பிட வேண்டும்.
- ஏழு பேரிச்சம் பழங்கள் சாப்பிட வேண்டும்.
- அவை அஜ்வா வகை பேரீச்சம் பழங்களாக இருக்க வேண்டும்.
- குறித்த அஜ்வா வகை பேரிச்சம் பழங்கள் மதீனாவின் நஜ்த் பகுதியை நோக்கிய ஆலியா பகுதியில் விளைந்திருக்க வேண்டும்.
- ஹர்ரா என்றழைக்கப்படும் இரண்டு கருங்கல் பாறைகள் நிறைந்த இடத்தில் அது விளைந்திருக்க வேண்டும்.

அப்படி சாப்பிட்டால் தான் பாதிப்பில் இருந்து தப்பிக்க முடியும் என்று இவர்கள் வாதிடுகின்றார்கள்.



**நமது விளக்கம்**

அஜ்வா பற்றிய செய்தியில் அஜ்வா பேரிச்சம் பழத்தைச் சாப்பிட்டால் விஷமோ சூனியமோ தாக்காது என்று இடம் பெற்றுள்ளது.

அஜ்வா பற்றிய அனைத்து செய்திகளையும் ஆய்வு செய்து பார்த்தால் மேலே இவர்கள் குறிப்பிடுவதைப் போல சில நிபந்தனைகளை நாம் அறிந்து கொள்ள முடியும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் இந்த அனைத்து நிபந்தனைகளின் படி ஒருவர் சாப்பிட்டாலும் நாம் கேட்கும் கேள்வி பதிலில்லாமல் நிற்கத்தான் போகின்றது என்பதை இவர்கள் விளங்கவில்லை.

இவர்களின் வாதப்படி ஒருவர்

- குறித்த பேரிச்சம் பழங்களை காலையில் சாப்பிடட்டும்.
- ஏழு பேரிச்சம் பழங்கள் சாப்பிடட்டும்.
- அவை அஜ்வா வகை பேரீச்சம் பழங்களாகவே அவை இருக்கட்டும்.
- குறித்த அஜ்வா வகை பேரிச்சம் பழங்கள் மதீனாவின் நஜ்த் பகுதியை நோக்கிய ஆலியா பகுதியில் விளைந்ததாகவே இருக்கட்டும்.
- ஹர்ரா என்றழைக்கப்படும் இரண்டு கருங்கல் பாறைகள் நிறைந்த இடத்தில் அது விளைந்திருக்கட்டும்,

இவற்றினால் எந்தப் பிரச்சினையும் இல்லை. குறித்த நிபந்தனைகள் அடங்கிய பேரிச்சம் பழத்தை ஒருவர் சாப்பிட்டு விட்டு விஷத்தை அருந்தினால் அவருக்கு விஷம் பாதிக்குமா? இல்லையா? என்பதுதான் கேள்வி.

இவ்வளவு நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தி, விஷத்தை குடித்துக் காட்டி குறித்த அஜ்வா பற்றிய செய்தி உண்மை தான் என்று யாராவது நிரூபித்து விடலாமே?

**உண்மை என்பவர்கள் உளப்பூர்வமாக நம்பவில்லை**

அஜ்வா பற்றிய செய்தி உண்மையானது, புகாரியில் இடம் பெற்றுள்ளது, முஸ்லிம் இமாம் பதிந்துள்ளார், அது சத்தியமானது, அறிவிப்பாளர் தொடர் சரியானது ஆகவே அதனை நாம் நம்ப வேண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் பேசியும், எழுதியும் வருபவர்கள் யாரும் இதனை நிரூபித்துக் காட்ட தயாராக இல்லை.

உண்மை என்று வாயளவில் பேசுபவர்கள், இதனை உளப்பூர்வமாக உண்மை என்று நம்பவில்லை என்பதனை இவர்கள் “நிரூபித்துக் காட்ட பயப்படுவதிலிருந்து” தெளிவாக அறிய முடிகின்றது.

அல்லாஹ்வின் தூதர் அஜ்வா விஷத்தை முறிக்கும் என்று சொல்லியுள்ளார்கள் என்று பேச முடியும் என்றால் அதனை நிரூபிக்க ஏன் தயக்கம்? அல்லாஹ்வின் தூதர் உண்மை மாத்திரமே பேசுவார்கள். அவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள். அப்படியிருக்கும் நிலையில் அஜ்வா பற்றிய அல்லாஹ்வின் தூதர் சொல்லியிருப்பது உண்மை என்றால் அதனை நிரூபித்துக் காட்டுவதில் ஏன் தயக்கம் காட்ட வேண்டும்.

இறைவனின் தூதர் உண்மை மாத்திரம் தான் பேசுவார்கள் அவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள், அவர்கள் சொன்னால் அது சத்தியம் தான் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் அஜ்வா பற்றிய மேற்கண்ட செய்தியை நபியவர்கள் சொல்லவில்லை, நபிக்கும் மேற்கண்ட செய்திக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது தான் எமது வாதமாகும்.

**விமர்சனம்**

**நிரூபித்துக் காட்டுங்கள் என்பது தற்கொலைக்குத் தூண்டுவதாகுமா?**

அஜ்வா பற்றிய செய்தி உண்மை என்றால் அதனை நிரூபித்துக் காட்டுங்கள் என்று நாம் வாதிடும் போது, தற்கொலை செய்வதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்று இவர்கள் வாதிடுகின்றார்கள். அதற்கு ஆதாரமாக தற்கொலை தொடர்பான கீழுள்ள செய்தியை எடுத்துக் காட்டுகின்றார்கள்.

மலையின் மீதிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொள்கிறவர் நரக நெருப்பில் (தள்ளப்பட்டு மேலிருந்து கீழே) என்றைக்கும் நிரந்தரமாக குதித்துக் கொண்டேயிருப்பர். விஷம் குடித்து தற்கொலை செய்துகொள்கிறவர் தம் விஷத்தைக் கையில் வைத்திருந்தபடி நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக குடித்துக் கொண்டேயிருப்பார். ஒரு கூரிய ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறவரின் கூராயுதத்தை அவர் தம் கையில் வைத்துக்கொண்டு நரக நெருப்பில் தம் வயிற்றில் தாமே என்றென்றும் நிரந்தரமாக அதனால் குத்திக் கொண்டேயிருப்பார்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.
புகாரி - 5778



**நமது விளக்கம்**

தற்கொலை செய்வது கூடாது அது நிரந்தர நரகத்திற்கு உரிய செயல் என்பதில் நமக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

ஆனால் அஜ்வா பற்றிய செய்தியை நிரூபித்துக் காட்டுங்கள் என்பது தற்கொலைக்குத் தூண்டுவதல்ல, உண்மை என்று அவர்கள் நம்புவதை அவர்களே நிரூபித்துக் காட்டுவது எப்படி தற்கொலையாகும்?

அஜ்வா பற்றிய செய்தி உண்மையானது, நபியவர்கள் தான் அப்படி சொன்னார்கள் என்று நம்புபவர்கள் அதனை நிரூபித்துக் காட்டினால் அதற்குப் பெயர் தற்கொலையல்ல: சத்தியத்தை நிரூபிப்பது.

ஆனால் இவர்கள் பாசையில் அதற்கு தற்கொலை என்று பெயர் சொன்னால் இவர்கள் தெளிவான பொய்யர்கள் என்பதை நிரூபிக்கப்படுகின்றது.

காரணம்: அஜ்வா பற்றிய செய்தியை உண்மை என்றும், அது ஹதீஸ் என்றும் ஒரு புறம் கூறிவிட்டு, அதனை நிரூபிக்கச் சொன்னால் தற்கொலை என்கின்றார்கள். இதிலிருந்து அஜ்வாவை சாப்பிட்டு விட்டு விஷத்தைக் குடித்தால் செத்துவிடுவோம் என்பதில் அவர்களுக்கும் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆகவே நம்மை எதிர்ப்பதற்காக குறித்த செய்தியை உண்மை என்று வீம்புக்கு வாதிடுகின்றார்களே தவிர, அதனை உளப்பூர்வமாக அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மேலும் நிரூபணமாகின்றது.

# நபியவர்கள் தற்கொலைக்கு முயன்றார்களா?

நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன் வஹீ – இறைச் செய்தியை அருள ஆரம்பித்து பின் சிறிது நாட்கள் வஹீ வராமல் இருந்த காரணத்தினால் நபி (ஸல்) அவர்கள் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார்கள் என்ற கருத்தில் அமைந்த ஒரு செய்தி புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீண்டதொரு செய்தியின் இறுதிப் பகுதியாகவே தற்கொலை பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

இது தான் அந்தச் செய்தி (ஹதீஸின் சுருக்கம்)

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு ஆரம்பமாக வந்த இறை அறிவிப்பானது தூக்கத்தில் கண்ட உண்மைக் கனவாகவே இருந்தது. அப்போது அவர்கள் எந்தக் கனவு கண்டாலும் அது அதிகாலைப் பொழுதின் விடியலைப் போன்று (தெளிவானதாகவே) இருந்தது. பிறகு அவர்கள் ஹிரா (மலைக்) குகைக்குச் சென்று அங்கே பல நாட்கள் (தனிமையில் தங்கியிருந்து) வணக்க வழிபாடுகளில் ஈடுபடலானார்கள்.................

.................இதைக் கேட்ட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “மக்கள் என்னை வெளியேற்றவா செய்வார்கள்?” என்று (வியப்புடன்) கேட்டார்கள். அதற்கு வரக்கா அவர்கள் “ஆம். நீங்கள் பெற்றுள்ள (உண்மையான வேதம் போன்ற)தைப் பெற்ற எவரும் மக்களால் பகைத்துக் கொள்ளப்படாமல் இருந்ததில்லை. உமது (பிரச்சாரம் பரவுகின்ற) நாளில் நான் (உயிருடன்) இருந்தால் உமக்குப் பலமான உதவி புரிவேன்” என்று பதிலளித்தார்.

அதன் பின்னர் வரக்கா நீண்ட நாள் வாழாமல் இறந்துவிட்டார். (இந்த முதலாவது வேத அறிவிப்போடு) சிறிது காலம் வேத அறிவிப்பு தடைபட்டது. அதனால் நபி (ஸல்) அவர்கள் கவலையடைந்தார்கள்.

**நமக்குக் கிடைத்த தகவலின்படி** எந்த அளவுக்கு அவர்கள் மனம் உடைந்து போனார்கள் என்றால், **மலைச் சிகரங்களிலிருந்து கீழே விழ பலமுறை முனைந்தார்கள்.** அவ்வாறு கீழே விழுந்துவிடலாமென்று ஏதாவது மலை உச்சிக்குச் செல்லும்போதெல்லாம் அவர்களுக்கு முன்னால் (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் தோன்றி, “முஹம்மதே! நீங்கள் உண்மையாகவே,



அல்லாஹ்வின் தூதர்தாம்” என்று கூறுவார்கள். இதைக் கேட்கும்போது நபி (ஸல்) அவர்களின் மனப் பதற்றம் அடங்கிவிடும். அவர்களது உள்ளம் அமைதியாகிவிடும். உடனே (மலை உச்சியிலிருந்து) திரும்பி வந்து விடுவார்கள்.

**வேத அறிவிப்பு தடைபடுவது தொடர்ந்து நீண்டுசெல்லும் போது மறுபடியும் அவ்வாறே சிகரங்களை நோக்கிச் செல்வார்கள்.** அப்போதும் அவர்கள் முன்னிலையில் (வானவர்) ஜிப்ரீல் தோன்றி முன்போலவே கூறுவார்கள்.

புகாரி : 6982

ஆரம்பமாக இறைச் செய்தி – வஹீ இறங்கியது தொடர்பான செய்தியின் கடைசிப் பகுதியாக இது அமைந்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் தற்கொலைக்கு முயற்சி செய்ததாக இந்தச் செய்தி கூறுகின்றது. உலகுக்கு நேர்வழி காட்ட வந்த நபிகள் பெருமானார் அவர்கள் இது போன்ற காரியத்தில் கண்டிப்பாக ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இது தவறான செய்தியாகும். இதனை ஆதாரபூர்வமானதாக ஏற்றுக் கொள்ள முடியாது.

**அல்குர்ஆனுக்கு மாற்றமான கருத்து.**

புனித அல்குர்ஆனில் தற்கொலை செய்து கொள்வது, தம்மைத் தாமே அழித்துக் கொள்வது பெரும் பாவம் என்று இறைவன் குறிப்பிடுகின்றான்.

அப்படியிருக்கும் போது, குர்ஆன் பெரும்பாவம் என்று கூறும் ஒரு செயலை நபியவர்களே செய்ய எத்தனித்தார்கள் என்பது நபி மீது அபாண்டம் கூறுவதாகும்.

நபி (ஸல்) அவர்கள் கண்டிப்பாக இப்படியான செயலில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்று முடிவெடுப்பதே ஒரு முஃமினின் பண்பாக இருக்க முடியும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுவதை பாருங்கள்.

நம்பிக்கை கொண்டோரே! உங்களுக்கிடையே உங்கள் பொருட்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்! திருப்தியுடன் நடக்கும் வியாபாரத்தைத் தவிர. **உங்களையே கொன்று விடாதீர்கள்!** அல்லாஹ் உங்கள் மீது நிகரற்ற அன்புடையோனாக இருக்கிறான். வரம்பு மீறியும், அநீதி இழைத்தும் இதைச் செய்பவரை நரகில் கருகச் செய்வோம். இது அல்லாஹ்வுக்கு எளிதானதாகவே உள்ளது.

அல்குர்ஆன் : 04-29,30

அல்லாஹ்வின் பாதையில் செலவிடுங்கள்! **உங்கள் கைகளால் நாசத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள்!** நன்மை செய்யுங்கள்! நன்மை செய்வோரை அல்லாஹ் விரும்புகிறான்.

அல்குர்ஆன் 2:195

மேற்கண்ட வசனங்கள் தற்கொலை செய்வதை எச்சரிப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

தற்கொலை செய்வது பெரும் பாவம் அதில் யாரும் ஈடுபடக் கூடாது என்று இறைவனே கடுமையாக எச்சரிக்கும் போது மனது வெறுத்து நபியவர்களே தற்கொலை செய்ய முயற்சித்தார்கள் என்பது எப்படி உண்மையாக இருக்க முடியும்?

**ஆதாரபூர்வமான மற்ற செய்திகளுக்கு மாற்றமானது.**

நபியவர்கள் மன விரக்தியில் தற்கொலை செய்ய முயற்சித்தார்கள் (புகாரி 6982) என்று மேற்கண்ட செய்தி கூறுகின்றது.

ஆனால் தற்கொலை நிரந்தர நரகத்திற்குரிய பாவம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் மலையின் மீதிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொள்கிறாரோ அவர் நரக நெருப்பில் (தள்ளப்பட்டு மேலிருந்து கீழே) என்றைக்கும் நிரந்தரமாக குதித்துக் கொண்டேயிருப்பார். யார் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்கிறாரோ அவர் தமது விஷத்தைக் கையில் வைத்திருந்தபடி நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக குடித்துக் கொண்டேயிருப்பார். யார் ஒரு கூரிய ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறாரோ அவருடைய கூராயுதத்தை அவர் தமது கையில் வைத்துக் கொண்டு நரக நெருப்பில் தமது வயிற்றில் தாமே என்றென்றும் நிரந்தரமாக அதனால் குத்திக் கொண்டேயிருப்பார்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) அவர்கள்.
புகாரி : 5778

தற்கொலை செய்தவர், தற்கொலை செய்து கொண்ட முறையிலேயே மறுமையில் தண்டிக்கப்படுவார் என்பதற்கும் அவர் நரகத்தில் நிரந்தரமாக இருப்பார் என்பதற்கும் மேற்கண்ட செய்தி சான்றாக அமைந்துள்ளது.

ஆனால் நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட புகாரி 6982 வது இலக்க



செய்தியோ நபியவர்களே தற்கொலைக்கு முயன்றதாக இடம் பெற்றுள்ளது.

அல்குர்ஆனின் கட்டளைகளுக்கு மாற்றமாக நிரந்த நரகத்தைப் பெற்றுத் தரக்கூடிய மிகப் பெரும் பாவமான தற்கொலைக்கு நபியவர்கள் முயன்றார்கள் என்று நம்புவது தவறு என்பதை மேற்கண்ட செய்தியும் நமக்கு உணர்த்துகின்றது.

ஆகவே நபியவர்கள் தற்கொலைக்கு முயன்றார்கள் என்ற செய்தியை ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதே தெளிவான முடிவாகும்.

**வஹீ - இறைச் செய்தியின் ஆரம்பம் பற்றிய முழுச் செய்தியும் மறுக்கத் தக்கதா?**

நபி (ஸல்) அவர்கள் தற்கொலைக்கு முயற்சி செய்தார்கள் என்ற கருத்தில் புகாரி : 6982 வது இலக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள குறித்த செய்தி, நீண்ட ஹதீஸின் ஒரு பகுதியாகும்.

இறைச் செய்தி – வஹியின் ஆரம்பம் தொடர்பாக அறிவிக்கப்படும் குறித்த செய்தியை முழுமையாக நாம் மறுக்கவில்லை. மாறாக தற்கொலைக்கு நபியவர்கள் முயன்றதாக இடம் பெற்றுள்ள பகுதியை மாத்திரமே மறுக்க வேண்டும் என்பதே நமது நிலையாகும்.

குறித்த ஹதீஸில் வஹீ – இறைச் செய்தியின் ஆரம்பம் பற்றிய முழுமையான தகவல்களை ஆயிஷா (ரலி) அவர்கள் தான் அறிவிக்கின்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் வஹீ – இறைச் செய்தியின் ஆரம்பம் பற்றி சொன்னவைகளை நபியிடமிருந்து ஆயிஷா (ரலி) அவர்களும், அவரிடமிருந்து உர்வா அவர்களும், உர்வாவிடமிருந்து இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி அவர்களும் அறிவிக்கின்றார்கள்.

இப்னு ஷிஹாப் அவர்களிடமிருந்து பலர் இந்தச் செய்தியை அறிவிப்பு செய்கின்றார்கள்.

இதில் 03 வது அறிவிப்பாளரான இமாம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி அவர்கள் வஹீ – இறைச் செய்தியின் ஆரம்பம் பற்றிய செய்திகளை அறிவித்த பின்னர் நபியவர்கள் தற்கொலைக்கு முயன்றதாக இடம் பெறும் செய்தியையும் இணைத்துச் சொல்கின்றார்கள்.

தற்கொலை பற்றிய செய்தியை இணைத்து சொல்லும் போது குறித்த செய்தியை தனக்கு அறிவித்தவர் யார் என்ற தகவலை சொல்லாமலேயே

அறிவிக்கின்றார்.

**“நமக்குக் கிடைத்த தகவலின்படி”** அவருடைய வாசக நடையிலிருந்தே இதனை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

மாத்திரமன்றி இமாம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி அவர்கள் குறித்த தகவலைத் தனக்குச் சொன்னவர் யார்? தனக்கு சொன்னவருக்கு அறிவித்தவர் யார்? போன்ற அறிவிப்பாளர் தொடர் விபரங்கள் இன்றி அறிவிப்பதினால் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் இந்தச் செய்தி பலவீனமானது என்ற முடிவுக்கு நாம் வர முடியும்.

வஹியின் ஆரம்பம் பற்றிய செய்திக்கும் நபியவர்கள் தற்கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற செய்திக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆகவே, தற்கொலைக்கு நபியவர்கள் முயன்றார்கள் என்ற கருத்தில் இடம் பெற்றுள்ள பகுதியே அல்குர்ஆனுக்கு முரண் என்ற வகையில் மறுக்கப்படுகின்றதே தவிர முழுமையான ஹதீஸ் அல்ல என்பது தெளிவானது.



## அபூலஹபின் விரலை நரகம் தீண்டாதா?

இஸ்லாத்தின் தீவிர எதிர்ப்பாளர்களில் ஒருவனாகவும், நபியவர்களின் பிரச்சாரத்தை நேரடியாக எதிர்த்து குறை சொல்லித் திரிந்தவனுமான நபியவர்களின் பெரிய தந்தை அபூலஹபுடைய விரலை நரகம் தீண்டாது என்ற கருத்திலமைந்த ஒரு செய்தி புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பில் இங்கு விரிவாக ஆராய்வோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த செய்தியை அவர்களின் பெரிய தந்தை அபூலஹபிடம் கூறுவதற்காக அவனது அடிமைப் பெண் ஓடி வரும் போது மகிழ்ச்சி மிகுதியால் தன் சுட்டுவிரலை நீட்டி அந்தப் பெண்ணை அபூலஹப் விடுதலை செய்தான். இதன் காரணமாக அவன் நரகில் வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, அந்த விரலை மட்டும் நரகம் தீண்டாது. மாறாக அந்த விரலிலிருந்து நீர் சுரந்து கொண்டிருக்கும். அதைச் சுவைத்து அவன் தாகம் தீருவான். என்ற கருத்துப்பட அமைந்த செய்தி புகாரியில் இடம் பெற்றுள்ளது.

உர்வா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸுவைபா, அபூலஹபின் அடிமைப் பெண்ணாவார். அபூலஹப் அவரை விடுதலை செய்திருந்தார். அவர் நபி (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டினார். அபூலஹப் இறந்த போது அவருடைய குடும்பத்தாரில் ஒருவர் அவரைக் (கனவில்) கண்டார். அபூலஹப் மோசமான நிலையில் அவருக்குக் காட்டப்பட்டார். அபூலஹபிடம், “(மரணத்திற்குப் பிறகு) நீ எதிர்கொண்டது என்ன?” என்று அவர் கேட்டார். உங்களை விட்டுப் பிரிந்த பின் ஒரு சுகத்தையும் நான் சந்திக்கவில்லை. ஆயினும், நான் ஸுவைபாவை விடுதலை செய்ததற்குப் பிரதியாக இந்த விரல்களினூடே எனக்கு நீர் புகட்டப்படுகிறது” என்று கூறினார்.

புகாரி : 5101

**குர்ஆனின் போதனைகளுக்கு முரணானது.**

மேலும் குர்ஆனின் தெளிவான கருத்துக்களுக்கும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுரைக்கும் முரண்பட்டதாகவும் இந்தக் கதை அமைந்துள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்தனையோ

எதிரிகள் இருந்திருந்தும் அல்லாஹ்வினால் குர்ஆனில் இவனைத் தவிர வேறு எவரும் (தனிப்பட்ட முறையில்) சபிக்கப்படவில்லை. இவனைச் சபிப்பதற்கு என்றே தனியாக அல்லாஹ் ஒரு அத்தியாயத்தை அருளி இருக்கிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உறவினரை எல்லாம் ஒரு மலை அடிவாரத்தில் கூட்டி தூய இஸ்லாத்தை எடுத்துரைக்கும் போது எல்லோரும் மௌனமாகக் கலைந்து செல்ல அபூலஹபுடைய கரங்கள் மட்டும் மண்ணை வாரி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறைத்ததோடு மட்டுமின்றி, “இதற்காகவா எங்களை ஒன்று கூட்டினாய்? நீ அழிந்து போ! என்று சொன்னான்.

புகாரி : 4770, 4801, 4971, 4972, 4801, 4971, 4972

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அவனைக் கண்டித்து திருக்குர்ஆனின் 111 வது அத்தியாயம் அருளப்பட்டது.

அபூலஹபுடைய இரு கைகளும் அழிந்தன. அவனும் அழிந்தான். அவனது செல்வமும், அவன் செய்தவையும் அவனைக் காக்கவில்லை. கொழுந்து விட்டெரியும் நெருப்பில் அவனும், விறகு சுமக்கும் அவனது மனைவியும் கருகுவார்கள். அவள் கழுத்தில் முறுக்கேறிய ஈச்சமரக் கயிறு உள்ளது.

திருக்குர்ஆன் 111 வது அத்தியாயம் அவனது கைகளும் அவனும் நாசமாகட்டும் என்று திருக்குர்ஆன் கூறும் போது அந்தக் கையில் ஒரு பகுதியாகத் திகழும் ஒரு விரல் மட்டும் நாசமாகாது என்பது அல்லாஹ்வின் கருத்துடன் மோதும் நிலையை உண்டாக்குகின்றது அல்லவா? அல்லாஹ்வின் சொல்லைப் பொய்யாக்குகின்ற இந்தக் கற்பனைக் கதையை உண்மை என்று எப்படி ஏற்றுக் கொள்வது?

“காபிர்களாக இறந்துவிட்ட யாருக்கும் தண்டனையிலிருந்து சலுகையோ, அல்லது தண்டனைக் குறைப்போ அறவே கிடையாது” என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

(ஏக இறைவனை) மறுத்து, மறுத்த நிலையிலேயே மரணித்தோர் மீது அல்லாஹ்வின் சாபமும் வானவர்கள் மற்றும் அனைத்து (நல்ல) மனிதர்களின் சாபமும் உள்ளது. அதில் நிரந்தரமாக இருப்பார்கள். அவர்களுக்கு வேதனை இலேசாக்கப்படாது. அவர்கள் அவகாசம் அளிக்கப்படவும் மாட்டார்கள்.

திருக்குர்ஆன் 2:161,162



அவர்கள் தாம், மறுமையை விற்று இவ்வுலக வாழ்வை வாங்கியவர்கள். எனவே அவர்களுக்கு வேதனை இலேசாக்கப்படாது: உதவி செய்யப்படவும் மாட்டார்கள்.

திருக்குர்ஆன் 2:86

அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். இதன் பின்னர் திருந்தி சீர்திருத்திக் கொண்டோரைத் தவிர (மற்றவர்களுக்கு) வேதனை இலேசாக்கப்படாது. அவகாசமும் அளிக்கப்பட மாட்டார்கள். அல்லாஹ் மன்னிப்பவன்: நிகரற்ற அன்புடையோன்.

திருக்குர்ஆன் 3:88, 89

சாதாரண காபிர்களுக்கே இந்த நிலை என்றால் மிகவும் கொடியவனாகத் திகழ்ந்த அபூலஹபுக்கு மட்டும் எப்படி தண்டனை இலேசாக முடியும்?

திருக்குர்ஆனின் கருத்துக்கு முற்றிலும் முரண்பட்ட இந்த நிகழ்ச்சியை உண்மை என்று எப்படி ஏற்றுக் கொள்வது?

**ஆதாரபூர்வமான மற்றைய ஹதீஸ்களுக்கும் முரணானது.**

“செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைகின்றது” என்பது நபிமொழி.

புகாரி : 1, 54, 2529, 3898, 5070, 6689, 6953,

அபூலஹப் தன் விரல் அசைத்து அடிமைப் பெண்ணை விடுதலை செய்யும் போது அவனது எண்ணம் என்ன? அகில உலகிற்கும் வழிகாட்டியாகத் திகழும் அல்லாஹ்வின் தூதர் உலகில் பிறந்து விட்டார்கள் என்பதற்காக அவன் அவ்வாறு செய்யவில்லை. மாறாக தனது தம்பி அப்துல்லாஹ்வுக்கு குழந்தை பிறந்து விட்டது என்ற செய்திக்காகவே உரிமை விட்டான். அல்லாஹ்வின் தூதர் என்று உணர்ந்து அவன் செய்த செயலல்ல இது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குழந்தைப் பருவத்திலிருக்கும் போது எத்தனை காபிர்களின் கரங்கள் தொட்டுத் தூக்கி இருக்கின்றன! அந்தக் கரங்களுக்கும் நீர் சுரக்க வேண்டாமா?

எத்தனை நெஞ்சங்கள் அவர்களைத் தழுவியுள்ளன? எத்தனை உதடுகள் அவர்களை முத்தமிட்டுள்ளன? அவர்களைக் கொஞ்சிய நாவுகள் தான் எத்தனை? அவர்களைச் சுமந்து திரிந்த தோள்கள் எத்தனை? இப்படி செய்த அத்தனை பேரும் நரகில் வீழ்ந்து கிடக்கையில் அவர்களின் கைகளிலிருந்தும், இதழ்களிலிருந்தும், மார்புகளிலிருந்தும் தேனோ, பாலோ சுரக்க வேண்டாமா?

மொத்தத்தில் மக்கத்துக் காபிர்கள் அனைவரும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, அவர்களின் சிறு பிராயத்தில் கொஞ்சி மகிழ்ந்தவர்கள் தானே? அவர்களுக்கு இது போன்ற சலுகை உண்டு என்ற விபரீத முடிவுக்கு இந்தக் கற்பனைக் கதை இட்டுச் செல்லாதா?

**நபியவர்களுடன் தொடர்பானது அல்ல.**

மேலும் அறிவிப்பாளர் ரீதியாகவும் குறித்த செய்தி தரமற்றதாகி விடும். குறித்த செய்தி புகாரியில் இடம் பெற்றிருந்தாலும், நபி (ஸல்) அவர்களுடன் தொடர்பான செய்தியாக இது இடம் பெறவில்லை. மாறாக உர்வா என்பவரின் தனிப்பட்ட கூற்றாகவே அது பதிவு செய்யப்பட்டுள்ளது.

உர்வா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸுவைபா, அபூலஹபின் அடிமைப் பெண்ணாவார். அபூலஹப் அவரை விடுதலை செய்திருந்தார். அவர் நபி (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டினார். அபூலஹப் இறந்த போது அவருடைய குடும்பத்தாரில் ஒருவர் அவரைக் (கனவில்) கண்டார். அபூலஹப் மோசமான நிலையில் அவருக்குக் காட்டப் பட்டார். அபூலஹபிடம், “(மரணத்திற்குப் பிறகு) நீ எதிர்கொண்டது என்ன?” என்று அவர் கேட்டார். உங்களை விட்டுப் பிரிந்த பின் ஒரு சுகத்தையும் நான் சந்திக்கவில்லை. ஆயினும், நான் ஸுவைபாவை விடுதலை செய்ததற்குப் பிரதியாக இந்த விரல்களினூடே எனக்கு நீர் புகட்டப்படுகிறது” என்று கூறினார்.

புகாரி : 5101

இந்தச் செய்தி பல காரணங்களால் ஏற்க முடியாகதாகும்.

1. கனவில் காட்டப்படுவது போல் நடக்கும் என்று கூற எந்த ஆதாரமும் இல்லை.
2. அபூலஹபின் குடும்பத்தினரில் முஸ்லிம்களும் இருந்தனர் முஸ்லிம் அல்லாதவரும் இருந்தனர். கனவில் கண்டவர் யார் என்பது தெரியவில்லை. கனவு கண்டவர் யார் என்பது கூறப்படவில்லை.
3. உர்வா என்பவர் தான் இதனைக் கூறுகின்றார். இவர் அந்தக் காலகட்டத்தில் பிறக்காதவர்: நபித்தோழரும் அல்ல.
4. கனவு என்பது காண்பவருக்கு மட்டுமே தெரிந்ததாகும். அவர் சொல்லாமல் யாரும் அறிய முடியாது. அவ்வாறிருக்க உர்வாவுக்கு இது எப்படி தெரிந்தது?



5. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தக் கனவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் அங்கீகாரம் பெறவில்லை.

இந்தக் காரணங்களால் இந்தக் கனவை அடிப்படையாகக் கொண்டு கதை விட முடியாது.

புகாரியில் இடம் பெற்றிருந்தாலும் புனித குர்ஆனின் போதனைகளுக்கு மாற்றமாக இருப்பதினால் இது ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இட்டுக்கட்டப்பட்ட கதையாகவே எடுத்துக் கொள்ளப்படும்.

அத்துடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சம்மந்தப்படாத செய்தி என்ற வகையிலும் இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை தெளிவான உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே இந்தக் கட்டுக் கதையை நாம் அடியாடு நிராகரிக்க வேண்டும் என்பதே தெளிவான நிலைபாடாகும்.

# குரங்கு விபச்சாரம் செய்ததா?

குரங்கு ஒன்று விபச்சாரத்தில் ஈடுபட்டு மாட்டிக் கொண்டதாகவும் மற்ற குரங்குகள் எல்லாம் சேர்ந்து விபரச்சாரம் செய்த குறித்த குரங்குக்கு கல்லெறிந்து தண்டித்ததாகவும் ஒரு செய்தி புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மறுக்கப்பட வேண்டிய பட்டியலில் இந்த செய்தியும் அடக்கம்.

அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அறியாமைக் காலத்தில் விபச்சாரம் புரிந்த பெண்குரங்கொன்றைக் குரங்குகள் பல சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து தண்டிப்பதை நான் கண்டேன். நானும் அவற்றுடன் சேர்ந்து கொண்டு கல்லெறிந்தேன்.

புகாரி : 3849

அறியாமைக் காலத்தில் விபச்சாரம் செய்த பெண் குரங்கொன்றை மற்ற குரங்குகள் அனைத்தும் சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து தண்டிப்பதை பார்த்த அம்ர் பின் மைமூன் என்பவர் தானும் அவற்றுடன் சேர்ந்து கொண்டு விபச்சாரம் செய்த குரங்குக்கு கல்லெறிந்தேன் என்று மேற்கண்ட செய்தியில் விபரிக்கின்றார்.

இப்படியொரு சம்பவம் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது உண்மையான செய்தியா என்பதை யாரும் ஆய்வு செய்து முடிவு செய்ய வேண்டிய தேவை கிடையாது. இஸ்லாத்தைப் பற்றிய அடிப்படையான சிறியளவிலான அறிவைக் கொண்டவர்கள் கூட இந்தச் செய்தி பொய்யானது, போலியானது, ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

ஆனால் தவ்ஹீத் ஜமாஅத்தை எதிர்ப்பதற்காகவே பிரச்சாரம் செய்யும் ஆலிம்கள் என்று தங்களை அடையாளம் காட்டிக் கொள்பவர்களுக்கு இது போலியான செய்தி என்பது புரியவில்லை என்பது தான் ஆச்சரியமானதாகும்.

**குரங்குகளுக்கு குற்றவியல் தண்டனைகள் உண்டா?**

குற்றவியல் தண்டனைகள் என்பது மனிதர்களுக்கு இறைவன் வகுத்த விதி என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்திருக்க முடியாது.



ஆனால் மேலுள்ள – குரங்கு விபச்சாரம் செய்ததாக இடம் பெற்றுள்ள செய்தியைப் பார்க்கும் போது குரங்குகளுக்கும் குற்றவியல் தண்டணைகள் உண்டா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்காக இதனை உண்மை என்று வாதிடுபவர்கள் தான் மேற்கண்ட நமது கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்.

மாத்திரமன்றி, குறித்த செய்தியை உண்மை என்று வாதிடுபவர்கள் இன்னும் நிறைய கேள்விகளுக்கு நமக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.

**சில கேள்விகள்:**

1. அறியாமைக் காலத்தில் விபச்சாரம் செய்தால் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்ற சட்டம் இருந்ததா?
2. அப்படியிருந்திருந்தால் அதற்குரிய ஆதாரம் என்ன?
3. விபச்சாரம் செய்தால் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்ற சட்டம் அறியாமைக் காலத்தில் நடை முறையில் இருந்திருந்தால், அது மனிதர்களுக்குரிய சட்டமா? அல்லது குரங்குகள் போன்ற விலங்குகளுக்குரிய சட்டமா?
4. குறித்த குரங்கு விபச்சாரம் செய்தது என்பதை மற்ற குரங்குகள் எப்படி உறுதிப்படுத்தின?
5. குறித்த செய்தியை அறிவிக்கும் அம்ர் பின் மைமூன் அவர்கள் குறித்த குரங்கு விபச்சாரம் செய்த காரணத்தினால் தான் மற்ற குரங்குகளினால் கல்லெறி தண்டனைக்கு உள்ளாகியுள்ளது என்பதை எப்படி அறிந்து கொண்டார்?
6. ஆட்சியாளர் தான் குற்றவியல் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்றிருக்கும் போது, குரங்குகள் சட்டத்தைக் கையிலெடுக்கலாமா?
7. குறித்த பெண் குரங்கு விபச்சாரம் செய்தது என்பதை எந்த சாட்சியத்தை வைத்து முடிவெடுத்தார்கள்?
8. பெண் குரங்குடன் விபச்சாரம் செய்த ஆண் குரங்கின் நிலை என்னவானது?
9. விபச்சாரத்திற்கு கல்லெறி தண்டனையை வழங்கிய மற்ற குரங்குகளுக்கு மத்தியில் விபச்சாரத்தை தவிர்ந்து ஒழுக்கமாக வாழ்வதற்கான திருமண பந்த முறை காணப்பட்டதா? (மனிதர்களுக்கு இருப்பதைப் போல்)

10. விபச்சாரம் செய்த குரங்குக்கு தண்டனை வழங்கப்பட்டதைப் போல் மற்ற விலங்கினங்களுக்கும் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா?
11. தற்காலத்தில் ஒரு குரங்கு விபச்சாரம் செய்தால் இதே தண்டனை வழங்கப்படுகின்றதா? இந்தச் செய்தியை உண்மை என்று வாதிடுபவர்கள் குரங்கு விபச்சாரம் செய்தால் இதே தண்டனையை வழங்குவார்களா?

இது போல் இந்த ஒரு செய்தியில் மாத்திரம் இன்னும் நூற்றுக் கணக்கான கேள்விகளை நாம் முன் வைக்க முடியும். இவற்றுக்கெல்லாம் யார் பதில் தருவார்?

குரங்கு விபச்சாரம் செய்தது என்ற செய்தியை உண்மைப்படுத்துபவர்கள் இந்தக் கேள்விகளுக்குரிய பதில்களை தருவார்களா?

**குரங்கை மனிதனாக்கிய மாமேதைகள்.**

அறியாமைக் காலத்தில் விபச்சாரம் புரிந்த பெண் குரங்கொன்றைக் குரங்குகள் பல சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து தண்டிப்பதை நான் கண்டேன். நானும் அவற்றுடன் சேர்ந்து கொண்டு கல்லெறிந்தேன். என்று அம்ர் பின் மைமூன் அவர்கள் கூறுவதாக புகாரி : 3849 ம் இலக்கத்தில் இடம் பெற்றுள்ள செய்தியைக் காப்பாற்றப் புயல் வேகத்தில் புறப்பட்டவர்கள் இறுதியில் குரங்கை மனிதர்களாக இனம் மாற்றி தங்களை மகா மகா மாமேதைகள் என்று நிரூபணம் செய்து விட்டார்கள்.

**மாமேதையின் விளக்கம்**

குறித்த செய்தியில் இடம்பெறும் பெண் குரங்கு என்பது: பெண் குரங்கல்ல, அது விபச்சாரம் செய்த யூதப் பெண்ணாகும்.

அதே போல் அதனைச் சூழ்ந்து கொண்டு மற்ற குரங்குகள் கல்லெறிந்து தண்டித்தன என்பதும் குரங்குகள் அல்ல யூதர்களைத் தான் குறிக்கும்.

யூதப் பெண் விபச்சாரம் செய்ததை மற்ற யூதர்கள் சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து தண்டித்தார்கள் என்பதைத் தான் மேற்கண்ட சம்பவம் சொல்கின்றதே தவிர அது உண்மையான குரங்கைப் பற்றிக் கூறவில்லை.

அரபி மொழி தெரியாத காரணத்தினால் தான் இவர்கள் குறித்த செய்தியில் சொல்லப்படுவது உண்மையான குரங்கு என்று சொல்கின்றார்கள்.

குறித்த ஹதீஸில் பெண் குரங்குக்கு கல்லெறிந்தது பற்றிய அறிவிப்பாளர்



அறிவிக்கும் போது – فَرَجَمُوهَا – ‘‘அந்தப் பெண் குரங்கை **அவர்கள்** கல்லால் **எறிந்தார்கள்**” என்ற வாசகத்தை பயன்படுத்துகின்றார்.

رجمو என்பது அரபி இலக்கணத்தில் – படர்க்கை, ஆண்பால், பண்மை ஆகும்.

இது உயர்திணை ஆகும்.

அதே போல் அறிவிப்பாளர் அம்ர் பின் மைமூன் அவர்களும் தானும் கல்லெறிந்ததைப் பற்றி குறிப்பிடும் போது فَرَجَمْتُهَا مَعَهُمْ – ‘‘**நானும் அவர்களுடன்** சேர்ந்து கல்லெறிந்தேன்” என்று சொல்கின்றார்.

இந்த இடத்தில் தான் கல்லெறிந்ததைப் பற்றி அறிவிப்பாளர் கூறும் போதும் ‘‘உயர்திணை”யாகவே குறிப்பிடுகின்றார்.

ஆகவே, இது உண்மையான குரங்கைப் பற்றிப் பேசும் ஒரு செய்தியல்ல, விபச்சாரம் செய்த யூதப் பெண் தொடர்பாகக் குறிப்பிடும் வசனமாகும்.

அதே போல் அதனைச் சூழ்ந்து கொண்டு மற்ற குரங்குகள் கல்லெறிந்து தண்டித்தன என்பதும் குரங்குகள் அல்ல யூதர்களைத் தான் குறிக்கும்.

யூதப் பெண் விபச்சாரம் செய்ததை மற்ற யூதர்கள் சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து தண்டித்தார்கள் என்பதைத் தான் மேற்கண்ட சம்பவம் சொல்கின்றதே தவிர அது உண்மையான குரங்கைப் பற்றிக் கூறவில்லை.

அத்துடன் அல்லாஹ்வும் யூதர்களை இழிந்த குரங்குகளாக மாறிவிடுங்கள் என்று குர்ஆனில் கூறுகின்றான். இதுவும் குரங்கு பற்றிய செய்திக்கு விளக்கமாக அமைந்துள்ளது.

என்பதே மாமேதையின் வாதமாகும்.

**நமது பதில்**

விபச்சாரம் செய்த பெண் குரங்கு தொடர்பாக புகாரியில் பதிவாகியுள்ள செய்தியை மீண்டும் ஒரு முறை இங்கு பதிவு செய்து விட்டு ‘‘மாமேதை” யின் விளக்கத்திற்குரிய பதிலைப் பார்ப்போம்.

(صحيح البخاري

3849 - حَدَّثَنَا نُعَيْمُ بْنُ حَمَّادٍ حَدَّثَنَا هُشَيْمٌ عَنْ حُصَيْنٍ عَنْ عَمْرِو بْنِ مَيْمُونٍ قَالَ رَأَيْتُ فِي الْجَاهِلِيَّةِ قِرْدَةً اجْتَمَعَ عَلَيْهَا قِرَدَةٌ قَدْ زَنَتْ فَرَجَمُوهَا فَرَجَمْتُهَا مَعَهُمْ

அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:
அறியாமைக் காலத்தில் விபச்சாரம் புரிந்த பெண் குரங்கொன்றைக்

குரங்குகள் பல சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து தண்டிப்பதை நான் கண்டேன். நானும் அவற்றுடன் சேர்ந்து கொண்டு கல்லெறிந்தேன்.

புகாரி : 3849

மேற்குறித்த செய்தியில் அறிவிப்பாளர் அம்ர் பின் மைமூன் அவர்கள் அறிவிக்கும் போது – فَرَجَمُوهَا – ''அந்தப் பெண் குரங்கை **அவர்கள்** கல்லால் **எறிந்தார்கள்**" – فَرَجَمْتُهَا مَعَهُمْ – ''நானும் **அவர்களுடன்** சேர்ந்து கல்லெறிந்தேன்"

என்ற உயர்திணை வாசகங்களை பயன்படுத்துவதினால் குறித்த செய்தியில் குறிப்பிடப்படும் குரங்கு என்பது உண்மையான குரங்கல்ல, யூதர்கள் என்று கூறும் மாமேதையிடம் நாம் ஒரு கேள்வியை முன் வைக்கின்றோம்.

அதுவே இவரின் இலக்கண விளக்கத்திற்குரிய போதுமான பதிலாகும்.

சுலைமான் நபியவர்களின் படை எறும்புப் புற்றினருகே வந்த போது ஓர் எறும்பு தனது மற்றைய சக எறும்புகளுக்கு எச்சரிக்கை விடுத்த செய்தியை இறைவன் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.

حَتَّى إِذَا أَتَوْا عَلَى وَادِ النَّمْلِ قَالَتْ نَمْلَةٌ يَا أَيُّهَا النَّمْلُ ادْخُلُوا مَسَاكِنَكُمْ لَا يَحْطِمَنَّكُمْ سُلَيْمَانُ وَجُنُودُهُ وَهُمْ لَا يَشْعُرُونَ [النمل : ٨١

அவர்கள் எறும்புப் புற்றின் அருகே வந்த போது **"எறும்புகளே! உங்கள் குடியிருப்புகளுக்குள் நுழையுங்கள்!** ஸுலைமானும், அவரது படையினரும் அறியாத நிலையில் உங்களை மிதித்து விடக் கூடாது" என்று ஓர் எறும்பு கூறியது.

அல்குர்ஆன் 27:18

மேலே உள்ள திருமறை வசனத்தில் எறும்பொன்று மற்றைய எறும்புகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் போது – ادْخُلُوا – ''நுழையுங்கள்" என்று உயர்திணைக்குரிய வார்த்தையைப் பயன்படுத்திப் பேசுகின்றது.

இந்த இடத்தில் உயர்திணைக்கு உரிய வார்த்தைப் பிரயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளதினால் அது எறும்பு அல்ல அவர்கள் மனிதர்கள், அந்தக் காலத்தில் வாழ்ந்த ஒரு சமுதாய மக்கள் தான் என்று இம்மாமேதை விளக்கமளிப்பாரா?

அவர்கள் புற்றுக்குள் வாழவில்லை. புற்று என்றால் அவர்களின் வீடு என்று அர்த்தம் என மொழிபெயர்ப்பாரா என்ன?

அரபி மொழியில் உயர்திணை, அஃறிணை என்பது இடம், பொருள், ஏவலை வைத்துத் தான் முடிவெடுக்கப்படுமே தவிர – தமிழைப் போல்



உயர்திணைக்கு தனி வார்த்தையும், அஃறினைக்கு தனி வார்தையும் அரபியில் பயன்படுத்தப்படுவதில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**அல்பானிக்கும் அரபி தெரியவில்லையோ!**

குறித்த செய்தியில் குரங்கென்று குறிப்பிடப்படுவது உண்மையில் குரங்கல்ல. மாறாக அது யூதர்களைத் தான் குறிப்பிடப்படுகின்றது என்று குரங்கை மனிதனாக்கி அற்புத விளக்கம் அளிக்கும் இவர்களுக்கு இமாம் அல்பானி அவர்கள் இது தொடர்பில் தெரிவித்த கருத்தை இங்கு பதிவு செய்கின்றோம்.

وقال الشيخ الألباني رحمه الله :

هذا أثرٌ منكرٌ ، إذ كيف يمكنُ لإنسان أن يعلم أن القردة تتزوج ، وأن مِن خُلقهم المحافظةَ" على العرض ، فمن خان قتلوهُ ؟! ثم هبّ أن ذلك أمرٌ واقعٌ بينها ، فمن أين علم عمرو بن ميمون أن رجمَ القردةِ إنما كان لأنها زنت ؟!» انتهى .«مختصر صحيح البخاري» للألباني (٥٣٥/٢) طبعة مكتبة المعارف

"இந்த அறிவிப்பு மறுக்கப்பட்டதாகும். குரங்கு திருமணம் முடிக்கிறது என்பதை மனிதன் எவ்வாறு அறிவான்? தமது மானத்தைக் காப்பது குரங்கின் இயல்பு என்றும் மோசடி செய்தால் அவர்களை கொலை செய்வதற்கும் மனிதன் (அதனை) எப்படி அறிந்து கொள்வான்? குறித்த குரங்கு விபச்சாரத்தின் ஈடுபட்டதினால் தான் மற்ற குரங்குகள் கல்லெறிந்தன என்று அறிவிப்பாளார் அம்ர் பின் மைமூன் எப்படி அறிந்து கொண்டார்?"

இமாம் அல்பானி – முக்தஸர் ஸஹீஹுல் புகாரி

இமாம் அல்பானி அவர்கள் குறித்த அறிவிப்பை மறுக்கத் தக்கது என்று கூறியது மாத்திரமன்றி அது தொடர்பில் சில கேள்விகளையும் முன் வைக்கின்றார்.

இமாம் அவர்களின் விளக்கத்தில் எந்த இடத்திலும் அது குரங்கல்ல மனிதர்கள் – யூதர்களைத் தான் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது என்றெல்லாம் வியாக்கியானம் கொடுக்கவில்லை.

குறித்த செய்தியில் அம்ர் பின் மைமூன் அவர்கள் உண்மையான குரங்கைத் தான் குறிப்பிடுகின்றார்கள் என்பதை மிகத் தெளிவாக இமாம் அல்பானி அவர்கள் விபரித்துள்ளார்கள்.

தவ்ஹீத் ஜமாஅத்தினருக்கு அரபி தெரியவில்லை. என்று கூறி உயர்திணை அஃறிணை பற்றியெல்லாம் பேசுவோர் பல்லாயிரக் கணக்கான ஹதீஸ்களை

ஆய்வு செய்து ஸஹீஹ், ழயீப் என்றெல்லாம் பிரித்த, பல ஹதீஸ் தொகுப்பு நூல்களின் அறிவிப்பாளர்களை துல்லியமாக எடை போட்டுப் பார்த்த அறிஞர் அல்பானி அவர்களுக்கும் அரபி தெரியவில்லை என்று சொல்வார்களா?

குரங்கை மனிதனாக்கும் இவர்களின் சிந்தனையின் தரத்தை என்னவென்பது?

**மனிதர்களாக இருந்த யூதர்களைக் குரங்குகளாக மாற்றியதால், குரங்குகளெல்லாம் மனிதர்கள் என்றாகி விடுமா?**

குரங்குகளை மனிதர்களாக்க முயன்ற மாமேதை தனது வாதத்திற்கு வலு சேர்ப்பதற்காக திருக்குர்ஆன் 02:65 வது வசனத்தையும் ஆதாரம் காட்டுகின்றார்.

யூதர்களை அல்லாஹ் குரங்குகளாக மாறி விடுங்கள் என்று சபித்தானாம் அதனால் புகாரி : 3849 வது ஹதீஸில் குரங்கு என்று மனிர்கள் தான் சொல்லப்படுகின்றார்கள் என்பதே மாமேதையின் வாதமாகும்.

وَلَقَدْ عَلِمْتُمُ الَّذِينَ اعْتَدَوْا مِنْكُمْ فِي السَّبْتِ فَقُلْنَا لَهُمْ كُونُوا قِرَدَةً خَاسِئِينَ [البقرة : ٥٦

உங்களில் சனிக்கிழமையில் வரம்பு மீறியோரை அறிவீர்கள்! **"இழிந்த குரங்குகளாக ஆகுங்கள்!"** என்று அவர்களுக்குக் கூறினோம்.

(அல்குர்ஆன் 02:65, 2:65, 5:60, 7:166)

சனிக்கிழமை மீன் பிடிக்கக் கூடாது என்ற இறைவனின் கட்டளையை மீறியவர்கள் இறைவன் சபித்து குரங்குகளாக மாற்றினான் என்பதை மேற்கண்ட வசனம் தெளிவுபடுத்துகின்றது.

இதற்கும் குரங்கு விபச்சாரம் செய்த ஹதீஸ்க்கும் எவ்வித தொடர்பும் இல்லை. காரணம் இது அக்காலத்துடன் முடிவுற்ற விஷயமாகும்.

யாரை அல்லாஹ் உருமாற்றி விட்டானோ அவர்களுக்குச் சந்ததிகளை ஏற்படுத்த மாட்டான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

நூல்: முஸ்லிம் 6941, 6943

எனவே குரங்குகளாக மாற்றப்பட்ட அவர்கள் இனப்பெருக்கம் செய்யாமல் மரணித்து விட்டார்கள் என்பது தெளிவான ஹதீஸாகும். இதனைப் புரிந்து கொள்ளாத மாமேதையவர்கள் அன்றைய காலத்தில் நடந்த ஒன்றை இன்றும் நடக்கும் என்று நினைத்துக் கொண்டு வாதிடுகின்றார்.



இன்னும் சொல்லப் போனால் அவருடைய வாதப்படி குறித்த 02:65 வது வசனத்தை ஆதாரத்திற்கு எடுத்தால் குறித்த புகாரி : 3849 வது ஹதீஸில் இடம்பெறும் குரங்கு என்பது உண்மையான குரங்குதான் என்பதே இன்னும் உறுதியாகும் என்பதை அவர் புரியவில்லை போலும்.

இழிந்த குரங்குகளாக மாறிவிடுங்கள்" என்று இறைவன் சொன்ன அடிப்படையில் அவர்கள் யூதர்களாக இருந்தாலும் உண்மையான குரங்குகள் தான் – மாமேதையின் வாதப்படி யூதக் (?) குரங்குகள் என்பது நிரூபணமாகும்.

அறிவை அடகு வைத்துவிட்டு அல்குர்ஆன், ஹதீஸைப் பற்றிப் பேசினால் இந்த நிலைதான் வரும் என்பதற்கு இந்த மாமேதை ஒரு நிதர்சன ஆதாரமாகும்.

# பல்லி பற்றிய ஹதீஸின் நிலை?

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பல்லியைக் கொல்லும்படி உத்தரவிட்டார்கள். மேலும் அவர்கள், "அது இப்ராஹீம் (அலை – அவர்கள் தீக்குண்டத்தில் எறியப்பட்ட போது நெருப்பை) அவர்களுக்கெதிராக ஊதி விட்டுக் கொண்டிருந்தது" என்றும் சொன்னார்கள்.

அறிவிப்பவர்: உம்மு ஷரைக் (ரலி),
நூல்: புகாரி 3359

இந்த ஹதீஸ் தொடர்பாக நாம் அடுக்கடுக்கான பல கேள்விகளை எழுப்பி வருகின்றோம். அவற்றில் முக்கியமானவற்றைப் பார்ப்போம்.

அல்லாஹ்வின் மார்க்கத்தை விடுத்து வேறு ஒன்றையா தேடுகின்றனர்? வானங்களிலும், பூமியிலும் உள்ளவை விரும்பியோ, விரும்பாமலோ அவனுக்கே அடிபணிகின்றன. அவனிடமே அவர்கள் கொண்டு செல்லப்படுவார்கள்.

(அல்குர்ஆன் 3:83)

வானங்களிலும், பூமியிலும் உள்ளவை விரும்பியோ, விரும்பாமலோ அவனுக்கே பணிகின்றன. அவற்றின் நிழல்களும் காலையிலும், மாலையிலும் பணிகின்றன.

(அல்குர்ஆன் 13:15)

"வானங்களில் உள்ளோரும், பூமியில் உள்ளோரும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், உயிரினங்களும், மனிதர்களில் அதிகமானோரும் அல்லாஹ்வுக்குப் பணிகின்றனர்" என்பதை நீர் அறியவில்லையா? இன்னும் அதிகமானோர் மீது வேதனை உறுதியாகி விட்டது. அல்லாஹ் இழிவுபடுத்தி விட்டவனுக்கு மதிப்பை ஏற்படுத்துபவன் இல்லை. அல்லாஹ் நாடியதைச் செய்வான்.

(அல்குர்ஆன் 22:18)

உலகில் உள்ள அனைத்துப் படைப்புகளும் அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்படுகின்றன என்று இந்த வசனங்கள் ஆணித்தரமாகத் தெரிவிக்கின்றன. ஆனால் இந்தப் பல்லி மட்டும் அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிராகச் செயல்பட்டதாக மேற்படி ஹதீஸ் தெரிவிக்கின்றது. அல்லாஹ்வுக்கு



எதிராகப் பல்லி போர்க்கொடி தூக்கியது, புரட்சி செய்கின்றது என்று குர்ஆன் வசனத்திற்கு எதிராகப் பேசும் இந்த ஹதீஸின் கருத்து ஏற்கத்தக்கதா?

**ஒரு பல்லியின் பாவத்தை அனைத்துப் பல்லியும் சுமக்கிறதா?**

ஒருவரின் சுமையை மற்றவர் சுமக்க மாட்டார் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இந்தக் கொள்கையை அடித்து நொறுக்கும் விதமாகவே மேற்கண்ட பல்லி பற்றிய செய்திகள் அமைந்திருக்கின்றன.

முதல் மனிதர்களான ஆதம், ஹவ்வா ஜோடி செய்த பாவம் மனித குலம் அனைவர் மீதும் இருக்கின்றது: அதைக் கழுவுவதற்காக இயேசு (ஈஸா நபி) சிலுவை ஏந்தினார் என்பது கிறித்தவர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையை இஸ்லாம் தகர்த்தெறிகின்றது.

"அல்லாஹ் அல்லாதவர்களையா இறைவனாகக் கருதுவேன்? அவனே அனைத்துப் பொருட்களின் இறைவன். (பாவம் செய்யும்) எவரும் தமக்கு எதிராகவே சம்பாதிக்கிறார். ஒருவன் மற்றவனின் சுமையைச் சுமக்க மாட்டான். பின்னர் உங்கள் இறைவனிடமே உங்கள் மீளுதல் உள்ளது. நீங்கள் முரண்பட்டது பற்றி அவன் உங்களுக்கு அறிவிப்பான்" என்றும் கூறுவீராக!

(அல்குர்ஆன் 6:164)

மூஸா, முழுமையாக நிறைவேற்றிய இப்ராஹீம் ஆகியோரின் ஏடுகளில் "ஒருவர் மற்றவரின் சுமையைச் சுமக்கமாட்டார்: மனிதனுக்கு அவன் முயற்சித்தது தவிர வேறு இல்லை" என்று இருப்பது அவனுக்கு அறிவிக்கப்படவில்லையா?

(அல்குர்ஆன் 53:36, 37, 38, 39)

ஆனால் இந்தப் பல்லி சம்பவம் நமக்குச் சொல்லித் தருவது, கிறித்தவர்களின் நம்பிக்கையான முதல் பாவத்தைத் தான். இப்ராஹீம் நபிக்கு எதிராகத் தீக்குண்டத்தை பல்லி ஊதியது என்று ஒரு வாதத்துக்கு ஒப்புக் கொண்டால் சம்பந்தப்பட்ட அந்தப் பல்லியை மட்டும் தான் கொல்ல வேண்டும். ஆனால் இந்த ஹதீஸ் கியாமத் நாள் வரை உள்ள ஒவ்வொரு பல்லியையும் கொல்ல வேண்டும் என்று கூறி, ஒரு பல்லி செய்த பாவத்திற்காக மற்ற பல்லிகளைத் தலைமுறை தலைமுறையாகப் பலியாக்குகின்றது. இது மாபெரும் அநியாயமும், அநீதியுமாகும். அல்லாஹ் இந்த அநியாயத்தை அறவே ஆதரிக்கவில்லை.

17:15, 35:18, 39:07 ஆகிய வசனங்களும் ஒருவர் சுமையை இன்னொருவர்

சுமக்க முடியாது என்று கூறுகின்றன.

**அநீதி இழைக்காத மார்க்கம்.**

ஒருவருக்கும் அநீதி இழைக்காத மார்க்கமான இஸ்லாமிய மார்க்கத்தில் பல்லி பற்றிய செய்தியின் கருத்து அநீதி இழைக்கும் மார்க்கமாக இஸ்லாத்தைச் சித்தரிப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இன்று ஒவ்வொருவரும் செய்ததற்கு கூலி கொடுக்கப்படும். இன்று எந்த அநியாயமும் இல்லை. அல்லாஹ் விரைந்து கணக்கெடுப்பவன்.

(அல்குர்ஆன் 40:17)

இன்று எவருக்கும் சிறிதளவும் அநீதி இழைக்கப்படாது. நீங்கள் செய்து கொண்டிருந்ததைத் தவிர கூலி கொடுக்கப்பட மாட்டீர்கள்.

(அல்குர்ஆன் 36:54)

ஒருவர் செய்த குற்றத்திற்கு இன்னொருவருக்கு தண்டனை வழங்கப்பட மாட்டாது என்று இஸ்லாமிய மார்க்கம் மிகத் தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றது. அப்படியிருக்கும் போது, ஒரு பல்லி செய்த தவறுக்காக அனைத்துப் பல்லிகளையும், காலா காலத்திற்கும் கொலை செய்ய வேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயமாகும்?

**இறைத் தூதர்களுக்கு எதிராக பிராணிகள் செயல்படுமா?**

சில உயிரினங்கள் இறைத்தூதர்களுக்கு உதவியுள்ளன என்று திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளதால் அது போன்ற ஹதீஸ்களை நாம் ஏற்கலாம். சுலைமான் நபியவர்களுக்கு ஹுத் ஹுத் பறவை உதவியதாக திருக்குர்ஆன் கூறுகிறது. (பார்க்க 27:20)

ஆனால் எந்த உயிரினமும் இறைத்தூதர்களுக்கு எதிராகக் களமிறங்காது. அவை அனைத்தும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டே நடக்குமாறு படைக்கப்பட்டுள்ளன.

அல்லாஹ்வின் மார்க்கத்தை விடுத்து வேறு ஒன்றையா தேடுகின்றனர்? வானங்களிலும், பூமியிலும் உள்ளவை விரும்பியோ, விரும்பாமலோ அவனுக்கே அடிபணிகின்றன. அவனிடமே அவர்கள் கொண்டு செல்லப்படுவார்கள்.

அல்குர்ஆன் (3 : 83)

வானங்களிலும், பூமியிலும் உள்ளவை விரும்பியோ, விரும்பாமலோ



அவனுக்கே பணிகின்றன. அவற்றின் நிழல்களும் காலையிலும், மாலையிலும் பணிகின்றன.

அல்குர்ஆன் (13 : 15)

வானங்களில் உள்ளோரும், பூமியில் உள்ளோரும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், உயிரினங்களும், மற்றும் மனிதர்களில் அதிகமானோரும் அல்லாஹ்வுக்குப் பணிகின்றனர் என்பதை நீர் அறியவில்லையா?

அல்குர்ஆன் (22 : 18)

இவ்வசனங்களுக்கு எதிராக பல்லி அல்லாஹ்வுக்கு எதிரான நிலைபாட்டை எடுத்ததாக இந்த ஹதீஸ் கூறுகிறது.

இப்ராஹீம் நபி ஏகத்துவக் கொள்கையைச் சொன்னார்கள். இதற்காகவே அவர்கள் தீக்குண்டத்தில் போடப்பட்டார்கள். பல்லி இதில் சந்தோஷம் அடைந்து இப்ராஹீம் நபிக்கு எதிராக தன் பங்குக்கு நெருப்பை ஊதி விட்டது என்று இந்த ஹதீஸ் சொல்கிறது.

இதை நம்பினால் உயிரினங்களிலும் காபிரான உயிரினம் உள்ளது என்று நாம் நம்பியாக வேண்டும். அவ்வாறு நம்புவது மேற்கண்ட வசனங்களை மறுப்பதாக அமையும்.

**அறிவுக்குப் பொருந்தவில்லை என்பதற்காக மறுக்கிறோமா?**

அறிவுக்குப் பொருந்தவில்லை, நடைமுறை சாத்தியமில்லை என்பதெல்லாம் நம்முடைய வாதங்களில் துணை வாதங்களாக இடம்பெறுமே தவிர ஒருபோதும் அவற்றைப் பிரதான வாதமாக வைப்பதில்லை. அதுபோன்றே இந்த விவகாரத்திலும், பல்லி நெருப்புக் குண்டத்தை ஊதியது என்பது அறிவுக்குப் பொருத்தமாக இல்லை என்பதும் நம்முடைய வாதம் தான். ஆனால் இவர்கள் பிதற்றுவது போன்று பிரதான வாதமல்ல. பல்லி என்பது அல்லாஹ்வின் படைப்பு! மனித, ஜின் இனங்களைத் தவிர பகுத்தறிவு வழங்கப்படாத அனைத்துப் படைப்புகளும் அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டே வாழ்கின்றன. பல்லி என்ற பகுத்தறிவற்ற இந்தப் படைப்பு அல்லாஹ்விற்கு எதிராகப் புரட்சி செய்யுமா? போர்க்கொடி தூக்குமா? என்றுதான் கேள்வி எழுப்புகின்றோம்.

**தீங்கு தரும் உயிர் வகை என்பதற்காக கொல்ல முடியும்.**

பல்லியைக் கொல்ல வேண்டும் என்ற செய்தியை நாம் மறுப்பதற்குக் காரணம் குறித்த செய்தியில் ஒரு பல்லி இப்றாஹீம் நபியவர்களுக்கு எதிராக

ஊதிவிட்டதினால் அனைத்துப் பல்லிகளையும் கொல்ல வேண்டும் என்ற தவறான கருத்தை குறித்த செய்தி கூறுகின்றது என்பதற்காகவே தவிர, பல்லி தீங்கு தரும் பிராணி என்ற அடிப்படையில் கொல்வதென்றால் அதில் நாம் மாற்றுக் கருத்துக் கொள்ளவில்லை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் பல்லியைக் கொல்லும்படி கட்டளையிட்டார்கள். அதற்கு ஃபுவைசிக் (தீங்குதரக்கூடிய மோசமான உயிரி) என்று பெயர் வைத்தார்கள்.

அறிவிப்பவர் : சஃத் பின் அபீவக்காஸ்

நூல் : முஸ்லிம் (4154)

தீங்கு தரக்கூடிய உயிர் என்று பல்லியை மாத்திரம் நபி (ஸல்) அவர்கள் கொல்லுமாறு சொல்லவில்லை. பல்லியல்லாத மற்றைய சில உயிரினங்களையும் தீங்கு தரக் கூடியத என்ற காரணத்தினால் நபி (ஸல்) அவர்கள் கொல்லுமாறு கட்டளையிட்டுள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஐந்து உயிரினங்கள் தீங்கு இழைக்கக் கூடியவையாகும். அவற்றை இஹ்ராம் அணிந்தவர் கொன்றால் அவர் மீது குற்றமில்லை. அவை காகம் பருந்து தேள் எலி வெறிநாய் ஆகியனவாகும்.

அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி)

நூல் : புகாரி (1826)

தீங்கு தரக் கூடியது என்ற காரணத்தினால் பல்லியைக் கொல்வதற்கு தாராள அனுமதி மார்க்க ரீதியாகத் தரப்பட்டுள்ளது.



# வேண்டுமென்று கொலை செய்தவருக்கு மன்னிப்புண்டா?

கொலையைப் பெரும் பாவம் என்றும், நிரந்தர நரகத்திற்குரிய செயல் என்றும் அல்குர்ஆனும், ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் நமக்குக் கற்றுத் தருகின்றன. இருப்பினும், நூறு கொலைகளைச் செய்த ஒருவனுக்கு இறைவன் மன்னிப்பளித்ததாக புகாரியில் ஒரு ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

குறித்த செய்தி திருமறைக் குர்ஆனின் வசனங்களுக்கு நேரடியாக மோதக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றது. எனவே இது பற்றிய முழுமையான விபரங்களை இங்கு ஆராய்வோம்.

நூறு கொலை செய்தவனுக்கு மன்னிப்பளித்தமை பற்றிய செய்தி இதுதான்.

(صحيح البخاري (الطبعة الهندية) – (١ / ٥٨٦١

3470 - حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ بَشَّارٍ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ أَبِي عَدِيٍّ عَنْ شُعْبَةَ عَنْ قَتَادَةَ عَنْ أَبِي الصِّدِّيقِ النَّاجِيِّ عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ كَانَ فِي بَنِي إِسْرَائِيلَ رَجُلٌ قَتَلَ تِسْعَةً وَتِسْعِينَ إِنْسَانًا ثُمَّ خَرَجَ يَسْأَلُ فَأَتَى رَاهِبًا فَسَأَلَهُ فَقَالَ لَهُ هَلْ مِنْ تَوْبَةٍ قَالَ لَا فَقَتَلَهُ فَجَعَلَ يَسْأَلُ فَقَالَ لَهُ رَجُلٌ ائْتِ قَرْيَةَ كَذَا وَكَذَا فَأَدْرَكَهُ الْمَوْتُ فَنَاءَ بِصَدْرِهِ نَحْوَهَا فَاخْتَصَمَتْ فِيهِ مَلَائِكَةُ الرَّحْمَةِ وَمَلَائِكَةُ الْعَذَابِ فَأَوْحَى اللهُ إِلَى هَذِهِ أَنْ تَقَرَّبِي وَأَوْحَى اللهُ إِلَى هَذِهِ أَنْ تَبَاعَدِي وَقَالَ قِيسُوا مَا بَيْنَهُمَا فَوُجِدَ إِلَى هَذِهِ أَقْرَبَ بِشِبْرٍ فَغُفِرَ لَهُ

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பனூ இஸ்ராயீல்களின் சமுதாயத்தில் ஒரு மனிதர் இருந்தார். அவர் தொண்ணூற்றொன்பது மனிதர்களைக் கொன்று விட்டிருந்தார். பிறகு (தன் குற்றங்களுக்காக மனம் வருந்தி, தனக்கு மன்னிப்புக் கிடைக்குமா என்று) விசாரித்தபடி, "(எனக்குப்) பாவ மன்னிப்புக் கிடைக்குமா?" என்று ஒரு பாதிரியாரிடம் வந்து கேட்டார். அந்தப் பாதிரியார், "கிடைக்காது" என்று கூற, அவரையும் அம்மனிதர் கொன்று விட்டார். பிறகு, (மீண்டும் மனம் வருந்தி) விசாரிக்கலானார். அப்போது ஒரு மனிதர், "(நல்லோர் வாழும்) இன்ன ஊருக்குப் போ!" என்று அவருக்குச் சொன்னார். (அந்த ஊரை நோக்கி அவர் சென்றபோது பாதி வழியில்) மரணம் அவரைத் தழுவியது. (மரணத் தருவாயில்) அவர் தன் நெஞ்சை அந்த ஊர் இருக்கும் திசையில் சாய்த்துக் கொண்(டே இறந்து விட்)டார்.

அப்போது இறை கருணையைப் பொழியும் வானவர்களும் இறை தண்டனைகளை நிறைவேற்றும் வானவர்களும் அவர் விஷயத்தில் (அவரை யார் அழைத்துச் செல்வது என்று) சச்சரவிட்டுக் கொண்டனர். உடனே அல்லாஹ் அதை நோக்கி, “நீ நெருங்கி வா!” என்று (அவர் செல்லவிருந்த ஊருக்கு) உத்திரவிட்டான். இதை நோக்கி, “நீ தூரப் போ!” என்று (அவர் வசித்து வந்த ஊருக்கு) உத்திரவிட்டான். பிறகு, “அவ்விரண்டுக்கு மிடையே உள்ள தூரத்தைக் கணக்கெடுங்கள்” என்று (வானவர்களுக்குக்) கூறினான். (அவ்வாறே கணக்கெடுத்த போது) செல்லவிருந்த ஊருக்கு (அவர் வசித்து வந்த ஊரை விட ஒரே) ஒரு சாண் அளவிற்கு அவர் (உடைய உடல்) சமீபமாக இருந்த காரணத்தால் அவருக்குப் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டது.

அறிவிப்பவர் : அபூ சயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள்.

புகாரி : 3470

மேலுள்ள செய்தியை விரிவாகப் பார்ப்போம்.

பனூ இஸ்ரவேல் சமுதாயத்தைச் சேர்ந்த மனிதன் தொண்ணூற்றொன்பது மனிதர்களைக் கொலை செய்கின்றார்.

தான் செய்த கொலைக்கு மன்னிப்புண்டா என்று பாதிரியாரிடம் கேட்ட நேரம் அவர் இல்லை என்று மறுக்கின்றார். அவரையும் குறித்த மனிதன் கொலை செய்கின்றான்.

மொத்தம் நூறு கொலைகளைச் செய்தவன் மீண்டும் தனக்கு மன்னிப்புண்டா என்று விசாரிக்கின்றான்.

நல்லோர் வாழும் ஊருக்குச் சென்றால் மன்னிப்புண்டு என்று அவனுக்குச் சொல்லப்படுகின்றது.

செல்லும் வழியில் அவர் மரணிக்கின்றார்.

மரணிக்கும் போது தான் சென்ற நல்லோர் வாழும் ஊர் பக்கம் சாய்ந்து இறந்து விடுகின்றான்.

கருணைக்குரிய (சுவர்க்கத்திற்குரிய) மலக்குகளும், தண்டனை கொடுக்கும் (நரகத்திற்குரிய) மலக்குகளும் அவர் விஷயத்தில் சர்ச்சைப் பட்டார்கள்.

உடனே அல்லாஹ், அவர் வசித்து வந்த ஊரை தூரமாகவும், அவர் செல்ல வேண்டிய ஊரை அவருக்கு பக்கமாகவும் ஆக்கி அவரை மன்னித்து சர்சையை முடித்து வைத்தான் என்று மேற்கண்ட செய்தி நமக்கு சொல்கின்றது.



இப்போது மேற்கண்ட செய்தி குர்ஆனின் கருத்துக்கு எவ்வாறெல்லாம் முரண்பாடாக இருக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

**வேண்டுமென்று கொலை செய்தவருக்கு மன்னிப்புண்டா?**

தொண்ணூற்றொன்பது கொலைகளைச் செய்து விட்டு எனக்கு மன்னிப்புண்டா என்று குறித்த கொலைகார மனிதன் ஒரு மதகுருவிடம் கேட்கின்றான். உனக்கு மன்னிப்பில்லை என்று மதகுரு மார்க்கத் தீர்ப்பு சொல்கின்றார்.

உனக்கு மன்னிப்பில்லை என்று சொன்னதற்காக அவரையும் குறித்த கொலைகார மனிதன் கொன்று விடுகின்றான்.

‘உனக்கு மன்னிப்பில்லை” என்ற மதகுருவின் மார்க்கத் தீர்ப்பு சரியானதே. வேண்டுமென்றே கொலை செய்தவனுக்கு மன்னிப்பில்லை, அவன் நரகத்தில் நிரந்தரமாக இருப்பான். என்பது மார்க்க நிலைபாடு. அதனால் தான் அவர் அத்தகைய பத்வாவை வழங்கினார்.

நம்பிக்கை கொண்டவனை வேண்டுமென்று கொலை செய்பவனது கூலி நரகம். அதில் அவன் நிரந்தரமாக இருப்பான். அவன் மீது அல்லாஹ் கோபம் கொள்கிறான். அவனைச் சபிக்கிறான். அவனுக்குக் கடுமையான வேதனையைத் தயாரித்துள்ளான்.

(அல்குர்ஆன் 04:93)

ஒரு வாதத்திற்கு தொண்ணூற்றொன்பது கொலைகளைக் கூட அவன் தெரியாமல் செய்திருந்தான் என்று வைத்துக் கொண்டாலும், நூறாவது நபராக மதகுருவைக் கொலை செய்யும் போது தெரிந்து கொண்டு வேண்டுமென்றே தான் கொலை செய்கின்றான் என்பது மிகத் தெளிவானதாகும்.

நம்பிக்கை கொண்டவனை வேண்டுமென்று கொலை செய்பவனது கூலி நரகம். அதில் அவன் நிரந்தரமாக இருப்பான். அவன் மீது அல்லாஹ் கோபம் கொள்கிறான். அவனைச் சபிக்கிறான். அவனுக்குக் கடுமையான வேதனையைத் தயாரித்துள்ளான்.

(அல்குர்ஆன் 04:93)

ஆகவே மேற்கண்ட திருமறைக் குர்ஆன் வசனப் பிரகாரம் நரகத்தில் நிரந்தரமாக தங்க வைக்கும் பெரும் பாவமான கொலையைத் தான் இவன் செய்துள்ளான் என்பது தெளிவானது. இவன் மன்னிப்புக்குத் தகுதியற்றவன் என்ற நிலையை தனது 100 வது கொலையின் மூலம் உறுதிப்படுத்தி விட்டான்.

ஒரு வாதத்திற்கு குறித்த கொலைகாரன் செய்த கொலைகளின் 99 கொலைகளை அவன் அறியாமல் செய்திருந்தாலும் 100வது கொலையை அறிந்தே செய்கின்றான் என்பது மேற்கண்ட ஹதீஸில் இருந்து தெளிவாக நாம் அறிந்து கொள்ளும் விஷயமாகும்.

இப்படி வேண்டுமென்றே கொலை செய்தவனுக்கு எப்படி மன்னிப்பு கிடைக்கும். இது குர்ஆன் கூறும் கருத்துக்கு மாற்றமானதாகும்.

**ஓர் ஊரில் செய்த தவறுக்கு இன்னொரு ஊரில் தான் மன்னிப்பா?**

100 கொலைகளைச் செய்தவன் மீண்டும் பாவ மன்னிப்புக் கேட்க விரும்பிய நேரம் வாழும் ஊரை விட்டு இன்னொரு ஊருக்குச் சென்று பாவ மன்னிப்புக் கேட்குமாறு ஒருவர் கூறினாராம்.

........... (மீண்டும் மனம் வருந்தி) விசாரிக்கலானார். அப்போது ஒரு மனிதர், "(நல்லோர் வாழும்) இன்ன ஊருக்குப் போ!" என்று அவருக்குச் சொன்னார். (அந்த ஊரை நோக்கி அவர் சென்றபோது பாதி வழியில்) மரணம் அவரைத் தழுவியது..............

ஒரு ஊரில் பாவம் செய்தவர் இன்னொரு ஊரில் சென்று தான் பாவமன்னிப்புக் கோர வேண்டும் என்ற எந்த விதியும் மார்க்கத்தில் இல்லை.

நபியின் காலத்தில் – விபச்சாரம் செய்தவர்கள், பொய் சொன்னவர்கள், திருடியவர்கள் என எத்தனையோ தவறுகள் செய்தவர்கள் இருந்தும் அவர்களில் யாரையும் வேறு ஒரு ஊருக்குச் சென்று பாவமன்னிப்புக் கோருமாறு நபியவர்கள் கட்டளையிடவில்லை. அப்படியொரு சட்டத்தை மார்க்கம் எங்கும் சொல்லவேயில்லையே?

ஆனால் மேற்கண்ட ஹதீஸில் 100 கொலை செய்தவர் பாவமன்னிப்பு கோருவதற்காக வேறு ஒரு ஊருக்கு அனுப்பப்படுகின்றார். இதுவும் குறித்த செய்தி தவறானது என்பதை நமக்கு விளக்குகின்றது.

அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்பவர் பூமியில் அதிகமான புகலிடங்களையும், வசதிகளையும் பெற்றுக் கொள்வார். அல்லாஹ்வை நோக்கியும், அவனது தூதரை நோக்கியும் ஹிஜ்ரத் செய்து தன் வீட்டை விட்டு புறப்பட்டுச் செல்பவருக்கு மரணம் ஏற்பட்டால் அவருக்குரிய கூலி அல்லாஹ்விடம் கிடைத்து விடும். அல்லாஹ் மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான்.

(அல்குர்ஆன் 04:100)



இறைவனுக்காக யாராவது ஹிஜ்ரத் செய்தால் அவர்கள் புறப்பட்டதுமே அவர்களுக்குரிய நன்மை கிடைத்துவிடும் என்று மேற்கண்ட வசனம் குறிப்பிடுகின்றது.

ஒரு நல்ல காரியத்திற்காக புறப்பட்டவுடன் அவருக்குரிய நன்மை கிடைத்துவிடும் என்பது தான் இதன் விளக்கமாகும்.

ஆனால் மேற்கண்ட செய்தியில் மன்னிப்புக் கோருவதற்காக சென்ற ஊரையும், வாழ்ந்த ஊரையும் அளந்து பார்த்ததாகப் பதியப்பட்டுள்ளது.

அப்படியானால் ஒருவர் ஹிஜ்ரத் செய்தால் அவருக்கு நன்மை வழங்கும் முன் அவர் வாழ்ந்த ஊரையும், போய்ச் சேர்ந்த ஊரின் தூரத்தையும் அளந்து பார்த்துத் தானே இறைவன் நன்மை கொடுக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட 04:100 வது வசனமோ ஹிஜ்ரத்திற்காக புறப்பட்டவுடன் நன்மை கிடைத்துவிடும் என்றல்லவா கூறுகின்றது?

**சர்சையில் ஈடுபட்ட வானவர்கள்?**

........... மரணம் அவரைத் தழுவியது. (மரணத் தருவாயில்) அவர் தன் நெஞ்சை அந்த ஊர் இருக்கும் திசையில் சாய்த்துக் கொண்(டே இறந்து விட்) டார்.

அப்போது இறை கருணையைப் பொழியும் வானவர்களும் இறை தண்டனைகளை நிறைவேற்றும் வானவர்களும் அவர் விஷயத்தில் (அவரை யார் அழைத்துச் செல்வது என்று) சச்சரவிட்டுக் கொண்டனர். உடனே அல்லாஹ் அதை நோக்கி, "நீ நெருங்கி வா!" என்று (அவர் செல்லவிருந்த ஊருக்கு) உத்திரவிட்டான். இதை நோக்கி, "நீ தூரப் போ!" என்று (அவர் வசித்து வந்த ஊருக்கு) உத்திரவிட்டான். பிறகு, "அவ்விரண்டுக்குமிடையே உள்ள தூரத்தைக் கணக்கெடுங்கள்" என்று (வானவர்களுக்குக்) கூறினான். (அவ்வாறே கணக்கெடுத்த போது) செல்லவிருந்த ஊருக்கு (அவர் வசித்து வந்த ஊரை விட ஒரே) ஒரு சாண் அளவிற்கு அவர் (உடைய உடல்) சமீபமாக இருந்த காரணத்தால் அவருக்குப் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டது........

புகாரி : 3470

குறித்த கொலைகார மனிதன் பாவமன்னிப்பு வேண்டுவதற்காக அடுத்த ஊருக்குச் செல்லும் வழியில் இறந்தவுடன் அவரை சுவர்க்கத்திற்கு அழைத்து செல்வதா? அல்லது நரகத்திற்கு அழைத்து செல்வதா? என்பதில் மலக்குமார்களின் இரு குழுவினர் சர்ச்சையில் ஈடுபட்டதாகவும், இறுதியில் இறைவன் ஒரு தந்திரத்தை கையாண்டு இரு தரப்பாருக்கும் இடையில்

சமரசம் செய்து வைத்ததாகவும் மேற்கண்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு தரப்பு வானவர்கள் இவர் விஷயத்தில் சர்ச்சைப்பட்டுக் கொண்டதாக மேற்கண்ட செய்தி சொல்கின்றது. இது திருமறைக் குர்ஆனில் வானவர்களின் இலக்கணம் தொடர்பாக இறைவன் கூறும் செய்திகளுக்கு நேர்மாற்றமாக உள்ளது.

வானவர்களுக்கு என்று சில இலக்கணங்கள் உள்ளதாகத் திருக்குர்ஆன் கூறுகிறது.

வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ள உயிரினங்களும், வானவர்களும் அல்லாஹ்வுக்கே ஸஜ்தாச் செய்கின்றனர். வானவர்கள் பெருமையடிக்க மாட்டார்கள். தமக்கு மேலே இருக்கும் தமது இறைவனை அவர்கள் அஞ்சுகின்றனர். கட்டளையிடப்பட்டதைச் செய்கின்றனர்.

(திருக்குர்ஆன் 16:49, 50)

அளவற்ற அருளாளன் சந்ததியை ஏற்படுத்திக் கொண்டான்" எனக் கூறுகின்றனர். அவன் தூயவன். மாறாக அவர்கள் (வானவர்கள்) மரியாதைக்குரிய அடியார்கள். அவர்கள் அவனை முந்திப் பேச மாட்டார்கள். அவனது கட்டளைப்படியே செயல்படுவார்கள்.

(திருக்குர்ஆன் 21:26,27)

நம்பிக்கை கொண்டோரே! உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரகை விட்டுக் காத்துக் கொள்ளுங்கள்! அதன் எரிபொருள் மனிதரும் கற்களுமாகும். அதன் மேல் கடுமையும், கொடூரமும் கொண்ட வானவர்கள் உள்ளனர். தமக்கு அல்லாஹ் ஏவியதில் மாறு செய்ய மாட்டார்கள். கட்டளையிடப்பட்டதைச் செய்வார்கள்.

(திருக்குர்ஆன் 66:6)

இறைவன் கட்டளையிட்டவற்றுக்கு மாறு செய்யாமல் அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு செயல்படுவதுதான் மலக்குமார்களின் பண்பாகும். ஆனால் மேற்கண்ட ஹதீஸ் மலக்குமார்களின் இந்த பண்பை தெளிவாக மறுக்கும் விதமாக அமைந்துள்ளது.

இறைவனின் கட்டளைக்கு மலக்குமார்கள் மாறு செய்யமாட்டார்கள் அவன் ஏவியதைத் தான் செய்வார்கள் என்றால், மேற்கண்ட ஹதீஸில் குறித்த மனிதனை இறைவன் சுவர்க்கத்திற்கு அழைத்து வர கட்டளையிட்டிருந்தால் வேறு வேலையில்லாமல் இட்ட கட்டளைப்படி உடனடியான அவனுடைய பாவத்தை மன்னித்து அவனுக்கு ஈடேற்றம் கொடுப்பதே அவர்களின்



பணியாக இருந்திருக்க வேண்டும்.

இல்லை, பாவமன்னிப்பு வழங்காமல் அவனை நரகத்திற்கு அழைத்து செல்வதுதான் மலக்குமார்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தால் அவர்கள் அதற்குரிய காரியங்களைத் தான் பார்த்திருக்க வேண்டும்.

மாறாக, இரு தரப்பு மலக்குமார்களும் அவனுடைய விஷயத்தில் தலையிடுகின்றார்கள்.

இரு தரப்பினரும் குறித்த மனிதனை நாங்கள் தான் அழைத்து செல்வோம் என்று சர்ச்சையில் ஈடுபடுகின்றார்கள்.

மலக்குமார்கள் இறைவனின் கட்டளைகளுக்கு மாறு செய்ய மாட்டார்கள் என்ற திருக்குர்ஆன் வசனங்களுக்கு அமைவாக, அவர்கள் செயல்படாது சர்ச்சையில் ஈடுபட்டமை குர்ஆனின் கட்டளைகளுக்கும் மலக்குமார்களின் பண்புகளுக்கும் மாற்றமானதாகும்.

அத்துடன் இவ்விடத்தில் இன்னொரு சந்தேகமும் எழுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

அதாவது குறித்த கொலைகார மனிதன் விஷயத்தில் முடிவெடுப்பதற்கு இறைவன் இரு தரப்பு மலக்குமார்களுக்கும் கட்டளையிட்டானா?

மலக்குமார்கள் சர்ச்சைப்பட்டுக் கொள்வார்களா?

சர்ச்சைப்பட்டுக் கொள்ளும் அளவுக்குள்ள பிரச்சினையா இது?

தங்கள் பணியில் குழப்பம் அடையும் அளவுக்குத் தான் மலக்குமார்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதா?

இந்தக் கேள்விகளுக்கு யார் பதில் தருவது?

**சர்ச்சைக்கு இறைவன் முற்றுப் புள்ளி வைத்தானாம்.**

மேற்படி குறித்த கொலைகார மனிதனின் விஷயத்தில் அவன் நல்லவனா? கெட்டவனா? பாவமன்னிப்பு வழங்கலாமா? கூடாதா? என்ற சர்ச்சையில் மலக்குமார்கள் ஈடுபட்ட வேலையில் அவர்களின் சர்ச்சைக்கு இறைவன் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ஒரு தந்திரத்தைச் செய்தானாம்.

........உடனே அல்லாஹ் அதை நோக்கி, "நீ நெருங்கி வா!" என்று (அவர் செல்லவிருந்த ஊருக்கு) உத்திரவிட்டான். இதை நோக்கி, "நீ தூரப் போ!" என்று (அவர் வசித்து வந்த ஊருக்கு) உத்திரவிட்டான். பிறகு, "அவ்விரண்டுக்கு

மிடையே உள்ள தூரத்தைக் கணக்கெடுங்கள்" என்று (வானவர்களுக்குக்) கூறினான். (அவ்வாறே கணக்கெடுத்த போது) செல்லவிருந்த ஊருக்கு (அவர் வசித்து வந்த ஊரை விட ஒரே) ஒரு சாண் அளவிற்கு அவர் (உடைய உடல்) சமீபமாக இருந்த காரணத்தால் அவருக்குப் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டது........

புகாரி : 3470

அவன் வசித்த ஊரைப் பின்னோக்கி நகர்த்தியும், அவன் சென்று கொண்டிருந்த ஊரை முன்னோக்கி வர வைத்தும், பின்னர் மலக்குமார்களை அளந்து பார்க்க வைத்து பிரச்சினைக்கு இறைவன் முற்றுப் புள்ளி வைத்ததாக குறித்த ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

வேண்டுமென்று ஒரு கொலை செய்தவனுக்கு மன்னிப்பில்லை, அவன் நிரந்தர நரகத்திற்குரியவன் என்று இறைவன் சொன்னதற்குப் பின் (அல்குர்ஆன் 04:93) 100 கொலை செய்தவனுக்கு இறைவனே தந்திரம் செய்து மன்னிப்பளித்தான் என்பது இறைவனின் கண்ணியத்தையும், மகத்துவத்தையும் இழிவுபடுத்தும் கருத்தாகும்.

நபிமார்கள் தனது கட்டளைக்கு மாறு செய்தாலே கடுமையாக தண்டிப்பேன் என்று கூறும் இறைவன் 100 கொலை செய்த எவனோ ஒருவனைக் காப்பாற்றுவதற்காக தந்திரம் செய்தான் என்பது கேலிக் கூத்தான சிந்தனையாக இருக்கின்றது. இறைவனின் மகத்துவத்தை கெடுக்கும் செயல்பாடாக இருக்கின்றது.

**எதிர்வாதங்களும் நமது பதில்களும்**

**எதிர்வாதம் :**

மேற்கண்ட 100 கொலை தொடர்பான செய்தியை உண்மை என்று வாதிடுபவர்கள் மலக்குமார்கள் இவ்வாறு போட்டியிடுவார்களா? என்று நாம் கேட்கும் கேள்விக்கு கீழ்க்காணும் ஹதீஸை ஆதாரம் காட்டுகின்றார்கள். மலக்குமார்கள் போட்டியிடுவார்கள் என்பதற்குரிய ஆதாரமாகவே கீழ்க்காணும் செய்தியை இவர்கள் எடுத்துக் காட்டுகின்றார்கள்.

عَنْ رِفَاعَةَ بْنِ رَافِعٍ الزُّرَقِيِّ قَالَ كُنَّا يَوْمًا نُصَلِّي وَرَاءَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَلَمَّا رَفَعَ رَأْسَهُ مِنَ الرَّكْعَةِ قَالَ سَمِعَ اللَّهُ لِمَنْ حَمِدَهُ قَالَ رَجُلٌ وَرَاءَهُ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ فَلَمَّا انْصَرَفَ قَالَ مَنْ الْمُتَكَلِّمُ قَالَ أَنَا قَالَ رَأَيْتُ بِضْعَةً وَثَلَاثِينَ مَلَكًا يَبْتَدِرُونَهَا أَيُّهُمْ يَكْتُبُهَا أَوَّلُ (خ:٩٩٧)

ரிஃபாஆ பின் ராஃபிஉ அஸ்ஸுரக்கீ (ரலி) அவர்கள் கூறியதாவது:



நாங்கள் ஒரு நாள் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் (அவர்களைப் பின்பற்றித்) தொழுது கொண்டிருந்தோம். அவர்கள் ருகூஉவிலிருந்து தலையை உயர்த்தியபோது "சமி அல்லாஹு –லிமன் ஹமிதஹ்' (அல்லாஹ் தன்னைப் புகழ்வோரின் புகழுரையை ஏற்றுக்கொள்கிறான்) எனக் கூறினார்கள். அவர்களுக்குப் பின்னாலிருந்த ஒரு மனிதர் "ரப்பனா வல(க்)கல் ஹம்து. ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹீ" எங்கள் இறைவா! புகழ் அனைத்தும் உனக்கே உரியது. (பகட்டோ பெருமையோ கலவாமல்) தூய்மையும் சுபிட்சம் மிக்க உனது திருப்புகழை நிறைவாகப் போற்றுகிறேன் என்று கூறினார். தொழுது முடித்ததும் நபி (ஸல்) அவர்கள், "(தொழுகையில் இந்த வார்த்தைகளை) மொழிந்தவர் யார்?" என்று கேட்டார்கள். அந்த மனிதர், "நான்தான்" என்றார். "முப்பதுக்கும் மேற்பட்ட வானவர்கள் "இதை நம்மில் முதலில் பதிவு செய்வது யார் எனத் தமக்கிடையே) போட்டியிட்டுக் கொள்வதை நான் கண்டேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

புகாரி 799

**நமது பதில்**

மேலே எதிர்த்தரப்பினர் எடுத்துக் காட்டும் புகாரி 799 வது ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் குறித்த செய்தி எதிர்தரப்பினரின் வாதத்திற்குரிய ஆதாரமாக ஆகாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவரின் நன்மையை எழுதும் விஷயத்தில் மலக்குமார்கள் போட்டியிட்டார்கள் என்பதற்கும் ஒருவர் சுவர்க்கத்திற்குரியவரா? நரகத்திற்குரியவரா? என்று சர்ச்சையிட்டுக் கொண்டதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் காணப்படுகின்றது.

நாம் ஆய்வுக்குற்படுத்தியுள்ள 100 கொலை செய்தவன் பற்றிய செய்தியில் குறித்த கொலைகாரன் சுவர்க்கத்திற்குரியவன் என்று ஒரு தரப்பாரும், அவன் நரகத்திற்குரியவன் என்று இன்னொரு தரப்பாரும் சர்ச்சைப்பட்டுக் கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இது மலக்குமார்களின் தன்மைக்கு மாற்றமானது. இறைவனின் கட்டளைக்கு மாறு செய்யாமல் அவன் இட்ட கட்டளையை அப்படியே ஏற்று நடக்கும் மலக்குமார்கள் இப்படி சர்சைப்பட மாட்டார்கள். இறைவனும் இரு தரப்பு மலக்குமார்களுக்கும் கட்டளையிட மாட்டான். என்பதே நமது வாதமாகும்.

இதே நேரத்தில் புகாரி 799வது செய்தியில் நன்மையை பதிவதற்காக மலக்குமார்கள் போட்டியிட்டுக் கொண்டதாக இடம் பெற்றுள்ளது.

இது அல்குர்ஆன் கூறும் மலக்குமார்களின் இலக்கணத்திற்கு மாற்றமானது அல்ல.

காரணம் அவர்கள் அனைவரும் குறித்த விஷயம் நல்லது என்பதினால் அதனைப் பதிவு செய்வதற்கு போட்டியிட்டார்கள்.

ஆனால் 100 கொலை செய்தவன் பற்றிய செய்தியில் இரு தரப்பு மலக்குமார்கள் குறித்த மனிதன் சுவர்க்கமா? நரகமா? என்பதில் சர்சைப்பட்டுக் கொண்டார்கள்.

போட்டியிடுவது என்பது வேறு சர்ச்சைப்படுவது என்பது வேறு என்பதைத் தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**எதிர் வாதம் :**

“இஸ்ரவேல் சமுதாயத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைத் தான் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். கொலை செய்தவனுக்கு மன்னிப்பில்லை, அவன் நிரந்தரமாக நரகத்தில் இருப்பான் என்பது நமக்குரிய சட்டமாகவே அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகின்றான். ஆகவே இது முன்னைய சமுதாயத்திற்குரிய சட்டம் என்றே இதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்தச் செய்தியை உண்மை என்போர் வாதிக்கின்றார்கள்.

**நமது பதில் :**

இஸ்ரவேல் சமுதாயத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைத் தான் நபி (ஸல்) கூறுவதாக குறித்த செய்தி குறிப்பிடுகின்றது என்பதில் நமக்கும் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் இஸ்ரவேல் சமுதாயத்திற்கும் கொலை மன்னிப்பில்லாத குற்றம் என்பதே சட்டமாக இருந்தது என்று குர்ஆன் நமக்கு கற்றுத் தருகின்றனது.

கொலைக்குப் பதிலாகவோ, பூமியில் செய்யும் குழப்பத்திற்குப் பதிலாகவோ இல்லாமல் ஒருவர், மற்றொருவரைக் கொலை செய்தால் அவர் எல்லா மனிதர்களையும் கொலை செய்தவர் போலாவார்' என்றும், “ஒரு மனிதனை வாழ வைத்தவர் எல்லா மனிதர்களையும் வாழ வைத்தவர் போலாவார்' என்றும் இஸ்ராயீலின் மக்களுக்கு இதன் காரணமாகவே விதியாக்கினோம். அவர்களிடம் நம்முடைய தூதர்கள் தெளிவான சான்றுகளைக் கொண்டு வந்தனர். இதன் பின்னர் அவர்களில் அதிகமானோர் பூமியில் வரம்பு மீறுவோராகவே உள்ளனர்.

(அல்குர்ஆன் 05:32)



கொலை செய்வது நமக்கு மாத்திரமன்றி இஸ்ரவேல் சமுதாயத்திற்கும் தடை செய்யப்பட்ட பெரும் பாவம் என்பதை மேற்கண்ட திருக்குர்ஆன் வசனம் தெளிவாக நமக்கு விபரிக்கும் போது இஸ்ரவேல் சமுதாயத்திற்கு கொலை செய்தவனுக்கு மன்னிப்பு கொடுப்பதாக சட்டம் இருந்தது என்று கற்பனையாக கருத்து சொல்வோர் அல்லாஹ்வை பயந்து கொள்ள வேண்டும்.

நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 100 கொலை செய்தவன் பற்றிய செய்தி அறிவிப்பாளர் தொடர் அடிப்படையில் சரியாக இருந்தாலும் புனிதக் குர்ஆனின் கட்டளைகளுக்கும், வசனங்களுக்கும் நேர் மாற்றமாக இருப்பதினால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே தெளிவான நிலைபாடாகும்.

# உலகம் படைக்கப்பட்ட நாட்கள் 06 அல்லது 07 ?

உலகம் எத்தனை நாட்களில் படைக்கப்பட்டது என்ற கேள்விக்கு 06 நாட்கள் என்று இறைவன் தனது திருமறைக் குர்ஆனில் மிகத் தெளிவாக பதில் தந்துள்ளான்.

உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வே வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்னர் அர்ஷின் மீது அமர்ந்தான். இரவைப் பகலால் அவன் மூடுகிறான். பகல், இரவை வேகமாகத் தொடர்கிறது. சூரியனையும்,சந்திரனையும், நட்சத்திரங்களையும் தனது கட்டளையால் கட்டுப்படுத்தினான். கவனத்தில் கொள்க! படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியன. அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ் பாக்கியம் பொருந்தியவன்.

(அல்குர்ஆன் 07:54)

மேலும் 7:54, 10:3, 11:7, 57:4 25:59, 32:04, 50:38 போன்ற வசனங்களிலும் இறைவன் 06 நாட்களில் உலகம் படைக்கப் பட்டதாக குறிப்பிடுகின்றான்.

வானம், பூமி மற்றும் அதற்கு இடைப்பட்டவை அனைத்தையும் சேர்த்து உலகத்தை மொத்தமாக 06 நாட்களில் இறைவன் படைத்தான் என்று தனது திருமறைக் குர்ஆனில் தெளிவாக குறிப்பிடுகின்றான். ஆனால் உலகத்தைப் படைப்பதற்கு இறைவன் 07 நாட்களை எடுத்துக் கொண்டதாக நபியவர்கள் கூறுவதாக முஸ்லிம் என்ற ஹதீஸ் கிரந்தத்தில் ஒரு செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என் கையைப் பிடித்துக் கூறினார்கள்: கண்ணியமும், மகத்துவமும் மிக்க அல்லாஹ் சனிக்கிழமை பூமியைப் படைத்தான். பூமியிலே ஞாயிற்றுக்கிழமை மலையைப் படைத்தான். திங்கட்கிழமை மரங்களைப் படைத்தான். செவ்வாய்க்கிழமை உலோகங்களைப் படைத்தான். புதன்கிழமை ஒளியைப் படைத்தான். வியாழக்கிழமை பூமியிலே உயிரினங்களைப் பரவச் செய்தான். வெள்ளிக்கிழமை அஸருக்குப் பின் வெள்ளிக்கிழமையின் கடைசி நேரமான அஸர் மற்றும் இரவுக்கு மத்தியில் கடைசிப் படைப்பாக ஆதமைப் படைத்தான்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி)
நூல் : முஸ்லிம் (4997)



மேற்கண்ட செய்தியில் இறைவன் உலகத்தைப் படைக்க ஆரம்பித்து

- சனிக்கிழமை பூமியையும்,
- ஞாயிற்றுக்கிழமை மலைகளையும்,
- திங்கட்கிழமை மரங்களையும்,
- செவ்வாய்க் கிழமை உலோகங்களையும்,
- புதன் கிழமை ஒளியையும்,
- வியாழக் கிழமை (மற்ற) உயிரினங்களையும்,
- வெள்ளிக்கிழமை ஆதம் (அலை) அவர்களையும்

படைத்ததாக நபியவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

மேற்கண்ட அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் செய்தி உலகத்தை இறைவன் 07 நாட்களில் படைத்ததாகத் தெரிவிக்கின்றது. ஆனால் வல்லமையும், மகத்துவமும் மிக்க இறைவன் உலகத்தை ஆறு நாட்களில் படைத்ததாக திருக்குர்ஆனின் பல வசனங்கள் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றன.

குர்ஆன் 06 நாட்களில் உலகம் படைக்கப்பட்டதாகக் கூறும் போது, 07 நாட்களில் உலகத்தை இறைவன் படைத்தான் என்று நபியவர்கள் நிச்சயமாகக் கூற மாட்டார்கள். இறைவனின் வார்த்தைகளுக்கு மாற்றமாக நபியவர்கள் பேச மாட்டார்கள்.

அப்படியானால் முஸ்லிமில் இடம் பெறும் இந்தச் செய்தியின் நிலை என்னவென்ற கேள்வியெழும்.

இறைவனின் முதன்மை வஹியாக இருக்கின்ற திருமறைக் குர்ஆனுக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் பேசவும் மாட்டார்கள், ஒரு வஹிக்கு மாற்றமாக இன்னொரு வஹியை முரண்படும் விதத்தில் இறைவன் இறக்கவும் மாட்டான் என்ற அடிப்படையில் இமாம் முஸ்லிம் அவர்கள் குறித்த செய்தியை தனது நூலில் பதிவு செய்திருந்தாலும், அந்தச் செய்தி நபியவர்கள் சொன்னதல்ல, நபியவர்களில் பெயரால் யாரோ இட்டுக்கட்டியுள்ளார்கள் என்ற முடிவுக்கே நாம் வர வேண்டியுள்ளது.

ஷைகுல் இஸ்லாம் என்று போற்றப்பட்ட இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் இந்தச் செய்தி குறித்து தெரிவிக்கும் போது நாம் இதில் என்ன

நிலையிலிருக்கின்றோமோ, அதே நிலையில் தான் இமாமவர்களும் இருக்கின்றார்கள் என்பதை நாம் அறிய முடிகின்றது.

صحيح مسلم (٤/ ٢١٤٩)

27 - (2789) حَدَّثَنِي سُرَيْجُ بْنُ يُونُسَ، وَهَارُونُ بْنُ عَبْدِ اللهِ، قَالَا: حَدَّثَنَا حَجَّاجُ بْنُ مُحَمَّدٍ، قَالَ: قَالَ ابْنُ جُرَيْجٍ، أَخْبَرَنِي إِسْمَاعِيلُ بْنُ أُمَيَّةَ، عَنْ أَيُّوبَ بْنِ خَالِدٍ، عَنْ عَبْدِ اللهِ بْنِ رَافِعٍ، مَوْلَى أُمِّ سَلَمَةَ، عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: أَخَذَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِيَدِي فَقَالَ: «خَلَقَ اللهُ عَزَّ وَجَلَّ التُّرْبَةَ يَوْمَ السَّبْتِ، وَخَلَقَ فِيهَا الْجِبَالَ يَوْمَ الْأَحَدِ، وَخَلَقَ الشَّجَرَ يَوْمَ الِاثْنَيْنِ، وَخَلَقَ الْمَكْرُوهَ يَوْمَ الثُّلَاثَاءِ، وَخَلَقَ النُّورَ يَوْمَ الْأَرْبِعَاءِ، وَبَثَّ فِيهَا الدَّوَابَّ يَوْمَ الْخَمِيسِ، وَخَلَقَ آدَمَ عَلَيْهِ السَّلَامُ بَعْدَ الْعَصْرِ مِنْ يَوْمِ الْجُمُعَةِ، فِي آخِرِ الْخَلْقِ، فِي آخِرِ سَاعَةٍ مِنْ سَاعَاتِ الْجُمُعَةِ، فِيمَا بَيْنَ الْعَصْرِ إِلَى اللَّيْلِ» ، قَالَ إِبْرَاهِيمُ: حَدَّثَنَا الْبِسْطَامِيُّ وَهُوَ الْحُسَيْنُ بْنُ عِيسَى، وَسَهْلُ بْنُ عَمَّارٍ، وَإِبْرَاهِيمُ ابْنُ بِنْتِ حَفْصٍ وَغَيْرُهُمْ، عَنْ حَجَّاجٍ بِهَذَا الْحَدِيثِ

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என் கையைப் பிடித்துக் கூறினார்கள்: கண்ணியமும், மகத்துவமும் மிக்க அல்லாஹ் சனிக்கிழமை பூமியைப் படைத்தான். பூமியிலே ஞாயிற்றுக்கிழமை மலையைப் படைத்தான். திங்கட்கிழமை மரங்களைப் படைத்தான். செவ்வாய்க்கிழமை உலோகங்களைப் படைத்தான். புதன்கிழமை ஒளியைப் படைத்தான். வியாழக்கிழமை பூமியிலே உயிரினங்களைப் பரவச் செய்தான். வெள்ளிக்கிழமை அஸருக்குப் பின் வெள்ளிக்கிழமையின் கடைசி நேரமான அஸர் மற்றும் இரவுக்கு மத்தியில் கடைசிப் படைப்பாக ஆதமைப் படைத்தான்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி)
நூல் : முஸ்லிம் (4997)

وَلَوْ كَانَ أَوَّلُ الْخَلْقِ يَوْمَ السَّبْتِ وَآخِرُهُ يَوْمَ الْجُمُعَةِ لَكَانَ قَدْ خُلِقَ فِي الْأَيَّامِ السَّبْعَةِ وَهُوَ خِلَافُ مَا أَخْبَرَ بِهِ الْقُرْآنُ مَعَ أَنَّ حُذَّاقَ أَهْلِ الْحَدِيثِ يُثْبِتُونَ عِلَّةَ هَذَا الْحَدِيثِ مِنْ غَيْرِ هَذِهِ الْجِهَةِ

சனிக்கிழமை படைப்பதைத் துவங்கி வெள்ளிக்கிழமை முடித்திருந்தால் திட்டமாக இவ்வுலகம் ஏழுநாட்களில் படைக்கப்பட்டதாகி விடும். இக்கருத்து குர்ஆன் அறிவிக்கும் செய்திக்கு மாற்றமானதாகும். ஹதீஸ் கலையில் நுன்னறிவுள்ளவர்கள் இது அல்லாமல் வேறு கோணங்களிலும் இந்த ஹதீஸில் குறை உள்ளதென நிரூபித்துள்ளார்கள்.

நூல் : மஜ்மூஉ ஃபதாவா இப்னி தைமியா பாகம் : 4 பக்கம் : 34

உலகம் ஆறு நாட்களில் படைக்கப்பட்டதாக இறைவன் குர்ஆனில் குறிப்பிடும் போது குறித்த செய்தி 07 நாட்களில் உலகத்தை இறைவன் படைத்ததாகக் குறிப்பிடுவது ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதை குறிப்பிடும் இமாமவர்கள் இது தவிர இந்த செய்தியில் அறிவிப்பாளர் ரீதியாகவும் குறை



காண்கின்றார்கள்.

**விமர்சனங்களும் விளக்கங்களும்.**

**விமர்சனம் :**

உலகத்தை இறைவன் 07 நாட்களில் படைத்ததாக குர்ஆனுக்கு மாற்றமாக இடம் பெற்றுள்ள முஸ்லிமின் செய்தி தொடர்பில் அது குர்ஆனுக்கு முரண்படவில்லை என்று வாதிடும் எதிர்த்தரப்பு அறிஞர்கள் இப்படியானதொரு வாதத்தை முன்வைக்கின்றார்கள்.

மேற்கண்ட செய்தியில் இறைவன் சனிக்கிழமையில் உலகத்தை படைக்க ஆரம்பித்து, வெள்ளிக்கிழமையில் முடித்தான் என்று வந்துள்ளது. இது குர்ஆனுக்கு மாற்றமானதல்ல, காரணம் மேலுள்ள செய்தியில் இறைவன் ஒவ்வொன்றையும் படைத்ததைப் பற்றி நபியவர்கள் கூறும் போது ‘‘ஹலக” படைத்தான் என்ற வார்த்தையைக் குறிப்பிடுகின்றார்கள். இதே நேரம் வியாழக்கிழமை இறைவன் செய்த காரியத்தைப் பற்றி நபியவர்கள் கூறும் போது பூமியிலே உயிரினங்களை ‘‘பரவச் செய்தான்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

“ஹலக” என்பது படைத்தான் என்று பொருள்படும் ஒரு சொல், இதே நேரம் பரவச் செய்தல் என்பதற்கு அரபியில் ‘‘பஸ்ஸ” என்று சொல்வார்கள்.

உலகம் படைக்கப்பட்டது தொடர்பில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக வரும் செய்தியில் 06 நாட்களுக்கு ‘‘ஹலக” படைத்தான் என்ற வார்த்தையையும், வியாழக் கிழமை இறைவன் செய்த காரியத்திற்கு மாத்திரம் ‘‘பஸ்ஸ” பரவச் செய்தான் என்றும் குறிப்பிடுவதிலிருந்து இறைவன் 06 நாட்களில் தான் உலகத்தை படைத்தான் என்பதைத் தான் நபியவர்களும் குறிப்பிடுகின்றார்கள், வியாழக்கிழமை இறைவன் உயிரினங்களை பூமியில் பரவச் செய்தான் படைக்கவில்லை. என்று வாதிக்கின்றார்கள்.

**நமது விளக்கம்**

இறைவன் உலகத்தைப் படைத்தமை தொடர்பில் ஒவ்வொரு நாட்களிலும் என்னவெற்றையெல்லாம் படைத்தான் என்பது தொடர்பில் 06 நாட்கள் படைத்தவற்றுக்கு ‘‘ஹலக” - படைத்தான் என்ற வார்த்தையையும், வியாழக்கிழமை இறைவன் செய்த காரியத்தைப் பற்றி குறிப்பிடும் போது பூமியில் உயிரினங்களைப் பரவச் செய்தான் ‘‘பஸ்ஸ” என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் இந்த வாதத்தினால் குறித்த செய்தி நபியவர்கள் சொல்லிய ஹதீஸ் என்ற நிலையை அடைந்து விடாது.

காரணம் உலகத்தை இறைவன் 06 நாட்களில் படைத்துள்ளான் என்று குர்ஆன் கூறும் கருத்துக்கு விளக்கமாக இந்தச் செய்தி வருவதாக இருந்தால் இறைவன் செய்த காரியங்கள் 06 நாட்களுடன் நிறைவு பெற்றுவிட்டதாக வந்திருக்கும் ஆனால் இதில் அவ்வாறில்லை.

மாறாக இறைவன் சனிக்கிழமை இதனைச் செய்தான், ஞாயிற்றுக்கிழமை இதனைச் செய்தான் என்று ஒவ்வொரு நாளும் இறைவன் செய்த காரியங்கள் பற்றிய பட்டியல் சொல்லப்படுகின்றது. அந்தப் பட்டியல் வரிசையில் தான் வியாழக்கிழமை பூமியில் உயிரினங்களைப் பரவச் செய்தான் என்றும் கூறப்படுகின்றது.

படைத்தல் வரிசையில் பூமி, மரம், மலைகள் போன்றவற்றையெல்லாம் குறிப்பிட்ட இறைவன் உயிரினங்களைப் படைத்ததை குறிப்பிடவில்லை. இவர்கள் சொல்லும் வாதப்படி சிந்தித்தால் இறைவன் உயிரினங்களைப் படைக்காமலேயெ பரவச் செய்தானா? என்ற சந்தேகம் எழுந்து விடுகின்றனது. இருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதிலாக இன்னொரு பிரச்சினையை உண்டாக்கும் விதமாகவே இவர்களின் இந்த அபூர்வ விளக்கம் அமைந்துள்ளது.

பரவச் செய்தான் என்ற வாதத்தை வைத்தால் படைக்காமலேயே எப்படி பரவச் செய்தான் என்ற சந்தேகம் தான் வரும்.

ஆனால் ''ஹலக" என்ற வார்த்தை மூலம் ஒவ்வொரு நாளும் இறைவன் செய்த காரியம் என்று குறித்த செய்தியின் கருத்து அமைந்திருப்பதினால், வியாழக்கிழமை பூமியில் உயிரினங்களை பரவச் செய்தான் என்றால் படைத்து பரவச் செய்தான் என்று தான் அனைத்து அறிவாளிகளும் புரிந்து கொள்வார்கள்.

ஆகவே இறைவன் 06 நாட்களில் உலகத்தைப் படைத்தான் என்று தெளிவாக குர்ஆனில் குறிப்பிட்டிருக்கும் போது, 07 நாட்களில் உலகத்தை இறைவன் படைத்தான் என்ற கருத்துப்பட அமைந்திருக்கும் இந்தச் செய்தியை நபியவர்கள் நிச்சயமாக கூறியிருக்க மாட்டார்கள் என்ற முடிவுக்கே எந்தவொரு முஃமினும் வர முடியும். யாரோ ஒருவர் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாக இட்டுக்கட்டிய செய்தி கவனக் குறைவால் முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. என்று புரிந்து கொண்டால் சரியாகிவிடும்.



**பலவீனமான செய்தி**

முஸ்லிமில் இடம் பெறும் குறித்த செய்தி பலவீனமானது ஆகவே இது தொடர்பில் நாம் விவாதிப்பதில் அர்த்தமில்லை என்று சிலர் பேசியும் எழுதியும் வருகின்றார்கள்.

**நமது விளக்கம்**

இறைவன் ஆறு நாட்களில் உலகத்தைப் படைத்ததாக குர்ஆன் கூறும் செய்திக்கு மாற்றமாக 07 நாட்களில் உலகத்தை இறைவன் படைத்தான் என்று இடம் பெற்றிருக்கின்றது. குர்ஆனுக்கு மாற்றமாக இந்தச் செய்தி இருப்பதினால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் நாம் வாதிடும் போது, குறித்த வாதத்திற்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்வதற்காக குறித்த செய்தி அறிவிப்பாளர் ரீதியாக பலவீனமானது என்ற வாதத்தை முன்வைக்கின்றார்கள்.

பலவீனம் என்பது அறிவிப்பாளர் ரீதியாக மாத்திரம் தான் வரும் என்ற கருத்தில் இருப்பவர்கள், அறிவிப்பாளரின் பலவீனத்தைக் குறிப்பிட்டு குறித்த செய்தியைப் பலவீனம் என்று சொல்கின்றார்கள்.

குர்ஆனுக்கு முரணாக அமைந்து விட்டால் பலவீனம் என்பதைத் தாண்டி இட்டுக் கட்டப்பட்டது அதனை ஒருக்காலும் ஆதாரத்திற்கு எடுக்க முடியாது என்பதே நமது நிலையாகும்.

இந்த இடத்தில் முஸ்லிமில் இடம்பெறும் இந்தச் செய்தி அறிவிப்பாளர் ரீதியாக பலவீனமானதா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. குர்ஆனுக்கு முரணாக இருந்தால் ஏற்றுக் கொள்ள முடியுமா? முடியாதா? என்பதுதான் பிரச்சினையாகும்.

இந்தச் செய்தி குர்ஆனுக்கு முரணாக உள்ளதே இதனை ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேள்வி கேட்டால், அதற்கு பதிலளிப்பதை விட்டுவிட்டு அது அறிவிப்பாளர் ரீதியாக பலவீனமானது என்று பதில் சொல்கின்றார்கள்.

சரி ஒரு வாதத்திற்கு இந்தச் செய்தி அறிவிப்பாளர் ரீதியாக பலவீனமானது என்று வைத்துக் கொள்வோம்.

இந்தச் செய்தியில் அறிவிப்பாளர் ரீதியாக எந்தக் குறையும் இல்லாவிட்டால் எதிர்த் தரப்பினரின் பார்வையில் இது பலமான ஆதாரப்பூர்வமான செய்தியாக மாறிவிடும். அப்படி மாறினால் 07 நாட்களில் உலகத்தை இறைவன் படைத்தான் என்று குர்ஆனுக்கு மாற்றமான கருத்தை இந்தச்

செய்தி தரும். இப்போது இவர்கள் என்ன செய்வார்கள்?

குர்ஆனுக்கு மாற்றமாக இந்தச் செய்தி இருக்கின்றது என்று மறுப்பார்களா? அல்லது முரண்பட்டாலும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்ற வழிதவறிய நிலைக்குச் செல்வார்களா?

இந்தச் செய்திக்கு எந்த விதமான விளக்கமும் சொல்ல முடியவில்லை என்ற நிலை வந்ததினால் இதனைப் பலவீனம் என்று கூறி காலத்தை கடத்திவிட எண்ணிவிட்டார்கள்.



## காணாமல் போன இரண்டு வசனங்கள்.

உலக மக்கள் அனைவருக்கும் நேர்வழிகாட்டியாக இறைவனால் தனது தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டது தான் திருமறைக் குர்ஆன் ஆகும்.

திருமறைக் குர்ஆன் பாதுகாக்கப்பட்ட இறைவேதம் என்பதுடன், அல்குர்ஆனை எதிர்க்கும் அனைவருக்கும் சவால் விடுக்கும் புனித வேதமுமாகும்.

இது வேதம். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. (இறைவனை) அஞ்சுவோருக்கு (இது) வழிகாட்டி.

அல்குர்ஆன் 02:02

திருமறைக் குர்ஆனில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று இறைவன் மிகத் தெளிவாக நமக்குத் தெரிவிக்கின்றான். உலகில் எவ்வித சந்தேகமோ, தவறுகளோ, முரண்பாடுகளோ அற்ற ஒரே வேதம் திருமறைக் குர்ஆன் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

**அல்குர்ஆனில் சந்தேகத்தை உண்டாக்கும் செய்தி**

நபித் தோழியர் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிப்பதாக ஸஹீஹ் முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு செய்தி அல்குர்ஆன் மீது சந்தேகத்தை உண்டாக்கும் விதமாக அமைந்துள்ளது. குறித்த செய்தி பற்றிய விபரங்களை இப்போது ஆராய்வோம்.

குறிப்பிட்ட பத்து தடவைகள் பால் அருந்தினால் தான் பால்குடி உறவு உண்டாகும் என்ற வசனம் (முதலில்) குர்ஆனில் அருளப்பட்டிருந்தது. பின்னர் பத்து தடவைகள் என்பது குறிப்பிட்ட ஐந்து தடவைகள் என்று மாற்றப்பட்டது. இவ்வசனம் குர்ஆனில் ஓதப்பட்டு வந்த காலத்தில் தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : முஸ்லிம் (2876)

குறித்த செய்தி இன்னும் கொஞ்சம் விளக்கமாக அஹ்மதில் இடம் பெற்றுள்ளது.

(திருமணம் செய்த பிறகு விபச்சாரம் செய்தவன்) கல்லெறிந்து கொல்லப்பட

வேண்டும் என்ற வசனமும் (தாய் மகன் என்ற உறவை ஏற்படுத்துவதற்கு) பருவ வயதை அடைந்தவருக்கு பத்து முறை பால் புகட்ட வேண்டும் என்ற வசனமும் இறக்கப்பட்டது. எனது வீட்டில் உள்ள கட்டிலுக்கு அடியில் ஒரு தாளில் அவை (எழுதப்பட்டு) இருந்தது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்ட போது அவர்களுடைய விஷயத்தில் கவனம் செலுத்தினோம். எங்களுடைய வீட்டுப் பிராணி ஒன்று (வீட்டிற்குள்) நுழைந்து அந்தத் தாளைச் சாப்பிட்டுவிட்டது.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)

நூல் : அஹ்மத் (20112)

குறிப்பிட்ட 10 தடவைகள் பால் அருந்தினால் தான் பால் குடி உறவு உண்டாகும் என்றொரு வசனம் குர்ஆனில் அருளப்பட்டு இருந்தது. பின்னர் 05 தடவைகள் பால் அருந்தினால் தாய் பிள்ளை உறவு உண்டாகிவிடும் என்று சட்டம் மாற்றப்பட்டது. இந்த வசனம் நபி (ஸல்) அவர்கள் மரணிக்கின்ற வரை திருமறைக் குர்ஆனில் ஓதப்பட்டுக் கொண்டுதான் இருந்தது என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

குறித்த வசனம் பருவ வயதை அடைந்தவருக்குப் பால் புகட்டுவது தொடர்பாகத் தான் இறங்கியது என்று அஹ்மதில் இடம் பெற்றிருக்கும் செய்தி மேலதிக தகவலாக அமைந்துள்ளது.

நபியவர்கள் நோய்வாய்ப்பட்ட போது நபிக்கு பணிவிடை செய்யும் காரியத்தில் அனைவரும் கவனம் செலுத்திக் கொண்டிருந்த நேரம் வீட்டுப் பிராணி ஒன்று வீட்டுக்குள் நுழைந்து குறித்த வசனம் எழுதப்பட்டிருந்த தாளைச் சாப்பிட்டு விட்டதாக ஆயிஷா (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

பல விதங்களில் மேற்குறித்த செய்தி தவறானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

குறித்த வசனம் பருவ வயதை அடைந்தவர்களுக்குப் பால் புகட்டுவது தொடர்பானது என்று மேற்கண்ட செய்தி சொல்கிறது. பால்குடி சட்டம் என்பது இரண்டு வயதிற்கு உட்பட்டவர்களுக்குத் தான் என்று திருக்குர்ஆன் பல இடங்களில் சொல்கிறது.

அல்லாஹ் பால்குடி சட்டத்திற்கு குழந்தை பிறந்த முதல் இரண்டு வருடத்தை எல்லையாக நிர்ணயிக்கிறான். இந்த எல்லையைத் தாண்டிய ஒருவர் பால் குடிப்பதினால் பால்குடி உறவு ஏற்படாது என்று பின்வரும் வசனங்கள் கூறுகிறது.



பாலூட்டுவதை முழுமைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிற (கண) வனுக்காக தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு முழுமையாக இரண்டு ஆண்டுகள் பாலூட்ட வேண்டும்.

அல்குர்ஆன் (2 : 233)

மனிதனுக்கு அவனது பெற்றோரைக் குறித்தும் வலியுறுத்தியுள்ளோம். அவனை அவனது தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனப்பட்டவளாகச் சுமந்தாள். அவன் பாலருந்தும் பருவம் இரண்டு ஆண்டுகள். எனக்கும், உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே திரும்பி வருதல் உண்டு.

அல்குர்ஆன் (31 : 14)

அவனை (மனிதனை) அவனது தாய் சிரமத்துடன் சுமந்தாள். சிரமத்துடனே ஈன்றெடுத்தாள். அவனைச் சுமந்ததும், பால் குடியை மறந்ததும் முப்பது மாதங்கள்.

அல்குர்ஆன் (46 : 15)

தாய் பிள்ளை உறவு உண்டாகுவதற்கான பால்குடி எல்லை என்பது இரண்டு வருடங்களுக்குள் தான் என்று மேற்கண்ட திருமறைக் குர்ஆன் வசனங்கள் சொல்கின்றன.

ஆனால் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் மேற்கண்ட ஹதீஸில் பருவ வயதை அடைந்தவர்களுக்கு பால் ஊட்டுவது தொடர்பான சட்டம் கொண்ட வசனம் இறங்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது. இது தெளிவான முரண்பாடாகும். பால் குடித்தலின் கால எல்லை இரண்டு வருடங்கள் தான் என்று சொல்லும் குர்ஆன் அதற்கு மாற்றமாக பருவ வயதை அடைந்தவர்களுக்கு பால் ஊட்ட வேண்டும் என்ற சட்டத்தை கண்டிப்பாகக் கூறாது.

மாத்திரமன்றி, பருவ வயதை அடைந்தவருக்கு பால் ஊட்டுவதென்பது ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கும் செயலே தவிர நல்ல வழிமுறையல்ல. இப்படியான வழிமுறைகளை இஸ்லாம் கண்டிப்பாக காட்டித் தராது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பால்குடி உறவு இரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்குத் தான் என்று குர்ஆன் கூறும் போது பெரியவர்களுக்கு 10 முறை பால் புகட்டுமாறு முரண்பாடாக குர்ஆன் கூறாது. 10 தடவையாக இருந்ததை 5 தடவையாக மாற்றி பருவவயதை அடைந்தவர்களுக்கு பால்புகட்டும் அசிங்கத்தை குர்ஆன் கூறுமா? (பால்குடிச் சட்டம் தொடர்பில் விரிவான விளக்கங்களை

ஸாலிம் (ரலி) பற்றிய தலைப்பில் காண்க).

இந்த ஹதீஸை ஏற்றுக் கொள்பவர்கள் இந்த வசனத்தை அடிப்படையாகக் கொண்டு பருவ வயதை அடைந்தவர்களுக்கு பால் புகட்டலாம் என்று மார்க்கத் தீர்ப்பு வழங்குவார்களா? இதைத் தங்களது வாழ்க்கையில் செயல்படுத்துவார்களா?

பால்குடி உறவு ஏற்படுவதற்கு ஐந்து முறை பால் புகட்ட வேண்டும் என்ற வசனம் குர்ஆனில் இருந்ததாக ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாக வந்துள்ளது. ஆனால் இதற்கு மாற்றமாக இரண்டுக்கு மேல் குடித்தால் தான் பால்குடி உறவு ஏற்படும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த அடிப்படையில் இந்த ஹதீஸ் மற்ற விமர்சிக்கப்படாத ஹதீஸ்களுடன் மோதுகிறது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தடவையோ அல்லது இரு தடவைகளோ மட்டும் பால் குடிப்பதால் (மணமுடிக்கத் தகாத) நெருங்கிய உறவு ஏற்படாது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : உம்முல் ஃபள்ல் (ரலி)
நூல் : முஸ்லிம் (2872)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தடவையோ அல்லது இரு தடவைகளோ மட்டும் பால் குடிப்பதால் (மணமுடிக்கத் தகாத) நெருங்கிய உறவு ஏற்படாது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி)
நூல் : நஸயீ (3257)

ஒரு செய்தியை அறிவிக்கும் அறிவிப்பாளரிடமிருந்து முரண்பட்ட பலவிதங்களில் செய்தி அறிவிக்கப்பட்டால் குறித்த செய்தி முள்தரப் (குளறுபடியானது) என்று ஹதீஸ் கலை அறிஞர்கள் கூறுவார்கள். இவ்வாறு முரண்பட்டு வரும் செய்திகள் அனைத்தும் நம்பகமான உறுதிமிக்க ஆட்கள் வழியாக வந்தாலும் முரண்பாடு வந்து விட்டதால் இதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஐந்து முறை பால் குடித்தால் தான் பால்குடி உறவு ஏற்படும் என்று நாம் விமர்சித்துக் கொண்டிருக்கின்ற ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் கூறுகிறது. பத்து முறை பால் குடித்தால் தான் பால்குடி உறவு ஏற்படும் என்றும் மூன்று முறை பால்குடித்தால் தான் பால்குடி உறவு ஏற்படும் என்றும் ஏழு முறை பால்குடித்தால் தான் பால்குடி உறவு ஏற்படும் என்றும் ஆயிஷா (ரலி) அவர்கள் கருதியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



மூன்று, ஐந்து, ஏழு, பத்து என்று முரண்பட்டு அறிவிப்பு வருவதால் ஹதீஸ் கலை விதிப்படியும் இந்த செய்தி குளறுபடியானதாகி விடுகிறது.

எனக்குப் பால்புகட்டுவதற்காக ஆயிஷா (ரலி) அவர்கள் என்னை அவர்களின் சகோதரியும் அபூபக்கர் (ரலி) அவர்களின் மகளுமான உம்மு குல்சூம் (ரலி) அவர்களிடம் அனுப்பினார்கள். இவர் என்னிடம் வந்து செல்வதற்காக 10 முறை இவருக்கு நீங்கள் பால் புகட்டுங்கள் என்று ஆயிஷா (ரலி) அவர்கள் (உம்மு குல்சூமிடம்) கூறினார்கள். உம்மு குல்சூம் எனக்கு மூன்று தடவை பால் புகட்டினார்கள். பின்பு அவர்கள் நோயுற்றதால் எனக்கு மூன்று தடவை தவிர அவர்கள் பாலூட்டவில்லை. உம்மு குல்சூம் (ரலி) அவர்கள் எனக்கு முழுமையாக 10 முறை பாலூட்டாததால் நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்து செல்லவில்லை.

அறிவிப்பவர் : சாலிம் பின் அப்தில்லாஹ்
நூல் : பைஹகீ பாகம் : 7 பக்கம் : 457

மேற்கண்ட செய்தியை அறிவிக்கும் சாலிம் என்பவர் வேறு, சஹ்லா (ரலி) அவர்கள் தொடர்பான பால் குடி செய்தியில் இடம்பெற்றுள்ள சாலிம் என்பவர் வேறு ஆகும். இவர் சாலிம் பின் அப்தில்லாஹ் ஆவார். இவர் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் பிறக்கிறார். இந்த சாலிமிற்கு 10 முறை பால் புகட்டுமாறு ஆயிஷா (ரலி) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தடவையோ அல்லது இரு தடவைகளோ மட்டும் பால் உறிஞ்சிக் குடிப்பதால் (மணமுடிக்கத் தகாத) நெருங்கிய உறவு ஏற்படாது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : முஸ்லிம் (2869)

ஏழு தடவைக்கு குறைவாக பால் புகட்டினால் பால்குடி உறவு ஏற்படாது என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி)
நூல் : முஸன்னஃப் அப்திர்ரஸ்ஸாக் பாகம் : 7 பக்கம் : 466

பல குழப்பங்கள் இந்தச் செய்தியில் இருப்பதால் எதிர்த் தரப்பினர் ஆதரிக்கும் அறிஞர்களில் பலர் நாம் எடுத்து வைத்திருக்கும் கேள்விகளை எழுப்பி இந்த ஹதீஸை மறுத்துள்ளார்கள். இந்த ஹதீஸை அறிவிக்கும் இமாம் மாலிக் இந்த ஹதீஸை ஏற்றுக் கொள்ளவில்லை.

**இமாம் இப்னு ஹஜரின் கூற்று :**

فتح الباري – ابن حجر جزء ٩ – صفحة ٧٤١

وأيضا فقول عائشة عشر رضعات معلومات ثم نسخن بخمس معلومات فمات النبي صلى الله عليه وسلم وهن مما يقرأ لا ينتهض للاحتجاج على الأصح من قولي الاصوليين لأن القرآن لا يثبت الا بالتواتر والراوي روى هذا على أنه قرآن لا خبر فلم يثبت كونه قرآنا ولا ذكر الراوي أنه خبر ليقبل قوله فيه والله أعلم

இப்னு ஹஜர் அவர்கள் எத்தனை முறை பால் புகட்ட வேண்டும் என்பது சம்பந்தமாக ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து பல முரண்பட்ட தகவல்கள் வருவதாகக் கூறிவிட்டு பின்வருமாறு கூறுகிறார்.

குறிப்பிட்ட பத்து தடவை பாலருந்தினால் பால்குடி உறவு ஏற்படும் என்ற சட்டம் குறிப்பிட்ட ஐந்து தடவையாக மாற்றப்பட்டது. இந்த வசனங்கள் குர்ஆனில் ஓதப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் நபி (ஸல்) அவர்கள் மரணித்தார்கள் என்ற ஆயிஷா (ரலி) அவர்களின் கூற்று அறிஞர்களின் சரியான கூற்றுப்படி ஆதாரத்திற்கு தகுதியாகாது.

ஏனென்றால் அதிகமானவர்களின் வழியாகத்தான் குர்ஆன் நிரூபணமாகும். இதை அறிவிப்பவர் இந்தக் கருத்தை ஹதீஸ் என்று சொல்லாமல் குர்ஆன் என்று சொல்கிறார். எனவே (அதிகமானோர் இவ்வாறு கூறாததால்) இது குர்ஆனாக ஆகாது. அறிவிப்பாளரின் கூற்று ஏற்றுக் கொள்ளப்படும் விதத்தில் அவர் இதை ஹதீஸ் என்றும் சொல்லவில்லை.

நூல் : ஃபத்ஹுல் பாரீ பாகம் : 9 பக்கம் : 147

**அல்குர்ஆன் பாதுகாக்கப்படவில்லையா?**

பால்குடி தொடர்பாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவித்துள்ள மேற்கண்ட செய்தி இன்னும் பல விதங்களில் தவறானதாகும்.

குறித்த செய்தியை உண்மை என்று ஒப்புக் கொண்டால் புனித அல்குர்ஆன் மீதே பாரிய சந்தேகத்தை அது ஏற்படுத்தி விடும்.

குறித்த வசனம் அல்குர்ஆனில் விடுபட்டு விட்டதாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் மேற்கண்ட செய்தி சொல்கின்றது. ஆனால் குர்ஆனில் எதுவும் விடுபடமாட்டாது, விடுபடவில்லை என்றும் அல்குர்ஆனை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ்வே ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் குர்ஆன் கூறுகின்றது.



நாமே இந்த அறிவுரையை அருளினோம். நாமே இதைப் பாதுகாப்போம்.

அல்குர்ஆன் (15 : 9)

அல்குர்ஆனில் யாருக்கும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ்வே அதனைப் பாதுகாக்கின்றான் என்று திருமறைக் குர்ஆன் கூறும் போது நபியவர்களின் மரணத்திற்குப் பின் அல்குர்ஆனில் இருந்த ஒரு வசனத்தை ஸஹாபாக்கள் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். நாம் இன்றைக்கு பயன்படுத்தும் அல்குர்ஆன் முழுமையானதல்ல, அதில் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் மேற்கண்ட பால்குடி வசனம் இணைக்கப்பட வேண்டியுள்ளது என்று ஆயிஷா (ரலி) அவர்களின் குறித்த செய்தி கூறுகின்றது.

எனவே இந்தச் செய்தியை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

**உள்ளங்களில் பாதுகாக்கப்பட்ட புனித குர்ஆன்**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் எந்தச் சமுதாயத்தைச் சந்தித்தார்களோ அந்தச் சமுதாயம் எழுத்தறிவில்லாத சமுதாயமாகவும், அதே நேரத்தில் மிகுந்த நினைவாற்றலுடைய சமுதாயமாகவும் இருந்தது.

பொதுவாக எழுத்தாற்றல் இல்லாதவர்களுக்கு அதிக அளவிலான நினைவாற்றல் இருப்பதை இன்றைக்கும் கூட நாம் காணலாம். நினைவாற்றல் மூலமாக மட்டும்தான் நம்மால் எதையும் பாதுகாத்து வைக்க முடியும் என்ற நிர்பந்தத்தின் காரணமாக இத்தகையோரின் நினைவாற்றல் தூண்டப்பட்டு அதிகரிக்கும் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற உண்மை.

எழுதவும், படிக்கவும் தெரியாத அந்தச் சமுதாய மக்களில் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு அவ்வப்போது அருளப்பட்ட வசனங்களைக் கூறுவார்கள். கூறிய உடனேயே அம்மக்கள் மனனம் செய்து கொள்வார்கள்.

திருக்குர்ஆன் ஒட்டுமொத்தமாக ஒரு நாளிலோ, குறுகிய காலத்திலோ அருளப்பட்டிருந்தால் அதை அந்தச் சமுதாயத்திற்கு மனனம் செய்து கொள்ள இயலாமல் போயிருக்கலாம்.

23 ஆண்டுகளில் இந்தக் குர்ஆன் சிறிது சிறிதாக அருளப்பட்டிருப்பதால் மனனம் செய்வது மிகவும் எளிதாகவே இருந்திருக்கும். 23 ஆண்டுகளுக்கு எட்டாயிரத்திற்கும் அதிகமான நாட்கள் உள்ளன. சுமார் ஆறாயிரம்

வசனங்கள் கொண்ட திருக்குர்ஆனை தினம் ஒரு வசனம் என்ற அளவில் மனனம் செய்தாலே எட்டாயிரம் நாட்களில் சாதாரணமாக முழுக் குர்ஆனையும் மனனம் செய்திட முடியும்.

மேலும் மனனம் செய்ததை மறந்து விடாமல் இருப்பதற்காக இஸ்லாத்தில் சிறப்பான ஒரு ஏற்பாட்டையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்தார்கள். "முஸ்லிம்கள் தினமும் நடத்துகின்ற ஐந்து நேரத் தொழுகைகளிலும், தாமாக விரும்பித் தொழுகின்ற தொழுகைகளிலும் திருக்குர்ஆனின் சில பகுதிகளையாவது ஓதியாக வேண்டும்" என்பது தான் அந்த ஏற்பாடு.

திருக்குர்ஆனை மனனம் செய்த முஸ்லிம்கள் அதை மறந்து விடாமல் இருக்க இந்த ஏற்பாடு உதவியாக இருந்தது. மேலும் மனனம் செய்யாதவர்களும் தொழுகையில் ஓத வேண்டும் என்பதற்காக திருக்குர்ஆனை மனனம் செய்யும் நிலை ஏற்பட இது உதவியாக இருந்தது.

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு அருளப்பட்ட வசனங்களைச் சிரத்தை எடுத்து மக்களிடத்திலே கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

எங்கெல்லாம் இஸ்லாத்தை ஏற்றவர்கள் இருந்தார்களோ அவர்களுக்கு திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காக சில தோழர்களை அனுப்பி வைத்தார்கள். உள்ளங்களில் திருக்குர்ஆன் பாதுகாக்கப்படுவதற்கு இது மேலும் உறுதுணையாக அமைந்தது.

இது தவிர ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு முறை ஜிப்ரீல் என்ற வானவர் வந்து அருளப்பட்ட வசனங்களைத் திரும்ப நினைவுபடுத்தி, முறைப்படுத்தி, வரிசைப்படுத்திச் செல்வார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த கடைசி வருடத்தில் ஜிப்ரீல் அவர்கள் இரண்டு முறை வந்து இவ்வாறு தொகுத்து வழங்கியதாக ஏற்கத்தக்க நபிவழித் தொகுப்பு நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(நூல்: புகாரி 6, 1902, 3220, 3554, 4998)

இவ்வாறாக திருக்குர்ஆன் மனிதர்களுடைய உள்ளங்களில் பாதுகாக்கப்பட்டது. ஏராளமான தோழர்கள் திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்தார்கள்.



குறிப்பாக,

- அபூபக்ர் (ரலி)
- உமர் (ரலி)
- உஸ்மான் (ரலி)
- அலீ (ரலி)
- தல்ஹா (ரலி)
- ஸஅது (ரலி)
- இப்னு மஸ்வூத் (ரலி)
- ஹுதைஃபா (ரலி)
- ஸாலிம் (ரலி)
- அபூஹுரைரா (ரலி)
- இப்னு உமர் (ரலி)
- இப்னு அப்பாஸ் (ரலி)
- அம்ர் பின் ஆஸ் (ரலி)
- அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)
- முஆவியா (ரலி)
- அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி)
- அப்துல்லாஹ் பின் ஸாஇப் (ரலி)
- ஆயிஷா (ரலி)
- ஹஃப்ஸா (ரலி)
- உம்மு ஸலமா (ரலி)
- உபை பின் கஅபு (ரலி)
- முஆத் பின் ஜபல் (ரலி)
- ஸைத் பின் தாபித் (ரலி)
- அபூதர்தா (ரலி)
- மஜ்மா பின் ஹாரிஸா (ரலி)
- அனஸ் பின் மாலிக் (ரலி)

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களில் பலர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலேயே குர்ஆனை மனனம் செய்து முடித்திருந்தார்கள். சிலர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

மரணத்திற்குப் பிறகு மனனம் செய்தார்கள்.

இவ்வாறு கல்வியாளர் உள்ளங்களில் குர்ஆன் பாதுகாக்கப்பட்டதாகக் குர்ஆனும் கூறுகிறது.

மாறாக, இவை தெளிவான வசனங்கள். கல்வி வழங்கப்பட்டோரின் உள்ளங்களில் இருக்கிறது. அநீதி இழைத்தோரைத் தவிர வேறு எவரும் நமது வசனங்களை மறுக்க மாட்டார்கள்.

அல்குர்ஆன் (29 : 49)

ஆனால் ஆயிஷா (ரலி) அவர்கள் தாம் எழுதிவைக்கப்பட்டிருந்த தாளை பிராணி சாப்பிட்டதால் தான் அந்த வசனம் குர்ஆனில் இல்லை என்று கூறியதாக குறித்த ஹதீஸ் கூறுகின்றது. இது சரியான காரணம் அல்ல. ஏனென்றால் எழுதி வைக்கப்பட்ட தாள் தொலைந்து விட்டாலும் பலருடைய உள்ளங்களில் அந்த வசனம் பாதுகாக்கப்பட்டிருக்கும். வசனம் தொலைந்து போனதற்குச் சொல்லப்படும் தவறான இந்தக் காரணத்தை வைத்தே இது உண்மை இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

அத்துடன் நபியவர்களின் காலத்திலேயே அல்குர்ஆனை முழுமையாக மனனமிட்டவர்களில் ஆயிஷா (ரலி) அவர்களுடன் இன்னும் பல நபித்தோழர்களும் உள்ளடங்குகின்றார்கள்.

ஆனால், ஆயிஷா (ரலி) அவர்கள் சொல்லும் குறித்த வசனம் அல்குர்ஆனில் இருந்ததாக ஆயிஷா (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்த நபித்தோழரும் அறிவிக்கவில்லை. இந்த அடிப்படையிலும் இது தவறான செய்தி என்பது புலப்படுகின்றது.

**முழு சமுதாய அங்கீகாரம் பெற்ற அல்குர்ஆனில் குறைபாடா?**

குர்ஆனுடைய தனித்தன்மை என்னவென்றால் பல நபித்தோழர்களின் அங்கீகாரத்துடன் ஏக மனதாக குர்ஆன் தொகுக்கப்பட்டது. இக்குர்ஆனைத் தொகுக்கும் பணியை ஸைத் பின் சாபித் (ரலி) அவர்கள் செய்தார்கள். பல நபித்தோழர்களிடம் சென்று அவர்கள் வைத்திருந்த வசனங்களை ஒன்று திரட்டி பல நபித்தோழர்கள் முன்னிலையில் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் குர்ஆன் தொகுக்கப்பட்டது.

ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆட்சியின்போது திருக்குர்ஆனை எழுத்து வடிவில் முறைப்படுத்தும் குழுவுக்கு தலைமை வகித்தவர். எனவே குர்ஆன் அத்தியாயங்களை வரிசைப்படுத்தவும், பல்வேறு பிரதிகள் தயாரிக்கவும் உஸ்மான் (ரலி)



நியமித்த குழுவுக்கும் அவரையே தலைவராக நியமித்தார்கள்.

இந்தக் குழுவில் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி), ஸயீத் பின் அல்ஆஸ் (ரலி), அப்துர் ரஹ்மான் பின் அல் ஹாரிஸ் (ரலி) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ஐந்து தடவை பால் புகட்டினால் பால்குடி உறவு ஏற்படும் என்ற வசனம் குர்ஆனில் இருந்ததாக ஆயிஷா (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்த நபித்தோழர்களும் கூறவில்லை. குர்ஆனை மனனம் செய்து வைத்திருந்த பல நபித்தோழர்கள் இந்த வசனம் குர்ஆனில் உள்ளது என்று கூறவில்லை. குர்ஆனைத் தொகுக்கும் வேலை முடிக்கப்பட்ட போது ஏன் இந்த வசனத்தை விட்டு விட்டீர்கள் என்று யாரும் கேட்கவும் இல்லை.

அல்குர்ஆனைத் தொகுக்கும் பணியில் இடம் பெற்றிருந்த எந்த நபித் தோழரும் இந்த வசனம் விடுபட்டதாகக் கூறவில்லை. அந்த நேரத்தில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்த ஆயிஷா (ரலி) அவர்கள் கூட எந்த விதமான ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒட்டுமொத்த மக்களுக்கும் அல்லாஹ் இறக்கிய வசனத்தை ஆயிஷா (ரலி) அவர்களைத் தவிர்த்து அந்த சமுதாயம் முழுவதும் எப்படி மறந்திருக்கும்?

ஆகவே மேற்கண்ட பலவிதங்களில் அல்குர்ஆனில் பால்குடி தொடர்பான வசனம் காணாமல் போனதாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் செய்தி ஏற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு மாறிவிடுகின்றது.

எதிர்வாதங்களும் நமது பதில்களும்.

**எதிர்வாதம்**

ஆயிஷா (ரலி) அவர்கள் அல்குர்ஆன் தொடர்பில் இட்டுக்கட்டினார்களா?

**நமது பதில்**

அல்குர்ஆனில் இரண்டு வசனங்கள் அருளப்பட்டு நபியவர்கள் மரணிக்கும் வரை நாங்கள் அவற்றை குர்ஆனில் ஓதிக் கொண்டிருந்தோம். என்று ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் செய்தி தவறானது என்றால் அல்குர்ஆனில் இரண்டு வசனங்கள் இறங்கியதாக ஆயிஷா (ரலி) அவர்கள் பொய் சொல்கின்றார்களா? அல்குர்ஆன் பெயரில் இட்டுக் கட்டினார்களா? என்று எதிர்த்தரப்பினர் கேள்வியெழுப்புகின்றார்கள்.

குறித்த செய்தியைப் பொருத்த வரையில் ஆயிஷா (ரலி) அவர்கள் அதனை

அறிவிக்கவில்லை. ஆயிஷா (ரலி) அவர்களின் பெயரில் யாரோ ஒருவர் இட்டுக் கட்டியுள்ளார் என்பதே நமது நிலை. ஆயிஷா (ரலி) அவர்களின் பெயரைப் பயன்படுத்தி அறிவிக்கப்பட்டுள்ள செய்தியே இது.

குறித்த செய்தியின் அறிவிப்பாளர் தொடர் வெளிப்படையில் சரியானதாக இருந்தாலும். செய்தியின் கருத்து இஸ்லாத்தின் மூல வேதமான அல்குர்ஆனில் பாதுகாப்புக்கே சந்தேகத்தை உண்டாக்கும் விதத்தில் அமைந்துள்ளதினால் கண்டிப்பாக இதனை ஆயிஷா (ரலி) அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்கள். அவர்களின் பெயரில் யாரோ ஒருவர் இட்டுக் கட்டியுள்ளார் என்பதே சரியானதாகும்.

**எதிர்வாதம்**

அல்குர்ஆனைப் பாதுகாப்பதாக அல்லாஹ் கூறும் வசனத்தில் திக்ர் என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. திக்ர் என்பது குர்ஆன் ஹதீஸ் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொள்ளும். ஹதீஸைப் பாதுகாப்பதாகவும் அல்லாஹ் கூறுவதால் ஐந்து தடவை பால்குடித்தால் பால்குடிஉறவு ஏற்படும் என்ற வசனம் ஹதீஸின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நமது பதில்**

போலியான ஒரு செய்தியைக் காப்பாற்றப் போய் தன்னிலை மறந்து இவர்கள் உளருகின்றார்கள் என்பதை இவர்களின் விளக்கங்களில் இருந்தே நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அல்குர்ஆனில் இல்லாத ஒரு வசனம் இருந்ததாகக் கூறுவதோடு தமது அலட்சியத்தால் தான் குறித்த வசனம் காணாமல் போனது என்று ஆயிஷா (ரலி) கூறுவதாக குறித்த செய்தி கூறுகின்றது.

இதனால் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஓதப்பட்டு வந்த அந்த வசனம் இதன் பிறகு ஓதப்படவில்லை. இன்று வரை நாமும் அந்த வசனத்தை ஓதுவது கிடையாது.

குர்ஆனில் சேர்க்கப்பட்ட நிலையில் ஓதப்பட்டு வந்த ஒரு வசனம் தொலைக்கப்பட்டுஓதப்படாமல்இருந்தால்அவ்வசனம்பாதுகாக்கப்பட்டுள்ளது என்று எவரும் சொல்ல மாட்டார்கள். மாறாக குர்ஆனில் மாற்றம் செய்யப்பட்டதாகவே கருதப்படும். இந்தக் கருத்தை அந்தச் செய்தி தரும் போது ஹதீஸின் மூலம் குர்ஆன் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று முற்றிலும் முரணாக சொல்வது ஏற்புடையதல்ல.



அந்த இரண்டு வசனமும் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றால் அந்த இரண்டு வசனத்தையும் இன்று தொழுகையில் இவர்கள் ஓதுவார்களா?

பருவ வயதை அடைந்தவர்களுக்கு பெண்கள் 05 தடவை பால் புகட்ட வேண்டும் என்று மார்க்கத் தீர்ப்பு வழங்குவார்களா?

இறைவனுடைய இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவார்களா?

ஹதீஸையும் இறைவன் பாதுகாத்துள்ளான் என்பதை நாம் மறுக்கவில்லை. அது உண்மை இதுதான் நமது தெளிவான நிலைபாடும் கூட. இருப்பினும் குர்ஆனுடன் ஹதீஸ் முரண்பட்டால் அந்த ஹதீஸை மறுக்க வேண்டும் என்ற விதி ஹதீஸைப் பாதுகாப்பதற்கான விதிகளில் ஒன்று. மேலுள்ள செய்தி குர்ஆனிற்கு முரண்படுவதால் பாதுகாப்பதாக அல்லாஹ் கூறிய செய்திகளுக்குள் இச்செய்தி அடங்காது. ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து மாறுபட்ட பல கருத்துக்கள் வந்துள்ளது. ஒருவரிடமிருந்து மாறுபட்ட பல கருத்துக்கள் வந்தால் அந்த செய்தியை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற ஹதீஸ் கலையின் விதியின் பிரகாரமும் இது பாதுகாக்கப்பட்ட செய்திகளுக்குள் அடங்காது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**எதிர்வாதம்**

ஹுஸைமா (ரலி) அவர்களிடத்தில் மட்டும் தான் தவ்பா என்ற அத்தியாயத்தின் கடைசி இரண்டு வசனங்கள் இருந்ததாக ஸைத் பின் சாபித் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். இந்தச் செய்தி புகாரியில் (4989) வது எண்ணில் இடம் பெற்றுள்ளது. பலரது கூற்று அவசியமென்றால் ஹுஸைமா (ரலி) அவர்களிடத்தில் மட்டும் இருந்த இந்த வசனங்களை குர்ஆன் என்று முடிவு செய்திருக்கக் கூடாதே?

ஹுஸைமா மட்டும் அறிவித்த அந்த வசனத்தை ஏற்றுக் கொண்டதைப் போல் ஆயிஷா (ரலி) அவர்கள் மட்டும் அறிவிக்கும் இந்த வசனத்தையும் குர்ஆனில் உள்ளது என்று ஏற்றுக் கொள்ளுங்கள் என்று எதிர்த் தரப்பினர் கூறுகிறார்கள்.

**நமது விளக்கம்**

எதிர்தரப்பினர் குறிப்பிடுவதைப் போல் ஹுஸைமா (ரலி) அவர்கள் தொடர்பான செய்தி புகாரியில் இடம்பெற்றிருப்பது உண்மை தான். ஹுஸைமா (ரலி) அவர்களிடத்தில் இருந்த இரண்டு வசனம் குர்ஆனில் சேர்க்கப்பட்ட போது எந்த நபித்தோழரும் அதை மறுக்கவில்லை. மாறாக எல்லோரும்

அது குர்ஆனில் உள்ளது தான் என்று ஏற்றுக் கொண்டார்கள். குர்ஆனை முழுவதும் மனனம் செய்திருந்தவர்கள் கூட இதை மறுக்கவில்லை. இந்த அடிப்படையில் பல நபித்தோழர்களின் அங்கீகாரம் அந்த இரண்டு வசனத்திற்கும் கிடைத்துள்ளது. இது போன்ற அங்கீகாரம் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறும் செய்திக்குக் கிடைக்கவில்லை.

இது மட்டும் தான் குர்ஆன் என்று சிலர் முடிவு செய்திருக்கும் போது அவர்களுக்கு மாற்றமாக ஹுசைமா (ரலி) அவர்கள் இந்த வசனங்களைக் கொண்டுவரவில்லை. மாறாக ஒவ்வொருவரும் தங்களிடம் இருந்ததை ஸைத் (ரலி) அவர்களுக்குச் சொன்னார்கள். தங்களிடம் இருப்பது மட்டும் தான் குர்ஆன் என்று அவர்கள் வாதிடவும் இல்லை.

ஆனால் இன்று நம்மிடம் இருப்பது மட்டும் தான் குர்ஆன் என்று பல நபித்தோழர்கள் முடிவு செய்துவிட்ட போது இன்னும் இருக்கிறது என்று கூறுவது அந்த ஒட்டு மொத்த சமூகம் எடுத்த முடிவுக்கு எதிரானதாகும்.

ஹுசைமா (ரலி) அவர்களிடம் மட்டும் தான் இரண்டு வசனங்களை நான் பெற்றுக் கொண்டேன் என்று ஸைத் (ரலி) அவர்கள் கூறுவதால் வேறு யாரும் இந்த வசனங்களைத் தெரிந்திருக்கவில்லை என்று விளங்கிக் கொள்ளக் கூடாது. எழுதி வைக்கப்பட்டதாக யாரிடத்திலும் இல்லை என்றே விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பல நபித்தோழர்கள் குர்ஆன் முழுவதையும் மனனம் செய்திருந்தார்கள்.

ஸைத் (ரலி) அவர்கள் குர்ஆனை நன்கு விளங்கியவராக இருந்தார்கள். அமானிதத்தைப் பேணக்கூடியவர். அறிவுள்ள இளைஞர். நபி (ஸல்) அவர்களுக்கு வந்த தூதுச் செய்தியை எழுதக் கூடியவர். இவ்வாறு அபூபக்கர் (ரலி) அவர்கள் ஸைத் (ரலி) அவர்களைப் புகழ்ந்து சொல்கிறார்கள்.

நூல் : புகாரி (4986)

வஹீயை எழுதி வந்த ஸைத் (ரலி) அவர்களுக்கு குர்ஆனைப் பற்றி நிறைய அறிவு இருந்தது. அதனால் தான் குர்ஆனைத் தொகுக்கும் பணிக்கு இவர்களை அபூபக்கர் (ரலி) அவர்கள் தேர்வு செய்தார்கள். குர்ஆனை மனனம் செய்திருந்தாலும் அதில் தவறு ஏதும் வந்து விடக் கூடாது என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தான் மற்ற மற்ற நபித் தோழர்களிடமிருந்த வசனங்களைத் திரட்டினார்கள். இதைப் பின்வரும் செய்தியிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

பல முறை அந்த வசனத்தை நபி (ஸல்) அவர்கள் ஓத தான் கேட்டிருப்பதாக ஸைத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அந்த வசனம் குஸைமா (ரலி) அவர்களிடம் மட்டும் தான் இருந்தது என்றும் கூறுகிறார்கள். தனக்கு நினைவில் இருக்கும் வசனத்தை ஏன் குஸைமாவிடம் சென்று கேட்கிறார்கள் என்றால் உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தான்.



இன்னும் குஸைமா (ரலி) அவர்கள் தன்னிடம் இருந்த குர்ஆன் வசனங்களை எழுத்தில் பாதுகாத்து வைத்திருக்கலாம். குர்ஆனுடைய பாதுகாப்பிற்கு இம்முறை ஏற்றது என்பதால் தனக்கு குர்ஆன் மனனமாக இருந்தாலும் எழுத்தை வைத்து சரி பார்த்துக் கொள்ளலாம் என்று ஸைத் (ரலி) அவர்கள் கருதியுள்ளார்கள்.

**எதிர்வாதம்**

இந்தச் செய்தியில் குறிப்பிடப்படும் அல்குர்ஆன் வசனம் அல்குர்ஆனில் இல்லாவிட்டாலும் சட்டம் அதுதான். இப்படியான முறையில் தான் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வசனம் கிராஅத்தில் (ஓதலில்) இல்லை. ஆனால் ஹுக்மும் (சட்டத்தில்) இருக்கிறது.

**நமது பதில்**

குறித்த ஹதீஸில் அல்குர்ஆனில் இடம் பெறுவதாகக் குறிப்பிடப்படும் வசனம் குர்ஆனில் இல்லை. ஆனால் அதுதான் சட்டம். இப்படித்தான் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று இவர்கள் புது விளக்கம் சொல்கின்றார்கள்.

குறித்த ஹதீஸின் வாசகமே இவர்களின் விளக்கத்திற்கு முரணாக இருக்கின்றது.

குறிப்பிட்ட பத்து தடவைகள் பால் அருந்தினால் தான் பால்குடி உறவு உண்டாகும் என்ற வசனம் (முதலில்) குர்ஆனில் அருளப்பட்டிருந்தது. பின்னர் பத்து தடவைகள் என்பது குறிப்பிட்ட ஐந்து தடவைகள் என்று மாற்றப்பட்டது. **இவ்வசனம் குர்ஆனில் ஓதப்பட்டு வந்த காலத்தில் தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தார்கள்.**

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : முஸ்லிம் (2876)

இவ்வசனம் குர்ஆனில் ஓதப்பட்டு வந்த காலத்தில் தான் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இறந்தார்கள் என்ற வார்த்தை பிரயோகம், குறித்த வசனம் ஓதலில் இருந்துள்ளது என்ற தவறான கருத்தைத் தான் தருகிறது.

போலி ஹதீஸ்களைக் காப்பாற்றுவதாக நினைத்து கண்டதையும் விளக்கமாகச் சொல்லும் இந்த போலிக் காவலர்கள் தங்களையும் மறந்து

இது போன்ற விளக்கங்களைக் கூறி வருகின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

நபியவர்கள் உயிருடன் இருக்கும் போது அல்குர்ஆனில் ஓதப்பட்டு வந்த வசனம் இப்போது எங்கே போனது?

நபித் தோழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அதனை இல்லாமலாக்கி விட்டார்கள் என்று இவர்கள் பதில் சொல்லப் போகின்றார்களா?

ஒரு போலியான, இட்டுக்கட்டப்பட்ட செய்திக்காக அல்குர்ஆனில் தூய்மைத் தன்மையில் சந்தேகத்தை உண்டாக்கும் காரியத்தையே இவர்கள் செய்து வருகின்றார்கள் என்பது தெளிவானதாகும்.



## சுலைமான் நபிக்கு மறைவான அறிவு உண்டா?

சுலைமான் நபி தொடர்பில் புகாரியின் இடம் பெறும் கீழுள்ள செய்தியும் திருமறைக் குர்ஆனின் கருத்துக்கு நேர்மாற்றமாக அமைந்திருக்கின்றது. மட்டுமன்றி இஸ்லாத்தின் அடிப்படை செய்திகள் ஒன்றான மறைவானவை பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு என்பதை தகர்த்து நபி சுலைமானுக்கும் மறைவான அறிவு உண்டு என்ற விபரீதமான கருத்தைத் தரும் வகையில் அமைந்திருக்கின்றது.
இது பற்றிய விபரமாக ஆராய்வோம்.

(صحيح البخاري (٧/ ٩٣

5242 - حَدَّثَنِي مَحْمُودٌ، حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ، أَخْبَرَنَا مَعْمَرٌ، عَنِ ابْنِ طَاوُسٍ، عَنْ أَبِيهِ، عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: « قَالَ سُلَيْمَانُ بْنُ دَاوُدَ عَلَيْهِمَا السَّلاَمُ: لَأَطُوفَنَّ اللَّيْلَةَ بِمِائَةِ امْرَأَةٍ، تَلِدُ كُلُّ امْرَأَةٍ غُلاَمًا يُقَاتِلُ فِي سَبِيلِ اللَّهِ، فَقَالَ لَهُ المَلَكُ: قُلْ إِنْ شَاءَ اللَّهُ، فَلَمْ يَقُلْ وَنَسِيَ، فَأَطَافَ بِهِنَّ، وَلَمْ تَلِدْ مِنْهُنَّ إِلَّا امْرَأَةٌ نِصْفَ إِنْسَانٍ « قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: « لَوْ قَالَ: إِنْ شَاءَ اللَّهُ لَمْ يَحْنَثْ، وَكَانَ أَرْجَى لِحَاجَتِهِ "

இன்று இரவு நான் நூறு பெண்களுடன் உடலுறவு கொள்வேன். அவர்களில் ஒவ்வொருத்தியும் ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பார்கள். அவர்கள் அனைவரும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள்" என்று சுலைமான் நபி கூறினார். அப்போது வானவர் இன்ஷா அல்லாஹ் கூறுங்கள்" என்று கூறினார். ஆனால் சுலைமான் நபி கூறவில்லை. மறந்து விட்டார். அவர் கூறியவாறு நூறு பெண்களுடன் உடலுறவு கொண்டார். அவர்களில் ஒருத்தியும் குழந்தை பெறவில்லை. ஒரே ஒருத்தி மட்டும் பாதி மனிதனைப் (குறைப் பிரசவம்) பெற்றெடுத்தார்.

புகாரி - 5242

சுலைமான் நபிக்கு நூறு மனைவிகளோ, நூறு அடிமைப் பெண்களோ இருந்ததாக வைத்துக் கொண்டாலும் ஒரு இரவில் அனைவருடனும் உடலுறவு கொள்வது சாத்தியமற்றதாகும். இது சாத்தியமற்றதா அல்லவா என்ற சர்ச்சையைத் தவிர்த்து விட்டு மார்க்க அடிப்படையில் மட்டும் இதனை ஆய்வு செய்வோம்.

காரணம் இதனை விட குர்ஆனின் கருத்துடன் மோதும் பல செய்திகள் குறித்த செய்தியில் இடம் பெற்றுள்ளன.

இறைத் தூதராக இருந்தாலும் எந்த மனிதரும் அறிந்து கொள்ள முடியாத ஐந்து விஷயங்கள் உள்ளன.

அந்த நேரம் பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. அவன் மழையை இறக்குகிறான். கருவறைகளில் உள்ளதை அவன் அறிகிறான். நாளை சம்பாதிக்கவுள்ளதை எவரும் அறிய மாட்டார். எங்கே மரணிப்போம் என்பதையும் எந்த உயிரினமும் அறியாது. அல்லாஹ் நன்கறிந்தவன்: நுட்பமானவன்.

(திருக்குர்ஆன் 31:34)

தனது நூறு மனைவிகளும் கருவுறுவார்கள் என்று சுலைமான் நபியவர்கள் நிச்சயம் கூறியிருக்க முடியாது. ஏனெனில் கருவில் உருவாகும் உயிர்கள் தொடர்பில் இறைவனுக்குத் தான் தெரியும் என்பதினால் அதில் இறைத் தூதர்கள் கருத்துச் சொல்ல மாட்டார்கள். அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரிந்த ஒரு விஷயத்தில் எந்த இறைத் தூதரும் மூக்கை நுழைக்க மாட்டார்கள்.

நூறு மனைவிகளும் கருவுறுவார்கள் என்று இறைவன் சுலைமான் நபிக்கு அறிவித்துக் கொடுத்திருக்கலாம் அல்லவா?" என்று சிலர் விளக்கம் கூறுவது கேலிக் கூத்தாகும். இறைவன் அறிவித்துக் கொடுத்திருந்தால் நூறு மனைவிகளும் நூறு ஆண் குழந்தைகளைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு நடக்காததால் சுலைமான் நபி தன்னிச்சையாகத் தான் இவ்வாறு கூறியிருக்கிறார்கள் என்ற கருத்தைத் தான் மேற்கண்ட ஹதீஸிலிருந்து பெற முடியும்.

இறைவன் அறிவித்துக் கொடுக்காத இந்த விஷயம் குறித்து எந்த நபியும் இவ்வாறு தன்னிச்சையாக கூறியிருக்க மாட்டார்கள். இதற்கு நபி ஸக்கரிய்யா அவர்களின் வரலாறு சான்றாக அமைகின்றது.

"ஸக்கரிய்யாவே! ஒரு புதல்வன் பற்றி உமக்கு நாம் நற்செய்தி கூறுகிறோம். அவரது பெயர் யஹ்யா. இப்பெயரிடப்பட்டவரை இவருக்கு முன் நாம் ஏற்படுத்தியதில்லை"(என இறைவன் கூறினான்)"என் இறைவா! எனக்கு எப்படி புதல்வன் தோன்றுவான்? என் மனைவியோ பிள்ளைப்பேறு அற்றவளாக இருக்கிறாா். நானோஹ முதுமையின் இறுதியை அடைந்து விட்டேன்" என்று அவர் கூறினார். "அப்படித்தான்" என்று (இறைவன்) கூறினான். "அது எனக்கு எளிதானது. நீர் எந்தப் பொருளாகவும் இல்லாதிருந்த நிலையில் உம்மைப் படைத்தேன்" எனவும் உமது இறைவன் கூறினான்" (என்று கூறப்பட்டது.) "என் இறைவா! எனக்கொரு அடையாளத்தைக் காட்டு!" என்று அவர் கேட்டார். "குறைபாடற்ற நிலையில் நீர் இருந்தும் மூன்று இரவுகள் மனிதர்களிடம் நீர்



பேச மாட்டீர் என்பதே உமக்கு அடையாளம்" என்று அவன் கூறினான்.

(திருக்குர்ஆன் 19:7, 8, 9, 10)

ஸக்கரியா நபியின் மனைவியின் கருவறையில் குழந்தை உருவான பின்னரும் கூட அதை ஸக்கரியா நபியால் அறிந்து கொள்ள முடியவில்லை. என்று குர்ஆன் கூறும் போது நூறு மனைவியரும் குழந்தை பெற்றெடுப்பார்கள் என்று சுலைமான் நபி கூறியிருக்க முடியாது. அவ்வாறு கூற அவர்களுக்கு அதிகாரம் கிடையாது.

நூறு மனைவிகளும் குழந்தை பெறுவார்கள் என்பதை மட்டும் சுலைமான் நபி கூறவில்லை. ஆண் குழந்தையைத் தான் பெற்றெடுப்பார்கள் என்று அடித்துக் கூறுகிறார்கள். அந்த நூறு பேரும் வளர்ந்து பெரியவர்களாகி நல்லடியார்களாக வாழ்ந்து அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள் என்றெல்லாம் எதிர் காலம் பற்றி பல விஷயங்களை அவர்கள் கூறியதாக அந்த ஹதீஸ் கூறுகிறது.

அவர்கள் கூறியவாறு எதுவுமே நடக்காததால் சுயமாகத் தான் அவர்கள் இவ்வாறு கூறியிருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்படியெல்லாம் சுலைமான் நபியும் கூற மாட்டார்கள். சுலைமான் நபி கூறியதாக நபிகள் நாயகமும் கூறியிருக்க மாட்டார்கள்.

மேலும் இன்ஷா அல்லாஹ்; என்று கூறுமாறு வானவர் சுட்டிக் காட்டிய பிறகும் அவர்கள் கூறவில்லை என்பது ஏற்கும்படி இல்லை.

நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் கூட இன்ஷா அல்லாஹ் கூற மறந்து விட்டால் யாராவது சுட்டிக் காட்டினால் உடனே திருத்திக் கொள்கிறோம். ஒரு வானவர் நினைவூட்டிய பின்னரும் சுலைமான் நபி அதைச் செய்யவில்லை என்பது அவர்களின் தகுதிக்கு ஏற்புடையதாக இல்லை.

எனவே இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையைத் தகர்க்கும் வகையில் இது அமைந்திருப்பதால் இதை அறிவிப்பவர்கள் நம்பகமானவர்களாக இருந்த போதும் இதை நாம் ஏற்காது நிறுத்தி வைக்க வேண்டும். இதை உண்மை என நம்பினால் குர்ஆனின் பல வசனங்களை நாம் மறுத்தவர்களாகி விடுவோம்.

இது போக அந்த அறிவிப்பில் காணப்படும் முரண்பாடுகள் இந்த முடிவை மேலும் உறுதிப்படுத்துகிறது.

- நூறு பெண்களுடன் இன்றிரவு உடலுறவு கொள்வேன் என்று கூறியதாக புகாரி - 5242 லும்,

- எழுபது பெண்களுடன் உடலுறவு கொள்வேன் என்று கூறியதாக புகாரி – 3424 லும்,
- தொண்ணூறு பெண்களுடன் உடலுறவு கொள்வேன் என்று கூறியதாக புகாரி – 6639, 6720 லும்,
- அறுபது மனைவியரிடம் உடலுறவு கொள்வேன் என்று கூறியதாக புகாரி – 7469 லும்

பதிவு செய்யப்பட்டுள்ள செய்திகளில் கூறப்பட்டுள்ளன.

இந்த அனைத்து ஹதீஸ்களும் அபூஹுரைரா (ரலி) வழியாகத் தான் அறிவிக்கப்பட்டுள்ளன. 60, 70, 90, 100 என்று இடம் பெற்றுள்ள முரண்பட்ட எண்ணிக்கை இதில் சந்தேகத்தை அதிகமாக்குகிறது.

இந்தச் செய்திகளை உண்மை என்று நம்பினால் சுலைமான் நபி அவர்களின் தகுதிக்கு அது குறைவை ஏற்படுத்தும். திருக் குர்ஆனின் பல வசனங்களுடனும், இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுடனும் மோதும் என்பதைக் கவனத்தில் கொண்டு நமக்குத் தெரியாத ஏதோ ஒரு குறை இதில் இருக்கலாம் என்று கருதி இதை நிராகரித்து விட வேண்டும்.

இந்தச் செய்தியை இன்னும் விரிவாக ஆராய்வோம்.

2819 ـ وقال الليث: حدثني جعفر بن ربيعة عن عبد الرحمن بن هرمز قال: سمعت أبا هريرة رضي الله عنه عن رسول الله صلى الله عليه وسلّم قال: قال سليمان بن داود عليهما السلام: لأطوفن الليلة على مائة إمرأة ـ أو تسع وتسعين ـ كلهن يأتي بفارس يجاهد في سبيل الله. فقال له صاحبه: قل إن شاء الله، فلم يقلْ إن شاء الله، فلم تحمل منهن إلا إمرأة واحدة جاءت بشق رجل. والذي نفس محمدٍ بيده لو قال إن شاء الله لجاهدوا في سبيل الله فرساناً أجمعون

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தாவூத் (அலை) அவர்களின் புதல்வர் சுலைமான் (அலை) அவர்கள் (ஒரு முறை), நான் இன்றிரவு (என்னுடைய) நூறு – அல்லது தொண்ணூற்றொன்பது – மனைவிகளிடமும் சென்று (உடலுறவு கொண்டு) வருவேன். **அவர்களில் ஒவ்வொருத்தியும் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரியும் (குதிரை) வீரன் ஒருவனைப் பெற்றெடுப்பாள்** என்று கூறினார்கள். அவர்களுடைய தோழர் ஒருவர், (அவர்கள் மறந்திருக்கலாம் என்று கருதி) **இன்ஷா அல்லாஹ் – அல்லாஹ் நாடினால்... என்று சொல்லுங்கள் என்று கூறினார். சுலைமான் (அலை) அவர்கள் இன்ஷா அல்லாஹ் என்று (தம் வாயால்) கூறாமலிருந்து விட்டார்கள்.** ஆகவே, (அவர்களின் மனைவிமார்களில் ஒரே ஒருவரைத் தவிர வேறெவரும் கர்ப்பமடையவில்லை. அவரும் ஒரு புஜமுடைய பாதி மனிதரைத் தான் **பெற்றெடுத்தார். முஹம்மதின் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது ஆணையாக! அவர், இன்ஷா அல்லாஹ் – அல்லாஹ் நாடினால் என்று (தம் வாயாலும்) கூறியிருந்தால் (அந்த நூறு மனைவியரும் கர்ப்பமுற்றுப் பிள்ளைகள் பெற, அப்பிள்ளைகள்) அனைவருமே அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிகின்ற வீரர்களாய் ஆகியிருப்பார்கள்.**

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) அவர்கள்

புகாரி – 2819

(3424) ـ حدّثنا خالدُ بن مَخلَدٍ حدّثَنا مُغيرةُ بن عبدِ الرحمنِ عن أبي الزّنادِ عن الأعرج عن أبي هريرةَ عنِ النبي صلى الله عليه وسلّم قالَ: قال سليمانُ بن داوَدَ: لأطوفنّ الليلةَ على سبعِينَ امرأةً تَحمِلُ كلُّ امرأةٍ فارساً يُجاهِدُ في سبيل الله. فقال لهُ صاحبه: إن شاءَ الله. فلم يَقُل، ولم تَحمِلْ شيئاً إلا واحداً ساقِطاً أحدُ شِقّيه. فقال النبيُّ صلى الله عليه وسلّم: لو قالها لجاهَدوا في سبيلِ الله. قال شُعَيبٌ وابنُ أبي الزِّنادِ تسعينَ وهو أصحٌّ.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தாவூத் (அலை) அவர்களுடைய மகன் சுலைமான் (அலை) அவர்கள், இன்றிரவு நான் எழுபது மனைவிமார்களிடம் செல்வேன். (அவர்களில்) ஒவ்வொருவரும் **அல்லாஹ்வின் பாதையில் போராடும் குதிரை வீரரைக் கருத்தரிப்பார்கள் என்று கூறினார்கள். அதற்கு அவருடைய தோழர் ஒருவர், அல்லாஹ் நாடினால்... என்று சொல்லுங்கள் என்று கூறினார். சுலைமான் (அலை) அவர்கள், அல்லாஹ் நாடினால்... என்று (மறந்து போய்) சொல்லாமலிருந்து விட்டார்கள்.** (அவர்கள் அவ்வாறே சென்றும் கூட) தன் இரு புஜங்களில் ஒன்று கீழே விழுந்த ஒரேயொரு குழந்தையைத் தவிர வேறெதையும் அவர்கள் கருத்தரிக்கவில்லை. **இன்ஷா அல்லாஹ்... (இறைவன் நாடினால்) என்று சுலைமான் (அலை) அவர்கள் கூறியிருந்தால் அவர்கள் (எழுபது பேரும் பிறந்து) அல்லாஹ்வின் பாதையில் போராடியிருப்பார்கள்** என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஷுஐப் (ரஹ்) அவர்களும் இப்னு அபிஸ் ஸினாத் (ரஹ்) அவர்களும் தங்கள் அறிவிப்பில் தொண்ணூறு மனைவிமார்களிடம் செல்வேன் என்று சுலைமான் (அலை) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளனர். இவர்களுடைய அறிவிப்பு தான் மேற் கண்ட அறிவிப்பை விடச் சரியானது.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) அவர்கள்.

புகாரி – 3424

7469 ـ حدّثَنا مُعَلّى بنُ أَسَدٍ حدّثَنا وُهَيْب عن أيوبَ عن محمدٍ عن أبي هريرة أنّ نبيّ اللّهِ سليمانَ عليه الصلاة والسلام كان له ستّونَ امرأةً، فقال: لأطوفَنّ الليلةَ عَلى نسائي لْتَحمِلْن كلُّ امرأةٍ ولْتَلِدن فارساً يقاتل في سبيل اللّه، فطاف على نسائِهِ فما وَلَدتْ منهن إلا امرأةٌ ولَدَتْ شِقّ غلام قالِ نبيُّ اللّه صلى الله عليه وسلّم: لو كانَ سليمانُ استَثْنى لحملتْ كلُّ امرأة منهنّ فولدتْ فَارساً يقاتل في سبيل اللّه.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைத்தூதர் சுலைமான் (அலை) அவர்களுக்கு அறுபது துணைவியர் இருந்தார்கள். சுலைமான் அவர்கள் (ஒரு முறை) இன்றிரவு நான் என் துணைவியர் அனைவரிடமும் தாம்பத்திய உறவு கொள்ளச் செல்வேன். ஒவ்வோரு துணைவியாரும் கர்ப்பமுற்று அல்லாஹ்வின் பாதையில் போரிடுகின்ற குதிரை வீரனைப் பெற்றெடுக்கட்டும் என்று சொல்லிவிட்டுத் தம் துணைவியரிடம் சென்றார்கள். ஆனால், அவர்களில் ஒரேயொரு மனைவி தான் குழந்தை பெற்றெடுத்தார். அவரும் பாதி (உடல் சிதைந்த) குழந்தையைத் தான் பெற்றெடுத்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுலைமான் (அலை) அவர்கள் இன்ஷா அல்லாஹ் (இறைவன் நாடினால்) என்று (சேர்த்துக்) கூறியிருந்தால், அவர்களுடைய துணைவியரில் ஒவ்வொருவரும் கர்ப்பம் தரித்து, அல்லாஹ்வின் பாதையில் போரிடும் குதிரை வீரன் ஒருவனைப் பெற்றெடுத்திருப்பார்.

புகாரி - 7469

6720 ـ حدّثنا عليٌّ بنِ عبدِ اللّهِ حدّثنا سُفيانُ عن هشامِ بن حُجَيرِ عن طاوُسٍ سمعَ أبا هريرة قال: قال سليمانُ: لأطوفَنّ الليلةَ على تسعينَ امرأة كلّ تلدُ غلاماً يقاتلُ في سبيل اللّهِ، فقال له صاحبهُ، قال سفيان: يعني الملَكَ قل: إن شاءَ اللّه! فنَسيَ، فطاف بهن فلم تأتِ امَرأةٌ مِنهن بوَلدٍ إلا واحدةٌ بشِقّ غلام، فقال أبو هريرةَ يَرويهِ قال: لو قال إن شاء اللّه لم يَحْنَثْ وكان دَرَكاً في حاجَتِهِ وقال مَرة: قَال رسُولُ اللّهِ صلى الله عليه وسلّم لو استَثْنىقال: وحدثنا أبو الزنادِ عن الأعرَجِ مثل حديثِ أَبي هريرةَ.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (இறைத்தூதர்) சுலைமான் (அலை) அவர்கள் (ஒரு முறை), நான் இன்றிரவு (என்னுடைய) தொண்ணூறு துணைவியரிடமும் சென்று (தாம்பத்திய உறவு கொண்டு) வருவேன். அவர்களில் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரியும் (குதிரை) வீரன் ஒருவனைப் பெற்றெடுப்பார்கள் என்று கூறினார்கள். அப்போது அவர்களுடைய தோழர் ஒருவர், -அவர் ஒரு வானவர் என அறிவிப்பாளர்களில் ஒருவரான சுஃப்யான் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் - இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) என்று சொல்லுங்கள் எனக் கூறினார். சுலைமான் (அலை) அவர்கள் இன்ஷா அல்லாஹ் என்று கூற மறந்து விட்டார்கள்: தம் துணைவியரிடம் சென்று வந்தார்கள். ஆனால், அவர்களுடைய துணைவியரில் ஒரே ஒருவரைத் தவிர வேறெவரும் கர்ப்பமடையவில்லை. அந்த ஒருவரும் ஒரு புஜமுடைய அரை மனிதரையே பெற்றெடுத்தார். (நபி) சுலைமான் (அலை) அவர்கள் இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) என்று கூறியிருந்தால் சத்தியத்தை அடையாமல் இருந்திருக்க மாட்டார்கள். தமது தேவையைப்



பூர்த்தி செய்திருப்பார்கள்.

புகாரி - 6720

இந்த ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது.

6639 حدّثنا أبو اليمان أخبرَنا شُعيبٌ حدّثنا أبو الزّنادِ عن عبد الرحمن الأعرج عن أبي هريرةَ قال: قال رسولُ اللّه صلى الله عليه وسلّم قال سليمانُ: لأطَوفنّ الليلة على تسعينَ امرأة كلهنّ تأتي بفارسٍ يُجاهدُ فِي سبيل اللّه. فقال له صاحبُه قل إن شاء اللّه! فلم يقل إن شاء اللّه. فطاف عليهنّ جميعًا، فلم تَحملْ منهنّ إلا امرأةٌ واحدةٌ جاءت بشقّ رجل. وايمُ الذي نفسُ محمدٍ بيده، لو قال إن شاء اللّه لجاهَدوا في سبيل اللّه فرساناً أجمعون

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (இறைத் தூதர்) சுலைமான் (அலை) அவர்கள் (ஒரு முறை), நான் இன்றிரவு (என்னுடைய) தொண்ணூறு துணைவியரிடமும் சென்று வருவேன். அவர்களில் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரியும் (குதிரை) வீரன் ஒருவனைப் பெற்றெடுப்பார்கள் என்று கூறினார்கள். அப்போது அன்னாருடைய தோழர்களில் ஒருவர் இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) என்று (சேர்த்துச்) சொல்லுங்கள் என்று கூறினார். (ஆனால்,) சுலைமான் (அலை) அவர்கள் இன்ஷா அல்லாஹ் என்று கூறவில்லை. (மறந்து விட்டார்கள்.) மேலும், தம் துணைவியர் அனைவரிடமும் சென்றார்கள். அவர்களில் ஒரேயொரு மனைவியைத் தவிர வேறெவரும் கர்ப்பமடையவில்லை. அந்த ஒருவரும் ஒரு புஜமுடைய அரை மனிதரைத் தாம் பெற்றெடுத்தார். (இந்த) முஹம்மதின் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! அவர், இன்ஷா அல்லாஹ் என்று கூறியிருந்தால், (அந்த தொண்ணூறு துணைவியரும் கர்ப்பவதியாகி பிள்ளைகள் பெற்று, அப்பிள்ளைகள்) அனைவரும் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிகின்ற (குதிரை) வீரர்களாய் ஆகியிருப்பார்கள்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

புகாரி - 6639

5242 ـ حدّثني محمودٌ حدثنا عبدُ الرّزاق أخبرنا مَعْمر عن ابن طاوسٍ عن أبيه عن أبي هريرة قال: قال سليمانُ بن داوِدَ عليهما السلام: لأطُوفنّ الليلة بمائةِ امرأةٍ، تَلِدُ كلّ امرأةٍ غلاماً يُقاتلُ فِي سبيلِ الله. فقال له المَلَكُ: قُل إن شاء الله، فلم يقُلْ وَنَسيَ، فأطافَ بِهنّ، ولم تَلدْ منهُن إلا امرأةٌ نِصفَ إنسان. قال النبيّ صلى الله عليه وسلّم: لو قال إن شاء اللّه لم يَحنَثْ، وكان أرجَى لحاجَتِهِ.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: (ஒரு முறை இறைத் தூதர்) தாவூத் (அலை) அவர்களுடைய புதல்வர் சுலைமான் (அலை) அவர்கள், நான் இன்றிரவு (என்னுடைய) நூறு துணைவியரிடமும் சென்று வருவேன்.

**அப்பெண்களில் ஒவ்வொருவரும் இறை வழியில் அறப்போர் புரியும் (வீரக்) குழந்தை ஒன்றைப் பெற்றெடுப்பார்கள் என்று கூறினார்கள்.** அப்போது (சுலைமான் –அலை) அவர்களிடம் **அந்த வானவர் (ஜிப்ரீல்), இன்ஷா அல்லாஹ்–இறைவன் நாடினால் என்று (சேர்த்துச்) சொல்லுங்கள் என்றார். (ஆனால்,) சுலைமான் (அலை) அவர்கள், இன்ஷா அல்லாஹ் என்று கூறவில்லை: மறந்து விட்டார்கள்.** அவ்வாறே சுலைமான் (அலை) அவர்களும் தம் துணைவியரிடம் சென்றார்கள். ஒரே ஒரு மனைவியைத் தவிர வேறெவரும் குழந்தை பெற்றெடுக்கவில்லை. அந்த ஒரு மனைவியும் (ஒரு புஜமுடைய) அரை மனிதரைத் தான் பெற்றெடுத்தார். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **அவர் இன்ஷா அல்லாஹ் – இறைவன் நாடினால் என்று கூறியிருந்தால் அவர் தமது சத்தியத்தை முறித்திருக்க மாட்டார். (சபதத்தை நிறைவேற்றியிருப்பார்.) தம் தேவை நிறைவேறுவதைப் பெரிதும் அவர் நம்பியிருப்பார்** என்று கூறினார்கள்

புகாரி - 5242

மேற்கண்ட அறிவிப்புக்கள் அனைத்தும் புஹாரியில் இடம் பெற்றிருந்தாலும் இது ஹதீஸ் அல்ல: கட்டுக்கதை என்று நாம் கூறுகிறோம். ஸுலைமான் நபி மீதும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் இட்டுக்கட்டிச் சொல்லப்பட்ட பொய் என்று நாம் உறுதியாகக் கூறுகிறோம்.

01 - மேற்கண்ட அனைத்துச் செய்தியிலும் தமது மனைவியர் அனைவரும் குழந்தை பெற்றெடுப்பார்கள் என்று ஸுலைமான் நபி கூறியதாகக் கூறப்பட்டுள்ளது.

02 - தமது மனைவியர் அனைவரும் ஆண் குழந்தைகளைப் பெற்றெடுப்பார்கள் என்று ஸுலைமான் நபி கூறியதாகக் கூறப்படுகிறது.

03 - அந்தப் பிள்ளைகள் அனைவரும் அல்லாஹ்வின் பாதையில் போராடும் வீரராகத் திகழ்வார்கள் என்று ஸுலைமான் நபி கூறியதாகக் கூறப்படுவதால் அவர்கள் நல்லடியார்களாகத் திகழ்வார்கள் என்ற கருத்தும் இதனுள் அடங்கியுள்ளது.

04 - மேலும் போர் வீரராக அனைவரும் திகழ்வார்கள் என்பதில் அவர்களில் ஒருவர் கூட இளமைப் பருவத்துக்கு முன் மரணிக்க மாட்டார்கள் என்ற கருத்தும் அடங்கியுள்ளது.

இவை அனைத்துமே மறைவான விஷயங்கள். அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிந்து கொள்ள முடியாத விஷயங்கள்.



இவ்வாறு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்து அதனடிப்படையில் ஸுலைமான் நபி சொல்லி இருந்தால் தான் இதை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் மேற்கண்ட விஷயங்கள் அல்லாஹ் அறிவித்துக் கொடுக்கவில்லை என்பது மேற்கண்ட செய்திகளிலேயே தெளிவாகத் தெரிகின்றது. அல்லாஹ் ஒன்றை அறிவித்துக் கொடுத்திருந்தால் அது நிச்சயம் நடந்து விடும். ஸுலைமான் நபி கூறியதில் ஒன்று கூட நடக்கவில்லை என்பதால் இது பற்றி அல்லாஹ்விடமிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை என்பது உறுதி.

இந்த விபரங்களைக் கவனத்தில் கொண்டு மேற்கண்ட ஹதீஸ்களை ஆராய்வோம்.

மேற்கண்ட நான்கு செய்திகளும் மறைவான செய்திகள் எனும் போது அதைப் பற்றி சாதாரண முஸ்லிம் கூட பேச மாட்டார். அல்லாஹ்வைப் பற்றி மக்களுக்குப் புரியவைக்க வந்த இறைத் தூதரான ஸுலைமான் நபி இப்படிக் கூறியிருப்பார்களா? அல்லாஹ்வின் அதிகாரத்தில் தலையிடுவது தான் அல்லாஹ்வுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தும் செயலாகும். அத்தகைய ஒரு வார்த்தையை ஸுலைமான் நபி எப்படி கூறியிருப்பார்கள்?

**வானங்களிலும் பூமியிலும் மறைவானதை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய மாட்டார்கள். தாங்கள் எப்போது உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்கள்" என்று கூறுவீராக!**

திருக்குர்ஆன் 27:65

**மறைவானவற்றின் திறவுகோல்கள் அவனிடமே உள்ளன. அவனைத் தவிர யாரும் அதை அறிய மாட்டார். அவன் தரையிலும், கடலிலும் உள்ளவற்றை அறிவான். ஓர் இலை கீழே விழுந்தாலும் அவன் அதை அறியாமல் இருப்பதில்லை. பூமியின் இருள்களில் உள்ள விதையானாலும், ஈரமானதோ காய்ந்ததோ ஆனாலும் தெளிவான ஏட்டில் இல்லாமல் இல்லை.**

திருக்குர்ஆன் 6:59

இறைத்தூதாராக இருந்தாலும் எந்த மனிதரும் அறிந்து கொள்ள முடியாத ஐந்து விசயங்கள் உள்ளன. எந்தக் கருவறையில் எத்தனைக் குழந்தைகள் உண்டாகும்? கருவறையில் குழந்தை உண்டாகுமா? உண்டாகாதா என்பதும் அவற்றில் ஒன்றாகும்.

**அந்த நேரம் பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. அவன் மழையை இறக்குகிறான். கருவறைகளில் உள்ளதை அவன் அறிகிறான். தான், நாளை சம்பாதிக்கவுள்ளதை எவரும் அறியமாட்டார். தாம், எங்கே மரணிப்போம் என்பதையும் எந்த உயிரினமும் அறியாது. அல்லாஹ் நன்கறிந்தவன்:**

**நுட்பமானவன்.**

அல்குர்ஆன் (34 : 31)

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறைவானவற்றின் திறவுகோல்கள் ஐந்தாகும். அவற்றை அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள். நாளை என்ன நடக்கவிருக்கிறது என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள். கருவறையில் ஏற்படும் குறைவை(யும் கூடுதலையும்) அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள். மழை எப்போது வரும் என்பதையும் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள். எந்த உயிரும் தாம் எந்த இடத்தில் இறக்கும் என்பதை அறியாது. மேலும் மறுமை (நாள்) எப்போது நிகழும் என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள்.**

அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி)
நூல் : புகாரி (4697)

அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய முடியாது என்று அல்லாஹ் சொந்தம் கொண்டாடும் ஒரு விஷயத்தில் ஸுலைமான் நபி அவர்கள் வாய் திறந்திருக்க மாட்டார்கள். இப்படி சுலைமான் நபியும் கூறியிருக்க மாட்டார்கள். சுலைமான் நபி கூறியதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியிருக்க மாட்டார்கள்.

குறிப்பாக ஒருவருக்கு குழந்தை பிறக்குமா என்ற விஷயத்தை அறிய முடியாது என்பதற்கும் தெளிவான சான்றுகள் உள்ளன.

இப்ராஹீம் நபியவர்களுக்கு தள்ளாத வயது வரை குழந்தை இல்லை. வயதான காலத்தில் அவர்களுக்குக் குழந்தை பிறக்கும் நற்செய்தி இறைவன் புறத்தில் இருந்து சொல்லப்பட்ட போது அவர்கள் அதை நம்புவதற்கே தயங்கினார்கள் என்பதைப் பின்வரும் வசனங்கள் மூலம் அறியலாம்.

**இப்ராஹீமின் விருந்தினர் பற்றியும் அவர்களுக்குக் கூறுவீராக! அவர்கள், அவரிடம் சென்று ஸலாம் கூறினர். அதற்கு அவர் நாம் உங்களைப் (பார்த்துப்) பயப்படுகிறோம்'' என்றார். நீர் பயப்படாதீர்! அறிவுடைய ஆண் குழந்தை பற்றி உமக்கு நாங்கள் நற்செய்தி கூறுகிறோம்'' என்று அவர்கள் கூறினர். எனக்கு முதுமை ஏற்பட்ட நிலையில் எனக்கு நற்செய்தி கூறுகிறீர்களா? எதனடிப்படையில் நற்செய்தி கூறுகிறீர்கள்?'' என்று அவர் கேட்டார். உண்மையின் அடிப்படையிலேயே உமக்கு நற்செய்தி கூறுகிறோம். நம்பிக்கை இழந்தவராக நீர் ஆகி விடாதீர்!'' என்று அவர்கள் கூறினர். வழி கெட்டவர்களைத் தவிர வேறு யார் தமது இறைவனின் அருளில் நம்பிக்கை இழக்க முடியும்?'' என்று அவர் கேட்டார்.**

திருக்குர்ஆன் 15:51-56



**அவர்களைப் பற்றிப் பயந்தார்.பயப்படாதீர்!'' என்று அவர்கள் கூறினர். அறிவாளியான ஆண் குழந்தை பற்றி அவருக்கு நற்செய்தி கூறினர். உடனே அவரது மனைவி சப்தமிட்டவராக வந்து முகத்தில் அடித்துக் கொண்டு, நான் மலட்டுக் கிழவியாயிற்றே'' என்றார். அதற்கவர்கள் அப்படித் தான் உமது இறைவன் கூறினான். அவன் ஞானமிக்கவன். அறிந்தவன்'' என்றனர்.**

திருக்குர்ஆன் 51:26-30

இது போல் ஸக்கரிய்யா நபி அவர்களுக்கு தள்ளாத வயதில் அல்லாஹ் யஹ்யா எனும் ஆண் குழந்தை பிறக்க உள்ளதாக நற்செய்தி கூறினான். ஆனால் ஸக்கரியா நபி அவர்களுக்கு மனைவியின் கருவறையில் குழந்தை உண்டாகி விட்டதை அறிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டது. அப்போது அவர்கள் இறைவா என் மனைவி குழந்தை உண்டாகி விட்டார் என்பதை நான் அறிந்து கொள்ளும் வகையில் எனக்கொரு அடையாளத்தைத் தா என்று கேட்டார்கள். உன் மனைவி எப்போது குழந்தை உண்டாகி விட்டாரோ அப்போது முதல் மூன்று நாட்களுக்கு உன்னால் பேச முடியாது. அது தான் அடையாளம் என்று அல்லாஹ் கூறினான்.

பின் வரும் வசனங்களில் இருந்து இதை அறியலாம்.

**என் இறைவா! எனக்கொரு அடையாளத்தைக் காட்டு!'' என்று அவர் கேட்டார். குறைபாடற்ற நிலையில் நீர் இருந்தும் மூன்று இரவுகள் மனிதர்களிடம் நீர் பேச மாட்டீர் என்பதே உமக்கு அடையாளம்'' என்று அவன் கூறினான்.**

திருக்குர்ஆன் 19:10

கருவில் குழந்தை உண்டான பின்பு கூட உடனடியாக் அதை ஸக்கரியா நபியால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதை அறிந்து கொள்ள அல்லாஹ்விடம் அடையாளம் கேட்கிறார்கள். ஆனால் ஸுலைமான் நபியோ மனைவிகளுடன் சேர்வதற்கு முன் குழந்தை உண்டாகும் என்பதை அறிந்து கொள்கிறார்கள்: அவை அனைத்தும் ஆண்குழந்தை என்றும் அறிந்து விடுகிறார்காள். அவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்றும் அறிந்து கொள்கிறார்கள்: அவர்கள் அற்ப ஆயுளில் மரணிக்க மாட்டார்கள் என்றும் அறிந்து கொள்கிறார்கள். இவ்வாறு கூறும் இந்த ஹதீஸ்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையைத் தகர்க்கவில்லயா? தகர்த்தாலும் இது சரியான் ஹதீஸ் என்று நம்மை எதிர்ப்பவர்கள் கூறுகிறார்கள். எத்தனை குர்ஆன் வசனங்கள் மறுக்கப்பட்டாலும் ஸுலைமான் நபி மீது களங்கம் ஏற்பட்டாலும் இதை நம்பச் சொல்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் இது மறைவான விஷயங்களை

அறிந்து கொள்ளுதல் என்ற தலைப்பையும் கடந்து இறை ஆற்றலில் போட்டியிடும் வகையில் அமைந்துள்ளது எனலாம். ஸுலைமான் நபி கூறியபடி நடந்திருந்தால் தான் மறைவான விஷயத்தில் தலையிட்டார்கள் என்ற கருத்து கிடைக்கும். நடக்குமா? நடக்காதா? என்பது தெரியாத நிலையில் நிச்சயம் இது நடக்கும் என்று கூறினால் இறைவனுக்கு இருப்பது போன்ற ஆற்றல் எனக்கும் உண்டு. நான் சொன்னால் அது நடக்காமல் போகாது என்று ஸுலைமான் நபி வாதிட்டதாகத் தான் அர்த்தமாகும். இத்தகைய மாபாதகச் செயலை ஸுலைமான் நபி செய்திருக்கிறார்கள் என்ற கருத்து கட்டுக் கதையாகத் தான் இருக்க முடியும்.

இந்தச் செய்தி சரியான செய்தி என்றால் இது போல் நாமும் கூறலாமா என்ற கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டும். "நான் இன்று என் மனைவியிடம் உடலுறவு கொள்வேன். அவள் ஒரு ஆண் பிள்ளையை நிச்சயம் பெற்றெடுப்பாள். அது நல்லொழுக்கமுள்ள பிள்ளையாக இருக்கும்" என்று ஒருவர் கூறினால் அவரைப் பற்றி நம்மை எதிர்ப்பவர்கள் என்ன பத்வா கொடுப்பார்கள்?

இப்படிக் கூறக் கூடாது என்று கூறி அதற்கு எதை ஆதாரமாகக் காட்டுவார்களோ அந்த ஆதாரமே ஸுலைமான் நபியும் இப்படிக் கூறியிருக்க மாட்டார்கள் என்பதற்குரிய ஆதாரமாகும்.

**நபி இன்ஷா அல்லாஹ் சொல்லவில்லையா?**

இந்த ஹதீஸில் இன்ஷா அல்லாஹ் கூறாதது தான் பெரிய பிரச்சனையாகச் சொல்லப்படுகிறது. இன்ஷா அல்லாஹ் சொன்னாலும் இவ்வாறு கூறுவதற்கு அனுமதி கிடையாது என்பதே உண்மை..

இதைப் புரிந்து கொள்வதற்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

மரணித்தவரை இன்ஷா அல்லாஹ் நான் உயிராக்குவேன் என்று ஒருவர் கூறலாமா?

இன்னாருக்கு நான்கு ஸாலிஹான ஆண் பிள்ளைகள் இன்ஷா அல்லாஹ் பிறக்கும் என்று ஒருவர் கூற அனுமதி உண்டா?

இன்ஷா அல்லாஹ் நாளை இன்னார் செத்து விடுவார் என்று ஒருவர் கூற அனுமதி உண்டா?

நிச்சயம் அனுமதி இல்லை. மனிதனின் கைவசம் உள்ள காரியங்களில்



செய்ய வேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்து விட்டு இன்ஷா அல்லாஹ் நடக்கும் என்று கூற வேண்டுமே தவிர மனிதனின் கைவசம் இல்லாத காரியங்களில் இன்ஷா அல்லாஹ் சொன்னாலும் மேற்கண்டவாறு கூற அனுமதி கிடையாது.

அல்லாஹ் நாடினால் (என்பதைச் சேர்த்தே) தவிர, நாளை **நான் இதைச் செய்பவன்** என்று எதைப் பற்றியும் கூறாதீர்! நீர் மறந்து விடும் போது உமது இறைவனை நினைப்பீராக! எனது இறைவன் இதை விட சமீபத்தில் வழி காட்டி விடக் கூடும்" என்று கூறுவீராக!

திருக்குர் ஆன் 8:23,24

எனவே இன்ஷா அல்லாஹ் சொன்னால் இது போல் பேச அனுமதி உண்டு என்ற கருத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லி இருக்க மாட்டார்கள்.

இது சரி என்று வாதிடக் கூடியவர்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் இன்ஷா அல்லாஹ் கூறி விட்டு எதை வேண்டுமானாலும் பேசலாமா? என்பதற்கும் பதில் சொல்ல வேண்டும்.

இந்தச் செய்தி பொய் என்பதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. நீங்கள் இன்ஷா அல்லாஹ் கூறுங்கள் என்று ஒருவர் கூறுகிறார். அந்த ஒருவர் வானவர் என்று ஒரு அறிவிப்பில் தெளிவுபடுத்தப்படுகிறது. இன்ஷா அல்லாஹ் கூறுங்கள் என்று வானவர் நினைவுபடுத்தினால் ஒரு நபியின் கடமை என்ன?

வானவர்கள் சுயமாகப் பேச மாட்டார்கள்: அல்லாஹ் அறிவித்துக் கொடுத்ததைத் தான் சொல்வார்கள் என்பதால் நபி உடனே அதற்குச் செவி சாய்க்க வேண்டாமா? அப்படி நினைவுபடுத்தியும் ஸுலைமான் நபி இன்ஷா அல்லாஹ் கூறவில்லை என்பதும் நபியின் தகுதிக்கு உகந்தது அல்ல.

அத்துடன் குறித்த செய்தியில் ''மறந்து விட்டார்" என்று மொழி பெயர்த்துள்ளது சரியானது அல்ல. இந்த இடத்தில் ''விட்டு விட்டார்" என்று மொழி பெயர்ப்பதே சரியாகும்.

மறந்து விட்டார்கள் என்று இவர்கள் பொருள் செய்யும் இடத்தில் நஸிய என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளது. இந்த வார்த்தை மறந்து விட்டார் என்ற பொருளையும் தரும். வேண்டுமென்றே விட்டு விட்டார் என்ற பொருளையும் தரும். பின்வரும் வசனங்களில் இந்த வார்த்தை வேண்டுமேன்றே விட்டுவிடுதல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வேதத்தைப் படித்து கொண்டே உங்களை **மறந்து விட்டு**, மக்களுக்கு

நன்மையை ஏவுகிறீர்களா? நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

அல்குர்ஆன் (2 : 44)

கூஅப்படித்தான். நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்தன. அதை நீ **மறந்தவாறே** இன்று **மறக்கப்படுகிறாய்**” என்று (இறைவன்) கூறுவான்.

அல்குர்ஆன் (20 : 126)

அவர்களுக்குக் கூறப்பட்ட அறிவுரையை அவர்கள் **மறந்த போது**, அவர்களுக்கு அனைத்துப் பொருட்களின் வாசல்களையும் திறந்து விட்டோம்.

அல்குர்ஆன் (6 : 44)

இவ்வசனங்களில் மறதி என்று பொருள் கொண்டால் இவர்களைத் தண்டிக்க எந்த வழியும் இல்லை. வேண்டுமென்றே விட்டு விட்டார்கள் என்பது தான் மறதி என்று இங்கே கூறப்படுகிறது. தமிழில் கூட நன்றி மறந்தவன் என்று சொல்வதுண்டு. நினைவு வந்தவுடன் நன்றி செலுத்துவான் என்ற அர்த்தத்தில் இது சொல்லப்படுவதில்லை. வேண்டுமென்றே நன்றி செலுத்தாமல் இருக்கிறான் என்ற பொருளில் தான் பயன்படுத்தப்படுகிறது.

எனவே ஒரு மலக்கு சுட்டிக்காட்டியும் இன்ஷா அல்லாஹ் கூறாமல் இருந்தது மறதியில் சேராது. வேண்டுமென்றே விட்டதாகத் தான் ஆகும். ஸுலைமான் நபி இத்தகைய மாபாதகத்தைச் செய்ய மாட்டார்கள்.

இன்ஷா அல்லாஹ் என்று கூறுவது பின்னால் தள்ளிப்போடுகின்ற அளவிற்கு கடினமான ஒரு காரியம் அல்ல. இன்ஷா அல்லாஹ் என்று சொல்லுங்கள் என்று சொன்னவுடனே ஒரு நொடியில் சொல்லி முடித்துவிடலாம். ஞாபகப்படுத்திய அடுத்த நொடியில் யாரும் மறக்கவும் மாட்டார்கள்.

ஒரு பேச்சுக்கு ஸுலைமான் நபி மறந்து விட்டால் மறதிக்காகத் தண்டிப்பது இறைவனின் பண்பு அல்ல. மறதியாக இன்ஷா அல்லாஹ் சொல்லத் தவறியதற்காக ஒரு குழந்தை கூட பெற முடியாத நிலையை அல்லாஹ் ஏற்படுத்துவானா? ஒரு பெண் மட்டும் அரை மனிதனைப் பெற்றெடுக்கும் வகையில் அல்லாஹ் தண்டனை கொடுப்பானா?

அவர் மறதியாக இன்ஷா அல்லாஹ் சொல்லாத் குற்றத்தினாலேயே அவர் நினைத்த படி குழந்தை பிறக்கவில்லை என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருப்பார்களா?

மறதி ஏற்படுகின்ற விதத்தில் அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான். இஸ்லாம் விதித்த கடமைகளை மறதியாக ஒருவன் விட்டு விட்டால் கூட அல்லாஹ் அவனைத் தண்டிக்க மாட்டான். ஏனென்றால் மறதி என்பது



அவனது சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்று.

மறந்து விட்ட ஒருவனைத் தண்டிப்பது இறைவனுடைய நீதிக்கு ஏற்றதல்ல. மறதியாகத் தான் சுலைமான் நபி இன்ஷா அல்லாஹ்வை விட்டு விட்டார்கள் என்றால் மறதியாகச் செய்ததற்கு தண்டனை தரும் விதமாக அவர்களுக்குப் பிறக்கவிருந்த குழந்தைகளைப் பிறக்கவிடாமல் ஆக்குவது இறைவனுடைய நீதிக்கு ஏற்றதல்லவே?

நாகரிகத்தையும் ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுப்பதே நபிமார்களின் பணியாகும். நாகரீகமுள்ள எந்த மனிதரும் இன்றிரவு என் மனைவியுடன் அல்லது மனைவிகளுடன் உடலுறவு கொள்வேன் என்று பகிரங்கமாகக் கூற மாட்டார். இதுவும் இச்செய்தியில் சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது.

இது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் ஒரு தடவை நடந்த நிகழ்ச்சி தான். இந்த அனைத்து ஹதீஸ்களும் அபூஹுரைரா (ரலி) அவர்களின் வழியாகத் தான் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு அறிவிப்பிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட எண்ணிக்கை கூறப்படுகிறது.

60 பெண்களிடம் உடலுறவு கொள்வேன் என்றும், 70 பெண்களிடம் உடலுறவு கொள்வேன் என்றும் 90 பெண்களிடம் உடலுறவு கொள்வேன் என்றும் 100 பெண்களிடம் உடலுறவு கொள்வேன் என்றும் 99 பெண்களிடம் உடலுறவு கொள்வேன் என்றும் ஸுலைமான் நபி கூறியதாக முரண்பட்டு அறிவிக்கப்படுவது இது பொய் என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

ஒரு வாதத்திற்கு ஸுலைமான் நபிக்கு 100 மனைவியர் இருந்ததாக வைத்துக் கொண்டாலும். அவர்களில் குறைந்தது 20 பேராவது மாதவிடாயாக இருந்திருப்பார்கள். அவர்களுடன் உடலுறவும் கொள்ள முடியாது. அவர்களுக்குக் குழந்தையும் தரிக்காது. இதுவும் மேற்கண்ட செய்தியைப் பொய்யாக்குகிறது.

மேலும் எந்த மனிதனுக்கும் நூறு மனைவியுடன் ஒரு இரவில் உடலுறவு கொள்ளும் ஆற்றல் வழங்கப்படவில்லை. இது நடைமுறையில் சாத்தியமாகாத ஒன்றாகும்.

இது போன்ற காரணங்களை வலுவூட்டும் ஆதாரமாகத் தான் குறிப்பிட்டுள்ளோம். இது பொய் என்பதற்கு முக்கிய காரணம் இஸ்லாத்தின் பல அடிப்படைகளைத் தகர்க்கக் கூடியதாக குறித்த செய்தி அமைந்திருப்பது தான். நம்மை எதிர்ப்பவர்களிடம் அதற்குரிய பதில்களை தான் எதிர்பார்க்கின்றோம்.

# நபியவர்கள் அன்னியப் பெண்ணுடன் தனித்திருந்தார்களா?

குர்ஆனுக்கு மாற்றமான கருத்தைத் தருகின்றது என்று நாம் கூறும் செய்திகளில் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் தொடர்பான செய்தியும் ஒன்றாகும்.

நபி (ஸல்) அவர்களுடைய ஒழுக்க வாழ்வை கேள்விக்குறிப்படுத்தும் விதமாக, நபியவர்கள் அன்னியப் பெண் ஒருவருடன் தனிமையில் இருந்தார்கள் என்றும் அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு தலையில் பெண் பார்த்து விட்டார்கள் என்றும் குறித்த செய்தியில் இடம் பெற்றுள்ளது. ஒழுக்கத்தையும், கண்ணியத்தையும், அன்னியப் பெண்களுக்கு மத்தியில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற வரை முறைகளையும் சமுதாயத்திற்கு தெளிவாக கற்றுத் தந்த நபிகள் (ஸல்) அவர்கள் இப்படி நடக்க மாட்டார்கள், நபியவர்கள் இப்படி நடந்தார்கள் என்று நம்புவது நபியவர்களின் உயரிய ஒழுக்கத்திற்கே சந்தேகத்தை உண்டாக்குவதுடன் குர்ஆன் கூறும் செய்திகளுக்கும் இது மாற்றமாக உள்ளது என்று நாம் இந்த செய்தியை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று பிரச்சாரம் செய்து வருகின்றோம்.

இதோ இதுதான் குறித்த செய்தியாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் பின்த் மில்ஹான் (ரலி) அவர்களது வீட்டிற்குச் செல்வது வழக்கம். அவர் உபாதா பின் அஸ்ஸாமித் (ரலி) அவர்களின் துணைவியராக இருந்தார். ஒரு நாள் பகலில் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களின் வீட்டிற்குச் சென்ற போது அவர் நபி (ஸல்) அவர்களுக்கு உணவளித்த பின் நபி **(ஸல்) அவர்களுக்குப் பேன் பார்த்து விடலானார்.** அப்போது நபி (ஸல்) அவர்கள் உறங்கி விட்டார்கள். பிறகு சிரித்தபடி விழித்தார்கள்.

தொடர்ந்து உம்மு ஹராம் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :

அப்போது நான் அல்லாஹ்வின் தூதரே ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் என் சமுதாயத்தாரில் சிலர் அல்லாஹ்வின் பாதையில் இந்தக் கடலின் மத்தியில் பயணம் செய்யும் புனிதப் போராளிகளாக எனக்குக் காட்டப்பட்டனர். அவர்கள் கட்டில்களில் வீற்றிருக்கும் மன்னர்களாக அல்லது மன்னர்களைப் போன்று இருந்தார்கள் என்று கூறினார்கள். உடனே நான்



அல்லாஹ்வின் தூதரே என்னையும் அவர்களில் ஒருத்தியாக ஆக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் என்று சொன்னேன். அப்போது எனக்காக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். பிறகு (மீண்டும்) தலையை வைத்து விட்டுப் பிறகு சிரித்தபடி விழித்தெழுந்தார்கள். அப்போதும் நான் ஏன் சிரிக்கிறீர்கள்? அல்லாஹ்வின் தூதரே என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் என் சமுதாயத்தோரில் சிலர் அல்லாஹ்வின் பாதையில் புனிதப் போர்புரிபவர்களாக எனக்குக் காட்டப்பட்டார்கள் என்று முன்பு போலவே பதிலளித்தார்கள். அதைக் கேட்டு நான் அல்லாஹ்வின் தூ தரே என்னையும் அவர்களில் ஒருத்தியாக ஆக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் என்று சொன்னேன். நபி (ஸல்) அவர்கள் நீங்கள் (கடல் பயணம் செய்து அறப்போருக்கு) முதலாவதாகச் செல்பவர்களில் ஒருவராக இருப்பீர்கள் என்று கூறினார்கள். உம்மு ஹராம் (ரலி) அவர்கள் முஆவியா பின் அபீ சுஃப்யான் (ரலி) அவர்களின் (ஆட்சிக்) காலத்தில் கடல் பயணம் மேற்கொண்டார்கள். பின்பு அவர்கள் கடலிலிருந்து புறப்பட்ட போது தமது வாகனத்திலிருந்து கீழே விழுந்து இறந்து விட்டார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி)

நூல் : புகாரி (7001)

நபி (ஸல்) அவர்கள் என் சமுதாயத்தினரில் முதலில் கடலில் (சென்று) புனிதப் போர் புரியும் படையினர் (சொர்கம் புகுவதற்கான தகுதியை) ஏற்படுத்திக் கொண்டு விட்டார்கள் என்று கூறினார்கள். இதைச் செவியுற்ற நான் அல்லாஹ்வின் தூதரே நான் அவர்களில் ஒருத்தியா? என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் நீங்கள் அவர்களில் ஒருவர் தாம் என்று பதிலளித்தார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் எனது சமுதாயத்தினரில் சீசருடைய நகரத்தின் (பழைய கான்ஸ்டான்டி நோபிள் அல்லது தற்போதைய இஸ்தான்பூலின்) மீது படையெடுக்கும் முதலாவது படையினர் மன்னிக்கப்பட்டவர்கள் ஆவார் என்று கூறினார்கள். அவர்களில் நானும் ஒருத்தியா? அல்லாஹ்வின் தூதரே என்று நான் கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் இல்லை என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : உம்மு ஹராம் (ரலி)

நூல் : புகாரி (2924)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு நாள் உம்மு ஹராம் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வந்தார்கள். உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு உணவளித்துவிட்டு **அவர்களுடைய தலையில் பேன் பார்த்து விடுவதற்காக உட்கார்ந்தார்கள்.**

அறிவிப்பவர் : அனஸ் (ரலி) அவர்கள்

நூல் : முஸ்லிம் (3535)

நபி (ஸல்) அவர்கள் தனது தலையை உம்மு ஹராம் (ரலி) அவர்களிடத்தில் வைத்தார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் (ரலி) அவர்கள்
நூல் : முஸ்லிம் (3536

மேற்கண்ட செய்தி புகாரியில் 2789, 2800, 2895, 2924, 6282, 7002 என்ற இலக்கங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நபியவர்களின் ஒழுக்க வாழ்வுக்கு மாற்றமான செய்தி**

நபி (ஸல்) அவர்கள் புனித இஸ்லாமிய மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்யும் போது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களிடம் ஆண்களாக இருந்தால் கையைப் பிடித்து பைஅத் – உறுதிப் பிரமாணம் பெற்றுக் கொள்வார்கள்.

பைஅத் பெற்றுக் கொள்வதற்காக வருபவர்கள் பெண்களாக இருந்தால் அவர்களிடம் நபியவர்கள் வாய் மூலம் பைஅத் – உறுதிப் பிரமாணத்தை பெற்றுக் கொண்டு அனுப்பி விடுவார்கள். அவர்களின் கைகளைப் பிடித்து பைஅத் – உறுதிப் பிரமாணம் கூட செய்ய மாட்டார்கள் என்று அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது : நபியே இறை நம்பிக்கை கொண்ட பெண்கள் உங்களிடம் அல்லாஹ்வுக்காக எதையும் இணை வைக்க மாட்டார்கள் திருட மாட்டார்கள் விபச்சாரம் செய்ய மாட்டார்கள் தங்கள் குழந்தைகளைக் கொலை செய்ய மாட்டார்கள் தாங்களாக அவதூறு இட்டுக்கட்டி பரப்ப மாட்டார்கள் நற்செயலில் உங்களுக்கு மாறு செய்ய மாட்டார்கள் என்று உறுதி மொழி அளித்தால் அவர்களிடம் உறுதி மொழி வாங்குங்கள் எனும் (60 : 12 ஆவது) இறை வசனத்தை நபி (ஸல்) அவர்கள் பெண்களிடம் ஓதி வாய் மொழியாக விசுவாசப் பிரமாணம் வாங்குவார்கள். (கையால் தொட்டு வாங்க மாட்டார்கள்). அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கை அவர்களுக்குச் சொந்தமான பெண்களை (துணைவியரை)த் தவிர வேறெந்த பெண்ணின் கையையும் தொட்டதில்லை.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : புகாரி (7214)

நபி (ஸல்) அவர்களிடத்தில் உறுதிப் பிரமாணம் செய்வதற்காக நான் பல பெண்களுடன் அவர்களிடத்தில் வந்தேன். அப்போது அவர்கள் உங்களுடைய சக்திக்கு உட்பட்டு உங்களால் முடிந்ததை (கடைப்பிடியுங்கள்). நான் பெண்களிடத்தில் கை கொடுத்து (பைஅத்) செய்ய மாட்டேன் என்று கூறினார்கள்.



அறிவிப்பவர் : உமைமா (ரலி)
நூல் : இப்னு மாஜா (2865)

பைஅத் என்பது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களிடம் நபி பெற்றுக் கொள்ளும் உறுதிப் பிரமாணமாக இருந்தும் நபி (ஸல்) அவர்கள் பைஅத் பெற்றுக் கொள்வதற்காகக் கூட பெண்களின் கைகளைப் பிடித்ததில்லை என்று ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

தமது மனைவியரின் கைகளைத் தவிர வேறு எந்த பெண்ணின் கைகளையும் நபியவர்கள் தொட்டதில்லை என்று மேற்கண்ட செய்தியில் நபியவர்களின் ஒழுக்க வாழ்வு தொடர்பில் நபியின் அன்பு மனைவி ஆயிஷா (ரலி) அவர்களே சான்றளிக்கின்றார்கள்.

பைஅத் பெறுவதற்காகக் கூட அன்னியப் பெண்களின் கைகளைக் கூட தொடாத நபி (ஸல்) அவர்கள் அன்னியப் பெண்ணுடன் தனிமையில் இருந்தார்கள் என்றும், அன்னியப் பெண்ணான உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபியவர்களுக்குப் பேன் பார்த்து விட்டார்கள் என்றும் எந்தவொரு உண்மை முஃமினும் நம்ப மாட்டான்.

மட்டுமல்லாமல் பைஅத் எடுக்க வந்தவர்களிடம் நபியவர்கள் சொன்ன செய்தி இங்கு கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும் அதாவது "உங்களுடைய சக்திக்கு உட்பட்டு உங்களால் முடிந்ததை (கடைப்பிடியுங்கள்). நான் பெண்களிடத்தில் கை கொடுத்து (பைஅத்) செய்ய மாட்டேன்" என்பதுதான் அந்தச் செய்தி. பெண்களின் கைகளைப் பிடித்து நான் பைஅத் செய்யமாட்டேன் என்று நபியவர்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்கள். அன்னியப் பெண் என்பதினால் கையைப் பிடித்து பைஅத் செய்யமாட்டேன் என்று நபியவர்கள் மறுத்திருக்கும் போது, அன்னியப் பெண்ணுடன் தனிமையில் இருந்தார்கள், பேன் பார்க்க தலையைக் கொடுத்தார்கள் என்றெல்லாம் ஒரு உண்மை முஃமின் நம்பமாட்டான் என்பதே நிதர்சனமானதாகும்.

**சிறு சந்தேகத்திற்குக் கூட வழி வைக்காத உத்தமத் தூதர்**

நபி (ஸல்) அவர்கள் தமது ஒழுக்க வாழ்வில் ஒரு சிறு சந்தேகம் கூட மற்றவர்களுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருந்தார்கள். இதற்கு கீழுள்ள செய்தி சான்றாகும்.

நபி (ஸல்) அவர்களிடம் (அவர்கள் பள்ளிவாசலில் இஃதிகாஃபில் இருந்த போது அவர்களுடைய துணைவியார்) ஸஃபிய்யா பின்த் ஹுயை (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்கள் திரும்பச் சென்ற போது நபி (ஸல்)

அவர்களும் (ஸஃபிய்யாவுடன்) (சிறிது தூரம்) நடந்து சென்றார்கள். அப்போது அன்சாரிகளில் இருவர் அவர்களைக் கடந்து சென்றனர். உடனே நபி (ஸல்) அவர்கள் அவ்விருவரையும் அழைத்து இவர் (வேறு யாருமல்லர். என் துணைவி) ஸஃபிய்யாதாம் என்று சொன்னார்கள். உடனே அவ்விருவரும் அல்லாஹ் தூயவன் (உங்கள் மீதா சந்தேகப்படுவோம்) என்று கேட்டனர். நபி (ஸல்) அவர்கள் மனிதனின் இரத்த நாளங்களில் எல்லாம் ஷைத்தான் ஊடுருவியுள்ளான் என்று சொன்னார்கள்.

அறிவிப்பவர் : ஸஃபிய்யா (ரலி)

நூல் : புகாரி (3281)

நபியவர்கள் இரவு நேரத்தில் மனைவி ஸபிய்யா (ரலி) அவர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றதை இரண்டு நபித் தோழர்கள் பார்த்து விடுகின்றார்கள். அவர்களிடம் நபியவர்கள் ''இவர் எனது மனைவி ஸபிய்யா" என்பதை தெளிவு படுத்துகின்றார்கள்.

நாங்கள் உங்களை சந்தேகிப்போமா நபிகள் நாயகமே? என்று நபித் தோழர்கள் கேட்டபோது, ''மனிதனின் இரத்த நாளங்களில் எல்லாம் ஷைத்தான் ஊடுருவியுள்ளான்" என்று நபியவர்கள் சொன்ன பதில் இங்கு கவனிக்கத் தக்கதாகும். மனைவியுடன் சென்ற நபியவர்கள் மீது வேறு விதமான சந்தேகத்தினை ஷைத்தான் உண்டாக்கி விடுவான் என்பதை அறிந்த நபியவர்கள் உடனே தான் அழைத்து செல்பவர் தனது மனைவி என்று தெளிவுபடுத்துகின்றார்கள்.

சாதாரணமாக தனது மனைவியை அழைத்துச் செல்லும் போதே ஷைத்தான் ஏதாவது கெட்ட எண்ணங்களை மக்கள் மத்தியில் போட்டு விடுவானோ என்பதில் கரிசனை காட்டிய நபியவர்கள் அன்னியப் பெண்ணுடன் தனிமையில் இருந்தார்கள் என்பது எப்படி உண்மையாக இருக்கும் என்பதை சிந்திக்க வேண்டாமா?

**அன்னியப் பெண்களுடன் தனித்திருப்பதைத் தடுத்த நபியவர்கள்.**

அன்னியப் பெண்களிடம் வந்து செல்வதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். இந்த விசயத்தில் சமுதாயத்திற்குக் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்கள்.

எந்த ஒரு கட்டளையிட்டாலும் அதை முதலில் நபி (ஸல்) அவர்கள் கடைபிடிப்பவர்களாக இருந்தார்கள். இந்நிலையில் சமுதாயத்திற்குத் தான் செய்த உபதேசங்களை மீறக் கூடியவர்களாக ஒரு போதும் நபி (ஸல்) அவர்கள் இருக்க மாட்டார்கள்.



அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (அந்நியப்) பெண்கள் இருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டாம் என உங்களை நான் எச்சரிக்கிறேன் என்று கூறினார்கள். அப்போது அன்சாரிகளில் ஒருவர் அல்லாஹ்வின் தூதரே கணவருடைய (சகோதரன் போன்ற) உறவினர்கள் (அவள் இருக்கும் இடத்திற்குச் செல்வது) குறித்து தாங்கள் என்ன கூறுகிறீர்கள்? என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள் கணவருடைய உறவினர்கள் மரணத்திற்கு நிகரானவர்கள் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : உக்பா பின் ஆமிர் (ரலி)

நூல் : புகாரி (5232)

கணவனாகவோ அல்லது திருமணம் முடிக்கத் தகாத உறவினராகவோ இருந்தாலே தவிர எந்த ஆணும் எந்தப் பெண்ணிடத்திலும் தங்குவது கூடாது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி)

நூல் : முஸ்லிம் (4036)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களில் எவரும் (அன்னியப்) பெண்ணுடன் தனித்திருக்க வேண்டாம். ஏனென்றால் (தனித்திருக்கும் போது) ஷைத்தான் மூன்றாவது ஆளாக அவர்களுடன் உள்ளான்.

அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி)

நூல் : அஹ்மத் (109)

**முரண்பாடுகள்**

நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களிடத்தில் தன் தலையை வைத்ததாக முஸ்லிமில் (3536) வது செய்தி கூறுகிறது. உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கு அருகில் நபி (ஸல்) அவர்கள் உறங்கியதாக புகாரியில் (2800) வது செய்தி கூறுகிறது.

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்களுக்கு மனைவியாக இருந்த போது நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராமிடம் வந்து உறங்கியதாக புகாரியில் இடம்பெற்றுள்ள 7002 வது செய்தி கூறுகிறது. இந்நிகழ்வு நடந்த பிறகு தான் உபாதா (ரலி) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களை மணந்து கொண்டதாக முஸ்லிமில் இடம்பெற்றுள்ள 3536 வது செய்தி கூறுகிறது.

நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களின் மடியில் படுத்துக் கொண்டிருந்த நிலையில் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் அமர்ந்து

கொண்டு பேன் பார்த்ததாக முஸ்லிமில் (3535) வது செய்தியும் (3535) வது செய்தியும் கூறுகிறது. ஆனால் நபி (ஸல்) அவர்கள் உறங்கும் போது உம்மு ஹராம் (ரலி) அவர்கள் தன் தலையைக் கழுவிக் கொண்டிருந்ததாக அபூதாவுதில் இடம் பெற்றுள்ள 2131 வது செய்தி கூறுகிறது.

**அடிப்படையற்ற விளக்கம்**

இந்தச் செய்தியை சரிகாணுவதற்காக சிலர் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு பால்குடித் தாயாக இருந்தார்கள் என்றும் தாய் அல்லது தந்தை வழியில் பால்குடி அன்னையாக இருந்தார்கள் என்றும் விளக்கம் தருகிறார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் விதிவிலக்காக இந்நிகழ்வை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் விளக்கம் தருகிறார்கள்.

**நமது விளக்கம்**

இவர்கள் கூறுவது போல் உண்மை நிலை இருந்தால் முதலில் இந்த விளக்கத்தை ஏற்று இதை சரிகாணுபவர்கள் நாமாகத் தான் இருப்போம். ஆனால் உம்மு ஹராம் நபி (ஸல்) அவர்களுக்கு சிற்றன்னையாக இருந்தார்கள் என்ற விளக்கத்தை யார் எப்படி கூறினார் என்று பார்த்தால் இந்த விளக்கம் அடிப்படையற்றது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இப்னு அப்தில் பர் என்பவர் இந்த விளக்கத்தைப் பின்வருமாறு கூறுகிறார். உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பால் புகட்டியிருப்பார்கள். இதனால் அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு பால்குடி அன்னையானார்கள் என்று நான் யூகிக்கிறேன். .

நூல் : தம்ஹீத் பாகம் : 1 பக்கம் : 226

இந்த ஹதீஸை சரிகாணுவதற்காக யூகமாக சொல்லப்பட்ட விளக்கம் தான் இது என்பதை மேலுள்ள வாசகம் தெளிவாக கூறுகிறது. எந்தச் சான்றும் இல்லாமல் யூகமாக இந்த விளக்கம் சொல்லப்பட்டதால் இதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இமாம் இப்னு ஹஜர் அவர்களும் திம்யாதீ என்ற அறிஞரும் இப்னு அப்தில் பர் கூறுகின்ற இந்த விளக்கத்தை சுட்டிக்காட்டி மறுத்துள்ளார்கள்.

எனவே தான் இப்னு ஹஜர் அவர்கள் இந்த ஹதீஸை மையமாக வைத்து ஒரு அன்னியப் பெண் விருந்தினருக்குப் பணிவிடைகளை செய்யலாம் என்று சட்டம் கூறியுள்ளார். திம்யாதீ என்ற அறிஞரும் இப்னு அப்தில் பர் கூறிய



இந்த விளக்கத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்.

ஏனென்றால் நபி (ஸல்) அவர்களுக்கு பால் புகட்டிய தாய்மார்கள் யார் யார் என்று வரலாற்று நூற்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உம்மு ஹராம் (ரலி) அவர்கள் அன்சாரி குலத்தைச் சார்ந்தவர்கள். அன்சாரி குலத்தைச் சார்ந்த பெண்களில் அப்துல் முத்தலிபின் தாயாரான சல்மா என்பவரைத் தவிர வேறு யாரும் நபி (ஸல்) அவர்களுக்குப் பால்குடி அன்னையர் கிடையாது.

சல்மாவிற்கும் உம்மு ஹராமிற்கும் மத்தியிலாவது நெருங்கிய உறவு உண்டா என்றால் இல்லை. இருவரும் மிக மிக தொலைவில் பல பாட்டனார்களைக் கடந்து தூரத்து உறவினராக உள்ளார்கள். சல்மா அவர்களுடன் உம்மு ஹராம் பெற்றிருந்த தூரத்து உறவினால் நபி (ஸல்) அவர்களுக்கு உம்மு ஹராம் (ரலி) அவர்கள் திருமணம் முடிக்கத் தடையானவர்களாக ஆக மாட்டார்கள்.

உம்மு ஹராம் (ரலி) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பை இமாம் இப்னு ஹஜர் இமாம் தஹபீ இன்னும் பலர் பதிவு செய்திருக்கிறார்கள். இமாம் திர்மிதியும் (1569) வது ஹதீஸைப் பதிவு செய்துவிட்டு உம்மு ஹராமைப் பற்றி பேசுகிறார்.

இவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடும் போது இவர் உம்மு சுலைம் என்பாரின் சகோதரி, உபாதா என்பாரின் மனைவி, அனஸ் (ரலி) அவர்களின் சிற்றன்னை என்று தான் குறிப்பிடுகிறார்களே தவிர நபியவர்களின் பால்குடித் தாய் என்று அவர்கள் சொல்லவே இல்லை.

உம்மு ஹராம் நபி (ஸல்) அவர்களுக்குப் பால்குடித் தாயாக இருந்திருந்தால் அதைத் தான் முதலில் இவர்கள் பதிவு செய்திருப்பார்கள். ஆனால் எந்த வரலாற்றுப் புத்தகத்திலும் உம்மு ஹராம் நபி (ஸல்) அவர்களின் தாய் என்ற விளக்கம் கூறப்படவே இல்லை.

இந்த ஹதீஸை சரிகாணுவதற்கு எதிர்த் தரப்பினர்கள் கூறிய முரண்பட்ட விளக்கங்களைக் கவனித்தாலே அது ஆதாரமற்றது என்று எளிதில் உணர்ந்து கொள்ளலாம். உம்மு ஹராம் நபி (ஸல்) அவர்களுக்கு பால்குடித் தாய் என்று கூறுவதோடு இச்சட்டம் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் உரியது என்ற விளக்கத்தையும் இணைத்துக் கூறுகிறார்கள்.

நபி (ஸல்) அவர்களின் பால்குடி அன்னையாக உம்மு ஹராம் இருக்கும் போது இச்சட்டம் அவர்களுக்கு மட்டும் உரியது என்று கூறுவது அர்த்தமற்றது. பால்குடித் தாயாக இருந்தால் யார் வேண்டுமானாலும் தன் பால்குடித் தாயிடம் சென்று வரலாம். இதில் நபி (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் விதிவிலக்குத்

தருவதற்கு எந்த அவசியமும் இல்லை.

இந்த ஹதீஸைச் சரிகாணுவதற்கு எதையெல்லாம் சொல்ல வேண்டுமோ அதையெல்லாம் ஆதராமில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விளக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அந்த விளக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த ஹதீஸை நிலைநாட்டப் பார்க்கிறார்களே தவிர ஆதாரத்தை வைத்து நிலைநாட்டுவதற்கு முயற்சிக்கவில்லை.

குர்ஆன் ஹதீஸில் தெளிவாகவோ அல்லது மறைமுகமாகவோ விதிவிலக்கு என்று சொல்லப்படாமல் ஒரு செய்தி சொல்லப்பட்டால் அது எல்லோருக்கும் உரியது என்று தான் புரிந்து கொள்ள வேண்டும். விதிவிலக்கு என்று வாதிடுபவர்கள் தங்கள் வாதத்திற்குரிய ஆதாரத்தைக் காட்டாத வகையில் அவர்கள் விளக்கம் எடுபடாது.

இந்த அடிப்படையை ஏற்காவிட்டால் அவரவர் தன் இஷ்டத்திற்கு நபி (ஸல்) அவர்கள் செய்ததாக வரும் செய்திகளை அவர்களுக்கு மட்டும் உரியது என்று வாதிடுவார்கள். மொத்தத்தில் நபியவர்களின் வழிமுறை அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு விடும்.

நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகை என்று இவர்கள் கூறும் விளக்கத்தை மறுத்த அறிஞர்களும் இருக்கிறார்கள். காளீ இயாள் என்பவரும் திர்மிதிக்கு விரிவுரை எழுதிய அப்துர் ரஹ்மான் முபாரக்ஃபூரீ என்பரும் இந்த விளக்கத்தை மறுத்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு என்ற இவர்களின் வாதத்தை இந்த ஹதீஸில் பொருத்தினாலும் இதில் உள்ள சிக்கல்கள் நீங்காது. ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் அன்னியப் பெண்களின் கையைக் கூட தொட்டதில்லை. பெண்கள் விசயத்தில் மிகவும் பேணுதலாக நடந்து கொண்டார்கள்.

அன்னியப் பெண்களிடம் பழகுவதற்கு நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் சிறப்பு அனுமதி அளிக்கப்பட்டிருந்தால் பைஅத் செய்ய வந்த பெண்களின் கைகளை நான் தொட மாட்டேன் என்று அவர்கள் கூறியிருக்க மாட்டார்கள். மாறாக கையைத் தொட்டு பைஅத் செய்திருப்பார்கள்.

ஒரு புறம் நபி (ஸல்) அவர்களிடம் இப்படிப்பட்ட உயர்ந்த குணங்கள் இருக்க இன்னொரு புறம் இதற்கு மாற்றமாக அன்னியப் பெண்களுடன் பழகும் வழக்கம் இருந்தது என்று கூறுவது முரண்பாடானது.



எதில் சலுகை தர வேண்டும் என்பதைக் கூட இந்த அறிஞர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஒரு அசிங்கமான காரியத்தைச் செய்வதில் நபி (ஸல்) அவர்களுக்கு சிறப்புச் சலுகை உண்டு என்று கூறினால் இவ்விளக்கம் மேலும் மேலும் நபியவர்களுக்கு இழிவை ஏற்படுத்துமே தவிர ஒரு போதும் இழிவைத் துடைக்காது.

எனவே நபி (ஸல்) அவர்களின் மீது களங்கத்தை ஏற்படுத்தும் இந்த ஹதீஸை அவர்களைக் கடுமையாக நேசிக்கும் எந்த ஒரு முஃமினும் நம்ப மாட்டான். நம்பக் கூடாது.

**விமர்சனமும் விளக்கமும்.**

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினரா? இல்லையா? என்பதை நாம் இங்கு அலசக் கடமைப் பட்டுள்ளோம்.

காரணம் இந்தச் செய்தியை உண்மையானது என்று வாதிடுபவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு பால்குடி உறவினர் என்ற வாதத்தை முன்வைக்கின்றார்கள். ஆகவே இது தொடர்பாக நாம் விரிவாக ஆராய வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் கூறப்படும் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் அனஸ் (ரலி) அவர்களின் சின்னம்மா ஆவார். அதாவது அனஸ் (ரலி) அவர்களின் தாயாரான உம்மு சுலைம் (ரலி) அவர்களின் சகோதரி ஆவார்.

நபி (ஸல்) அவர்கள் குரைஷி குலத்தைச் சார்ந்தவர்கள். இந்தப் பெண்மணி அன்சாரி குலத்தைச் சார்ந்தவர்கள். எனவே வம்சாவழி உறவு அடிப்படையில் பார்த்தால் இந்த நபித்தோழியர் நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினராக இருக்க முடியாது. இவர் நபி (ஸல்) அவர்களுக்கு அந்நியப் பெண் ஆவார்.

ஒரு ஆண், மஹ்ரமில்லாத அந்நியப் பெண்ணிருக்கும் இடத்திற்குச் செல்வதும் அவருக்கு அருகில் படுப்பதும் ஆணுக்கு பெண் பேன் பார்த்து விடுவதும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைசெய்த ஹராமான விசயங்களாகும். அப்படியிருக்க இந்த விதிமுறைக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்கள் நடக்க மாட்டார்கள் என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

மேற்கண்ட செய்தி நபி (ஸல்) அவர்களின் நற்குணத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் ஆண் பெண்ணுக்கு மத்தியில் கடைபிடிக்க வேண்டிய இஸ்லாமிய நெறிமுறைகளுக்கும் மாற்றமாக இருப்பதால் இந்தத்

தகவல் புகாரியில் இடம்பெற்றிருந்தாலும் இதை ஏற்க முடியாது என்று நாம் கூறினோம்.

புகாரியில் இடம்பெற்ற எந்தச் செய்தியும் தவறானது இல்லை. தவறான கருத்து தரும் செய்திகளைக் கூட எப்படியாவது சரிசெய்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோய் சிலருக்குப் பிடித்திருக்கின்றது. நீண்ட காலம் நமது ஆதாரங்களுக்குப் பதில் சொல்லாத இவர்கள் தற்போது சில அரைவேக்காடுகளை தவ்ஹீத் ஜமாஅத்திற்கு எதிராக களம் இறக்கிவிட்டிருக்கின்றார்கள்.

நம்மை விமர்சனம் செய்பர்கள் இருப்பதைக் கூறி நம்மை விமர்சித்தால் அந்த விமர்சனம் வரவேற்கப்படும். ஆனால் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கூறி நம்மை மக்களுக்கு மத்தியில் விகாரமாக சித்தரிக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர்.

புகாரியின் விரிவுரையான பத்ஹுல் பாரியில் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு பால்குடி உறவின் மூலமாக சின்னம்மா உறவு உள்ளவர். எனவே இவர் நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினர் என்று இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் தவ்ஹீத் ஜமாஅத்தினர் அநியாயமாக உம்மு ஹராம் (ரலி) அவர்களை அந்நியப் பெண்ணாகக் கூறி இந்த செய்தியை மறுக்கின்றனர் எனக் குற்றம் சாட்டுகிறார்கள்.

இந்தச் செய்தியை ஏற்றுக்கொள்வதில் இவர்களுக்கும் நமக்கும் இடையே முரண்பாடு இருந்தாலும் நபி (ஸல்) அவர்கள் அந்நியப் பெண்ணுடன் இது போன்று நடக்க மாட்டார்கள் என்பதில் உடன்பாடு உள்ளது. எனவே உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினரா? இல்லையா? என்பதை முடிவு செய்துவிட்டால் இந்தச் செய்தியை ஏற்றுக் கொள்ளலாமா? கூடாதா? என்பது தெளிவாகிவிடும்.

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் தொடர்பாக புகாரியில் இடம்பெற்றுள்ள இந்த செய்தியை இன்றைக்கு நாம் மட்டுமே பிரச்சனையாக கருதுவது போன்ற பொய்யான தோற்றத்தை நம்மை விமர்சிப்பவர்கள் ஏற்படுத்துகிறார்கள். ஆனால் இந்தச் செய்தி நமக்கு முன்பு காலம் காலமாக பிரச்சனைக்குரியதாகவே வரலாற்றைக் கடந்து வந்துள்ளது. இப்னு ஹஜர் அவர்கள் தனது நூலில் இது தொடர்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.



(فتح الباري - ابن حجر - (١١ / ٨٧

وقد أشكل هذا على جماعة

இந்த செய்தி பலருக்கு பிரச்சனையாகிவிட்டது.

நூல் : பத்குல் பாரீ பாகம் : 11 பக்கம் : 78

**உம்மு ஹராம் (ரலி) பால்குடி உறவுக்காரரா?**

நபி (ஸல்) அவர்கள் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போது அவர்களுக்கு பாலூட்டியவர்கள் யார் என்ற விபரம் வரலாற்று நூற்களில் இடம்பெற்றுள்ளது. சுவைபா, ஹலீமதுஸ் சஃதிய்யா, ஆகிய இருவரும் நபி (ஸல்) அவர்களுக்கு பாலூட்டினார்கள் என்ற தகவல் வரலாற்று நூற்களில் பதிவாகியுள்ளது.

இந்த நூற்களில் எந்த ஒரு இடத்திலும் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு பாலூட்டிய தாயாகவோ அல்லது அந்த உறவின் மூலம் மஹ்ரமானவர் என்றோ கூறப்படவில்லை.

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பால்குடி மூலம் மஹ்ரமான உறவு உள்ளவர் என்ற விளக்கத்தை யார் சொல்கிறார்கள் என்று பார்த்தால் இப்படி சொல்பவர்கள் சஹாபியோ அல்லது உம்மு ஹராம் (ரலி) அவர்களை நேரில் கண்ட தாபியியோ கிடையாது.

மாறாக குறித்த ஹதீஸில் உள்ள பிரச்சனையை நீக்குவதற்காக சில அறிஞர்கள் தன் புறத்திலிருந்து சுய விளக்கமாகவே இந்தத் தகவலைக் கூறியுள்ளனர். ஒவ்வொரு பிரச்சனையிலும் அறிஞர்கள் பலவாறு கருத்து கூறுவார்கள். அவர்கள் கூறுவதில் எது சரி? எது தவறு? என்பதை பார்த்துத் தான் ஏற்க வேண்டும்.

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பால்குடி உறவு மூலம் சிற்றன்னை என்ற கருத்தை இப்னு அப்தில் பர் என்ற அறிஞர் தான் முன்வைக்கின்றார். அவர் கூறிய வாசகத்தை கவனித்தாலே இது வெறும் யூகம் தான் என்பதை தெளிவாக அறியலாம்.

(فتح الباري - ابن حجر - (١١ / ٨٧

وقد أشكل هذا على جماعة فقال بن عبد البر أظن ان أم حرام أرضعت رسول الله صلى الله عليه و سلم أو أختها أم سليم فصارت كل منهما أمه أو خالته من الرضاعة فلذلك كان ينام عندها وتنال منه ما يجوز للمحرم أن يناله من محارمه

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு

பால்புகட்டியிருப்பார்கள். அல்லது அவருடைய சகோதரி உம்மு சுலைம் (ரலி) அவர்கள் பால் புகட்டியிருப்பார்கள் என்றே நான் யூகிக்கின்றேன். எனவே இவ்விருவரில் ஒருவர் நபி (ஸல்) அவர்களுக்கு பால்குடி தாயாகவோ அல்லது சிற்றன்னையாகவோ இருப்பார்கள். எனவே தான் நபி (ஸல்) அவர்கள் இவர்களிடத்தில் சென்று உறங்கக்கூடியவராக இருந்தார்கள்.

நூல் : பத்குல் பாரீ (பாகம் 11 பக்கம் 78)

நான்யூகிக்கின்றேன்என இப்னு அப்தில்பர்கூறுவது இங்குகவனிக்கத்தக்கது. மேலும் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பால் புகட்டியிருப்பார்கள். அல்லது சின்னம்மாவாக இருப்பார்கள் என்று இப்னு அப்தில் பர் சந்தேகத்துடன் கூறுவதும் கவனிக்கத்தக்கது.

எப்படியாவது இந்தச் செய்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சனையைத் தீர்ப்பதற்காகவே இப்னு அப்தில் பர் தன்னுடைய யூகத்தைக் கூறியுள்ளார். இதற்கு எந்தச் சான்றும் இல்லை என்பதை இதிலிருந்து அறியலாம்.

இப்னு அப்திப் பர் கூறியதைப் போன்று அவருக்கு முன்னால் யஹ்யா பின் இப்ராஹீம் என்பவரும் இப்னு வஹபும் இதே விளக்கத்தைக் கூறியுள்ளனர். இவர்களும் இந்தக் கருத்தை தங்களுடைய சுய விளக்கமாகவே கூறுகின்றனர். இவர்கள் நபித்தோழர்களோ, நபித்தோழர்களை கண்ட தாபிஈன்களோ கிடையாது.

இந்தச் செய்தியில் உள்ள பிரச்சனையைத் தீர்ப்பதற்காக தன் புறத்திலிருந்து இவர்கள் கூறிய விளக்கமே இவை. எனவே தான் இந்த விளக்கத்தைக் கூறிய இப்னு வஹப் இந்த நிகழ்வு ஹிஜாபுடைய சட்டம் வருவதற்கு முன்னால் நடந்திருக்கலாம் என்ற கருத்தையும் கூறியுள்ளார். ஆனால் இப்னு ஹஜர் (ரலி) அவர்கள் இந்தக் கருத்து தவறானது. இந்த நிகழ்வு ஹிஜாபிற்குப் பிறகு தான் நடந்தது என்பதை உறுதிசெய்கிறார்கள்.

وحكى بن العربي ما قال بن وهب ثم قال وقال غيره بل كان النبي صلى الله عليه و سلم معصوما يملك اربه عن زوجته فكيف عن غيرها مما هو المنزه عنه وهو المبرأ عن كل فعل قبيح وقول رفث فيكون ذلك من خصائصه ثم قال ويحتمل أن يكون ذلك قبل الحجاب ورد بأن ذلك كان بعد الحجاب جزما

இந்த சம்பவம் ஹிஜாபுக்கு முன்னால் நடந்திருக்க வாய்ப்புள்ளது என்று இப்னு வஹப் கூறியுள்ளார். ஆனால் இது ஹிஜாபுக்கு பிறகு தான் நடந்தது என்பது உறுதியான தகவல் என்பதால் இந்தக் கூற்று மறுக்கப்படுகின்றது.

நூல் : பத்குல் பாரீ (பாகம் 11 பக்கம் 78)



### உண்மையை உடைத்துச் சொன்ன அறிஞர் திம்யாதீ

உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கும் நபி (ஸல்) அவர்களுக்கும் இடையே மஹ்ரமான (திருமணம் செய்ய தடை என்ற அளவுக்குள்ள) உறவு இருந்தது என்ற கருத்தை திம்யாதீ என்ற அறிஞர் ஆணித்தரமாக மறுக்கின்றார்.

وبالغ الدمياطي في الرد على من ادعى المحرمية فقال ذهل كل من زعم أن أم حرام إحدى خالات النبي صلى الله عليه و سلم من الرضاعة أو من النسب وكل من أثبت لها خؤلة تقتضي محرمية لأن امهاته من النسب واللاتي أرضعنه معلومات ليس فيهن أحد من الأنصار البتة سوى أم عبد المطلب

மஹ்ரமான உறவு உள்ளது என்று கூறுபவர்களுக்கு எதிராக திம்யாதீ கடுமையாக மறுப்பு தெரிவித்துள்ளார். உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு வம்சா வழியின் மூலமாகவோ அல்லது பால்குடி உறவின் மூலமாகவோ சிரிய தாய் ஆவார் என்று யார் கூறுகிறாரோ அவர் தவறிழைத்து விட்டார். மேலும் மஹ்ரமான உறவு உண்டு என்று கூறுபவர்கள் அனைவரும் தவறிழைக்கின்றனர். ஏனென்றால் நபி (ஸல்) அவர்களின் வம்சா வழித் தாய்மார்களும் பாலூட்டிய தாய்மார்கள் யார் யார் என்பதும் அறியப்பட்டிருக்கின்றது. இவர்களில் உம்மு அப்தில் முத்தலிப் என்பவரைத் தவிர அன்சாரிகளில் ஒருவர் கூட கிடையாது.

நூல் : பத்குல் பாரீ (பாகம் 11 பக்கம் 78)

### அந்நியப் பெண் என்பதை ஏற்றுக் கொண்டு, மாற்று விளக்கம் கொடுக்க முயன்ற இப்னு ஹஜர் அவர்கள்.

மேலே நாம் சொன்ன விபரங்களையும் இன்னும் பல தகவல்களையும் ஒன்றுதிரட்டிய இப்னு ஹஜர் அஸ்கலானீ அவர்கள் கூட இவர்கள் கூறுகின்ற இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு சிற்றன்னை ஆவார் என்ற கருத்து சரியானதாக ஆதாரப்பூர்வமானதாக இருந்தால் இதை இப்னு ஹஜர் ஏற்றிருப்பார். இது சிலர்களின் யூகம் என்பதால் இதை அவர் ஏற்றுக்கொள்ளாமல் இந்தச் செய்திக்கு வேறொரு விளக்கத்தைக் கூறுகிறார்.

وأحسن الأجوبة دعوى الخصوصية ولا يردها كونها لا تثبت إلا بدليل لان الدليل على ذلك واضح والله أعلم

இப்னு ஹஜர் அஸ்கலானீ கூறுகிறார் :

அந்நியப் பெண்ணாக இருந்தாலும் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டது அவர்களுக்கு மாத்திரம் பிரத்யேகமானது என்ற வாதம்

தான் இந்த செய்திக்குரிய சிறந்த பதிலாகும்.

நூல் : பத்குல் பாரீ (பாகம் 11 பக்கம் 78)

(فتح الباري – ابن حجر – (٩ / ٣٠٢

والذي وضح لنا بالأدلة القوية أن من خصائص النبي صلى الله عليه و سلم جواز الخلوة بالاجنبية والنظر إليها وهو الجواب الصحيح عن قصة أم حرام بنت ملحان في دخوله عليها ونومه عندها وتفليتها رأسه ولم يكن بينهما محرمية ولا زوجيه

இப்னு ஹஜர் அஸ்கலானீ கூறுகிறார் :

அந்நியப் பெண்ணுடன் தனித்திருப்பதும் பார்ப்பதும் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமாக அனுமதிக்கப்பட்ட விசயம் என்பது வலுவான ஆதாரங்கள் மூலம் நமக்குத் தெளிவாகியுள்ளது.

நபி (ஸல்) அவர்களுக்கும் உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கும் இடையே மஹ்ரமான உறவோ மனைவி என்ற உறவோ இல்லாத நிலையில் அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களிடம் சென்றது அவர்களுக்கு அருகில் உறங்கியது உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் தலையில் பேண்பார்த்து விட்டது தொடர்பாக வரும் சம்பவத்திற்கு இது நபிக்கு மட்டும் உரிய பிரத்யேகமான விசயம் என்பதே சரியான பதிலாகும்.

நூல் : பத்குல் பாரீ (பாகம் 9 பக்கம் 203)

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மனைவியோ மஹ்ரமான உறவோ இல்லை என தெள்ளத் தெளிவாக இப்னு ஹஜர் தெளிவுபடுத்தியுள்ளார். இதைச் சரியாக படிக்காத சிலர் இப்னு ஹஜர் உம்மு ஹராம் நபியின் சிற்றன்னை என்று கூறியதாக பொய்யான தகவலைக் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் இப்னு ஹஜர் அவர்களுக்கு எதிரான கருத்தையே கூறியுள்ளார்.

இங்கே ஒரு விசயத்தை நாம் சுட்டிக்காட்டுகிறோம். உம்மு ஹராம் (ரலி) நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினர் இல்லை என இப்னு ஹஜர் கூறினார் என்ற தகவலுக்காகவே இப்னு ஹஜர் அவர்களின் இந்தக் கூற்றை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அந்நியப் பெண்ணாக இருந்தாலும் நபி மட்டும் இது போன்று நடந்துகொள்ளலாம் என்று அவர் கூறிய கருத்தில் நமக்கு உடன்பாடு இல்லை. இந்தக் கருத்தைப் பொறுத்தவரை உம்மு ஹராம் (ரலி) நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினராக இருந்தார் என்று கூறுபவரின் கூற்றை விட மோசமானதாகவே நாம் கருதுகிறோம்.



ஒழுக்கம் தொடர்பான விசயங்களில் நபி (ஸல்) அவர்கள் மற்ற மனிதர்களை விட மிகவும் பேணுதலாக வாழ்ந்தவர்கள். அவர்கள் ஒழுக்கமாகவும் நெறிமுறைகளைப் பேணியும் வாழ்ந்ததைப் போல் வேறு யாரும் வாழ முடியாது. அப்படியிருக்க இந்த விசயத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகை என்ற கூற்றுக்கு இடமே இல்லை.

**அறிஞர் அய்னீ**

புகாரிக்கு இன்னொரு விரிவுரை எழுதிய அறிஞர் அய்னி என்பவரும் உம்மு ஹராம் (ரலி) தொடர்பான இந்தச் செய்திக்கு அந்நியப் பெண்ணாக இருந்தாலும் இது போன்று நடந்து கொள்வது நபிக்கு மட்டும் உரிய சிறப்புச் சலுகை என்று பதிலளித்துள்ளார்.

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமானவர் என்ற கூற்றை இவரும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காகவே இந்தத் தகவலை குறிப்பிடுகின்றோம்.

(عمدة القاري شرح صحيح البخاري – (٩٢ / ٢٣٣

والجواب الصحيح أن من خصائص النبي جواز الخلوة بالأجنبية والنظر إليها كما ذكرنا في قصة أم حرام بنت ملحان في دخوله عليها ونومه عندها وتفليها رأسه ولم يكن بينهما محرمية ولا زوجية

நபி (ஸல்) அவர்களுக்கும் உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கும் இடையே மஹ்ரமான உறவோ மனைவி என்ற உறவோ இல்லாத நிலையில் அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களிடம் சென்றது அவர்களுக்கு அருகில் உறங்கியது உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் தலையில் பேன்பார்த்து விட்டது தொடர்பாக வரும் சம்பவத்திற்கு இது நபிக்கு மட்டும் உரிய பிரத்யேகமான விசயம் என்பதே சரியான பதிலாகும்.

நூல் : உம்ததுல் காரிஃ (பாகம் 29 பக்கம் 332)

**வம்சா வழியை அறிந்தவர்கள் உண்மையை அறிவார்கள்**

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு வம்சாவழி மூலமாகவோ பால் குடி உறவின் மூலமாகவோ சிற்றன்னையாக இருந்தார்கள் என்ற கருத்தை இப்னுல் முலக்கன் என்ற அறிஞரும் வலுவாக மறுத்துள்ளார்.

நபி (ஸல்) அவர்களின் வம்சா வழியையும் உம்மு ஹராம் (ரலி) அவர்களின் வம்சா வழியையும் அறிந்தவர் இப்படி சொல்ல முடியாது. இந்த அறிவு இல்லாதவரே இவ்வாறு கூறுவார் என இந்த அறிஞர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நபி (ஸல்) அவர்களுக்கும் உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கும் இடையே மஹ்ரமான உறவு இருக்கலாம் எனக் கூறிய இப்னு அப்தில் பர் அவர்களின் கூற்றை எடுத்து சுட்டிக்காட்டி விட்டு இதற்கு மறுப்பாகவே இவ்வாறு இந்த அறிஞர் கூறுகிறார்.

(غاية السول في خصائص الرسول صلى الله عليه وسلم - (١ / ١٥
فقال ابن عبد البر وغيره كانت إحدى خالاته من
الرضاعة وقال آخرون بل كانت خالته لأبيه أو لجده لأن عبد المطلب كانت أمه من بني النجار هذا كلامه
وما ذكره من الاتفاق على أنها
كانت محرما له فيه نظر ومن أحاط علما بنسب النبي _صلى الله عليه وسلم} ونسب أم حرام علم أنه لا محرمية بينهما

உம்மு ஹராம் (ரலி)அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினராக இருந்தார்கள் என்பதில் ஏகோபித்த கருத்து உள்ளது என்ற கூற்று ஆட்சேபனைக்குரியது. நபி (ஸல்) அவர்களின் வம்சா வழியையும் உம்மு ஹராம் (ரலி) அவர்களின் வம்சா வழியையும் முழுமையாக அறிந்தவர் இவ்விருவருக்கிடையே எந்த மஹ்ரமான உறவும் இல்லை என்பதை அறிவார்.

நூல் : காயத்துல் சவ்ல் (பாகம் 1 பக்கம் 51)

எனவே உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மஹ்ரமான உறவினர் என்ற கருத்து இந்த தவறான ஹதீஸை நியாயப்படுத்துவதற்காக தரப்பட்ட ஆதாரமற்ற சுய கருத்தாகும். இதனடிப்படையில் குறித்த செய்தியை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

**மடியில் உறங்கினார்களா?**

அடுத்து உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மடியில் உறங்கியதாக எந்த ஹதீஸிலும் வரவில்லை. ஹதீஸில் இல்லாததை நாம் இட்டுக்கட்டுவதாக விமர்சனம் செய்கிறார்கள்.

இங்கே இவர்களின் முரண்பாட்டைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. உம்மு ஹராம் (ரலி) அவர்களின் நபி (ஸல்) அவர்களுக்கு சிற்றன்னையாக இருந்தார்கள் என்பதற்கு இவர்கள் எந்த அறிஞரின் கூற்றை சுட்டிக்



காட்டினார்களோ அதே அறிஞர் தான் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களின் மடியில் தலை வைத்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

இப்னு அப்தில் பர் இப்னு வஹப் மற்றும் இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ ஆகியோர் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களின் மடியில் தலை வைத்து உறங்கினார்கள் என்ற கருத்தை கூறியுள்ளனர்.

(فتح الباري - ابن حجر - (١١ / ٨٧

وقد أشكل هذا على جماعة فقال بن عبد البر أظن ان أم حرام أرضعت رسول الله صلى الله عليه و سلم أو أختها أم سليم فصارت كل منهما أمه أو خالته من الرضاعة فلذلك كان ينام عندها وتنال منه ما يجوز للمحرم أن يناله من محارمه ثم ساق بسنده إلى يحيى بن إبراهيم بن مزين قال انما استجاز رسول الله صلى الله عليه و سلم أن تفلي أم حرام رأسه لأنها كانت منه ذات محرم من قبل خالاته لأن أم عبد المطلب جده كانت من بني النجار ومن طريق يونس بن عبد الأعلى قال قال لنا بن وهب أم حرام إحدى خالات النبي صلى الله عليه و سلم من الرضاعة فلذلك كان يقيل عندها وينام في حجرها وتفلي رأسه قال بن عبد البر

இப்னு வஹப் கூறுகிறார் :

உம்மு ஹராம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு பால்குடி உறவின் மூலம் சிற்றன்னை ஆவார். எனவே தான் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கு அருகில் உறங்கக் கூடியவராகவும் அவர்களின் மடியில் உறங்கக் கூடியவராகவும் இருந்தார்கள். உம்மு ஹராம் (ரலி) நபிக்கு பேன் பார்த்தும் விட்டார்கள்.

பத்குல் பாரீ : பாகம் 11 பக்கம் : 78

لكنه لا يدفع الاشكال من أصله لبقاء الملامسة في تفلية الرأس وكذا النوم في الحجر وأحسن الأجوبة
دعوى الخصوصية ولا يردها كونها لا تثبت إلا بدليل لان الدليل على ذلك واضح والله أعلم

இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ கூறுகிறார் :

நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களிடம் செல்லும் போது அங்கே அவர்களுடன் பணியாள், குழந்தை, கணவன் இவர்கள் யாராவது இருந்திருக்கலாம் என்று சிலர் விளக்கம் தருகின்றார்கள். இந்த விளக்கம் இந்த ஹதீஸில் உள்ள பிரச்சனையை முழுமையாக நீக்காது. ஏனென்றால் பேன் பார்க்கும் போதும் மடியில் உறங்கும் போதும் ஒருவரையொருவர் உரசும் நிலை இருந்துள்ளது.

பத்குல் பாரீ : பாகம் 11 பக்கம் : 78

எனவே இந்த அறிஞர்கள் ஹதீஸில் இல்லாததைத் துணிந்து இட்டுக்கட்டி விட்டார்கள் என்று நம்மை விமர்சனம் செய்தது போல் இவர்களையும் விமர்சனம் செய்வார்களா?

புகாரி முஸ்லிம் போன்ற ஹதீஸ் நூற்களில் இடம்பெற்ற அறிவிப்புக்களில் மடியில் உறங்கினார்கள் என்ற வாசகம் நேரடியாக வராவிட்டாலும் இந்தக் கருத்து தொனிக்கும் வகையில் வாசகங்கள் இடம்பெற்றுள்ளன.

நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கு அருகில் உறங்கினார்கள் என்று புகாரியில் 2800 வது செய்தியில் கூறப்பட்டுள்ளது. முஸ்லிம் 3875 வது அறிவிப்பில் உம்மு ஹராம் (ரலி) அவர்களிடத்தில் தன் தலையை வைத்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் பல அறிவிப்புக்களில் அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பேன் பார்த்து விட்டார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களிடத்தில் தலை வைத்தார்கள். உம்மு ஹராம் (ரலி) பேன் பார்த்தார்கள் என்பதை கவனத்தில் கொண்டே இந்த அறிஞர்கள் மடியில் தலை வைத்தார்கள் என்று கூறியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மடியில் தலை வைத்தார்கள் என்ற தகவலுக்கு நேரடியாக ஆதாரம் இல்லை என்றாலும் இதனால் இந்த ஹதீஸை நியாயப்படுத்த முடியாது. அந்நியப் பெண்ணுக்கு அருகில் உறங்கலாமா? அந்நியப் பெண் பேன் பார்த்து விடலாமா? அந்நியப் பெண் இருக்கும் இடத்திற்குச் செல்லலாமா? ஆகிய கேள்விகளுக்கு இவர்களிடம் எந்தப் பதிலும் இல்லை.

பேன் பார்த்து விடும் போது தலையைத் தொடாமல் பேன் பார்க்க முடியுமா என்ன? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும் போது கண்டிப்பாக இது நபியவர்களுடன் தொடர்புபட்ட செய்தியல்ல என்பதை சந்தேகமற நாம் அறியலாம்.

இன்னும், உம்மு ஹராம் (ரலி) தொடர்பாக வரும் ஹதீஸில் குர்ஆனுக்கு முரணில்லாத வேறு பல செய்திகளும் கூறப்பட்டுள்ளது. அவற்றை நாம் மறுக்கவில்லை.

உம்மு ஹராம் (ரலி) அவர்களுக்கும் நபி (ஸல்) அவர்களுக்கும் மஹ்ரமான உறவு கிடையாது என்கிற போது நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹராம் (ரலி) அவர்களிடம் முன்பு சொன்னவாறு நடந்தார்கள் என்று கூறினால் இது நபி (ஸல்) அவர்களுக்கு இழுக்கில்லையா? நபி (ஸல்) அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்திருப்பார்களா? என்று சிந்திக்க வேண்டும்.



மேலும் இந்தத் தகவலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இவர்கள் சொல்வதால் சமுதாயத்திற்கு என்ன நன்மை ஏற்படப்போகின்றது? இதைப் படித்த பின் மக்களுக்கு ஈமானும் இறையச்சமும் கூடப்போகின்றதா? அல்லது மறுமையில் அல்லாஹ் நம்மிடம் உம்மு ஹராம் (ரலி) நபி (ஸல்) அவர்களுக்கு பேன் பார்த்து விட்டதையும், அவர்களுக்கு அருகில் உறங்கியதையும் ஏன் நம்பவில்லை என்று கேள்வி கேட்பானா?

தவறுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று ஒரு வார்த்தையில் கூறுவதை விட்டுவிட்டு இதை நியாயப்படுத்துவதற்காக காலத்தைச் செலவழித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

ஒரு நன்மையும் இல்லாத நபியின் கண்ணியத்திற்கு பங்கம் விளைவிக்கும் கருத்தை புகாரியில் இருந்தாலும் நாம் நம்ப முடியாது. இமாம் புகாரியின் கண்ணியத்தை விட நபி (ஸல்) அவர்களின் கண்ணியம் மலையளவு உயர்ந்தது.

ஹதீஸ் துறை அறிஞர்கள் இதைத் தவறுதலாக பதிவு செய்துவிட்டார்கள் என்று சொல்வதால் இந்த அறிஞர்களின் கண்ணியம் சற்றும் குறையாது. காரணம் அவர்களின் முயற்சியால் இந்த சமுதாயத்திற்கு கிடைத்த நன்மைகள் அதிகமானது. மனிதர்கள் எல்லாம் தவறிழைப்பவர்களே.

நமக்குத் தவறு என்று தெரிவதை தயுவுதாட்சணியமின்றி தவறு என்று சுட்டிக்காட்டுவோம். மற்றவர்களின் மீது குருட்டு நம்பிக்கை வைக்கமாட்டோம். இது தான் தவ்ஹீத் ஜமாஅத்தின் நிலைபாடு.

ஏன்? எதற்கு? இது மாதிரியான செய்திகளை தவ்ஹீத் ஜமாஅத்தினர் மறுக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்துகொண்டால் நிச்சயம் இதை ஒரு குறையாக யாரும் கூறமாட்டார்கள். நிறையாகவே பார்ப்பார்கள். அல்லாஹ்விற்கே புகழனைத்தும்.

# மாடு உழவு செய்வதற்காக மட்டும் தான் படைக்கப்பட்டதா?

குர்ஆனுக்கு முரண்படும் செய்திகளின் இன்னுமோர் பிரதான செய்தியாக இருப்பது மாடு பேசிய செய்தி பற்றிய ஹதீஸாகும். இது பற்றி இங்கு விபரமாகப் பார்ப்போம்.

(صحيح البخاري (4/ 174

3471 – حَدَّثَنَا عَلِيُّ بْنُ عَبْدِ اللَّهِ، حَدَّثَنَا سُفْيَانُ، حَدَّثَنَا أَبُو الزِّنَادِ، عَنِ الأَعْرَجِ، عَنْ أَبِي سَلَمَةَ، عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: صَلَّى رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، صَلاَةَ الصُّبْحِ، ثُمَّ أَقْبَلَ عَلَى النَّاسِ، فَقَالَ: " بَيْنَا رَجُلٌ يَسُوقُ بَقَرَةً إِذْ رَكِبَهَا فَضَرَبَهَا، فَقَالَتْ: إِنَّا لَمْ نُخْلَقْ لِهَذَا، إِنَّمَا خُلِقْنَا لِلْحَرْثِ " فَقَالَ النَّاسُ: سُبْحَانَ اللَّهِ بَقَرَةٌ تَكَلَّمُ، فَقَالَ: " فَإِنِّي أُومِنُ بِهَذَا، أَنَا وَأَبُو بَكْرٍ، وَعُمَرُ، – وَمَا هُمَا ثَمَّ – وَبَيْنَمَا رَجُلٌ فِي غَنَمِهِ إِذْ عَدَا الذِّئْبُ، فَذَهَبَ مِنْهَا بِشَاةٍ، فَطَلَبَ حَتَّى كَأَنَّهُ اسْتَنْقَذَهَا مِنْهُ، فَقَالَ لَهُ الذِّئْبُ هَذَا: اسْتَنْقَذْتَهَا مِنِّي، فَمَنْ لَهَا يَوْمَ السَّبُعِ، يَوْمَ لاَ رَاعِيَ لَهَا غَيْرِي " فَقَالَ النَّاسُ: سُبْحَانَ اللَّهِ ذِئْبٌ يَتَكَلَّمُ، قَالَ: "فَإِنِّي أُومِنُ بِهَذَا أَنَا وَأَبُو بَكْرٍ وَعُمَرُ، – وَمَا هُمَا ثَمَّ –" ، وحَدَّثَنَا عَلِيٌّ، حَدَّثَنَا سُفْيَانُ، عَنْ مِسْعَرٍ، عَنْ سَعْدِ بْنِ إِبْرَاهِيمَ، عَنْ أَبِي سَلَمَةَ، عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: بِمِثْلِهِ

(صحيح البخاري (5/ 5

**3663** – حَدَّثَنَا أَبُو اليَمَانِ، أَخْبَرَنَا شُعَيْبٌ، عَنِ الزُّهْرِيِّ، قَالَ: أَخْبَرَنِي أَبُو سَلَمَةَ بْنُ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَوْفٍ، أَنَّ أَبَا هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: " بَيْنَمَا [ص:6] رَاعٍ فِي غَنَمِهِ عَدَا عَلَيْهِ الذِّئْبُ، فَأَخَذَ مِنْهَا شَاةً فَطَلَبَهُ الرَّاعِي، فَالْتَفَتَ إِلَيْهِ الذِّئْبُ فَقَالَ: مَنْ لَهَا يَوْمَ السَّبُعِ، يَوْمَ لَيْسَ لَهَا رَاعٍ غَيْرِي؟ وَبَيْنَمَا رَجُلٌ يَسُوقُ بَقَرَةً قَدْ حَمَلَ عَلَيْهَا، فَالْتَفَتَتْ إِلَيْهِ فَكَلَّمَتْهُ، فَقَالَتْ: إِنِّي لَمْ أُخْلَقْ لِهَذَا وَلَكِنِّي خُلِقْتُ لِلْحَرْثِ " قَالَ النَّاسُ: سُبْحَانَ اللَّهِ، قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: "فَإِنِّي أُومِنُ بِذَلِكَ، وَأَبُو بَكْرٍ، وَعُمَرُ بْنُ الخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا"

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸுப்ஹுத் தொழுகை தொழுதார்கள். பிறகு மக்களை நோக்கி, "(பனூ இஸ்ராயீல் சமுதாயத்தில்) ஒரு மனிதர் ஒரு பசுமாட்டை ஓட்டிச் சென்று கொண்டிருக்கையில் அதில் ஏறிச் சவாரி செய்து அதை அடித்தார். அப்போது அந்தப் பசுமாடு, **"நாங்கள் இதற்காக (மனிதர்களாகிய உங்களைச் சுமந்து செல்வதற்காகப்) படைக்கப்படவில்லை. நாங்கள் படைக்கப்பட்டது (நிலத்தில்) உழுவதற்காகத் தான்**" என்று கூறியது. எனச் சொன்னார்கள். மக்கள், "சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் தூயவன்!) பசுமாடு பேசுமா?" என்று (வியந்து போய்க்) கூறினார்கள். இதைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள், "நானும், அபூபக்ரும், உமரும் இதை நம்புகிறோம்" என்று சொன்னார்கள். அப்போது அங்கே அபூபக்ர் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் இருக்கவில்லை.



தொடர்ந்து, நபி (ஸல்) அவர்கள், "ஒரு மனிதர் தன் ஆடுகளுக்கிடையே (அவற்றை மேய்த்துக் கொண்டு) இருந்தபோது ஓநாய் (ஆட்டு மந்தைக்குள் புகுந்து) ஓடி, ஆட்டைத் தாக்கிக் கவ்விக்) கொண்டு சென்று விட்டது. அந்த ஆட்டைத் தேடி, ஓநாயிடமிருந்து அவர் காப்பாற்றி விட்டார். உடனே, அந்த ஓநாய் அவரைப் பார்த்து, "இவனே! இதை என்னிடமிருந்து இன்று நீ காப்பாற்றி விட்டாய். ஆனால், கொடிய விலங்குகள் ஆதிக்கம் செலுத்தும் (உலக முடிவு) நாளில் இதற்கு (பாதுகாவலர்) யார் இருக்கிறார்கள்? அந்நாளில் இதற்கு என்னைத் தவிர பாதுகாவலர் யாரும் இல்லையே" என்று கூறியது" எனச் சொன்னார்கள். இதைக் கேட்ட மக்கள், "சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் தூயவன்!) ஓநாய் பேசுமா?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "நானும் அபூபக்ரும், உமரும் இதை நம்புகிறோம்" என்று சொன்னார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் அங்கே அப்போது இருக்கவில்லை.

புகாரி – 3471

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: (பனூ இஸ்ராயீல் சமுதாயத்தில்) "ஓர் ஆட்டிடையர் தன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது ஓநாய் ஒன்று அவற்றின் மீது பாய்ந்து ஓர் ஆட்டைக் கவ்விக் கொண்டு சென்றது. ஆடு மேய்ப்பவர் அதைத் துரத்திச் சென்றார். ஓநாய் அவரைத் திரும்பிப் பார்த்து, "கொடிய விலங்குகள் ஆதிக்கம் செலுத்தும் (உலக இறுதி) நாளில் இதற்கு (பாதுகாவலர்) யார்? அந்த நாளில் என்னைத் தவிர இதற்குப் பொறுப்பாளன் எவனுமில்லையே" என்று கூறியது. (இவ்வாறே) ஒரு மனிதர் ஒரு மாட்டின் மீது சுமைகளை ஏற்றிவிட்டு அதை ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்த போது, அது அவரைத் திரும்பிப் பார்த்துப் பேசியது. **"நான் இதற்காக (சுமை சுமப்பதற்காக)ப் படைக்கப்படவில்லை. மாறாக, நான் (நிலத்தை) உழுவதற்காகத் தான் படைக்கப்பட்டுள்ளேன்**" என்று அது கூறிற்று" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே மக்கள், "அல்லாஹ் தூயவன்" என்று (வியந்து) கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள், "நானும், அபூபக்ரும், உமர் பின் கத்தாபும் இதை (இந்த நிகழ்ச்சிகளை) நம்புகிறோம்" என்று சொன்னார்கள்.

"அபூபக்ர், உமர் இருவரைக் குறித்தும் அல்லாஹ் திருப்தியடைவானாக!"

(என்று அறிவிப்பாளர் பிரார்த்திக்கிறார்.)

புகாரி – 3663

மேற்கண்ட செய்திகள் புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட பல கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மாடு பேசியதை மறுக்கிறோமா?**

குறித்த செய்தியில் மாடு பேசியதாக ஒரு தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செய்தி அல்குர்ஆனுக்கு முரண்படுகின்றது என்று கூறி நாம் மறுக்கும் போது, மாடு பேசியதை இவர்கள் மறுக்கின்றார்கள் என்ற பாணியில் நமக்கு எதிராக வாதம் வைப்பவர்கள் விமர்சனம் செய்கின்றார்கள்.

மேற்கண்ட செய்தியில் மாடு பேசியது என்பதை நாம் மறுக்கவில்லை. இறைவன் நினைத்தால் மாட்டையோ, ஆட்டையோ, யானையையோ கூட பேசவைக்க முடியும். இதில் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை.

ஆகவே மேற்கண்ட செய்தியில் மாடு பேசியதா? பேசுமா? என்பது சர்ச்சையே அல்ல. மாடு பேசியதாகக் கூறப்படும் செய்தி விஷயத்தில் தான் சர்ச்சையே எழுகின்றது.

அதிராம்பட்டிணம் விவாதத்தின் போது அல்லாஹ் நாடினால் மாடும் பேசலாம். அந்த அடிப்படையில் நாங்கள் இதை மறுக்கவில்லை அது பேசியதாகக் கூறப்படும் செய்தி குர்ஆனுக்கு முரணாக உள்ளதால் தான் மறுக்கிறோம் என்று தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் பதிலளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறோம்.

**இது தொடர்பில் விரிவாக ஆராய்வோம்.**

நபி (ஸல்) அவர்கள் பஜ்ர் தொழுகைக்குப் பின்னர் நபித் தோழர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, முற்காலத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை விபரித்தார்களாம். அதில் "(பனூ இஸ்ராயீல் சமுதாயத்தில்) ஒரு மனிதர் ஒரு பசுமாட்டை ஓட்டிச் சென்று கொண்டிருக்கையில் அதில் ஏறிச் சவாரி செய்து அதை அடித்தார். அப்போது அந்தப் பசுமாடு, **"நாங்கள் இதற்காக (மனிதர்களாகிய உங்களைச் சுமந்து செல்வதற்காகப்) படைக்கப்படவில்லை. நாங்கள் படைக்கப்பட்டது (நிலத்தில்) உழுவதற்காகத் தான்**" என்று கூறியது. என நபியவர்கள் சொன்னதாக குறித்த செய்தியில் குறிப்பிடப்படுகின்றது.

மேற்கண்ட ஹதீஸில் மாட்டின் மேல் பயணம் செய்தவர் மாட்டை அடிக்கின்றார். அப்போது மாடு அந்த மனிதருடன் பேசுகின்றது. பேசும் போது நாங்கள் இதற்காக (மனிதர்களாகிய உங்களை சுமந்து செல்வதற்காகப்)



படைக்கப்படவில்லை. நாங்கள் படைக்கப்பட்டது (நிலத்தில் உழுவதற்காகத் தான்" என்று கூறியதாம்.

மாடு இப்படி பேசியாக நம்புவது புனித அல்குர்ஆனின் கருத்துக்கு நேர் முரணானதாகும். ஏனெனில் மாட்டில் பிரயாணம் செய்ய முடியும் என்று இறைவன் திருக்குர்ஆனில் தெளிவாக கூறியிருக்கும் போது நாங்கள் இதற்காக (மனிதர்களாகிய உங்களைச் சுமந்து செல்வதற்காகப்) படைக்கப்படவில்லை. நாங்கள் படைக்கப்பட்டது (நிலத்தில் உழுவதற்காகத் தான்" என்று கண்டிப்பாக மாடு சொல்லாது. சொல்லவும் முடியாது.

**கால்நடைகளை** உங்களுக்காகவே அவன் படைத்தான். அவற்றில் குளிரைத் தடுப்பவை (கம்பளி) உண்டு. பல பயன்களும் உள்ளன. அவற்றிலிருந்து சாப்பிடுகிறீர்கள். காலையில் ஓட்டிச் செல்லும் போதும், மாலையில் திரும்பும் போதும் அதில் உங்களுக்கு மதிப்பு இருக்கிறது.

பெரும் சிரமத்துடனே நீங்கள் சென்றடையும் ஊருக்கு **உங்கள் சுமைகளை அவை சுமந்து செல்கின்றன**. உங்கள் இறைவன் நிகரற்ற அன்புடையோன்: இரக்கமுள்ளவன்.

குதிரைகள், கோவேறுக்கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச் செல்லவும், மதிப்புக்காகவும் (அவன் படைத்தான்.) நீங்கள் அறியாதவற்றை (இனி) படைப்பான்.

அல்குர்ஆன் – 16:05,06,07,08

மேற்கண்ட அல்குர்ஆன் வசனங்களில் மனிதர்களுக்காகவே கால்நடைகளை இறைவன் படைத்தாகக் கூறிவிட்டு, உங்கள் சுமைகளை அவை சுமந்து செல்கின்றன" என்று குறிப்பிடுவதின் மூலம், கால்நடைகள் உழவு செய்வதற்காக பயன்படுவதைப் போல சுமைகளைச் சுமந்து செல்வதற்காகவும் பயன்படுகின்றன என்பதை இறைவன் நமக்கு தெளிவுபடுத்துகின்றான்.

நீங்கள் **ஏறிச் செல்வதற்காக** உங்களுக்குக் **கால்நடைகளை** அல்லாஹ்வே உருவாக்கினான். அவற்றிலிருந்து உண்ணுகிறீர்கள்.

அவற்றில் உங்களுக்கு (வேறு) பயன்களும் உள்ளன. உங்கள் உள்ளங்களில் உள்ள தேவையை அவற்றின் மீது (ஏறிச் சென்று) அடைந்து கொள்கிறீர்கள். அவற்றின் மீதும், கப்பல்கள் மீதும் சுமக்கப்படுகிறீர்கள்.

அல்குர்ஆன் – 40:79,80

கால்நடைகளை இறைவன் படைத்ததின் நோக்கங்களில் ஒன்றாக ஏறிப் பயணம் செய்வதையும் அல்லாஹ் இங்கு தெளிவாகக் குறிப்பிடுகின்றான்.

அவனே ஜோடிகள் அனைத்தையும் படைத்தான். கப்பல்களிலும், **கால்நடைகளிலும் நீங்கள் ஏறிப் பயணம் செய்வதையும் உங்களுக்காக ஏற்படுத்தினான்.**

நீங்கள் **அதன் முதுகுகளில் ஏறிச் செல்வதற்காகவும்,** ஏறும் போது உங்கள் இறைவனின் அருட்கொடையை நினைப்பதற்காகவும், "எங்களுக்கு இவற்றை வசப்படுத்தித் தந்தவன் தூயவன். நாங்கள் இதற்குச் சக்தி பெற்றோராக இல்லை. நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்வோர்" என்று நீங்கள் கூற வேண்டுமென்பதற்காகவும் (அவற்றை வழங்கினான்).

அல்குர்ஆன் - 43:12,13,14

மேலுள்ள வசனத்தில் கால்நடைகளில் ஏறிப் பயணம் செய்வதற்காக அவற்றை படைத்ததாகக் குறிப்பிடும் இறைவன், கால்நடைகளில் நாம் ஏறி அமரும் பகுதியை குறிப்பிடும் போது "அதன் முதுகுகளில் ஏறிச் செல்வதற்காகவும்" என்று தெளிவான வார்த்தையின் மூலம் குறிப்பிடுகின்றான்.

இப்படி குர்ஆனில் பல இடங்களில் கால்நடைகளின் மேல் ஏறிப் பயணம் செய்யலாம் என்பதை இறைவன் தெளிவுபடுத்தியிருக்கும் போது, மாட்டின் மீது ஏறி பயணம் செய்தவரிடம் நாங்கள் உழவு செய்வதற்காகத் தான் படைக்கப்பட்டுள்ளோம். ஏறிப் பயணம் செய்வதற்காக அல்ல என்று மாடு எவ்வாறு சொல்லியிருக்கும்?

அப்படி மாடு சொல்லியது என்று நாம் ஏற்றுக் கொள்வது திருக்குர்ஆனில் தெளிவான கருத்துக்கு நேரடி மாற்றமானதாகும்.

ஆகவே இந்தச் செய்தியை நபியவர்கள் சொல்லவில்லை என்று முடிவெடுப்பதே ஈமானுக்கு நெருக்கமானதாகும்.

**சுமை சுமக்காத கால்நடைகளில் மாடு அடங்குமா?**

கால்நடைகளில் சுமப்பவற்றையும், **சுமக்காதவற்றையும்** (அவன் படைத்தான்). அல்லாஹ் உங்களுக்கு வழங்கியதிலிருந்து உண்ணுங்கள்! ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்! அவன் உங்களுக்குப் பகிரங்க எதிரியாவான்.

அல்குர்ஆன் 6:142

மேற்கண்ட அல்குர்ஆன் வசனத்தை ஆதாரமாக எடுத்துக் கொண்ட



சிலர் கால்நடைகளில் சுமப்பவற்றையும், சுமக்காதவற்றையும் இறைவன் படைத்திருக்கின்றான் என்று கூறி சுமக்காத கால்நடைகளில் ஒன்றாக மாடு உள்ளது என வாதிட முற்படுகின்றனர்.

இது முற்றிலும் தவறான, குர்ஆனை சரியாகஜ புரிய மறுப்பவர்களின் கற்பனை சிந்தனையாகும்.

பொதுவாகவே கால்நடைகள் என்று குர்ஆன் குறிப்பிடுவது ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றைத் தான் என்பது அனைவரும் ஒப்புக் கொண்ட ஒரு விதியாகும். ஒட்டகத்தில் பயணம் செய்யலாம் என்றால் மாட்டில் பயணம் செய்வதை யாரும் மறுக்க முடியாது.

இன்னொரு விஷயம் என்னவென்றால் ஆதி காலத்தில் இருந்து இன்றுவரை மாடு என்பது சுமைகளைச் சுமந்து செல்லும் ஒரு கால்நடையாகவே மனிதர்கள் பயன்படுத்தி வருகின்றார்கள்.

சுமை சுமக்காத கால்நடைகள் பட்டியலில் மாட்டை யாராவது சேர்த்தால் மாட்டு வண்டிகள் ஓட்டுவது. மாட்டின் மேல் சுமைகளை ஏற்றுவது அனைத்தையும் ஹராம் என்று பத்வா கொடுக்க வேண்டிவரும்.

சுமப்பவை, சுமக்காதவை என்று இரண்டு வகையான கால்நடைகள் உண்டு என்று இறைவன் குறிப்பிடுவதை நடைமுறையில் காலா காலமாக எவை சுமக்கின்றன, எவை சுமக்கவில்லை என்பதை வைத்தே முடிவெடுக்க வேண்டுமே தவிர அதை விடுத்து மாடு இதில் அடங்காது என்று வாதிடுவது மனோ இச்சையாகும்.

இதனைக் கீழுள்ள திருமறை வசனத்திலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

"இவை தடை செய்யப்பட்ட கால்நடைகளும், பயிர்களுமாகும். நாங்கள் நாடியோரைத் தவிர (மற்றவர்கள்) இதை உண்ண முடியாது" என்று அவர்களாகக் கற்பனை செய்து கூறுகின்றனர். **சில கால்நடைகளில் சவாரி செய்வது தடுக்கப்பட்டுள்ளது எனவும், சில கால்நடைகள் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூற மாட்டோம் எனவும் அவன் மீது இட்டுக்கட்டிக் கூறுகின்றனர்.** அவர்கள் இட்டுக்கட்டிக் கொண்டிருந்ததால் அவர்களை அவன் தண்டிப்பான்.

அல்குர்ஆன் 6:138

**நபியும், அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோர் இந்தச் செய்தியை நம்பினார்களா?**

மேலே மாடு பேசிய செய்தியை உண்மை என்று வாதிடுவோர். குறித்த செய்தியின் இன்னொரு பகுதியை ஆதாரமாக முன் வைக்கின்றார்கள்.

அதாவது மாடு இவ்வாறெல்லாம் பேசியது என்பதை நபியவர்கள் நபித்தோழர்களுக்கு விபரித்த நேரத்தில் நபித்தோழர்கள் "சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் தூயவன்!) பசுமாடு பேசுமா?" என்று (வியந்து போய்க்) கேட்டார்களாம்.

அதற்கு பதிலளித்த நபி (ஸல்) அவர்கள் "**நானும், அபூபக்ரும், உமரும் இதை நம்புகிறோம்**" என்று சொன்னார்களாம். ஆனால் அப்போது அங்கே அபூபக்ர் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் அங்கு இருக்கவில்லை என்று குறித்த செய்தியில் இடம் பெற்றுள்ளது.

இதில் "**நானும் அபூபக்ரும் உமரும் இதை நம்புகிறோம்**" என்று நபியவர்களே கூறியிருக்கும் போது இதனை ஏன் நாம் நம்ப முடியாதா? என்று கேள்வி எழுப்புகின்றார்கள்.

இது நாம் இந்தச் செய்தி தொடர்பாக என்ன சொல்கின்றோம் என்பதை சரியாகப் புரியாத காரணத்தினால் வைக்கப்படும் வாதமாகும்.

மாடு பேசியதாக வரும் மேற்கண்ட செய்தியை நபி (ஸல்) சொல்லவும் இல்லை, அப்படியொரு சம்பவம் நடக்கவும் இல்லை என்று நாம் கூறும் போது, இதனை நபியும், அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரும் நம்பினார்கள் என்று வாதிடுவது முட்டாள்தனமானதாகும்.

இதனை நபியும், அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரும் நம்பினார்கள் என்று நபி சொன்னதாக வருவதும் பொய்யானது, நபி (ஸல்) அவர்கள் இப்படி சொல்லவில்லை. நபியின் வாழ்வில் இப்படியொரு சம்பவம் நடைபெறவேயில்லை என்பதே நமது வாதமாகும்.

இதனைப் புரிந்து கொள்ளாமலேயே இந்த வாதத்தை முன் வைக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டுக்கதையை எப்படியாவது நியாயப்படுத்த நினைக்கும் வழிகேடர்கள் சிலர் இன்னமா என்ற அரபி வார்த்தையை வைத்து இலக்கண விளக்கம் கொடுத்து தங்கத் தாங்களே நகைப்புக்கு உள்ளாக்கிக் கொள்கின்றனர்.



நாம் இந்த செய்திக்குரிய விளக்கத்தை இன்னமா என்பதை வைத்துக் கொடுக்கவில்லை.

ஒருவர் மாட்டின் மீது ஏறிச் சென்ற போது இதற்காக படைக்கப்படவில்லை என்று மாடு கூறிவிட்டு நாங்கள் விவசாயத்துக்குத்தான் படைக்கப்பட்டுள்ளோம் என்றும் கூறுகிறது.

நாங்கள் இதற்காக (சவாரி செய்வதற்காக) படைக்கப்படவில்லை என்று தெளிவாக சொல்லப்பட்டதை வைத்துத்தான் நாம் நமது வாதத்தை முன்வைக்கின்றோமே தவிர, இன்னமா என்ற சொல்லை வைத்து அல்ல. இதிலிருந்தே இவர்கள் நமக்குப் பதில் சொல்வதாக நினைத்து நிழலுடன் யுத்தம் செய்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

மாடுகள் சுமப்பதற்காக படைக்கப்படவில்லை என்று குறித்த செய்தியில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதைக் கூட விளங்காதவர்களாக இவர்கள் உள்ளனர்.

## மிஃராஜ் நபித்துவத்திற்கு முன்பு நடந்ததா?

அப்துல்லாஹ் பின் அபீ நமிர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:
எங்களிடம் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் கஅபாவின் பள்ளிவாசலிருந்து (விண்ணுலகப் பயணத்திற்காக) அழைத்துச் செல்லப்பட்ட இரவைக் குறித்துப் பேசினார்கள்: **நபி (ஸல்) அவர்களுக்கு வஹீ வருவதற்கு முன்னால்** அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் தூங்கிக் கொண்டிருந்த போது (வானவர்களில்) மூன்று பேர் அவர்களிடம் வந்தார்கள். அவர்களில் முதலாமவர், “இவர்களில் அவர் யார்?” என்று கேட்டார். அவர்களில் நடுவிலிருந்தவர், “இவர்களில் சிறந்தவர்” என்று பதிலளித்தார். அவர்களில் இறுதியானவர், “இவர்களில் சிறந்தவரை (விண்ணுலகப் பயணத்திற்காக) எடுத்து வாருங்கள்” என்று சொன்னார். அன்றிரவு இது மட்டும் தான் நடந்தது. அடுத்த இரவில் நபி (ஸல்) அவர்கள் தமது உள்ளம் பார்க்கின்ற நிலையில் – (உறக்க நிலையில்) – அம்மூவரும் வந்த போது தான் அவர்களைக் கண்டார்கள். நபி (ஸல்) அவர்களின் கண்கள் இரண்டும் தான் உறங்கும்: அவர்களுடைய உள்ளம் உறங்காது. இறைத் தூதர்கள் இப்படித் தான். அவர்களின் கண்கள் உறங்கும்: அவர்களுடைய உள்ளங்கள் உறங்கமாட்டா. ஜிப்ரீல் (அலை) அவர்கள், நபி (ஸல்) அவர்களுக்குப் பொறுப்பேற்று அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வானத்தில் ஏறிச் சென்றார்கள்.

புகாரி – 3570

மேற்கண்ட செய்தியில் நபி (ஸல்) அவர்கள் தனக்கு வஹீ வருவதற்கு முன்பே அதாவது தான் நபியாவதற்கு முன்பே மிஃராஜ் பயணம் அழைத்து செல்லப்பட்டதாக மேற்கண்ட செய்தியில் குறிப்பிடப்படுகின்றது.

மிஃராஜ் பயணம் நபி (ஸல்) அவர்கள் நபியாக ஆனதன் பின்னர் தான் நடந்தது என்பதற்கு ஏராளமான ஹதீஸ்கள் ஆதாரமாக உள்ளன.

மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக முதலாவது வஹீ கொண்டு வரப்பட்ட போது தமக்கு ஏதோ நடந்துவிட்டதாக எண்ணி நபியவர்கள் அஞ்சினார்கள்.

நபியாக ஆவதற்கு முன்பே நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் அழைத்து செல்லப்பட்டிருந்தால் ஜிப்ரீல் (அலை) வந்த நேரத்தில் தமக்கு ஏதோ நடந்துவிட்டதாக நினைத்து அஞ்சியிருக்க மாட்டார்கள்.



மட்டுமன்றி மேற்கண்ட ஒரு செய்தியை உண்மை என்று நாம் ஒப்புக் கொண்டால் முதல் வஹீ தொடர்பில் இடம் பெற்றுள்ள ஏராளமான செய்திகளை மறுக்கும் நிலை உருவாகிவிடும்.

எனவே இந்தச் செய்தி புகாரியில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இது தவறான செய்திதான் என்ற முடிவுக்கு வருவதே ஹதீஸ்களை புரிந்து கொள்ளும் சரியான வழிமுறையாகும்.

**எதிர்வாதமும் நமது பதிலும்.**

இந்த செய்தியை நாம் மறுக்கும் போது சிலர் ஒரு வாதத்தை முன்வைக்கின்றார்கள்.

அதாவது குறித்த செய்தியில் இடம் பெறும் அரபி வாசகத்தைச் சரியாக புரியாத காரணத்தினால், இவர்களுக்கு அரபியில் போதிய அறிவில்லாததினால் தான் தவ்ஹீத் ஜமாஅத்தினர் இந்த ஹதீஸை மறுக்கின்றார்கள். குறித்த அரபி வாசகத்தை சரியாகப் புரிந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

குறித்த ஹதீஸின் அரபி வாசகத்தில் لَيْلَةً أُخْرَى (லைலதன் உஹ்ரா) என்று இடம் பெற்றுள்ளது. லைலதன் உஹ்ரா என்றால் அடுத்த நாள் என்று அர்த்தமல்ல வேறு ஒரு நாளில் என்று தான் அர்த்தம் ஆகவே இவர்களுக்கு போதிய அரபி அறிவில்லாததினால் இதனைத் தவறாக மொழியாக்கம் செய்து விட்டார்கள்.

**நமது பதில்**

ஒரு வாதத்திற்காக இந்த அரபிப் புலவர்கள் சொல்வதைப் போல் لَيْلَةً أُخْرَى (லைலதன் உஹ்ரா) என்ற வார்த்தைக்கு வேறு ஒரு நாள் என்று பொருள் வைத்தாலும் இந்தச் செய்தி உண்மையென்று ஆகாது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இடண்டாவது விஷயம் என்னவெனில் குறித்த செய்தியில் இடம் பெறும் لَيْلَةً أُخْرَى (லைலதன் உஹ்ரா) என்ற வார்த்தைக்கு வேறு ஒரு நாள் என்று மொழியாக்கம் செய்வது தான் சரியான மொழிபெயர்ப்பு தவ்ஹீத் ஜமாஅத் அறிஞர்களுக்கு அரபி தெரியாத காரணத்தினால் தான் இப்படி தவறாக மொழியாக்கம் செய்துள்ளார்கள் என்று வாதிடும் இந்த அரபி புலவர்களுக்கு ரஹ்மத் அறக்கட்டளை வெளியிட்டுள்ள புகாரியின் மொழியாக்கத்தையே இங்கு பார்வைக்குத் தருகின்றோம்.

(صحيح البخاري (٤/ ١٩١

3570 – حَدَّثَنَا إِسْمَاعِيلُ، قَالَ: حَدَّثَنِي أَخِي، عَنْ سُلَيْمَانَ، عَنْ شَرِيكِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي نَمِرٍ،

سَمِعْتُ أَنَسَ بْنَ مَالِكٍ، يُحَدِّثُنَا عَنْ « لَيْلَةِ أُسْرِيَ بِالنَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنْ مَسْجِدِ الكَعْبَةِ: جَاءَهُ ثَلاَثَةُ نَفَرٍ، قَبْلَ أَنْ يُوحَى إِلَيْهِ، وَهُوَ نَائِمٌ فِي مَسْجِدِ الحَرَامِ، فَقَالَ أَوَّلُهُمْ: أَيُّهُمْ هُوَ؟ فَقَالَ أَوْسَطُهُمْ: هُوَ خَيْرُهُمْ، وَقَالَ آخِرُهُمْ: خُذُوا خَيْرَهُمْ. فَكَانَتْ تِلْكَ، فَلَمْ يَرَهُمْ حَتَّى جَاءُوا لَيْلَةً أُخْرَى فِيمَا يَرَى قَلْبُهُ، وَالنَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نَائِمَةٌ عَيْنَاهُ وَلاَ يَنَامُ قَلْبُهُ، وَكَذَلِكَ الأَنْبِيَاءُ تَنَامُ أَعْيُنُهُمْ وَلاَ تَنَامُ قُلُوبُهُمْ، فَتَوَلَّاهُ جِبْرِيلُ ثُمَّ عَرَجَ بِهِ إِلَى السَّمَاءِ "

அப்துல்லாஹ் பின் அபீ நமிர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

எங்களிடம் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் கஅபாவின் பள்ளிவாசலிருந்து (விண்ணுலகப் பயணத்திற்காக) அழைத்துச் செல்லப்பட்ட இரவைக் குறித்துப் பேசினார்கள்: **நபி (ஸல்) அவர்களுக்கு வஹீ வருவதற்கு முன்னால்** அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் தூங்கிக் கொண்டிருந்த போது (வானவர்களில்) மூன்று பேர் அவர்களிடம் வந்தார்கள். அவர்களில் முதலாமவர், "இவர்களில் அவர் யார்?" என்று கேட்டார். அவர்களில் நடுவிலிருந்தவர், "இவர்களில் சிறந்தவர்" என்று பதிலளித்தார். அவர்களில் இறுதியானவர், "இவர்களில் சிறந்தவரை (விண்ணுலகப் பயணத்திற்காக) எடுத்து வாருங்கள்" என்று சொன்னார். அன்றிரவு இது மட்டும் தான் நடந்தது. **அடுத்த இரவில்** நபி (ஸல்) அவர்கள் தமது உள்ளம் பார்க்கின்ற நிலையில் – (உறக்க நிலையில்) – அம்மூவரும் வந்த போது தான் அவர்களைக் கண்டார்கள். நபி (ஸல்) அவர்களின் கண்கள் இரண்டும் தான் உறங்கும்: அவர்களுடைய உள்ளம் உறங்காது. இறைத் தூதர்கள் இப்படித் தான். அவர்களின் கண்கள் உறங்கும்: அவர்களுடைய உள்ளங்கள் உறங்கமாட்டா. ஜிப்ரீல் (அலை) அவர்கள், நபி (ஸல்) அவர்களுக்குப் பொறுப்பேற்று அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வானத்தில் ஏறிச் சென்றார்கள்.

புகாரி – 3570

புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட பல இஸ்லாமிய ஆதார நூல்களை தமிழ் மொழியில் வெளியிட்டு வரும் சென்னை ரஹ்மத் அறக்கட்டளை வெளியிட்டுள்ள புகாரி தமிழாக்கத்திலும் குறித்த ஹதீஸ்க்கு நாம் செய்ய மொழியாக்கத்தையே செய்துள்ளார்கள்.

தவ்ஹீத் ஜமாஅத் மாத்திரம் தான் இப்படி செய்தது என்று நினைத்துக் கொண்டு உளறிக் கொட்டும் இவர்கள் ரஹ்மத் அறக்கட்டளையின் மொழியாக்கத்தை பார்த்திருக்க வாய்ப்பில்லை. அவர்களும் لَيْلَةً أُخْرَى (லைலதன் உஹ்ரா) என்பதற்கு அடுத்த இரவில் என்றுதான் மொழியாக்கம் செய்துள்ளார்கள் என்பதை நாம் இந்த இடத்தில் புரிந்து கொள்ள வேண்டும்.



## விவசாயக் கருவிகளினால் இழிவு வருமா?

விவசாயம் என்பது மனித வாழ்வின் உயிர் நாடியாகும். விவசாயம் இல்லாவிட்டால் ஒரு நாடோ, நாட்டின் குடிமக்களோ உயிர்வாழவும் முடியாது. ஆகவே தான் அல்குர்ஆனும், நபி (ஸல்) அவர்களும் விவசாயத்தை மிகவும் புகழ்ந்து சொல்கின்றார்கள்.

நீங்கள் பயிரிடுவதைச் சிந்தித்தீர்களா? நீங்கள் அதை முளைக்கச் செய்கிறீர்களா? அல்லது நாம் முளைக்கச் செய்கிறோமா? நாம் நினைத்திருந்தால் அதைக் கூளமாக்கியிருப்போம். நாம் கடன் பட்டு விட்டோம்! இல்லை! நாம் தடுக்கப்பட்டு விட்டோம் என்று (கூறி) அப்போது கவலையில் ஆழ்ந்து விடுவீர்கள்.

அல்குர்ஆன் (56 : 63)

இஸ்லாமிய மார்க்கம் புகழ்ந்து சொல்லும் இவ்விவசாயம் தொடர்பில், விவசாயக் கருவிகள் இழிவானவை என்ற கருத்தில் ஒரு ஹதீஸ் இடம் பெற்றுள்ளது. குறித்த செய்தி இஸ்லாத்தின் மூல வேதமான திருமறைக் குர்ஆனின் கருத்துக்கும் நேர் முரணாக இருக்கின்றது. அது பற்றி விரிவாகப் பார்ப்போம்.

அபூ உமாமா அல்பாஹிலீ (ரலி) அவர்கள் ஒரு வீட்டில் ஏர் கலப்பையையும் மற்றும் சில விவசாயக் கருவிகளையும் கண்டார்கள். உடனே அவர்கள் இந்தக் கருவி ஒரு சமூகத்தினரின் வீட்டில் புகும் போது அந்த வீட்டில் அல்லாஹ் இழிவைப் புகச் செய்யாமல் இருப்பதில்லை என நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : முஹம்மத் பின் ஸியாத்
நூல் : புகாரி (2321)

இதே ஹதீஸ் இமாம் தப்ரானீ அவர்கள் தொகுத்த முஸ்னது ஷாமிய்யீன் என்ற நூலில் கூடுதலான சில வாசகங்களுடன் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அபூ உமாமா (ரலி) அவர்கள் கலப்பையையும் இன்னும் சில விவசாயக் கருவிகளையும் பார்த்த போது நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்தக் கருவிகள் எந்த ஒரு கூட்டத்தாரின் வீட்டில் நுழைந்தாலும் அவர்கள் தங்களுக்குத் தானே இழிவை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருப்பதில்லை. அந்த இழிவு மறுமைநாள் வரைக்கும்

அவர்களை விட்டும் அகலாது.

அறிவிப்பவர் : முஹம்மத் பின் ஸியாத்

நூல் : முஸ்னது ஷாமிய்யீன் பாகம் : 2 பக்கம் : 6 ஹதீஸ் எண் : 816

அபூ உமாமா அல்பாஹிலீ (ரலி) அவர்கள் ஒருவரின் வீட்டில் ஏர் கலப்பையை (விவசாயக் கருவிகளை) பார்த்ததும் "இந்தக் கருவி இருக்கும் வீட்டில் அல்லாஹ் இழிவைப் புகச் செய்துவிடுவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாகத் தெரிவிக்கின்றார்கள்.

அபூ உமாமா (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பின் பிரகாரம் விவசாயம் செய்வது இழிவுக்குரிய அல்லாஹ்வின் தண்டனைக் குரிய குற்றமாக நபியவர்கள் கூறுவதாக ஆகின்றது. விவசாயக் கருவிகளை வீட்டில் வைத்திருப்பது இழிவை நமக்கு நாமே தேடிப் பெற்றுக் கொள்வதற்கு சமனானதாக மேற்கண்ட செய்தி தெரிவிக்கின்றது.

உலக மக்களின் உயிர்நாடியாக இருக்கின்ற விவசாயத்தினை செய்வதற்கு பயன்படும் கருவிகள் வீட்டில் இருந்தால் இழிவு ஏற்படும் என்றால், ஒரு மண்வெட்டியைக் கூட ஒருவரும் வீட்டில் வைத்துக் கொள்ள முடியாத நிலை உருவாகிவிடும்.

இப்படியான ஒரு செய்தியை நபி (ஸல்) அவர்கள் கூறுவார்களா என்று முதலில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இஸ்லாமியர்கள் மாத்திரம் வாழும் ஒரு நாட்டில் இந்த ஹதீஸ் நடைமுறைப்படுத்தப்பட்டால் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். விவசாயம் செய்வதற்கு எந்த முஸ்லிமும் முன்வரவும் மாட்டான். அரசும் அதனை செய்யச் சொல்ல முடியாத நிலை உருவாகும்.

**மதீனா வாசிகளின் நிலை என்னவாகும்?**

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த மதீனா நகரும், மக்கா நகரும் விவசாயத்துடன் தொடர்பான இரண்டு நகரங்களேயாகும். மதீனா நகர் பேரீச்சம் பழ விளைச்சலுக்கு பெயர் போன நகராகும். இப்படியான நிலையில் மதீனா ஸஹாபாக்களின் நிலையை சிந்தித்துப் பாருங்கள்.

விவசாயக் கருவி இருக்கும் வீட்டில் இழிவுதான் வரும் என்றால் மதீனா நபித் தோழர்களின் வீடுகளின் நிலை என்னவாகியிருக்கும்? அவர்கள் விவசாயக் கருவிகளை வைத்திருந்தார்களே? அப்படியானால் அவை அனைத்தும் இழிவானவையா? இந்தக் கேள்விகளுக்கு மேற்கண்ட செய்தியை உண்மை என்று நம்புபவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.



**அல்குர்ஆனுக்கு மாற்றமான செய்தி**

மேற்கண்ட ஹதீஸை உண்மை என்று ஒப்புக் கொண்டால் விவசாயத்தை வலியுறுத்தி இடம் பெற்றிருக்கும் பல திருமறைக் குர்ஆன் வசனங்களை மறுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

காரணம் விவசாயம் என்பது சிறந்த தொழில் என்று இஸ்லாம் பாராட்டிச் சொல்கின்றது. இஸ்லாம் சிறப்பித்துச் சொல்லும் இந்தத் தொழிலை இழிவானது என்று சொல்லும் செய்தி எப்படி உண்மையானதாக இருக்க முடியும்?

அதன் மூலம் பயிர்களையும், ஒலிவ மரம், பேரீச்சை, திராட்சை மற்றும் அனைத்துக் கனிகளையும் உங்களுக்காக அவன் முளைக்கச் செய்கிறான். சிந்திக்கும் சமுதாயத்திற்கு இதில் சான்று இருக்கிறது.

அல்குர்ஆன் (16 : 11)

நீங்கள் பயிரிடுவதைச் சிந்தித்தீர்களா? நீங்கள் அதை முளைக்கச் செய்கிறீர்களா? அல்லது நாம் முளைக்கச் செய்கிறோமா? நாம் நினைத்திருந்தால் அதைக் கூளமாக்கியிருப்போம். நாம் கடன் பட்டு விட்டோம்! இல்லை! நாம் தடுக்கப் பட்டு விட்டோம் என்று (கூறி) அப்போது கவலையில் ஆழ்ந்து விடுவீர்கள்.

அல்குர்ஆன் (56 : 63)

"வறண்ட பூமியை நோக்கி தண்ணீரை நாமே ஓட்டிச் செல்கிறோம்" என்பதை அவர்கள் காணவில்லையா? அதன் மூலம் பயிர்களை வெளிப்படுத்துகிறோம். அதிலிருந்து அவர்களும், அவர்களது கால்நடைகளும் சாப்பிடுகின்றனர். அவர்கள் சிந்திக்க மாட்டார்களா?

அல்குர்ஆன் (32 : 27)

அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கி அதைப் பூமியில் ஊற்றுக்களாக ஓடச் செய்கிறான் என்பதை நீர் அறியவில்லையா? பின்னர் அதன் மூலம் மாறுப்பட்ட நிறங்களைக் கொண்ட பயிர்களை வெளிப்படுத்துகிறான். பின்னர் அது காய்ந்து, மஞ்சள் நிறமாக ஆவதைக் காண்கிறீர். பின்னர் அதைச் சருகுகளாக ஆக்குகிறான். அறிவுடையோருக்கு இதில் அறிவுரை உள்ளது.

அல்குர்ஆன் (39 : 21)

இரண்டு மனிதர்களை அவர்களுக்கு உதாரணமாகக் கூறுவீராக! அவர்களில் ஒருவருக்கு இரண்டு திராட்சைத் தோட்டங்களை ஏற்படுத்தினோம்.

அவ்விரண்டுக்கும் பேரீச்சை மரங்களால் வேலி அமைத்து, அவ்விரண்டுக்கும் இடையே பயிர்களையும் ஏற்படுத்தினோம்.

அல்குர்ஆன் (18 : 32)

மேலும் கீழுள்ள வசனங்களிலும் விவசாயம் தொடர்பில் பார்க்க முடியும்.

02:22, 02:164, 06:99, 06:141, 07:57, 12:47, 13:4, 16:11, 32:27, 39:21, 56:63, 56:64

**விவசாயத்தைப் புகழ்ந்த நபியவர்கள்**

நபி (ஸல்) அவர்களும் விவசாயத்தைப் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

முஸ்லிம் ஒருவர் ஒரு மரத்தை நட்டு அல்லது விதைவிதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து (அதன் விளைச்சலை அல்லது காய்கனிகளை) ஒரு பறவையோ, ஒரு மனிதனோ அல்லது ஒரு பிராணியோ உண்டால் அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்கும்.

இதை அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஒரு முறை) நபி (ஸல்) அவர்கள் உம்மு முபஷ்ஷிர் அல்அன்சாரிய்யா (ரலி) அவர்களது பேரிச்சந்தோப்பிற்குச் சென்றார்கள். உம்மு முபஷ்ஷிர் (ரலி) அவர்களிடம் இந்த பேரீச்ச மரங்களை நட்டுவைத்தது யார்? முஸ்லிமா அல்லது இறைமறுப்பாளரா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் இல்லை ஒரு முஸ்லிம் தான் (நட்டுவைத்தார்) என்று விடையளித்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் ஒருவர் மரமொன்றை நட்டுவைத்து அல்லது விதையொன்றை விதைத்துப் பயிர் செய்து அதிலிருந்து (வரும் விளைச்சலை அல்லது கனிகளை) ஒரு மனிதனோ கால்நடையோ அல்லது ஏதேனும் ஒன்றோ உண்டால் அது அவருக்கு ஒரு தர்மமாகவே அமையும்.

அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி) அவர்கள்
நூல் : முஸ்லிம் (3160)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களில் ஒருவரது கையில் பேரீத்தங்கன்று இருக்கும் நிலையில் கியாமத் நாள் வந்துவிட்டால் அதை நட்டிவைப்பதற்கு அவரால் முடிந்த பட்சத்தில் அவர் நட்டுவைத்துவிடட்டும்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி)
நூல் : அஹ்மத் (12512)



நிலையான தர்மத்தை பெற்றுத்தரும் இத்தொழில் இழிவைத் தரும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கவே மாட்டார்கள்.

## இளைஞருக்குப் பாலூட்டுதல் - ஸாலிம் (ரலி) பற்றிய செய்தி.

அபூஹுதைபா (ரலி) அவர்களின் மனைவியால் வளர்க்கப்பட்ட ஸாலிம் எனும் இளைஞர் அபூஹுதைபாவின் வீட்டுக்குள் வந்து போய்க் கொண்டிருந்தார். தமது மனைவியுடன் ஸாலிம் வந்து பேசிக் கொண்டிருப்பது அபூஹுதைபாவிற்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது. இது பற்றி அபூஹுதைபாவின் மனைவி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறிய போது ஸாலிமுக்குப் பாலூட்டு! இதனால் தாய் மகன் உறவு ஏற்பட்டு விடும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக முஸ்லிம் 2638, 2636, 2639, 2640 ஆகிய ஹதீஸ்கள் கூறுகின்றன.

அன்னிய இளைஞர் ஒருவருக்குப் பால் கொடுக்குமாறு நபிகள் நாயகம் (ஸல்) நிச்சயம் கூறியிருக்க மாட்டார்கள். பால் ஊட்டுதல் என்பது இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்குத் தான் பொருந்தும் என்பதால் இந்தச் செய்தியை ஏற்காது நாம் விட்டு வருகிறோம். நம்மால் கண்டுபிடிக்க முடியாத ஏதோ ஒரு குறை இந்த அறிவிப்பில் இருக்கலாம். இவ்வாறு நபிகள் நாயகம் (ஸல்) கூறியிருக்க மாட்டார்கள் என்று முடிவு செய்கிறோம்.

இதைச் சரியானது என்று எவராவது வாதிட்டால் இன்றைக்கு இதன் அடிப்படையில் நடக்கலாம் என்று ஃபத்வா வழங்குவார்களா? நிச்சயம் வழங்க மாட்டார்கள்.

அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்களாக இருந்தாலும் விரல் விட்டு எண்ணக் கூடிய சில ஹதீஸ்களின் கருத்துக்கள் இஸ்லாத்தின் அடிப்படைக்கு எதிராக உள்ளன. இது போன்ற ஹதீஸ்களை நம்பி இஸ்லாத்தின் அடிப்படையையும் குர்ஆன் வசனங்களையும் மறுக்கும் நிலை ஏற்படாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இதைக் குறிப்பிடுகிறோம்.

அபூஹுதைஃபா (ரலி) அவர்களும் ஸஹ்லா (ரலி) அவர்களும் தம்பதிகளாவர். அன்சாரிப் பெண் ஒருவரிடம் அடிமையாக இருந்த ஸாலிம் என்பாரை இவ்விருவரும் தமது வளர்ப்புப் பிள்ளையாக ஆக்கிக் கொண்டனர். தத்தெடுத்துக் கொள்வது தடுக்கப்படாத காலத்தில் இது நடந்தது. பின்னர் 33:5 வசனத்தின் மூலம் தத்துப் பிள்ளைகள் சொந்தப் பிள்ளைகளாக மாட்டார்கள் என்ற சட்டம் அருளப்பட்டது.



இந்த விபரங்களை புகாரி 5088வது ஹதீஸில் காணலாம். இந்த ஹதீஸில் நமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. முஸ்லிமில் பதிவு செய்யப்பட்ட ஹதீஸில் தான் பல கேள்விகள் எழுகின்றன.

### ஹதீஸ் - 01

ـ حدّثنا عَمْرُو النّاقِدُ وَ ابْنُ أَبِي عُمَرَ: قَالاَ: حَدّثَنَا سُفْيَانُ بْنُ عُيَيْنَةَ عَنْ عَبْدِ الرّحْمَـنِ (3555) بْنِ الْقَاسِمِ عَنْ أَبِيهِ عَنْ عَائِشَةَ، قَالَتْ: جَاءَتْ سَهْلَةُ بِنْتُ سُهَيْلٍ إِلَى النّبِيّ . فَقَالَتْ: يَا رَسُولَ اللّهِ! إِنّي أَرَى فِي وَجْهِ أَبِي حُذَيْفَةَ مِنْ دُخُولِ سَالِمٍ (وَهُوَ حَلِيفُهُ). فَقَالَ النّبِيّ صلى الله عليه وسلم: أَرْضِعِيهِ قَالَتْ: وَكَيْفَ أُرْضِعُهُ؟ وَهُوَ رَجُلٌ كَبِيرٌ. فَتَبَسّمَ رَسُولُ اللّهِ وَقَالَ: قَدْ عَلِمْتُ أَنّهُ رَجُلٌ كَبِيرٌ. زَادَ عَمْرٌو فِي حَدِيثِهِ: وَكَانَ قَدْ شَهِدَ بَدْراً. وَفِي رِوَايَةِ ابْنِ أَبِي عُمَرَ: فَضَحِكَ رَسُولُ اللّهِ .

**ஸஹ்லா பின்த் ஸுஹைல் (ரலி) என்ற பெண்மணி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அல்லாஹ்வின் தூதரே, ஸாலிம் (எனது வீட்டுக்கு) வருவதில் (எனது கணவரான) அபூஹுதைஃபாவின் முகத்தில் வெறுப்பைக் காண்கிறேன் என்று கூறினார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீ அவருக்குப் பாலூட்டு என்றார்கள். அவர் பெரிய ஆளாக இருக்கும் போது அவருக்கு நான் எவ்வாறு பாலூட்டுவேன் என்று நான் கேட்டேன். இதைக் கேட்டு புன்னகை செய்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் பெரிய ஆள் என்பதை நான் அறிவேன் என்று விடையளித்தார்கள்.**

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி) அவர்கள்

நூல்–முஸ்லிம்

### ஹதீஸ் - 02

ـ وحدّثنا إِسْحَـقُ بْنُ إِبْرَاهِيمَ الْحَنْظَلِيّ وَ مُحَمّدُ بْنُ أَبِي عُمَرَ. جَمِيعاً عَنِ الثّقَفِيّ قَالَ (3556) ابْنُ أَبِي عُمَرَ: حَدّثَنَا عَبْدُ الْوَهّابِ الثّقَفِيّ عَنْ أَيّوبَ عَنِ ابْنِ أَبِي مُلَيْكَةَ عَنِ الْقَاسِمِ عَنْ عَائِشَةَ، ؛ أَنّ سَالِماً مَوْلَى أَبِي حُذَيْفَةَ كَانَ مَعَ أَبِي حُذَيْفَةَ وَأَهْلِهِ فِي بَيْتِهِمْ. فَأَتَتْ (تَعْنِي ابْنَةَ سُهَيْلٍ) النّبِيّ . فَقَالَتْ: إِنّ سَالِماً قَدْ بَلَغَ مَا يَبْلُغُ الرّجَالُ، وَعَقَلَ مَا عَقَلُوا، وَإِنّهُ يَدْخُلُ عَلَيْنَا، وَإِنّي أَظُنّ أَنّ فِي نَفْسِ أَبِي حُذَيْفَةَ مِنْ ذَلِكَ شَيْئاً. فَقَالَ لَهَا النّبِيّ أَرْضِعِيهِ تَحْرُمِي عَلَيْهِ، وَيَذْهَبِ الّذِي فِي نَفْسِ أَبِي حُذَيْفَةَ فَرَجَعَتْ فَقَالَتْ: إِنّي قَدْ أَرْضَعْتُهُ، فَذَهَبَ الّذِي فِي نَفْسِ أَبِي حُذَيْفَةَ.

**அபூஹுதைஃபாவினால் விடுதலை செய்யப்பட்டவரான ஸாலிம் அபூஹுதைஃபாவின் குடும்பத்தினருடன் அவர்களின் வீட்டில் இருந்து வந்தார். (ஒரு நாள்) ஸஹ்லா அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். ஆண்கள் அடைய வேண்டிய பருவத்தை ஸாலிம் அடைந்து விட்டார். ஆண்கள் புரிந்து கொள்வதை அவர் புரிந்து கொள்பவராகி விட்டார். அவர் எங்களிடம்**

வருகிறார். இது என் கணவர் அபூஹுதைஃபாவின் உள்ளத்தில் ஏதோ ஒன்றை ஏற்படுத்துவதாக நான் அறிகிறேன் என்று கூறினார். அவரிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு நீ பாலூட்டு, இதனால் நீ அவருக்குத் தாயாகி விடுவாய். அபூஹுதைஃபாவின் உள்ளத்தில் இருப்பது இதனால் நீங்கிவிடும் என்று கூறினார்கள். அவர் திரும்பிச் சென்று விட்டார். நான் ஸாலிமுக்கு பாலூட்டினேன். உடனே அபூஹுதைஃபாவின் உள்ளத்தில் இருந்தது போய்விட்டது என்றும் ஸஹ்லா குறிப்பிட்டார்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி) அவர்கள்

நூல்: முஸ்லிம்

**ஹதீஸ் - 03**

ـ وحدّثنا إِسْحـقُ بْنُ إِبْرَاهِيمَ وَ مُحَمّدُ بْنُ رَافِعٍ. (وَاللّفْظُ لابْنِ رَافِعٍ) قَالَ: حَدّثَنَا (3557)
عَبْدُ الرّزّاقِ: أَخْبَرَنَا ابْنُ جُرَيْجٍ: أَخْبَرَنَا ابْنُ أَبِيَ مُلَيْكَةَ؛ أَنّ الْقَاسِمَ بْنَ مُحَمّدِ بْن أَبِي بَكْرٍ أَخْبَرَهُ
أَنّ عَائِشَةَ، أَخْبَرَتْهُ أَنّ سَهْلَةَ بِنْتَ سُهَيْل بْن عَمْرٍو جَاءَتِ النّبِيّ . فَقَالتْ: يَا رَسُولَ اللّهِ! إِنّ
سَالِماً (لِسَالِمِ مَوْلَى أَبِي حُذَيْفَةَ) مَعَنَا فِي بَيْتِنَا، وَقَدْ بَلَغَ مَا يَبْلُغُ الرّجَالُ وَعَلِمَ مَا يَعْلَمُ الرّجَالُ.
قَالَ أَرْضِعِيهِ تَحْرُمِي عَلَيْهقَال: فَمَكَثْتُ سَنَةً أَوْ قَرِيباً مِنْهَا لا أُحَدّثُ بِهِ وَهِبْتُهُ، ثُمّ لَقِيتُ الْقَاسِمَ
فَقُلْتُ لَهُ: لَقَدْ حَدّثْتَنِي حَدِيثاً مَا حَدّثْتُهُ بَعْدُ. قَالَ: فَمَا هُوَ؟ فَأَخْبَرْتُهُ. قَالَ: فَحَدّثْهُ عَنّي أَن عَائِشَةَ
أَخْبَرَتْنِيهِ.

ஆயிஷா(ரலி) கூறுவதாக அறிவிப்பவர் காசிம் பின் முஹம்மத் பின் அபீபக்ர் ஆவார்.

அவர் கூறுவதாக அறிவிப்பவர் இப்னு அபீ முளைக்கா ஆவார்.

இவர் மேற்கண்ட ஹதீஸை அறிவித்துவிட்டு பின்வரும் செய்தியையும் கூறுகிறார்.

நான் ஒரு வருடம் அல்லது ஏறத்தாழ ஒரு வருடம் இச்செய்தியை யாருக்கும் அறிவிக்காமல் இருந்தேன். இதை அறிவிக்க நான் பயந்தேன். பின்னர் காசிம் அவர்களைச் சந்தித்து நீங்கள் எனக்கு ஒரு ஹதீஸைக் கூறினீர்கள். இது வரை அதை நான் அறிவிக்கவில்லை என்று கூறினேன். அது எந்த ஹதீஸ் என்று அவர் கேட்டார். நான் இந்த ஹதீஸைக் கூறினேன். ஆயிஷா (ரலி) எனக்கு அறிவித்து நான் உனக்கு அறிவித்ததாக நீ அறிவித்து விடு என்று விடையளித்தார் என்ற விபரம் மேலதிகமாக இடம் பெற்றுள்ளது.

**ஹதீஸ் – 04**

ـ وحدّثنا مُحَمّدُ بْنُ الْمُثَنّي: حَدّثَنَا مُحَمّدُ بْنُ جَعْفَرٍ: حَدّثَنَا شُعْبَةُ عَنْ حُمَيْدِ بْن نَافِعٍ عَنْ (3558)
زَيْنَبَ بِنْتِ أُمّ سَلَمَةَ قَالتْ: قَالَتْ أُمّ سَلَمَةَ لِـ عَائِشَةَ، : إِنّهُ يَدْخُلُ عَلَيْكِ الْغُلاَمُ الأَيْفَعُ الّذِي
مَا أُحِبّ أَنْ يَدْخُلَ عَلَيّ. قَالَ: فَقَالَتْ عَائِشَةُ: أَمَالَكِ فِي رَسُولِ اللّهِ إِسْوَةٌ؟ قَالتْ: إِنّ امْرَأَةَ أَبِي
حُذَيْفَةَ قَالَتْ: يَا رَسُولَ اللّهِ إِنّ سَالِماً يَدْخُلُ عَلَيّ وَهُوَ رَجُلٌ. وَفِي نَفْسِ أَبِي حُذَيْفَةَ مِنْهُ شَيْءٌ. فَقَالَ



رَسُولُ اللّهِ صلى الله عليه وسلم: أَرْضِعِيهِ حَتّى يَدْخُلَ عَلَيْكِ.

ஆயிஷா அவர்களே, உங்கள் இல்லத்தில் பருவ வயதுக்கு நெருக்கமான இளைஞர்கள் வருகின்றனர். அத்தகைய வயதுடையவர்கள் என் வீட்டில் நுழைவதை நான் விரும்ப மாட்டேன் என்று உம்முஸலமா (ரலி), ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் கூடிபருவமடைந்த ஆண் மகனான ஸாலிம் என் வீட்டுக்கு வருவதில் என் கணவர் அபூ ஹுதைஃபாவுக்கு அதிருப்தி உள்ளது என்று அபூ ஹுதைஃபாவின் மனைவி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்ட போது அவருக்குப் பாலூட்டு இதன் பின் வீட்டுக்குள் ஸாலிம் நுழையலாம் என்று கூறினார்களே? இதில் உங்களுக்கு அழகான முன்மாதிரி இல்லையா? என்று திருப்பிக் கேட்டார்கள்.

நூல் : முஸ்லிம்

**ஆயிஷா (ரலி) அவர்களின் இல்லத்துக்கு சில இளைஞர்கள் வந்து செல்வதையும் இந்த ஹதீஸ் கூறுகிறது.**

**ஆயிஷா (ரலி) அவர்கள் அந்த இளைஞர்களுக்குப் பாலூட்டி அதன் மூலம் தாயாக ஆனார்கள் என்பதும் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது.**

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழகிய முன்மாதிரி இல்லையா என்று கேட்டதன் மூலம் அதை ஆயிஷா (ரலி) அவர்களும் கடைப்பிடித்துள்ளார்கள் என்று இந்த ஹதீஸ் கூறுகிறது.**

**ஹதீஸ் - 05**

ـ وحدّثنِي أَبُو الطّاهِرِ وَ هـرُونُ بْنُ سَعِيدٍ الأَيْلِيّ (وَاللّفْظُ لِهـرُونَ) قَالاَ: حَدّثَنَا ابْنُ (3559)
وَهْبٍ: أَخْبَرَنِي مَخْرَمَةُ بْنُ بُكَيْرٍ عَنْ أَبِيهِ قَالَ: سَمِعْتُ حُمَيْدَ بْنَ نَافِعٍ يَقُولُ: سَمِعْتُ زَيْنَبَ بِنْتَ أَبِي
سَلَمَةَ تَقُولُ: سَمِعْتُ أُمّ سَلَمَةَ، زَوْجَ النّبِيّ تَقُولُ لِعَائِشَةَ: وَاللّهِ! مَا تَطِيبُ نَفْسِي أَنْ يَرَانِي الْغُلاَمُ
قَدِ اسْتَغْنَى عَنِ الرّضَاعَةِ. فَقَالَتْ: لِمَ؟ قَدْ جَاءَتْ سَهْلَةُ بِنْتُ سُهَيْلٍ إِلَى رَسُولِ اللّهِ . فَقَالَتْ: يَا
رَسُولَ اللّهِ وَاللهَ إِنّي لأَرَى فِي وَجْهِ أَبِي حُذَيْفَةَ مِنْ دُخُولِ سَالِمٍ. قَالَتْ: فَقَالَ رَسُولُ اللّهِ صلى
الله عليه وسلم: أَرْضِعِيهِ . فَقَالَتْ: إِنّهُ ذُو لِحْيَةٍ . فَقَالَ: أَرْضِعِيهِ يَذْهَبْ مَا فِي وَجْهِ أَبِي حُذَيْفَةَ.
فَقَالَتْ: وَاللّهِ مَا عَرَفْتُهُ فِي وَجْهِ أَبِي حُذَيْفَةَ.

மேற்கண்ட உம்மு ஸலமாவின் ஹதீஸின் கருத்தில் தான் இந்த ஹதீஸும் உள்ளது. ஸாலிம் தாடி உள்ள இளைஞராக இருந்தார் என்ற வாசகம் மேலதிகமாக இடம் பெற்றுள்ளது.

மேற்கண்ட அத்தனை ஹதீஸ்களையும் நாம் அடியோடு மறுக்கிறோம். இவை

ஆதாரப்பூர்வமானவை அல்ல. நபிகள் நாயகம் (ஸல்) மீதும், ஸஹ்லா (ரலி) மீதும், ஸாலிம் (ரலி) மீதும், ஆயிஷா (ரலி) மீதும் களங்கம் சுமத்துவதற்காக இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் என்று திட்டவட்டமாக சொல்கிறோம்.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

**01 - பால் குடிக்கும் வயது.**

ஒரு பெண் தான் பெற்றெடுக்காத குழந்தைக்குப் பாலூட்டினால் அக்குழந்தைக்கு அவள் தாய் என்ற நிலையை அடைந்து விடுவாள். (வாரிசுரிமை கிடைக்காது என்பதைத் தவிர)

ஆனால் இதற்கு சில நிபந்தனைகள் உள்ளன.

பாலூட்ட வேண்டும் என்று விரும்புகிற (கண)வனுக்காக (விவாக ரத்துச் செய்யப்பட்ட) தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு முழுமையாக இரண்டு ஆண்டுகள் பாலூட்ட வேண்டும்.

திருக்குர்ஆன் 2:233

மனிதனுக்கு அவனது பெற்றோரைக் குறித்தும் வலியுறுத்தியுள்ளோம். அவனை அவனது தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனப்பட்டவளாகச் சுமந்தாள். அவன் பாலருந்தும் பருவம் இரண்டு ஆண்டுகள். எனக்கும், உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே திரும்பி வருதல் உண்டு.

திருக்குர்ஆன் 31:14

பாலூட்டுதல் என்பது இரண்டு வருடங்கள் என்று இவ்வசனங்கள் கூறுகின்றன. இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுககுப் பாலூட்டினால் தான் தாய் பிள்ளை உறவு ஏற்படுமே தவிர அதைக் கடந்து விட்டால் தாய் பிள்ளை உறவு ஏற்படாது என்பது சிந்திக்கும் போது தெளிவாகும்.

ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் இது தெளிவாகவும் கூறப்படுகிறது.

(2595) ـ حدّثنا محمدُ بنُ كثير أخبرَنا سفيانُ عن أشعثَ بن أبي الشعْثاءِ عن أبيهِ عن مَسروق أنّ عائشةَ رضَيَ اللهُ عنها قالت: دَخلَ النّبيُّ صلى الله عليه وسلّم وعندي رجُلٌ فقال: يا عائشةُ مَن هذا ؟ قلتُ: أخي منَ الرّضاعةِ قال: يا عائشةُ انظُرْنَ مَن إخوانُكنّ، فإنما الرضاعةُ مِنَ المجاعة . تابعَهُ ابنُ مَهْديٍّ عن سفيانَ.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என் வீட்டுக்கு வந்த போது என் அருகில் ஒரு ஆண் இருந்தார். இவர் யார் என்று நபிகள் நாயகம் (ஸல்) கேட்டார்கள். அதற்கு நான் இவர் எனது பால் குடி சகோதரர் என்று கூறினேன். அப்போது



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே, உங்கள் சகோதரர் யார் என்பதில் கவனமாக இருங்கள். பால்குடி உறவு என்பது பசியினால் தான் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள்
நூல்: புகாரி 5102

அதாவது பாலை மட்டுமே உணவாகக் கொண்டு பாலருந்தும் பருவத்தில் அருந்தினால் மட்டுமே பால்குடி உறவு ஏற்படும் என்பது இதன் கருத்து.

பாலை மட்டுமே அருந்தி அதன் மூலம் மட்டுமே பசியாறும் இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைக்குப் பால் ஊட்டினால் மட்டுமே பால்குடி உறவு ஏற்படும் என்பது மேற்கண்ட ஹதீஸின் கருத்தாகும்.

4412 - حَدَّثَنَا الْحُسَيْنُ بْنُ إِسْمَاعِيلَ وَإِبْرَاهِيمُ بْنُ دُبَيْس بْن أَحْمَدَ وَغَيْرُهُمَا قَالُوا حَدَّثَنَا أَبُو الْوَلِيدِ بْنُ بُرْدٍ الأَنْطَاكِىُّ حَدَّثَنَا الْهَيْثَمُ بْنُ جَمِيلَ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ عَمْرو بْنِ دِينَارٍ عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ رَسُولُ اللَّهِ –صلى الله عليه وسلم– لاَ رَضَاعَ إِلاَّ مَا كَانَ فِى الْحَوْلَيْنِ . لَمْ يُسْنِدْهُ عَنِ ابْنِ عُيَيْنَةَ غَيْرُ الْهَيْثَمِ بْنِ جَمِيلٍ وَهُوَ ثِقَةٌ حَافِظٌ

பாலூட்டும் சட்டம் இரண்டு வருடத்திற்குத் தான் என்பது நபிமொழி.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்
நூல் : தாரகுத்னீ பாகம் : 10 பக்கம் : 152

(1148) ـ حدثنا قُتَيْبَةُ حدثنا أَبُو عَوَانَةَ عنْ هِشَام بن عُرْوَةَ عنْ أبيه عن فَاطِمَةَ بنْتِ الْمُنْذِر عن أمّ سَلَمَةَ ، قالَتْ: قالَ رسولُ الله لاَ يُحَرّمُ مِنَ الرّضَاعةِ إلاّ مَا فَتَقَ الأمْعَاءَ في الثّدْيِ، وكانَ قَبْلَ اَلفِطَامِ . قال أبو عيسى: هذَا حديثٌ حسنٌ صحيحٌ.

மார்பகத்தின் வழியாக வயிறு நிரம்பும் அளவுக்குப் பால் குடித்தாலே பால்குடி உறவு ஏற்படும். மேலும் பால்குடி மறக்கும் வயதுக்குள் அது இருக்க வேண்டும் எனவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : உம்மு சலமா (ரலி) அவர்கள்
நூல் : திர்மிதி (1072)

நாம் எடுத்துக் காட்டிய திருக்குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் கவனத்தில் வைத்துக் கொண்டு ஸாலிம் தொடர்பான ஹதீஸ்களைப் பாருங்கள்.

ஸாலிம் என்பவர்

- தாடி உள்ளவர்,
- இளைஞர்,

-  ஆண்களின் பருவ வயதை அடைந்தவர்,

-  ஆண்கள் அறிந்து கொள்ளும் அனைத்தையும் அறிந்தவர்

என்றெல்லாம் கூறப்படுகிறது. மிகமிகக் குறைவாக வைத்துக் கொண்டாலும் சுமார் 18 வயதாவது அவருக்கு இருக்கலாம்.

ஆனால் தேடிப்பார்க்கும் போது அதை விட அதிக வயதுடையவராக இருக்கலாம் என்று அறிந்து கொள்ள முடிகிறது.

3758ـ حدّثنا سليمانُ بن حرب حدّثنا شُعبة عن عمرو بنِ مُرّةَ عن إبراهيمَ عن مسروقٍ قال: ذُكِر عبدُ اللّهِ عند عبدِ اللّهِ بن عمرو فقال: ذَاك رَجلٌ لا أزالُ أحبُّهُ بعدَ ما سمعتُ رسولَ اللّهِ صلى الله عليه وسلّم يقول: استقرِئوا القرآنَ من أربعةٍ: من عبدِ اللّهِ بن مسعود فبدَأ بهِ، وسالمٍ مولى أبي حُذَيفةَ، وأبيِّ بن كعب، ومُعاذِ بن جبلٍ. قال: لا أدري، بدأ بأبيّ أو بمعاذ.[الحديث ٨٥٧٣ـ أطرافه في: ٠٦٧٣، ٦٠٨٣، ٨٠٨٣، ٩٩٩٤.

குர்ஆனை நான்கு நபர்களிடமிருந்து அறிந்து கொள்ளுங்கள்.

1. அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி)

2. அபூஹுதைபாவின் அடிமை ஸாலிம் (ரலி)

3. உபை பின் கஅப் (ரலி)

4. முஆத் பின் ஜபல் (ரலி)

ஆதாரம் – புகாரி : 3758

ஒட்டு மொத்த நபித்தோழர்களிலேயே தேர்வு செய்யப்பட்ட நால்வரில் ஸாலிம் ஒருவராக இருக்கிறார் என்றால் முதிர்ச்சியான நிலையை அடைந்தவராகத் தான் இருக்க முடியும்.

، وأما سالم فكانمن السابقين الأولين، وقد أشير في هذا الحديث إلى أنه كان عارفاً بالقرآن، وسبق في كتاب الصلاة أنه كان يؤم المهاجرين بقباء لما قدموا من مكة، وشهد سالم بدراً وما بعدها، ويقال إن اسم أبيه معقل، وكان مولى لامرأة من الأنصار فتبناه أبو حذيفة لما تزوجها فنسب إليه، وسيأتي بيان ذلك في الرضاع، واستشهد سالم باليمامة أيضاً.

ஸாலிம் அவர்கள் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர். மக்காவில் இருந்து ஹிஜ்ரத் செய்து வந்த மக்களுக்கு இவர் இமாமத் செய்து வந்தார். பத்ருப் போரிலும் இன்ன பிற போர்களிலும் பங்கெடுத்தார் என்று இப்னு ஹஜர் அவர்கள் கூறுகிறார்கள்.



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து வருவதற்கு முன்னால் பல நபித்தோழர்கள் ஹிஜ்ரத் செய்து வந்தனர். அவர்களுக்கு ஸாலிம் தொழுகை நடத்தினார் என்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வரும் போது இவர் எந்த வயதுடையவராக இருப்பார் என்பதை ஊகம் செய்யலாம்.

எப்படிப் பார்த்தாலும் இளைஞராக அவர் இருந்திருக்கிறார்.

அத்தகைய இளைஞருக்குப் பாலூட்டுமாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹ்லா (ரலி) அவர்களுக்குக் கூறுவார்களா?

இரண்டு வயதுக்குள் பாலருந்தினால் தான் பால்குடி உறவுச் சட்டம் ஏற்படும் என்று கூறிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருக்க மாட்டார்கள் என்று நாம் கூறுகிறோம். இது ஹதீஸ் அல்ல. கட்டுக்கதை என்று கூறுகிறோம்.

இதைச் சரி என்று வாதிடுவோர் மேலே சொன்ன குர்ஆன் வசனங்களையும், பால்குடிச் சட்டம் தொடர்பாக நாம் எடுத்துக் காட்டிய ஹதீஸ்களையும் மறுத்தவர்களாக ஆவார்கள்.

**02- பால் எப்போது சுரக்கும்?**

இளைஞருக்கு ஒரு பெண்ணைப் பாலூட்டச் சொன்னதில் இன்னொரு விஷயமும் உள்ளது. பெண்களுக்கு எல்லாக் காலத்திலும் பால் சுரந்து கொண்டிருக்காது. குழந்தை பெற்றது முதல் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குத் தான் பால் சுரக்கும். அதன் பின்னர் பால் சுரக்காது. மறுபடி குழந்தை பெற்றால் தான் பால் சுரக்கும்.

ஸஹ்லா (ரலி) அவர்களை நோக்கி ஸாலிமுக்குப் பாலூட்டு என்று கூறினால் அந்தச் சமயத்தில் அவருக்குக் கைக் குழந்தை இருந்திருக்க வேண்டும். அப்போது தான் பால் சுரக்கும். பால் சுரந்தால் தான் ஸாலிமுக்குப் பாலூட்ட முடியும்.

ஸஹ்லா (ரலி) அவர்களுக்கு அந்தச் சமயத்தில் கைக் குழந்தை இருந்தது என்பதை இவர்கள் நிரூபிக்க வேண்டும். (அந்த நேரத்தில் கைக் குழந்தை ஸஹ்லாவுக்கு இல்லை என்பதை நம்மால் நிரூபிக்க முடியும்)

மேலும் இதை முன்மாதிரியாகக் கொண்டு ஆயிஷா (ரலி) அவர்களும் தம் வீட்டுக்கு வரும் இளைஞர்களிடம் செயல்படுத்தியதாகக் கூறப்படுகிறது. ஆயிஷா (ரலி) அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) மூலம் குழந்தை இல்லை. நபிகள் நாயகத்துக்குப் பின் வேறு திருமணம் செய்ய அவர்களுக்குத்

தடை உள்ளதால் அறவே அவர்களுக்குக் குழந்தை இல்லை என்பது தெளிவு. இதிலிருந்தே இது இட்டுக் கட்டப்பட்டது என்பதை அறியலாம்.

**தம் வீட்டுக்கு எந்த இளைஞராவது வர வேண்டும் என்று விரும்பினால் தமது சகோதரியின் புதல்விகளிடம் அவரை அனுப்பி பாலூட்டச் சொல்வார். இதன் மூலம் பால்குடி உறவு மூலம் பாட்டியாகி விடுவார்கள் என்றும் ஹதீஸ் உள்ளது. (இதைப் பிறகு பார்ப்போம்)**

**03 - அன்னியப் பெண்ணுடன் நடக்க வேண்டிய முறை.**

(முஹம்மதே!) தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்பைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்குக் கூறுவீராக! இது அவர்களுக்குப் பரிசுத்தமானது. அவர்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்.

திருக்குர்ஆன் 24:30

பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறும் மார்க்கத்தில் அன்னியப் பெண்ணின் மார்பில் பால் அருந்துவது ஆபாசம் இல்லையா?

உணர்வைத் தூண்டக் கூடியது அல்லவா?

இதை எப்படி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அனுமதித்திருப்பார்கள்?

இறைவன் வகுத்துத் தந்த ஒழுக்க மான்பை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குழி தோண்டிப் புதைத்தார்கள் என்று கூறும் இது ஹதீஸா? இட்டுக்கட்டப்பட்ட பொய்யா?

அந்நிய ஆண்கள் தங்களின் வீட்டுக்குள் வர வேண்டும் என்று விரும்பும் பெண்கள் பால்புகட்டி விட்டால் அதன் பின்னர் பர்தாவைக் கடைப்பிடிக்க வேண்டாமே? தனித்திருக்கவும் செய்யலாமே? இதைக் கற்பிக்கத் தான் அல்லாஹ்வின் தூதர் வந்தார்களா?

மேலும் ஒரு பெண் அன்னிய ஆணுடன் தனிமையில் இருக்கும் போது மாட்டிக் கொள்கிறாள். நான் பால் கொடுத்து இவருக்கு தாயாகிக் கொண்டு இருந்தேன் என்று இந்தக் கட்டுக் கதையின் படி கூற முடியுமா? முடியாதா?

மார்பகத்தில் வாய் வைத்திருக்கும் நிலையில் ஒரு பெண்ணுடன் அந்நிய ஆண் மாட்டிக் கொண்டாலும் அப்போதும் இதே பதிலைச் சொல்லி இருவரும் தப்பித்துக் கொள்ள முடியுமே?



இஸ்லாமியக் குற்றவியல் சட்டங்களையே கேலிக் கூத்தாக்கும் இது போன்ற ஆபாசம் குர்ஆனுக்கும், நபிகள் நாயகம் காட்டிய அறவழிக்கும் மாற்றமாகத் தெரியவில்லையா?

நிர்பந்தமான நிலையில் சில சட்டங்கள் தவிர்க்கப்படுவது இஸ்லாத்தில் சட்ட விதியாக உள்ளது. ஒரு பெண்ணின் மார்பகத்தில் கட்டி போன்றவை இருந்து தக்க பெண் மருத்துவர் இல்லாவிட்டால் ஆண் மருத்துவரிடம் காட்டினால் இதை நிர்பந்தம் என்று மார்க்கம் ஏற்றுக் கொள்ளும்.

ஸாலிமுக்கோ, ஸஹ்லாவுக்கோ அப்படி என்ன நிர்பந்தம் இருந்தது?

ஸாலிம் பச்சிளங் குழந்தையா?

ஸஹ்லாவின் அரவணைப்பு இல்லாமல் வாழ முடியாதா?

குழந்தைப் பருவத்தில் உள்ளவரா?

ஸஹ்லா அவர்களின் வீட்டுக்குப் போகாமல் இருக்க வேண்டியது தானே?

அல்லது அவர் வரும் போது ஸஹ்லா ஹிஜாபைக் கடைப்பிடிக்க வேண்டியது தானே?

வீடு வாசலோ ஸாலிமுக்கு இல்லாவிட்டால் எத்தனையோ ஏழை நபித்தோழர்கள் பள்ளிவாசலே வீடாகக் கொண்டு தங்கிக் கொண்டது போல் தங்கியிருக்கலாமே?

எவ்வித நிர்பந்தமும் இல்லாமல் ஆபாசத்தை நபிகள் நாயகம் போதித்தார்கள் என்ற கருத்து பரவி இஸ்லாம் எக்கேடு கெட்டாலும் உங்கள் முன்னோர் இதைக் கவனிக்கத் தவறியதால் நீங்களும் கவனிக்காமல் இருப்பீர்களா?

இந்தக் கட்டுக் கதையை உண்மை என்று வாதிடுபவர்களிடம் ஒரு பெண் இப்படியொரு பிரச்சினையைக் கொண்டு வந்தால் இந்த ஹதீஸின் படி ஃபத்வா கொடுப்பார்களா?

மேலும் சிறு குழந்தையில் இருந்து அவரைத் தூக்கி வளர்த்தார்கள் என்பதால் அவரைப் பிரிய முடியவில்லை என்ற அளவுக்குக் கூட இதில் அவசியம் இல்லை.

ஏனெனில் ஸாலிம் இளைஞராக இருக்கும் போது அன்ஸாரிப் பெண்ணுக்கு அடிமையாக இருந்தார். அப்போது தான் அபூஹுதைபா அவரை விலைக்கு வாங்கி விடுதலை செய்து வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொண்டார்கள். மேலே

நாம் எடுத்துக் காட்டிய பத்ஹுல் பாரி மேற்கோளில் இருந்தும் இன்ன பிற சான்றுகளில் இருந்தும் இதை அறியலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குர்ஆன் போதனைப்படி தாமும் வாழ்ந்து மற்றவரையும் வாழச் செய்யவே தூதராக அனுப்பப்பட்டார்கள். ஒழுக்கக் கேடுகளுக்கு பாதை வகுத்துக் கொடுப்பதற்காக தூதராக அனுப்பப்படவில்லை.

விபச்சாரத்தைப் பொருத்தவரை அதைச் செய்யக் கூடாது என்று மட்டும் தடை இல்லை. அதன் பக்கம் நெருங்கவே கூடாது என்பதும் கட்டளை.

வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடை செய்ததைக் கூறுகிறேன் என்று (முஹம்மதே!) கூறுவீராக! அது,நீங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது என்பதே. பெற்றோருக்கு உதவுங்கள்! வறுமையின் காரணமாக உங்கள் குழந் தைகளைக் கொல்லாதீர்கள்! உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். வெட்கக்கேடான காரியங்களில் வெளிப் படையானதையும், இரகசியமானதையும் நெருங்காதீர்கள்! அல்லாஹ் தடை செய்துள்ளதால் எவரையும் (அதற்கான) உரிமை இருந்தால் தவிர கொல்லாதீர்கள்! நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான்.

அல்குர்ஆன் 6.151

இளைஞன் ஒருவன் நடுத்தர வயதுப் பெண்ணின் மார்பகத்தில் வாய் வைப்பது விபச்சாரத்தின் பக்கம் நெருங்குவதா இல்லையா?

மேலும் இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணிடம் பால் குடித்தால் அதன் பின்னர் ஆசை நீங்கி தாய் பிள்ளையாகி விடுவார்கள் என்பதும் மடமைத்தனமானது. நடைமுறை உண்மைக்கு மாற்றமானது.

கணவன் தனது மனைவியிடம் பால் அருந்துகிறான். அப்போது மனைவி உடனே தாயாகி விடுவாள் என்று இவர்கள் கூறுவார்களா?

அதன் பின் மனைவியின் மீது ஆசையே ஏற்படாது என்று இவர்கள் கூறுவார்களா?

அல்லது அத்துடன் தம்பதியர் பிரிந்து விட வேண்டும் என்று கூறுவார்களா?

இந்த ஹதீஸை ஏற்றுக் கொண்டால் இப்படி ஃபத்வா கொடுக்க வேண்டியது தானே?



**வாதங்களும் பதில்களும்**

ஸாலிம் பற்றிய இந்தச் செய்தி தொடர்பாக எதிர்த்தரப்பினர் முன் வைக்கும் வாதங்களையும் நமது பதில்களையும் இங்கு பார்ப்போம்.

**01 - ஸாலிமுக்கு மட்டும் உரியது.**

உங்கள் மனைவிமார்கள் விஷயத்தில் இப்படி நடப்பீர்களா? என்று யாரும் கேள்வி கேட்டு விடக் கூடாது என்பதற்காக ஒரு தடுப்புச் சுவரை எழுப்பி விட்டுத் தான் இது சரியான ஹதீஸ் என்று வாதிடுகிறார்கள்.

இது சரியான ஹதீஸ் தான். ஆனால் இது ஸாலிமுக்கு மட்டும் உரியது. மற்றவர்கள் கடைப்பிடிக்கக் கூடாது என்பது தான் இவர்களின் முதலாவது சமாளிப்பு.

இது தங்களை நோக்கி கேள்வி வரக் கூடாது என்பதற்காக இவர்கள் கண்டுபிடித்த தற்காப்பு ஆயுதம் தானே தவிர இதில் கடுகின் முனையளவு கூட இல்லை.

**ஆபாசத்துக்கு விதிவிலக்கு உண்டா?**

இஸ்லாத்தில் பொதுவான சட்டத்தில் இருந்து சிலருக்கு மட்டும் விதிவிலக்குகள் உள்ளன என்பது நமக்கும் தெரியும்.

அந்த விதிவிலக்கு வணக்க வழிபாடுகள் தொடர்பானதாகத் தான் இருக்கும். ஆபாசமான அருவருக்கத் தக்கவைகளில் நிச்சயம் இருக்காது.

ஒருவர் விபச்சாரம் செய்ய நபிகள் நாயகம் (ஸல்) அனுமதித்தார்கள் **(அல்லாஹ் காப்பாற்ற வேண்டும். உதாரணத்துக்குச் சொல்கிறோம்.)** என்று ஒரு நூலில் எழுதப்பட்டிருந்தால் அதைப் பொய் என்று சொல்ல வேண்டுமா? அவருக்கு மட்டும் அளித்த விதிவிலக்கு என்போமா? பொய் என்றே கூறுவோம்.

ஏனெனில் அல்லாஹ் ஆபாசமானதையும் அருவருக்கத் தக்கதையும் ஏவமாட்டான். இதில் விதிவிலக்கையும் தரமாட்டான்.

அவர்கள் வெட்கக்கேடான காரியத்தைச் செய்யும் போது எங்கள் முன்னோர்களை இப்படித் தான் கண்டோம். அல்லாஹ்வே இதை எங்களுக்குக் கட்டளையிட்டான் என்று கூறுகின்றனர். அல்லாஹ் வெட்கக் கேடானதை ஏவ மாட்டான். நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிக் கூறுகிறீர்களா? என்று கேட்பீராக!

அல்குர்ஆன் 7.28,

நீதி, நன்மை, மற்றும் உறவினருக்குக் கொடுப்பதை அல்லாஹ் கட்டளையிடுகிறான். வெட்கக்கேடானவை, தீமை, மற்றும் வரம்பு மீறுவதை உங்களுக்குத் தடுக்கிறான். நீங்கள் நல்லுணர்வு பெறுவதற்காக உங்களுக்கு அறிவுரை கூறுகிறான்.

அல்குர்ஆன் 16.90

கொலை, இணை கற்பித்தல், விபச்சாரம், ஆபாசம் போன்றவைகளை அல்லாஹ்வின் தூதர் சிலருக்கு அனுமதித்தார்கள் என்று கூறப்பட்டால் அது எந்த நூலில் கூறப்பட்டிருந்தாலும் அது கட்டுக்கதையே. ஹதீஸ் அல்ல.

எனவே இது ஆபாசமான செயலாக இருப்பதால் இதில் விதி விலக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை.

**ஊகத்தின் அடிப்படையில் விதிவிலக்கு இல்லை.**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளில் சுமார் சரி பாதியை எடுத்துக் கொண்டால் அவை தனி நபர்களிடம் சொல்லியதாகத் தான் அமைந்திருக்கும். அது அவருக்கு மட்டும் உரியது என்று இஸ்லாத்தில் சரி பாதியை விட்டு விட முடியுமா?

இது உனக்கு மட்டுமே. வேறு எவருக்கும் இல்லை என்று சட்டம் வகுக்கும் அதிகாரம் படைத்த இறைவன் கூற வேண்டும். அல்லது அவனது தூதர் கூற வேண்டும்.

உதாரணத்துக்குப் பின் வரும் ஹதீஸை எடுத்துக் காட்டலாம்.

(953) ـ حدّثنا ادمُ قال: حدّثنا زُبَيدٌ قال: سمعتُ الشّعبيِّ عن البَراء بن عازب قال: قال النبيٌّ صلى الله عليه وسلّم: إنّ أوّلَ ما نبدَأُ في يومِنا هذا أن نُصلّيَ ثمّ نرجِعَ فننْحرَ. فمن فعلَ ذلك فقد أصابَ سُنّتَنا، وَمَن نحرَ قبلَ الصلاةِ فإنّما هوَ لحمٌ قدّمَهُ لأهلِهِ، ليسَ منَ النُّسكِ في شيء. فقال رجلٌ منَ الأنصارِ يقالُ له أبو بُرْدَةَ بنُ نِيارٍ: يا رسولَ اللهِ ذَبحتُ وعندي جَذَعةٌ خيرٌ مِن مُسِنّةٍ. فقال: اجعلهُ مكانَهُ ولن تُوفيَ ـ أو تجزِيَ ـ عن أحدٍ بعدَك.

இன்று (பெருநாளில்) நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் தொழுகை. பிறகு நம் வீட்டுக்குச் சென்று குர்பானி கொடுக்க வேண்டும். யார் இப்படிச் செய்கிறாரோ அவர் நமது வழியைக் கடைப்பிடித்தார். தொழுகைக்கு முன்னர் யார் அறுத்து விட்டாரோ அவர் தனது குடும்பத்துக்காக அவர் அறுத்த இறைச்சியாகும். இது கிரியைகளில் அடங்காது என்று நபிகள் நாயகம்(ஸல்) கூறினார்கள். அப்போது அபூபுர்தா எனும் தோழர் எழுந்து அல்லாஹ்வின் தூதரே, நான் முன்பே அறுத்து விட்டேன். (என்னிடம் ஒரு வருட ஆட்டுக்குட்டி இல்லை). அதைவிடச் சிறந்ததாக ஆறுமாத குட்டி உள்ளது. (அதை



அறுக்கட்டுமா) என்று கேட்டார். ஏற்கனவே அறுத்ததற்குப் பதிலாக இதை அறுப்பீராக. உமக்குப் பின் வேறு எவருக்கும் இது இல்லை என்று கூறினார்கள்.

புகாரி 5560

இது போல் கூறப்பட்டால் தான் அது தனி நபருக்கு உரிய சலுகை எனக் கூற வேண்டும். இவ்வாறு கூறுவோர் இதற்கான ஆதாரத்தை எடுத்துக் காட்ட வேண்டும்.

ஆபாசத்திலும் விதிவிலக்கு உண்டு என்பதற்கும் ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.

ஒரு வகையில் இவர்களும் அதைச் செயல்படுத்த மறுத்து தங்களையும் தங்கள் குடும்பத்துப் பெண்களையும் காப்பாற்றிக் கொள்ள இந்த ஹதீஸை மறுக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் நபியின் மீது இவர்கள் போட்ட பழி அப்படியே உள்ளது.

நாமே நபியின் மீதும் நபித்தோழியர் மீதும் இவர்கள் போட்ட பழியைத் துடைத்து விட்டு குறித்த செய்தி ஹதீஸ் இல்லை என்று மறுக்கிறோம். இது தான் வேறுபாடு.

**02 - மாற்றப்பட்ட சட்டம்.**

நபிகள் நாயகம் இப்படிக் கூறியது உண்மை தான். ஆனால் பின்னர் இது மாற்றப்பட்டு விட்டது என்றும் இன்னும் சிலர் சமாளிக்கின்றனர்.

முன்னர் இது நடைமுறையில் இருந்து இப்போது மாற்றப்பட்டு விட்டது என்று இவர்கள் கூறுவதால் இவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள்.

ஆபாசமான அருவருக்கத்தக்க ஒன்றை அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காலகட்டத்தில் ஏவியுள்ளார்கள் என்று ஆகுமே? அது பரவாயில்லையா? என்று இவர்களிடம் கேட்க விரும்புகின்றோம்.

இப்படிக் கூறுபவர்கள் இதற்கும் ஆதாரத்தைக் காட்ட வேண்டும். மாற்றப்பட்டது என்றால் அதற்கான ஆதாரத்தைக் வஹீ இறங்கிய காலத்தில் வாழ்ந்த நபித்தோழரின் சான்றை எடுத்துக் காட்ட வேண்டும்.

ஆயிஷா (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் மரணித்த பிறகும் இதை நடைமுறைப்படுத்தியதாக முஸ்லிமில் உள்ள ஹதீஸைக் குறிப்பிட்டுள்ளோம். (இதுவும் பொய் தான். ஆனால் இவர்களின் வாதப்படி இது ஆதாரப்பூர்வமான ஹதீஸ்)

இந்த ஹதீஸை அறிவிக்கும் ஆயிஷா (ரலி) அவர்கள், ஸாலிமுக்கு மட்டும் உள்ளதை எப்படி தமக்காக நடைமுறைப்படுத்தினார்கள்?

மாற்றப்பட்டிருந்தால் நபிகள் நாயகம் காலத்துக்குப் பின் ஆயிஷா (ரலி) எப்படி செயல்படுத்தினார்கள்? இந்தக் கேள்விக்கும் அவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.

மேலும் முன்னர் இது மாதிரி அனுமதி இருந்து பின்னர் மாற்றப்பட்டிருக்க முடியாது என்பதை இவர்கள் ஏற்றிப் போற்றும் ஹதீஸ்களே (?) தெளிவுபடுத்தி விடுகின்றன.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹ்லாவிடம் மேற்கண்டவாறு கூறியவுடன் அந்தப் பெண்மணி அவர் தாடி உள்ளவராக இருக்கிறாரே, பெரியவராக இருக்கிறாரே? நான் எப்படி பால் கொடுப்பது? என்று கேட்டதாக இந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே பாலூட்டுதல் தொடர்பான சட்டம் – அதாவது இரண்டு வயது வரை தான் பால்குடி உறவு என்ற சட்டம் நடைமுறையில் இருந்தால் தான் இவ்வாறு அவர்கள் கேட்டிருக்க முடியும். எனவே இது முன்னர் நடைமுறையில் இருந்து மாற்றப்பட்டது எனக் கூறுவது தங்கள் குடும்பத்துப் பெண்களை நோக்கி இந்தக் கேள்வி எழும்பாமல் இருப்பதற்காகவே என்பதில் ஐயம் இல்லை.

(3560) ـ حدّثني عَبْدُ الْمَلِكِ بْنُ شُعَيْبِ بْنِ اللّيْثِ: حَدّثَني أَبِي عَنْ جَدّي. حَدّثَني عُقَيْلُ بْنُ خَالِدٍ عَنِ ابْنِ شِهَابٍ أَنّهُ قَالَ: أَخْبَرَنِي أَبُو عُبَيْدَةَ بْنُ عَبْدِ اللّهِ بْنِ زَمْعَةَ؛ أَنّ أُمّهُ زَيْنَبَ بِنْتَ أَبِي سَلَمَةَ أَخْبَرَتْهُ؛ أَنّ أُمّهَا أُمّ سَلَمَةَ، زَوْجَ النّبِيّ كَانَتْ تَقُولُ: أَبَى سَائِرُ أَزْوَاجِ النّبِيّ أَنْ يُدْخِلْنَ عَلَيْهِنّ أَحَداً بِتِلْكَ الرّضَاعَةِ. وَقُلْنَ لِعَائِشَةَ: وَاللّهِ! مَا نَرَى هَذَا إِلاّ رُخْصَةً أَرْخَصَهَا رَسُولُ اللّهِ لِسَالِمٍ خَاصّةً. فَمَا هُوَ بِدَاخِلٍ عَلَيْنَا أَحَدٌ بِهذِهِ الرّضَاعَةِ، وَلاَ رَائِينَا.

இது சம்மந்தமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில மனைவிகள் "ஸாலிமுக்கு மட்டும் உரிய சலுகையாகவே நாங்கள் கருதுகிறோம்" என்று கூறியதாக புகாரியில் இடம் பெற்றுள்ளது.

நாங்கள் கருதுகிறோம் என்று அவர்கள் சொல்வதில் இருந்து தமது ஊகமாகவே அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆனால் ஹதீஸை நேரில் அறிவிக்கும் ஆயிஷா (ரலி) அவர்கள் அவர்களின் வாதத்தை மறுத்து நடைமுறைப்படுத்தினார்கள்.

(2593) ـ حدثنا عبد الله، حدثني أبي، حدثنا يعقوب قال: حدثنا ابن أخي ابن شهاب، عن



عمه قال: أخبرني عروة بن الزبير، عن عائشة قالت: أتت سهلةُ بنت سهيلِ بن عمرو وكانت تحت أبي حذيفة بن عتبة ـ رسول الله صلى الله عليه وسلّم، فقالت: إن سالماً مولى أبي حذيفة يدخل علينا وإنا فضل وإنا كنا نراه ولداً، وكان أبو حذيفة تبناه كما تبنى رسول الله صلى الله عليه وسلّم زيداً، فأنزل الله: _ادْعُوهُمْ لآبائِهِمْ هُوَ أَقْسَطُ عِنْدَ الله} (الأحزاب: ٥) فأمرها رسول الله صلى الله عليه وسلّم عند ذلك أن ترضع سالماً، فأرضعته خمس رضعات وكان بمنزلة ولدها من الرضاعة، فبذلك كانت عائشة تأمر أخواتها وبنات أخواتها أن يرضعن من أحبت عائشة أن يراها ويدخل عليها، وإن كان كبيراً خمس رضعات، ثم يدخل عليها، وأبت أم سلمة وسائر أزواج النبيّ صلى الله عليه وسلّم أن يدخلن عليهن بتلك الرضاعة أحداً من الناس حتى يرضع في المهد، وقلن لعائشة: والله ما ندري لعلها كانت رخصة من رسول الله صلى الله عليه وسلّم لسالم من دون الناس.

(2065) ـ حدثنا أَحْمَدُ بنُ صَالح أخبرنا عَنْبَسَةُ حَدّثَني يُونُسُ عن ابنِ شِهَابٍ حَدّثَني عُرْوَةُ بنُ الزّبَيْرِ عن عَائِشَةَ زَوْجَ النّبيّ صلى الله عليه وسلّم وَ أُمّ سَلَمَةَ ،: أَنّ أَبَا حُذَيْفَةَ بنَ عُتْبَةَ بن رَبِيعَةَ بن عَبْدِ شَمْسٍ كَانَ تَبَنّى سَالِماً وَأَنْكَحَهُ ابْنَةَ أَخِيهِ هِنْدَ بِنْتَ الْوَلِيدِ بن عُتْبَةَ بن رَبِيعَةَ، وَهُوَ مَوْلًى لاِمْرَأَةٍ مِنَ الأَنْصَارِ، كَمَا تَبَنّى رَسُولُ الله صلى الله عليه وسلّم زَيْداً، وَكَانَ مَنْ تَبَنّى رَجُلاً في الْجَاهِلِيّةِ دَعَاهُ النّاسُ إِلَيْهِ وَوُرّثَ مِيرَاثَهُ حَتّى أَنْزَلَ الله عَزّوَجلّ في ذَلِكَ _أُدْعُوهُمْ لآبَائِهِمْ ـ إِلَى قَوْلِهِ ـ فإِخْوَانُكُم فِي الدّينِ وَمَوَالِيكُمْ} فَرُدّوا إِلَى آبَائِهِمْ، فَمَنْ لم يَعْلَمْ لَهُ أَبٌ كَانَ مَوْلًى وَأَخاً في الدّينِ، فَجَاءَتْ سَهْلَةُ بِنْتُ سُهَيْلِ بنِ عَمْرٍو الْقُرَشِيّ ثُمّ الْعَامِرِيّ وَهِيَ امْرَأَةُ أَبي حُذَيْفَةَ، فقالَتْ: يَارَسُولَ الله إِنّا كُنّا نَرَى سَالِماً وَلَداً فَكَانَ يَأْوِي مَعِي وَمَعَ أَبي حُذَيْفَةَ في بَيْتٍ وَاحِدٍ وَيَرَانِي فُضْلاً، وَقَدْ أَنْزَلَ الله فِيهِمْ ما قَدْ عَلِمْتَ فَكَيْفَ تَرَى فِيهِ؟ فَقَالَ لَهَا النّبِيّ صلى الله عليه وسلّم: أَرْضِعِيه، فَأَرْضَعَتْهُ خَمْسَ رَضَعَاتٍ، فَكَان بِمَنْزِلَةِ وَلَدِهَا مِنَ الرّضَاعَةِ، فَبِذَلِكَ كَانَتْ عَائِشَةُ تَأْمُرُ بَنَاتِ أَخَوَاتِهَا وَبَنَاتِ إِخْوَانِهَا أَنّ يُرْضِعْنَ مَنْ أَحَبّتْ عَائِشَةُ أَنْ يَرَاهَا وَيَدْخُلَ عَلَيْهَا وَإِنْ كان كَبِيراً خَمْسَ رَضَعَاتٍ ثُمّ يَدْخُلُ عَلَيْهَا. وَأَبَتْ أُمّ سَلَمَةَ وَسَائِرُ أ

தன் வீட்டுக்கு வர விரும்பும் அந்நிய இளைஞர்களைத் தனது சகோதரியின் புதல்விகள் வீட்டுக்கு அனுப்பி பால்குடித்து வரச் சொல்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆதாரம் : அபூதாவூத். அஹ்மத்

அதாவது இச்செய்தியை அறிவிக்கும் ஆயிஷா (ரலி) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் இதை நடைமுறைப்படுத்தி உள்ளனர் என்று மேற்கண்ட ஹதீஸ்கள் கூறுகின்றன. எனவே நாம் கூறுவதைப் போல் அவை அனைத்துமே பொய் என்று கூறிவிட்டால் பிரச்சனை இல்லை. சரி என்று வாதிட்டால் இது மாற்றப்படவும் இல்லை: ஸாலிமுக்கு மட்டும் உரியதும் அல்ல: அனைவருக்கும் உரியது என்று தான் அவர்கள் கூற வேண்டும்.

ஆயிஷா (ரலி) அவர்கள் தம் சகோதரிகளின் புதல்விகளிடம் இளைஞர்களை அனுப்பி பால் கொடுக்கச் சொல்வார்கள் என்பது அதை விட ஆபாசமாக உள்ளது. அந்தச் சகோதரியின் கணவன்மார்கள் இதை அனுமதிப்பார்களா?

என்பதைப் பொருத்த விஷயத்தில் ஆயிஷா (ரலி) எப்படி முடிவு எடுத்திருக்க முடியும்? என்ற இன்னொரு புதுக் கேள்விக்கும் இவர்கள் பதில் சொல்ல வேண்டும்

எனவே இந்தச் செய்தி ஸாலிமுக்கு மட்டும் உரியது என்று அல்லாஹ்வின் தூதர் சொன்னதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**03 - கறந்து கொடுத்தார்களா?**

பச்சைப் பொய் என்று பளிச்செனத் தெரியும் ஒரு செய்தியை நியாயப்படுத்த முனைந்து இவர்கள் கண்டுபிடித்த மற்றொரு கயிறு திரித்தல் தான் இதுவாகும்.

இளைஞரான ஸாலிமுக்குப் பாலூட்டு என்பதன் அர்த்தம் வேறாகும். அதாவது பாலைக் கறந்து குவளையில் பிடித்து அவரிடம் கொடு என்பது தான் இதன் கருத்து என்கிறார்கள். அதாவது இதைச் சரி என்று கூறும் இவர்கள் நடைமுறைப்படுத்திட தயாராக இல்லை. எனவே தான் இப்படியெல்லாம் உளறுகிறார்கள்.

மேற்கண்ட ஸாலிம் தொடர்பான ஹதீஸில் அர்ளியிஹி ارضعيه என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இதன் பொருள் மார்பில் வாய் வைத்து குடிப்பது தான். கறந்து குடிப்பது அல்ல என்பதால் இவர்களின் விளக்கம் அடிபட்டுப் போகிறது.

பால் கொடுக்கச் சொன்ன போது இவர் இளைஞராகவும் தாடி உள்ளவராகவும் இருக்கிறாரே என்று ஸஹ்லா கேட்டதாக அந்த ஹதீஸ் கூறுகிறது. கறந்து கொடுப்பது தான் அர்த்தம் என்றால் இக்கேள்விக்கு இடமில்லை.

கறந்து கொடுக்கும் போது இளைஞராக இருந்தால் என்ன? சிறுவராக இருந்தால் என்ன? இவர் இவ்வாறு கேட்ட போது நபிகள் நாயகம் (ஸல்) புன்னகை செய்ததாகவும் கூறப்படுகிறது. கறந்து கொடுப்பது என்றால் இவர் கேட்டவுடன் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு சிரிப்பார்களா?

மார்பகத்தில் வாய் வைத்துக் குடித்தாலே பால்குடி உறவு ஏற்படும் என்ற திர்மிதீ ஹதீஸை முன்னர் கூறியுள்ளோம். அதற்கு மாற்றமாகவும் இவ்விளக்கம் உள்ளது.

இந்த ஹதீஸை அறிவிக்கும் இப்னு அபீமுலைக்கா என்பவர் ஒரு வருடம் வரை இதன் விபரீதத்திற்குப் பயந்து மக்களுக்கு அறிவிக்காமல் இருந்ததாகக்



கூறப்பட்டுள்ளது.

கறந்து கொடுப்பது இதன் பொருள் என்றால் அதற்காக ஏன் பயப்பட வேண்டும்?

கறந்து கொடுத்தார்கள் என்று பொருள் கொண்டாலும் அதுவும் குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமாகவுள்ளதே? அதற்கு என்ன பதில்?

இரண்டு ஆண்டுகளுக்குள் பால் குடித்தால் தான் பால் குடி உறவு ஏற்படும் என்பது இப்போதும் மறுக்கப்படுவதாகத் தானே அமையும்?

கறந்து கொடுத்தார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அப்போதும் இவர்கள் தப்பிக்க முடியாது. இவர்கள் எதை விட்டும் விரண்டு ஓடுகிறார்களோ அதை இப்போதும் சந்தித்தே ஆக வேண்டும்.

ஒரு அன்னியப் பெண்ணுடன் ஒரு இளைஞன் தனித்திருக்கும் போது மாட்டிக் கொள்கிறான். நான் இவனுக்கு பால் கறந்து கொடுத்தேன் என்று சொன்னால் இவர்கள் அதைச் சரிகாண்பார்களா?

ஆனால் இந்த விளக்கம் அவளுக்குத் தெரிந்தால் எனக்குப் பால் சுரக்கும் காலத்தில் இவருக்குக் கறந்து கொடுத்து விட்டேன் என்று கூறுவதற்கு வழியமைத்துக் கொடுக்கிறார்கள்.

இதை நியாயப்படுத்துவோரிடம் நாம் கேட்கிறோம். உங்கள் வீட்டுக்கு வந்து உங்கள் மனைவியுடன் தனித்திருக்க விரும்பும் இளைஞர்களுக்குப் கறந்து பால் கொடுத்து தாயாக்க நீங்கள் உடன்படுவீர்களா? கறந்து கொடுப்பது தான் உங்களுக்குப் பிரச்சினை இல்லையே!

நீங்கள் தான் செய்ய மாட்டீர்கள்! ஒரு இளைஞன் வந்து என் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் அடிக்கடி சந்திக்க வேண்டியுள்ளது. அவளது பாலை நான் கறந்து குடித்து விட்டேன். இனிமேல் நான் சர்வ சாதாரணமாக அவள் வீட்டுக்குப் போகலாம் தானே என்று ஃபத்வா கேட்டால் அதற்கு உங்கள் பதில் என்ன?

இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைக்குப் கறந்து பால் கொடுத்தால் அப்போது கூட பால்குடி உறவு ஏற்படாது என்று ஹதீஸ்கள் கூறும்போது அப்படிக் கூறுவது உச்சகட்ட அறியாமையாக உங்களுக்குத் தோன்றவில்லையா?

பெற்ற பிள்ளைகள் ஸாலிம் வயதை அடைந்து விட்டால் தாயை விட்டு விலகி விடும் போது அந்தக் கட்டுக் கதையை நியாயப்படுத்துவது தான் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளும் முறையா?

இஸ்மாயில் சலபியிடமும், அவருக்கு ஹதீஸ் கலையைத் தப்பும் தவறுமாகச் சொல்லிக் கொடுக்கும் டாக்டர்களிடமும் நாம் கேட்பது இது தான்.

இந்த ஹதீஸைச் சரியான ஹதீஸ் என்கிறீர்களா? இல்லையா?

ஏற்கவில்லை என்று நீங்கள் கூறினால் நீங்களும் ஹதீஸ்களை மறுத்து நுபுவ்வத்தை மறுத்த குற்றத்தைச் செய்தவர்களாவீர்களே?

ஏற்கிறீர்கள் என்றால் இதை ஏற்றதன் மூலம் குர்ஆனை மறுக்கிறீர்களே! நுபுவ்வத்தை மறுப்பதை விட இறைவனை மறுப்பது பயங்கரமான குற்றமாகி விடுமே!

மேலும் பாலூட்டும் சட்டம் தொடர்பான ஏராளமான ஹதீஸ்களை மறுத்து நுபுவ்வத்தையும் நீங்கள் மறுத்தவர்களாவீர்களே!

அதாவது இதை ஏற்க மறுத்தால் ஹதீஸை மறுத்தவர்களாவீர்கள். ஏற்றுக் கொண்டால் ஏராளமான ஹதீஸ்களையும் மறுத்து குர்ஆனையும் மறுத்தவர்களாவீர்கள்.



# நபி (ஸல்) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டதா?

அல்குர்ஆனுக்கு முரண்படுகின்ற செய்திகளில் மிக முக்கிய இடத்திலிருப்பது சூனியம் பற்றிய செய்திகளாகும். மற்ற செய்திகளை விட இவற்றை நம்புவதே மிகப் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. சூனியத்தை உண்மையென்று நம்புவது இறைவனுக்கு இணை வைக்கும் செயலாகும் என்று திருமறைக் குர்ஆனும், நபியவர்களும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

அந்த அடிப்படையில் சூனியத்திற்கு தாக்கம் உண்டு என்ற கருத்துப்பட புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்கள் பற்றிய விபரங்களை சுருக்கமாக இங்கு பார்ப்போம்.

சூனியத்தால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புவது இஸ்லாத்தின் பல அடிப்படைகளைத் தகர்க்கின்றது. அதை அறிவதற்கு முன்னால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்களில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை அறிந்து கொள்வோம்.

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டதாகக் கூறும் சில அறிவிப்புகள் இவை தான்.**

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டது. எந்த **அளவிற்கென்றால் அவர்கள் ஒரு செயலைச் செய்யாமலிருக்க, அதைச் செய்தது போன்று அவர்களுக்கு பிரம்மையூட்டப்பட்டுக் கொண்டே இருந்தது.** இறுதியில் ஒரு நாள், அவர்கள் பிரார்த்தனை செய்த வண்ணமிருந்தார்கள். பிறகு சொன்னார்கள்: என் நிவாரணம் எதில் உள்ளதோ அதை எனக்கு அல்லாஹ் அறிவித்து விட்டதை நீ அறிவாயா? என்னிடம் இரண்டு பேர் வந்தனர். அவர்களில் ஒருவர் என் தலைமாட்டில் அமர்ந்தார். மற்றொருவர் எனது கால்மாட்டில் அமர்ந்தார். ஒருவர் மற்றொருவரிடம் مَا وَجَعُ الرَّجُلِ இந்த மனிதரைப் பீடித்துள்ள வேதனை என்ன? என்று கேட்டார். மற்றொருவர், இவருக்குச் சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்று பதிலளித்தார். அதற்கு

அவர், இவருக்கு சூனியம் வைத்தது யார்? என்று கேட்க, லபீத் பின் அஃஸம் (என்னும் யூதன்) என்று இவர் பதிலளித்தார். எதில்? என்று அவர் கேட்க அதற்கு, சீப்பிலும், (இவரது) முடியிலும், ஆண் (பேரீச்சம்) பாளையின் உறையிலும் என்று அவர் பதிலளித்தார். அதற்கு அவர், அது எங்கே இருக்கிறது என்று கேட்க, (பனூ ஸுரைக் குலத்தாரின் தோட்டத்திலுள்ள) தர்வான்“ எனும் கிணற்றில் என்று பதிலளித்தார்.

(இதைச் சொல்லி முடித்த) பிறகு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் கிணற்றை நோக்கிப் புறப்பட்டார்கள்: பிறகு திரும்பி வந்தார்கள். திரும்பி வந்தபோது என்னிடம், அந்தக் கிணற்றிலிருக்கும் பேரீச்சை மரங்கள் ஷைத்தான்களின் தலைகளைப் போல் உள்ளன என்று கூறினார்கள். அதைத் தாங்கள் வெளியே எடுத்தீர்களா என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், இல்லை: என்னை அல்லாஹ் குணப்படுத்தி விட்டான். (அதை வெளியே எடுத்தால்) அது மக்களிடையே குழப்பத்தைக் கிளப்பி விடும் என்று நான் அஞ்சினேன் என்று பதிலளித்தார்கள். பிறகு, அந்தக் கிணறு தூர்க்கப்பட்டு விட்டது.

நூல் : புகாரி 3268

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு பனூஸுரைக் குலத்தைச் சேர்ந்த லபீத் பின் அஃஸம் என்பான் சூனியம் செய்தான். **இதையடுத்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தாம் செய்திராத ஒன்றைத் தாம் செய்து கொண்டிருந்ததாகப் பிரம்மையூட்டப்பட்டார்கள்.** இறுதியில், அவர்கள் ஒரு நாள் அல்லது ஓரிரவு என்னிடம் வந்தார்கள். ஆயினும், அவர்கள் (என் மீது கவனம் செலுத்தாமல்) தொடர்ந்து பிரார்த்தனை செய்து கொண்டேயிருந்தார்கள். பிறகு (என்னிடம் கூறினார்கள்:) ஆயிஷா! (விஷயம்) தெரியுமா? எந்த விஷயத்தில் தெளிவைத் தரும்படி இறைவனிடம் நான் கேட்டுக் கொண்டிருந்தேனோ அந்த விஷயத்தில் அவன் எனக்குத் தெளிவை அளித்து விட்டான். என்னிடம் (வானவர்கள்) இரண்டு பேர் வந்தனர். அவ்விருவரில் ஒருவர் என் தலைமாட்டிலும் இன்னொருவர் என் கால்மாட்டிலும் அமர்ந்து கொண்டனர். அவ்விருவரில் ஒருவர் தம் தோழரிடம், இந்த மனிதரின் நோய் என்ன? என்று கேட்டார். அத்தோழர், இவருக்குச் சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்று சொல்ல, முதலாமவர் இவருக்குச் சூனியம் வைத்தவர் யார்? என்று கேட்டார். லபீத் பின் அஃஸம் (எனும் யூதன்) என்று இரண்டாமவர் பதிலளித்தார். அவர், எதில் வைத்திருக்கிறான்? என்று கேட்க, சீப்பிலும், சிக்கு முடியிலும், ஆண் பேரீச்சம் பாளையின் உறையிலும் என்று பதிலளித்தார். அவர், அது எங்கே இருக்கிறது? என்று கேட்க, (பனூ ஸுரைக் குலத்தாரின் தோட்டத்திலுள்ள) தர்வான்“ எனும் கிணற்றில் என்று மற்றவர் பதிலளித்தார். இதைச் சொல்லி முடித்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் தோழர்கள் சிலருடன் அந்தக் கிணற்றுக்குச் சென்று (பாளை உறையை வெளியே எடுத்துவிட்டுத் திரும்பி) வந்து, ஆயிஷா! அதன் தண்ணீர் மருதாணிச் சாற்றைப் போல் உள்ளது: அதன் பேரீச்சை மரங்களின் தலைகள் ஷைத்தானின் தலைகளைப் போன்று உள்ளன என்று சொன்னார்கள்.

நான், அல்லாஹ்வின் தூதரே! அ(ந்தப் பாளை உறைக்குள் இருப்ப)தைத் தாங்கள் வெளியே எடுக்கவில்லையா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், அல்லாஹ் எனக்கு (அதன் பாதிப்பிலிருந்து) குணமளித்துக் காப்பாற்றி விட்டான். அதை வெளியே எடுப்பதன் மூலம் மக்களிடையே குழப்பத்தைக் கிளப்பிவிடுவதை நான் வெறுத்தேன் என்று சொன்னார்கள். பிறகு அந்தக் கிணற்றைத் தூர்த்துவிடும்படி அவர்கள் கட்டளையிட அவ்வாறே அது தூர்க்கப்பட்டது.

நூல் : புகாரி 5763

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டது. **அதையடுத்து அவர்கள் தம் துணைவியரிடம் செல்லாமலேயே அவர்களிடம் சென்று வருவதாக நினைக்கலானார்கள்.** –அறிவிப்பாளர்களில் ஒருவரான சுஃப்யான் பின் உயைனா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: அவ்வாறிருந்தால் அது சூனியத்திலேயே கடுமையானதாகும்.–

(ஒரு நாள்) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆயிஷா! (விஷயம்) தெரியுமா? நான் எந்த விஷயத்தில் அல்லாஹ்விடம் தெளிவைத் தரும்படி கேட்டுக் கொண்டிருந்தேனோ, அந்த விஷயத்தில் அல்லாஹ் எனக்குத் தெளிவை வழங்கிவிட்டான். (கனவில் வானவர்கள்) இரண்டு பேர் என்னிடம் வந்து, ஒருவர் என் தலைமாட்டிலும் இன்னொருவர் என் கால்மாட்டிலும் அமர்ந்து கொண்டனர். என் தலைமாட்டில் இருந்தவர் மற்றொருவரிடம், இந்த மனிதரின் நிலையென்ன? என்று கேட்டார். மற்றவர் சூனியம் செய்யப்பட்டுள்ளார் என்று சொன்னார். அதற்கு அவர், யார் அவருக்குச் சூனியம் வைத்தார்? என்று கேட்டார். மற்றவர், யூதர்களின் நட்புக் குலமான பனூ ஸுரைக் குலத்தைச் சேர்ந்த நயவஞ்சகனான லபீத் பின் அஃஸம் என்பவர் என்று பதிலளித்தார். அவர், எதில் (சூனியம் வைக்கப்பட்டுள்ளது)? என்று கேட்க, மற்றவர், சீப்பிலும், சிக்கு முடியிலும் என்று பதிலளித்தார்.

அவர், எங்கே (சூனியம் வைக்கப்பட்டுள்ளது)? என்று கேட்க, மற்றவர், ஆண் பேரீச்சம் பாளையின் உறையில் தர்வான் குலத்தாரின் கிணற்றிலுள்ள கல் ஒன்றின் அடியில் வைக்கப்பட்டுள்ளது என்று பதிலளித்தார்.

பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் கிணற்றுக்குச் சென்று அதனை வெளியே எடுத்தார்கள். பிறகு (என்னிடம் திரும்பி வந்து) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது தான் எனக்குக் (கனவில்) காட்டப்பட்ட கிணறு. இதன் தண்ணீர் மருதாணிச் சாற்றைப் போன்று (கலங்கலாக) உள்ளது. இதன் பேரீச்சை மரங்கள் ஷைத்தான்களின் தலைகளைப் போன்று உள்ளன என்று சொல்லிவிட்டுப் பிறகு அந்தப் பேரீச்சம் பாளை உறை வெளியே எடுக்கப்பட்டது என்றும் கூறினார்கள்.

நான், தாங்கள் ஏன் உடைத்துக் காட்டக் கூடாது? எனக் கேட்டேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் எனக்கு நிவாரணம் அளித்துவிட்டான். மக்களில் எவரையும் குழப்பத்தில் ஆழ்த்த நான் விரும்பவில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

நூல் : புகாரி 5765

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டது. **இதையடுத்து தாம் செய்யாத ஒன்றைச் செய்வது போன்ற பிரம்மை அவர்களுக்கு ஏற்பட்டது.** இறுதியில் ஒரு நாள் அவர்கள் என்னிடம் இருந்த போது அல்லாஹ்விடம் பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தார்கள். பிறகு என்னிடம், ஆயிஷா (விஷயம்) தெரியுமா? எந்த விஷயத்தில் தெளிவளிக்கும்படி அல்லாஹ்விடம் நான் கேட்டுக் கொண்டிருந்தேனோ அந்த விஷயத்தில் அவன் எனக்குத் தெளிவளித்து விட்டான் என்று கூறினார்கள். நான், என்ன அது, அல்லாஹ்வின் தூதரே! என்று கேட்டேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என்னிடம் (வானவர்கள்) இருவர் வந்தனர். அவர்களில் ஒருவர் என்னுடைய தலைமாட்டிலும் இன்னொருவர் என்னுடைய கால்மாட்டிலும் அமர்ந்தனர். பிறகு அவர்களில் ஒருவர் மற்றவரிடம், இந்த மனிதரின் நோய் என்ன? என்று கேட்க, மற்றவர், இவருக்குச் சூனியம் செய்யப்பட்டுள்ளது என்று பதிலளித்தார். முதலாமவர், இவருக்கு யார் சூனியம் வைத்தார்? என்று கேட்க, மற்றவர், பனூ ஸுரைக் குலத்தைச் சேர்ந்த லபீத் பின் அஃஸம் எனும் யூதன் என்று பதிலளித்தார். முதலாமவர், எதில் சூனியம் வைக்கப்பட்டுள்ளது? என்று கேட்க, அடுத்தவர், சீப்பிலும், சிக்குமுடியிலும், ஆண்பேரீச்சம்



பாளையின் உறையிலும் என்று சொன்னார். முதலாமவர், அது எங்கே வைக்கப்பட்டுள்ளது? என்று கேட்க, அடுத்தவர், தூஅர்வான் குலத்தாரின் கிணற்றில் என்று பதிலளித்தார்.

ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்கள் சிலருடன் அந்தக் கிணற்றுக்குச் சென்று அதைக் கூர்ந்து கவனித்தார்கள். சுற்றிலும் பேரீச்சை மரங்கள் இருந்தன. பிறகு ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்து, அந்தக் கிணற்றின் தண்ணீர் மருதாணிச் சாற்றைப் போன்று (கலங்கலாக) இருந்தது. அதன் பேரீச்சை மரங்கள் ஷைத்தானின் தலைகளைப் போன்று இருந்தன என்று சொன்னார்கள். அல்லாஹ்வின் தூதரே! அந்தக் கட்டைத் தாங்கள் திறந்தீர்களா? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், இல்லை: எனக்கோ அல்லாஹ் ஆரோக்கியமளித்து குணப்படுத்தி விட்டான். அதைத் திறந்து காட்டினால் மக்கள் குழப்பமடைந்து விடுவார்களோ என அஞ்சினேன் என்று சொன்னார்கள். பின்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆணையின் பேரில் அக்கிணறு தூர்க்கப்பட்டது.

நூல் : புகாரி 5766

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு (சூனியம் செய்யப்பட்டதால்) **அவர்கள் இன்னின்னவாறு நடந்து கொண்டார்கள். அவர்கள் தம் வீட்டாரிடம் செல்லாமலேயே சென்று வந்ததாகப் பிரம்மையூட்டப்பட்ட நிலையில் நீடித்தார்கள்.** அவர்கள் ஒரு நாள் என்னிடம், ஆயிஷா! நான் எந்த விவகாரத்தில் தெளிவைத் தரும்படி அல்லாஹ்விடம் கேட்டுக் கொண்டிருந்தேனோ அதில் அவன் எனக்குத் தெளிவை அளித்து விட்டான். இரண்டு பேர் என்னிடம் வந்தனர். அவர்களில் ஒருவர் என் கால்மாட்டிலும் மற்றவர் என்னுடைய தலைமாட்டிலும் அமர்ந்தனர். அப்போது என் கால்மாட்டில் அமர்ந்திருந்தவர் என் தலைமாட்டில் அமர்ந்திருந்தவரிடம் (என்னைக் காட்டி), இந்த மனிதரின் நிலை என்ன? என்று கேட்க, மற்றவர், இவருக்குச் சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்று பதிலளித்தார். முதலாமவர், இவருக்குச் சூனியம் வைத்தவர் யார்? என்று கேட்க, மற்றவர், லபீத் பின் அஃஸம் என்று பதிலளித்தார். முதலாமவர், எதில் (சூனியம் வைக்கப்பட்டுள்ளது)? என்று கேட்க, மற்றவர், ஆண் பேரீச்சம் பாளையின் உறை, (தலைவாரும்) சீப்பு, சிக்குமுடி ஆகியவற்றில் (சூனியம்) செய்யப்பட்டு தர்வான்" (குலத்தாரின்) கிணற்றில் ஒரு பாறைக்கடியில் வைக்கப்பட்டுள்ளது என்று பதிலளித்தார்.

ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (தம் தோழர்கள் சிலருடன்

அந்தக் கிணற்றுக்கு) வந்து (பார்த்துவிட்டு), இந்தக் கிணறுதான் எனக்குக் (கனவில்) காட்டப்பட்டது. அந்தக் கிணற்றினைச் சுற்றியிருந்த பேரீச்சம் மரங்களின் தலைகள் ஷைத்தான்களின் தலைகளைப் போன்றிருந்தன. அந்தக் கிணற்றின் தண்ணீர் மருதாணிச் சாற்றைப் போன்றிருந்தது என்று சொன்னார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்தரவிட அது வெளியே எடுக்கப்பட்டது. அல்லாஹ்வின் தூதரே! அ(ந்தப் பாளைத)னைப் பிரித்துப் பார்க்கவில்லையா? என்று நான் கேட்டேன். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் என்னைக் குணப்படுத்தி விட்டான். நானோ மக்களுக்கெதிராகத் வன்மத்தைத் தூண்டி விடுவதை அஞ்சுகிறேன் என்று சொன்னார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைத்தன லபீத் பின் அஃஸம், பனூ ஸுரைக் குலத்தாரிலுள்ள ஒருவன் ஆவான். (அவன்) யூதர்களின் நட்புக் குலத்தவன் ஆவான்.

நூல் : புகாரி 6063

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டது. **இதையடுத்து தாம் செய்யாத ஒன்றைத் தாம் செய்துவிட்டதாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிரம்மையூட்டப்பட்டது.** நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (ஒரு நாள்) தம் இறைவனிடம் பிரார்த்தித்த பிறகு (என்னிடம்), (ஆயிஷா!) தெரியுமா? எந்த விஷயத்தில் தெளிவைத் தரும்படி நான் இறைவனிடம் கேட்டுக் கொண்டிருந்தேனோ அந்த விஷயத்தில் அவன் எனக்குத் தெளிவை அளித்து விட்டான் என்று கூறினார்கள். அதற்கு நான், அது என்ன? அல்லாஹ்வின் தூதரே! என்று கேட்டேன். அப்போது (பின்வருமாறு) கூறினார்கள்:

என்னிடம் (வானவர்கள்) இரண்டு பேர் வந்தனர். அவர்களில் ஒருவர் என் தலைமாட்டிலும், மற்றொருவர் என் கால்மாட்டிலும் அமர்ந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் தம் தோழரிடம், இந்த மனிதரின் நோய் என்ன? என்று கேட்டார். அதற்கு அவருடைய தோழர், இவருக்குச் சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்று பதிலளிக்க, முதலாமவர், இவருக்குச் சூனியம் வைத்தது யார்? என்று வினவினார். அதற்கு லபீத் பின் அஃஸம் என்று தோழர் பதிலளித்தார். அவன் எதில் (சூனியம் வைத்தான்)? என்று கேட்க, சீப்பிலும், சிக்கு முடியிலும், பேரீச்சம் பாளையின் உறையிலும் என்று பதிலளித்தார்.



அவர், அது எங்கே உள்ளது? என்று கேட்க, மற்றவர், தர்வானில் உள்ளது என்றார்.

–தர்வான்“ என்பது பனூஸுரைக் குலத்தாரிடையேயிருந்த ஒரு கிணறாகும்.–

பிறகு அங்கு சென்று (பார்வையிட்டு) விட்டு என்னிடம் வந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மீதாணையாக! அக்கிணற்றின் தண்ணீர் மருதாணிச் சாற்றைப் போன்றுள்ளது. அதன் பேரீச்சை மரங்கள் சாத்தானின் தலையைப் போன்று இருந்தன என்று குறிப்பிட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வந்து என்னிடம் அக்கிணற்றைப் பற்றித் தெரிவித்த போது அல்லாஹ்வின் தூதரே! அ(ந்தப் பாளை உறைக்குள்ள இருப்ப)தைத் தாங்கள் வெளியில் எடுக்கவில்லையா? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், எனக்கோ அல்லாஹ் (அதன் பாதிப்பிலிருந்து) நிவாரணமளித்து விட்டான். மக்களிடையே குழப்பத்தைக் கிளப்பி விடுவதை நான் வெறுத்தேன் என்று சொன்னார்கள்.

நூல் : புகாரி 6391

சூனியத்தின் மூலம் பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்ற கருத்துடையவர்கள் இதைத் தங்களின் முதன்மையான ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள். இந்த ஹதீஸ்களில் சூனியத்தால் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது என்பது இவர்களின் வாதம்.

யூதன் ஒருவன் செய்த சூனியத்தால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள் என்று இந்த ஹதீஸ்கள் கூறுகின்றன. மேற்கண்ட ஹதீஸ்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைக் கூறும் வாக்கியங்களைக் கவனமாகப் பாருங்கள்.

**முதல் ஹதீஸில்**

**எந்த அளவிற்கென்றால் அவர்கள் ஒரு செயலைச் செய்யாமலிருக்க, அதைச் செய்தது போன்று அவர்களுக்கு பிரம்மையூட்டப்பட்டுக் கொண்டு இருந்தது**

என்று சொல்லப்பட்டுள்ளது.

**இரண்டாவது ஹதீஸில்**

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தாம் செய்திராத ஒன்றைத் தாம் செய்து கொண்டிருந்ததாகப் பிரம்மையூட்டப்பட்டவர்களாக ஆனார்கள்**

என்று சொல்லப்பட்டுள்ளது.

**மூன்றாவது ஹதீஸில்**

**தம் துணைவியரிடம் செல்லாமலேயே அவர்களிடம் சென்று வருவதாக நினைக்கலானார்கள்**

என்று சொல்லப்பட்டுள்ளது.

**நான்காவது ஹதீஸில்**

**இதையடுத்து தாம் செய்யாத ஒன்றைச் செய்வது போன்ற பிரம்மை அவர்களுக்கு ஏற்பட்டது**

என்று சொல்லப்பட்டுள்ளது.

**ஐந்தாவது ஹதீஸில்**

**அவர்கள் இன்னின்னவாறு நடந்து கொண்டார்கள். அவர்கள் தம் வீட்டாரிடம் செல்லாமலேயே சென்றுவந்ததாகப் பிரம்மையூட்டப்பட்டுக் கொண்டே இருந்தது.**

என்று சொல்லப்பட்டுள்ளது.

**ஆறாவது ஹதீஸில்**

**இதையடுத்து தாம் செய்யாத ஒன்றைத் தாம் செய்ததாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிரம்மையூட்டப்பட்டுக் கொண்டே இருந்தது**

என்று சொல்லப்பட்டுள்ளது.

**உளவியல், உடலியல் தாக்கங்கள்.**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு யூதன் சூனியம் செய்தான். அதன் காரணமாக அவர்கள் செய்யாததைச் செய்ததாக அவர்களுக்குப் பிரம்மை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது என்றும் தம் மனைவியரிடம் உடலுறவு கொள்ளாமலே உடலுறவு கொண்டதாக அவர்கள் நினைக்கும் அளவுக்கு இந்தப் பாதிப்பு முற்றிப் போய் இருந்தது என்றும் இதில் சொல்லப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் தான் செய்யாததைச் செய்ததாகச் சொல்லிக் கொண்டு இருப்பது மனநோயின் ஒரு வகையாகும். மேலும் மனைவியுடன் சேராமல், சேர்ந்ததாக நினைப்பது கடுமையான மனநோயாகும். இத்தகைய மனநோய் தான் நபியவர்களுக்கு சூனியத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டது என்று இந்த ஹதீஸ்கள் கூறுகின்றன.



மனநோய் மட்டுமின்றி உடல் உபாதையும் ஏற்பட்டதாக முதலாவதாக நாம் குறிப்பிட்ட ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது. مَا وَجَعُ الرَّجُلِ இந்த மனிதரைப் பீடித்துள்ள வேதனை என்ன என்று வானவர்கள் பேசிக் கொண்டதாக இந்த அறிவிப்பில் உள்ளது. (வேதனை என்று மூலத்தில் இருக்க நோய் என்று சிலர் செய்த தமிழாக்கம் தவறானது என்பதைக் கவனத்தில் கொள்க)

**ஆறு மாத கால பாதிப்பு**

இது ஏதோ ஒருநாள் நடந்ததாகச் சொன்னால் அது மனநோய் என்று சொல்ல முடியாது. ஆனால் இது அதிக காலம் நீடித்தது என்று இந்த அறிவிப்புகள் சொல்கின்றன. சில மொழிபயர்ப்பாளர்கள் இந்தக் கருத்துப்படி தமிழாக்கம் செய்யாவிட்டாலும் மூலத்தில் ;கான; என்ற சொல் உள்ளது. இந்த நிலையில் நீடித்தார்கள் என்பது இதன் கருத்தாகும்.

இது எவ்வளவு காலம் நீடித்தது என்று அஹ்மதில் உள்ள பின்வரும் ஹதீஸ் தெளிவாகவும் கூறுகிறது.

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட இந்த நிலை ஆறு மாதங்கள் நீடித்தது**

நூல் : அஹ்மத் 23211

செய்யாததைச் செய்ததாக நினைக்கும் அளவுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆறு மாதகாலம் கடும் பாதிப்பு ஏற்பட்டதாக இந்த ஹதீஸ்கள் சொல்வதால் சூனியத்தினால் எதுவும் செய்ய முடியும் என்று சூனியத்துக்கு ஆற்றல் உள்ளது என்ற கருத்துடையோர் வாதிடுகின்றனர்.

இஸ்லாத்தின் அடிப்படைகளைப் புறக்கணித்து விட்டு இவர்கள் இந்த ஹதீஸ்களை அணுகியுள்ளதால் தான் இவர்களால் இப்படி வாதிட முடிகின்றது. இஸ்லாமிய அடிப்படைக் கொள்கையை மீறாமல் சிந்தித்தால் இந்த ஹதீஸ் கட்டுக்கதை என்ற முடிவுக்குத் தான் அவர்களும் வருவார்கள்.

ஏனெனில் சூனியத்தால் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என நம்பும் போது அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கும் குற்றத்தைச் செய்யும் நிலை ஏற்படுகிறது. திருக்குர்ஆனின் ஏராளமான வசனங்களை நாம் மறுக்கும் நிலை ஏற்படுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டதாக நம்பினால் குர்ஆனின் பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்படுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவம் சந்தேகத்துக்கு உள்ளாக்கப்படுகிறது.

**குர்ஆனில் சந்தேகத்தை ஏற்படுத்தும்**

இஸ்லாத்தின் மிகப் பெரிய அற்புதம் திருக்குர்ஆன். ஒவ்வொரு நபிமார்களும் சில அற்புதங்களைச் செய்வார்கள். அந்த அற்புதங்களைப் பார்த்துவிட்டு அவர் இறைத்தூதர் என மக்கள் நம்புவார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடைசி நபி என்பதால் அவர்களுக்குப் பின் இறைத்தூதர்கள் வர மாட்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று அவர்களின் காலத்துக்குப் பின்னர் வந்தவர்கள் எவ்வாறு நம்புவது? அவர்களுக்கும் ஒரு அற்புதம் வேண்டுமே என்ற கேள்விக்கு அந்த அற்புதம் திருக்குர்ஆன் தான் என்று இஸ்லாம் விடையளிக்கிறது.

**“ஒவ்வொரு இறைத்தூதரும் அற்புதங்களுடன் அனுப்பப்பட்டனர். எனக்கு வழங்கப்பட்ட அற்புதம் திருக்குர்ஆன்” என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

நூல்: புகாரி 4981, 7274

இந்தக் குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து தான் வந்தது என்பதை திருக்குர்ஆனே நிரூபிக்கின்றது. இந்தக் குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்துள்ளது நிரூபணமானால் அதனைக் கொண்டு வந்தவர் அல்லாஹ்வின் தூதர் என்பதும் நிரூபணமாகிவிடும்.

14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் மனிதன் சொல்ல முடியாத செய்திகளையெல்லாம் திருக்குர்ஆன் சொல்லி அது நிரூபணமாகிக் கொண்டு இருக்கின்றது.

திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட அற்புதம் என்று நாம் மெய்யாக நம்பினால் திருக்குர்ஆனில் சந்தேகத்தை ஏற்படுத்தும் எந்த ஒரு செய்தியையும் நாம் தூக்கி எறிந்துவிட வேண்டும்.

எனெனில் சந்தேகம் இல்லை என்பதுதான் திருக்குர்ஆனின் தனித்தன்மை என்று அல்லாஹ் 2:2, 10:37, 32:2 வசனங்களில் அடையாளப்படுத்துகிறான்.

இந்தக் கருத்தில் இன்னும் பல வசனங்கள் உள்ளன.

திருக்குர்ஆனில் முஸ்லிமல்லாத பலருக்குச் சந்தேகம் உள்ளதை நாம் அறிகிறோம். எனவே இதில் ஒருவருக்கும் சந்தேகம் இல்லை என்ற கருத்தில் இது சொல்லப்படவில்லை. இதில் சந்தேகம் கொள்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. இதற்கு எதிராக எழுப்பப்படும் எந்தச் சந்தேகத்துக்கும் இஸ்லாத்தில் விடை உண்டு என்பதுதான் இதன் பொருள்.

மனிதர்களுக்கு நல்வழி காட்டுவதற்காக குர்ஆனை அல்லாஹ் அருளியுள்ளதால் மனிதர்கள் நம்பும் வகையில் அது இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் அவர்கள் வேதம் என்று அதை நம்பி நேர்வழிக்கு வருவார்கள். எனவேதான் இதில் சந்தேகம் இல்லை என்பதை முக்கியமான வாதமாக அல்லாஹ் வைக்கிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆறுமாத காலம் மனநோயாளியாக ஆக்கப்பட்டு, தாம் செய்யாததைச் செய்ததாகச் சொல்லும் அளவுக்கு பாதிப்பு அடைந்திருந்தால் அந்த ஆறு மாத காலத்தில் அவர்களுக்கு அருளப்பட்ட வசனங்களில் சந்தேகத்தைக் கிளப்ப முடியும்.

அந்த ஆறுமாத காலம் எது என்பது குறித்து சூனியத்தை நம்புவோரிடம் ஆதாரம் இல்லாததால் மதீனாவில் அருளப்பட்ட வசனங்கள் அனைத்தும் அந்த ஆறு மாதங்களில் அருளப்பட்டு இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படும்.

திருக்குர்ஆன் இறைவேதமாக இருக்க முடியாது என்று சந்தேகம் ஏற்படுவதை அல்லாஹ் சாதாரணமாக எடுத்துக் கொள்ள மாட்டான் என்பதால் தான் இந்தக் குர்ஆனைப் போல் கொண்டு வா என்று அறைகூவல் விடுகிறான். இதை 2:23, 10:38, 11:13, 17:88, 52:33,34 ஆகிய வசனங்களில் காணலாம்.

முஹம்மது சுயமாக இட்டுக்கட்டி விட்டு அல்லாஹ்வின் வேதம் எனக் கூறுகிறார் என்று எதிரிகள் விமர்சனம் செய்தபோது நீ என்ன விமர்சனம் வேண்டுமானாலும் செய்துகொள்! முஸ்லிம்கள் நம்பினால் போதும் என்று அல்லாஹ் நினைக்கவில்லை. அந்தச் சந்தேகத்தை நீக்கத்தக்க அறைகூவலை விட்டு இது இறைவேதமே என நிரூபிக்கிறான்.

அதுபோல் திருக்குர்ஆனுக்கு எதிராக மற்றொரு சந்தேகத்தையும் அன்றைய எதிரிகள் எழுப்பினார்கள். எழுதப்படிக்கத் தெரியாத முஹம்மதுக்கு இந்த விஷயங்கள் தெரிய வாய்ப்பு இல்லை: எனவே வெளியூரில் இருந்து ஒருவர் வந்து இவருக்குக் கற்றுக் கொடுத்துச் செல்கிறார். அதைத்தான் முஹம்மது வேதம் எனச் சொல்கிறார் என்று விமர்சனம் செய்து திருக்குர்ஆனில் சந்தேகத்தை ஏற்படுத்தினார்கள்.

முஸ்லிமல்லாதவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் எனக்கு என்ன என்று அல்லாஹ் எடுத்துக் கொள்ளவில்லை. அந்தச் சந்தேகத்தை நீக்கும்

வகையில் தக்க பதில் கூறுகிறான்.

**இது முன்னோர்களின் கட்டுக்கதை. இதை இவர் எழுதச் செய்து கொண்டார். காலையிலும், மாலையிலும் அது இவருக்கு வாசித்துக் காட்டப்படுகிறது எனவும் கூறுகின்றனர்.**

திருக்குர்ஆன் 25:4,5

**நம்பிக்கையாளர்களைப் பலப்படுத்திடவும், முஸ்லிம்களுக்கு நேர்வழியாகவும், நற்செய்தியாகவும் இதை உமது இறைவனிடமிருந்து ரூஹுல் குதுஸ் (ஜிப்ரீல்) உண்மையுடன் இறக்கினார் என்பதை (முஹம்மதே!) கூறுவீராக! "ஒரு மனிதர் தான் இவருக்குக் கற்றுக் கொடுக்கிறார்" என்று அவர்கள் கூறுவதை அறிவோம். யாருடன் இதை இணைக்கிறார்களோ அவரது மொழி வேற்று மொழியாகும். இதுவோ தெளிவான அரபு மொழியாகும்.**

திருக்குர்ஆன் 16:102, 103

திருக்குர்ஆனின் உயர்ந்த அரபுமொழி நடையை எடுத்துக் காட்டி, வேறு மொழி பேசுபவன் எப்படி இதைக் கற்றுக் கொடுத்திருக்க முடியும் என்று கேட்டு அல்லாஹ் அவர்களை வாயடைக்கச் செய்தான்.

திருக்குர்ஆனில் சந்தேகம் ஏற்படுத்தும் விஷயங்களுக்கெல்லாம் ஏற்கத்தக்க மறுப்பை அளித்த இறைவன் தனது தூதரை மனநோயாளியாக்கி சொல்லாததைச் சொல்ல வைத்து அவனே திருக்குர்ஆனில் சந்தேகத்தை ஏற்படுத்துவானா?

இதைச் சிந்தித்தால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டதாகக் கூறப்படுவது கட்டுக்கதை என்று தெரிந்துவிடும்.

திருக்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து தான் அருளப்பட்டது என்பதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் ஏற்படக் கூடாது என்பதற்கு அல்லாஹ் அளிக்கும் முக்கியத்துவத்தை அவர்களை எழுதப்ப டிக்கத் தெரியாதவராக ஆக்கி இருப்பதில் இருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

எழுதுதலும், படித்தலும் மனிதனுக்கு அவசியம் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான்.

அல்லாஹ்விடமிருந்து முதன்முதலில் வந்த வசனங்களே இது பற்றித்தான் பேசுகின்றன.

**அவனே எழுதுகோலால் கற்றுத் தந்தான். அறியாதவற்றை மனிதனுக்குக் கற்றுத் தந்தான்.**

திருக்குர்ஆன் 96:4,5



**எழுதுகோல் மீதும்,** அவர்கள் எழுதுவதன் மீதும் சத்தியமாக

திருக்குர்ஆன் 68:1

எழுத்தின் மூலம் தான் அறிவைப் பெருக்கவும், கற்றுக் கொள்ளவும், கற்றுக் கொடுக்கவும் இயலும் என்று சொல்லும் அல்லாஹ் நபியவர்களுக்கு மட்டும் அந்தப் பாக்கியத்தைக் கொடுக்கவில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக அல்லாஹ் ஏன் ஆக்கினான்? இதற்கான விடையை அல்லாஹ் பின்வரும் வசனத்தில் சொல்கிறான்.

**இவ்வாறே உமக்கு இவ்வேதத்தை அருளினோம். நாம் யாருக்கு வேதத்தை வழங்கினோமோ அவர்கள் இதை நம்புகின்றனர். (வேதம் கொடுக்கப்படாத) இவர்களிலும் இதை நம்புவோர் உள்ளனர். (நம்மை) மறுப்போரைத் தவிர வேறு எவரும் நமது வசனங்களை நிராகரிப்பதில்லை. (முஹம்மதே!) இதற்கு முன் எந்த வேதத்திலிருந்தும் நீர் வாசிப்பவராக இருந்ததில்லை. (இனியும்) உமது வலது கையால் அதை எழுதவும் மாட்டீர்! அவ்வாறு இருந்திருந்தால் வீணர்கள் சந்தேகம் கொண்டிருப்பார்கள். மாறாக, இவை தெளிவான வசனங்கள். கல்வி வழங்கப்பட்டோரின் உள்ளங்களில் இருக்கின்றன. அநீதி இழைத்தோரைத் தவிர வேறு எவரும் நமது வசனங்களை மறுக்க மாட்டார்கள்.**

திருக்குர்ஆன் 29:47,48,49

படிப்பறிவு மனிதர்களுக்குக் கூடுதல் தகுதியை ஏற்படுத்துவதாக இருந்தாலும் அல்லாஹ்வின் தூதராக நியமிக்கப்பட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் படிப்பறிவு இல்லாமல் இருப்பது தான் சிறப்பாகும்.

எனக்கு இறைவனிடமிருந்து தூதுச்செய்தி வருகிறது என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். அந்தச் செய்தி மிகவும் உயர்ந்த இலக்கியத் தரத்தில் அமைந்திருந்தது. இதுபோல் யாராலும் இயற்ற முடியாது என்று அறைகூவல் விடும் அளவுக்கு அதன் தரம் இருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படித்தவராக இருந்திருந்தால் தமது படிப்புத் திறமையினால் இதை இயற்றியுள்ளார் என்று மக்கள் நினைத்திருப்பார்கள். இதனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திறமைசாலி என்பது நிரூபணமாகுமே தவிர அல்லாஹ்வின் தூதர் என்பது நிரூபணமாகாது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபுமொழிப் பண்டிதர் என்பதை விட அல்லாஹ்வின் தூதர் என்பதுதான் பல்லாயிரம் மடங்கு சிறந்த தகுதியாகும்.

அவர்களுக்கு எழுதவோ, படிக்கவோ தெரிந்திருந்தால் அவர்களை

நேரடியாகக் கண்ட மக்களில் பலர் அவர்களை அல்லாஹ்வின் தூதர் என்றும், அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியை அல்லாஹ்வின் வேதம் என்றும் ஏற்றிருக்க மாட்டார்கள்.

“எழுதப் படிக்கத் தெரியாதவர் இவ்வளவு உயர்ந்த தரத்தில் செய்திகளைக் கூறுகிறாரே! நிச்சயமாக இவரது திறமையால் இது உருவாக்கப்பட்டிருக்கவே முடியாது. இவர் கூறுவது போல் இது இறைவனது செய்தியாகத்தான் இருக்க முடியும்” என்று அன்றைய மக்கள் நம்பியதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படிப்பறிவின்மையே முக்கியக் காரணமாக இருந்தது.

எழுத்தறிவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இருந்தால் குர்ஆன் இறைவேதம் என்ற நம்பிக்கையை அது பாதிக்கும் என்பதற்காகவே அல்லாஹ் இந்தப் பாக்கியத்தை அவர்களுக்குத் தரவில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆறுமாதம் மனநோய் ஏற்பட்டதாக நாம் நம்பினால் அதைவிட அதிக சந்தேகத்தை குர்ஆனில் அது ஏற்படுத்தும். எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டது என்று கூறப்படுவது முற்றிலும் பொய்யானது: கட்டுக்கதை என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

அதே போன்று குர்ஆனில் முரண்பாடுகள் இல்லை (4:82) என்றும், சிந்திக்க மாட்டீர்களா? (4:82, 17:41, 21:10, 23:68, 25:73, 38:29, 47:24) என்றும், தவறுகள் வராது (41:42), இது பாதுகாக்கப்பட்ட வேதம் (15:9, 18:1, 39:28, 41:42, 75:17) என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது.

இவை அனைத்துமே குர்ஆனில் சந்தேகம் ஏற்படக் கூடாது என்பதை அடித்துச் சொல்லும் வசனங்களாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆறுமாத காலம் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தால், ‘‘வீனர்கள் சந்தேகப்படுவார்கள்;; என்பதற்கு ஏற்ப அந்த வீனர்கள் இந்த ஆறுமாத காலத்தில் அருளப்பட்ட வசனங்களைச் சந்தேகித்திருப்பார்கள்.

மனநோய் பாதிப்பினால் அல்லாஹ் சொல்லாததை அல்லாஹ் சொன்னதாக ஏன் முஹம்மது சொல்லி இருக்க மாட்டார் என்று கேட்க எதிரிகளுக்கு அல்லாஹ் வாய்ப்பளித்திருக்க மாட்டான்.

மனதில் பதியவைத்துக் கொள்ளும் ஆற்றலை மற்றவர்களை விட அதிகமாக அல்லாஹ் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கி இருந்தான்.



குர்ஆனைப் பாதுகாப்பதற்காக எந்த மனிதருக்கும் வழங்காத கூடுதல் ஆற்றலை நபியவர்களுக்கு வழங்கி அவர்களைப் பலப்படுத்தியதாக 75:17-19 வசனங்களில் அல்லாஹ் கூறுகிறான். ஆனால் அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டதாகக் கூறும் செய்தி அவர்களின் உள்ளத்தை பலவீனத்திலும் பலவீனமாக ஆக்கிக் காட்டுகிறது.

பலமான உள்ளத்தை அல்லாஹ் கொடுத்திருக்க, சூனியத்தை நம்பும் கூட்டம் நபி அவர்களுக்குப் பலவீனமான உள்ளம் இருந்ததாகச் சித்தரிக்கின்றது.

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மனநோய் வராது**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைத்தூதராக ஏற்க மறுத்தவர்கள் அவர்களைப் பைத்தியம் என்று சொன்னார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டு அதனால் அவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டதாகக் கூறுபவர்கள் அதைத் தான் வேறு வார்த்தையில் சொல்கிறார்கள்.

ஒரு செய்தி பல சொல்லமைப்புகள் மூலம் சொல்லப்படுவது வழக்கத்தில் உள்ளது தான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மனநோய் ஏற்பட்டது என்ற சொல் நேரடியாக அந்தச் செய்தியில் இல்லாவிட்டாலும் அந்தக் கருத்தைத் தவிர வேறு கருத்து அதில் இல்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் செய்யாததைச் செய்ததாக ஆறுமாத காலம் சொல்லிக் கொண்டு இருந்தார்கள் என்பதும் ஆறுமாதம் மனநோயாளியாக இருந்தார்கள் என்று சொல்வதும் ஒரே கருத்தைச் சொல்லும் இருவேறு சொல் வடிவங்கள் தான்.

நபி அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துள்ளது என்று மக்கள் சொன்னவுடன் அல்லாஹ் கோபப்படுகின்றான்.

எனவே (முஹம்மதே!) அறிவுரை கூறுவீராக! உமது இறைவனின் பேரருளால் நீர் சோதிடர் அல்லர். பைத்தியக்காரரும் அல்லர்.

திருக்குர்ஆன் 52:29

நபி அவர்களை அல்லாஹ் பைத்தியமாக ஆக்க மாட்டான் என்று இவ்வசனத்தில் தெளிவாகச் சொல்லியுள்ளான்.

நூன். எழுதுகோல் மீதும், அவர்கள் எழுதுவதன் மீதும் சத்தியமாக, (முஹம்மதே!) உமது இறைவனின் அருட்கொடையால் நீர் பைத்தியக்காரராக இல்லை. உமக்கு முடிவுறாத கூலி உண்டு. நீர் மகத்தான குணத்தில்

இருக்கிறீர்.

திருக்குர்ஆன் 68:1-6

அவர்களின் தோழருக்கு (முஹம்மதுக்கு) எந்தப் பைத்தியமும் இல்லை என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? அவர் தெளிவான எச்சரிக்கை செய்பவரே.

திருக்குர்ஆன் 7:184

இவ்வசனங்களை ஊன்றிக் கவனியுங்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பைத்தியம் பிடிக்காது என்றும், இது அவர்களுக்கு அல்லாஹ் செய்த அருள் என்றும் இவ்வசனங்கள் கூறுகின்றன. யாருக்காவது சந்தேகம் இருந்தால் அவரைக் கவனித்து அவரது ஒவ்வொரு நடவடிக்கையையும் சிந்தித்துப் பார்க்கட்டும். அவருக்கு எந்த வகையான மனநோயும் இல்லை என்று அறிந்து கொள்வார்கள் என்று இவ்வசனத்தில் அல்லாஹ் அறைகூவல் விடுக்கிறான்.

இவர்களுக்கு மரண அடியாக அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள்.

"நீங்கள் இருவர் இருவராகவோ, தனித் தனியாகவோ அல்லாஹ்வுக்காக சற்று நேரம் ஒதுக்கி பின்னர் "உங்கள் தோழருக்கு (எனக்கு) பைத்தியம் எதுவுமில்லை: கடுமையான வேதனைக்கு முன் அவர் உங்களுக்கு எச்சரிக்கை செய்பவரே தவிர வேறில்லை என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தையே உங்களுக்குப் போதிக்கிறேன்" எனக் கூறுவீராக!

திருக்குர்ஆன் 34:46

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டு அவர்கள் மனநோயாளியாக ஆனார்கள் என்று சொல்பவர்களே! ஒவ்வொருவராக வந்து, அல்லது இருவர் இருவராக வந்து முஹம்மது நபியைச் சோதித்துப் பாருங்கள். ஒவ்வொருவரும் அவரிடம் எந்த வகையான கேள்வியையும் கேட்டுப் பாருங்கள். அவர் மனநோயாளி போல் பதில் சொல்கிறாரா? மாமேதை போல் பதில் சொல்கிறாரா? என்று சோதித்துப் பார்த்தால் அவருக்கு எந்த வகையான மனநோயும் இல்லை என்று அறிந்து கொள்வீர்கள் என்று அல்லாஹ் அறைகூவல் விடுக்கிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டதால் அவர்கள் மனநோயாளியானார்கள் என்ற செய்தி கட்டுக்கதை என்பதற்கு இந்த ஒருவசனமே போதிய ஆதாரமாக உள்ளது.



யூதர்கள் எப்படியாவது இஸ்லாத்தை வீழ்த்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருந்தார்கள். சின்னச் சின்ன சந்தர்ப்பங்களையும் அதற்குப் பயன்படுத்தத் தயாராக இருந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆறு மாத காலம் மனநோயாளியாக இருந்தார்கள் என்றால், அந்த மனநோய் யூதர்களின் மந்திர சக்தியால் ஏற்பட்டது என்றால் இந்த வாய்ப்பை அவர்கள் ஒருக்காலும் நழுவ விட்டிருக்க மாட்டார்கள்.

நாங்கள் உங்களது இறைத்தூதரை எப்படி ஆக்கிவிட்டோம் பார்த்தீர்களா? இன்னுமா அவரை இறைத்தூதர் என்று நம்புகிறீர்கள்? என விமர்சித்திருப்பார்கள்.

இப்படி ஒருவர் கூட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விமர்சிக்கவில்லை.

இப்படி நாம் கேள்வியெழுப்பினால் சூனியத்தால் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்ற கருத்துடையோர் இதற்கும் ஒரு பதிலைச் சொல்லி நபியவர்களை மனநோயாளியாகக் காட்டியே தீர்வது என்பதில் குறியாக உள்ளனர்.

நபியவர்களுக்கு ஏற்பட்ட மனநோய் மனைவிமார்களுக்கு மட்டுமே தெரிந்த ஒன்றாக இருந்தது. மக்களில் யாருக்கும் தெரியாததால் இது போன்ற விமர்சனம் வரவில்லை என்கிறார்கள்.

சூனியம் வைத்து மனநோயாளியாக ஆக்கினானே அந்த யூதனுக்குக் கூடவா தெரியாமல் போய் விட்டது?

அவன் தனது கூட்டத்தாரிடம் சொல்லி பெருமையடித்து இருக்க மாட்டானா?

இதைக் கூட அறியாத ஞானசூன்யங்களாக மாறி இக்கேள்வியைக் கேட்கிறார்கள்.

பொதுவாக தலைவர்களுக்கு அதிகமான பாதுகாப்பு கொடுக்கப்படுவது உலகத்தில் வழக்கம். மக்கள் அவர்களை எளிதில் அணுக முடியாது. இந்த நிலையில் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்தால் அதை மக்களுக்குத் தெரியாமல் மறைக்க முடியும்.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதுபோல் மக்களால் அணுக முடியாத நிலையில் இருந்தார்களா? நிச்சயமாக இல்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களோடு மக்களாக இருந்தார்கள். தினமும் ஐந்து வேளைத் தொழுகைக்கும் பள்ளிவாசலுக்கு வருவார்கள்.

யார் வேண்டுமானாலும் அவர்களைச் சந்திக்கலாம். முனாபிக்குகள் கூட பள்ளிவாசலுக்கு வந்து தொழக் கூடியவர்களாக இருந்தனர்.

இப்படியிருக்கும் போது இந்த ஆறுமாத பாதிப்பு மக்கள் அனைவரையும் எளிதில் சென்றடைந்திருக்கும். இதனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட மனநோய் மக்களுக்குத் தெரிந்திருக்கும்.

இதற்கு முன்பு ஆதாரமில்லாமல் தான் முஹம்மது நபியைப் பைத்தியம் என்று சொன்னோம். இப்போது அவர்களின் மனைவியே சொல்லி விட்டார்கள் என்று ஆட்டம் போட்டிருக்க மாட்டார்களா? மக்களை இஸ்லாத்திற்கு வராமல் தடுக்க முயற்சித்திருக்க மாட்டார்களா? இஸ்லாத்தில் உள்ள மக்களில் சிலராவது மீண்டும் பழைய நிலைக்கே சென்றிருப்பார்களே?

இது போன்று எந்தச் செய்தியும் எந்த நூலிலும் பதிவு செய்யப்படவில்லை.

குர்ஆனை நாமே இறக்கினோம். நாமே பாதுகாப்போம் என்று அல்லாஹ் சொல்லிக் காட்டுகின்றான். (பார்க்க 15:9)

குர்ஆனைப் பாதுகாப்பது என்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தைப் பாதுகாக்க வேண்டும். அவர்களின் உள்ளம் சிதைந்து விட்டது என்று சொன்னால் செய்திகளும் சிதைந்து விடும். அப்போது குர்ஆனைப் பாதுகாப்பதாக இறைவன் சொன்னதில் இது சந்தேகத்தை ஏற்படுத்தும்.

மாபெரும் அற்புதமாகத் திகழும் திருக்குர்ஆன் மீது எத்தகைய சந்தேகத்தை ஏற்படுத்தினாலும் எனக்குக் கவலை இல்லை என்ற நிலையில் இருப்பவர்கள் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டதாகவும், அதனால் அவர்கள் மனநோயாளியாக ஆனதாகவும் நம்ப முடியும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு யூதர்கள் சூனியம் செய்து அவர்களை மனநோயாளியாக ஆக்கி விட்டார்கள் என்று அறியும் முஸ்லிமல்லாத மக்கள் இஸ்லாத்தை ஏற்பார்களா? நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அற்புத சக்தி பெற்ற யூதர்களிடம் செல்வார்களா?

ஒரு தந்தை தனது சொத்தை ஒரு மகனுக்கு எழுதி வைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரது மற்ற மகன்கள் தனது தந்தைக்குப் பைத்தியம் பிடித்து இருந்த போது தான் எழுதிக் கொடுத்தார் என்று ஒரு ஆதாரத்தை உருவாக்கி நீதிமன்றம் நம்பும் வகையில் எடுத்து வைத்தால் அந்த மகனுக்கு சொத்தை எழுதி வைத்தது செல்லாது என்று தீர்ப்பு அளிக்கப்படும்.

உலக நாடுகள் அனைத்திலும் இதுதான் சட்டம். முஸ்லிம் நாடுகளிலும்



இதுதான் சட்டம்.

பைத்தியம் என்ற நிலையை ஒருவர் அடைந்தால் அவரது எல்லா கொடுக்கல் வாங்கலும் செல்லத் தகாததாக ஆகிவிடுகிறது.

சொத்து விஷயங்களில் சரியாக இதைப் புரிந்து வைத்திருக்கும் நாம் மார்க்க விஷயத்தில் மட்டும் மூளையை அடகு வைத்து விட்டு ஏறுக்கு மாறாகச் சிந்திப்பது சரிதானா?

குர்ஆன் பாதுகாக்கப்பட்டது என்பதையும் நான் நம்புவேன். பாதுகாக்கப்படவில்லை என்பதையும் நம்புவேன் என்று ஒருவன் கூறமுடியுமா?

அல்லாஹ்வைப் போல் எவனும் எந்த விஷயத்திலும் செயல்பட முடியாது என்றும் நம்புவேன். அவ்வாறு சூனியக்காரன் மட்டும் செயல்படுவான் என்றும் நம்புவேன் என்று அறிவுள்ள யாராவது சொல்வார்களா?

திருக்குர்ஆன் மீது அதிகளவு நம்பிக்கை வைத்திருப்பவனும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிக அளவு மரியாதை வைத்திருப்பவனும் அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டது என்று எப்படி நம்புவான்?

இப்படி நாம் கேட்கும் போது சூனியத்தால் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையுடையோர் எதிர்க்கேள்வி ஒன்றை எழுப்புவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மறதி இருந்திருக்கிறது. மறதியின் காரணமாக குர்ஆன் வசனங்களை மறந்திருக்க மாட்டார்களா என்று முஸ்லிமல்லாதவர்கள் கேள்வி கேட்க மாட்டார்களா? இதன் காரணமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மறதி ஏற்படவில்லை என்று சொல்வீர்களா? என்பது தான் அந்த எதிர்க்கேள்வி.

ஒருவருக்குப் பைத்தியம் பிடிப்பதும், சில விஷயங்களை ஒருவர் மறந்து விடுவதும் இவர்களுக்குச் சமமாகத் தெரிகின்றது.

மறதி என்பது உள்ளதில் குறைவு ஏற்படுத்துவது. மனநோய் என்பது இல்லாததை இருப்பதாகக் கூறுவது.

இத்தகைய மனநோய் தான் நபியவர்களுக்கு ஏற்பட்டது என்று சூனியக் கட்சியினர் கூறுகிறார்கள். வஹீ வராமல் இருந்து வஹீ என்று சொல்லி இருப்பார்கள் என்பது மறதியைப் போன்றதா?

மறதி ஏற்பட்டால் அல்லாஹ்வின் வசனங்களில் எது நமக்கு சேர வேண்டும்

என அல்லாஹ் நாடினானோ அது வந்து சேர்ந்து விடும்.

மனநோய் என்பது அல்லாஹ் சொல்லாமல் இருந்தும் அல்லாஹ் சொன்னதாக நபியவர்களுக்குத் தோன்றி அதைக் குர்ஆன் என்று சொல்லி இருக்கலாம் என்று ஒவ்வொரு வசனத்திலும் சந்தேகத்தை ஏற்படுத்தும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மறதி ஏற்பட்டால் இப்போது குர்ஆனில் உள்ள எந்த வசனத்திலும் சந்தேகம் வராது.

இந்த வித்தியாசத்தை இவர்கள் உணர வேண்டும்.

இதை அல்லாஹ்வும் தெளிவாக கூறுகிறான்.

2:106 வசனத்தில் எந்த வசனத்தையாவது நாம் மாற்றினால் அல்லது மறக்கச் செய்தால் அதைவிடச் சிறந்ததை அருளுவேன் என்று அல்லாஹ் கூறுகிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் நாட்டப்படி சிலதை மறந்து விட்டால் அவர்கள் மறக்காமல் எதை மக்கள் மத்தியில் வைத்தார்களோ அதுதான் குர்ஆன் என்று இவ்வசனம் தெளிவாகக் கூறுகிறது.

அவர்கள் மக்களிடம் சொல்லாதது குர்ஆன் அல்ல என்று கூறுவதில் எந்தக் குழப்பமும் இல்லை.

**சூனியம் செய்யப்பட்டதை மறுக்கும் திருக்குர்ஆன்**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், முந்தைய நபிமார்களும் தம்மை அல்லாஹ்வின் தூதர் என்று சொன்னபோது, அதை ஏற்க மறுத்த எதிரிகள் சொன்ன காரணங்கள் என்ன?

சாப்பிடுகிறீர்கள்,

பருகுகிறீர்கள்,

எங்களைப் போல் மனிதர்களாக இருக்கிறீர்கள்,

நீங்கள் சோதிடக்காரர்கள்

திறமை வாய்ந்த புலவர்கள்

உங்களுக்கு யாரோ சூனியம் வைத்ததால் இப்படி புத்தி பேதலித்து உளறுகிறீர்கள்



என்று சொன்னார்கள்.

இவர்களின் மற்ற விமர்சனங்களை ஏற்றுக் கொண்ட அல்லாஹ் நபிமார்களுக்குச் சூனியம் செய்யப்பட்டுள்ளது என்று கூறுவதையும், சோதிடக்காரர், புலவர் என்று கூறுவதையும் கடுமையான சொற்களால் மறுக்கிறான்.

இது பற்றி விபரமாகப் பார்ப்போம்.

17:94, 21:3, 23:33, 23:47, 25:7, 26:154, 26:186, 36:15 ஆகிய வசனங்களில் நபிமார்கள் எங்களைப் போன்ற மனிதர்களாக உள்ளனர். அவர்களை எப்படி இறைத்தூதர்கள் என்று நாங்கள் நம்ப முடியும் என மக்கள் கேட்டதை அல்லாஹ் எடுத்துக் காட்டுகிறான்.

மக்கள் இப்படிக் கூறியதற்கு அல்லாஹ் பதில் கூறும்போது, அவர்களை மனிதர்கள் என்று எப்படி சொல்லலாம் என்று கண்டிக்கவில்லை. மாறாக அவர்கள் மனிதர்கள் தான். மனிதர்களைத் தான் தூதர்களாக அனுப்புவோம் என 14:11, 17:93, 22:7,8, ஆகிய வசனங்களில் பதிலளித்தான்.

சூனியத்தால் பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்று நம்புபவர்களாக மக்கள் இருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொர்க்கம், நரகம் போன்றவற்றை மக்களுக்குச் சொன்னபோது அது அவர்களின் அறிவுக்கு எட்டாமல் இருந்ததால் இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று கூறினார்கள்.

நபிமார்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டது என்று சொல்லப்பட்ட போதும், நபிமார்களுக்கு மனநோய் ஏற்பட்டது என்று சொல்லப்பட்ட போதும் அல்லாஹ் அதைக் கடுமையாக மறுக்கிறான்.

“சூனியம் செய்யப்பட்ட ஒரு மனிதனையே பின்பற்றுகிறீர்கள்” என்று அநீதி இழைத்தோர் இரகசியமாகக் கூறியதையும், (முஹம்மதே!) உம்மிடம் அவர்கள் செவியேற்ற போது எதைச் செவியேற்றார்களோ அதையும் நாம் நன்கு அறிவோம்.

திருக்குர்ஆன் 17:47

அல்லது இவருக்கு ஒரு புதையல் வழங்கப்பட்டிருக்கக் கூடாதா? அல்லது இவருக்கு ஒரு தோட்டம் இருந்து அதிலிருந்து இவர் உண்ணக் கூடாதா?” என்றும் “சூனியம் செய்யப்பட்ட மனிதரையே பின்பற்றுகிறீர்கள்” என்றும் அநீதி இழைத்தோர் கேட்கின்றனர்.

திருக்குர்ஆன் 25:8

“நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டது” என விமர்சனம் செய்தவர்களை அநியாயக்காரர்கள் என்று இவ்வசனங்கள் பிரகடனம் செய்கின்றன.

“இறைத்தூதர்களுக்கு சூனியம் வைப்பது சாதாரண விஷயம்: அதனால் அவரது தூதுப்பணிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றிருந்தால் இந்த விமர்சனத்தை இறைவன் மறுக்க மாட்டான்.

இறைத்தூதர் சாப்பிடுகிறார்: குடிக்கிறார் என்று விமர்சனம் செய்யப்பட்ட போது, சாப்பிடுவதாலோ, குடிப்பதாலோ தூதுப்பணிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பதால் அதை இறைவன் மறுக்கவில்லை. எல்லாத் தூதர்களும் சாப்பிடத்தான் செய்தார்கள் என்று பதிலளித்தான்.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் வைக்கப்பட்டதாகக் கூறிய போது, அநியாயக்காரர்கள் இப்படிக் கூறுகிறார்களே என்று மறுத்துரைக்கிறான். சூனியம் வைக்கப்பட்டு இறைத்தூதர் பாதிக்கப்பட்டால் அது தூதுப்பணியைப் பாதிக்கும் என்பதால் தான் இதை மறுக்கிறான்.

“இந்த வசனம் அருளப்படும் போது சூனியம் வைக்கப்படாமல் இருந்து, பின்னர் சூனியம் வைக்கப்பட்டிருக்கலாம் அல்லவா?” என்று சிலர் பேசுவார்கள். இது ஏற்க முடியாததாகும்.

பின்னர் சூனியம் வைக்கப்படும் என்றால் அது நிச்சயம் இறைவனுக்குத் தெரிந்திருக்கும். நாளைக்குச் சூனியம் வைக்கப்படுவதை அறிந்துள்ள இறைவன் இன்றைக்கு அதை மறுப்பதால் எந்த நன்மையும் இல்லை.

மேற்கண்ட இரண்டு வசனங்களையும் அடுத்த வசனங்களையும் இவர்கள் கவனித்தால் இத்தகைய தத்துவங்களைக் கூற மாட்டார்கள்.

(முஹம்மதே!) அவர்கள் உம்மைப் பற்றி எவ்வாறு உதாரணங்களைக் கூறுகின்றனர் என்பதைக் கவனிப்பீராக! அவர்கள் வழிகெட்டு விட்டனர். அவர்கள் நேர்வழி அடைய இயலாது.

திருக்குர்ஆன் 25:9

உமக்கு எவ்வாறு அவர்கள் உதாரணம் காட்டுகிறார்கள் என்று கவனிப்பீராக! எனவே அவர்கள் வழிகெட்டனர். அவர்கள் நேர்வழியை அடைய இயலாது.

திருக்குர்ஆன் 17:48

“நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூனியம் செய்யப்பட்டவர்” என்று விமர்சனம் செய்தவர்களை வழிகெட்டவர்கள் என்று இங்கே இறைவன் பிரகடனம்



செய்கிறான். அவர்கள் நேர்வழியை அடைய இயலாது என்றும் கூறுகிறான்.

சூனியம் செய்யப்பட முடியாத ஒருவரை சூனியம் செய்யப்பட்டவர் என்று கூறுகிறார்களே என்பதால் தான் உம்மை எப்படி விமர்சிக்கிறார்கள் என்பதைக் கவனியும் என்று இறைவன் குறிப்பிடுகிறான்.

திருக்குர்ஆனின் தெளிவான தீர்ப்பின்படி நபிகள் நாயகத்துக்கோ, வேறு எந்த இறைத்தூதருக்கோ எவரும் சூனியம் செய்யவோ, முடக்கவோ இயலாது என்பது உறுதியாகிறது.

எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டதாகக் கூறும் ஹதீஸ்கள் கட்டுக்கதைகள் என்பதில் சந்தேகம் இல்லை.

**சூனியத்தை மறுக்கும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சூனியத்தை நம்பக்கூடாது தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

விதியை மறுப்பவன், நிரந்தரமாக மது அருந்துபவன், சூனியத்தை உண்மை என்று நம்புபவன், (பெற்றோருக்கு) மாறு செய்பவன் ஆகியோர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்.

அறிவிப்பவர் : அபுத்தர்தா (ரலி)

நூல் : அஹ்மது (26212)

சூனியத்தை ஒருவன் நம்பினால் அவன் சொர்க்கம் செல்ல மாட்டான் என்பதைத் தெளிவான முறையில் இந்த நபிமொழி சொல்கிறது. எந்த வியாக்கியானமும் கொடுக்க முடியாத வகையில் இதன் வாசக அமைப்பு அமைந்துள்ளது.

இந்த ஹதீஸ் வேறு சில வழிகளில் வருகின்றது. அந்தச் செய்திகளெல்லாம் பலவீனமானவை.

ஆனால் முஸ்னத் அஹ்மதில் (26212) பதிவு செய்யப்பட்ட மேற்கண்ட ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது.

சூனியத்தை நம்புபவன் என்றால் அதன் சரியான பொருளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சூனியம் என்ற ஒரு பித்தலாட்டம் இருக்கிறது என்பதை நாமும் நம்புகிறோம். இந்த ஹதீஸ் அதைக் கூறவில்லை. சூனியத்தால் தாக்கம் ஏற்படும் என்று நம்புவதையே இது குறிக்கிறது.

இதே அமைப்பில் கூறப்பட்ட பின்வரும் நபிமொழியில் இருந்து இதன் பொருளை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

ஸைத் பின் காலித் அல்ஜுஹனீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹுதைபியா எனுமிடத்தில் எங்களுக்கு சுப்ஹுத் தொழுகை தொழுவித்தார்கள். அன்றிரவு மழை பெய்திருந்தது. தொழுது முடித்ததும் மக்களை நோக்கி நேராகத் திரும்பி, "உங்கள் இறைவன் என்ன கூறினான் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிந்தவர்கள்" என்று கூறினர். அப்போது "என்னை நம்பக் கூடியவர்களும் (என்னை) மறுக்கக் கூடியவர்களுமாக என் அடியார்கள் (இரு பிரிவினராக) உள்ளனர். "அல்லாஹ்வின் தயவாலும் அவன் கருணையாலும்தான் நமக்கு மழை பொழிந்தது" எனக் கூறியவர்கள் என்னை நம்பி, நட்சத்திரத்தை மறுத்தவர்களாவர். இன்ன இன்ன நட்சத்திரத்தால்தான் (எங்களுக்கு மழை பொழிந்தது) எனக் கூறியவர்கள் என்னை மறுத்து, நட்சத்திரத்தை நம்பியவர்களாவர்" என இறைவன் கூறினான்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல் : புகாரி 1038

இந்த ஹதீஸில் நட்சத்திரத்தில் நம்பிக்கை வைக்கக் கூடாது என்று சொல்லப்படுகின்றது. நட்சத்திரம் ஒன்று உள்ளது என்று நம்பினால் அது தவறல்ல. அதை இந்த நபிமொழி மறுக்கவில்லை. மாறாக நட்சத்திரத்தால் மழை பெய்யும் என்றும், எதிர்கால விசயங்களை அதன் மூலம் கணிக்க முடியும். அதனால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்றும் நம்புவதை இந்த ஹதீஸ் மறுக்கின்றது.

யாராவது இந்த அடிப்படையில் நட்சத்திரத்தை நம்பினால் அவன் அல்லாஹ்வை நம்பவில்லை. நட்சத்திரத்தையே நம்பிக்கை கொண்டுள்ளான்.

சூனியத்தை இப்படி ஒருவன் நம்பினால் சொர்க்கம் செல்ல முடியாது.

சூனியத்தால் தாக்கம் ஏற்படும் என்று சொல்பவர்களுக்கு மரண அடியாக இந்த ஹதீஸ் உள்ளது.

சூனியத்தால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புபவன் சொர்க்கம் செல்ல மாட்டான் என்று இந்த வாசகம் மற்ற குர்ஆன் வசனங்களுக்கு ஏற்ப மிகத் தெளிவாக அமைந்திருக்கின்றது.



**அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல்**

சூனியத்தால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புவது அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கும் குற்றமாக அமைந்துள்ளது. எனவே அது எப்படி என்று பார்ப்போம்.

அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கக் கூடாது என்பதை நாம் அறிந்து வைத்துள்ளோம்.

இரண்டு கடவுள்களில் அல்லாஹ்வும் ஒருவன் என்றோ, மூன்று கடவுள்களில் அல்லாஹ்வும் ஒருவன் என்றோ நம்புவது தான் இணைகற்பித்தல் என்று சிலர் நினைக்கின்றனர். இதுவும் இணைகற்பித்தல் தான் என்றாலும் இணைகற்பித்தல் இதை விட விரிவான அர்த்தம் கொண்டதாகும்.

அல்லாஹ்வுக்கு ஏராளமாக பண்புகள் உள்ளன. அந்தப் பண்புகளில் ஏதாவது ஒரு பண்பு அல்லாஹ்வுக்கு இருப்பது போல் ஒரு மனிதனுக்கு உள்ளது என்று ஒருவன் நம்பினால் அந்தப் பண்பு விஷயத்தில் அல்லாஹ்வைப் போல் அந்த மனிதனைக் கருதியவனாக ஆகிவிடுவான். அதாவது அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தவனாகி விடுவான்.

இதை 36:78, 42:11, 112:4 ஆகிய வசனங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம்

அல்லாஹ்வைப் போல் கேட்பவன் இல்லை. அவனைப் போல் பார்ப்பவன் இல்லை. அவனைப் போல் செயல்படுபவன் இல்லை என்பது இவ்வசனங்களின் கருத்தாகும்.

உதாரணமாக நமக்கு கேட்கும் திறன் உள்ளது. அல்லாஹ்வுக்கும் கேட்கும் திறன் உள்ளது. ஆனால் நமக்கு உள்ள கேட்கும் திறன் அல்லாஹ்வுக்கு உரிய கேட்கும் திறன் போல் உள்ளது என்று நம்பலாமா? அப்படி நம்பினால் அது அல்லாஹ்வுக்கு இணையாக மனிதனைக் கருதியதாக ஆகும்.

அல்லாஹ்வின் கேட்கும் திறன் எல்லையில்லாதது. நமது கேட்கும் திறன் எல்லைக்கு உட்பட்டதாகும்.

ஒரு நேரத்தில் ஒருவன் பேசுவதைத் தான் நாம் கேட்க முடியும். சில பயிற்சிகள் மூலம் மேலும் ஒன்றிரண்டு செய்திகளைக் கூடுதலாகக் கேட்க முடியும். ஆனால் உலகில் உள்ள எழுநூறு கோடி மக்களும் ஒரு நேரத்தில் அல்லாஹ்விடம் ஒரு கோரிக்கை வைத்தால் அவை அனைத்தையும் அதே நேரத்தில் அல்லாஹ் கேட்பான்.

சமாதிகளை வழிபடுவோர், மகான்கள் என்று தாங்கள் கருதியவர்களை அழைக்கிறார்கள். அவ்லியாவே எங்களுக்கு இதைத் தாரும் என்று பல ஊர்களில் இருந்து ஒரே நேரத்தில் அழைக்கிறார்கள். அவரால் இவர்களது கோரிக்கையை நிறைவேற்ற முடியுமா என்பது ஒரு புறமிருக்கட்டும். அனைவரது கோரிக்கைகளையும் அவர் அதே நேரத்தில் செவிமடுப்பார் என்ற நம்பிக்கை இருப்பதால் தான் அவரை அழைக்கிறார்கள். அப்படியானால் அந்த மகான் ஒரு நேரத்தில் எத்தனை பேருடைய அழைப்பையும் கேட்க வல்லவர் என்ற கருத்து இதில் அடங்கியுள்ளது. இது அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒருவரது அழைப்பை நாம் செவிமடுக்க வேண்டுமானால் அவருக்கும், நமக்கும் குறிப்பிட்ட இடைவெளி இருந்தால் தான் கேட்க முடியும். அதிக தூரத்தில் இருந்து கொண்டு ஒருவர் பேசுவதை நாம் கேட்க முடியாது.

ஒருவர் பேசுவதை நாம் செவிமடுக்க வேண்டுமானால் அந்தப் பேச்சைக் கடத்தக் கூடிய காற்று இருக்க வேண்டும். அல்லது மின் அலைகள் இருக்க வேண்டும். அவர் பேசும் ஒலி குறிப்பிட்ட டெசிபலில் இருக்க வேண்டும். அதை விடக் குறைவாக இருந்தால் நாம் கேட்க முடியாது. ஆனால் அல்லாஹ்வுக்கு இது போன்ற பலவீனங்கள் இல்லை.

எங்கிருந்து அழைத்தாலும், எத்தனை பேர் அழைத்தாலும், எவ்வளவு குறைந்த சப்தத்தில் அழைத்தாலும் அனைத்தையும் ஒருவர் கேட்பார் என்று நாம் நம்பும் போது, அவருடைய கேட்கும் திறன் அல்லாஹ்வின் கேட்கும் திறனுக்குச் சமமாக ஆக்கப்படுவதால் இதை இணைகற்பித்தல் என்று சொல்கிறோம்.

பார்த்தல் என்ற பண்பை எடுத்துக் கொள்வோம். மனிதர்களாகிய நமக்கும் பார்க்கும் திறன் உள்ளது. அல்லாஹ்வுக்கும் பார்க்கும் திறன் உள்ளது. ஆனால் அல்லாஹ்வின் பார்க்கும் திறன் போல் ஒரு மனிதனுடைய பார்க்கும் திறன் உண்டு என்று நம்பினால் அது இணைகற்பித்தலாகும்.

குறிப்பிட்ட தொலைவில் இருந்தால் தான் நாம் பார்க்க முடியும். வெளிச்சம் இருந்தால் தான் பார்க்க முடியும். எந்தத் தடுப்பும் இல்லாமல் இருந்தால் தான் பார்க்க முடியும். ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் தான் பார்க்க முடியும். ஆனால் அல்லாஹ்வின் பார்க்கும் திறனுக்கு எந்த எல்லையும் இல்லை.

இந்த மனிதர் எவ்வளவு தொலைவில் உள்ளதையும் பார்ப்பார். எத்தனை தடுப்புகள் இருந்தாலும் அதையும் கடந்து இவர் பார்ப்பார் என்று நம்பினால் அந்த மனிதரை அல்லாஹ்வைப் போன்றவராக நாம் கருதியவர்களாக



ஆவோம்.

இஸ்லாத்தை ஏற்காத மக்காவாசிகள் அல்லாஹ் அல்லாத பல குட்டித் தெய்வங்களை வணங்கி வந்தனர். அதே நேரத்தில் எல்லா ஆற்றலும், அதிகாரமும் அல்லாஹ்வுக்கு மட்டும் தான் உள்ளது என்றும் அவர்கள் நம்பினார்கள். ஆனாலும் அவர்களை இணைவைத்தவர்கள் என்று தான் அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

10:31, 23:84,85, 23:86,87, 23:88,89, 29:61, 29:63, 31:25, 39:38, 43:9, 43:87 ஆகிய வசனங்கள், இஸ்லாத்தை ஏற்காத மக்காவாசிகள் அல்லாஹ்வை நம்பியிருந்தார்கள், அவனது வல்லமையைப் புரிந்து வைத்திருந்தார்கள் என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி அறிவிக்கின்றன.

தமது குட்டித் தெய்வங்கள் அல்லாஹ்விடம் பரிந்து பேசி எங்களுக்கு உதவுவார்கள் என்பது தான் மக்காவில் இருந்த முஸ்லிமல்லாதாவர்களின் நம்பிக்கையாக இருந்தது என்பதை 10:18, 39:3 வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

இறைவனின் ஆற்றல் தங்களின் குட்டித் தெய்வங்களுக்கு இல்லை என்று ஒரு புறம் நம்பிக்கொண்டு மற்றொரு புறம் இறைவனுக்குச் சமமான ஆற்றல் அந்தக் குட்டித் தெய்வங்களுக்கு உண்டு என்று அவர்கள் நம்பினார்கள்.

எங்கிருந்து அழைத்தாலும், எத்தனை பேர் அழைத்தாலும், எந்த நேரத்தில் அழைத்தாலும், எந்த மொழியில் அழைத்தாலும் அனைத்தையும் ஒரே சமயத்தில் அறிந்து கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு என்பது தான் அவர்களின் நம்பிக்கையாக இருந்தது.

முழுக்க முழுக்க இறைத்தன்மை பெற்றவர்களாக மற்றவர்களை எண்ணுவது மாத்திரம் இணைவைத்தல் அன்று. மாறாக, இறைவனது தன்மைகளில் ஏதேனும் ஒரு தன்மை இறைவனுக்கு இருப்பது போலவே மற்றவர்களுக்கும் இருப்பதாக எண்ணுவதும் இணைவைத்தலாகும். எந்த ஒரு பண்பாவது அல்லாஹ்வுக்கு இருப்பது போல் மற்றவருக்கும் உள்ளது என்று நம்பினால் அதுவும் இணைகற்பித்தல் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு சூனியத்தைப் பற்றி ஆராய்வோம்.

பிறருக்குப் பாதிப்பு ஏற்படுத்துதல் என்ற தன்மை அல்லாஹ்வுக்கு உண்டு. மனிதர்களுக்கும் உண்டு.

அல்லாஹ் ஒரு மனிதனின் காலை முறிக்க நினைக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். பெரிய அரிவாளை எடுத்து வந்து அந்த மனிதனின் காலை

அல்லாஹ் வெட்ட மாட்டான். அந்த மனிதனைத் தொடாமலே, எந்தக் கருவியையும் பயன்படுத்தாமலே முறிந்து போ என்பான். அது முறிந்து விடும்.

ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் காலை முறிக்க நினைத்தால் அரிவாளையோ, உருட்டுக் கட்டையையோ எடுத்து வந்து காலைத் தாக்கியே முறிக்க முடியும்.

அல்லாஹ் ஒருவனை மனநோயாளியாக ஆக்க நினைத்தால் மனநோயாளியாக ஆகு என்பான். உடனே அந்த மனிதன் மனநோயாளியாக ஆகிவிடுவான். ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனை மனநோயாளியாக ஆக்க நினைத்தால் அதற்குரிய மாத்திரைகளை அல்லது மருந்தை அவனுக்குள் செலுத்தி, அல்லது மூளை சிதையும் அளவுக்கு தலையில் தாக்கி மனநோயாளியாக ஆக்க முடியும்.

இந்த விஷயத்தில் அல்லாஹ்வுக்கும், மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் பளிச்சென்று தெரிகிறது.

அவன் எதைச் செய்ய நாடுகிறானோ ஆகு என்பான்: உடனே ஆகிவிடும் என்று அல்லாஹ் 2:117, 3:47, 3:59, 6:73, 16:40, 19:35, 36:82, 40:68, ஆகிய வசனங்களில் தெளிவுபடக் கூறுகிறான்.

ஆகு என்று சொல்லி ஆக்கும் வல்லமை அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. ஆனால் சூனியத்தால் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்று நம்புவோர் சூனியக்காரனை எந்த இடத்தில் வைக்கிறார்கள்?

சூனியக்காரன் கட்டையால் அடித்து காலை முறிப்பான் என்று நம்புவதில்லை. அல்லாஹ்வைப் போல் ஆகு என்று கட்டளையிட்டு பாதிப்பை ஏற்படுத்துவான் என்று தான் நம்புகிறார்கள்.

சூனியக்காரன் எந்த மருந்தையும் செலுத்தாமல் ஆகு எனக் கூறி ஒருவனைப் பைத்தியமாக ஆக்க வல்லவன் என்று நம்புகிறார்கள்.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனைக் கவலைப்படுத்த, காயப்படுத்த உலகில் எந்த வழிமுறைகள் உள்ளனவோ அவற்றில் எதையும் பயன்படுத்தாமல் மந்திர சக்தியின் மூலமாக ஒருவன் மற்றவனுக்குப் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றனர்.

உதாரணமாக ஒரு மனிதன் இன்னொரு மனிதனைக் கத்தியால் குத்தலாம். அல்லது இருவருமே கத்தியால் குத்திக் கொள்ளலாம். இதனால் ஒருவருக்கோ



அல்லது இருவருக்குமோ பாதிப்பு ஏற்படும்.

இது போன்று ஒருவருக்கொருவர் பாதிப்புகளை ஏற்படுத்தலாம்

ஒருவர் இன்னொருவரைத் திட்டுகின்றார்: அல்லது அவதூறு சொல்கின்றார் என்றால், யாரைத் திட்டுகின்றாரோ அல்லது அவதூறு சொல்கின்றாரோ அவரைக் கவலையடையச் செய்யலாம்.

இது போன்ற வழிகளில் ஒரு மனிதன் இன்னொரு மனிதன் மீது பாதிப்பை ஏற்படுத்தலாம். இதைச் செய்வதற்காக தனியாக கற்றுத்தேறும் அவசியம் இல்லை. யாருக்கு எதிராகவும் யாரும் இதைச் செய்ய முடியும்.

உலகத்தில் மனிதர்கள் சக மனிதர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கு அல்லாஹ் எந்த வழிமுறையை ஏற்படுத்தியுள்ளானோ அந்த வழிமுறைகள் தவிர மற்ற அனைத்து வழிமுறைகளும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை.

சூனியம் செய்வதாகக் கூறிக் கொள்பவனிடம் போய் ஒருவருக்குச் சூனியம் வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தால் பாதிப்பு ஏற்படுத்தப்பட வேண்டிய நபரைத் தொடாமல், அருகில் வராமல், அவரைப் பார்க்காமல் எங்கோ ஓரிடத்தில் இருந்து கொண்டு அவருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவான் என்று நம்புகின்றனர்..

யாருக்குப் பாதிப்பை ஏற்படுத்த வேண்டுமோ அவரின் சட்டை, வியர்வை, காலடி மண், தலைமுடி, சிறுநீர் போன்றவற்றை வைத்துக் கொண்டு அதனை பொம்மை போல் செய்து பாதிப்பு ஏற்படுத்த வேண்டியவரின் பெயரை அந்தப் பொம்மைக்கு வைத்து அந்த பொம்மையின் வயிற்றில் குத்தினால் அவரது வயிற்றுக்கு பாதிப்பு ஏற்படும். அந்தப் பொம்மையின் கண்ணைக் குத்தினால் இவரின் கண்ணுக்குப் பாதிப்பு ஏற்படும். இது தான் சூனியம் என்று மக்கள் நம்புகின்றனர். உடலுக்கு மட்டுமின்றி மனதிலும் பாதிப்பை ஏற்படுத்த சூனியக்காரனால் இயலும் என்று நம்புகின்றனர்.

ஒருவருக்குப் பாதிப்பை ஏற்படுத்த எந்த வழிமுறைகளை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளானோ அவற்றில் எந்த ஒன்றையும் சூனியக்காரன் செய்ய மாட்டான்.

கணவன் மனைவியைப் பிரிக்க பணம் கொடுத்தால் சூனியக்காரன் பணத்தைப் பெற்றுக் கொண்டு எங்கோ ஓரிடத்தில் இருந்து கொண்டே கணவன் மனைவியைப் பிரித்து விடுவான் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

சூனியத்தால் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்று நம்புவோர், சூனியக்காரன்

அல்லாஹ்வைப் போல் செயல்படும் திறன் படைத்தவன் என்று தான் நம்புகிறார்கள்.

எனவே லபீத் என்ற யூதன் மந்திர சக்தியால் நபிகள் நாயகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தினான் என்று நம்புவது அவனுக்கு அல்லாஹ்வின் தன்மை உள்ளது என்று சொல்லாமல் சொல்வதாகும். எனவே நபிகள் நாயகத்துக்கு சூனியத்தால் பாதிப்பு ஏற்பட்டதாகக் கூறும் ஹதீஸ்கள் கட்டுக் கதைகள் என்பதில் சந்தேகம் இல்லை.

அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கும் வகையில் இந்த நம்பிக்கை இருந்தாலும் தங்கள் நம்பிக்கையை நியாயப்படுத்த சில ஆதாரங்களைக் காட்டுகிறார்கள். சில எதிர்வாதங்களையும் வைக்கிறார்கள். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

சூனியக்காரன் தனது சுயமான ஆற்றலால் இப்படிச் செய்யவில்லை. அல்லாஹ் அவனுக்கு அந்த ஆற்றலைக் கொடுத்துள்ளதால் தான் அப்படிச் செய்ய முடிகிறது. இது எப்படி இணைவைத்தலாகும்? என்பது தான் அவர்களின் முதல் ஆதாரம்.

இந்த வாதத்தைப் பார்க்கும் போது இவர்கள் ஏகத்துவத்தின் அரிச்சுவடியைக் கூட படிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

அல்லாஹ் மனிதனுக்கு ஏராளமான ஆற்றலைக் கொடுத்து இருந்தாலும் ஒருக்காலும் தனக்கு இருப்பது போன்ற ஆற்றலை யாருக்கும் கொடுக்க மாட்டான். எனக்கு இணை இல்லை என்று அல்லாஹ் சொல்வதில் இது அடங்கியுள்ளது.

திருக்குர்ஆன் 17:111, 25:2 ஆகிய வசனங்கள் இதைத் தெளிவாகச் சொல்கின்றன.

தனக்கே உரித்தான எந்தத் தன்மையையும் யாருக்கும் அல்லாஹ் கொடுக்க மாட்டான் என்பதை அழகான உதாரணத்தின் மூலம் அல்லாஹ் மேலும் விளக்குவதைப் பாருங்கள்.

உங்களில் ஒருவரை விட மற்றவரை செல்வத்தில் அல்லாஹ் சிறப்பித்திருக்கிறான். (செல்வத்தால்) சிறப்பிக்கப்பட்டோர் தமது செல்வத்தைத் தமது அடிமைகளிடம் கொடுத்து, தங்களுக்குச் சமமாக அவர்களை ஆக்குவதில்லை. அல்லாஹ்வின் அருட்கொடையையா இவர்கள் நிராகரிக்கிறார்கள்?

திருக்குர்ஆன் 16:71



அல்லாஹ் மனிதர்களுக்கு எந்த அளவு ஆற்றலை அளிப்பான் என்று இங்கே அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான். அதாவது தனக்கே உரித்தான எந்தத் தன்மையையும் அல்லாஹ் யாருக்கும் கொடுக்கவே மாட்டான் என்பதுதான் அந்த அடிப்படை.

இந்த அடிப்படையை விளங்கிக் கொண்ட யாரும் தன்னைப் போன்று செயல்படும் ஆற்றலை அல்லாஹ் சூனியக்காரனுக்கு வழங்குவான் என்று சொல்லவே மாட்டார்.

இந்த மனிதன் குழந்தையைக் கொடுப்பான்: ஆனால் அவனாகக் கொடுப்பதில்லை. அல்லாஹ் கொடுத்த ஆற்றல் மூலம் இதைச் செய்கிறான் என்று சொல்லி விட்டால் அது இணைவைத்தல் இல்லை என்று ஆகிவிடுமா என்பதை இவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஒருவன் சூரியனை வணங்குகிறான். சூரியனுக்குச் சுயமான ஆற்றல் இல்லை. ஆனால் அல்லாஹ் சூரியனுக்கு அந்த ஆற்றலை வழங்கியுள்ளான் என்று சேர்த்துக் கொண்டால் அது இணைவைத்தல் இல்லை என்று ஆகிவிடுமா?

இஸ்லாத்தை ஏற்காத மக்காவாசிகளும் அல்லாஹ்வை நம்பினார்கள். அத்துடன் வேறு சிலரையும் வணங்கி வந்தனர்.

இவ்வாறு மற்றவர்களை வணங்கும்போது அவர்களெல்லாம் கடவுள்கள் என்ற நம்பிக்கையோ, அவர்களுக்கு அனைத்து ஆற்றலும் உண்டு என்ற நம்பிக்கையோ அவர்களிடம் இருக்கவில்லை.

எனவே இது இணைகற்பித்தலில் சேராது என்று வாதிட்டு அவர்களும் இதே நியாயத்தைத் தான் சொன்னார்கள். அல்லாஹ் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை முன்னர் தெளிவுபடுத்தியுள்ளோம்.

**சூனியம் உண்மையென்றால் செய்து காட்ட வேண்டும்.**

மறைவான விஷயங்களை அல்லாஹ் சொல்லிவிட்டால் அதனை நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

மலக்குகள், வனவர்கள், ஜின்கள், ஷைத்தான்கள், சொர்க்கம், நரகம் மீண்டும் உயிர்ப்பித்தல் என அல்லாஹ் பல விஷயங்களைக் கூறுகின்றான்.

இதனைச் சோதனைக்கு உட்படுத்தாமல் அனைத்து முஸ்லிம்களும் நம்புகின்றோம். ஏனென்றால் இது சோதித்து அறியும் விஷயம் அல்ல. அல்லாஹ் சொல்லிவிட்டான் என்ற ஒரே காரணத்திற்காக நம்புகின்றோம்.

ஆனால் சோதனைக்கு உட்படுத்தப்படும் விஷயங்களும் உள்ளன. அவற்றைச் சோதித்துப் பார்த்து அது உண்மையா? பொய்யா என்று ஆராய வேண்டும். குருட்டுத்தனமாக நம்பக் கூடாது.

உதாரணமாக வழுக்கையான ஒருவனுக்கு இந்த எண்ணையைத் தேய்த்தால் முடி வளர்ந்துவிடும் என்று சொன்னால் இதனை சோதனைக்கு உட்படுத்திய பின்னரே நாம் நம்ப வேண்டும்.

இணை கற்பித்தல் என்ற பிரச்சனை வரும்போது அதைச் சோதித்துப் பார்த்துத் தான் அறிய வேண்டும்.

சூனியக்காரனுக்கு சக்தி இருப்பதாகச் சொன்னால் இப்போதே இதனை சோதனைக்கு உட்படுத்தி பார்க்க முடியும். ஏனெனில் இணைவைத்தலுக்கு எதிராக அல்லாஹ் இந்த வழிமுறையைத் தான் நமக்குக் கற்றுத் தருகிறான்.

"அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைக்கின்ற, உங்கள் தெய்வங்கள் பூமியில் எதனைப் படைத்தன?" என்று எனக்குக் காட்டுங்கள்! அல்லது வானங்களிலாவது அவர்களுக்குப் பங்கு உண்டா? என்பதற்குப் பதில் சொல்லுங்கள்!" என்று கேட்பீராக! அல்லது அவர்களுக்கு நாம் ஒரு வேதத்தை அளித்து அதனால் (கிடைத்த) தெளிவில் அவர்கள் இருக்கிறார்களா? இல்லை. இந்த அநியாயக்காரர்களில் ஒருவருக்கொருவர் மோசடியையே வாக்களிக்கின்றனர்.

திருக்குர்ஆன் 35:40

"அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் பூமியில் எதைப் படைத்தனர் என்று எனக்குக் காட்டுங்கள்! அல்லது வானங்களில் அவர்களுக்குப் பங்கு உண்டா? என்பதற்குப் பதில் சொல்லுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இதற்கு முன் சென்ற வேதத்தையோ, அறிவுச் சான்றையோ என்னிடம் கொண்டு வாருங்கள்!" என்று (முஹம்மதே!) கேட்பீராக!

திருக்குர்ஆன் 46:4

அல்லாஹ்வைப் போல் ஒருவனுக்கு சக்தி உண்டா என்ற பிரச்சனை வந்தால் அதை நிரூபித்துக் காட்டுமாறு கேட்பது தான் அல்லாஹ் கற்றுத் தரும் வழிமுறையாகும்.

சூனியக்காரனுக்கு ஆற்றல் இருந்தால் அதை நிரூபித்துக் காட்டு என்று கேட்பதும், அவ்வாறு நிரூபிக்க இயலவில்லை என்று தெரியும்போது அது பொய் என்று அறிந்து கொள்வதும் இஸ்லாம் காட்டும் வழிமுறையாகும்.



சூனியம் வைக்கும் ஒருவனைக் காட்டுங்கள். நாங்கள் சொல்வதை அவன் செய்யட்டும். அல்லது அவன் தனக்கு என்ன சக்தி இருப்பதாகச் சொல்கின்றானோ அதனைச் செய்து காட்டட்டும் என்று கேட்டால் எவனும் முன்வருவதில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்.

எதையும் படைக்காதவற்றையா அவர்கள் (இறைவனுக்கு) இணைகற்பிக்கின்றனர்? அவர்களே படைக்கப்படுகின்றனர். இவர்களுக்கு உதவிட அவர்களுக்கு இயலாது. தமக்கே கூட அவர்கள் உதவிக் கொள்ள முடியாது. (எதையும்) தெரிவிக்க அவர்களை நீங்கள் அழைத்தால் அவர்கள் உங்களைப் பின்பற்ற மாட்டார்கள். நீங்கள் அவர்களை அழைப்பதும், மௌனமாக இருப்பதும் உங்களைப் பொருத்த வரை சமமானதே! அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களைப் போன்ற அடிமைகளே. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அவர்களை அழைத்துப் பாருங்கள்! அவர்கள் உங்களுக்குப் பதில் தரட்டும்! அவர்களுக்கு நடக்கின்ற கால்கள் உள்ளனவா? அல்லது பிடிக்கின்ற கைகள் உள்ளனவா? அல்லது பார்க்கின்ற கண்கள் உள்ளனவா? அல்லது கேட்கின்ற காதுகள் உள்ளனவா? "உங்கள் தெய்வங்களை அழைத்து எனக்கெதிராகச் சூழ்ச்சி செய்யுங்கள்! எனக்கு எந்த அவகாசமும் தராதீர்கள்!" என்று கூறுவீராக!

திருக்குர்ஆன் 7:191- 195

சிலைகளுக்கு கைகால்களை அமைத்து அந்தக் கைகளால் அவை மனிதனின் தேவைகளை நிறைவேற்றும் என்று சொல்கிறார்கள். இது எங்கள் நம்பிக்கை என்றும் சொல்கிறார்கள்.

இதை அல்லாஹ் ஏற்கவில்லை. அந்தக் கைகளால் எதையாவது பிடித்துக் காட்டட்டும். அந்தக் கால்களால் நடந்து காட்டட்டும் என்று கூறி இணைவைப்புக்கு எதிராக நாம் எடுக்க வேண்டிய நிலையை அல்லாஹ் கற்றுத் தருகிறான்.

சூனியக்காரனுக்கு ஆற்றல் உண்டு என்றால் அதைச் செய்து காட்டு! நிரூபித்துக் காட்டு என்று நாம் கேட்கிறோம். யாருமே நிரூபித்துக் காட்ட முன்வராவிட்டால் சூனியத்துக்கு ஒரு ஆற்றலும் இல்லை என்று புரிந்து கொள்வது தான் திருக்குர்ஆன் அடிப்படையில் எடுக்க வேண்டிய சரியான முடிவாகும்

சூனியத்தை நம்புபவர்கள் அறிவு கெட்டவர்களாக இருந்து கொண்டு

அறிவுப்பூர்வமாக பேசுகின்றவர்களை கேவலமாகச் சித்தரிக்கின்றனர்.

இஸ்லாத்தில் தர்க்கம் செய்து அறிவார்ந்த முறையில் தான் பேச வேண்டும்.

இதோ ஹூது நபி விட்ட அறைகூவலைப் பாருங்கள்.

“எங்கள் கடவுள்களில் சிலர் உமக்குக் கெடுதி செய்து விட்டார்கள்” என்றே கூறுகிறோம் (என அவர்கள் கூறினர்). “நான் (இதற்கு) அல்லாஹ்வைச் சாட்சியாக்குகிறேன்: நீங்களும் சாட்சியாக இருங்கள்! அவனையன்றி நீங்கள் எதை இணை கற்பித்தீர்களோ அதை விட்டும் நான் விலகியவன்: எனவே அனைவரும் எனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யுங்கள்! பின்னர் எனக்கு எந்த அவகாசமும் அளிக்காதீர்கள்!” என்று அவர் கூறினார்.

திருக்குர்ஆன் 11:54, 55

ஹூது நபி சொன்னது போல் நாங்கள் சொல்கிறோம். சூனியக்காரனுக்கு ஒரு ஆற்றலும் இல்லை. அப்படி இருந்தால் எனக்குச் செய்து காட்டு என்று அறைகூவல் விடுக்கிறோம்.

அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களைப் போன்ற அடிமைகளே. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அவர்களை அழைத்துப் பாருங்கள்! அவர்கள் உங்களுக்குப் பதில் தரட்டும்!

திருக்குர்ஆன் 7:194

சிலைகளுக்கு ஆற்றல் உண்டு என்று சொன்னால் அதை நிரூபித்துக் காட்டுமாறு கேட்க வேண்டும் என்பதை எவ்வளவு அழகாக மேற்கண்ட வசனங்களில் அல்லாஹ் கற்றுத்தருகிறான் என்று சிந்தியுங்கள்.

இணைகற்பித்தல் என்ற பிரச்சனை வந்தால் அதற்கான தீர்வு அதை நிரூபித்துக் காட்டச் சொல்வது தான். சூனியமும் இணை கற்பித்தல் என்ற என்ற நிலையில் இருப்பதால் அதையும் சோதனைக்கு உட்படுத்துவது தான் சரியான வழிமுறை.

முஸ்லிம் பெயர்தாங்கிகளும் சூனியக்காரர்களாக உள்ளனர். இவர்களுக்கு ஆற்றல் இருந்தால் உலக அளவிலும் இந்திய அளவிலும் முஸ்லிம்களை அழித்து ஒழிப்பதைக் கொள்கையாகக் கொண்டவர்களுக்கு சூனியம் வைத்து சமுதாயத்துக்கு நல்லது செய்திருக்கலாமே?

முஸ்லிம் அல்லாதவர்களிலும் சூனியக்காரர்கள் உள்ளனர். இவர்களை நம் நாட்டு அரசியல்வாதிகள் பயன்படுத்தி யாருக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதோ



அந்தத் தலைவரை ஊமையாக ஆக்கினால் போதுமே? அப்படி ஏதும் நடக்கக் காணோம்.

இதிலிருந்து சூனியத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்பது தெளிவாகின்றது.

சூனியம் குறித்து எழுப்பப்படும் எல்லா கேள்விகளுக்கும் உரிய பதிலை அறிந்து கொள்ள அறிஞர் பி.ஜெய்னுலாப்தீன் அவர்கள் எழுதிய ‘‘பில்லி சூனியம் ஒரு பித்தலாட்டம்” என்ற ஆய்வு நூலை படிக்கவும்.

# நபிகளாருக்கு சூனியம் - ஆறு மாத கால ஹதீஸ் பலவீனமா?

நபிகள் நாயத்திற்கு சூனியம் வைக்கப்பட்டதாகவும், அதனால் நபியவர்களுக்கு மனக்குழப்பம் ஏற்பட்டதாகவும் புகாரி உள்ளிட்ட சில நூல்களில் பதிவாகியிருக்கும் செய்திகளை குர்ஆனுக்கு முரண்படுகிறது என்ற வாதத்தின் அடிப்படையில் நாம் மறுக்கிறோம்.

ஏனெனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு யூதன் சூனியம் செய்தான். அதன் காரணமாக அவர்கள் செய்யாததைச் செய்ததாக அவர்களுக்குப் பிரமை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

தம் மனைவியரிடம் உடலுறவு கொள்ளாமலே உடலுறவு கொண்டதாக அவர்கள் நினைக்கும் அளவுக்கு இந்தப் பாதிப்பு முற்றிப் போய் இருந்தது என்றெல்லாம் அந்தச் செய்திகளில் சொல்லப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் தான் செய்யாததைச் செய்ததாகச் கருதிக் கொண்டு இருப்பது மனநோயின் ஒரு வகையாகும். மேலும் மனைவியுடன் சேராமல், சேர்ந்ததாக நினைப்பது கடுமையான மனநோயாகும். இத்தகைய மனநோய் தான் நபியவர்களுக்கு சூனியத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டது என்று இந்த ஹதீஸ்கள் கூறுகின்றன.

ஆனால் நபிகள் நாயகத்திற்கு மனநோயின் துளி பாதிப்பு கூட இருக்காது என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

‘நீங்கள் இருவர் இருவராகவோ, தனித் தனியாகவோ அல்லாஹ்வுக்காக சற்று நேரம் ஒதுக்கி பின்னர் “உங்கள் தோழருக்கு (எனக்கு) பைத்தியம் எதுவுமில்லை஌ கடுமையான வேதனைக்கு முன் அவர் உங்களுக்கு எச்சரிக்கை செய்பவரே தவிர வேறில்லை என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தையே உங்களுக்குப் போதிக்கிறேன்’’ எனக் கூறுவீராக!

அல்குர்ஆன் 34:46

எனவே (முஹம்மதே!) அறிவுரை கூறுவீராக! உமது இறைவனின் பேரருளால் நீர் சோதிடர் அல்லர். பைத்தியக்காரரும் அல்லர்.

திருக்குர்ஆன் 52:29



அவர்களின் தோழருக்கு (முஹம்மதுக்கு) எந்தப் பைத்தியமும் இல்லை என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? அவர் தெளிவான எச்சரிக்கை செய்பவரே.

திருக்குர்ஆன் 7:184

நபிகள் நாயகத்திற்குச் சூனியம் வைக்கப்பட முடியாது என்றும் அவ்வாறு கூறுவோர் அநியாயக்காரர்கள் என்றும் திருக்குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது.

‘அல்லது இவருக்கு ஒரு புதையல் வழங்கப்பட்டிருக்கக் கூடாதா? அல்லது இவருக்கு ஒரு தோட்டம் இருந்து அதிலிருந்து இவர் உண்ணக் கூடாதா?’’ என்றும் ‘சூனியம் செய்யப்பட்ட மனிதரையே பின்பற்றுகிறீர்கள்’ என்றும் அநீதி இழைத்தோர் கேட்கின்றனர்.

அல்குர்ஆன் 25:08

சூனியம் என்றால் பொய், பித்தலாட்டம் என்று அல்லாஹ் கூறுவதாலும்,

கட்டளை மூலமாகக் காரியமாற்றும் ஆற்றல் அல்லாஹ் ஒருவனுக்கே உள்ளது என்பதாலும்,

நபிகள் நாயகத்திற்கு எந்த மனநோயும் வராது என்று திருக்குர்ஆன் கூறுவதாலும்

நபிகள் நாயகத்திற்கு சூனியம் வைக்கப்பட்டதை திருக்குர்ஆன் மறுக்கிறது என்பதாலும்

நபிகள் நாயகத்திற்கு சூனியம் வைக்கப்பட்டதாக நம்புவது திருக்குர்ஆனில் சந்தேகத்தை ஏற்படுத்தும் என்பதாலும்

சூனியத்தை நம்பக் கூடாது என்று நபிகள் நாயகம் கூறியுள்ளதாலும்

இப்படி பல்வேறு குர்ஆன் வசனங்களுடன் மோதுகிற காரணங்களால் நபிகள் நாயகத்திற்குச் சூனியம் வைக்கப்பட்டதாக வரும் செய்திகளை நாம் மறுக்கிறோம்.

இது பற்றி விரிவாக அறிய அறிஞர் பி.ஜே அவர்கள் எழுதிய பில்லி சூனியம் ஓர் பித்தலாட்டம் எனும் நூலில் பார்க்கலாம்.

**ஆறு மாதம் பற்றிய செய்தி**

சூனியம் வைக்கப்பட்டதால் நபிகளாருக்கு ஏற்பட்ட மனக்குழப்ப பாதிப்பு ஆறு

மாத காலம் நீடித்தது என்று அஹ்மதில் ஒரு செய்தி இடம்பெறுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட இந்த நிலை ஆறு மாதங்கள் நீடித்தது

நூல் : அஹ்மத் 23211

செய்யாததைச் செய்ததாக நினைக்கும் அளவுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு ஒரு நாள் ஏற்பட்டால் அதை மனப்பாதிப்பு என்று சொல்ல முடியாது எனலாம். ஆனால் ஆறு மாதகாலம் கடும் பாதிப்பு ஏற்பட்டதாக இந்த இந்த ஹதீஸ் சொல்கிறது எனில் சந்தேகமற இது மனக்குழப்ப பாதிப்பு தான் என்று இந்த செய்தியைக் குறிப்பிட்டு வாதிட்டிருந்தோம்.

இந்த வாதத்தில் திடுக்கிட்டு, விக்கித்துப் போன சலபுக்கும்பல் ஆறு மாத காலம் பாதிப்பு நிலை நீடித்தது என்றால் அது மனநோயல்லாமல் வேறு என்ன என்பதை உணர்ந்து இந்த வாதத்தை நீர்த்துப்போகச் செய்ய திரிபு வேலைகளில் இறங்கினர்.

அதில் ஒன்றாக நபிகள் நாயகத்திற்கு சூனியத்தினால் பாதிப்பு ஏற்பட்டது உண்மை தான். ஆனால் ஆறு மாதங்கள் எல்லாம் நீடிக்கவில்லை. ஆறுமாத காலம் பாதிப்பு ஏற்பட்டதாக வரும் செய்தி பலவீனமானது என்று வாதம் வைக்கின்றனர்.

இவ்வாதத்தை அவர்கள் வைப்பதன் நோக்கம் சூனியத்தினால் நபிகள் நாயகத்திற்கு ஏற்பட்டது மனநோயல்ல, மறதி, நோய் போன்ற சாதாரண பாதிப்பு தான் என்பதை நிறுவுவதற்கே.

ஆறு மாதம் பாதிப்பு தொடர்ந்தது என்றால் அது மனநோய் என்பது முற்றிலும் உண்மையாகி விடும் எனவே நபிகளாருக்கு ஏற்பட்ட பாதிப்பு ஒரு நாள் தான் இருந்தது போன்ற பொய்த்தோற்றத்தை ஏற்படுத்தி விட்டால் அது மனநோய் என்று சொல்ல முடியாது போகும். அதற்காகவே இத்தகைய வாதத்தை முன்வைக்கின்றனர்.

நாம் ஒரு விஷயத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஆறு மாதம் பாதிக்கப்பட்டு இருந்தார்கள் என்ற செய்தி பலவீனமானது என்றால் கூட நமது வாதம் உடைந்து போகாது.

ஏனெனில் சூனியத்தினால் நபிகள் நாயகம் பாதிக்கப்பட்டதாக புகாரி முஸ்லிமில் வரும் செய்திகள் கூட ஒரு நாள் தான் அந்தப் பாதிப்பு இருந்தது என்று தெரிவிக்கவில்லை. மாறாக நீண்ட நாட்கள் மனக்குழப்ப பாதிப்பு



நீடித்தது என்றே தெரிவிக்கின்றன.

இதைப் பற்றி விரிவாக சில உதாரணங்களுடன் அறிந்து கொள்வோம்.

**‘கான’’ எனும் சொல்லின் பொருள்.**

நபிகளாருக்கு ஏற்பட்ட சூனிய பாதிப்பை சொல்லும் மூலத்தில் கான; என்ற சொல் உள்ளது. இச்சொல்லுடன் வருங்கால வினைசொல்லைக் கொண்ட வாக்கியத்துடன் சேரும் போது ஒரு செயல் நீடித்து இருந்தது என்ற கருத்தைத் தரும். இந்த நிலையில் நீடித்தார்கள் என்பது இதன் கருத்தாகும்.

உதாரணத்திற்கு கான என்ற சொல் இடம்பெற்றுள்ள சில ஹதீஸ்களை காண்போம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (வஹீ-வேதஅறிவிப்பு) அருளப்பெறும் போது (தம்மைத் தாமே) மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தார்கள்஼ (வேதவசனங்களை மனனமிட வேக வேகமாக) தம் உதடுகளை அசைத்துக் கொண்டிருப்பார்கள்.

புகாரி 5

فَقَالَ ابْنُ عَبَّاسٍ فَأَنَا أُحَرِّكُهُمَا لَكُمْ كَمَا كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يُحَرِّكُهُمَا

உதடுகளை அசைத்துக் கொண்டிருப்பார்கள் எனும் தமிழாக்கத்தின் மூலத்தில் கான என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படியெனில் பல நாட்கள் இவ்வாறு நடந்துள்ளது என்பது இதன் பொருள்.

நபிகள் நாயகம் தொழுகையில் தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து பாதுகாப்பு கோருபவர்களாக இருந்தார்கள் எனும் செய்தியின் மூலத்திலும் கான என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அன்றாடம் இவ்வாறு சொல்லி வந்தார்கள் என்பது இதன் கருத்து. இக்கருத்தை கான என்றே சொல்லே தருகிறது.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَدْعُو وَيَقُولُ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ عَذَابِ النَّارِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், ‘அல்லாஹ்வே! நான் கப்ரின் வேதனை, நரக வேதனை, வாழ்வின் சோதனை, மரணத்தின் சோதனை, மஸீஹுத் தஜ்ஜாலின்

சோதனை ஆகியவற்றிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்'' எனப் பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்.

புகாரி 1377

இந்தச் செய்தியிலும் நபிகள் நாயகத்தின் வழமையைக் குறிக்க கான என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

سَمِعَ أَنَسَ بْنَ مَالِكٍ يَقُولُ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَدْخُلُ الْخَلَاءَ فَأَحْمِلُ أَنَا وَغُلَامٌ إِدَاوَةً مِنْ مَاءٍ وَعَنَزَةً يَسْتَنْجِي بِالْمَاءِ

அனஸ் பின் மாலிக் (ரலி) கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இயற்கைக் கடனை நிறைவேற்ற வெளியே சென்றால், நானும் எங்க(ள் அன்சாரிக)ளில் ஒரு சிறுவனும் தண்ணீர் நிரம்பிய சிறிய தோல் பாத்திரம் ஒன்றுடன் அவர்களைப் பின்தொடர்ந்து செல்வோம். (அந்தத் தண்ணீரால் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் துப்புரவு செய்து கொள்வார்கள்.)

புகாரி – 151

நபிகள் நாயகம் கழிவறைக்குச் செல்லும் நேரத்தில் அனஸ் அவர்கள் பாத்திரத்தைச் சுமந்து செல்லும் இந்த நிகழ்வு நீண்ட நாட்கள் இவ்வாறு நடந்துள்ளது என்பது இதன் பொருளாகும். இக்கருத்தைக் குறிக்க இச்செய்தியில் 'கான'' என்ற சொல் வந்துள்ளது.

கடமையான குளிப்புக்காக நபிகள் நாயகம் குளிக்கும் போது முதலில் கை கழுவும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் செய்தியிலும் 'கான'' என்ற சொல்லே வந்துள்ளது.

عَنْ عَائِشَةَ قَالَتْ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا اغْتَسَلَ مِنْ الْجَنَابَةِ غَسَلَ يَدَهُ

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பெருந்துடக்கிற்காக குளிக்கும்போது (முதலில்) கைகளைக் கழுவிக் கொள்வார்கள்.

புகாரி – 262

இவ்வாறு கான என்ற சொல்லுடன் ஒரு செயல் குறிப்பிடப்படும் இடங்கள் அனைத்திலும் அது நீண்ட நாட்கள் தொடர்ந்தது அல்லது அது தான் அன்றாட நடைமுறையாக இருந்தது என்ற கருத்து வரும்.

நபிகள் நாயகத்திற்குச் சூனியம் வைக்கப்பட்டதாக வரும் செய்திகளிலும்



நீண்ட நாட்கள் தொடர்ந்தது என்ற கருத்தைத் தரும் கான என்ற சொல் வந்துள்ளது.

عَنْ عَائِشَةَ عَلَيْهِ وَسَلَّمَ سُحِرَ حَتَّى كَانَ يُخَيَّلُ إِلَيْهِ أَنَّهُ صَنَعَ شَيْئًا وَلَمْ يَصْنَعْهُ

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டது. இதையடுத்து தாம் செய்யாத ஒன்றைத் தாம் செய்துவிட்டதாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிரமையூட்டப்படுவர்களாக ஆனார்கள்.

இது புகாரி – 3175, 3268, 5763, 5765, முஸ்லிம் – 4406 ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே ஆறு மாத காலம் பாதிப்பு ஏற்பட்டது என்ற செய்தி பலவீனம் என்றால் கூட அந்தப் பாதிப்பு நீண்ட நாள்கள் இருந்துள்ளதாக இவர்கள் நம்பும் இதர ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

('இவர்கள் நம்பும'' என்று நாம் குறிப்பிடுவதற்குக் காரணம் நபிகள் நாயகத்திற்கு சூனியம் வைக்கப்பட்டதாகச் சொல்லும் செய்திகள் அனைத்தும் கருத்து அடிப்படையில் பலவீனம் என்பதே எமது வாதம்.)

இதன் மூலம் நபிகளாருக்கு ஏற்பட்ட சூனியத்தின் பாதிப்பு ஆறு மாத காலம் நீடித்தது என்ற ஒரு குறிப்பிட்ட வரையறுக்குள் சொல்ல முடியாவிட்டாலும் நீண்ட நாட்கள் நீடித்தது என்பது உறுதியிலும் உறுதியாகிறது.

ஆறு மாதம் பாதிப்பு தொடர்ந்தது என்ற அடிப்படையில் நாம் எழுப்பிய வாதங்கள் அனைத்தும் நீண்ட நாட்கள் அப்பாதிப்பு தொடர்ந்தது என்பதிலும் பொருந்தவே செய்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவராக ஆறு மாதங்கள் இருந்தார்கள் என்று சொன்னால், நம்பினால் அது எவ்வாறு குற்றமோ அது போலவே ஆறுமாதங்கள் எல்லாம் இல்லை, ஆனால் நீண்ட நாட்கள் மன நலம் பாதிக்கப்பட்டவராக இருந்தார்கள் என்று சொன்னாலும், நம்பினாலும் குற்றமே.

அதுவும் நபித்துவத்தைப் பாதிக்கும் செயலே. அப்போதும் முன்னர் குறிப்பிட்ட பல்வேறு குர்ஆன் வசனங்களுடன் மோதவே செய்கிறது.

ஆறு மாதத்திலிருந்து நீண்ட நாட்கள் என்று குறைந்ததால் அந்தச் செய்தி எந்தக் குர்ஆன் வசனத்துடனும் மோதவில்லை என்றாகி விடாது. அப்போதும்

முன்னர் குறிப்பிட்ட எண்ணற்ற குர்ஆன் வசனங்களுடன் மோதத்தான் செய்கிறது.

சூனியம் என்றாலே பொய், பித்தலாட்டம் என்று அல்லாஹ் கூறியதற்கும்

கட்டளை மூலமாக காரியமாற்றும் ஆற்றல் அல்லாஹ் ஒருவனுக்கே உள்ளது எனும் வசனத்திற்கும்

நபிகள் நாயகத்திற்கு எந்த மனநோயும் வராது என்று திருக்குர்ஆன் கூறியதற்கும்

நபிகள் நாயகத்திற்கு சூனியம் வைக்கப்பட்டதை திருக்குர்ஆன் மறுக்கிறது என்பதற்கும்

சூனியத்தை நம்பக் கூடாது என்று நபிகள் நாயகம் கூறியுள்ளதற்கும் அப்போதும் முரண்படவே செய்கிறது.

**எல்லை தாண்டலாம்**

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். நபிகள் நாயகத்திற்கு ஏற்பட்ட சூனிய பாதிப்பு ஆறு மாத காலம் நீடித்தது என்ற செய்தி பலவீனம் எனில் ஆறு மாதம் இல்லை என்றாகி விடும்.

எனினும் நீண்ட நாட்கள் அப்பாதிப்பு தொடர்ந்தது என்பது ஹதீஸின் வாசகத்தில் வந்துள்ளதால் அந்த நீண்ட நாட்கள் என்பது ஆறு மாதத்திற்கு குறைந்த அளவாகவும் இருக்கலாம், அதே வேளை ஆறு மாதத்தைவிட அதிக நாட்களாகவும் இருக்கலாம். இரண்டுக்கும் சாத்தியமுள்ளது என்பதை மறுக்க முடியாது.

தாம் செய்யாததைச் செய்ததாக, மனைவியரிடத்தில் சேராமலேயே சேர்ந்ததாக ஒரே ஒரு நாள் பிரம்மையூட்டப்பட்டிருந்தால் அதை பெரிய நிகழ்வாக சொல்லியிருக்க வேண்டிய தேவையில்லை. நீண்ட நாட்கள் அப்பாதிப்பு தொடரப்போய்த்தான் அது பெரிய நிகழ்வாக சொல்லப்படுகிறது. எனவே அந்த நீண்ட நாள் பாதிப்பு என்பது ஆறு மாதத்தை விட அதிக கால அளவாகவும் இருக்கலாம்.

ஆறு மாத கால பாதிப்பு செய்தி சரி என்று சொல்லும் போதாவது பாதிப்பை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வரையறுத்து வைத்திருந்தார்கள். அந்தச் செய்தி பலவீனம் எனில் அது மாதிரி எந்த வரையறையும் இல்லாமல் போகிற விளைவை இந்த அறிவிலிகள் அறியவில்லை போலும்.



இனி பதறியடித்துக் கொண்டு இல்லையில்லை அது இரண்டு நாட்கள் தான், மூன்று நாட்கள் தான் ஆறு மாதத்தை விடவும் குறைந்த கால அளவு தான் என்று கூப்பாடு போடுவார்கள் எனில் ஸலபுக்கும்பல் தான் அதற்கு தகுந்த ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.

**ஹதீஸ் பலவீனமா?**

இனி மேற்குறிப்பிட்ட ஆறு மாத கால பாதிப்பு தொடர்ந்ததாகக் கூறும் ஹதீஸ் பலவீனமா என்பதைக் காண்போம்.

நபிகள் நாயகத்திற்கு சூனியம் வைக்கப்பட்ட நிகழ்வை ஹிஷாம் பின் உர்வாவிடமிருந்து 14 நபர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்களில் மஃமர் என்பாரைத் தவிர வேறு யாரும் ஆறு மாதம் பாதிப்பு பற்றி அறிவிக்கவில்லை.

மஃமர் என்பார் ஹிஷாம் பின் உர்வாவிடமிருந்து அறிவிக்கும் அறிவிப்புகளில் தவறிழைப்பவர் என இப்னு மயீன் விமர்சித்துள்ளார். எனவே இச்செய்தி பலவீனம் என்று எதிர்த்தரப்பினர் கூறுகின்றனர்.

மஃமர் என்பாரைப் பற்றி இப்னு மயீன் அவ்வாறு விமர்சித்திருப்பது உண்மையே. எனினும் இவ்விமர்சனம் குறிப்பிட்ட அறிவிப்பை முற்றிலும் பலவீனமாக்கக் கூடிய விமர்சனமா? என்பதை ஆராயக் கடமைப்பட்டுள்ளோம்.

ஏனெனில் மஃமர் என்பவர் ஹதீஸ்களை அறிவிப்பதில் கடைநிலை அறிவிப்பாளர் அல்ல. ஹதீஸ் நூல்களைத் தொகுத்துள்ள, பலராலும் அறியப்பட்ட, பல அறிஞர்களால் புகழ்ந்து சொல்லப்பட்ட நம்பகமான ஒரு அறிவிப்பாளர் ஆவார்.

الثقات لابن حبان - (٧ / ٤٨٤)

11071 - معمر بن راشد مولى عبد السلام بن عبد القدوس أخو صالح بن عبد القدوس
وقد قيل إنه مولى للمهلب بن أبى صفرة وهو معمر بن أبى عمرو من أهل البصرة
سكن اليمن يروى عن قتادة والزهري وأدرك جنازة الحسن وطلب العلم في تلك السنة
روى عنه بن المبارك وعبد الرزاق وكان فقيها متقنا حافظا

மஃமரைப் பற்றி மார்க்க அறிஞர், உறுதியானவர், ஹாஃபிழ் என்று இப்னு ஹிப்பான் குறிப்பிட்டுள்ளார்.

ஸிகாத் லி இப்னி ஹிப்பான் 7 484

الثقات للعجلي - (٢ / ٢٩٠)

1766 - معمر بن راشد يكنى أبا عروة بصرى سكن اليمن ثقة رجل صالح

மஃமர் நம்பகமானவர், நல்லவர் என்று இஜ்லி குறிப்பிடுகிறார்.

ஸிகாத் லில் இஜ்லி 2 290

عبد الرزاق قال سمعت ابى جريج يقول: عليكم بهذا الرجل – يعنى معمرا – فانه لم يبق من اهل زمانه اعلم منه.

மஃமரைப் பற்றி பிடித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவர் காலத்தில் அவரை விட நன்கறிந்த அறிஞர் யாருமில்லை. இவ்வாறு இப்னு ஜுரைஜ் என்பார் புகழ்ந்துள்ளார்.

அல்ஜரஹ் வத்தஃதீல் 8 256

معمرا شرب من العلم ما نقع

மஃமர் மேலதிக கல்வி ஞானத்தைப் பருகி விட்டார்

அல்ஜரஹ் வத்தஃதீல் 8 256

(الجرح والتعديل – (٨ / ٢٥٧

نا عبد الرحمن نا محمد بن حمويه بن الحسن قال سمعت ابا طالب احمد بن حميد قال قال احمد بن حنبل لا تضم احدا إلى معمر الا وجدت معمرا اطلب للعلم منه

மஃமருடன் வேறு யாரையும் ஒப்பிடாதீர்கள். தன்னை விட (முன்பை விட) மேலும் கல்வியைத் தேடுபவராக மஃமரைக் காண்பாய் என்று இமாம் அஹ்மத் அவர்கள் புகழ்ந்துள்ளார்கள்.

அல்ஜரஹ் வத்தஃதீல் 8 257

نا عبد الرحمن انا يعقوب بن اسحاق [ الهروي – ١ ] [ فيما كتب إلى – ٢ ] قال نا عثمان بن سعيد [ الدارمي – ١ ] قال سألت يحيى بن معين قلت: ابن عيينة احب اليك في الزهري أو معمر ؟ قال: معمر، قلت: معمراحب اليك أو صالح بن كيسان ؟ قال: معمر احب إلى قلت: فمعمر احب اليك أو يونس ؟ قال: معمر.

ஸுஹ்ரியின் மாணவர்களில் இப்னு உயைனா, ஸாலிஹ் பின் கைஸான், யூனுஸ் ஆகியோரை விட மஃமரே சிறந்தவர் என்று இப்னு மயீன் குறிப்பிட்டுள்ளார்.

அல்ஜரஹ் வத்தஃதீல் 8 257

யஃகூப் பின் அபீஷைபா, நஸாயீ ஆகியோரும் இவரை நம்பகமானவர் என்று சான்றளித்துள்ளார்கள்.

தஹ்தீபுத் தஹ்தீப் 10 245



இதன் மூலம் மஃமர் என்பார் பல அறிஞர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட மிக நம்பகமானவர் என்பது உறுதியாகிறது.

மேலும் மஃமர் என்பவர் புகாரி, முஸ்லிமின் அறிவிப்பாளர் ஆவார்.

இத்தகைய மஃமர், ஹிஷாம் பின் உர்வாவிடமிருந்து அறிவிக்கும் அறிவிப்புகளில் தவறிழைப்பவர் என்று இப்னு மயீனும் அவரைப் பின்பற்றி இப்னு ஹஜர் உள்ளிட்டோருமே குறிப்பிடுகின்றனர்.

அறிவிப்பாளர்களை விமர்சனம் செய்வதில் இப்னு மயீன் கடுமையான போக்கைக் கடைபிடிப்பவர் என்பது ஹதீஸ்கலை அறிஞர்களிடம் அறியப்பட்ட ஒன்று.

மேலும் யார் வழியாக மஃமர் அறிவித்தால் அதில் குழப்பம் உண்டு என்று கடும் போக்கை கையாளும் இப்னு மயீன் விமர்சனம் செய்தாரோ அதை வைத்து ஆறுமாத அறிவிப்பை பலவீனம் என்று குறிப்பிட்டார்களோ அதே ஹிஷாம் பின் உர்வாவிடமிருந்து மஃமர் அறிவிக்கும் அறிவிப்புகள் புகாரியிலும் உள்ளன.

புகாரி 4027, 3974 ஆகிய ஹதீஸ்கள் மஃமர், ஹிஷாமிடமிருந்து அறிவிக்கும் அறிவிப்புகளே. அதற்கான அரபு மூலத்தை கீழே தருகிறோம்.

4027 حَدَّثَنِي إِبْرَاهِيمُ بْنُ مُوسَى أَخْبَرَنَا هِشَامٌ عَنْ مَعْمَرٍ عَنْ هِشَامِ بْنِ عُرْوَةَ عَنْ أَبِيهِ عَنْ الزُّبَيْرِ قَالَ ضُرِبَتْ يَوْمَ بَدْرٍ لِلْمُهَاجِرِينَ بِمِائَةِ سَهْمٍ

3974 أَخْبَرَنِي إِبْرَاهِيمُ بْنُ مُوسَى حَدَّثَنَا هِشَامُ بْنُ يُوسُفَ عَنْ مَعْمَرٍ أَخْبَرَنَا هِشَامٌ عَنْ عُرْوَةَ قَالَ كَانَ فِي الزُّبَيْرِ ثَلَاثُ ضَرَبَاتٍ بِالسَّيْفِ إِحْدَاهُنَّ فِي عَاتِقِهِ قَالَ إِنْ كُنْتُ لَأُدْخِلُ أَصَابِعِي فِيهَا قَالَ ضُرِبَ ثِنْتَيْنِ يَوْمَ بَدْرٍ وَوَاحِدَةً يَوْمَ الْيَرْمُوكِ قَالَ عُرْوَةُ وَقَالَ لِي عَبْدُ الْمَلِكِ بْنُ مَرْوَانَ حِينَ قُتِلَ عَبْدُ اللَّهِ بْنُ الزُّبَيْرِ يَا عُرْوَةُ هَلْ تَعْرِفُ سَيْفَ الزُّبَيْرِ قُلْتُ نَعَمْ قَالَ فَمَا فِيهِ قُلْتُ فِيهِ فَلَّةٌ فُلَّهَا يَوْمَ بَدْرٍ قَالَ صَدَقْتَ بِهِنَّ فُلُولٌ مِنْ قِرَاعِ الْكَتَائِبِ ثُمَّ رَدَّهُ عَلَى عُرْوَةَ قَالَ هِشَامٌ فَأَقَمْنَاهُ بَيْنَنَا ثَلَاثَةَ آلَافٍ وَأَخَذَهُ بَعْضُنَا وَلَوَدِدْتُ أَنِّي كُنْتُ أَخَذْتُهُ حَدَّثَنَا فَرْوَةُ حَدَّثَنَا عَلِيٌّ عَنْ هِشَامٍ عَنْ أَبِيهِ قَالَ كَانَ سَيْفُ الزُّبَيْرِ بْنِ الْعَوَّامِ مُحَلًّى بِفِضَّةٍ قَالَ هِشَامٌ وَكَانَ سَيْفُ عُرْوَةَ مُحَلًّى بِفِضَّةٍ

இமாம் முஸ்லிம் அவர்களும் தமது நூலில் மஃமர் ஹிஷாமிடமிருந்து அறிவிக்கும் அறிவிப்புகளை முதாபஆவாக பதிவு செய்துள்ளார்.

இது தவிர மஃமர், ஸாபித் வழியாக அறிவிக்கும் அறிவிப்புகளும் புகாரி முஸ்லிமில் முதாபஆவாக உள்ளது. இந்த அறிவிப்பையும் இப்னு மயீன் குறை கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை அறிவிப்புகளையும் இப்னு மயீன் அவர்களின் விமர்சனத்தின் அடிப்படையில் பலவீனம் என்று சொல்ல ஸலபுக் கும்பல் தயாரா? இமாம்களின் மீது குருட்டு பக்தி கொள்ளும் ஸலபுக் கும்பல் புகாரி முஸ்லிமின் இத்தனை அறிவிப்புகளும் பலவீனமா என்பதற்குப் பதிலளிக்க வேண்டும்.

இதிலிருந்து மஃமர், ஹிஷாமிடமிருந்து அறிவிக்கும் எல்லா அறிவிப்புகளும் பலவீனம் என்று முடிவு செய்ய முடியாது என்பதை அறியலாம்.

மஃமர் அடிப்படையில் மிக நம்பகமானவர் என்பதாலும் அவரைப் பல அறிஞர்கள் புகழ்ந்து கூறியுள்ளதாலும் அவர் ஹிஷாம் வழியாக அறிவிக்கும் அனைத்து அறிவிப்புகளும் பிரச்சனைக்குரியது என்று சொல்லிவிட முடியாது. மாறாக அவர் தவறாக அறிவித்துள்ளது எங்கே உறுதியாகுமோ அது தான் பிரச்சனை என்று முடிவு செய்ய வேண்டும்.

மஃமர் குறித்து இமாம் தஹபீ குறிப்பிட்ட விமர்சனத்தை முன்வைத்து விட்டு இவ்வாறு முடிவு செய்துள்ளதை அறிகிறோம்.

(الرواة الثقات المتكلم فيهم بما لا يوجب ردهم - (١ / ٦٦١

معمر بن راشد ابو عروة إمام ثقة قال ابو حاتم صالح الحديث وما حدث بالبصرة ففيه أغاليط قلت ما نزال نحتج بمعمر حتى يلوح لنا خطؤه بمخالفة من هو أحفظ منه او نعده من الثقات

மஃமர் அவரை விட மிக நம்பகமானவருக்கு மாற்றமாகவோ, அல்லது நம்பகமானவருக்கு மாற்றமாகவோ அறிவிப்பதன் மூலம் அவரது தவறு நமக்கு வெளிப்படையாகத் தெரியும் வரை மஃமரை நாம் ஆதாரமாகக் கொள்வோம்.

அர்ருவாதுஸ் ஸிகாத் 1 166

எனவே மஃமர் எங்கே தவறாக, குழப்பமாக அறிவித்துள்ளாரோ அந்த அறிவிப்பே பலவீனம் என்றாகும்.

**ஹதீஸ்கலை அறியா பதறுகள்**

ஹிஷாம் பின் உர்வாவின் 14 மாணவர்களில் வேறு யாரும் ஆறு மாதம் என்ற தகவலைக் கூறவில்லை. மஃமர் மட்டுமே கூறியுள்ளார். ஆகவே மஃமர் இங்கே தவறு செய்துள்ளார், குழப்பமாக அறிவித்துள்ளார் என்று முடிவு செய்வது முற்றிலும் தவறானதாகும்.

நம்பகமானவர் கூடுதலாக அறிவிக்கும் அறிவிப்பு ஏற்கப்படும் என்பது ஹதீஸ்கலை விதி.



வேறு யாரும் ஆறு மாதம் என்பதைக் குறிப்பிடாத போது ஒருவர் ஆறுமாதம் எனும் தகவலையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார் எனில் அது முரண்பாடு, குழப்பம் என்று யாரும் கருத மாட்டோம். கூடுதல் தகவல் என்றே கருதுவோம்.

அது போலவே ஹிஷாமின் 14 மாணவர்களில் மஃமர் ஆறு மாதம் எனும் வாசகத்தை அறிவிப்பது கூடுதல் தகவலாகவே பார்க்கப்படும். சொல்லப் போனால் மற்றவர்களின் அறிவிப்பை விட மஃமரின் அறிவிப்பே தெளிவாக உள்ளது என்றே அதைக் காணும் யாரும் முடிவு செய்வார்.

மற்றவர்கள் யாரும் காலம் குறிப்பிடாமல் நபிகள் நாயகத்திற்கு சூனியம் வைக்கப்பட்டது என்று குறிப்பிடும் போது மஃமர் ஆறு மாத காலம் அந்தப் பாதிப்பு இருந்தது என்று துல்லியமாக அறிவிக்கிறார் எனில் இது எப்படி முரண்பாடாக, குழப்பமானதாக ஆகும். இது தான் தெளிவான அறிவிப்பு என்றே கருத முடியும்.

13 நபர்கள் இஸ்மாயில் ஜெயிலில் சில காலம் இருந்தார் என்றும் ஒருவர் மட்டும் ஆறு மாதம் காலம் இஸ்மாயில் ஜெயிலில் இருந்தார் என்றும் சொன்னால் இது முரண்பாடா?

13 நபர்கள் ஒருவரைப் பற்றி இவர் சிக்கன் சாப்பிட்டார் என்றும் ஒருவர் மட்டும் அவர் ஆறு சிக்கன் துண்டுகள் சாப்பிட்டார் என்றும் அறிவித்தால் இது முரண்பாடா?

இது போலத்தான் நபிகள் நாயகம் சூனியம் வைக்கப்பட்டு மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார்கள் என்று 13 நபர்கள் அறிவிக்க, மஃமர் தெளிவாக பாதிக்கப்பட்ட காலம் ஆறு மாதம் என்று அறிவிக்கிறார். இதை எப்படி முரண்பாடாக கருத முடியும்.

நம்பகமான அறிவிப்பாளர் கூடுதலாக அறிவிக்கும் தகவல் ஏற்கப்பட வேண்டும் என்ற ஹதீஸ்கலை விதிப் பிரகாரம் மஃமரின் இந்த அறிவிப்பு ஏற்கப்பட வேண்டும் என்பதே சரியான கருத்தாக இருக்கிறது.

இல்லையில்லை மஃமரின் அனைத்து அறிவிப்புகளும் பலவீனமானவையே என்றால் கூட அப்போதும் நமது வாதத்தில் எந்த பாதிப்பும் இல்லை.

ஏனெனில் ஆறு மாதம் என்று துல்லியமாக குறிப்பிட முடியாதே தவிர நீண்ட நாள்கள் அந்த பாதிப்பு தொடர்ந்ததாக ஹதீஸ்கள் கூறுவது உறுதியான ஒன்று என்பதை முன்னரே விளக்கி விட்டோம். அந்த நீண்ட நாள்கள் என்பது ஆறு மாதத்தை விட அதிக காலஅளவாக கூட இருக்கலாம்.

நீண்ட நாட்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூனியத்தினால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள் என்று கூறினால் மட்டும் அல்லாஹ் எச்சரிக்கும் அநியாயக்கரார்கள் பட்டியலில் இருந்து தப்ப முடியாது என்பதை இந்த ஸ லபுக்கும்பல் புரிய வேண்டும்.

'அல்லது இவருக்கு ஒரு புதையல் வழங்கப்பட்டிருக்கக் கூடாதா? அல்லது இவருக்கு ஒரு தோட்டம் இருந்து அதிலிருந்து இவர் உண்ணக் கூடாதா?'' என்றும் 'சூனியம் செய்யப்பட்ட மனிதரையே பின்பற்றுகிறீர்கள்'' என்றும் அநீதி இழைத்தோர் கேட்கின்றனர்.

அல்குர்ஆன் 25:8

எப்படிப் பார்த்தாலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூனியத்தினால் பாதிக்கப்பட்டார்கள் என்று கூறும் அறிவிப்புகள் அனைத்தும் குர்ஆனுக்கு முரணானவேயே என்பதில் துளியும் சந்தேகமில்லை.



# சூனியத்தை நம்பியவன் சுவர்க்கம் புகமாட்டான் - என்ற செய்தி பலவீனமானதா?

சூனியம் தொடர்பாக இடம் பெறும் செய்திகளில் எதிர் தரப்பினரின் போலி வாதங்களுக்கு பதிலாக அமைந்த தெளிவான ஒரு செய்தி தான் சூனியத்தை உண்மைப் படுத்தியவன் சுவனம் நுழைய மாட்டான் என்ற கருத்துப்பட பதிவு செய்யப்பட்டுள்ள செய்தியாகும்.

குறித்த செய்தி தமது சூனியக் கருத்துக்கு பலத்த அடியாக அமைந்திருக்கின்றது என்பதை புரிந்து கொண்ட சூனியக் கூட்டத்தினர் தற்போது குறித்த செய்தியையும் பலவீனம் என்று தட்டிக் கழித்து தப்பித்து விட முயற்சி செய்கின்றனர்.

சூனியத்தை உண்மைப் படுத்துபவன் தொடர்பான செய்தியின் அறிவிப்பாளர் தொடர் தொடர்பில் தற்போது அலசுவோம்.

(مسند أحمد – (ج ٥٤ / ص ٧٤

26212 - حَدَّثَنَا أَبُو جَعْفَرٍ السُّوَيْدِيُّ قَالَ حَدَّثَنَا أَبُو الرَّبِيعِ سُلَيْمَانُ بْنُ عُتْبَةَ الدِّمَشْقِيُّ قَالَ سَمِعْتُ يُونُسَ بْنَ مَيْسَرَةَ عَنْ أَبِي إِدْرِيسَ عَائِذِ اللَّهِ عَنْ أَبِي الدَّرْدَاءِ عَنِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَا يَدْخُلُ الْجَنَّةَ عَاقٌّ وَلَا مُؤْمِنٌ بِسِحْرٍ وَلَا مُدْمِنُ خَمْرٍ وَلَا مُكَذِّبٌ بِقَدَرٍ

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

விதியை மறுப்பவன், நிரந்தரமாக மது அருந்துபவன், சூனியத்தை உண்மை என்று நம்புபவன், (பெற்றோருக்கு) மாறு செய்பவன் ஆகியோர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்.

அறிவிப்பவர் : அபுத்தர்தா (ரலி)

நூல் : அஹ்மது (26212)

சூனியத்தை ஒருவன் நம்பினால் அவன் சொர்க்கம் செல்ல மாட்டான் என்பதைத் தெளிவான முறையில் இந்த நபிமொழி சொல்கிறது. எந்த வியாக்கியானமும் கொடுக்க முடியாத வகையில் இதன் வாசக அமைப்பு அமைந்துள்ளது. சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்ற இணைவைப்பை கொள்கையாகக் கொண்டவர்களுக்கு சவுக்கடி தரும் வகையில் இந்தச் செய்தி அமைந்துள்ளது.

**சுலைமான் பின் உத்பா பலவீனமானவரா?**

சூனியத்தை உண்மை என்று நம்புபவன் சொர்க்கம் புகமாட்டான் என்ற நபிமொழி பின்வரும் அறிவிப்பாளர் தொடரில் வந்துள்ளது.

நபியவர்களிடமிருந்து அபுத்தர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அபுத்தர்தா (ரலி) அவர்களிடமிருந்து அபூ இத்ரீஸ் என்பார் அறிவிக்கின்றார்.

அபூ இத்ரீஸ் என்பாரிடமிருந்து யூனுஸ் இப்னு மய்ஸரா என்பார் அறிவிக்கின்றார்.

யூனுஸ் இப்னு மய்ஸரா என்பாரிடமிருந்து சுலைமான் பின் உத்பா என்பார் அறிவிக்கின்றார்.

சுலைமான் பின் உத்பா என்பாரிடமிருந்து அபூ ஜஃபர் அஸ்ஸுவைதி என்பார் அறிவிக்கின்றார்.

அபூ ஜஃபர் அவர்களிடமிருந்து இமாம் அஹ்மத் இந்தச் செய்தியை பதிவு செய்துள்ளார்.

மேற்கண்ட அறிவிப்பாளர் தொடரில் உள்ள அனைத்து அறிவிப்பாளர்களும் நம்பகமானவர்கள் என்று ஏற்றுக் கொள்ளும் சூனியக் கட்சியினர் "சுலைமான் பின் உத்பா" என்ற அறிவிப்பாளர் மட்டும் பலவீனமானவர் என்று கூறித் திரிகின்றனர்.

ஆனால் இவர் பலவீனமானவர் அல்ல என்பதே உண்மை.

இவர் நம்பகமானவர் என்று பலர் நற்சான்று அறிவித்துள்ளனர். துஹைம், அபூ ஹாதிம், அபூசுர்ஆ, ஹைஸம் பின் காரிஜா, ஹிசாம் பின் அம்மார், இப்னு ஹிப்பான், இப்னுஹஜர், தஹபீ ஆகியோர் நம்பகமானவர் எனக் கூறியுள்ளனர்.

'இவரை நான் அறியவில்லை" என்று இமாம் அஹ்மத் கூறியுள்ளார். பல அறிஞர்கள் 'சுலைமான் பின் உத்பா" அவர்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்துள்ளதால் இமாம் அஹ்மத் அவர்களின் இந்தக் கூற்று ஏற்கத் தகுந்தது அல்ல என்பது நிரூபணமாகிவிட்டது.

இமாம் யஹ்யா பின் மயீன் மட்டுமே இவர் தொடர்பாக 'லைஸ பிஷையின்" என்றும் சில நூற்களில் 'லா ஷைஉன்" என்றும் கூறியுள்ளார். இமாம் யஹ்யா



பின் மயீன் ஒரு அறிவிப்பாளர் விசயத்தில் மேற்கண்ட வார்த்தைகளைக் கூறினால் அவர் பலவீனமானர் என்று நாம் எல்லா இடங்களிலும் முடிவு செய்ய முடியாது. யாராலும் குறைகூறப்படாத மிகக் குறைவான ஹதீஸ்களை அறிவிக்கும் அறிவிப்பாளர்களைக் கூட இப்னு மயீன் அவர்கள் 'லைஸ பி ஸையின்" (இவர் ஒரு பொருட்டாகக் கொள்ளத்தக்கவரில்லை) என்று விமர்சித்துள்ளார்கள். இதனை இமாம் இப்னு ஹஜர் அவர் தமது ஃபத்ஹுல் பாரி என்ற நூலின் முன்னுரையில் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

فتح الباري لابن حجر (١/ ٤٢٠)

وَذكر بن الْقطَّان الفاسي أَن مُرَاد بن معِين بقوله فِي بعض الرِّوَايَات لَيْسَ بِشَيْء يَعْنِي أَن أَحَادِيثه قَلِيلَة جدا

இப்னு மயீன் அவர்கள் சில அறிவிப்பாளர்கள் தொடர்பாக 'லைஸ பிஷையின்" என்று கூறினால் 'அந்த அறிவிப்பாளரின் ஹதீஸ்கள் மிகக் குறைவானவை" என்ற கருத்தையே அவர் நாடுகிறார். இதனை இப்னுல் கத்தான் அல்பாஸி அவர்கள் கூறியுள்ளார்கள்.

நூல் : ஃபத்ஹுல் பாரி முன்னுரை

சுலைமான் பின் உத்பா மிகக் குறைவான செய்திகளையே அறிவித்துள்ளார். இதன் காரணத்தினால்தான் இப்னு மயீன் அவர்கள் அவர் தொடர்பாக 'லைஸ பிஷையின்" வாசகத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனவே" சுலைமான் பின் உத்பா" என்பாரை இப்னு மயீன் குறை கூறவில்லை என்பதே சரியான விளக்கமாகும்.

மேலும் "இவர் மறுக்கத்தக்க சில செய்திகளை அறிவித்துள்ளார்" என்று ஸாலிஹுல் ஜஸ்ரா அவர்கள் கூறுவதை வைத்து இவரை பலவீனமானவர் என்று கருத முடியாது. ஏனெனில் எத்தனையோ உறுதியான அறிவிப்பாளர்கள் சில மறுக்கத்தக்க செய்திகளை அறிவித்துள்ளனர். அதனை வைத்து அவர்களை பலவீனமானவர்கள் என்று யாரும் முடிவு செய்யவில்லை.

தற்கால அறிஞர்களில் ஒருவரான 'ஷுஜப் அர்னாவூத்" அவர்கள் சுலைமான் பின் உத்பா அவர்கள் தனித்து அறிவித்தால் ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியுள்ளார். இது ஏற்கத் தகுந்த விமர்சனம் அல்ல. ஏனெனில் சுலைமான் பின் உத்பா அவர்கள் மீது எந்த அறிஞரும் குறை கூறவில்லை. இந்நிலையில் அவர் தனித்து அறிவித்தால் ஏற்க முடியாது என்ற விமர்சனம் ஏற்கத்தகுந்தது அல்ல என்பது தெளிவாகிவிட்டது

எனவே இது ஆதாரப்பூர்வமான ஹதீஸ் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. ஹதீஸ் கலை விதிகளின் அடிப்படையில் ஸஹீஹ் என்ற முதல் தரத்தில் அமைந்த செய்தியாகும்.

**சூனியத்தை நம்புவது என்றால் என்ன?**

சூனியத்தை நம்புபவன் என்றால் அதன் சரியான பொருளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சூனியம் என்று ஒரு பித்தலாட்டம் இருக்கிறது என்பதை நாமும் நம்புகிறோம். இந்த ஹதீஸ் அதைக் கூறவில்லை. சூனியத்தால் தாக்கம் ஏற்படும் என்று நம்புவதையே இது குறிக்கிறது.

இதே அமைப்பில் கூறப்பட்ட பின்வரும் நபிமொழியில் இருந்து இதன் பொருளை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ مَسْلَمَةَ عَنْ مَالِكٍ عَنْ صَالِحِ بْنِ كَيْسَانَ عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ عُتْبَةَ بْنِ مَسْعُودٍ عَنْ زَيْدِ بْنِ خَالِدٍ الْجُهَنِيِّ أَنَّهُ قَالَ صَلَّى لَنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ صَلَاةَ الصُّبْحِ بِالْحُدَيْبِيَةِ عَلَى إِثْرِ سَمَاءٍ كَانَتْ مِنْ اللَّيْلَةِ فَلَمَّا انْصَرَفَ أَقْبَلَ عَلَى النَّاسِ فَقَالَ هَلْ تَدْرُونَ مَاذَا قَالَ رَبُّكُمْ قَالُوا اللَّهُ وَرَسُولُهُ أَعْلَمُ قَالَ أَصْبَحَ مِنْ عِبَادِي مُؤْمِنٌ بِي وَكَافِرٌ فَأَمَّا مَنْ قَالَ مُطِرْنَا بِفَضْلِ اللَّهِ وَرَحْمَتِهِ فَذَلِكَ مُؤْمِنٌ بِي وَكَافِرٌ بِالْكَوْكَبِ وَأَمَّا مَنْ قَالَ بِنَوْءِ كَذَا وَكَذَا فَذَلِكَ كَافِرٌ بِي وَمُؤْمِنٌ بِالْكَوْكَبِ

ஸைத் பின் காலித் அல்ஜுஹனீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'ஹுதைபியா' எனுமிடத்தில் எங்களுக்கு சுப்ஹுத் தொழுகை தொழுவித்தார்கள்.-அன்றிரவு மழை பெய்திருந்தது.- தொழுது முடித்ததும் மக்களை நோக்கி நேராகத் திரும்பி, 'உங்கள் இறைவன் என்ன கூறினான் என்பதை நீங்கள் அறிவீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிந்தவர்கள்' என்று கூறினர். அப்போது 'என்னை நம்பக் கூடியவர்களும் (என்னை) மறுக்கக் கூடியவர்களுமாக என் அடியார்கள் (இரு பிரிவினராக) உள்ளனர். 'அல்லாஹ்வின் தயவாலும் அவன் கருணையாலும்தான் நமக்கு மழை பொழிந்தது' எனக் கூறியவர்களோ என்னை நம்பி, நட்சத்திரத்தை மறுத்தவர்களாவர். இன்ன இன்ன நட்சத்திரத்தால்தான் (எங்களுக்கு மழை பொழிந்தது) எனக் கூறியவர்களோ என்னை மறுத்து, நட்சத்திரத்தை நம்பியவர்களாவர்' என இறைவன் கூறினான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

புகாரி - 1038



இந்த ஹதீஸில் நட்சத்திரத்தில் நம்பிக்கை வைக்கக் கூடாது என்று சொல்லப்படுகின்றது. நட்சத்திரம் ஒன்று உள்ளது என்று நம்பினால் அது தவறல்ல. அதை இந்த நபிமொழி மறுக்கவில்லை. மாறாக நட்சத்திரத்தால் மழை பெய்யும் என்றும் எதிர்கால விசயங்களை அதன் மூலம் கணிக்க முடியும். அதனால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்த முடியும் என்றும் நம்புவதை இந்த ஹதீஸ் மறுக்கின்றது.

யாராவது இந்த அடிப்படையில் நட்சத்திரத்தை நம்பினால் அவன் அல்லாஹ்வை நம்பவில்லை. நட்சத்திரத்தையே ஈமான் கொண்டுள்ளான்.

இது போல் சூனியத்தை நம்பினால் சொர்க்கம் செல்ல முடியாது.

சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று நம்பினாலே அவன் அல்லாஹ்விற்கு இணைவைத்து விட்டான். அவன் சுவனம் புகமுடியாது என்பதுதான் மேற்கண்ட நபிமொழியின் கருத்து என்பதை பின்வரும் ஹதீஸில் இருந்தும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

(مسند أحمد بن حنبل (١/ ٧٢٢

حدثنا عبد الله حدثني أبي ثنا يحيى عن عبيد الله بن الأخنس قال حدثنا الوليد - 2000 بن عبد الله عن يوسف بن ماهك عن بن عباس رضي الله عنه عن النبي صلى الله عليه و سلم قال : ما اقتبس رجل علما من النجوم الا اقتبس بها شعبة من السحر ما زاد زاد

تعليق شعيب الأرنؤوط : إسناده صحيح رجاله ثقات رجال الشيخين غير الوليد بن عبدالله

எவர் ஒருவர் நட்சத்திர ஜோசியத்திலிருந்து ஒரு கல்வியைக் கற்றுக் கொள்கிறாரோ அவர் அதன் மூலம் சூனியத்தின் ஒரு கிளையையே கற்றுக்கொண்டார். அதிகப்படுத்த வேண்டியதை அதிகப்படுத்திக்கொள்கிறார். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி)

நூல் : அஹ்மத் (2000)

ஏனெனில் நட்சத்திரத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புவதே இணைவைத்தல் என்பதை முதலாவது நபிமொழியும், அந்த நட்சத்திர ஜோசியத்தை கற்பது சூனியம் என்பதை இரண்டாவது நபிமொழியும் தெளிவுபடுத்துகிறது.

நட்சத்திரத்தினால் பாதிப்புகள் ஏற்படுகிறது என்று நம்புவதினாலேயே ஒருவன் நட்சத்திர ஜோசியம் பார்க்கிறான்.

எனவே நட்சத்திர ஜோசியம் சூனியம் என்பதின் கருத்து “நட்சத்திரத்தினால் பாதிப்பு ஏற்படும்” என்று நம்புவதே.

இதன் அடிப்படையில் சூனியத்தை நம்புபவன் சொர்க்கம் புகமாட்டான் என்பது “சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புவதையே குறிக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் ஒருவன் “சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புவதினாலேயே” சூனியக்காரனிடம் செல்கிறான். எனவே சூனியக்காரனிடம் சென்று சூனியம் வைப்பது கூடும் என்று நம்புபவனும் இணைவைப்பவன்தான்.

தஜ்ஜால் மூலம் நிகழும் அற்புதங்களை நாம் நம்பவில்லையா அது போன்றுதான் சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புவதும். அவ்வாறு நம்பினால் இணைவைத்தால் ஆகாது என்று சிலர் வாதிக்கின்றனர்.

இது மிகவும் முட்டாள் தனமான வாதமாகும்.

தஜ்ஜால் இறைவனைப் போன்று அற்புதம் செய்வான் என்று நாம் நம்பிக்கை கொள்ளவில்லை. தஜ்ஜாலுக்கு இறைவனுடைய ஆற்றல் கடுகளவு கூட கிடையாது என்றே நாம் நம்புகிறோம்.

மாறாக தஜ்ஜால் மூலம் இறைவன் எதை வெளிப்படுத்த வேண்டும் என்று இறைவன் நாடிவிட்டானோ அவற்றை மட்டுமே அவன் மூலம் இறைவன் வெளிப்படுத்துவான்.

ஒரு குழந்தை உயரமான மாடியிலிருந்து விழுந்து உயிர் பிழைத்து விட்டால் அதனை நாம் அந்தக் குழந்தையின் ஆற்றல் என்று கூறமாட்டோம். மாறாக அந்தக் குழந்தையில் இறைவன் வெளிப்படுத்திய அற்புதம் என்றே நாம் நம்புவோம். இது போன்றுதான் தஜ்ஜாலை நாம் நம்பிக்கை கொள்வதும்.

தஜ்ஜால் இறைவனைப் போன்று அற்புதங்களைச் செய்வான் என்று ஒருவன் நம்பினால், அல்லது தஜ்ஜாலுக்கு இறைவன் அற்புதம் செய்யும் ஆற்றலை இறைவன் வழங்கி விட்டான் என்று ஒருவன் நம்பினால் அதுவும் இணைகற்பிக்கும் நம்பிக்கையே.

ஆனால் சூனியத்தை நம்புபவர்கள் “சூனியத்தினால் அல்லாஹ்வைப் போன்று பாதிப்பு ஏற்படுத்தும் சக்தியை இறைவன் நாடினால் வழங்குவான்” என்றே நம்புகின்றனர்.

அல்லாஹ் தன்னைப் போன்ற ஆற்றலை யாருக்கும் வழங்கமாட்டான்



என்பதே தவ்ஹீத் கொள்கை.

அல்லாஹ்வைப் போன்று சூனியக்காரன் பாதிப்பு ஏற்படுத்துவதற்கு அல்லாஹ் நாடுவான் என்பது இணைவைப்புக் கொள்கை.

எனவே தஜ்ஜால் தொடர்பான நம்பிக்கையும், சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்ற நம்பிக்கையும் ஒன்றல்ல . இரண்டிற்கும் வானத்திற்கும், பூமிக்கும், மலைக்கும் மடுவிற்கும் அளவிலான வித்தியாசம் உள்ளது.

எனவே சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புவதே குர்ஆனுக்கு எதிரான நம்பிக்கையாகும். குர்ஆனுடைய கருத்தை வலுப்படுத்தும் வகையில் மேற்கண்ட நபிமொழிக்கு விளக்கம் கொடுப்பதே சரியான கொள்கையாகும்.

எனவே சூனியம் செய்வது கூடும் என்று நம்புபவனும், சூனியத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று நம்புபவனும் சுவனம் புகமாட்டார்கள் என்பதையே மேற்கண்ட நபிமொழி கூறுகிறது.

# மூஸா நபி மலக்குள் மவ்துக்கு அடித்தார்களா?

புனித அல்குர்ஆனுக்கு முரண்படும் செய்திகளின் வரிசையில் நபி மூஸா (அலை) அவர்கள் வானவருக்கு அடித்ததாக இடம் பெற்றுள்ள செய்தியும் ஒன்றாகும். அதைப் பற்றிய முழு விபரத்தை இங்கு விரிவாக பார்ப்போம்.

3407 - حدثنا يحيى بنُ موسى حدَّثَنا عبدُ الرزّاق أخبرَنا مَعمرٌ عن ابنِ طاوس عن أبيهِ عن أبي هريرةَ رضيَ الله عنه قال:أرسِلَ ملكُ الموتِ إلى موسى عَليهمَا السلَام، فَلما جاءهُ صَكّهُ، فرجَعَ إلى ربهِ فقال: أرسلَتني إلى عبدٍ لا يريدُ الموتَ. قال: ارجِعْ إليهِ فقل له يَضَعُ يدَهُ على مَتنِ ثورٍ، فلهُ بما غطى يدُهُ بكل شعرةٍ سنة. قال: أي ربّ، ثمّ ماذا ؟ قال: ثمّ الموت. قال: فالآن. قال: فسأَلَ الله أن يُدنِيَهُ منَ الأرض المقدّسةِ رميةً بحجر. قال أبو هريرةَ: فقال رسولُ اللهِ صلى الله عليه وسلّم: لو كنتُ ثمّ لأريتُكم قبرَهُ إلى جانبِ الطريقِ تحتَ الكثيبِ الأحمر. قال: وأخبرَنا مَعْمرٌ عن هَمامٍ حدّثنا أبو هريرةَ عنِ النبيِّ صلى الله علَيه وسلّم نحوَهَ.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

மலக்குல் மவ்த் (உயிரை எடுத்துச் செல்ல வரும் வானவர்) மூஸா (அலை) அவர்களிடம் அனுப்பப்பட்டார். தம்மிடம் அவர் வந்த போது மூஸா (அலை) அவர்கள் அவரை (முகத்தில்) அறைந்து விட்டார்கள். உடனே அவர் தம் இறைவனிடம் திரும்பிச் சென்று, மரணத்தை விரும்பாத ஓர் அடியாரிடம் என்னை நீ அனுப்பி விட்டாய் என்று கூறினார். இறைவன், நீ அவரிடம் திரும்பிச் சென்று அவரது கையை ஒரு காளை மாட்டின் முதுகின் மீது வைக்கச் சொல். (அதன் முதுகிலுள்ள முடிகளில் எந்த அளவிற்கு) அவரது கரம் மூடுகின்றதோ (அதில்) ஒவ்வொரு முடிக்குப் பகரமாக ஓர் ஆண்டு (இந்த உலகில் வாழ) அவருக்கு அனுமதி உண்டு (என்று சொல்.) எனக் கூறினான். (அவ்வாறே அந்த வானவர் திரும்பிச் சென்று மூஸா (அலை) அவர்களிடம் கூறிய போது) அவர், இறைவா! (அத்தனை காலம் வாழ்ந்து முடிந்த) பிறகு என்ன நடக்கும்? என்று கேட்டார்கள். இறைவன், மரணம் தான் என்று பதிலளித்தான். மூஸா (அலை) அவர்கள், அப்படியென்றால் இப்போதே என் உயிரை எடுத்துக் கொள் என்று கூறிவிட்டு, (பைத்துல் முகத்திஸ் என்னும்) புனித பூமிக்கு நெருக்கமாக அதிலிருந்து கல்லெறியும் தூரத்தில் தம் அடக்கத் தலம் அமைந்திடச் செய்யுமாறு அல்லாஹ்விடம் வேண்டினார்கள்.

(இதை எடுத்துரைத்த போது) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், நான்



அங்கு (பைத்துல் மக்திஸில்) இருந்திருந்தால் சாலையோரமாக செம்மணற் குன்றின் கீழே அவரது மண்ணறை இருப்பதை உங்களுக்கு காட்டியிருப்பேன் என்று கூறினார்கள்.

ஹம்மாம் (ரஹ்) அவர்கள், அபூஹுரைரா (ரலி) அவர்கள் இதே போன்று நபி (ஸல்) அவர்களிடமிருந்து எமக்கு அறிவித்து உள்ளார்கள் என்று கூறுகிறார்கள்.

புகாரி : 3407

1339 - حدّثنا محمودٌ حدّثَنا عبدُ الرزّاقِ أخبرَنا مَعْمرٌ عن ابن طاوُس عن أبيهِ عن أَبِي هريرةَ رضِيَ اللهُ عنه قال أُرسِلَ مَلَكُ المَوتِ إلى موسى علَيهمَا السلاَمُ، فلمّا جاءَهُ صَكَّهُ، فرجَعَ إلى ربِّهِ فقال: أرسلْتَني إلى عبدٍ لا يُريدُ المَوتَ. فرَدّ اللهُ عليهِ عَينَه وقال: ارجعْ فَقُلْ لهُ يَضَعُ يدَهُ على مَتَنِ ثَورٍ، فلهُ بكلِّ ما غَطتْ بهِ يدُهُ بكلّ شعرةٍ سنةٌ. قال: أي ربّ، ثمّ ماذا؟ قال: ثمّ الموتُ. قال فالآنَ. فسأَلَ اللهَ أن يُدنِيَهُ مِنَ الأرض المقدّسةِ رميةً بحَجَر. قال: قالَ رسولُ اللهِ صلى الله عليه وسلّم: فلو كنتُ ثَمّ، لأريتُكم قبرَهُ إلى جانبِ الطريق عنَد الكثيب الأحمر.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

உயிர் பறிக்கும் வானவர் ஒருவர் மூஸா (அலை) அவர்களிடம் அனுப்பப்பட்டார். அவர் வந்த போது மூசா (அலை) அவர்கள் அவரது கண் பிதுங்கும் அளவுக்கு அடித்து விட்டார்கள். உடனே அவர் அல்லாஹ்விடம் போய், இறைவா! இறக்க விரும்பாத ஒரு அடியாரிடம் நீ என்னை அனுப்பி விட்டாய் என்றார். பிறகு அல்லாஹ் அவரது கண்ணைச் சரிப்படுத்தி விட்டு, நீர் மீண்டும் அவரிடம் சென்று, அவரை ஒரு மாட்டின் முதுகில் கையை வைக்கச் சொல்லி, அவரது கை எத்தனை ரோமங்களை அடக்கிக் கொள்கின்றதோ அத்தனை வருடங்கள் அவர் உயிர் வாழலாம் என்பதையும் கூறும் என அனுப்பி வைத்தான். (அவ்வாறே அவர் மூஸா அலை அவர்களிடம் வந்து கூறிய போது) மூஸா (அலை) இறைவா, அதற்குப் பிறகு? எனக் கேட்டதும் அல்லாஹ், பிறகு மரணம் தான் என்றான். உடனே மூசா (அலை) அவர்கள் அப்படியானால் இப்பொழுதே (தயார்) எனக் கூறிவிட்டு அல்லாஹ்விடம் (பைத்துல் முகத்தஸ் என்னும்) புனிதத் தலத்திலிருந்து கல்லெறியும் தூரத்திலுள்ள (புனிதத் தலத்திற்கு மிக அருகிலுள்ள) இடத்தில் தம் உயிரைக் கைப்பற்றுமாறு வேண்டிக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறும்போது, நான் மட்டும் இப்போது அங்கு (பைத்துல் முகத்தஸில்) இருந்தால் உங்களுக்கு அந்த செம்மணற் குன்றிற்கருகில் உள்ள பாதையிலிருக்கும் மூஸா (அலை) அவர்களது அடக்கவிடத்தைக் காட்டியிருப்பேன் எனக் குறிப்பிட்டார்கள்.

புகாரி : 1339

இந்தக் கருத்தில் உள்ள ஹதீஸ் முஸ்லிம், அஹ்மத் மற்றும் பல நூல்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புகாரியில் இது பதிவு செய்யப்பட்டதாலும், இதன் அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்களாக இருப்பதாலும் இதை அப்படியே ஏற்க இயலுமா?

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாட்டுக்கோ, திருக்குர்ஆன் வசனங்களுக்கோ முரணாக இல்லாவிட்டால் இதை ஏற்றுத் தான் ஆக வேண்டும். இந்த ஹதீஸைப் பொறுத்த வரை திருக்குர்ஆனின் ஏராளமான வசனங்களுடன் நேரடியாக முரண்பட்டு நிற்கிறது.

**மலக்குல் மவ்த் தோல்வியடைந்தாரா?**

ஒரு வானவர் இறைக்கட்டளையை நிறைவேற்றாமல் தோல்வியுடன் திரும்பிச் சென்றார் என்று இதில் கூறப்படுகிறது. இது சரி தானா என்பதை முதலில் ஆராய்வோம்.

வானவர்களுக்கு என்று சில இலக்கணங்கள் உள்ளதாகத் திருக்குர்ஆன் கூறுகிறது.

வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ள உயிரினங்களும், வானவர்களும் அல்லாஹ்வுக்கே ஸஜ்தாச் செய்கின்றனர். வானவர்கள் பெருமையடிக்க மாட்டார்கள். தமக்கு மேலே இருக்கும் தமது இறைவனை அவர்கள் அஞ்சுகின்றனர். கட்டளையிடப்பட்டதைச் செய்கின்றனர்.

(திருக்குர்ஆன் 16:49, 50)

அளவற்ற அருளாளன் சந்ததியை ஏற்படுத்திக் கொண்டான்" எனக் கூறுகின்றனர். அவன் தூயவன். மாறாக அவர்கள் (வானவர்கள்) மரியாதைக்குரிய அடியார்கள். அவர்கள் அவனை முந்திப் பேச மாட்டார்கள். அவனது கட்டளைப்படியே செயல்படுவார்கள்.

(திருக்குர்ஆன் 21:26,27)

நம்பிக்கை கொண்டோரே! உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரகை விட்டுக் காத்துக் கொள்ளுங்கள்! அதன் எரிபொருள் மனிதரும் கற்களுமாகும். அதன் மேல் கடுமையும், கொடூரமும் கொண்ட வானவர்கள் உள்ளனர். தமக்கு அல்லாஹ் ஏவியதில் மாறு செய்ய மாட்டார்கள். கட்டளையிடப்பட்டதைச் செய்வார்கள்.

(திருக்குர்ஆன் 66:6)

**வானவரைத் தாக்க முடியுமா?**

இறைவன் எந்தப் பணிக்காக அனுப்பினானோ அதைச் செய்து முடிப்பது



தான் வானவர்களின் இலக்கணம். மூஸா நபியின் உயிரைக் கைப்பற்ற ஒரு வானவரை இறைவன் அனுப்பினால் அவர் அந்த வேலையைச் செய்யாமல் திரும்ப மாட்டார். இந்த இலக்கணத்திற்கு எதிரான கருத்தை அந்த ஹதீஸ் கூறுகிறது.

மேலும் நபிமார்கள் இறைவன் அனுப்பி வைத்த தூதரை அடித்து விரட்டுவார்களா? இறைவனின் ஏற்பாட்டுக்குச் செவி சாய்க்க மறுப்பார்களா என்றால் நிச்சயம் அப்படிச் செய்ய மாட்டார்கள்.

மிகச் சிறந்த இறைத் தூதர்களில் ஒருவரான மூஸா நபியவர்கள் இந்த ஹதீஸில் கூறப்பட்டவாறு நடந்திருப்பார்களா? என்பதும் சிந்தித்துப் பார்க்க வேண்டியதாகும்.

**மூஸா நபி மரணத்தை வெறுத்தார்களா?**

இவ்வுலக வாழ்க்கை அற்பமானது. மறுமை வாழ்வு தான் நிலையானது" என்பது எல்லா இறைத் தூதர்களின் போதனையாக இருந்தது. தமக்கு மரணம் வந்து விட்டது என்பதை மூஸா நபி அறிந்து கொண்டால் அதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்வார்களே தவிர அதை எதிர்த்து எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள மாட்டார்கள்.

மேலும் வானவர்கள் சுயமாக எந்தக் காரியத்திலும் இறங்க மாட்டார்கள். அல்லாஹ் இட்ட கட்டளையைத் தான் செய்வார்கள் என்பது நமக்கே தெரியும் போது மூஸா நபிக்கு இந்த உண்மை தெரியாமல் இருக்க முடியாது.

இறைவனால் அனுப்பப்பட்ட தூதரை அறைவது இறைவனை நேருக்கு நேர் எதிர்த்து நிற்பதற்குச் சமமாகும்" என்பதைக் கூட மூஸா நபியவர்கள் அறிந்திருக்கவில்லை என்ற கருத்திலமைந்த இந்த ஹதீஸை நாம் எவ்வாறு நம்ப இயலும்?

**இறைவன் கெஞ்சுவானா?**

அப்படியே மூஸா நபியவர்கள் வானவரை அறைந்திருந்தால் கூட இறைவன் பணிந்து கெஞ்சிக் கொண்டிருப்பானா? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

யூனுஸ் நபியவர்கள் இறைவனுடன் கோபித்துக் கொண்டு போனதற்காக அவரை எவ்வாறு நடத்தினான் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

மீனுடையவர் (யூனுஸ்) கோபித்துக் கொண்டு சென்றார். அவர் மீது நாம் சக்தி

பெற மாட்டோம் என்று நினைத்தார். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. நீ தூயவன். நான் அநீதி இழைத்தோரில் ஆகி விட்டேன்" என்று இருள்களிலிருந்து அவர் அழைத்தார். அவரது பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம். கவலையிலிருந்து அவரைக் காப்பாற்றினோம். இவ்வாறே நம்பிக்கை கொண்டோரைக் காப்பாற்றுவோம்.

(திருக்குர்ஆன் 21:86, 87)

உமது இறைவனின் தீர்ப்புக்காகப் பொறுத்திருப்பீராக! மீனுடையவர் (யூனுஸ்) போல் நீர் ஆகி விடாதீர்! அவர் துக்கம் நிறைந்தவராக (இறைவனை) அழைத்தார். அவரது இறைவனிடமிருந்து அவருக்கு அருள் கிடைத்திருக்காவிட்டால் அவர் இழிந்தவராக வெட்ட வெளியில் எறியப்பட்டிருப்பார். ஆயினும் அவரை அவரது இறைவன் தேர்வு செய்தான். அவரை நல்லவராக்கினான்.

(திருக்குர்ஆன் 68:49)

மூஸா நபி இவ்வாறு நடந்திருந்தால் இது போன்ற கடும் நடவடிக்கை எடுப்பது தான் இறைவனது தனித்தன்மை. தனது பெருமை விஷயத்தில் அவன் சமரசம் செய்து கொண்டதே இல்லை. இறைவனைப் பொருத்த வரை அவனது கவுரவம் தான் அவனுக்கு முதன்மையானதாகும்.

இந்த அடிப்படையையும் இந்த ஹதீஸ் அறவே தகர்த்து எறிவதால் இந்த ஹதீஸை உண்மையானது என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

.இந்த ஹதீஸை ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்று வாதிடுபவர்கள் தங்கள் கருத்தில் உண்மையாளர்களாக இருப்பின் கீழ்க்காணும் நமது கேள்விகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

01- மலக்குகள் சுயமாக எந்த அதிகாரமும் படைத்தவர்கள் அல்லர். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையைச் செயல்படுத்தும் அடிமைகளே என்பது இஸ்லாத்தின் நம்பிக்கை. திருக்குர்ஆனில் இது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இறைவன் சொன்னதைச் செய்யாமல் மூஸா நபியிடம் அடி வாங்கிக் கொண்டு தோல்வியுடன் ஒரு வானவர் திரும்பினார் என்று இந்த ஹதீஸ் கூறுகிறதே? இது குர்ஆனுக்கு மாற்றமானது அல்லவா? குர்ஆன் மறுக்கப்பட்டாலும் இந்த ஹதீஸை ஏற்க வேண்டும் என்று இவர்கள் கூறுகிறார்களா?

02- அல்லாஹ் எந்தக் கட்டளை இட்டாலும் ஒவ்வொரு முஸ்லிமும் கடைப்பிடிக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளை இது தான் என்று தெரிந்து கொண்டு அதை எதிர்த்து நிற்பது இறை மறுப்பாகும். மலக்குல் மவ்த்



அல்லாஹ்வின் கட்டளையைக் கூறிய போது ஒரு நபி என்ன செய்திருப்பார். உடனே அதற்கு தலை சாய்த்திருப்பதைத் தவிர வேறு வழி அவருக்கு இல்லை. இதோ நான் அல்லாஹ்வின் கட்டளையைச் செயல்படுத்தத் தயார் என்று கூறி இருந்தால் ஒரு நபியின் தகுதி அதில் வெளிப்பட்டிருக்கும். அல்லது இறைவா இன்னும் கொஞ்சம் ஆயுளை அதிகமாக்கித் தா என்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திருந்தால் சராசரி மூமினின் பண்பு அதில் வெளிப்பட்டிருக்கும். ஆனால் அல்லாஹ் அனுப்பிய தூதரைக் கண்ணைக் குருடாக்கும் அளவுக்கு அறைவது ஈமானில் சேருமா? இறை மறுப்பில் சேருமா? இப்படி நடப்பதற்கு அல்லாஹ் அனுமதித்திருக்கிறானா?

03- ஒவ்வொரு மனிதனும் மரணித்தே ஆக வேண்டும் என்பது ஒட்டு மொத்த மனிதரும் அறிந்து வைத்துள்ள உண்மை. இந்த உண்மை ஒரு நபிக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு முஸ்லிம் நம்ப வேண்டிய அடிப்படைகளில் ஒவ்வொருவரும் மரணத்தைச் சுவைக்க வேண்டும் என்பதும் முக்கியமானது. ஆனால் மூஸா நபி அவர்கள் மரணத்தை நெருங்கும் வரை இந்தச் சாதாரண உண்மையை அறியாதவராக இருந்துள்ளார் என்று இந்த ஹதீஸ் கூறுகிறது. மனிதன் மரணித்தே ஆக வேண்டும் என்ற அடிப்படையான விஷயம் கூட கடைசி நேரத்தில் அல்லாஹ் சொல்லிக் கொடுத்த பிறகு தான் அவருக்குத் தெரிய வந்துள்ளது என்றால் தனது சமுதாயத்துக்கு அவர்கள் மரணம் பற்றியோ மரணத்துக்குப் பின் உள்ள வாழ்க்கை பற்றியோ எதுவும் சொல்லித் தரவில்லை என்பதும் இந்த ஹதீஸுக்குள் அடங்கியுள்ளது.

04- மேலும் ஒரு பணியைச் செய்வதற்காக அல்லாஹ் ஒரு வானவரை அனுப்புகிறான் என்றால் அவர் அதற்கான முழு ஆற்றலும் வழங்கப்பட்டே அனுப்பப்படுவார். மலக்குகள் எந்தப் பணியில் தோற்றாலும் அது அவர்களின் தோல்வி அல்ல. அனுப்பியவனின் தோல்வியாகத் தான் அமையும். இந்தக் கதை அல்லாஹ்வை இயலாதவனாக்கும் வகையில் உள்ளது.

05-வானவர்களின் வலிமையுடன் மனிதர்களின் வலிமையை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஒரு வானவருக்கு அல்லாஹ் கட்டளையிட்டால் ஒரு ஊரையே அவர் அழித்து விட முடியும். அத்தகைய வானவரை மூஸா நபி அறைந்து அவரது கண்ணைக் குருடாக்கி விட்டார் என்பதும் வானவர்களின் ஆற்றலை மறுக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்தக் கேள்விகளுக்கு நம்மை எதிர்த்து விமர்சனம் செய்பவர்கள் பதில் சொல்ல வேண்டும்.